# தாய்வீடு

THAIVEEDU FEBRUARY 2022 பெப்பிரவரி www.thaiveedu.com



ஆய்வறிஞர் பேராசிரியர் அ. கணபதிப்பிள்ளை


## தாய்வீட்டார் சந்திப்பு

ஆண்டுதோறும் நிகழ்ந்து வரும் தாய்வீட்டார் சந்திப்புகளின் வரிசையில் 2022-ஆம் ஆண்டுக்கான சந்திப்பு ZOOM தளத்தில் நடைபெறும்.

காலம்: ஞாயிற்றுக்கிழமை, பெப்பிரவரி 20, 2022

**Meeting ID : 907 387 5405**
**Passcode : 12345**

இந்திய நேரம்: மாலை 7:30
இலங்கை நேரம்: மாலை 7:30
ரொறன்ரோ நேரம்: காலை 9:00
இலண்டன் நேரம்: பிற்பகல் 3:00
அவுஸ்திரேலியா-மெல்பேர்ன் நேரம்: இரவு 1:00


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com


15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544


AEREN Thiyagarajah BEng
Realtor
DILEEP Thangavel
Realtor
Dir. 647-888 3500
Dir. 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8


அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide
Brokerage Lic# 10216
Suren Nathan
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca
7 Eastvale Drive, Unit 203, Markham, ON, L3S 4N8



ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana
Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com



வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
Bus: 416-298-3200
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545


RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056


RE/MAX
Ahilan
Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6


UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite


Your Trusted Realtor
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
416.803.7344
www.reon.ca


DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
416.264.3232
416.609.2022


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229


SRI NADARAJASUNDARAM
Sales Representative
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
RE/MAX COMMUNITY REALTY INC.

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஐயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 1-613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு.
ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.


## எல்லாம் வழமைப்படி?

கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் பெருந்தொற்று, உலகமெங்கும் மக்களின் வாழ்வைத் தலை கீழாகப் புரட்டிப் போட்டிருக்கிறது. இப்போது உலக அரசுகளின் ஒற்றைச் சிந்தனை, 'எவ்வாறு வழமையான வாழ்வுக்கு விரைவாகத் திரும்புவது?' என்பது பற்றியதாகவே இருக்கின்றது.

வழமைக்குத் திரும்புதல் என்ற இந்த முயற்சி பெருஞ்சவால்களைக் கொண்டது என்பதை அனைவரும் அறிவர். கடந்த இரண்டாண்டு காலத்தில் வணிக, பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட சரிவும் பொருண்மியத்தின் அடிப்படைகளான, உற்பத்தி, வழங்கல், நுகர்வு ஆகியவற்றில் நிகழ்ந்திருக்கும் பாரிய பின்னடைவுகளும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தைச் சீர் குலைத்து விட்டன.

இந்தப் பெருந்தொற்று எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல. இக்கால அரசுகளும் பெரு நிதி வணிகக் கூட்டுநிறுவனங்களும் சுய நலத்துடன் இணைந்து கை கோர்த்து இயற்கையை அழித்ததின் தர்க்க ரீதியான விளைவுதான் இந்தப் பெருந்தொற்றும் இனி வரப் போகிற பெருந்தொற்றுகளும். இயற்கையையும் பொது நலனையும் முன் வைக்காமல் 'எல்லாவற்றையும் விற்கலாம், இலாபமே மானுட மீட்சி' எனும் நவதாராளவாதச் சிந்தனையும் நடைமுறையும்தான் எமது இன்றைய அவலத்துக்குக் காரணம்.

இத்தகைய அவலத்திலும் பெரும் இலாபம் சம்பாதிக்கின்ற மருத்துவ நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் போன்றன உலகம் வழமைக்குத் திரும்புவதில் முழுமையான கவனம் காட்டும் என எதிர்பார்க்கமுடியாது. தொற்றுநோய்க்கு எதிரான அல்லது அதனைக் கட்டுப்படுத்தும் மருத்துவத்தை மட்டுமே நம்பி நாம் நின்றுவிட்டால் இனி வரப்போகிற பெருந்தொற்றுகளை எம்மால் வெல்ல முடியாது. இயற்கையை மதிக்கும், நேசிக்கும் வாழ்க்கை முறையைப் பேணாவிட்டால் நாம் ஒரு போதுமே 'வழமைக்குத் திரும்ப' முடியாது. உண்மையில் நாம் வழமைக்குத் திரும்பவே வேண்டியதில்லை. இயற்கையோடு இயைந்த புதிய வழமையை உருவாக்குவது மட்டுமே நமக்கான ஒரே வழி.

இத்தகைய பின்னணியில் இப்போது எமக்குக் கிடைக்கிற மருத்துவத்தையும் தடுப்புசிகளையும்கூட எதிர்த்துப்போராடுகின்ற வெள்ளை இனவெறிக் குழுக்கள் அமெரிக்காவிலும் கனடாவிலும் தீவிரமாக இயங்க முயல்கின்றன. அறிவையும் விஞ்ஞானத்தையும் சான்றாதாரங்களையும் தர்க்கத்தையும் ஏற்க மறுத்து 'சுதந்திரம்' என்பதன் பொருளையும் ஆத்துமத்தையும் கொச்சைப் படுத்துகிற இச்சிறுகுழுக்களில் இருப்போர்கூட பெருந்தொற்றை ஊக்குவிப்பவர்கள்தான் என்பதை நாம் மனதிலிருத்த வேண்டும்.

தடுப்பூசி பெறாதோரே மருத்துவமனைகளில் அதிகளவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் ஏற்படும் வைத்தியச் செலவீனத்துக்காக தடுப்பூசி இட்டுக்கொண்டவர்களின் வரிப்பணத்தைச் செலவிட முடியாது. ஆகவே, தடுப்பூசி பெறாதோரிடம் கட்டணம் அறவிடப்பட வேண்டும் என்ற கருத்தை 60 விழுக்காடு கனடா மக்கள் ஏற்றுக்கொண்டதாகக் கருத்துக்கணிப்பு ஒன்று தெரிவிக்கின்றது. எனினும் கட்டண அறவீட்டுக்குக் கனடாவின் மனிதவுரிமைச் சட்டங்கள் இடம் கொடுக்கவில்லை என்பதையும் நாம் அறிவோம்.

கனடாவில் ஒரு மாகாணம், கோவிட் தொற்றினை இனிமேல் வழமையான காய்ச்சல், தடிமன் போன்ற ஒரு நோயாகக் கருதி எதிர்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளது. ஒன்றாரியோ முதல்வர், கோவிட் தொற்றுநோயோடு மக்கள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார். இனிவரும் காலங்களில் நோயாளர் எண்ணிக்கை பெருகினாலும் நோய் தொடர்பான கட்டுப்பாடுகள் பெருமளவில் இருக்காது என்பதே இதன் பொருள்.

அரசுகளின் 'வழமைக்குத் திரும்புதல்' என்பது, உண்மையில் மக்களின் தொற்றுநோய் தொடர்பான பாதுகாப்பு நலனை முன்னிறுத்தியதாக இல்லாமல் பொருளாதார நலனை முன்னிறுத்தி உருவான கருத்தாக்கம் என்பதில் ஐயமில்லை.

அரசுகளின் வழமைக்குத் திரும்புதல் என்ற கோஷம் மக்களின் அடிப்படை நலன்களை வைத்து எழுப்பப்படுவதாகத் தெரியவில்லை. வணிகம், பொருளாதாரப் பாதுகாப்பு இரண்டும் மட்டும்தான் என்ற நோக்கிலேயே இந்த 'வழமைக்குத் திரும்புவோம்' எனும் கோரிக்கை எழுகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளில் பணவீக்கமும் பொருட்களின் விலை உயர்வும் மக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறாக அமைகின்றது. வளர்ச்சியடையாத நாடுகளில் விலையுயர்வும் முதன்மைத் தேவைக்கான பொருட்களின் தட்டுப்பாடும் மக்களைப் பேரிடர்களுக்கு இட்டுச் செல்கின்றன. இந்த இடர்களைப் பொருட்படுத்தி, மக்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்றும் வல்லமை இப்போது எந்த அரசுக்கும் இல்லை. தமது இடர்களை அடையாளம் கண்டு தாமே தீர்வைத் தேடிக்கொள்ளவும் தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றவும் மக்கள் வற்புறுத்தப்படுகின்றார்கள் என்பதே இன்றைய நடப்பியல் உண்மை.

கடந்த இரண்டாண்டு கால வாழ்வியல் மாற்றங்கள் கோவிட் தொற்றுநோய்க்கு முன், தொற்றுநோய்க்குப் பின் என்ற இரு காலப்பாகுபாட்டை உருவாக்கியிருக்கின்றது. இரண்டாண்டு காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பல, காலூன்றி விட்டன. விடம் போல் ஏறியிருக்கும் பொருட்களின் விலை, இனி எக்காலத்திலும் குறையப் போவதில்லை. 'வீட்டிலிருந்து வேலை' என்பதைப் பல நிறுவனங்கள் நிரந்தரமாக்கி விட்டன. 'பழைய மானுடம்' இனி இல்லை. இனி வரப்போவது செயற்கை அறிவும், மின்னணு எந்திரங்களும், சிக்கலான கணினிச் சூத்திரங்களும் மனிதர்களை ஆளப் போகும் மானுட மேலாட்சிக்கு அப்பாற்பட்ட காலம்.

அங்கு வழமை என எதுவும் இருக்காது. வழமைக்குத் திரும்புதலும் இல்லை. எல்லாமே நமது வன்பொருளும் மென் பொருளும் உருவாக்கிவிட்ட வன்செயல்களுமே.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


அகதிகளின் கடல்வழிப் பயணமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இரகசியத் தடுப்புக் கட்டமைப்பும்! 5
- ரூபன் சிவராஜா

இந்திய-இலங்கை கடல் வழி எல்லையும் சட்டவிரோத மீன்பிடியும் 7
- சிவசாந்தினி குகநாதன்

தமிழ்ச் சுவரில் மோதும் இந்துத்துவம் 11
- விக்னேஷ் கார்த்திக், - அஜஸ் அஷ்ரவ்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

கருத்தரிக்கும் முறைகளும் தடங்கல்களும் இடம் மாறிய கர்ப்பமும் 15
- கந்தையா செந்தில்நாதன்

ஏட்டில் எழுதிவைத்தார் 18
- பால. சிவகடாட்சம்

மனித உடல் உறுப்புகளை உருவாக்கும் முப்பரிமாண அச்சாக்கம் 20
- சுப்ரமணியம் ஜெயசீலன்

சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!! சேமியுங்கள்!! 23
- வேலா சுப்ரமணியம்

விண்கல்லைத் தாக்க விரைந்து செல்லும் நாசாவின் விண்கலம் 25
- குரு அரவிந்தன்

பொறுமை வாழ்வின் பெருமை 28
- சி. நற்குணலிங்கம்

காலம் தின்ற... 30
- வேதநாயகம் தபேந்திரன்

மைவண்ணன் இராமகாவியம் 32
- அன்னலட்சுமி இராஜதுரை

நுவரகம : சமூக பொருளாதார மாற்றங்களும் சாதி உறவுகளும் 34
- ஜயந்த பெரேரா
தமிழில்: க. சண்முகலிங்கம்

- தேநீர்: முரண்களின் கலவை 38
- தேவகாந்தன்

தமிழில் புத்தகக் கலாச்சாரம்: க்ரியா ராமகிருஷ்ணன் நினைவுக் கட்டுரைகள் 42
- மு. நித்தியானந்தன்

இலங்கைத் தமிழ்வெளியில் கம்யூனிஸ்ட் அறிக்கை 50
- ச. சத்யதேவன்

ப. சிங்காரத்தின் நாவலில் பலகுரல் தன்மை 53
- சு. வேணுகோபால்

திருநெல்வேலி நீர்-நிலம்-மனிதர்கள் 64
- நெல்லை ஜெயசிங்

கிறிஸ்தவமும் தேசியவாதமும் சுதந்திரமும் 66
- ஆங்கில மூலம்: - சி. அரசரெத்தினம்
தமிழில்:- க. சண்முகலிங்கம்

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி கல்ஹின்னை மண்தந்த கவிஞர்களும் மலையகக் கவிதைகளும் 74
- மல்லியப்புசந்தி திலகர்

மனிதருள்... 76
- முல்லைஅமுதன்

கருத்தோவியச் சிந்தனையாளர் சிரித்திரன் சுந்தர் 78
- வே. விவேகானந்தன்

ஏழாலை மண்தந்த நூலகர் அமரர் சிற்றம்பலம் முருகவேள் 80
- என். செல்வராஜா

அண்ணாவியார் செபஸ்ரியான் மாசிலாமணி 82
- ப. ஸ்ரீஸ்கந்தன்

தனித்துவம் வாய்ந்த பாரதியின் கவித்துவம் 84
- கிருங்கை சேதுபதி

ஆடற்கலையும் ஆத்ம தேடலும் சில சிந்தனைகள் 88
- கவிதா லட்சுமி

இசைத் தமிழ் பாடற்பரப்பும் அவற்றின் சமகாலப் பயன்பாட்டு நிலைகளும் 91
- கௌசல்யா சுப்பிரமணியன்

இலங்கை வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சும் கிவுலக்கடவலை தமிழ்க் கல்வெட்டு 96
- வி. துலாஞ்சனன்

கம்பனின் கருவூலம் திறந்து... 104
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

தொன்மையைத் தேடி ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் 106
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 112
- நா. சுப்பிரமணியன்

கனடாவில் சிறுகதை இலக்கியம் - ஒரு பார்வை 117
- மைதிலி தயாநிதி

ஆய்வறிஞர் பேராசிரியர் அ. கணபதிப்பிள்ளை 122
- டிலிப்குமார்

கணபதிப்பிள்ளையின் புவிசார் அரசியல் சிந்தனையின் தனித்துவம் 124
- அமுது ஜோசப் சந்திரகாந்தன்

பேராசான் கணபதிப்பிள்ளை வாழ்வும் வளமும் 126
- கா. குகபாலன்

கிராமத்து மண்வாசனைமிக்க அப்புஜி வழியில் 127
- பார்வதி கந்தசாமி

நினைவுகளைப் பகிர்கிறேன்... 129
- குகன் ஆறுமுகம்

நண்பர் கணபதிப்பிள்ளையின் நட்பு 130
- சந்திரசேகரம் பரமலிங்கம்

கணபதிப்பிள்ளை என்னும் ஒரு சான்றோன் 130
பால. சிவகடாட்சம்

அறிவார்ந்த ஆளுமை அ. கணபதிப்பிள்ளை 131
- எஸ். பத்மநாதன்

மனவேதனையைத் தரும் நண்பனின் பிரிவு 132
- இரா. சிவச்சந்திரன்

ஆளுமைக்கு என் ஆத்மார்த்த அஞ்சலி! 133
- மா. சித்திவினாயகம்

ஆத்ம நண்பன் அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை 135
- வி.பி. சிவநாதன்

மனிதம் போற்றும் மாண்பினன் அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை 136
- த. சிவபாலு

நெடுந்தீவின் மக்கள் இடப்பெயர்வு 139
- அ. கணபதிப்பிள்ளை

நினைவு நல்லது - 60 ஓர் அத்தியாயத்தின் முடிவு 143
- P. விக்னேஸ்வரன்

இருபது பவுன் 152
- மஞ்சி ஜப்பார்

அந்நிய அனாதைகள் 154
- சோ. ராமேஸ்வரன்

அப்புக்குட்டி பார்த்த படம் 159
- பால. சிவகடாட்சம்

கந்தசாமியின் கனவு 161
- மு. சிவலிங்கம்

அஸ்தமனம் 165
- களம்பூர் பாபுராஜ்

முடிவுக்கு வந்த நிலத்தின் கதை 169
- அகரன்

நிலவு தொலைந்த மணல் வீடு... 171
- த. சாள்ஸ் குணநாயகம்

என் பெண்ணின் பழங்கள் 174
- ஹான் காங்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

பனிவிழும் பனை வனம் 184
- செல்வம் அருளானந்தம்

அழகு எனும் ஆயுதம் 88
- நிமால் நாகராஜா

# அகதிகளின் கடல்வழிப் பயணமும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இரகசியத் தடுப்புக் கட்டமைப்பும்!

- ரூபன் சிவராஜா

2015ம் ஆண்டிலிருந்து ஐரோப்பாவிற்கு கடல்வழியாக அகதிகளாக வருவோர் தொகை அதிகரித்துள்ளது. இந்தச் சிக்கலைக் கையாள்வதில் ஐரோப்பிய ஒன்றியமும் அதன் உறுப்பு நாடுகளும் திணறிவருகின்றமை பரவலாக அறியப்பட்ட செய்தி. இது விடையத்தில் அகதிகள் வருகையைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் பாரிய இரகசிய கட்டமைப்பினையும் பொறிமுறையையும் நீண்டகாலமாகச் செயற்படுத்தி வருவதான தகவல்கள் வெளிவந்துள்ளன. மனித உரிமைகளை மிக மோசமாகப் பாதிக்கின்ற இறுக்கமான நிழல் கட்டமைப்பு அதுவாகும். இதுவிடையம் தொடர்பான விரிவான கட்டுரை ஒன்று Le Monde diplomatique நோர்வேஜியப் பதிப்பின் ஜனவரி மாத இதழில் வெளிவந்துள்ளது. அதில் ஓர் அகதியின் கதையும் விபரிக்கப்பட்டுள்ளது.

கப்பற் பயணத்தின் போது மத்தியதரைக் கடலில் கைதுசெய்யப்பட்ட அகதிகள் லிபியாவில் சிறைவைக்கப்படுகின்றனர். தலைநகர் Tripoliஇல் al-Shael என்ற பகுதியில் இச்சிறைச்சாலை இயங்குவதாக அக்கட்டுரையில் விபரிக்கப்பட்டுள்ளது. லிபிய நாட்டு துணை இராணுவக்குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள இச்சிறைகள், ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் நிர்வகிக்கப்படுகின்றன என்பதை அம்பலப்படுத்துகின்றது.

## லிபியாவில் அகதிகள் மோசமான சிறைகளில் தடுத்துவைப்பு:

சிறிய ரப்பர் படகுகளில் ஐரோப்பாவிற்குப் பயணித்துக் கொண்டிருந்த போது, மத்தியதரைக் கடலில் வைத்து லிபிய கரையோரப் படைகளினால் பலநூறு அகதிகள் கைதுசெய்யப்பட்டு இத்தகைய சிறைகளில் தங்கவைக்கப்படுகின்றனர். பொதுப் பாதுகாப்பு நிறுவனம் என்ற போர்வையில், 8 சிறைக்கூடங்களைக் கொண்ட சிறைச்சாலை அதுவெனப்படுகிறது. அங்கு 1500 வரையான அகதிகள் பால் ரீதியாகப் பிரிக்கப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர். நூறுபோருக்கு ஒரு மலசலகூடம் என்ற ரீதியில் மிகவும் அடிப்படை வசதிகளற்ற இடத்தில் தங்கவைக்கப்பட்டிருப்பதோடு, சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. உடலில் மின்சாரம் செலுத்துவது, காவலாளிகளால் சிறுவர்கள் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்படுதல், குடும்பங்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து பணப் பறிப்பு, அகதிகளைக் கட்டாய வேலைகளுக்காக அடிமைகளாக விற்றல் போன்ற சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எல்லைகளற்ற மருத்துவர்கள் உட்பட்ட சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அகதிகள் மீதான இவ்வகை மனித உரிமை மீறல்களையும் சித்திரவதைகளையும் ஆவ



ணப்படுத்தியுள்ளன.

லிபியாவின் கரையோரக் காவல்படை அந்நாட்டின் துணை இரா ணுவக்குழுக்களுடன் தொடர்புடையது. அதற்கான பயிற்சி, தளவா டங்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குகின்றது. லிபியக் கரை யோரப் படைகளை மத்தியதரைக்கடலில் ரோந்து நடவடிக்கைக-ளில் ஈடுபட வைப்பதனூடாக இரண்டு வழிமுறைகளில் இத் தடுப்பு நடவடிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்கின்றது. கடலில் பயணிக்கும் அகதிகளுக்குக் கிட்டக்கூடிய மீட்புப்பணி-களைச் சதிவேலைகள் மூலம் முறியடிக்கின்றமை ஒன்று. மற்றை யது கப்பல் அகதிகளைக் கைதுசெய்து காலவரையறையற்றுச் சிறையில் அடைத்தல். ஒட்டுமொத்தத்தில் ஐரோப்பாவிற்குள் அக திகளை நுழையாமல் தடுப்பது ஐரோப்பிய ஒன்றியம் இவர்களுக் குக் கொடுத்துள்ள பணி.

## ஐரோப்பாவிற்குள் நுழையாமற் தடுப்பதற்கான முதலீடு:

2015இல் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு பன்னாட்டு நிதியத்தினை உருவாக்கியது. Emergency Trust Fund for Africa (EUTF) என்பது அந்நிதியத்தின் பெயர். இந்நிதி முதலீடு முற்றிலும் அகதிகளை ஐரோப்பாவிற்குள் நுழையாமற் தடுப்பதற்கானவை. இதன் மூலம் 2015 - 2020 இடைப்பட்ட ஐந்தாண்டுகளில், அகதிகள் சிக்கலைச் சமாளிப்பதற்கான திட்டங்களுக்காக 4.9 பில்லியன் யூரோக்களை வட ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கியுள்ளது. நிதியத்தின் நோக் கம் மனிதக்கடத்தலுக்கு (Human trafficking) எதிரான நடவடிக் கைகள், அபிவிருத்தி, மனிதாபிமானப் பணிகள் என்று சித்தரிக் கப்பட்டிருந்தது. ஆனால் உண்மை நோக்கம் அவையல்ல. ஆபி ரிக்க நாடுகள் மீது அழுத்தம், கட்டுப்பாடுகளை இறுக்குதற்கா னது. அதாவது ஆபிரிக்க நாடுகளுக்கிடையில் மக்களின் இடப் பெயர்வுகளை (நாடுவிட்டு நாடு பயணிப்பதை) தடுப்பதே இந் நிதியத்தின் முதன்மை நோக்கம். அகதிகளைக் கைதுசெய்யும் நட வடிக்கைகளுக்காகவும் நிதி முதலீடு செய்யப்படுகின்றது. துணை இராணுவக் குழுக்கள் மற்றும் எல்லைப் பாதுகாப்பு, கரையோரப் பாதுகாப்புப் படைகளுக்குரிய பயிற்சிகள், தளபாடங்களுக்கான நிதி அனுசரணை அதுவாகும். 2017ல் லிபியாவுடன் இவ்விவகாரம் சார்ந்த உடன்படிக்கையொன்றினை இத்தாலி மேற்கொண்டிருந் தது. கடல்வழி ஐரோப்பாவிற்குள் புகும் அகதிகளைத் தடுத்தல், அதற்குரிய தீர்வு மற்றும் கூட்டுச்செயற்பாடு தொடர்பான உடன் படிக்கை அது. பின்னர் அவ்வுடன்படிக்கை ஐரோப்பிய ஒன்றியத் தினால் அங்கீகரிக்கப்பட்டது.

## செங்கன் உடன்படிக்கையும் டப்லின் ஏற்பாடும்:

1990களிலிருந்து நாடுகளுக்கிடையிலான எல்லைக் கட்டுப்பாடு, கண்காணிப்பு, அகதிகள் விவகாரக் கையாளல் உட்பட்ட விவகா ரங்களில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான கூட்டுச் செயற்பாடுகளுக்கான பொறிமுறைகள் நடைமுறையில் உள்ளன. செங்கன் உடன்படிக்கை (Schengen agreement) டப்லின் ஏற் பாடு(Dublin Regulation) போன்றவற்றினூடாக உருவாக்கப்பட்டன. பொதுவான விசா நடைமுறைகளைப் பேணுதல், சட்டரீதியான ஆவணங்கள் இல்லாமல் அகதிகளை அழைத்துச்செல்லும் போக்குவரத்து நிறுவனங்களைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்து தல், நாடுகளுக்கிடையிலான காவல்துறைக் கூட்டுச்செயற்பாட் டினை வலுப்படுத்துதல் போன்றன இவற்றின் உள்ளடக்கம். மட்டு மல்லாது பயங்கரவாதத்தை எதிர்கொள்வது, போதைப்பொருள் வணிகம், ஏனைய சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கான பொதுவிதிகளும் இவ்வுடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

செங்கன் உடன்படிக்கையின்படி (தற்போது பிரித்தானியா ஐரோப் பிய ஒன்றிய நாடு அல்ல) பிரித்தானியா, அயர்லாந், சுவிஸ் நீங் கலான ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான பயணங் களுக்கு கடவுச்சீட்டு அவசியமில்லை. வதிவிட உரிமைபெற்ற (குடியுரிமை அல்ல) அகதிகள் யாராகினும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு ஐரோப்பிய நாட்டிற்குப் பயணிப்பது எளிது. டப்லின் ஏற்பாடு அகதிகள் அரசியலைக் கையாள்வதற்கான ஒன்றிய நாடு களுக்கிடையிலான உடன்படிக்கை. உதாரணமாக முதலில் வேறொரு ஐரோப்பிய நாட்டில் அகதிக்கோரிக்கை அல்லது விசா, வதிவிட உரிமை கோரியிருந்தால் குறித்த அகதிக்கோரிக்கை யாளர் அந்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார். டப்லின் ஏற் பாடு அகதிகள் அரசியலைக் கையாள்வதற்கான ஒன்றிய நாடு-களுக்கிடையிலான உடன்படிக்கை. உதாரணமாக முதலில் வேறொரு ஐரோப்பிய நாட்டில் அகதிக்கோரிக்கை அல்லது விசா, வதிவிட உரிமை கோரியிருந்தால் குறித்த அகதிக்கோரிக்கை யாளர் அந்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்.

## வட - ஆபிரிக்க நாடுகளுக்கு நுரு அழுத்தம்:

வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது, ஐரோப்பிய ஒன்றிய நாடு-களுக்கிடையிலான எல்லைகள் போலவே, பல மத்திய ஆபிரிக்க நாடுகளின் எல்லைகளும் திறந்த எல்லைகளாகவே இருந்துவந் துள்ளன. 2015ல் ஐரோப்பிய ஒன்றியம் நைஜர் (Niger) மீது அழுத்தம் பிரயோகித்து புதிய சட்டத்தினை நிறைவேற்றவைத்தது. பல ஆண்டுகளாக அகதிகளை ஏற்றி இறக்கிய பேருந்து ஓட்டு னர்கள், பயண வழிகாட்டிகள், முகவர்கள் மனிதக்கடத்தற்காரர்க ளாகப் பிரகடனப்படுத்தப்பட்டனர். மட்டுமல்லாமல், முப்பது ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்படுமெனவும் அறிவிக்கப் பட்டது. இத்தகைய புறநிலைகளும் அகதிகள் ஆபத்துமிக்க கடற் பயணங்களைத் தெரிவுசெய்வதற்கான நிர்ப்பந்தங்களை ஏற் படுத்தியது.

லிபியா, முன்னர் அகதிகளுக்கு எதிரான போக்குடையதாக இருக்கவில்லை. 1960களில் அங்கு எண்ணெய்வள அபிவிருத்திக் கான பணிகளுக்காக அரபு அயல்நாடுகளிலிருந்து தொழிலாளர் கள் அழைக்கப்பட்டனர். 1990களில் வேலைவாய்ப்பிற்காக ஆபி ரிக்க நாடுகளிலிருந்து வெளிநாட்டவர்கள் சென்றனர். கடாபியின் Pan-Africanism கொள்கையும் அத்தகைய உள்வாங்கலுக்கான காரணியாகும். Pan-Africanism என்பது ஆபிரிக்கா முழுவதுக்கு மான சமூக, அரசியல், பண்பாட்டு ஒருமைப்பாட்டினை வலி



யுறுத்துகின்ற கோட்பாடு. ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த மக் கள் பொதுவான நலன்களைக் கொண்டுள்ளனர் என்ற அடிப் படையில் அவர்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது. பான்-ஆப்பிரிக்கவாத கருத்துக்கள் முதன்முதலில் 19ம் நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்க ஆப்பிரிக்கர்கள் மத்தி யில் பரவத் தொடங்கியது.

## லிபியா: அரசியல் சிதைவும் உள்நாட்டுப் போரும்:

2011 ஒக்ரோபரில் கடாபி கொல்லப்பட்ட பின்னரான தற்கால லிபியா அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகச் சிதைக்கப்பட்ட நிலையில் உள்ளது. இரண்டு அரசாங்கங்கள் நாட்டின் சட்ட ரீதியான அதிகாரத்திற்காக மோதிக்கொண்டிருக்கின்றன. ஒன்று ஐ.நாவின் அங்கீகாரம் பெற்ற தேசிய இடைக்கால அரசாங்கம் (The Government of National Accord - GNA ). மற்றையது தன்னிச்சையாகப் பிரகடனம் செய்துகொண்ட லிபிய தேசிய இரா

ணுவத்தின் அரசாங்கம் (The Libyan National Army - LNA). இதற்கு ரஷ்ய ஆதரவு உள்ளது. இவ்வாறு இரண்டு அதிகார மையங்களாக அரசியல் பிளவு நிலவுகின்ற அதேவேளை, நாட்டின் பெரும்பாலான நிலப்பரப்புகள் வெவ்வேறு ஆயுதக்குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளன.

மேற்சொன்ன அரசியல் சூழ்நிலையை நாட்டின் கரையோரப்படை பிரதிபலிக்கின்றது. கரையோரக் காவல்படை என்ற பெயர் அதனை ஒரு அதிகாரபூர்வ படைக்கட்டமைப்பு என்று எண்ண வைக்கின்றது. ஆனால் யதார்த்த நிலை அப்படியல்ல. அதற்கு ஒரு பொதுவான கட்டளைபீடம் இல்லை. இதற்கு ஆயுதக்குழுக்கள், துணை இராணுவக்குழுக்கள் மற்றும் மனிதக்கடத்தற்காரர்களுடன் தொடர்பிருப்பதாக ஐ.நா மற்றும் சர்வதேச நிறுவனங்கள் கூறியுள்ளன.

லிபியா 42 ஆண்டுகள் முகம்மர் கடாபியின் ஆட்சியின் கீழ் இருந்துவந்தது. 2011 கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையில் நேட்டோ படைகள் ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நடத்தி கடாபியைக் கொன்றனர். 10 ஆண்டுகள் கடந்தும் செயற்படத்தக்க அரசாங்கம் அங்கு அமைக்கப்படவில்லை. 2011 இலிருந்து ஆயுத, இராணுவக்குழுக்களுக்கிடையில் வன்முறைகள், மோதல்கள், அரசியல் எதிர்த்தரப்புகளுக்கிடையில் பிணக்குகள் இடம்பெற்றுவருகின்றன. உள்நாட்டுப்போருக்கும் சிதைவுக்கும் உள்ளாக்கப்பட்ட தேசமாகியிருக்கின்றது.

சமகாலத்தில் உள்நாட்டுச் சிக்கல்களைக் கொண்டிருக்கின்ற நாடுகளான சிரியா, ஆப்கானிஸ்தான், மற்றும் ஈராக் ஆகிய நாடுகளில் இனத்துவ, மத முரண்பாடுகள் அடிப்படையாக இருக்கின்றன. லிபிய நிலைமை சற்றுவேறுபட்டது. அது அரசியல், இராணுவ முரண்பாடாக உள்ளது.

## உலகளாவிய அகதிகள்:

2015ல் 340,000 பேர் ஐரோப்பாவிற்கு அகதிகளாக வந்துள்ளனர். உலகளவில் 5,9 மில்லியன் பேர் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக உள்ளனர். துருக்கி, லெபனான், ஜோர்டான் ஆகிய நாடுகளில் சிரியா மற்றும் ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து சென்ற மில்லியன் கணக்கான அகதிகள் வாழ்கின்றனர். ஆபிரிக்காவின் ஸாட் (Tsjad), லிபேரியா, கென்யா, நைஜர், உகண்டா, சோமாலியா, ஆப்கானிஸ்தான், சூடான், எதியோப்பியா, எரித்ரியா உட்பட்ட பல்வேறு நாடுகளிலும் பெருமெண்ணிக்கையான உள்நாட்டு அகதிகள் உள்ளனர். லிபனான், ஜோர்டான், கென்யா, உகண்டா போன்ற நாடுகள் அகதிகள் அதிகமாகச் சென்று சேர்ந்துள்ள நாடுகளாகும்.

## நாடுகடந்த இடப்பெயர்வு:

நாடுவிட்டு நாடு இடப்பெயர்வுக்கான சமகால முக்கிய காரணி போர். அவற்றிலும் பெரும்பான்மையான உள்நாட்டுப் போர்கள் தீவிரமடைந்தமைக்கு உலக அதிகார சக்திகளின் ஆக்கிரமிப்புப் போர்கள்தான் அடிப்படைக்காரணி. ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா, லிபியா என அப்பட்டியல் நீளக்கூடியது. இயற்கை அனர்த்தங்கள், பூமி வெப்பமயமாதல், வறட்சி, சொந்த நாடுகளின் ஒடுக்குமுறை ஆட்சிபீடங்கள், மனித உரிமை மீறல்கள் என்பனவும் மக்களின் நாடுகடந்த இடப்பெயர்வுகளுக்குக் காரணமாகியுள்ளன. முற்றுமுழுதான பொருளாதாரக் காரணங்களும், கல்வி, வேலைவாய்ப்பு, வசதியான வாழ்வு போன்ற காரணிகளையும் கருத்திலெடுக்கவேண்டும்.

அகதிகளில் பெரும்பான்மையினர் நேரடியாக ஐரோப்பாவிற்குப் பயணிப்பதில்லை. முக்கியமாக ஐரோப்பாவிற்கான பயணவழிப் பாதைகள் மூன்று. அவற்றில் இரண்டு வட ஆப்பிரிக்காவிலிருந்து நேரடியாக மத்தியதரைக் கடல் வழியாக ஐரோப்பாவிற்கு செல்கின்றன. இவற்றில் மிகவும் பழமையானது மொரக்கோவிலிருந்து ஸ்பெயினுக்கு படகில் செல்கின்ற பயணம். இன்றும் சிறு எண்ணிக்கையிலான அகதிகள் இவ்வழியாகப் பயணிக்கின்றனர். இந்தப் பாதையின் போக்குவரத்து கணிசமாகக் குறைந்தமைக்கான காரணம், மொரக்கோ நாடு போக்வரத்தினை அதீதமாகக் கட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளமையாகும். ஸ்பெயின் அரசின் ஒத்துழைப்புடன் அகதிகளைத் தடுப்பதில் மொரக்கோ அரசு போதுமான கண்காணிப்பு வலிமையையும் வளங்களையும் கொண்டுள்ளது.

## கடற்பயணப் பாதைகளின் ஆபத்து:

மத்திய தரைக்கடல் வழியாகப் பயன்படுத்தப்படுகின்ற இரண்டாவது பாதை லிபியாவிலிருந்து இத்தாலி நாட்டுக்கானதாகும். அதிலும் குறிப்பாக லம்பேடுசா (Lampedusa) எனும் இத்தாலியத் தீவு வரை செல்கிறது. 2015 ஒகஸ்ட் வரை, இதுவே அதிகம் பயன்படுத்தப்பட்ட பாதையாக இருந்துள்ளது. இந்த பாதை மிகவும் ஆபத்தானது. பலர் கடலைக் கடந்து கரைசேர முடியாமல் திரும்ப நேர்வதும், நீரில் மூழ்கி இறக்கின்ற சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. சிரியாவிலிருந்து பயணிப்போருக்கு இப்பாதை மிகக் கடினமும் ஆபத்துமான நீண்ட பயணம். சிரியாவிலிருந்து ஐரோப்பாவிற்கு வரவேண்டுமாயின், எகிப்து வழியாக லிபியாவிற்குச் சென்று பின்னர் அங்கிருந்து இத்தாலிக்குச் செல்ல வேண்டும்.

தற்போது அதிகம் பேர் ஐரோப்பாவிற்குச் செல்லும் பயணம் துருக்கியூடான பாதையை உள்ளடக்கியதாகும். துருக்கியிலிருந்து கடற்பயணம் மேற்கொண்டு, அருகிலுள்ள கிரேக்க தீவான லெஸ்போஸினைச் (Lesbos) சென்றடைவதாகும். பின்னர் பால்கன் (Balkans) வழியாக, குறிப்பாக ஹங்கேரி வழியாக ஆஸ்திரியாவிற்குள் நுழைகின்றனர் எனப்பகின்றது. அவர்களில் பலருக்கு, இறுதி இலக்கு ஜேர்மனி அல்லது ஸ்வீடன். அவர்கள் அங்கு செல்ல விரும்புவதற்கான காரணம் மிகவும் எளிமையானது. இந்த நாடுகள் ஏற்கனவே சிரிய அகதிகளைக் கணிசமாக உள்வாங்கி வதிவிட அனுமதி வழங்கியுள்ளன. புதிதாகச் செல்லும் பலருக்கு இந்நாடுகளில் நண்பர்கள், தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் உள்ளனர். இது புதிய சூழலில் உதவியாகவும் ஒருவகைப் பாலப் பிணைப்பாகவும் தொழிற்படுகின்றது. ஒப்பீட்டளவில் ஜேர்மன், ஒஸ்ரியா, சுவீடன் ஆகிய நாடுகள் ஓரளவு மென்போக்கான அகதிகள் தொடர்பான அரசியலைக் கொண்டிருக்கின்றன. ஹங்கேரி மற்றும் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் இறுக்கமான அரசியல் நிலைப்பாட்டினைக் கொண்டுள்ளன. இங்கே ஐரோப்பிய ஒன்றியம் அகதிகள் விவகாரத்தில் பொது அரசியலைக் கொண்டிருக்காமை இவ்விவகாரத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்குகின்றது.

## ஐரோப்பிய அரசியல் நிகழ்ச்சி நிரலில் அகதிகள் விவகாரம்:

2015 ஜனவரி முதல் டிசம்பர் வரையான 12 மாதங்களில் 878,000 வரையான அகதிகள் ஐரோப்பாவிற்கு கடல்வழி வந்துசேர்ந்ததாக International Organization for Migration (IOM) தரவுகளை வெளியிட்டுள்ளது. கடல்வழிப் பயணத்தினை மேற்கொண்டு ஐரோப்பாவிற்கு அகதிகள் செல்வது புதிய நிகழ்வல்ல. 2015ல் இத்தாலியத் தீவான லம்பேடுசாவில் கப்பல் ஒன்று விபத்திற்கு உள்ளாகி 366 பேர் உயிரிழந்த சம்பவம் அகதிகள் விவகாரம் ஐரோப்பாவில் கவனம் பெறக் காரணமாக அமைந்தது. இன்னொருவகையில் மத்தியதரைக் கடலில் கப்பல் அகதிகள் என்ற விவகாரம் ஐரோப்பிய அரசியல் நிகழ்ச்சி நிரலில் முக்கிய பேசுபொருளாக மாறக் காரணமாக அமைந்தது அந்த விபத்து. 1993 - 2012 காலப் பகுதியில் கடற்பயணத்தில் இறந்தோர் எண்ணிக்கை 14,600. 2014ல் 3,500 பேரும் 2015ல் 3,440 பேரும் இறந்துள்ளனர்.

போர்கள்தான் அடிப்படையில் பாரிய இடப்பெயர்வுகளுக்குக் காரணமாகும். இன்னொருவகையில் சொல்வதானால் போர்கள்தான் அகதிகளை உற்பத்திசெய்கின்றன. போர்களை முடிவுக்குக் கொண்டுவராமல் இழுத்தடிப்பதிலும் முரண்பாடுகளைத் தீவிரப் படுத்துவதிலும் உலக வல்லாதிக்க சக்திகளின் வகிபாகம் அதிகம்.



rooban.s@thaiveedu.com

# இந்திய-இலங்கை கடல் வழி எல்லையும் சட்டவிரோத மீன்பிடியும்


**- சிவசாந்தினி குகநாதன்**

இந்திய துணைக்கண்டத்தில் தென் கீழ்க் கரைக்கு அப்பால் இந்திய பெரும் கடலில் ஏறத்தாழ 20 மில்லியன் மக்கள் வாழும் ஒரு தீவே இலங்கையாகும். 1972க்கு முன் உலக நாடுகள் முழுவதும் இலங்கையை 'சிலோன்' என்ற பெயரால் அழைத்து வந்தனர்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடல் வழி எல்லையானது (Maritime boundary) பாக்கு விரிகுடா பகுதிக்கு (Park bay region) மிக அண்மித்து காணப்படுகின்றது. இவ்விரு நாடுகளுக்கமிடையேயான, அதாவது இந்தியக் கரையோரமாக தனுஷ்கோடிக்கும், இலங்கைக் கரையோரமாக தலைமன்னாருக்கும் இடைப்பட்ட ஆகக் குறைந்த தூரமானது 16 Km ஆகும்.

Park Bay இன் இருபுறமும் வாழும் மீனவ சமூகங்கள் இப்பகுதியை தமது பொதுவான மீன்பிடித் தளமாக பல நூற்றாண்டுகளாக பகிர்ந்து வந்தன. எனினும் 1974-1976க்கு இகிடைப்பட்ட காலப்பகுதியில் கடல் வழி எல்லை ஒப்பந்தம் (Maritime Boundary Agreement) கைச்சாத்திடப்பட்டதிலிருந்து மீன்பிடி நோக்கத்துடன் கடல் வழி எல்லையைத் தாண்டுவது தடை செய்யப்பட்டிருந்தது. எனினும் இந்திய மீனவர்கள் இருநாடுகளுக்குமிடையேயான ஒப்பந்தத்தையும் மீறி சர்வதேச கடல் வழி எல்லைக்கான கோட்டினை (International Maritime Boundary Line) ஊடறுப்பது அல்லது தாண்டி இலங்கையின் கடற்பரப்பிற்குள் ஊடுருவுவது சாதாரண விடயமாக உறுதிபடக் கூறக்கூடியவாறு நடந்தேறுகின்றது. இதற்கான முக்கிய காரணமாக இந்தியக் கரையோரப் பகுதியில் கடலுயிர் வளங்கள் மிகையாக அறுவடை செய்யப்பட்டமையும் வளங்கள் குறைவடைந்தமையுமே என எடுத்துரைக்கலாம். 2015ம் ஆண்டு புள்ளிவிபரங்களின் படி இராமேஸ்வரத்தில் 5500 இழுவைப்படகுகள் காணப்பட்டதில் கிட்டத்தட்ட 2500 இழுவைப் படகுகள் இலங்கைக் கரையோர மீன்வளங்களில் நேரடியாகத் தங்கியுள்ளன என உறுதியாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இலங்கையின் கடற்பரப்பிற்குள் சட்டவிரோத மீன்பிடி முறையைப் பயன்படுத்தி, சட்டவிரோத, அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடிக்காக (Illegal, Unreported and Unregulated fishing) ஊடுருவும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள், இந்திய-இலங்கை மீனவர்களிற்கிடையே பாரிய சச்சரவுகளைத் தோற்றுவித்த வண்ணம், அதிகரித்து வருகிறது. இது இலங்கை-இந்திய அரசாங்கத்திற்கும் ஒரு பேரிடியாக இருந்து வருகிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க பல இராஜதந்திர ஈடுபாட்டுடனான முயற்சிகள் இரு நாடுகளிடையேயும் ஏற்படுத்தப்பட்டன. எனினும், தற்போது வரை இரு நாடுகளும் பிரச்சினையை




(படம் 1)

தீர்ப்பதற்கு நிரந்தரத் தீர்வொன்றை கண்டு பிடிப்பதில் தோற்று விட்டன என்றே கூறவேண்டும். அன்றாடம் இலங்கையின் வட பகுதியில் வெளியாகும் புதினத்தாள்களில் இந்திய மீனவர்கள் கைது என செய்தி வெளி வருவதை இன்றும் காணக்கூடியதாயுள்ளது (படம் 2). இது இப்பிரச்சினையின் தீவிரத்தன்மையை எடுத்தியம்புகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு, வடமேற்குப் பகுதிகளில்




பல்வேறு புதினத்தாள்களில் வெளிவந்த இந்திய மீனவர்கள் கைது பற்றிய செய்தி
(படம்: 2)

இந்தியாவுக்கு இடைப்பட்ட கடற்பரப்பு குறுகிய கடல் பிரதேசம் என்பதால் எல்லைக் கோடுகள் ஒன்றின் மேல் ஒன்று மேற்படியும் நிலை தோன்றியுள்ளது. அதாவது ஆரம்பத்தில் தரைத்தோற்ற எல்லை மூன்று மைல்களாகவும் பின்பு ஆறு மைல்களாகவும் இருந்த போது இலங்கை இந்திய கடலோர எல்லைகளில் பிரச்சினைகள் எழவில்லை. பின்னர் தரைத்தோற்ற எல்லையை 12 மைல்களாக விஸ்தரித்த போது குறுகிய பாக்கு நீரிணைப் பகுதி 24 மைல்களுக்கு குறைவாக இருந்தமையால் இவ்வெல்லைக் கோடுகள் ஒன்றன் மேல் ஒன்று மேற்படியும் நிலை தோன்றியது. இதனால் அகல நெடுங்கோடுகளின் அடிப்படையில் இலங்கை இந்திய கடலோர எல்லைகள் வகுக்கப்பட்டன. 1974ல் பாக்கு நீரிணை பற்றியும், 1976ல் மன்னார் வங்காள விரிகுடா பற்றியும் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இவ் ஒப்பந்தங்கள் மூலம் அதுவரை காலமும் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்ட கச்சதீவுப் பகுதி இலங்கை வசமானது.

கச்சதீவும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் எல்லைப் பிரச்சினை தோன்றக் காரணமான அம்சங்களில் ஒன்றாகும். மக்கள் வசிக்காத இத்தீவானது 285 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்ட தேவாலயம் ஒன்று இங்கு உண்டு. இதனால் இரு நாட்டு மீனவர்கள் மற்றும் யாத்திரீகர்கள் தேவாலயத்துக்குச் சென்று வழிபட்டு வருவது வழமை. கச்சதீவினைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் ஏராளமான இறால் மீன் வளங்கள் உள்ளதால் இந்திய மீனவர்கள் கத்தோலிக்க தேவாலயத்தினை சாட்டாகக் கொண்டு இலங்கைக் கடற்பரப்பினுள் உள்நுழைந்து வளங்களை அள்ளிச் செல்கின்றனர்.

1974ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமானது இலங்கை இந்திய எல்லை பற்றியது. இதன்போது கச்சதீவுக்கு அருகாமையில் சமதூரக்கோட்பாட்டின் அடிப்படையில் எல்லைக்கோடு தீர்மானிக்கப்பட்டது. இவ் ஒப்பந்தத்தின் முடிவில் கச்சதீவானது இலங்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இந்திய மீனவர்கள் மற்றும் யாத்திரீகர்கள் பயண ஆவணங்கள் இல்லாது கச்சதீவுக்கு செல்லவும் கச்சதீவினைப் பயன்படுத்தி ஓய்வெடுக்கவும், தங்கள் மீன்பிடி உபகரணங்களை உலர்த்தவும், மீன்பிடி வலைகளை சரி செய்யவும் அனுமதிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து 1976ம் ஆண்டு இரு நாடுகளும் மற்றுமொரு உடன்படிக்கையை அமுல்படுத்தியது. இவ் உடன்படிக்கையானது மன்னார் வளைகுடா மற்றும் வங்காள விரிகுடாவில் உள்ள இரு நாடுகளுக்கிடையேயான கடல் எல்லை பற்றியும் கடல் எல்லைக் கோட்டை விரிவுபடுத்தும் நோக்கத்துக்காகவும் ஏற்படுத்தப்பட்டது. 1976ம் ஆண்டு ஒப்பந்தத்தின் மூலம் பல நூற்றாண்டுகளாக இலங்கை மீனவர்களால் மீன் பிடிக்கப்பட்ட வளம் மிகுந்த மீன்பிடிப் பகுதியான வாட்ஜ் பாங்க் (Wadge bank) இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்தின் (EEZ boundary) ஒரு பகுதியாக மாறியது. இதன் விளைவாக இலங்கை மீனவர்கள் வாட்ஜ் பாங்க் பகுதியில் மீன்பிடிக்கும் பாரம்பரிய உரிமையை இழந்தனர். இவ்வாறான ஒப்பந்தங்களின் மூலமாக இலங்கையின் வடபகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பெரும் சவால்களை எதிர்நோக்கி வருகின்றமை வடபகுதி மீனவர்களின் துர்ப்பாக்கியத் தன்மையை தெளிவுபடுத்துகின்றது.

இக்கட்டுரையானது இலங்கையின் பிராந்திய நீரில் (territorial waters) இந்திய இழுவைப்படகுகளால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத, அறிவிக்கப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடியின் இயல்பு, மற்றும் வாழ்வாதாரத்திலும் இந்திய இலங்கை உறவிலும் இது ஏற்படுத்தும் தாக்கம், இதைத்தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட இராஜதந்திர முயற்சிகள் என்பவற்றை விபரிப்பதாக அமைகின்றது.

### அத்துமீறிய மீன்பிடியின் இயல்புகள்:

கிட்டதட்ட 1000-1500, 32-42 அடி கொண்ட, 800, 100, 120 HP வேகமுடைய இயந்திரப்படகுகள் பாக்கு நீரிணை, பாக்கு விரிகுடா, மன்னார் வளைகுடாப் பகுதிக்கு கிழமையில் 3 நாட்கள் திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில், இலங்கையின் கடலெல்லைப் பரப்பிற்குள் அத்துமீறிய மீன்பிடி நோக்கத்துடன் வருகை தருகின்றன.

இம்மீனவர்கள் தமிழ்நாடு, ஆந்திரா போன்ற பகுதிகளில் இருந்தே வருகை தருவதாகவும் இவர்கள் இலங்கையின் கடற்பரப்பு எல்லையை வேணுமென்றே தாண்டி சிறந்த மீன்பிடி சந்தர்ப்பத்திற்காகவே இவர்கள் ஊடுருவுவதாக கடந்த காலப்புள்ளி விபரங்கள் தெளிவுபடுத்துகின்றன. அதிலும் பாக்கு விரிகுடா, மற்றும் மன்னார் வளைகுடா ஆகிய பகுதிகள் மிகவும் அதிகளவு இயற்கையான கடற்பரப்புக்களையும், அநேக கடல் அடித்தள உயிரினசாகியங்களையும் கொண்டு மிகவும் உற்பத்தித்திறன் கூடிய ஆழமற்ற பகுதியாக காணப்படுவதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. இந்திய இழுவைப்படகுகளின் ஊடுருவலைக் காட்டும் படம், படம் 1ல் காட்டப்பட்டுள்ளன.

இவ்வாறாக ஊடுருவும் இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் மீன்பிடி உபரணமானது இலங்கையில் தடைசெய்யப்பட்டிருக்கும் அடித்தள இழுவைப்படகுகள் ஆகும். இவ் இழுவைப்படகுகளால் மிக முக்கியமாகப் பிடிக்கப்படும் உயிரினங்களுள் இறால்கள், அடித்தள வாழ் மீன்கள், கடலட்டைகள், கணவாய் என்பன அடங்கும்.

இறால்களில் மிக முக்கியமாக P. monodon உம், அடித்தள மீன்களுள் முக்கியமாக emperors, breams, snappers மற்றும் groupers என்பனவும் அடங்கும். 2016ம் ஆண்டு புள்ளிவிபரவியலின் படி ஏறத்தாழ 35,600 இந்தியன் இழுவைப்படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன. அவை 1900 tons இறால்கள், மற்றும் 4000 tons அடித்தள மீன்களை அறுவடை செய்துள்ளன. சாதாரணமாக இப்படகுகள் ஒரு நாளைக்கு 2-6 இழுவைகளை (hauls per day) மேற்கொள்கின்றன. இதனால் கடல் அடித்தளத்திற்கும், அடித்தளத்துடன் இணைந்த பகுதிக்கும் பாரிய நஷ்டத்தையும் தீங்கையும் உண்டுபண்ணுகின்றன. அதாவது இவை கடலடித்தளத்தை வருடிச்செல்வதால் பெருமளவான மீன்களின் உணவூட்டும், குஞ்சு பொரிக்கும், இனப்பெருக்கும் தரைகளை அழிக்கின்றன.

இலங்கையின் வடபகுதி மீனவர்கள் கடந்த காலத்தில் 30 வருடகாலமாகப் போரினால் பாதிக்கப்பட்டிருந்தனர். தற்போது இவர்கள் இந்தியப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடியால் அவர்களது வாழ்வாதாரத்துக்கே பாரிய அச்சுறுத்தலை எதிர் நோக்குகின்றனர். ஏறத்தாள 98% ஆன பங்குதாரர்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாண கரையோர மீனவர்களது வாழ்வாதாரம் அத்துமீறிய மீன்பிடியால் பாரியளவு பாதிக்கப்பட்டு விட்டதெனத் தெரிவிக்கின்றனர். அதாவது 22% ஆன மீனவர்கள் தமது மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடிக் கலங்கள் இந்திய இழுவைப்படகுகளால் அழித்தொழிக்கப்பட்டமையால் நிரந்தரமாகவே தமது வாழ்வாதாரத்தை இழந்து விட்டனர் எனக் கூறுகின்றனர்.

இவ்வாறாக கரையோர மீனவர்கள் தமது வழமையான வருமானத்தின் நான்கிலொரு பங்கை அதாவது நாள் ஒன்றுக்கு 600-800 இலங்கை ரூபாய் வருமானத்தையே தற்போது பெற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது என்கிறனர். மேலும் 87% க்கும் அதிகமான மீனவர்கள் தமது மீன்பிடி வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் பயன்படுத்தப்படும் வலைகள் போல் வினைத்திறன் வாய்ந்தவையாகஇல்லை என்கின்றனர். இலங்கை மீனவர்களது எதிர்காலம் ஆபத்தான நிலையிலுள்ளது. காரணம் அவர்களால் வினைத்திறன் கூடிய இந்திய இழுவைப்படகுகளுடன் போட்டி போட முடியவில்லை. எனவே இந்திய இழுவைப்படகுகளால் ஏற்படுத்தப்படும் இழப்பிலிருந்து தப்பிப்பதற்காக திங்கள், புதன், சனி ஆகிய நாட்களில், மீன்பிடிக்கச் செல்வதை தவிர்ப்பதாகக் கூறுகின்றனர். 92% ஆன பங்குதாரர்கள் (stakeholders) அடித்தள இழுவை மீன்பிடியானது கடலடித்தளத்தை அழிவடையச்செய்து அதனுடன் இணைந்த அடித்தளச் சாகியங்களை இல்லாதொழிப்பதாலும் பெரியளவிலான உபவிளைவுகளையும் நிராகரிக்கப்பட்ட இனங்களையும் அள்ளி வருவதாலும் அடித்தள இழுவை மீன்பிடியானது மீன் குடித்தொகைக்கும் மீன் இனப் பல்வகைமைக்கும் தகாத விளைவுகளை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் இலங்கையில் வட பகுதி மீனவர்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வருமானத்தைக்கூட ஈட்ட முடியாதவர்களாக உள்ளனர் எனத் தெளிவுபடுத்துகிறது. மேலும் 73%ஆன பங்குதாரர்கள் அன்றாட நுகர்வுக்குத் தேவையான மீன்களையே பெறமுடியாத நிலையிலுள்ளவர்களாகத் திகழ்வதாகத் தெரியவருகிறது.

### இலங்கை இந்திய ராஜதந்திர ஈடுபாடுகள்:

இச் சச்சரவைத் தீர்க்க இலங்கையும் இந்தியாவும் பல ராஜதந்திர முயற்சிகளில் கடந்தகாலங்களில் ஈடுபட்டு வந்துள்ளன. இதன் சில செயற்பாடுகளாக நியம தொழிற்பாட்டு முறைகள் வகுக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். இம்முறையில் பௌதிக இழப்புக்கள் ஏதுமின்றி உயிராபத்து ஏதுமின்றி கைது செய்யப்படுவதும், பின்னர் விடுவிக்கப்படுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் இலங்கை கடற்படையினரால் தமிழ் நாட்டு மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்களும் நடந்தேறாமல்இல்லை. இச் செயற்பாடானது இலங்கை இந்திய உறவுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமைந்தது.

எது எவ்வாறிருப்பினும் இலங்கை அரசாங்கம், அடித்தள இழுவை மீன்பிடி முறையானது ஓர் முடிவுக்கு வர வேண்டும் என் பதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகிறது. இந்திய அரசாங் கமும் இந்த மீன்பிடிக் கலங்கள் இந்தியக்குடாவுக்கு தென்புறமாகவுள்ள சர்வதேச நீர் எல்லைக்குள் மீன் பிடிக்கச் செல்லுமாறும் அதிலிருந்து சிறந்த அறுவடையினைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இதன் மூலம் நிரந்தரத் தீர்வொன்றைக் காண முடியும் எனவும் அறிவுறுத்தியிருந்தது. எனினும் ராஜதந்திர பேச்சுவார்த்தை கள்கூட பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவான வழியாக அமையவில்லை. இதற்கிடையில் தமிழ்நாடு, கச்சதீவை நிரந்தரக் குத்தகைக்கு மீளப் பெற்று இந்திய மீனவர்களுக்கு உரிமம் வழங்குவதால் இலங்கையின் நியமிக்கப்பட்ட பகுதியில் மீன் பிடிக்க அனுமதிக்கலாம் என எதிர்பார்க்கிறது.

தற்போது இலங்கையின் வட பகுதி மீனவர்கள் தம் நாட்டு கடல் வழி எல்லையினைப் பாதுகாக்க உடனடி செயற்றிட்டம் மூலம் கடும் பாதுகாப்பு முறைமைகள் அமுல்படுத்தப்பட வேண்டும் எனத் தீவிரமாக குரலெழுப்பி வருகின்றனர். இதற்கான தீர்வானது வெகுவிரைவில் கிடைக்க வேண்டும் எனவும் ஆதங்கப்படுகின்றனர். இரு நாட்டு அரசாங்கங்களும் இதற்கான ஓர் தீர்வை எட்டி இந்திய மீனவர்கள் கடல் வழி எல்லையினைத் தாண்டி இலங்கையினுள் ஊடுருவாமல் இருப்பதை ஊக்குவிப்பது சாத்தியமாகுமா என்பதற்கு காலம் தான் பதில் சொல்லவேண்டும்.



sivashanthini.k@thaiveedu.com



# தமிழ்ச் சுவரில் மோதும் இந்துத்துவம்

- விக்னேஷ் கார்த்திக்
- அஜஸ் அஷ்ரவ்

தமிழில்:
- மணி வேலுப்பிள்ளை

தமிழகத்தின் அடையாளமாகத் திகழும் பல்வண்மையும், வெவ் வேறு குழுமங்களை அரவணைக்கும் மரபும் பாரதிய ஜனதா கட்சியின் அரசியற் பாணிக்கு எதிர்மா-றானவை.

நாடாளுமன்றத்துக்கு 39 பிரதிநிதிகளை அனுப்பும் தமிழகத்தில், 'மோதி மாநிலங்களுக்கு வருவார், பேசுவார், வெல்வார்' என்ற மந்திரம் இதுவரை பலிக்கவில்லை.

### மோதியின் வேட்டி, சால்வை:

தமிழ்ப் பண்பாட்டுக் குறியீடுகளைப் பயன்படுத்தி தமிழ்நாட்டை ஈர்க்க முயல்கிறார் மோதி. எனினும் சென்னையில் பாதுகாப்புக் கண்காட்சியை துவக்கிவைக்க அவர் வந்தபோது (2018), 'திரும்பிப் போ, மோதி!' என்ற முழக்கமே சமூக ஊடகங்களில் மேலோங்கியது. வேட்டி, சால்வை அணிந்து மாமல்லபுரம் வந்து,



சீன அதிபர் சியுக்கு அவர் தமிழ்விருந்து அளித்தபோது (2019), 'திரும்பிப் போ, மோதி!' என்ற முழக்கம் ஓர் இலட்சம் தடவைகள் எழுந்தது. தமிழ்நாட்டை அவரால் ஈர்க்க முடியவில்லை. தமிழ் நாட்டு மக்களின் வெறுப்பை அவர் சம்பாதித்து வருகிறார்.

### மோதியின் தமிழ்ப்பற்று:

இந்தி - இந்து - இந்துஸ்தான் - இந்துத்துவக் கலவையே பா.ஜ.க.வின் அரசியல் என்ற படிமத்தை மறைக்கும் நோக்குடன், தமிழ் தமக்குப் பிடித்தமான மொழி என்று அவர் அடிக்கடி சொல்லி வருகிறார். ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றியபோது (2019), தமிழ்ச்சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரின் (யாதும் ஊரே, யாவரும் கேளிர் எனும்) கூற்றினை மேற்கோள் காட்டினார். தமிழின் தொன்மை பற்றி அமெரிக்காவில் தாம் தெரிவித்த சங்கதி, அங்கு பேசுபொருளாக மாறியதாக சென்னை திரும்பி இந்திய தொழினுட்ப நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் தெரிவித்தார்!

### சாதி:

தமிழ்நாட்டில் இந்தி, வடமொழி இரண்டும் உயர்சாதிகளதும், வெளி மாநிலத்தவர்களதும் அடையாளங்களாக கொள்ளப்படுபவை. அதை வைத்து சாதி-அரசியலுக்கும் மொழி-அரசியலுக்கும் பா.ஜ.க. முடிச்சுப்போட்டுள்ளது. சாதிப்பட்டியலின் அடியில் நிலைகொண்ட அருந்ததியர் சாதியைச் சேர்ந்த எல். முருகன் மாநில பா.ஜ.க. தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். தமது சாதிப் பெயர் இழிவானது என்று கருதிய வேறொரு சாதியின் ஏழு பிரிவினர் கோரியபடி, அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக தேவேந்திர குல வேளாளர் என்று மறுபெயரிடும் நடவடிக்கையை பா.ஜ.க. மேற்கொண்டது.

### இந்துத்துவம்:

இந்துத்துவமே பா.ஜ.க.வின் அரசியற் கையிருப்பில் நிலையான சரக்கு. அண்மையில் சேலத்தில் உரையாற்றிய அதன் தேசிய இளைஞர் அணியின் தலைவர் தெஜஸ்வி சூரியா, 'ஒவ்வொரு தமிழரும் ஓர் இந்து என்னும் பெருமை படைத்தவர். தி.மு.க. படுமோசமான இந்துவிரோத கருத்தியலைக் கடைப்பிடிக்கிறது. தமிழ் தப்பிப்பிழைக்க வேண்டும் என்றால், இந்துத்துவம் வெல்ல வேண்டும்' என்று முழங்கினார்.

1998 பெப்ரவரி 14ம் திகதி கோவையில் நிகழ்ந்த குண்டுவெடிப்புகளை நினைவுகூரும் நிகழ்ச்சி ஒன்றில் முருகன் இட்ட முழக்கம்: 'அன்று இறந்த 58 பேரின் தியாகம் வீண்போகக் கூடாது என்றால், இந்துசமயத்தைக் காப்பாற்றவேண்டும் என்றால், இந்துவிரோதமும், தமிழ்விரோதமும் பாராட்டும் தி.மு.க.வுக்கு ஆட்சியில் அமர வாய்ப்பளிக்கக் கூடாது.' பல்வண்மையும், அரவணைப்பும், சமயச் சார்பின்மையும் மிளிரும் தமிழ் அடையாளத்தை இந்துமயப் படுத்தவெனத் திட்டமிட்டு தெரிவிக்கப்பட்ட கூற்றுகள் அவை.

### இந்து-முஸ்லீம் அரசியல் வரம்புகள்:

தமிழ்நாட்டின் சமயச்சார்பற்ற கட்டமைப்பில் கோவைக் குண்டுகள் ஒரு வெடிப்பை ஏற்படுத்தின. அந்த வெடிப்பின் ஊடாகத் தமிழகத்துள் புகுவதற்கு பா.ஜ.க. எண்ணியிருந்தது. வலதுசாரி இந்து இயக்கங்களும், இடைநடு வன்போக்கு இயக்கங்களும், முஸ்லீம் தீவிரவாதக் குழுமங்களும் கோவையில் பல்கிப் பெருகின. மக்களைப் பிளப்பதற்கு உகந்த நிலைவரம் அது. எனினும் தனது முயற்சியில் பா.ஜ.க. வெற்றி பெறவில்லை என்பதை தேர்தல் பெறுபேறுகள் உணர்த்துகின்றன. மாநிலத்தின் குடித்தொகையில் முஸ்லீங்கள் 6 விழுக்காடு என்பது அதற்கொரு காரணம். முஸ்லீங்களால் சமூகத்துக்கு ஆபத்து விளையும் எனும் கற்பனையை ஊதிப்பெருப்பிக்க அது போதுமானதல்ல.

### பல்வண்மைத் தமிழ் அடையாளம்:

பல்வண்மைத் தமிழ் அடையாளம் உருவாக்கப்பட்டபோது, அதனுள் முஸ்லீங்கள் உள்வாங்கப்பட்டமையே பா.ஜ.க.வின் தோல்விக்கு இன்னும் உருப்படியான காரணம். 1920ல் சென்னை

சட்டமன்றத்தில் சி.வி. வெங்கடரமண ஐயங்கார் ஒரு முன் மொழிவை முன்வைத்தார். காவல்துறையில் ஐரோப்பியர்களுடன் இந்தியர்களுக்கும் சில பதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரினார். அதற்கு நீதிக்கட்சியின் நிறுவன உறுப்பினராகிய நடேச முதலியார் ஒரு திருத்தத்தை முன்வைத்தார். அதாவது காவல்துறையை சமூகவாரியாகப் பன்முகப்படுத்துவதற்கு மேல திக ஏற்பாடாக 'பிராமணர் அல்லாத இந்தியர்கள்' எனும் தொட ரைப் பயன்படுத்தி மேற்படி முன்மொழிவை மீட்டியமைக்கும்படி அவர் கோரினார். பிராமணர் அல்லாத இந்துக்கள், முஸ்லீங்கள், இந்திய கிறிஸ்தவர்கள், சமணர்கள், பார்சிகள், ஆங்கில-இந்தி யர்கள் அனைவரையும் உள்ளடக்கியே 'பிராமணர் அல்லாத இந்தியர்கள்' எனும் தொடரை அவர் கையாண்டார்.

Being 'Hindu' and Being 'Secular' எனும் தமது ஆய்வேட்டில் முஸ்லீங்களை உள்வாங்கும் மரபு குறித்து சுவையான விபரம் ஒன்றை சமூகவியலர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் முன்வைக்கிறார்:



தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தை நிறுவியவரும், திராவிடர் கழகத்தின் தலைவரும், மாநில மக்களால் 'பெரியார்' எனக் கொண்டாடப்படுபவருமாகிய ஈ.வே.ரா. அவர்கள் முஸ்லீங்களை, 'இந்துசமயத்தின் உட்கூறாகிய சாதி-ஒடுக்குமுறையிலிருந்து தப்பு வதற்காக மதம்மாறிய தரப்பினர்' என்று சித்தரித்து, அவர்களை அணிதிரட்டினார்.

தீண்டாமையை வெல்வதற்கு தலித்துகள் இஸ்லாத்தை தழுவ வேண்டும் என்று பெரியார் வாதாடினார். இஸ்லாத்தின் மையக் கருவாக விளங்கும் சமத்துவத்தை மெச்சினார். கணவரை இழந் தோரின் மறுமணத்தையும், மணவிலக்கையும் இஸ்லாம் அனுமதிப் பதை வரவேற்றார். அதேவேளை பெண்களை ஒதுங்கி அல்லது தலைமறைந்து நடமாட நிர்ப்பந்திக்கும் படுதா எனும் வழக்கத்தை சாடினார். கா.ரா. மனோகரனின் கருத்துப்படி, 'பெரியார் தந்திரோ பாய நோக்கத்துக்காகவே இஸ்லாத்துக்கு பரிந்து பேசினார்.' அதேவேளை புத்தரின் நியாயயத்துவம் அவரை ஊக்கியது. பௌத்தத்தை ஒரு நியாயத்துவ மெய்யியலாகவே அவர் கருதி னார்.

இஸ்லாமும் திராவிட இயக்கமும் ஒத்த குறிக்கோள்கள் கொண்டவை என்று பெரியார் கருதினார். 1947 மார்ச் 18ம் திகதி அவர் ஆற்றிய உரை ஒன்றை பாண்டியன் எடுத்துக்காட்டுகிறார்: 'இஸ்லாத்தில் பிராமணரோ (மேல் சாதியோ), சூத்திரரோ (கீழ் சாதியோ), பஞ்சமரோ (தாழ் சாதியோ) இல்லை. அத்தகைய நெறியே திராவிடர்க்கு உரியதும், வேண்டியதும். இந்து (ஆரிய) சமயம் பல கடவுள்களையும் சாதிகளையும் அடிப்படையாகக் கொண்டது. பற்பல கடவுள்கள், சாதிகள் ஊடாக திராவிடர் சிதைவையும், சீரழிவையும், மனித உரிமைகளைத் துய்ப்பதில் முட்டுக்கட்டைகளையும் எதிர்கொள்கையில், ஆரியர் (பிராமணர்) நன்மைகளும் சலுகைகளும் அடைந்து வருகிறார்கள். பிராம ணர்கள் இஸ்லாமிய நெறிமீது மிகுந்த காழ்ப்புக் கொண் டுள்ளார்கள்.'

'இந்துசமயத்துள் நிலவும் சாதிவாரியான ஏற்றத்தாழ்வுகளைக் கருத்தில் கொண்ட சுயமரியாதை இயக்கம், இஸ்லாத்தை ஒரு சமயக் குறிக்கோளாகவும், தாழ்ந்த சாதி இந்துக்களை தாழ்ச்சி யிலிருந்து விடுவிக்கும் ஆயுதமாகவும் விதந்துரைத்தது' என்கிறார் பாண்டியன்.

## தமிழ்:

1947ல் பிரிவினை ஏற்படுந் தறுவாயில் நாடுமுழுவதும் இந்து-முஸ்லீம் கலவரங்கள் மூண்டபொழுது பெரியார் ஆற்றிய உரை அது. இஸ்லாத்துக்கு இணக்கமான அவர்தம் அணுகுமுறையி னால் முஸ்லீங்கள் சுயமரியாதை இயக்கத்தின்பால் ஈர்க்கப் பட்டனர். 1957 வரை வெளிவந்த தாருல் இஸ்லாம் எனும் தமிழ்ச் சஞ்சிகையின் பதிப்பாளர் தாவுத் ஷா முஸ்லீங்களிடம் ஒரு திட் டத்தை முன்வைத்தார். தமிழை மார்க்க மொழியாகவும், பாட மொழியாகவும் கொள்ளவேண்டும் என்பது அதில் ஒன்று. தேசிய விடயங்களில் பிராமணிய நிலைப்பாடு எடுப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் தமது சமூகத்தவரிடம் அவர் கோரினார். இவ்வாறு முஸ்லீம் சமூகத்துக்கும் பிராமணியம் சாராத திராவிட இயக்கத்துக்கும் இடையே ஓங்கிய ஒத்துழைப்பு, 'இஸ்லாம் எங் கள் வழி, இனபத்தமிழ் எங்கள் மொழி' என இற்றைவரை ஒலிக்கும் முழக்கத்துக்கு வழிவகுத்தது என்கிறார் பாண்டியன்.

வெவ்வேறு குழுமங்களை அரவணைக்கும் தமிழ் அடையாளம், இந்து வலதுசாரிகளின் எதிர்ப்பு முயற்சிகளை மீறி நிலைபெற்றுள் ளது. அதற்கு தமிழ்மொழியே தலையாய காரணம். மேல்சாதி களுக்கு எதிராக கீழ்த்தட்டுக் குழுமங்கள் மேற்கொண்ட போராட் டத்தின் மொழியாகவே தமிழ் பெரிதும் நோக்கப்படுகிறது. ஒரே காலத்தில் நிகழ்ந்த இத்தகைய படிமுறைகள் இரண்டிலும் முஸ் லீங்கள் ஓர் உட்கூறாக அமைந்தார்கள். முஸ்லீங்கள் தமிழ்பேசும் தரப்பாக மட்டுமன்றி, மேட்டிமைக் குழுமங்களுக்கு எதிராக அறைகூவி எழுந்த கீழ்த்தட்டுக் குழுமங்களுள் ஒரு தரப்பாகவும் விளங்கி வந்துள்ளார்கள். அதாவது தமிழ் அடையாளம் ஓர் அரசி யல் அடையாளம். அது ஓர் இனத்துவ அடையாளமல்ல.

அதனால் நன்மையே விளைந்தது. எடுத்துக்காட்டாக, ஏறாத்தாழ எல்லா மாநிலங்களிலும் 'வேறு பிற்பட்ட குழுமங்கள்' எனும் நிர லில் சில முஸ்லீம் சாதிகள் இடம்பெற்றுள்ளன. 2007ல் தி.மு.க. அரசு ஒரு படி மேலே சென்று, அந்த நிரலில் ஒதுக்கப்பட்ட தொகையினுள் 3 விழுக்காடு பங்கினை புறம்பாக வழங்கியது. தமிழ்நாட்டில் அதற்கு எதிர்ப்புக் கிளம்பவில்லை. ஆனால் வடமா நிலம் எதிலும் அப்படி நடக்க வாய்ப்பில்லை. அங்கெல்லாம் பா.ஜ.க.வே தலையாய அரசியல் சூத்திரதாரி என்பது மட்டுமல்ல அதற்கான காரணம்!

முஸ்லீங்களுக்கு தி.மு.க. புரிந்த நன்மையை, மேல்சாதிகளுள் பொருள்வளம் குன்றிய பிரிவினர்க்கு பத்து விழுக்காடு தொகை ஒதுக்குவதற்கு தி.மு.க. காட்டிய கடும் எதிர்ப்புடன் ஒப்புநோக்க லாம். கீழ்த்தட்டுக் குழுமங்களைச் சேர்ந்த ஆதரவாளர்கள் தனது நிலைப்பாட்டை பெரிதும் வரவேற்பர் என்பது மு.க. ஸ்டாலினுக் குத் தெரியும். 2019 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. 39க்கு 37 தொகுதிகளை வென்றெடுத்தது.

## 370வது உறுப்புரை:


ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு ஓரளவு தன்னாட்சி அளித்த (இந்திய அரசியல்யாப்பின்) 370வது உறுப்புரையை பா.ஜ.க. அரசு வெட்டிக்குறைத்ததை தி.மு.க. எதிர்த்து முழங்கியதற்கு, அதன் சமயச்சார்பற்ற தமிழ் அடையாளமே காரணம். மோதி அர சின் நடவடிக்கை இணைப்பாட்சி நெறியைக் கருவறுக்கும் நடவ டிக்கை என்று தி.மு.க. அடித்துக் கூறியது. அத்துடன் தி.மு.க., வி.சி.க., இடதுசாரித் தரப்புகள் உள்ளிட்ட ஒரு கூட்டமைப்பு குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தது. காஷ்மீரி முஸ்லீங்களுக்கு பாடம் படிப்பிக்கும் ஆசை பிற மாநிலங்களில் கைகூடுவதுபோல் தமிழ்நாட்டில் கைகூடப் போவ தில்லை.

## மொழியும் சாதிப் பிளவுகளும்:

தமிழ் அடையாளத்தை உருவாக்குவதில் மொழி வகிக்கும் பங்கினை கருத்தில் கொள்கையில், மோதி தமது தமிழ்மொழிப் பற்றினை தம்பட்டம் அடிக்கும் காரணம் வியப்பூட்டாது. தலித் துக்களை ஈர்க்க பா.ஜ.க. பாடுபட்டு வருகிறது. தாம் 'வேறு பிற்பட்ட குழுமங்களை' சார்ந்தவர் என்ற பல்லவியையும் மோதி பாடிவருகிறார். எனினும் அவர் பேசும் வடமொழிமயமான இந்தியிலும், அவர் புலன்செலுத்தும் இந்துசமய அம்சங்களிலும் வட இந்திய மேல்சாதிப் பண்பாடு பொதிந்திருப்பதால், தமிழ்

மக்களுக்கு அவர் ஓர் ஆர்.எஸ்.எஸ். பரப்புரையாளராகவே தென்படுகின்றார். 'இந்தியால் மட்டுமே இந்தியாவை ஒன்றிணைக்க முடியும்' என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா போல் (2019), அவ்வப்பொழுது வாய்தடுமாறி உதிர்க்கப்படும் சொற்கள் தமிழ் மக்களின் உள்ளப்பதிவை வலுப்படுத்தி வருகின்றன.

அத்தகைய சொற்கள் கீழ்த்தட்டுக் குழுமங்களுக்கு பெரிதும் கசக்கின்றன. அத்துடன் தமிழ்மொழியை ஓர் இந்துமொழி என்று வரையறுக்கும் பா.ஜ.க. தலைவர்களின் போக்கும் அக்குழுமங்களை மேலும் விசனமடைய வைக்கின்றது. கடந்த தசாப்தங்களில் வட



மொழிமயப்பட்ட தமிழ்பேசும் மேல்சாதியினர் ஆதிக்கம் செலுத்தியதையே 'இந்து' என்ற சொல் நினைவூட்டுகிறது.

பிராமணரின் தோற்றுவாய் தமிழ்நாட்டுக்கு வெளியே என்ற தொனிப்பட, தமிழர் என்றுமே வடமொழிமயப்பட்டதில்லை என்றார் முன்னாள் இந்திய வரலாற்று ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் எம்.ஜி.எஸ். நாராயணன். (ஆதிவாசிகளைத் தவிர) தமிழர் மாத்திரமே தமது தாய்மொழியையும் தேசிய ஆளுமையையும் பேணிக்கொண்டவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தமது அத்திவாரத்தை அகட்டுவதற்காக மாத்திரமன்றி, தம்மை தாழ்ந்த சாதியினரின் கட்சி என்று காட்டுவதற்காகவும் சாதி-மொழி இணைப்பைக் கொண்டு தலித்துக்களை பா.ஜ.க. ஈர்க்க முனைகிறது. அதனால் அடுத்த சில ஆண்டுகளில் பா.ஜ.க.வுக்கு கிடைக்கக்கூடிய அறுவடையை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை.

தமிழ்நாட்டின் சமூகநீதி அரசியலில் கிட்டத்தட்ட விகிதாசார பிரதிநிதித்துவத்தின்படி சமூக குழுமங்கள் அனைத்துக்கும் அரசியலதிகாரம் கிடைத்துள்ளது. எடுத்துக்காட்டாக, 1970களில் சட்டமன்ற உறுப்பினர்களுள் ஏறத்தாழ முக்கால்வாசிப்பேர் 'வேறு பிற்பட்ட குழுமங்களை' சேர்ந்தவர்களாக விளங்கினார்கள். தற்போதைய சட்டமன்றத்தில் அரைவாசிக்கு சற்று மேற்பட்டோர் அவர்களே. 15 முதல் 20 விழுக்காட்டினர் தலித்துக்கள். எஞ்சியோர் மற்றவர்கள். அதாவது, எல்லா வகையான சாதிகளுக்கும் இங்கு போதிய பிரதிநிதித்துவம் உண்டு. ஆதலால் உள்ளக்கடுப்பை பயன்படுத்தி தமது அத்திவாரத்தை அகட்டும் வாய்ப்பு பா.ஜ.க.வுக்கு மட்டுப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வுக்கு இரண்டு தரப்புகளிடமிருந்து ஓரளவு ஆதரவு கிடைக்கிறது. கீழ்த்தட்டுக் குழுமங்கள் அணிதிரட்டப்பட்டமையால் பயனடைந்த கவுண்டர், நாடார் போன்ற சாதிகளை இன்று நாடளாவிய சமூக, பொருளாதார, பண்பாட்டு வாரியான ஆசை பீடித்துள்ளது. தமது ஆசையை அவர்களால் எவ்வளவு தூரம் எய்த முடியும் என்பது வாதத்துக்குரியது. இனி, அதிகாரமளிப்பு எனப்படும் அரசியலினால் அருந்ததியர் போன்ற சில தலித்துச் சாதிகள் ஏனைய சாதிகளை விட பயனடைந்தது குறைவு. அவர்களின் ஆதரவினால் பா.ஜ.க.வின் அத்திவாரம் ஓரளவு அகலக்கூடும். அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பா.ஜ.க.வின் பங்காக 20 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளபடியால், அது இன்னும் அகலக்கூடும். அதேவேளை இத்தகைய சாதிகளின் ஆதரவு தி.மு.க.வுக்கும் அ.இ.அ.தி.மு.க.வுக்கும் இருக்கவே செய்கிறது.

## சூதுவாது:

பா.ஜ.க.வின் வளர்ச்சி உண்மையில் அ.இ.அ.தி.மு.க.வின் தலைவிதியில் தங்கியுள்ளது. ஆதலால் தி.மு.க.வை வீழ்த்துவதே பா.ஜ.க.வின் முதலாவது இலக்கு. இந்துத்துவ கருத்தியலுக்கு எதிராக நிலைகொண்ட பல்வண்மைத் தமிழ் அடையாளத்தின் பதாகையை ஏந்திய கட்சியாக தி.மு.க. விளங்குவதே அதற்கான தலையாய காரணம். இதன் கருத்து, தமிழ் அடையாளத்தை தோற்றுவிக்கும் திட்டத்தில் தனக்கு கிடைத்த வாய்ப்பை அ.இ.அ.தி.மு.க. துறந்துவிட்டது என்பதல்ல. ஜெயலலிதாவின் மறைவினால் அ.இ.அ.தி.மு.க. உட்கட்சி மோதல்களுக்கு உட்பட்டு நலியவே, அதன் தோள்மீதேறித் தாள்பதிக்கும் வாய்ப்பை பா.ஜ.க. மோப்பம் பிடித்துக்கொண்டது!

ஆதலால் சட்டமன்றத் தேர்தலில் ஒரு கட்சியை வெள்ளோட்டம் விடும்படியும், அ.இ.அ.தி.மு.க.வின் அத்திவாரத்தை தகர்க்கும் படியும் நடிகர் ரஜனிகாந்தை பா.ஜ.க. தூண்டியதாகக் கருதப்படுகிறது. தமது கூட்டணியின் தலையாய பங்காளியை கருவறுக்கும் சூழ்ச்சியை பீகாரில் பா.ஜ.க. பரீட்சித்துப் பார்த்தது. ஐக்கிய ஜனதா தல்லை பலவீனப்படுத்தும்படி லோக் ஜனசக்திக் கட்சியின் தலைவர் சிராங் பசுவானை பா.ஜ.க. தூண்டியது.

ஒரு கட்சியை வெள்ளோட்டம் விட்டபிறகு ரஜனிகாந் பின்வாங்கிக் கொண்டார். ஆதலால் இப்போதைக்கு ஒரு பலமான அ.இ.அ.தி.மு.க. எனும் தெப்பத்திலேயே தாம் மிதக்கலாம் என்றும், பிற்பாடு தி.மு.க.வை எதிர்க்கலாம் என்றும் பா.ஜ.க. கருதியது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா சிறையிலிருந்து வெளிவந்து, ஆரவாரமான வரவேற்பு பெற்ற பொழுது, அவர் அ.இ.அ.தி.மு.க.வுடன் இணையவேண்டும் என பா.ஜ.க. விரும்பியது. கடந்த காலத்தில் சசிகலாவைச் சாடிய ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தி எஸ். குருமூர்த்தி, 'உங்கள் வீடு தீப்பற்றிக் கொண்டால், அதை அணைக்க நீங்கள் கங்கை நீருக்கு காத்திருக்க முடியாது. சாக்கடை நீரைக் கொண்டாவது சமாளிக்க வேண்டும்' என்றார்!

'சாக்கடை' என்ற சொல்லின் சாதிய மறைகுறிப்பை பலரும் புரிந்துகொண்டார்கள். ஆர்.எஸ்.எஸ். தரப்பின் மேல்சாதி உளப்போக்கு கவனக்குறைவாக உளறிக்கொட்டப்பட்டதற்கு அது பிறிதோர் எடுத்துக்காட்டு. ஊடக மறவர் அருண் சௌரி வேறொரு தருணத்தில் அப்படிச் சொன்னதாகத் தெரிவித்து தன்மீதான கண்டனத்திலிருந்து தப்பிக்கொள்ள முயன்றார் குருமூர்த்தி.

சசிகலாவும் அ.இ.அ.தி.மு.க.வும் புறம்பாகப் போட்டியிட்டால், தி.மு.க. எளிதாக வெற்றிபெற்றுவிடும் என்பதை குருமூர்த்தியின் கூற்று உணர்த்தியது. தேர்தலில் குதிக்கும் தனது முன்னைய முடிபை மிகவும் மாயமான முறையில் சசிகலா மாற்றிக் கொண்டார். எனினும் அவரது மருமகனாகிய தினகரன் தலைமையில் அ.ம.மு.க. 2021 தேர்தலில் போட்டியிட்டது. 2019 தேர்தலில் அது 5 விழுக்காடு வாக்குகள் பெற்றது. அவை பெரிதும் அ.இ.அ.தி.மு.க.வின் வாக்குத் தளத்திலிருந்து வந்தவை. அ.இ.அ.தி.மு.க. எனும் மரம் சரிந்தால், அதன் கிளை ஒன்றை பா.ஜ.க. வன்மையான முறையில் ஏந்திக்கொள்ளும். ஏந்தி, தனது இந்தி-இந்து-இந்துஸ்தான்-இந்துத்துவ முகத்துக்கு ஒரு கீழ்த்தட்டு மெருகு பூசிக்கொள்ளும்!

•

Vignesh Karthik KR & Ajaz Ashraf, Why BJP's Hindutva Runs Into the Tamil Wall, News Click, 2021-03-18, translated by Mani Velupillai, 2021-10-13.
https://www.newsclick.in/Why-BJP-Hindutva-Runs-Into-Tamil-Wall

mani.v@thaiveedu.com



# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள் பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You®

# கருத்தரிக்கும் முறைகளும் தடங்கல்களும்

# இடம் மாறிய கர்ப்பமும்

- கந்தையா செந்தில்நாதன்

பல்வகைச் செல்வங்களில் மழலைச் செல்வங்களும் ஒன்றாகும். மணமேடையில் மணமக்கள் வீற்றிருக்கும் பொழுது பதினாறு செல்வங்களும் பெற்று வாழ்க என்று வாழ்த்தும் பொழுது அதில் மக்கட்செல்வமும் ஒன்றாக இருக்கிறது.

மணமக்கள் ஒன்று சேரும் காலம் கூட சாந்தி முகூர்த்தம் என்று கூறப்படும் நேரகாலத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மணமக்கள் ஓர் ஒழுங்கு முறையில் தமது வாழ்க்கையில் ஈடுபட்டு வரும் பொழுது இயல்பாகவே கருத்தங்கல் நடைபெற்று ஆரோக்கிய மான மகப்பேறு ஏற்படுவது இயல்பு.

எனினும், சிலரது வாழ்வில் மணம் முடித்து இரண்டு, மூன்று வருடங்களாகிய பின்பும் மக்கட்பேறு கிட்டவில்லையே என்று கவலைப்படும் ஒரு சாராரும், நாம் இன்னமும் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதற்குத் தயார் நிலையில் இல்லை என்று மறு சாராரும் காலத்தைப் பின் போடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

### கருத்தரிக்க உகந்த காலங்கள்:

பெண்களில் மாதமொருமுறை சூலகத்தில் இருந்து வெளியேறும் முட்டையானது பலோப்பியன் குழாய்களூடாக கர்ப்பப்பையை நோக்கி நகர்கின்றது. மாதவிடாய் ஒழுங்கு முறையில் சாதாரண மாக 28 நாட்களுக்கு ஒரு தடவை ஏற்படும் பெண்களுக்கு, மாதவிடாய் ஏற்பட்டு பதின்நான்காம் நாளளவில் முட்டையானது வெளிவிடப்படும். வெளிவந்த முட்டை பெண்களின் கருப்பையில் ஒரு நாள் வரை உயிருடன் இருக்கும். இத்தருணத்தில் ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபட்டால் ஆணின் விந்தானது பெண் ணின் முட்டையை அணுகிக் கருக்கட்டுவதற்கு வாய்ப்புகள் அதி கம் உண்டு.

ஆண்களினது விந்து அவர்களது விதைகளில் உருவாகி அங்கு சேர்ந்திருக்கும். கலவியின் பொழுது வெளிவிடப்படும் விந்தானது பெண்களது யோனி, கருப்பைச் சூழலில் ஐந்து நாட்கள் வரை உயிர் வாழக்கூடியது. இதன் காரணத்தால் பெண்களின் முட்டை வெளியேறும் காலத்திற்கு மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு முதலே கலவியின் பொழுது வெளியேறும் விந்தானது உயிருடன் இருந்து முட்டையை அணுகிக் கருக்கட்டும் சந்தர்ப்பத்தை ஏற் படுத்தும். எனினும் வெளிவிடப்படும் விந்தானது அநேக சமயங் களில் யோனியில் இருந்து வெளியே சிந்தப்படலாம். சம்போகத் தின் பின்பு பெண்ணானவள் மல்லாக்காகச் சில மணிநேரம் படுத் திருந்தால் விந்து வழிந்து போகாது உள்ளேயே கருப்பையை நோக்கிச் செல்லும் சந்தர்ப்பத்தை உருவாக்கலாம்.

ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து பல தடவைகள் முயன்றும், கருத்தரிக்காமல் இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. கார ணங்கள் ஆணுடையதாகவோ, பெண்ணுடையதாகவோ, இருவரு-டையதாகவோ அல்லது வாழ்வு முறை காரணமாகவோ இருக்க லாம்.

### பெண்களுக்குரிய காரணங்கள்:

- சூலகத்தில் இருந்து முட்டை வெளிவருவதில் ஒழுங்கீனம்
- பலோப்பியன் குழாய்களில் தடங்கல்.
- கருப்பை, கருப்பைக்கழுத்து என்பனவற்றில் அமைப்பு ஒழுங் கீனம்.
- கர்ப்பப்பை உட்படை மேலணிக்கலங்களில் பிறழ்வு நிலை.

### ஆண்களுக்குரிய காரணங்கள்:

- வெளிவிடப்படும் விந்துக்களின் எண்ணிக்கைக் குறைவு.
- விந்துகளின் நீந்தும் தன்மையும் அசைவாட்டமும்.
- போதை மருந்து, மதுசாரம் அதிக பாவனை.
- சுற்றாடல் மென் நஞ்சுகள் (பாதரசம், ஈயம், களை கொல்லி கள், கிருமி நாசினிகள் போன்றவை)
- புகைபிடித்தல்.
- இருதய வியாதி உடையவர்கள் பாவிக்கும் Blocker என்னும் மருந்து.
- சிறு வயதில் கூவைக்கட்டு (Mumps) நோய்க்கு ஆளாகியவர் கள். அரிதாக விதைகளைப் பாதித்து விடக்கூடியது.
- சிறுநீரகத்தில் ஏற்படும் நாட்பட்ட நோய்.
- புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் அங்கு பாவிக்கும் கதிர்வீச்சு, மற் றும் இரசாயன மருந்துகளின் பாதிப்பு.
- ஆண்தன்மை குறைவு.

### பொதுவான காரணங்கள்:

- ஆணும், பெண்ணும் நேரகாலத்தில் கலவியில் ஈடுபட முடி யாமை.
- வயது ஏற்றம்
- அதிக பருமன், நிறை
- போதிய ஊட்டச்சத்துக்கள் அற்ற ஆகாரம்
- தொடர்ச்சியான மன அழுத்தங்கள்.
- பாலியல் நோய்கள்.

அநேக சமயங்களில் கர்ப்பம் தங்கி சுகமான மகப்பேறு நடை-பெறுவதுதான் இயற்கையின் நியதி. சில சமயங்களில் கர்ப்பம்

தங்கி தாயின் கருவில் இரண்டு தொட்டு மூன்று மாதங்கள் வரை வளர்ந்து வருகையில் தானாகவே கர்ப்பச் சிதைவு நடைபெறு கின்றது. கருக்கட்டிய முளையத்தில் ஏதாவது பிரச்சினை இருந் தாலும் கருப்பை அதை மேற்கொண்டு ஏற்றுக் கொள்ளாது. கர்ப் பச்சிதைவை ஏற்படுத்திவிடுவதுமுண்டு. கர்ப்பப்பையில் பிரச் சினை இருந்தாலும் முளையம் அதில் தங்கி வேரூன்றி வளரமுடி யாது கர்ப்பச் சிதைவுகள் ஏற்படுவதும் உண்டு.

காரணங்கள் எதுவென்பதை சரிவரக்கண்டுபிடிப்பதற்கு மருத்துவ சரித்திரம், இரத்தப் பரிசோதனைகள், உடற்பரிசோதனைகள் போன்ற பலவற்றை வைத்தியர்கள் செய்வார்கள். ஆண்களின் விந்துகளின் எண்ணிக்கை, நீந்தும் தன்மை, அசைவாட்டம், விந் தில் ஏற்பட்டிருக்கும் சிதைவுகள் என்பனவும் கருத்திற் கொள்ளப் படும். ஆண்களின் விதைப்பகுதியில் வெப்பம் கூடும்பொழுது அதன் பை போன்ற பகுதி தளர்ந்து தொங்குவதனால் வெப்பம் தணிகின்றது. குளிராக தகுந்த வெப்பநிலையில் இருக்கும் பொழுது இறுக்கமாக இருப்பதைக் காணலாம். விந்து உற்பத்திக் கும் வெப்ப ஏற்றத்திற்கும் தொடர்புகள் உண்டு. விந்து எண் ணிக்கை குறைவானவர்கள் உள்ளங்கியை (underwear) இறுக்கமானதாக அணியாமல் தளர்ந்த உள்ளங்கிகள் அணிவது வெப்பநிலையைச் சரிவரப் பேணுவதற்கு உதவி புரியும். விந்து கள் உற்பத்தியை சில அக்குபஞ்சர் புள்ளிகளைத் தூண்டுவதன் மூலமும் கூட்டக்கூடியதாக இருக்கும்.

எம்மக்களிடையே மக்கட் செல்வம் தலையாய செல்வமாகப் போற் றப்படுகின்றது. ஏனைய இனத்தவர்களிற்கும் இது பொருந்தும் பெற்றோர் தமது உடல் நிலையைத் தயார் செய்யும் பொழுது பிறக்கப்போகும் குழந்தையும் ஆரோக்கியமாகப் பிறந்து வளர் வதற்கு உதவுகின்றீர்கள். உடல் ஆரோக்கியம் மட்டும் போதாது. உளரீதியான ஆரோக்கியமும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. குடும்ப வருமானம், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, சமபல உணவு, போதிய ஓய்வு, உடற்பயிற்சி என்பனவுடன் ஆரோக்கிய மான மாசற்ற சூழல் போன்றவை உடல்வலுவையும், ஆரோக் கியத்தையும் மேலும் மேம்படுத்துபவையாக உள்ளன.

காலம் காலமாக நாம் உட்கொண்டுவரும் உணவுப் பழக்க வழக் கங்களில் சரக்கு வகைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கறிக- ளில் மஞ்சள் தூள் அளவோடு சேர்ப்பது உடலிற்கு ஆரோக்கி யம் தரும். அதிக அளவில் உட்கொள்வது மழலைச் செல்வத்தை எதிர்கொள்ளும் ஆண்களிற்குக் கூடாது என்று பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

நாம் உட்கொள்ளும் உணவுகளில் உள்ள மென்நஞ்சுகள் கூட தொப்புள் கொடியில் உள்ள தடைகளைத்தாண்டி வளர்ந்து வரும் சிசுவை அடைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சூழலில் வாசனைத் திரவியங்கள், தொற்று நீக்கிகள், களைகொல்லிகள், கிருமி கொல்லிகள் போன்ற பலவிதமான இரசாயனப் பொருட்கள் பாவ னையில் உண்டு. இவை எமது சுவாசிக்கும் காற்று, உட்கொள் ளும் நீர், உணவு போன்றவற்றை மாசுபடுத்தலாம். இவற்றைக் கவனமாகத் தெரிவு செய்வதன் மூலம் பல கெடுதல்களைக் கட் டுப்படுத்தலாம்.

பெண்களில் மாதவிடாய் காலம் ஒழுங்கில்லாமல் வரும் பொழுது அவர்களது முட்டைகள் வெளியேறும் நேரம் வேறுபடுவதனால் தமது குடும்ப வைத்தியர்களின் ஆலோசனைப்படி சேருங்காலங் களை அறிந்து நடப்பதன் மூலம் தமது குழந்தைப்பாக்கிய விருப் பங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.


## கர்ப்பம் இடம் மாறித் தங்குமா?
**(Ectopic Pregnancy)**

சென்றமாத இதழில் பிரசவகாலச் சிக்கல்கள் சிலவற்றைக் குறிப் பிட்டிருந்தேன். பிரசவ காலத்தில் ஏற்படும் சிக்கல்களில் இடம்மா றிய கர்ப்பம் (Ectopic Pregnancy) பற்றி மிகவும் விபரமாக விளக்க வேண்டியிருப்பதால் பொதுமக்களின் நன்மை கருதி அதனைத் தனிக் கட்டுரையாக எழுதியுள்ளேன்.

## இடம் மாறிய கர்ப்பம் என்றால் என்ன?

கர்ப்பம் தரித்தல் பற்றி பல கட்டுரைகள் ஏற்கனவே வெளிவந்துள் ளன. அவற்றில் ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபட்டபின்பு, எப்படி பெண்ணின் முட்டையும் ஆணின் விந்தும் சேர்ந்து கருக் கட்டுகின்றன என்றும், அதனைத் தொடர்ந்து கருக்கட்டிய சூலா னது பலோப்பியன் குழாயூடாக எப்படி நகர்த்தப்பட்டு கருப்பை யின் நடுப்பகுதியில் உரிய இடத்தில் பதியப்பட்டு அந்த முளை யம் சிசுவாக வளர்கிறது என்று பார்த்தோம்.

வழக்கமாகக் கருப்பையில் அதற்குரிய குறிப்பிட்ட பகுதியில் கர்ப்பம் தங்காது இச்சூலானது பலோப்பியன் குழாய்களில் தங்கி முளையமாக வளரும்போது, அதை இடம்மாறிய கர்ப்பம் என்று கூறுவார்கள்.




## பின்வரும் இடங்களில் கரு மாறித் தங்கலாம்:

- பலோப்பியன் குழாயின் அந்தப் பகுதியில் கருத்தங்குதல்
- பலோப்பியன் குழாயின் கர்ப்பப்பையை அண்டிய பகுதியில் கருத்தங்குதல்
- பலோப்பியன் குழாய் நடுப்பகுதியில் கருத்தங்குதல்
- கர்ப்பப்பையின் கழுத்துப் பகுதியில் கருத்தங்குதல்
- சூலகப்பகுதியில் கருத்தங்குதல்
- வயிற்றின் சுற்றுவிரிக் குழிகளில் கருத்தங்குதல்

அனேகமாக 96 வீதமான இடம்மாறிய கர்ப்பங்கள் பலோப்பியன் குழாயின் அந்தங்களிலும், நடுப்பகுதியிலும் ஏற்படுகின்றன. வழமையாக பலோப்பியன் குழாயின் அந்தங்களில் விந்தும், முட்டையும் சேர்ந்து கருக்கட்டல் நடைபெறுகின்றது. கருக்கட்டல் நிகழ்ந்து அது முளையமாக மாறிய பின்பு குறிப்பிட்ட சில நாட்க ளுக்குள் கர்ப்பப்பையை நோக்கி நகர்த்தப்படுதல் வேண்டும். அவ்வாறு நகர்த்தப்படாது அதே இடத்தில் முளையமானது நிலைகொள்ளலாம். அல்லது கர்ப்பப்பையை நோக்கி நகர்த்தப் படும் பொழுது முளையம் மெதுவாக நகர்ந்து குழாயின் நடுப் பகுதியில் நிலைகொள்ளலாம். குழாயின் நடுப்பகுதியில் கருக்கட் டல் நிகழ்ந்து முளையம் நகர்த்தப்படாது, அந்நடுப்பகுதியிலும் முளையம் நிலைகொள்ளலாம். பலோப்பியன் குழாயானது கர்ப்பப்பையின் மேற்பகுதியில் இருமருங்கிலும் ஆரம்பமாவதை அவதானித்தீர்களாயின் அக்குழாய்கள் ஆரம்பிக்கும் இருமருங்கு மூலைகளிலும் கூடக் கருத்தங்குதல் நிகழலாம். இந்த மூலைக- ளில் மூன்று விகிதமான இடம்மாறிய கர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

மிகவும் அரிதாக பின்வரும் இடங்களில்கூட கருச்சென்று இடம் மாறித் தங்கி வளரலாம். கர்ப்பப்பையின் கழுத்து, முட்டை உருவாகும் சூலகங்கள், வயிற்றின் சுற்றுவிரிக் குழிகள் (Peritoneal Cavity) என்பவை அவ்விடங்களாகும்.

இடம்மாறிக் கருத்தங்குதல் எனும்பொழுது எமக்கு உடனே மனதில் தோன்றுவது பலோப்பியன் குழாய்களில் (Tubal Pregnancy) ஏற்படும் கருக்களாகும். ஏனெனில், பெரும்பாலும் இடம்மாறிய கருத்தங்கல்களின் புள்ளிவிபரங்களை நோக்கினால் 96 வீதமானவை குழாய்களில் இடம்மாறித் தங்குபவையாகவே இருக்கின்றன. மிகுதி 4 வீதமானவையே குழாய் தவிர்ந்த மேலே குறிப்பிட்டுள்ள பகுதிகளில் இடம்மாறித் தங்குகின்றன.

இவ்விகிதாசாரங்கள் இடம்மாறிக் கருத்தங்கும் இடங்களையே சுட்டிநிற்கும். வாசகர்கள் சாதாரணமாக நல்லமுறையில் தங்கி வளரும் கர்ப்பங்களை இவற்றுடன் சேர்த்து குழப்பமடையக் கூடாது.

மிகவும் வெகு அரிதாக ஒரு சாதாரணமான கர்ப்பத்துடன் இடம் மாறிய கர்ப்பமும் ஒரே நேரத்தில் இடம்பெறலாம். இது மிகமிக அரிது. மேலும் செயற்கைக் கருக்கட்டல் முறைகளின் முன்னேற்றத்தால் இப்படியாக இரு கருக்கட்டல் நிகழ்வதன் விகிதாசாரம் கூடியுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

## இடம்மாறிய கர்ப்பங்கள் தங்குவதற்குரிய காரணங்கள் என்ன?

பெண்களின் இடுப்புப் பகுதியில் ஏற்படும் வீக்க நோய்களை பொதுவாகக் குறிப்பிடலாம். இதற்குப் பல காரணங்கள் இருப்பதனால் அவற்றை சரிவரக் கண்டறிந்து சிகிச்சை செய்வதன் மூலம் அல்லது அவை ஏற்படாமல் தடுப்பதன் மூலமாக கர்ப்பப்பைச் சூழலை நன்கு பேணிக்கொள்ளலாம்.

பாலியல் நோய்களை எடுத்துக்கொண்டால் அவை யாருக்கு ஏற்பட்டுள்ளது என்பது வெளியில் தெரியவராது. பாலியல் நோய்கள் நேரகாலத்துடன் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய சிகிச்சைகள் பெறும் பட்சத்தில் கர்ப்பப்பையின் சூழலை பாதுகாத்துக் கொள்ளலாம். வெட்கம் காரணமாக வைத்தியரை அணுகாது பாலியல் நோய்களுடன் வாழும்போது அக்கிருமிகள் கர்ப்பப்பையை அடைந்து இருமருங்கிலும் உள்ள பலோப்பியன் குழாய்களைத் தாக்குகின்றன. இதன் காரணமாக பலோப்பியன் குழாய்களின் உள்ளே வீக்கங்கள் ஏற்பட்டு அப்பகுதிகள் புண்படுகின்றன. வீக்கங்கள் ஏற்படும் பொழுது நீண்ட குழாய்களின் துவாரங்களினுள் தடைகள் ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றன. சூலகங்களில் இருந்து விடுபடும் முட்டையானது பலோப்பியன் குழாய்களின் இத்தடங்கல்கள் ஊடே மிகவும் மெதுவாகவே கர்ப்பப்பையை நோக்கி நகரமுடியும். அதே போல் யோனியில் விடப்பட்ட விந்து, முட்டையை அடைய சற்றுத் தாமதமாகும். முட்டையுடன் ஒப்பிடும்போது விந்து மிகச் சிறிதாகையால் அது பலோப்பியன் குழாய்கள் ஊடே நீந்திச்சென்று முட்டையை அடைந்து விடும். ஆனால், கருக்கட்டிய முட்டை, பகுதி அடைபட்ட பலோப்பியன் குழாயூடாக கர்ப்பப்பையை நோக்கி நகர்த்தப்பட நாளாகுவதால் கருக்கட்டிய முளையத்தின் கலங்கள் விரிவடைந்து வித்துடலாகி அங்கேயே தங்கி வளர ஆரம்பிக்கும். கருவானது வளர்வதற்கு இடம் போதாமையால் கரு வளர்ந்து வரும்பொழுது குழாயானது வெடித்து பெண்ணின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். மருத்துவ உலகம் வெகுவாக முன்னேறியிருந்தும்கூட உலகளாவிய ரீதியில் கர்ப்பத்தின் பொழுது ஏற்படும் மரணங்களில் 9 வீதமான மரணங்கள் கர்ப்பம் இடம்மாறித் தங்குவதால் ஏற்படுபவையாகும்.

இடம்மாறிய கர்ப்பம் பற்றிய அறிவு வளரும்போது தாய்மார்கள் தாமாகவே முன்வந்து காலந்தாழ்த்தாது, இத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதன்மூலம் ஆபத்துக்களையும் பல சிக்கல்களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

மேலே குறிப்பிட்ட கிருமித் தொற்றுக் காரணமாக, பலோப்பியன் குழாய்களினுள் ஏற்படும் வீக்கத்தால் குழாயின் விட்டம் குறைகின்றது. குழாயின் உள்ளே உள்ள மயிரிழைகள் பழுதடைகின்றன. குழாய்களின் தசைகளில் ஏற்படும் சுற்றுச் சுருங்கல் அசைவுகளில் மாற்றம், நார்போன்ற உட்பகுதி மாற்றம் என்பனவற்றால் பாதை பல தடைகளைக் கொண்டதாக மாறி விடுகின்றது. முறைதவறிய தொடர்புகளால் பாலியல் நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம். இதுகாரணமாக, கணவன், மனைவி இடையே தகராறுகள் ஏற்படக்கூடாது. ஏனெனில், வேறு பல காரணங்களும் உண்டு.

கர்ப்பப்பையில் இருந்து பலோப்பியன் குழாய் ஆரம்பிக்கும் இடத்தில் தசைக் கட்டிகள் உருவாகியிருக்கலாம். பிறப்பின் பொழுது அக்குழாய்களில் பிளவுகள் ஏற்பட்டு குழிகள் போன்ற பகுதிகள் இருக்கலாம். இடுப்புப் பகுதியில் நடைபெற்ற சத்திர சிகிச்சை, குடல்வளரி நோய், உட்படை நோய் இவற்றால் குழாயின் உட்பகுதிகள் இடையிடையே ஒட்டுப்பட்டு, அப்பகுதிகள் பகுதியாக அடைபடலாம். வயதுவந்த பின்பு கர்ப்பம் தரித்தல், செயற்கை முறையில் கருக்கட்ட வைத்தல் போன்று பல காரணங்கள் உண்டு.

## நோயின் தீவிரம்:

குழாயில் ஏற்படும் கர்ப்பங்கள் மேற்கொண்டு ஏற்படக்கூடிய சாதாரண கர்ப்பங்களைக் கேள்விக் குறியாக்கவே செய்கின்றன. குழந்தையை வேண்டி நிற்பவர்கள் கவனமாக மகப்பேற்று நிபுணரை அணுகி, தமக்கு ஏற்பட்டுள்ள கர்ப்பம் குழாயில் தங்கியுள்ளதா என்பதை நேரகாலத்துடன் கண்டறிவதன்மூலம் மிகுதியாகவுள்ள குழாய்களைக் காப்பாற்றி மகப்பேற்றிற்கு உதவலாம்.

## இடம்மாறிய கர்ப்பத்தின் பொழுது ஏற்படும் குணம் குறிகள் என்ன?

- வயிற்று வேதனை
- உதிரம் படுதல்
- சில பெண்களில் கர்ப்பப்பையை அண்டிய பகுதியில் கைளால் உணரக்கூடிய கட்டி
- தோள்மூட்டு நோவு - உதிரம் குடற்சுற்றுவிரியில் விடப்படுவதால் ஏற்படுவது.

மேற்கூறிய குணம் குறிகள் பொதுவானவையே. அத்துடன், பலவிதமான கேள்விகள் வைத்தியரின் மனதில் எழுப்பக்கூடியவை. உதிரம் படுதலின் அளவு, அதன் நிறம், அத்துடன் வெளிவரும் சிதைவுகள் என்பனவும் ஓரளவு உதவியாக இருக்கும்.

### எப்படி வைத்தியர்கள் உறுதிசெய்வார்கள்?

- குணம் குறிகள்
- B-hcG என்ற ஹோர்மோனின் அளவு
- யோனி ஊடாகச் செய்யப்படும் ultrasound

### சிகிச்சை

- நேரகாலத்துடன் கண்டுபிடிக்கப்பட்டால் ultrasound உபகரணத்தின் வழிநடத்து பாதையூடாக சூல்கொண்ட முளையத்தைக் கண்டுபிடித்து Methotrexate அல்லது பொற்றாசியம் குளோரைட்டு ஊசியை அம்முளையத்தினுள் ஏற்றுவார்கள். அம்முளையம் இறந்துவிட, அவ்விடம் பின்பு சீராகி மேலும் கர்ப்பம் உருவாகுவதற்கு உதவியாக இருக்கும்.
- காலம்பிந்திக் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது கர்ப்பம் தங்கிய குழாய் வெடித்த தறுவாயில் சத்திர சிகிச்சை மூலம் சிகிச்சையளிப்பார்கள்.



senthilnathan.k@thaiveedu.com

# 2

# ஏட்டில் எழுதிவைத்தார்

சுரவிதி

**- பால. சிவகடாட்சம்**

*அன்னமே கோழி யோணான் மயிலென நடக்கில் வாதம்*
*பின்னையோ ராமை அட்டை பெருத்திடிற் பித்த மாகுஞ்*
*சொன்னநன் மயில்போல் நல்லாய் தொங்கிய தவளை நாகம்*
*என்னவே நடப்ப தையம் என் றியம்பினர் நாடி தானே*

நாடியின் அசைவு அன்னம், கோழி, ஓணான், மயில் என்பவற்றின் நடையை ஒத்திருப்பின் அது வாதமாகும். நாடித்துடிப்பு ஆமை, அட்டை என்பவற்றின் நடையை ஒத்திருந்தால் அது பித்தமாகும். நாடியானது தவளை நாகபாம்பு என்பவற்றின் அசைவை ஒத்திருப்பின் அது ஐயம் எனப்படும் சிலேட்டுமமாகும் என்று நாடி பற்றிக் கூறிவைத்துள்ளார்கள்.

*தானமாம் வாதநாடி தான்வலுவாக நிற்கில்*
*ஊனமாம் வியாதி எங்கும் உலாவியே நிற்குமென்க*
*ஆனதோர் பித்தநாடி அதிகமாய் நிற்குமாகில்*
*கானமாங் குழலாய் வெப்புக் கடினமே செய்வதாமே*

மாமரக்காட்டுக் குயிலின் குரலையுடைய பெண்ணே! வாதநாடி வலுவாக ஓடினால் உடலை ஊனப்படுத்தும் வியாதி உடல் முழுவதையும் ஆக்கிரமித்து நிற்கும். பித்தநாடி பலமாக இருந்தால் காய்ச்சல் துன்பத்தைக் கொடுக்கும்.

*செய்யதோர் அய்யநாடி சிக்கென நிற்குமாகில்*
*உய்வதோ ரில்லை என்ப வுற்றமே சுரமே நச்சிக்*
*கையுள்ளே துடிக்கு நாடி கமலையை நிகர்க்குமாதே*
*மெய்யுறு மூளை வெப்பு மேவுறு குணத்தைக் கேளாய்*

சிலேத்துமநாடி வலுவாக இயங்கினால் நோயாளி குணமடைவது கடினம். கடுமையான காய்ச்சல் நாடித்துடிப்பில் உணரப்படும். இலக்குமியை ஒத்த பெண்ணே அடுத்து மூளைக்காய்ச்சல் உண்டாகும்போது காணப்படும் நாடித்துடிப்பு பற்றிகூறுகின்றேன் கேட்பாயாக.

*ஆய்ந்தமூ ளையிலே வெப்பங் கமர்ந்துதான் கொதிக்கு மாகில்*
*ஏய்ந்ததோர் ஆடிக் காற்றில் ஏறிய கொடிப் போலேறி*
*ஓய்ந்தகாற் றிடையில் நின்று உதறிய கொடியே போலத்*
*தோய்ந்தகை நாடி நின்று துடிக்குமே துடி மருங்கே*

மூளையிலே காய்ச்சல் உண்டாகிக் கடுமைப்படுத்தும்போது ஆடி மாதத்துக்காற்றில் ஏற்றிய கொடிபோல் ஏறி ஓய்ந்த காற்றிடையே நின்று அக்கொடி உதறுவது போல் கைநாடி உதறித் துடிக்கும்.

*துடியொன்றா யத்தி தன்னில் சுரங்களும் அமர்ந்து நிற்கில்*
*படியவே ஓங்கி ஓங்கிப் பதறிடும் தசை உள்ளாகில்*
*அடிகர முழற்றி நாடி அழன்றுதான் சிதறு மெங்கு*
*முடுகி நின்றிடுகிற் பித்தம் மோதியே பெருத்துத் தோன்றும்*

எலும்பில் காய்ச்சல் இருந்தால் வாத நாடி ஓங்கி ஓங்கித் துடிக்கும். தசையில் காய்ச்சல் நின்றால் பித்தம் மேலோங்கிக் கால் கைகளில் தசை நார்கள் சிவந்து முறுகி அழன்று காணப்படும்.

*தோன்றிய தோலில் வெப்புத் தொங்கநின் றிடுகிற் சற்றே*
*யூன்றிய பித்த நாடி யுரமில்லா தோடு மென்க*
*வான்றருஞ் சுரங்கள் தீரில் வலுப்பெற வோடக் கெண்டை*
*மீன்றனை நிகருண் கண்ணாய் மெத்தென வோடுங் காணே*

காய்ச்சல் தோல் சம்பந்தப்பட்டதாக இருந்தால் பித்தநாடி பலவீனமாக இயங்கும். காய்ச்சல்கள் மாறியதும் பித்தநாடி வலுப்பெற்று இயல்பாக ஓடும். கயல்மீனை ஒத்த கண்களை உடைய பெண்ணே அறிவாயாக.

*ஓடிய வனில நாடி யுவமுடன் நல்கி யோடில்*
*ஈடுறும் வியாதி எல்லா மியல்புடன் மீளு மென்க*
*நாடிய வாத பித்தம் நலம்பெற இணங்கி யோடில்*
*கூடிய வியாதி கோபங் கொண்டெழ மாட்டா தென்னே*



வாதநாடி முறையாக இயங்குமானால் அனைத்து வியாதிகளும் குணமாகிவிடும். வாத பித்த நாடிகள் முறைப்படி இயங்கினால் வியாதி வீரியம் கொண்டு எழ இடமில்லை.

*என்பதோர் அய்யும் பித்தும் இயங்கிடில் எட்டு நாளில்*
*வம்புசெய் யாமல் வெப்பு மாறிடும் என்று சொல்வர்*
*நன்புகழ் வாதம் அய்யம் நணுகியே பெலத்து நிற்கின்*
*அன்புசேர் சீவன் போவ தன்னி தென் றருளினாரே*

சிலேத்தும நாடியும் பித்தநாடியும் குழப்பமின்றி இயங்கினால் காய்ச்சல் தீங்கு செய்யாமல் எட்டுநாளில் மாறிவிடும் என்று சொல்வார்கள். வாதமும் சிலேத்தும நாடியும் சேர்ந்து பலமாக நின்றால் மரணம் என்று கூறி வைத்துள்ளார்கள்.

*அருங்கைகால் குடைந்து மெய்யும் அளவினிற் கனக்கு மாகில்*
*நெருங்கிய வாதநாடி நிற்பதென் றறிகப் பின்னை*
*வருந்துகை பிடிக்கிற் காய்ந்து வாத நாடியுமே ஆகிற்*
*பொருந்திய வெய்ய வெப்புப் போகநாட் செல்லுந் தானே*

கைகால்களில் குடைச்சல் ஏற்பட்டு உடம்பும் பாரமாய் இருபது போன்ற உணர்வும் தோன்றினால் வாதநாடி மேலோங்கி நிற்பதை அறிவீர். கைபிடித்து நாடி பார்க்கும்போது காய்ச்சலுடன் வாத


நாடியும் உணரப்பட்டால் காய்ச்சல் தீர சிலநாட்கள் செல்லலாம்.

*தானமாஞ் சன்னி நாடி தன்னைநீ அறியில் வாதை*
*யானது மெய்யுங் கூடி யவ்விடங் காயுமென்க*
*மானை நாய் பிடிக்குந்தான மனமுறக் குளிர்ந்து போந்தால்*
*ஈனமாம் வியாதி தீர ஏழுநாட் செல்லுந் தானே*

சன்னி என்னும் நோய்க்குரிய நாடி பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் உடம்பிலே வலி அதிகரித்துக் காய்ச்சல் உண்டாகும் என்பதை அறிக. மானை நாய் துரத்திப் பிடிக்கும் இடம் அதன் கால். அதுபோலக் காலில் குளிர் பிடித்தால் சன்னிசுரம் தீர ஏழு நாட்கள் செல்லும் என்பதை அறிக.

*சென்றுதான் பிடித்த கைக்குட் சீதமாய்ப் பித்தம் நிற்கில்*
*அன்றுபோய் மூன்று நாளில் அகன்றிடும் சுரங்க ளெல்லாம்*
*கண்டுவெங் கண்ணில் வெக்கை கதித்திடில் பித்த நாடி*
*கொண்டுறப் பதறி யோடிக் குளிர நாட் செல்லுந்தானே*

நாடி பிடித்துப்பார்க்கும்போது பித்த நாடி குளிர்ந்து காணப்படின் அடுத்த மூன்று நாட்களில் காய்ச்சல் அகன்றுவிடும். கண்ணில்




வெக்கையுடன் பித்தநாடியும் சீரற்று ஓடினால் காய்ச்சல் மாறுவதற்குச் சிலநாட்கள் செல்லும்.

*செல்லுமுன் உதரந் தன்னில் சென்று தான் உயர்ந்து நிற்கிற்*
*பல்லுயிர் புகழு நாடி பணிந்துற நிற்குங் கண்டாய்*
*மெல்லுறு மிளகு தன்னை மிகவுமுட் கொண்டார் நாடி*
*அல்லுறு குழலி னாளே அமர்ந்தது பித்தந் தானே*

கருமையான கூந்தலை உடையவளே! வயிற்றுப் பொருமல் அதிகரித்து உதரநாடியும் குறைந்து காணப்படும். மிளகை விரும்பி உண்டபின் உப்பிசம் நீங்கினால் நோய் பித்தத்தினால் ஏற்பட்டது என்பதை அறிக.

*தான்மிகக் குளிர்ச்சி கொள்ளிற் றங்கிய நாடி வாதம்*
*மீன்முகிற் குழலாய் நெய்பால் இறைச்சியுண் டிடுனும் வாதம்*
*தீன்மிகக் கவருங் கோழி தின்றவர் நாடி பித்தம்*
*ஆனநற் களியும் பிட்டும் அருந்தினும் வாத மாமே*

கருமுகில் நிறத்துக் கூந்தலையுடைய பெண்ணே! உடம்பு மிகக் குளிர்ந்தால் அல்லது நெய் பால் இறைச்சி என்பவற்றை உண்டால் வாதநாடியும் கோழியிறைச்சி தின்றால் பித்தநாடியும் களியும் பிட்டும் அருந்தினால் வாதமும் அதிகரித்துக் காணப்படும்.

*வாதைசேர் இளநீர் தன்நீர் வாங்கினோர் நாடி வாதம்*
*போதவே கோப முள்ளே பொருமினோர் நாடி பித்தம்*
*கோதைசேர் குழலார் தம்மைக் கூடினும் பித்த மாகும்*
*யீதை மாமுனிவர் சொன்னார் இயல்புடன் அறிக வென்றே*

நோய்தரும் இளநீர் குடித்தவர்க்கு வாதநாடியும் கோபங்கொண்டு ஆத்திரப்படுவோர்க்கும் புணர்ச்சியில் ஈடுபட்டோர்க்கும் பித்தநாடியும் வலுவாகக் காணப்படும்.

*இயல்புசேர் ஆண்பா லாகில் இயங்கிய வலக்கை யாகும்*
*புயல்செறி குழலி னார்க்குப் பொருந்துவ திடக்கை யென்க*
*வயமுளாண் வலது கையாற் பிடித் திடத்தாற் பார்க்க*
*தையல்கை இடத்தாற் பற்றித் தான் வலத்தாற் பாரே*

ஆண்களுக்கு வலது கையிலும் பெண்களுக்கு இடது கையிலும் நாடி பார்க்கவேண்டும். ஆணின் கரத்தை வலக்கையாற் பிடித்து இடதுகரத்தால் நாடி பார்க்கவும் பெண்ணின் கையை இடத்தாற் பற்றி வலது கரத்தால் நாடிபார்க்கவும்.

*கரந்தனை வியாதி தீரக் கருதியே வாங்கி விட்டுத்*
*தரம்பெறப் பிடித்துப் பின்னைத் தன்கையால் தூக்கிப் பார்க்க*
*விரைந்துகை யிளுத்துப் பார்த்து விடாவிடில் வாதம் வந்து*
*வரம்பெறு வியாதி தன்னை வளர்க்குங்காண் கமல மின்னே*

நோயைக் குணமாக்குவதற்கு எண்ணித் தனது கையைப் பற்றிச் சரியாக மேலே தூக்கிப் பிடித்துப் பார்த்தால் விரைவாகக் கை கீழே கீழே இழுத்து நாடி உணரமுடியாமல் போனால் வாதம் என்னும் நோய் வந்து தொடருகிறது என்பதைத் தாமரை போன்றவளே அறிவாயாக.

*வேறு*
*மின்னிகர் மருங்குளாய் விழங்கு காற்றுடன்*
*பின்னிய சிலேட்டுமம் பெலத்து நின்றிடில்*
*உன்னு சஞ்சீவனி யுதவி செய்யினும்*
*அன்னமே மரணமென் றறியு மாந்தரே*

மின்னலையொத்த இடையினையுடைய பெண்ணே! வாத நாடியும் சிலேத்தும நாடியும் பலமாகக் காணப்படின் உயிர்காக்கும் சஞ்சீவினி மருந்தாலும் மரணத்தைத் தவிர்க்கமுடியாது என்று அறிந்து கொள்வாயாக.

*மந்திரம் மருந்து தீர்த்தம் மறைமொழி குருக்கள் தெய்வம்*
*புந்தியி லிவைபொய் யென்னிற் பொய்க்கும் மெய் யென்னில் மெய்யாம்*
*முந்திர வனைய கூந்தல் முகிண் முலைக் கமலமாதே*
*தந்திர வகையால் வெப்புத் தான் செய்யும் வாதைகேளே*

மார்பகத்தைத் தழுவி நிற்கும் கூந்தலையுடைய பெண்ணே! மந்திரங்கள் மருந்துகள் தீர்த்தம் வேதங்கள் குருக்கள் தெய்வம் என்பன புத்திக்கு எட்டியமட்டில் பொய் என்போர்க்குப் பொய்யாகவும் உண்மை என்பவர்க்கு உண்மையாகவும் இருக்கும்.

*பித்தமும் வாத நாடி பேசிய அய்ய நாடி*
*ஒத்திறல் சரியாய் நிற்கில் உண்மையா வியாதி யில்லை*
*முத்தணி முலைநல் மாதே மொழிந்தனர் மதி வல்லோர்கள்*
*உத்தமப் பொருள் ஆராய்ந் துணர்ந்து நீயறிந்து கொள்ளே*

பித்தம் வாதம் சிலேத்துமம் ஆகிய மூன்று நாடிகளும் தத்தமக்குரிய அளவுகளில் முறைப்படி இயங்கினால் உண்மையாகவே நோய் எதுவும் இல்லை என்று அறிவு சார்ந்தோர் கூறிவைத்துள்ளனர். முத்துமாலை தவழும் மார்பகங்களையுடைய பெண்ணே இதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிந்து கொள்வாயாக.

*ஞாலமே சடலந் தன்னில் நலம்பெற நோயில் லார்க்கு*
*காலமே வாதந் தோன்றும் கடும்பகல் பித்தந் தோன்றும்*
*மாலையி லய்யந் தோன்றும் வகையிது அறியு மென்னச்*
*சீலமாய் வேத மோதித் தெளிந்தவர் மொழிந்த வாறே*

உலகில் நோயில்லாத ஒருவரது உடலில் காலையில் வாதமும் மத்தியானத்தில் பித்தமும் பின்னேரத்தில் சிலேத்துமமும் தோன்றும் என்பது முறையாக ஆயுள்வேதம் கற்றுத் தேர்ந்தவர்கள் கூறி வைத்ததாகும்.



Sivakadadcham@thaiveedu.com

# மனித உடல் உறுப்புகளை உருவாக்கும் முப்பரிமாண அச்சாக்கம்

- சுப்ரமணியம் ஜெயசீலன்

முப்பரிமாண அச்சாக்கம் அல்லது சேர்க்கைத் தயாரிப்பு என்பது நவீன விஞ்ஞான உலகின் விந்தை மிக்க மற்றுமொரு கண்டு பிடிப்பு என்றால் அது பிழையாகாது. கணினியில் மென்பொருட்களைக் கொண்டு வடிவமைத்த ஆவணங்களை எவ்வாறு அச்சுப்பதித்து பெற்றுக்கொள்கின்றமோ அதே வகையில் முப்பரிமாண அச்சாக்கத்தின் ஊடாக மூலப்பொருட்களை இட்டு பொருட்களை உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

உலகின் பல நாடுகளின் இந்த முப்பரிமாண அச்சாக்க தொழில் நுட்பம் ஆச்சரியப்படுமளவிற்கு வளர்ந்து ஆதிக்கம் செலுத்த தொடங்கியுள்ளது.

விஞ்ஞான பிரபந்தங்களில் நாம் பார்த்த அல்லது வாசித்த காட்சிகளை மெய்ப்பித்து காண்பிக்கும் வகையில் இந்த முப்பரிமாண அச்சாக்க தொழில்நுட்பம் அமைந்துள்ளது.

அண்மைய ஆய்வுகளின் மூலம் முப்பரிமாண அச்சாக்க தொழில் நுட்பத்தின் கடந்த கால வரையறைகள் தகர்த்து எறியப்பட்டுள்ளதுடன் பல்வேறு உற்பத்திகளுக்கு பயன்படுத்தக்கூடியதாக வளர்ச்சியடைந்துள்ளது.

உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் உடல் பாகங்களை உருவாக்குவதற்கும் இந்த முப்பரிமாண அச்சாக்க தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது என்றால் உங்களினால் நம்ப முடிகின்றா?


கடந்த 2018ம் ஆண்டில் கனடாவின் ஒன்ராறியோ மிருக வைத்திய கல்லூரியில் நாய் ஒன்றுக்காக டைட்டானியம் பிளேட் ஒன்றை மருத்துவர்கள் உருவாக்கியிருந்தனர். புற்று நோய் காரணமாக தலையின் ஒரு பகுதியை அகற்ற நேரிட்ட நாய் ஒன்றுக்கே இந்த முப்பரிமாண அச்சாக்க மண்டையோட்டுப் பாகம் பொருத்தப்பட்டுள்ளது.

மிருகங்களுக்கு இவ்வாறு சிகிச்சை அளிப்பதற்காக முப்பரிமாண அச்சாக்க தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது போன்று எதிர் காலத்தில் பாதுகாப்பாக மனிதர்களுக்கும் உறுப்புக்களை மாற்ற முடியும் என மிருக வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் மிச்சல் ஒப்லாக் (Michelle Oblak) தெரிவிக்கின்றார். இந்த தொழில் நுட்பமானது உலக அளவில் மருத்துவ உலகினையே அடுத்த தளத்திற்கு எடுத்துச் செல்லக்கூடியது எனவும், ஒவ்வொரு நபரினதும் தனிப்பட்ட மருத்துவ தேவைகளுக்கு அமைய வடிவமைத்து உருவாக்கிக்கொள்ளக் கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

## முப்பரிமாண உயிரி அச்சாக்கம்:

முப்பரிமாண உயிரி அச்சாக்கம் என்பது முப்பரிமாண அச்சாக்கத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உடற் பாகங்களை உருவாக்கிக் கொள்ளும் நடவடிக்கையே இந்த உயிரி அச்சாக்கம் எனப்படுகின்றது. முப்பரிமாண அச்சுக்கருவிகளைப் போன்றே, உயிரி அச்சாக்கமும் தொழிற்படுகின்றது. எனினும், பிளாஸ்டிக் அல்லது செரமிக் போன்ற பொருட்களை பயன்படுத்தி அச்சாக்கம் செய்வதற்கு மாறாக உயிர்ப்பொருட்கள் குறிப்பாக உயிர்ப்புடனான கலன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரத்த நாளங்கள் மற்றும் தோல் திசுக்கள் போன்ற வியாகூலமான கட்மைப்புக்களை உருவாக்குவதற்கு உயிர்ப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நோயாளியிடமிருந்து தேவையான கலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு அவை வளர்த்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.



இந்தக் கலன்கள் பொதுவாக ஓர் ஏந்துப்பொருள் (carrier material) அல்லது சாரக்கட்டுடன் (scaffold) இணைக்கப்படுகின்றன. இந்த ஏந்துப் பொருட்கள் பொதுவாக பயோமாலிமர் ஜெல் (biopolymer gel) வகையொன்றாக காணப்படும். முப்பரிமாண அச்சாக்கத்தின் போது இந்த ஜெல் சாரக்கட்டையாகவும் கலன்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் பொருளாகவும் தொழிற்படுகின்றது.

கலன்கள் ஜெல்லுடன் இணைந்து கொள்கின்றன இதனால் அச்சாக்கத்திற்கு அனுமதிக்கும் வகையில் உறுதியானது என்பதுடன் மறுபுறத்தில் ஊட்டச்சத்துக்களின் ஓட்டம் மற்றும் பரவல் மற்றும் செல்களின் இயக்கத்தை அனுமதிக்கும் அளவுக்கு நெகிழ்வானது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இணைக்கப்பட்ட கலன்கள் மற்றும் பயோபாலிமர் ஜெல்களின் கலவையானது முப்பரிமாண அச்சாக்க, திசு போன்ற கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான உயிரியல் மையாக (bio-inks) மருத்துவ பொறியியலாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

அதாவது நாம் அச்சிடும் போது மை வகைகளை பயன்படுத்துவது போன்று முப்பரிமாண அச்சாக்கத்தின் போது கூட்டிணைக்

கப்பட்ட கலன்கள் மற்றும் பாலிமர் ஜெல் என்பன பயன்படுத்தப் படுகின்றது.

எதனை அச்சாக்கம் செய்ய வேண்டும் என்பது குறித்த விரிவான வடிவமைப்பு மற்றும் மாதிரி என்பன முதலில் உருவாக்கப் படுகின்றது. magnetic resonance imaging அல்லது computerized tomography ஆகிய ஸ்கேன் முறைகளின் ஊடாக நோயாளியிட மிருந்து துல்லியமான வடிவமைப்பு பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

பின்னர், துல்லியமான பிரிண்டர் ஹெட்கள் கலன்கள் மற்றும் பயோ-மைகளை அவை தேவைப்படும் இடத்தில் அச்சாக்கம் செய்து, பல மணிநேரங்களில், அதிக எண்ணிக்கையிலான மிக மெல்லிய அடுக்குகளைப் பயன்படுத்தி ஒரு உயிரிப் படிம உறுப்பு உரு-வாக்கப்படுகிறது.

இந்த அச்சாக்க முழு செயல்முறையின் போது திரவமாக்கப்பட்ட ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஒட்சிசனைப் பயன்படுத்தி கலன்கள் உயிர்ப்புடன் வைக்கப்படுகின்றன.

அச்சாக்க நடவடிக்கையின் இறுதிக் கட்டத்தில் புறஊதா ஒளி அல்லது அயனி கரைசல்களுடன் இந்த கட்டமைப்பு குறுக்காக இணைக்கப்படுகின்றது. திசுக்களின் மறுவடிவமைப்பு மற்றும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு கலன்கள் வேதியியல் ரீதி யாகவும் இயந்திர ரீதியாகவும் தூண்டப்படுகின்றன. பின்னர், முப் பரிமாண அச்சாக்கத்தின் ஊடாக உருவாக்கப்பட்ட உடல் உறுப்பு அடைகாப்பியொன்றினுள் (incubator) வைக்கப்படுகின் றது.

முப்பரிமாண அச்சாக்கத்தின் ஊடாக உருவாக்கப்படும் உடல் பாகங்கள் தயாரானவுடன் உடனடியாகவே பயன்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் பிரிகாம் மற்றும் பெண்கள் வைத்தியசாலை மற்றும் ஹவார்ட் மருத்துவ கல்லூரி என்பனவற்றின் ஆய்வாளர்க ளினால் கண்டு பிடிக்கப்பட்ட Cryopreservation (குறைந்த வெப்பநிலையில் உயிர் கலன்களையும் திசுக்களையும் பாதுகாக் கும் முறை) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் முப்பரிமாண அச்சாக்கத்தில் உருவாக்கப்படும் உடல் உறுப்புக்களை உடனடி யாக பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை.

மறை 196 செல்சியஸ் பாகை வெப்பநிலையில் பேணிப் பாதுகாக் கப்பட்ட முப்பரிமாண அச்சாக்கத்தில் உருவான திசுக்கள் சிகிச் சைகளுக்காக உடன் பயன்படுத்த முடியும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2018ம் ஆண்டில் அமெரிக்காவின் யூட்டா பல்கலைக் கழகத்தின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர்கள் தசைநார் மற்றும் தசைநாண் என்பனவற்றை உருவாக்கும் முப்பரிமாண அச்சாக்க முறையை அறிமுகம் செய்தனர். நோயாளியின் உயிர ணுவை பெற்றுக்கொண்டு ஜட்ரோஜெல் இழைகளைக் கொண்டு தசைநார் மற்றும் தசைநாண் ஆகியன முப்பரிமாண அச்சாக்கம் செய்யப்படும் முறையே இந்த முறையாகும். இவ்வாறு உருவாக் கப்படும் உடல் உறுப்பு செயற்கை கல முறையில் வளர்க்கப்படு கின்றது.

இருப்பினும், இந்த செயல்முறை மிகவும் வியாகூலமானது, ஏனெ-னில் இணைப்பு திசு சிக்கலான வடிவங்களில் வெவ்வேறு செல் களால் ஆனது. எனவே, ஆய்வாளர்கள் குழுவிற்கு முதலில் ஒரு சிறப்பு அச்சுப்பொறி தலையை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அது மனித உயிரணுக்களை அவர்களுக்குத் தேவைப் படும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் அச்சுப்பதிக்க கூடி யதாக இருக்க வேண்டும்.

இந்த செயன்முறைக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட Print-head உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

புற்று நோய்க்கான சிசிக்சை முறைமைகளில் பயன்படுத்தப்படும் முப்பரிமாண அச்சாக்க கருவிகளில் இந்த புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

முப்பரிமாண அச்சாக்க தொழில்நுட்பத்தின் ஊடாக உருவாக்கப் படும் தசைநார் மற்றும் தசைநாண்கள் சிகிச்சைகளுக்காக பயன் படுத்தப்படுகின்றது.

நோயாளியின் பாதிக்கப்பட்ட திசுக்களுக்கு பதிலீடாக புதிய திசுக்களை பயன்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கு முடிகின்றது. இதனால் மேலதிக திசு மாற்றீடு (skin graft) சிகிச்சைகளுக்கு அவசியம் ஏற்படுவதில்லை.

திசுக்களை பதிலீடு செய்யும் சிகிச்சைகளின் போது நோயாளியின் உடலின் வேறும் ஒரு பகுதியிலிருந்து பெற்றுக்கொண்டே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு செய்யப்படும் சிகிச்சைகள் அனைத்துமே 100 வீதம் வெற்றியளிப்பதில்லை.

எனினும் முப்பரிமாண அச்சாக்க தொழில்நுட்பத்தினால் இவ்வாறு நோயாளியின் உடலிலிருந்து திசுக்களை எடுக்க வேண்டிய தில்லை.

நோயாளியின் உடல் கலனிலிருந்து முப்பரிமாண அச்சாக்கத்தின் ஊடாக உருவாக்கப்படும், திசுக்களை கொண்டு செய்யப்படும் சிகிச்சைகளின் போது சிக்கல்கள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் வரையறுக்கப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## தோல் முப்பரிமாண உயிரி அச்சாக்கம், காயங்கள் குணமாக்குதல்:

முப்பரிமாண உயிரி அச்சாக்க தொழில்நுட்பம் காரணமாக எதிர் வரும் காலங்களில் மாற்றுத் தோல் அறுவை சிகிச்சைகளுக்கான அவசியம் அருகிவிடும். மருத்துவர்களினால், ஒவ்வொரு நோயா-ளிக்கும் தனிப்பட்ட ரீதியில் தோல்களை முப்பரிமாண அச்சாக்கம் செய்யக் கூடிய சந்தர்ப்பம் விரைவில் உருவாகும்.

தோல் மாற்று (Skin graft) அறுவை சிகிச்சை என்பது மிருகம் அல்லது மனித கொடையாளி அல்லது நோயாளியின் உடலின் வேறு ஒரு பகுதியிலிருந்து தோலை எடுத்து, மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள தோல் பகுதியில் சிகிச்சை அளிப்பதனை குறிக்கின்றது. இதுவும் ஒரு வகையிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையேயாகும்.

பலத்த காயங்கள், தீக்காயங்கள், தொற்று நோய் நிலைமைகள், தோல் புற்று நோயினால் தோல் அகற்றப்படும் சந்தர்ப்பங்கள் போன்றவற்றில் இந்த சிகிச்சை முறைமை தற்பொழுது நடை முறையில் உள்ளது.

எனினும் இந்த சிகிச்சை முறையில் பல்வேறு அபாயங்களும் உண்டு என்பதனை மறுப்பதற்கில்லை. உணர் திறனை இழத்தல், நோய்த் தொற்று ஏற்படுதல், வடு ஏற்படுதல், ஒவ்வாமை மற்றும் புதிய தோல் நிராகரிக்கப்படுதல் போன்ற ஆபத்துக்கள் காணப் படுகின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால்தான், நோயாளியின் காயத்தின் மீது நேரடியாக இரு அடுக்கு தோலை அச்சிடும் தொழில்நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் வேக் ஃபாரஸ்ட் இன்ஸ்டிடியூட் ஃபார் ரீஜெனரேட்டிவ் மெடிசின் (WFIRM) விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.

இந்த முப்பரிமாண உயிரி அச்சாக்க கருவியினை எல்லா இடங்க ளுக்கும் இடம் நகர்த்த முடியும் எனவும், இதனால் குறித்த முறை மிகவும் வெற்றிகரமாக சிகிச்சைகளை அளிக்க வழியமைக்கும் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நோயாளி ஒருவரின் காயத்தை ஸ்கேன் செய்து துல்லியமான தகவல்களை திரட்டி இந்த அச்சாக்க கருவிகளைக் கொண்டு அந்த காயத்திற்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. குறிப்பாக நோயாளியின் உடலிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கலன்களினா




லேயே தோல் உருவாக்கப்படுவதனால் உடலில் ஒவ்வாமை ஏற்படக்கூடிய சாத்தியங்கள் மட்டுப்படுத்தப்படுகின்றது.

காயங்களை துரித கதியில் குணப்படுத்தக்கூடிய முப்பரிமாண அச்சாக்க சிகிச்சை முறைமை ஒன்றை டப்ளினின் RCSI University of Medicine and Health Sciences பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் உருவாக்கியிருந்தனர். ஹைட்ரோஜெல்களைக் கொண்ட platelet-rich plasma (PRP) முறைமை காயங்களை துரித கதியில் குணப்படுத்தக்கூடியவையாகும்.

## இரத்த நாளங்கள்:

முப்பரிமாண உயிரி அச்சாக்கத்தின் முதன்மையான நோக்கமானது செயற்படக்கூடிய மனித உடல் பாகங்களை செயற்கையாக தயாரிப்பதாகும். உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை முறைமைகளில் காணப்படும் பல்வேறு சிக்கல் நிலைமைகளை தீர்க்கும் நோக்கில் இவ்வாறு முப்பரிமாண அச்சாக்கத்தின் ஊடாக உடல் உறுப்புக்களை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

அமெரிக்காவில் உடல் உறுப்புக்கள் கிடைக்கப் பெறுவதற்காக காத்திருப்போர் பட்டியலில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் காத்திருக்கின்றார்கள். இவ்வாறு காத்திருப்பவர்களில் நாளாந்தம் 17 பேர் வரையில் உறுப்புகள் கிடைக்கப் பெறாத காரணத்தினால் உயிரிழக்க நேரிடுகின்றது. உடல் உறுப்பு கொடையாளிகளுக்கு காணப்படும் பற்றாக்குறையே இதற்காக பிரதான ஏதுவாகும். அமெரிக்காவில் 60 வீதமானவர்கள் உடல் உறுப்புக்களை தானம் செய்ய இணங்கியுள்ள போதிலும் 1000 மரணங்களில் 3 உடல் உறுப்பு தானங்களே இடம்பெறுகின்றன.

முப்பரிமாண உயிரி அச்சாக்க தொழில்நுட்பம் ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பதற்கு உதவும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது. எனினும், சாத்தியமான அச்சிடப்பட்ட உறுப்புகளை உருவாக்க தேவையான இரத்தநாளக் கட்டமைப்புகளை உருவாக்க விஞ்ஞானிகள் சிரத்தை காட்டி வருகின்றனர். முப்பரிமாண அச்சாக்க தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட அனைத்து உடல் உறுப்புகளினதும் கலன்கள் மற்றும் திசுக்களின் இறப்பைத் தடுக்க பயனுள்ள, தொடர்ச்சியான இரத்த விநியோகம் தேவைப்படுகிறது.

கடந்த 2021ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், இஸ்ரேலின் டெக்னியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னொலஜி நிறுவனத்தின் ஆய்வாளர்கள், திசு உள்வைப்புகளுக்கு இரத்த விநியோகத்தைச் சேர்க்க இரத்த நாள அமைப்புகளை முப்பரிமாண அச்சாக்கத்தின் மூலம் உருவாக்கியிருந்தனர்.

உடலின் இரத்த நாளங்களின் உள் அடுக்குகளிலிருந்து எடுக்கப்பட்ட எண்டோடெலியல் கலன்களை (அகவணி கலன்கள்) ஆய்வாளர்கள், polymeric collagen scaffold பாலிமெரிக் கொலாஜன் சாரக்கடைக்குள் (திசுக்களை உருவாக்க பயன்படுத்தப்படும் திசு), பொருத்தியதன் பின்னர், அந்தக் கட்டமைப்புகள் தன்னிச்சையாக வளர்ந்தன.

எனினும், இவை நுண்குழாய்கள் மட்டுமே, அவை செயற்கை கலன் திசு வளர்ச்சியை மேம்படுத்தப் பயன்படுகின்றன - அவை முழு உறுப்பையும் சீராக வளர்க்கும் அளவிற்கு இன்னும் வெற்றியளிக்கவில்லை, இதுவரை ஆய்வகத்தால் வளர்ந்த திசுக்கள் நோயாளியின் இரத்த நாளங்களுடன் பரிபூரணமாக ஒருங்கிணைக்கப்படவில்லை.

தேவைக்கேற்ப உடல் உறுப்புகளை முப்பரிமாண அச்சாக்கம் செய்வதற்கான பயணம் இன்னும் நீண்ட நெடியது என்பதனை ஆய்வுகள் வெளிக்காட்டுகின்றன. எனினும் எதிர்காலத்தில் இந்த சிக்கல்களுக்கு தீர்வு கண்டு உடல் உறுப்புக்களை முப்பரிமாண அச்சாக்கம் செய்யும் தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் எட்டிப்பிடித்துவிடுவார்கள் என்பதனை மறுதலிப்பதற்கில்லை. விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அசுர வளர்ச்சி உடல் உறுப்புக்களை அச்சிட்டு பொருத்திக்கொள்ளும் மருத்துவ விந்தைகளை நோக்கி எம்மை உந்திச் செல்கின்றது.



jeyaseelan.s@thaiveedu.com

# சிந்தியுங்கள்! செயற்படுங்கள்!! சேமியுங்கள்!!!

- வேலா சுப்ரமணியம்

### குளிர்கால சக்தி விரயம்

இன்னும் சில மாதங்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ குளிர் மிகுந்த நாட்டில் வாழும் நாங்கள் அதனால் ஏற்படக்கூடிய இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நாங்கள் வாழும் வீட்டினை இதமாக வைத்திருப்பதற்காகவும், சௌகரியத்தோடு வாழ்வதற்காகவும் பலவித வழிமுறைகளைக் கையாளவேண்டி இருக்கும். அத்தகைய வழிமுறைகள் எமக்கு இக்காலப்பகுதியில் அதிகளவு செலவினை அல்லது பணவிரயத்தினை ஏற்படுத்தக்கூடியவையாகவும் இருக்கும். ஆனால் சில தந்திர உபாயங்களைக் கையாள்வதன் மூலம் மேலதிகமாக ஏற்படக்கூடிய பல செலவுகளைக் கட்டுப்படுத்தி அதனூடாக பலநூறு டொலர்களை இக்காலப்பகுதியில் நிச்சயம் சேமிக்கமுடியும்.


TOU (Time of Use):

ஒன்ரோறியோவின் பெரும்பாலான பகுதியில் வசிக்கும் எல்லோரும் Smart Meter ஊடாக மின்சாரத்தை நுகர்வதால் எங்கள் பாவனை நேரத்திற்கமையவே மின்சாரக் கட்டணம் செலுத்துகின்றோம். நவம்பர் மாதம் 1ம் திகதியில் இருந்து ஏப்ரல் 30ம் திகதி-வரை குளிர்காலத்திற்கான நேர அட்டவணை அமலில் இருக்கும். காலை 7மணி முதல் 11மணி வரையும் அத்துடன் மாலை 5மணி முதல் 7 மணிவரையும் உள்ள காலப்பகுதி உச்ச காலமாகவும் (High Peak) காலை 11 முதல் மாலை 5 மணி வரையுள்ள கால்ப்பகுதி நடுத்தர காலமாகவும் (Mid Peak) மாலை 7மணி முதல் காலை 7 மணி வரையுள்ள காலப்பகுதி உச்சமற்ற (Non-Peak) சாதாரண காலப்பகுதியாகவும் வகுக்கப்பட்டுள்ளது. எனவே இக் காலப்பகுதியினைக் கருத்திற்கொண்டு மின்சாரப்பாவனைக்கான எமது செயற்பாடுகளை வகுத்துக் கொள்வது நல்லது. தற்போது மின்சாரக்கட்டணம் பின்வரும் அடிப்படையில் அறிவிடப்படுகிறது.

| | |
|---|---|
| On Peak | 17 Cents/kw |
| Mid Peak | 11.3 Cents/kw |
| Non Peak | 8.2 Cents/kw |

**குறிப்பு:** பொதுமக்கள் Covid 19 காரணமாகப் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருவதால் அதற்கு சிறு நிவாரணம் அளிக்கும் விதத்தில் ஒன்ராறியோ அரசாங்கம் 3 வாரங்களுக்கு (Jan 18 - Feb7) நேரக்கட்டுப்பாடு எதுவுமின்றி ஆகக் குறைந்த கட்டணமான 8.2 Cents/kw அறவிடத் தீர்மானித்திருப்பதைக் கவனத்தில் கொள்ளவும்

*(To help customers who are spending more time at home due to the surge in COVID cases, the Ontario government is providing electricity rate relief. All Time-of-Use and Tiered electricity usage will be billed at 8.2 cents per kWh from Jan 18 to Feb 7, 2022.)*



Rate Effective: January 18, 2022 to February 7, 2022

குறிப்பாகக் கூறுவதனால் உடுப்பு சலவை, பெரிய அளவிலான சமையல் போன்ற நடவடிக்கைகளை இரவு நேரமான 7 மணிக்குப் பின்னர் வைத்துக்கொண்டால் மின்சாரத்தால் ஏற்படக்கூடிய செலவை சுமார் 40%க்கு மேல் குறைத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது.

### சேமிப்புக்கான மேலும் பல உபாயங்கள்:

- கதவுகளையும் யன்னல்களையும் முறையான அடைப்புகள் (Weather Stripe) கொண்டு இறுக்கமாக மூடுவதன் மூலம் 25%சக்தி வியரத்தைச் சேமிக்கலாம்.
- சூரிய வெளிச்சம் வீட்டிற்குள் வரும்படியாக யன்னல் திரைச் சேலைகளை பகல் வேளைகளில் திறந்து வைப்பதன்மூலம் வீட்டினை இயற்கை முறையில் வெப்பமாக வைத்திருக்கலாம்.
- மரக்கட்டைகள் கொண்டு இயங்கும் தீவறை (Fire Place) இதமாக இருந்தாலும் அது பாவிக்கப்படாத நேரத்தில் அதன் உள்ளிருக்கும் கதவை (Flue Shut) இறுக்கமாக மூடி வைத்திருத்தல் வேண்டும். அல்லது வீட்டின் வெப்பம் விரயமாகி, வீடு குளிரடைய அதனை நிகர் செய்ய Furnace ம் மேலதிகமாக இயங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.
- பண்டிகைக்கால விளக்குகளையும் வீட்டில் உள்ள மின்குமிழ்கள், மற்றும் விளக்குகளையும் LED க்கு மாற்றுவதன்மூலம் 75-80% மின்சாரத்தை சேமிக்கலாம்.

- பாவிக்காத மின்சார உபகரணங்கள் அனைத்தையும் முற்றாக நிறுத்திவிடவும், உறங்கு நிலையில் (sleep) வைக்கப்பட்டிருக்கும் உபகரணங்கள் சுமார் 10% மின்சாரத்தை விரயம் செய்வதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
- சலவை செய்யும் இயந்திரத்தை குளிர் தண்ணீரில் சலவை செய்யும் நிலைக்கு மாற்றுவதன்மூலம் 90% சக்தி விரயத்தைத் தவிர்க்கலாம்.
- எரிவாயுவினால் இயங்கும் அடுப்பினைச் சுத்தமாக வைத்திருப்பதன்மூலமும் நடுத்தர அளவிலான சுவாலையை பாவிப்பதன் மூலமும் உச்ச பயனை அடையலாம்.
- 6” அங்குல விட்டமுள்ள பாத்திரத்தை 8” விட்டமுள்ள அடுப்பில் உபயோகித்தல் 40% அடுப்பின் வெப்பத்தை விரயமாக்கக் கூடியது. பாத்திரத்தின் அளவுக்கேற்ற அடுப்பைப் பாவிப்பதே உத்தமமானது.
- சாதாரண அடுப்புகளுடன் ஒப்பிடுகையில் Microwave 75%க்கும் குறைவான மின்சாரத்தையே பாவிக்கின்றது.
- மூடிய அடுப்பில் (Stove) வெதுப்பும் போது (Baking) அடிக்கடி திறந்து பார்த்தல் 20%க்கு மேற்பட்ட வெப்பத்தை விரயமாக்கும்.
- பாத்திரத்தை மூடிச்சமைப்பதன் மூலம் 14% சக்தியை சேமிக்கலாம்.
- மின்சார உலர்த்திக்குப்பதிலாக, காற்றில் உலரும் விதத்தில் Dish Washerஐ பாவிப்பதன் மூலம் 15% சக்தியை சேமிக்கலாம்.
- முகட்டு காற்றாடியை (Ceiling Fan) பாவிப்பவர்கள் காற்றோட்டத்தை மேலிருந்து கீழ்நோக்கி வருமாறு திருப்பி விடுங்கள். (Reverse the Flow).
- மின்சார உபகரணங்களை ஒரு Power Barல் இணைத்து, பாவனையற்ற காலங்களில் Power Barஜ முற்றாக நிறுத்திவிடல் உசிதமானது.
- மூன்று மாதத்திற்கு ஒருமுறை வெப்பமாக்கியின் (Furnace) வடிகட்டியை (Filter) மாற்றிவிடுவது அதன் தொழிற்பாட்டின் திறனை அதிகரிக்கவும், சக்தி விரயத்தைச் சேமிக்க வழி வகுக்கும்.
- Dimmer, Timer என்பவற்றை பாவிப்பதன் மூலம் அதிகளவு மின்சாரத்தைச் சேமிக்கலாம்.
- விடுமுறைக்காலங்களில் வீட்டில் பலர் பிரசன்னமாக இருப்பதும் நீண்டநேரம் குளிப்பதும் பொதுவாகவே இருக்கும். Energy Star Shower Head களை பாவிப்பதன் மூலம் தண்ணீரை மட்டுமல்ல சுடுநீரையும் சேமிக்கலாம்.
- விடுமுறைக் காலங்களில் பலமுறை செய்யும் வெதுப்பும் வேலைகளைத் திட்டமிட்டு ஒரே தடவையில் செய்தல் பல விதத்திலும் சேமிப்பைத்தரும்.
- உங்கள் வீட்டின் வெப்பத்தின் அளவை Themostatல் 1 Degree குறைப்பதன் மூலம் உங்கள் வெப்பமாக்கல் செலவில் 3%ஐ சேமிக்க முடியும்.
- படுக்கை நேரத்தில் Themostat ஐ $18^{o}$c - $20^{o}$cக்கு மாற்றிவிடப் பழகுவதன் மூலம் வெப்பமாக்கல் செலவில் 10%ஐ குறைக்க முடியும்.
- வீட்டித் தேவைக்கு வாங்கும் மின் உபகரணங்கள்யாவும் Energy Star தரம் கொண்டவையானவையா? என உறுதி செய்து கொள்ளுங்கள். புதிதாகக் கட்டப்படும் Energy Star வீடுகளுக்கு எல்லோராலும் மாறமுடியாது ஆனால் பாவிக்கும் உபகரணங்களை எல்லோராலும் Energy Star க்கு மாற்ற முடியும். அதனால் பாரிய அளவு பலனை அடையயும் முடியும்.

மேற்குறிப்பிட்ட எல்லாவற்றையும் எல்லோராலும் எந்த நேரத்திலும் செய்ய முடியாது. ஆனால் முடிந்தளவு ஒரு சிலவற்றைக் கவனத்தில் கொண்டாலே போதுமானது. சிறு துளி பெருவெள்ளம் அது சேமிப்பிற்கும் பொருந்தும்.

**உசாத்துணை:**
http://www.energy.gov.on.ca



velasubramaniam@thaiveedu.com


DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
*Certified Insolvency Counsellor*
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

# விண்கல்லைத் தாக்க விரைந்து செல்லும்

# நாசாவின் விண்கலம்

- குரு அரவிந்தன்


இயற்கையின் அதிசயத்தைப் பார்த்து நாங்கள் ஒரு பக்கம் வியந்து கொண்டிருந்தாலும், அதே இயற்கையால் பூமியில் நடக்கு அனர்த்தங்களையும் தினந்தோறும் சந்தித்துக் கொண்டு தான் இருக்கின்றோம். அறிவியல் உலகில் இவற்றை எப்படித் தடுக்கலாம் என்ற செயற்பாடுகளை நோக்கியும் நாங்கள் நகர்ந்து கொண்டுதான் இருக்கின்றோம். அந்த வகையில், சமீபத்தில் பூமிக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய விண்கற்கள் என்று எதிர்பார்க்கும், பூமிக்கு அருகே நெருங்கி வரும் விண்கற்களை நோக்கி அமெரிக்க நாசா நிறுவனத்தின் பார்வை திரும்பி இருக்கின்றது. பூமியைத் தாக்கப்போகின்ற எதிரி இயற்கையாக இருந்தாலும், பூமியின் பாதுகாப்புக் கருதித் திருப்பித்தாக்க வேண்டும் என்றால் அதற்கும் தயாராக இருப்பதற்காகத்தான் இந்த ஏற்பாடுகள் எல்லாம் நடக்கின்றன. நவீனயுகத்தில் நாடுகளுக்கிடையே அவ்வப்போது தாக்குதல்கள் நடந்தாலும், பூமிக்கு இயற்கையால் பாதிப்பு என்று வரும்போது, ஒன்று சேர்ந்து அதைப் பாதுகாப்பது எல்லோருடைய கடமையுமாகும். அந்த முயற்சியில்தான் நாசா நிறுவனம் இப்போது 324 மில்லியன் டொலர் செலவில் பரீட்சார்த்தமாக இந்த நடவடிக்கையை ஆரம்பித்திருக்கின்றது.

சென்ற 2021, நவம்பர் மாதம் 24ம் திகதி கலிபோனியாவில் உள்ள வான்டென்பேர்க் விண்வெளித் தளத்தில் இருந்து ஸ்பேஸ் எக்ஸ் பால்கன் - 9 ரொக்கட் மூலம் விண்கலம் ஒன்று நாசாவால் விண்வெளி நோக்கி அனுப்பப்பட்டது. எமக்கு ஆபத்தை விளைவிக்கப் போகும் விண்கல் ஒன்றைத்தாக்கி, அதைத் திசை திருப்புவதற்கே இந்த விண்கலம் நாசாவால் அனுப்பப்பட்டது. தற்கொலைப்படை போல, இந்த விண்கலம் எமக்காகத் தன்னைத்தானே அழித்துக் கொள்ளப் போகின்றது. டிமோபோஸ் என்ற விண்கல்லைத் தாக்கித் திசை திருப்புவதுதான் இதன் நோக்கமாகும். இதற்கு DART – (Double Asteroid Redirection Test) என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தினர் இதை உருவாக்கி இருக்கிறார்கள். 24,000 கிலோ மீட்டர் வேகத்தில் விண்கல்லைத் தேடிச் செல்லும் இந்த விண்கலம், 2022ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பிற்பகுதியில் குறித்த இலக்கை அடையும் போது, குறிவைக்கப்பட்ட விண்கல் பூமிக்கு கிட்டவாக, அதாவது, 10 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் வந்திருக்கும். பூமியை நோக்கி வரும் ஒரு பொருளை உடைப்பதற்கு அல்லது திசை-திருப்புவதற்கு அனுப்பப்படும் அதிவிரைவான விண்கலங்களை kinetic impactor technique என்று சொல்வார்கள். ஆனால் இவர்களின் திட்டத்தின்படி மிகப் பெரிய விண்கற்களைத் திசை திருப்புவது என்பது இப்போது இருக்கும் தொழில் நுட்ப வசதிகளின்படி முடியாத காரியமாகும்.

இந்த விண்கல்லைக் குறி வைத்ததற்குக் காரணம். விண்வெளியில் சூரியகுடும்பத்தில் உள்ள பூமியையும், சந்திரனையும் போல, இரண்டு விண்கற்கள் Didymos and Dimorphos சூரியனைச் சுற்றி வருகின்றன. அதேசமயம், இவற்றில் சிறியதான டிமோபோஸ் பெரிய விண்கல்லான டிடிமோஸையும் சுற்றி வருகின்றது. 560 அடி குறுக்களவைக் கொண்ட இதை டிடிமூன் என்றும் அழைப்பர். 2003 ஆண்டுதான் விண்வெளியில் இதைக் கண்டு பிடித்தார்கள். டிமோபோஸ் என்ற கிரேக்க சொல்லுக்கு 'இரட்டை நிலை பெறும்' என்று அர்த்தமாகும். டிமோபோஸ் இப்படி சந்திரன் போல் டிடிமோஸை சுற்றி வருதற்குத் தற்போது 11 மணித்தியாலமும் 55 நிமிடங்களும் இதற்கு எடுக்கின்றது. தாய்க் கல்லான டிடிமோஸ் 2560 அடி குறுக்களவைக் கொண்டது. அதனால்தான் சிறிய விண்கல்லில் மோதிப்பார்த்தால் அதன் பாதை விலகிச் செல்லுமா என்பதைத்தான் பரீட்சித்துப் பார்க்க இருக்கிறார்கள். இதற்குத் தேவையான, மோதப்போகும் விண்கல்லை அடையாளம் காணக்கூடிய கமெராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இலக்கை அடைந்ததும் மோதவேண்டிய கல்லைத் தேடிப்பிடித்து, 15,000 மைல் வேகத்தில் அதன் மீது மோதித் தன்னைத்தானே அழித்துக் கொள்வதுதான் இந்த விண்கலத்தின் வேலையாகும். விண்கல்லுடன் மோதும் போது அதைப் பதிவு செய்ய வேண்டிய கமெராவோடு கூடிய சிறிய ஒரு கருவியும் விண்கலத்துடன் இணைக்கப் பட்டிருக்கின்றது. இத்தாலிய விண்வெளி நிலையத்தில் தயாரிக்கப்பட்ட இந்தக் கருவி (CubeSat) நிகழ்வு நடப்பதற்குச் சில நாட்களுக்கு முன் விண்கலத்தில் இருந்து தானாக விடுபட்டு தனித்து இயங்கத் தொடங்கும். விண்கலத்தைத் தொடரும் இந்தக் கருவி, விண்கலம் விண்கல்லுடன் மோதும் போது கமெரா பதிவுகளை மேற்கொள்ளும் வசதி படைத்தது.

1996ம் ஆண்டு இந்த விண்கல்லை விண்வெளியில் கண்டு பிடித்ததால் இதற்கு 1996ஜிரி என்று பெயர் வைத்தார்கள். ஆனால் சூரியனை சுற்றி வரும் இந்த விண்கல் 2003ம் ஆண்டு பூமிக்குக் கிட்டவாக சுமார் 7 மில்லியன் கிலோ மீட்டர் அருகே வந்தபோதுதான் அதனுடன் ஒரு குட்டிச் சந்திரன் இருப்பது அவதானிக்கப்பட்டது. அதனால்தான் பெரிய விண்கல்லுக்கு டிடிமோஸ் என்றும் அதன் சந்திரனுக்கு டிமோபோஸ் என்றும் கிரேக்க பெயர்களை வைத்தார்கள். டிமோபோஸ் விண்கல் கிட்டத் தட்ட ஒரு பிரமீட் அளவு இருக்கும். அதனோடு மோதப்போகும் இந்த விண்கலம் ஒரு சலவையந்திரமளவுதான் இருக்கும். மோதும் போது விண்கல் சற்று விலகினாலும் அதன் சுற்றுப் பாதையில் பெரிய மாற்றம் ஏற்படும் என்பதைத்தான் இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த முயற்சி வெற்றி தருமானால் பூமியை நோக்கி எதிர்காலத்தில் வரும் சிறிய விண்கற்களைத் திசை திருப்பமுடியும் என்ற நம்பிக்கை உருவாகும்.

சென்ற டிசம்பர் மாதம் 11ம் திகதி இதே போன்ற 4660 என்ற இலக்கத்தைக் கொண்ட நிரெஸ் என்ற விண்கல் பூமிக்கு அருகே சுமார் 3.9 மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் கடந்து சென்றது. சூரியனைச் சுற்றி வரும் இந்த விண்கல், 2060ம் ஆண்டு பெப்பிர-வரி மாதம் இதைவிட இன்னும் மிக அருகே, 1.2 மில்லியன் கிலோ மீட்டர் அருகே வரவிருக்கின்றது. சமீபத்தில் 3 விண்கற்கள்



எம்மைக் கடந்து சென்றன. இவற்றில் விண்கல் 2021விஆர், இந்த வருடம் 2022 மார்ச் மாதம் 13ம் திகதியும், அதைத் தொடர்ந்து 2016 ஜேஜி 12 என்ற விண்கல் இந்த வருடம் 2022 ஏப்ரல் மாதமும் திரும்பிவர இருக்கின்றன. இதில் மிகவும் சிறியதான விண்கல் 2021விஜே 11, பெரிய வட்டத்தில் சுற்றுவதால், 120 வருடங்களின் பின்பு தான் திரும்பவும் பூமியை நோக்கி வர இருக்கின்றது. இந்த விண்கற்களால் உடனடிப் பாதிப்பு இல்லாவிட்டாலும், பூமிக்கு ஆபத்தான விண்கற்களின் பட்டியலில் இவை இடம் பெற்றிருக் கின்றன. காலப்போக்கில் இந்த விண்கற்களின் சுற்றுப் பாதையில் மாற்றம் ஏற்பட்டு, புவிக்கவர்ச்சிக்குள் அகப்பட்டால், அதன் காரணமாக பூமியைத் தாக்கும் ஆபத்தும் ஏற்படலாம். 1982 டிபி என்ற முன்னைய பெயரைக் கொண்ட விண்கல் 1082 அடி நீளமா னது, 2 கிலோ மீட்டர் குறுக்களவைக் கொண்டது. 1982ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ம் திகதி நாசாவின் திட்டத்தில் பணியாற்றும் எலியநோர் கெலின் என்ற அமெரிக்க பெண் வானியலாளரால் கண்டு பிடிக்கப்பட்ட இந்த விண்கல், சூரியனைச் சுற்றி வருவதற் குச் சுமார் 1.82 வருடம் எடுக்கின்றது.

விண்கற்கள் பூமின் மேற்பரப்பை அடிக்கடி தாக்கினாலும், இது வரை மனிதர்கள் அதிகம் பாதிக்கப்படவில்லை. ஆனால் எதிர் பார்த்ததைவிட அதிகமான தாக்குதல்கள் இப்போது நடக்கின்றன என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். 1954ம் ஆண்டு அலபாமாவில் வீட்டுக் கூரையை உடைத்து விண்கல் விழுந்ததில் ஒரு பெண் காயடைந்திருந்தார். இதுவரை பூமியில் கண்டுபிடிக் கப்பட்ட மிகப் பெரிய விண்கல் நமீபியா நாட்டில் விழுந்த கோபா, 60 தொன் எடைஉள்ளதாகும். 1908ம் ஆண்டு ரஸ்யாவில் துங்குஷ்கா ஆற்றில் விழுந்த பெரிய விண்கல் ஹிரோஷிமாவில் வீசப்பட்ட அணுக்குண்டைவிட 185 மடங்கு சக்தி வாய்ந்ததாக இருந்தது. 1922ம் ஆண்டு வோல்கோகிராட் பகுதியில் விண்கற்கள் மழை கொட்டுவது போல விழுந்தன. அதில் ஒரு பெரியகல் 284 கிலோ எடையுள்ளதாக இருந்தது. 2002ம் ஆண்டும் இது போல இர்குட்ஸ் பகுதியிலும் விண்கற்கள் விழுந்தன. 2003ம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் விழுந்த விண்கல்லின் எடை 17 கிலோவாக இருந்தது.

இதுவரை சுமார் 25,000 பெரிய விண்கற்கள் அடையாளப்படுத்தப் பட்டிருக்கின்றன. பரீட்சார்த்த தாக்குதலுக்காக, பூமிக்கு அருகே இருக்கும் 8,000 விண்கற்கள் முதலில் தெரிவு செய்யப்பட்டன. அவற்றில் இருந்து 1982ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட, 4.5 மில்லியன் கிலோ மீட்டர் தூரத்தில் பூமியைக் கடக்கும் 3361 Orpheus என்ற விண்கல்தான் முதலில் இதற்காகத் தெரிவு செய்யப் பட்டாலும், அது தவிர்க்கப்பட்டது. அதன் பின்தான் டிமோபோஸ் தெரிவு செய்யப்பட்டது. இந்த விண்கற்கள் பலவிதமான கலவைக- ளால் ஆனவை. சில விண்கற்களில் இரும்பு 90 சதவீதமும், சுமார் 8 சதவீதம் நிக்கலும் கலந்து இருக்கும். சாதாரண விண் கல்லை விட இது எடை கூடியதாக இருக்கும். செவ்வாய், புதன் கிரகங்களில் நடந்த மோதல்களால் வெடித்துப் பறந்த கற்களும், வால்வெள்ளிகளின் எரிந்துபோன கற்களும் பூமியில் வந்து விழுந் திருக்கின்றன. ஏனைய கற்களோடு சேர்ந்திருந்தால் இவற்றை இனங்காணுவது கடினம். அரிசோனாவில் பெரியதொரு விண்கல் விழுந்ததால் ஏற்பட்ட பெரிய பள்ளம் ASTROBLEME ஒன்று இப்பொழுதும் உள்ளது. சுமார் ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன் இப்படியான மிகப்பெரிய விண்கல் ஒன்று பூமியைத் தாக்கி யதால்தான் டையனோசர்கள் அழிந்தன என்று ஆய்வாளர் குறிப் பிடுவர். பூமியின் 70 சதவீதம் கடல் பரப்பாக இருப்பதால், விண் கற்கள் நிலத்தில் வந்து விழுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன.

இதனால்த்தான் நாசா நிறுவனம் பூமிக்கு அருகே வரும் விண்கற் களை அவதானித்தபடி இருக்கின்றது. அவற்றால் உடனடியாக எந்த ஆபத்தும் இல்லை என்பதை நாசா உறுதிப்படுத்தி இருக் கின்றது. ஆனாலும் வருங்காலங்களில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பதால், பூமிக்கு அருகே உள்ள சில விண்கற்களைக் கவன- மாக அவதானிக்கின்றது. தேவை ஏற்படின் அவற்றைச் சிறு துண்டுகளாக உடைப்பதற்கோ அல்லது அவற்றைத் திசை திருப் பவோ நாசா ஏற்பாடுகளைச் செய்கின்றது. இயற்கை அழிவு தவிர்க்க முடியாதது, அது எப்போதும், எப்படியும் ஏற்படத்தான் செய்யும். நவீனயுகத்தில் இயற்கையின் அழிவில் இருந்து எங்க ளைப் பாதுகாக்க வேண்டிய கடமை எமக்கு இருக்கிறதல்லவா, அதனால்தான் பூமியின் பாதுகாப்பிற்காக, நாசா நிறுவனம் பரீட்சார்த்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கி இருக் கின்றது. விண்கல்லைத் திசைதிருப்பும் இந்த முயற்சியில் வெற்றி கிடைத்ததா இல்லையா என்பதன் முடிவு வருகிற நவம்பர் மாதம் 2022ல் தெரியவரும்.


**உசாத்துணை:**

- https://www.newsweek.com/asteroid-great-pyramid-giza-pass-earth-november
- https://www.nytimes.com/2021/11/24/science/nasa-dart-mission-asteroid.html




kuruaravindan@thaiveedu.com



Mega Financial Group
WE ARE PROVIDING A LIFETIME
FAMILY PROTECTION
SAVE BIG
ON COVERAGE FOR YOUR MOST PRECIOUS ASSET
OUR PRODUCTS AND SERVICES
Life Insurance products
Critical Illness Insurance
Disability Insurance
Dental & Drug Insurance
Travel Insurance
Non-Medical Insurance
Mortgage Insurance
RRSP's Investments
RESP-Education Saving Plan
Final Expense Products
(Through Funeral Homes)
INDUSTRIAL ALLIANCE
Canada Life
Sun Life Financial
UL Mutual
OBF
LaCapitale
RBC Insurance
Empire Life
Desjardins
Manulife Financial
www.megafinancial.ca
RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca
Office: 416-293 5559 • Fax: 416-293 9409
PH28 -4168 Finch Ave. E., Scarborough, ON., M1S 5H6

# பொறுமை வாழ்வின் பெருமை

- சி. நற்குணலிங்கம்

பொறுமை என்பது மனிதர் கொண்டுள்ள பண்பட்ட தன்மையின் வெளிப்பாட்டைக் குறித்து நிற்கிறது. எந்தச் சூழ்நிலையிலும் நிதானத்தை இழந்திராத நிலைப்பேற்றின் பொருண்மையைச் சுட்டிநிற்கிறது. பொறுமை ஒரு அன்பின் செயல். கோபத்தையும், மனக்கசப்பையும், பழி வாங்கும் எண்ணத்தையும், தண்டிக்கும் மனோ நிலையையும் விட்டுவிலகும் நிலை. பிரச்சினையை ஏற்படுத்திய நபருடன் சமாதானத்தையும், நல்ல பந்தத்தையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்திக்கொள்ள நன்றாக யோசித்து எடுக்கப்பட்ட தனிப்பட்ட தீர்மானமாகும். பொறுமை என்றால், ஒருவர் செய்த தவறு, குற்றம், பிழை போன்றவற்றுக்காக அவர்மீது கோபம், எரிச்சல் கொள்ளாமல் அல்லது அதற்கு நடவடிக்கை எடுக்காமல், பதிலடி கொடுக்காமல் அவர் செயல் தவறு என்பதை உணரச் செய்யும் செயல்நிலை. தன்நிலையிலிருந்து மாறுதல், தன்நிலையிலிருந்து பிறர்பொருட்டு இறங்கி வருதல் அல்லது மனம் இரங்குதல் பொறுமை எனப்படும். துன்பம் ஏற்படும்போது உணர்ச்சி வசப்படாமலும், ஆவேசம் கொள்ளாமலும் இருக்கும் மனநிலையாகும். சில அசாதாரண சூழ்நிலைகளில் அமைதியாக இருக்கும் குணம் பொறுமையாகும். பிரச்சினைகளை சகித்திருப்பதுதான் பொறுமை என்கிறது பைபிள்.

வாழ்வியல் கோலங்கள் அனைத்தினதும் செயற்போக்கிலும், பொறுமையின் துடிப்போடு சிந்தனைபூர்வமாக எடுக்கப்படாத அவசர முடிவுகளே அதிக பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. குடும்பம், பாடசாலை, வேலைத்தளம், அரசியல் என அனைத்து மட்டங்களிலும் பொறுமையற்ற அவசர முடிவுகளே அதிக பின்னூட்டமற்ற விளைவுகளையும், கருத்து மோதல்களையும், பிரச்சினைகளையும் உருவம் பெறச் செய்கின்றன. பொறுமையோடு அமைதியுறதங்கள் வாழ்வியல் படிநிலைகள் குறித்து சிந்திக்காமல் தவறான முடிவுகளை மேற்கொண்டு, உயிர்களை மாய்த்துக்கொள்வோரின் எண்ணிக்கையும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. நம்முடைய எல்லா முயற்சிகளுக்கும் உடனே பலன் கிடைப்பதில்லை. பலன் கிடைக்கும்வரை காத்திருப்பதே பொறுமை. பொறுமை இல்லாத காரணத்தினால் அதிகம்பேர் இலக்கிற்கு மிக அருகில் வந்தும் இலக்கை அடையாமல் போகிறோம். தற்போது நாம் கடினமான நாட்களில் வாழ்கின்றோம். அதை சமாளிக்க பொறுமை அவசியம். வாழ்வியல் அனைத்துக்கும் அடிநாதமாக விளங்குவது பொறுமை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் பொறுமையின் பண்புறு சிரத்தலோடு சிந்தித்து நல்ல முடிவுகளை எடுக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தை பயனுறுதியாக்கிக் கொள்ளவேண்டும்.

பொறுமை என்பது அனைவரிடத்திலும் இருக்க வேண்டிய பண்பியல்பாக காணப்படுகின்றபோதும் அதனைக் கடைப்பிடிப்பது என்பது இலகுவான காரியமல்ல. பொறுமையின் களிப்புடைய முயற்சியே வெற்றியின் முக்கிய புள்ளி எனக் குறிப்பிடுவர். சாதனையாளர்கள். உளி விழுகையில் வலி என நினைக்கும் எந்தப் பாறையும் சிலையாக மாற்றங் காண்பதில்லை. வலி பொறுத்த சில பாறைகளே சிலையாக மிளிர்கின்றன. எனவே பொறுமைதான் உயர்வான வெற்றிகளை உருவாக்க வல்லது. பொறுமை எனும் கருவியின் சிறத்தலை தவறவிட்டவர்கள் வெற்றியின் பதக்கங்களுக்கு சொந்தம் கொண்டாடுவதில்லை. பொறுமை தனது பயணக் குறிக்கோளை இழந்துவிடும்போது தோல்வி எம்மைப் பற்றியதாய் நகர்வுறத் தொடங்குகிறது. பெருமை கொண்டால் வெறுமை உன்னை நாடிவரும். பொறுமை கொண்டால் பெருமை உன்னைத் தேடிவரும். வறுமையிலும் பொறுமை வாழ்க்கைக்கு வலிமை சேர்க்கும். இழப்பிலும் பொறுமை அமைதிப்படுத்தும். அகிலமே ஆள பொறுமை ஆணிவேராகும். ஒரு புத்திசாலியால் சாதிக்க முடியாததை சில நேரங்களில் ஒரு பொறுமைசாலி சாதித்துவிடுகிறான். பொறுமை காப்பது உயர்ந்த உள்ளத்துக்கான அடையாளமாகும்.

வாழ்வியலுக்குரிய சிறந்த வழிகாட்டியாக, வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழி எதுவென, வையகத்தாருக்கு 'பொறை உடைமை' என்ற அதிகாரத்தினூடாக குறட்பாக்களை மொழிந்து வள்ளுவப்பெருந்தகை கருத்துரைத்துள்ளார். பொறுமையின் மகத்துவம் பற்றி சிறப்புற எடுத்துக் கூறியுள்ளார்.

***இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்***
***வன்மை மடவார்ப் பொறை***

அதாவது, வீட்டுக்கு வந்த விருந்தினரை அலட்சியப்படுத்துவது வறுமையை விடவும் கொடுமையானது. யாரேனும் நமக்கு செய்த தீமையை பொறுத்துக் கொள்வது நமது வலிமையிலும் வலிமையாகும்.

***ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்***
***பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து***

அதாவது, தீமைக்கு தீமை செய்பவரை உலகம் மதியாது. அந்தத் தீமையைப் பொறுத்துக்கொண்டால் பொன்மனச்செம்மல் என்று போற்றும்.

***அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை***
***இகழ்வார்ப் பொறுத்தல் தலை***

அதாவது, நாம் வாழுகின்ற இந்தப் பூமியை ஆழமாகத் தோண்டுகிறோம். ஆயினும் அது தாயாக நம்மை தாங்கிப் பாதுகாக்கிறது. அதுபோல நாமும் நம்மைத் திட்டுவோரை, தாக்குவோரைப் பொறுத்துக்கொள்வதே சிறப்பாகும். மேலும், ஒருவர் நமக்கு தீங்கு செய்கிறார். அவரை அடக்க முடியும் என்றாலும் பொறுத்துக்கொள்வது மிகவும் நல்லது. நிறைவான பண்பினை பாதுகாப்பதென்றால் நாம் பொறுமையை கண்போல் காக்க வேண்டும். தீங்கு செய்தவரை தண்டிப்பது நமக்கு அந்த நேரம் மகிழ்வைத் தந்தாலும் பொறுத்துக்கொண்டால் அது சாகும்வரை புகழை உண்டாக்கும். மடமையும் செருக்கும்கொண்டு ஒருவர் நமக்கு பல கொடுமைகளை செய்தாலும் நாம் பொறுத்துக்

கொள்வதே நமக்கு வெற்றியாகும். தீநெறியால் ஒருவர் நம்மை இழிவாகப் பேசிப் புண்படுத்தினாலும் நாம் அதனைப் பொறுத்துக்கொண்டால் துறவிகளை விடவும் சிறப்பானவர்கள் ஆவோம். அத்துடன், வெகுளாமை எனும் அதிகாரத்தில்,

***உள்ளியது எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்***
***உள்ளான் வெகுளி எனின்***

அதாவது, பொறுமையுடன் ஒருவன் எந்தச் சூழ்நிலையிலும் கோபப்படாமல் இருந்துவிட்டால் தான் விரும்பிய நன்மைகளை எல்லாம் அடைவது உறுதி என பொறுமையின் மேன்மையை திருவள்ளுவர் அறிவுறுத்தியுள்ள தன்மை அற்புதமானது.

பொறுமையைக் கையாண்டால் பெருமை அடைவீர்கள். கோபம்,



எரிச்சல் போன்ற தேவையற்ற எண்ணங்கள் தோன்றும்போது, பொறுமையுடன் செயற்பட வேண்டும். கோபப்பட்டு வென்றுவிட்டாய் என்றால் உன் கோபம் பெரிது என்று அர்த்தமல்ல. அதைத் தாங்கிக்கொண்டவர்களின் பொறுமை பெரிது என்றுதான் அர்த்தம். ‘வெற்றி வந்தால் பணிவு அவசியம் என்பதுபோல் தோல்வி வந்தால் பொறுமை அவசியம்’ என்றார் பாரதியார். ‘தோல்வியே அடையாத ஆயுதம் பொறுமை’ புத்தரின் வாக்கு. ‘உனக்கு பொறுமை வேண்டுமானாலும், உற்சாகம் வேண்டுமானாலும் பிற மனிதருக்கு தொண்டு செய்வதில் போட்டி போடுவதன் மூலம் தேடிக்கொள்’ தந்தை பெரியார் கூற்று. கடைசி தீக்குச்சியில் காட்டும் பொறுமையையும், பொறுப்பையும் நாம் மேற்கொள்கின்ற அனைத்து விடயங்களிலும் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் என்றும் மேன்மையே. எமக்கு ஏற்படும் துன்பங்கள், கவலைகள், துயரங்களை சகித்துக்கொள்ளப் பழக வேண்டும். உங்கள்மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவை மன உறுதியுடன் பொறுமையையும் உங்களுக்கு வழங்கும். வெறுமையற்ற மனப்பொறுமை மற்றும் சிந்தித்தல் எனும் பணிவுடைகள் ஒரு செயலில் அவசியம் இருக்க வேண்டும். இந்த இரண்டு செயலுறுதிகளும் இல்லையெனின் அது ஒழுங்கற்று சிதறிவிடும்.


ஹெக்டர் கூறிய ‘பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவருக்கே வாழ்வில் வெற்றி கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது’ என்ற கருத்துநிலை இங்கு நோக்கற்குரியது. அமெரிக்க அரச அதிபராக இருந்த ஆப்பிரகாம் லிங்கன் பொறுமையின் அவசியத்தையும் கருத்தில்கொண்டு தனது மகனின் வகுப்பாசிரியருக்கு எழுதிய கடிதத்தில், ‘சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள். அதே வேளையில் வலிமையை மௌனமாக வெளிப்படுத்தும் பொறுமையையும் அவனுக்கு சொல்லிக்கொடுங்கள்’ எனக் குறிப்பிட்டுள்ளார். அன்னை திரேசாவின் வாழ்க்கை எமக்கு பொறுமையின் கருத்துக்களை போதிக்கின்றது. ‘பொறுமை உடையவர் எதைச் சாதிக்க வேண்டுமென நினைக்கிறாரோ அதைச் சாதிப்பார்’ என்கிறார் பெஞ்சமின். ‘பொறுமை கசப்பானது. ஆனால், அது தரும் கனியோ மிகவும் இனிப்பானது’ என்கிறார் தத்துவ மேதை அரிஸ்டோட்டல்.

மேலும், ‘எதையும் தாங்குபவரே வெற்றி அடைவார்’ என்கிறார் அறிஞர் பெரிசியஸ். ‘பொறுமை, தூய்மை, விடாமுயற்சி இம்மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை’ என்றார் விவேகானந்தர். ‘சுகம், துக்கம் இரண்டையும் ஒன்றாகக் கருதுவதே பொறுமை’ என்றார் இராமதாசர். ‘பொறுமை உள்ளவர்கள் மலைகளை மிதித்தே கடந்து விடுவார்கள்’ இது காந்திஜியின் பொன்மொழி. ‘பொறுமையைவிட சிறந்த ஆயுதம் கிடையாது’ என்றார் வால்மீகி. ‘பொறுமை என்பது மகிழ்ச்சியின் தாயாகும்’ என்கிறார் டால்ஸ்டாய். ‘பொறுமையாக இருப்பவர் எப்போதும் அழியமாட்டார்’ இராமகிருஸ்னரது பொன்மொழி. ‘ஒருவர்மேல் ஒருவருக்கு ஏதாவது மனக்குறை இருந்தால், ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளுங்கள்’ என பைபிள் கூறுகிறது. ‘பொறுத்தார் அரசாள்வார், பொங்கினார் காடாள்வார்’ என்ற சான்றோர் மொழி பொறுமையின் சிறப்பை எடுத்தியம்புகின்றது.

பொறுமையே பொறாமையை வெல்லும் என்பது உறுதி. பொறுமை எம்மை குளிர்ச்சியாகவும், அமைதியாகவும் வைத்திருக்கின்றது. பிறர் செய்த தீமைகளை அறிவுடையோர் பொறுத்துக்கொள்வர். அன்புடையோர் மன்னித்துவிடுவர். எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம், தோல்வி வந்தால் பொறுமை அவசியம். பொறுமை காத்திடுங்கள் சரியான நேரத்தில் எல்லாம் வந்து சேரும். பொறுமைதான் உண்மையாக வாழ்வைக் கற்றுக்கொடுக் கும். முதலில் உங்களிடம் நீங்கள் பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பொறுத்தால் மனம் சுத்தமாகும். பொறுத்தால் மனநிம்மதி, திருப்தி கிட்டும்.

பொறுமை பற்றிக் கூறும் உலகப் பழமொழிகள் பொறுமை கல்லையும் துளைக்கும் - அராபிய நாட்டுப் பழமொழி. பொறுமைக்கு அழகான குழந்தைகளே பிறக்கும் - அமெரிக்கப் பழமொழி. பொறுமை உள்ளவர் எதை விரும்பினாலும் பெறலாம் - இங்கிலாந்துப் பழமொழி. நோயுள்ள ஒரு மனிதருக்கு பொறுமைதான் சிறந்த மருந்து - இங்கிலாந்துப் பழமொழி. பொறுமை கசப்புத்தான் ஆனால் அதன் கனி இனிப்பானது - பிரான்ஸ் நாட்டுப் பழமொழி. மகிழ்ச்சியின் சாவி பொறுமை - துருக்கி நாட்டுப் பழமொழி. எங்கு சென்றாலும் பொறுமை காத்திடுவீராக. பொறுமை கடலினும் பெரிது. பொறுமை அனைவரையும் வசீகரித்து வசப்படுத்தும் வலிமையுடையது.

இங்கே யார்தான் உத்தமர்? தவறிழைப்பது மனித இயல்பு. அப்படி ஒருவர் தவறு செய்துவிட்டால் அவரிடம் கடுமையாக நடந்துகொள்வதுதான் கொடுமையிலும் கொடுமை. அவரை எவ்வளவு தூரம் கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவுக்கு இழிவுபடுத்துவார்கள். இறுதியில் பொதுத் தளத்திலிருந்து அவர் விரட்டப்பட்டு மூலையில் முடங்கிவிடுவார். மனிதர் தாம் இறுதியாக இறப்பதற்கு இடையில் மனதால் பலமுறை இறந்துவிடுகிறார். இப்படி வாழாதீர்கள். வெறுப்பது யாராக இருந்தாலும் பொறுப்பது நீங்களாக இருங்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைத்து வாழப்பழகிவிட்டால் மகிழ்ச்சியை நாம் தேடிச் செல்ல வேண்டாம், மகிழ்ச்சி நம்மைத் தேடிவரும். வாழ்வு என்பது அறிந்து அனுபவிக்க வேண்டிய ஒரு சுகந்த அனுபவம். எனவே பொறுமை காத்து வாழ முற்படுகின்றவர்களுக்கு மரணம்கூட நிம்மதியான அனுபவமாக மாறலாம். சரியாகப் பயன்படுத்தினால் மனம் ஒரு சிறப்பான கருவியாகும். வாழ்க்கையில் சம்பாதிக்க வேண்டிய மிகப்பெரிய பொக்கிசம் பொறுமை.



natkunalingam@thaiveedu.com

# காலம் தின்ற...

- வேதநாயகம் தபேந்திரன்

'எல்லாரும் அப்படியே அசையாமல் இருங்கோ'. கையில் வைத்திருந்த பிளாஸ் லைற்றை ஒளிர மாப்பிள்ளை, பொம்பிளை இன சனங்களுடன் நிற்கும் படமொன்றை அருணாசலம் எடுத்தான்.

ஒளிர்ந்து சுட்டு மண்ணில் விழுந்த பிளாஸ் லைற்றின் பல்புகளைச் சின்னம் சிறுசுகள் ஓடியோடிப் பொறுக்கினார்கள். கைகளில் சுடச்சுட ஆனந்தமாக அதை எடுத்து விளையாடினார்கள்.

அருணாசலம் அதைக் கண்டு சிரித்தான்.

அடுத்த இரண்டு வாரத்தில் ஓர் நாள் அருணாசலம் கண்ணாடிப் பிறேம் போட்ட கறுப்பு வெள்ளைப் புகைப் படத்தை வெகு பக்குவமாக கல்யாண வீடு நடந்த செல்லத்துரையர் வீடு வந்து



கொடுத்தான். அருணாசலத்துக்கு ஆரவாரமான வரவேற்புக் கிடைத்தது. அது வழமை என்பதால், அவனுக்கு அது பெரிதாகத் தெரியவில்லை.

வீட்டு நிகழ்வுகளில் போட்டோ எடுப்பது பணவசதி படைத்தோருக்கும் சமூகத்தில் உயர் அந்தஸ்து உடையோருக்கும் உரியதென்று இருந்த காலம் அது. அருணாசலம் என்ன செய்வது ஊர் ஓடினால் ஒத்து ஓடத்தானே வேண்டும்.

ஆண்டுகள் சில இப்படியே ஓடின. கலர்ப் புகைப்படம் எடுக்கும் கமெரா வந்தது. தொழில் என்று வந்தால் என்ன செய்வது. போட்டிக்கு நின்று வெல்லத் தானே வேண்டும். அருணாசலமும் கடன உடனப்பட்டு ஒரு கமெரா வாங்கினான். கலைத்துவமாக அழகாகப் படம் எடுக்கும் அவனது ஆற்றலைக் கண்டு அவனைப் பலர் நிகழ்வுகளுக்கு அழைத்தார்கள். இதனால் அவனுக்கு நல்ல டிமாண்ட்.

நகரத்தில் ஸ்ரூடியோ ஒன்றை அமைத்துப் போட்டோ எடுக்கும் தொழில் செய்தால் நாலு பக்கத்தாலும் ஆள்கள் வருவார்கள். நிறைய உழைக்க முடியுமென அவனது நண்பன் சந்திரன் ஆலோசனை சொன்னான்.

அருணாசலம் தனது மனைவியுடன் கூடிக் கலந்தாலோசித்துவிட்டு பிரதான வீதியில் கடை ஒன்றை எடுத்து தனது தாயார் சிவகாமியின் பெயரில் 'சிவகாமி ஸ்ரூடியோ' என நல்ல நாளொன்றில் திறந்து கொண்டான்.

இப்போது அருணாசலத்திடம் பலவித தேவைகளுக்கெனப் போட்டோ எடுக்கப் பலர் ஸ்ரூடியோவுக்கு வரத்தொடங்கினார்கள். மெல்ல மெல்ல வருமானம் கூடியது. 1977ம் ஆண்டு யூலை மாதத்தில் புதிய தலைவர் நாட்டில் பதவியேற்றார். தாராள பொருளாதாரக் கொள்கை என, இறக்குமதிகளுக்கு மூடப்பட்டிருந்த நாட்டைத் திறந்துவிட்டார்.

ஜப்பான் நாட்டுடன் கொண்டுள்ள நட்புறவு காரணமாக அங்குள்ள உயர்தரமான இலத்திரனியல் பொருட்கள் யாவும் நாட்டிற்குள் வரத் தொடங்கின. அருணாசலமும் ஜப்பானியரின் கை வண்ணத்தில் உருவான உயர்தரமான கொடெக் கமெரா ஒன்றைத் தனது ஸ்ரூடியோவுக்கு வாங்கினான்.

அதன் துல்லியமான வண்ணமயமான புகைப்படங்கள் காரணமாக அருணாசலத்தின் ஸ்ரூடியோவுக்கு நல்ல மதிப்பு வந்தது. ஜப்பானியக் கொடெக் கமெரா போலப் பல ரகக் கமெராக்கள் இப்போது புழக்கத்திற்கு வந்தன. அதனால் சிவகாமி ஸ்ரூடியோவில் பலவகைப் பிலிம்றோல்களை அருணாசலம் விற்கத் தொடங்கினான்.

வசதி படைத்தோர் தமக்கெனச் சொந்தமாகக் கமெரா வாங்கத் தொடங்கினார்கள். அது மட்டுமல்ல புதிது புதிதாக நிறைய ஸ்ரூடியோக்கள் முளைத்தன. குட்டிக் குட்டிக் கமெராக்கள் பலரது கைகளில் முளைத்தது.

ஒரு காலத்தில் பணம் படைத்தோர் கைகளில் இருந்த கமெரா இப்போது நடுத்தரக் குடும்பங்களின் கைகளிலும் வந்தது.

அமைதியான வாழ்க்கை குலையத் தொடங்கியது. மெல்ல மெல்ல வெடிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கியது. அமைதியின்மை நாட்டில் தோன்றியது. திடீர் திடீரெனக் ஹர்த்தால்கள்

வந்தன. வன்செயல்களால் அருணாசலம் போன்றவர்கள் மட்டு மல்ல சகலரது தொழில்களும் பாதிக்கப்பட்டன. படம் எடுத்த பிலிம் றோல்களை எங்கே கழுவுவது? என்றதொரு நிலை வந்தது.

மகாவலி கங்கை வடக்கே வரப்போகுது அங்கே கழுவினால் என் னவென ஒருவித நையாண்டிக் கதை வந்தது.

யுத்தத்தின் கோர முகத்தால் பொருளாதாரத் தடை வந்தது. கமெராக்கள் இருந்தாலும் பிலிம் றோல்கள் தட்டுப்பாடாக வந் தது. அதை அங்கால இங்கால என்று வவுனியாவால் கடத்தி வந்து விற்றார்கள். பல மடங்கு விலை கொடுத்து அருணாசலம் வாங்கினான். என்ன செய்வது? வயிற்றுக்குச் சோறு போடும் தொழிலாச்சே.

மரணங்கள் மலிந்த பூமியில் அழும் நேரம் அழுதார்கள். சிரிக்கும் நேரத்தில் சிரித்தார்கள். சிரித்த போதெல்லாம் அருணாசலம் போன்றவர்களது கமெராக்கள் தான் கதை சொல்லியது.

மங்கல, அமங்கல நிகழ்வுகளை வீடியோ எடுக்கும் கலாச்சாரமும் பரவியது. அதனால் வீடியோக்காரர்கள் தமக்கு இசைவான போட் டோகிராபர்களை அழைத்துச் சென்றார்கள்.

இதனால் அருணாசலத்தின் வாய்ப்புகள் ஆங்காங்கே சறுக்கத் தொடங்கியது. பொருளாதாரத் தடை காரணமாக விலைவாசி ஏற் றம் ஒரு புறம். வாய்ப்புகள் அவ்வப்போது கைக்கு எட்டும், ஆனால் வாய்க்கு எட்டாது. இதனால் அருணாசலம் தனது மனைவி பிள்ளைகளைப் பார்க்க மிகவும் கஸ்ரப்பட்டான்.

ஆனாலும் வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால் அடிமை இல்லை என்பது போல யாருக்கும் விட்டுக் கொடாமல் வாழ்ந்தான். அவனது நேர்மையான தொழில் காரணமாக அவனுக்கென்று ஒரு வாடிக்கையாளர் கூட்டம் இருந்தது.

போரும் போர் ஓய்வுமாக நாள்கள் கடந்தன. ஒரு நாள் நிலப் பரப்பை ஆட்சி செய்த மனிதர்கள் மாறினார்கள். பொருளாதாரத் தடைகள் யாவும் அகன்றன.

கப்பலில் பொருள்கள் வந்தன. கப்பலிலும் விமானத்திலுமாக பயணம் செய்து நாள்கள் நகர்ந்தன. அருணாசலத்திற்கு இப் போது சக்கை வருமானம். நிலப்பரப்பை ஆட்சி செய்த புதிய மனிதர்கள் பொதுமக்கள் யாவரும் கட்டாயம் விசேட அடையாள அட்டை எடுக்க வேண்டுமென்றார்கள்.

மாவட்டத்தின் பெரிய அலுவலகத்தின் இரண்டாம் நிலை அதிகாரி ஒருவர் அருணாசலத்தின் திறமையை நேர்மையை நன்கு அறி வார்.

அவனது பிரதேசத்தில் படம் எடுப்பதற்கான வாய்ப்பை அவனுக் குக் கொடுத்தார். அவனும் நியாயபூர்வமான கட்டணத்தில் புகைப் படங்கள் எடுத்துக் கொடுத்தான். பாடசாலைகள் தமது மாணவர் களுக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கு புகைப்படம் எடுக்க அருணாசலத்தை அழைத்தார்கள். அது போலத் தனியார் நிறுவனங்களும் புகைப்படம் எடுத்து தமது ஊழியர்களின் பாது காப்புக்கென அடையாள அட்டைகள் வழங்கினார்கள். பாஸ் போட் எடுத்தல், அப்படி இப்படியென புகைப்படங்கள் பரவலா கத் தேவைப்பட்டது. அருணாசலத்தின் தொழில் நேர்த்தியும் நியா யமான கட்டணத்தில் படம் எடுக்கும் பண்பும் காரணமாக அவனி டம் வாய்ப்புகள் தேடிக் குவிந்தன. அவனது காட்டில் மழை பொ ழிந்தது.

அந்த வருமானத்தை வைத்துக் கொண்டு தனது நீண்ட நாள் கனவான வீடு கட்டும் வேலையைத் தொடங்கினான். ஒரு வரு டத்திற்குள் வீட்டையும் கட்டி அதே வேளையில் தனது சிவகாமி ஸ்ரூடியோவையும் காலத்திற்கு ஏற்ப நவீன முறையில் புனரமைத் துக் கொண்டான்.

இப்போது பிலிம்றோலுக்குப் பதிலாக மெமறிகாட் எனும் முறை வந்தது. என்ன செய்வது மாறத்தானே வேண்டும்.

பணக்கார நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்றவர்கள் அனுப் பிய கமெராக்கள் ஊர்மனைக்குள் தாராளமாகப் புழங்கின. தாமும் புகைப்படம் எடுப்போமெனக் கமெரா தூக்கினார்கள். கை கால் வருதோ தெரியுதோ எனத் தெரியாமல் படம் எடுத்தார்கள். புகைப் படம் எடுத்தல் என்பது வேறு, புகைப்படக்கலை என்பது வேறு எனத் தெரியாமல் படம் எடுத்தவர்களுக்கு இயன்றவரையில் அரு- ணாசலம் சொல்லிக் கொடுத்தார். அருணாசலத்துக்கு வயதாகிப் போகப் படிப்பு ஓடாத கடைக் குட்டி மலரவனை ஸ்ரூடியோப் பக்கமாக எடுத்துக் கொண்டார்.

அவனும், புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பது போல நவீன கமெராக்களை இலாவகமாகத் தூக்கித் திறம் திறமாகப் படம் எடுத்தான். கொண்டாட்டங்களுக்குப் புகைப்படம் எடுப்பதற்கு ஸ்ரூடியோ தேவையில்லை. கமெராக்காரனே போதுமென்ற நிலை வந்தபோது பழைமையும் திறமையும் பொருந்திய ஸ்ரூடியோக்கள் பல மெல்ல மெல்ல வீழ்ச்சியடையத் தொடங்கின.

போர் சூழ்ந்த வாழ்க்கை காரணமாகத் தலைநகருக்கு இடம் பெயர்ந்தோரும் வளர்ந்த நாடுகளுக்கு புலம் பெயர்ந்த காரணத் தால் பல ஸ்ரூடியோக்கள் மூடப்பட்டன.

ஆனாலும் அருணாசலத்தின் சிவகாமி ஸ்ரூடியோ மலரவனின் கைவண்ணத்தால் வெற்றி நடை போட்டது. வாழ்வின் நெளிவு சுழிவுகளையெல்லாம் கடந்து வளர்ந்தது.

கைத்தொலைபேசிகள் மெல்ல மெல்ல மனிதர்களின் கைகளில் தவழ்ந்தன. ஆரம்பத்தில் நொக்கியா ரகங்கள் வந்தன. நாளடை வில் ஸ்மார்ட் ரக திறன் பேசிகள் மெல்ல மெல்லப் புழக்கத்தில் வந்தன.

குடும்பமாக ஸ்ரூடியோ வந்து புகைப்படங்கள் எடுத்த காலமும், வீட்டுக்குப் போட்டோகிராபரை வரவழைத்துப் படம் எடுத்த காலங்களும் மலையேறத் தொடங்கின.

புகைப்படங்களை அல்பங்களில் போட்டு அவற்றைத் திரும்பத் திரும்பப் பார்த்து ரசித்த காலம் விடைபெறத் தொடங்கியது. சமூக வலைத் தளங்கள் வயது அந்தஸ்து வேறுபாடு இன்றி மனிதர்கள் யாவரையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

பேஸ்புக் என்றார்கள், வைபர் என்றார்கள், வற்ஸ்அப் என்றார்கள், ஐஎம்ஓ என்றார்கள், ஈமெயிலில் படம் அனுப்பி வைக்கிறேன் என் றார்கள். காலமாற்றத்தை ஏற்கத்தானே வேண்டும். பிலிம்றோல் போய் மெமறிகாட் வந்தது போல படங்களைப் பதிவு செய்ய சீடி, டிவிடி, பென்ட்றைவ் எனப் புதிய தொழிநுட்பங்கள் பல வந்தன.

கனடாவில் வாழும் அருணாசலத்தின் மூத்த மகன் சிவகுமார் ஐபோன் ஒன்று வாங்கித் தகப்பனுக்கு அனுப்பினான். வயது போய் ஓய்வாக வாழும் அருணாசலத்துக்கு பேஸ்புக்கில் படங் கள் பார்ப்பதும், வைபரில் வெளிநாடுகளில் வாழும் பிள்ளைகள் உறவுகளுடன் கதைப்பதுமாகப் பொழுது போனது.

கமெராவைக் கடவுள் போல கண்ட சமூகம் ஆளுக்கு ஒரு ஸ்மார்ட் தொலைபேசியைப் பொக்கற்றில் வைத்துக் கொண்டு கண்ட நிண்டபடியெல்லாம் புகைப்படம் எடுப்பதைப் பார்க்க அருணாசலத்துக்கு மனதுக்குக் கஸ்டமாக இருந்தது. தங்களைப் போன்ற கமெராக்காரர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண் டாடிய சமூகம் இனி எங்கே வரப் போகிறதென நினைத்து நீண்ட தொரு பெருமூச்சை விட்டபடி அருணாசலம் தனது இறுதி நாள் களை எண்ணிக் கொண்டிருக்கிறார்.



thabendran.v@thaiveedu.com

# மைவண்ணன் இராமகாவியம்

**- அன்னலட்சுமி இராஜதுரை**

சோழநாட்டிலுள்ள திருவழுந்தூரில் 'விருத்தமென்னும் ஒண்பாவிலுயர்கம்பன்' என்று விதந்தோதப் பெற்ற கம்பர் பிறந்தார் என்பர். கல்வியிற் சிறந்த கம்பன் என்ற புகழும் அவருக்குண்டு. என்றென்றும் சீரிளமைத்திறன் குன்றாத் தமிழன்னை பெற்றெடுத்த கவிக்கோமான் கம்பர் என்பதும் அறிந்ததே.

தமிழ் மொழியில் மட்டுமன்றி வடமொழியிலும் (சமஸ்கிருதம்) சிறந்துவிளங்கிய கம்பருக்கு வடமொழியில் பெருமைபெற்று விளங்கும் யாதேனும் ஓர் அரிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாட வேண்டும் என்ற அவா ஏற்பட்டதென்றும், அக்காலத்தில் அவரை அவைக்களப் புலவராக நியமித்த சோழமன்னனும் அவரைச் சிறியவயதில் வளர்த்து ஆளாக்கிய சடையப்ப வள்ளலும் வழங்கிய பெரும் தூண்டுதல் காரணமாக, வால்மீகி முனிவர் வடமொழியில் பாடிய இராமாயணத்தை இராமாவதாரம் என்னும் பெயரில் தமிழில் பாடினார் எனவும் வரலாறு உண்டு.

கம்பராமாயணச் சிறப்பு அன்றிலிருந்து இன்று வரை தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் ஒன்று.

தமிழ்மரபு, பண்பாடு, அறக்கோட்பாடுகள் ஆகியன மேன்மையுற கவிச்சிறப்பு, பொருட்சிறப்பு, கற்பனைச் சிறப்பு எனும் இன்னோரன்ன அணிகலன்களுடன் இராமர் சரிதத்தை கம்பர் எழில் காவியமாக்கியதன் மூலம், 'கவிச்சக்கரவர்த்தி கம்பன்' எனப் பெயர் பெற்றவர்.

கம்பர் தமது இராமர்காதையை திருவொற்றியூரில் பாடியதாகவும், அப்போது இராப் பகலாகத் தினமும் எழுநூறு பாடல்கள் பாடியதாகவும் ஒற்றியூர்க்காளி வந்து தீப்பந்தம் பிடிக்குமாறு,

**'ஒற்றியூர் காக்க உறைகின்ற காளியே**
**வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை - பற்றியே**
**நந்தா தெழுதற்கு நல்லிரவின் மாணாக்கர்**
**பிந்தாமற் பந்தம் பிடி'**

என்று பாடியதாகவும் கதைகள் வழங்குகின்றன.

இற்றைவரை கம்பரின் இராமாயண காவியம் கம்பராமாயணமாக, அறங்கூறும் வாழ்வியல் பெட்டகமாக, சுவைக்குந்தோறும் நயம் பெருக்கும் இலக்கிய ஆழியாக மிளிர்ந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்தது.

இரண்டாயிரம் வருடத்திற்கு முற்பட்டதென வழங்கும் வால்மீகியின் இராமசரித படைப்புச் செல்வாக்கினாலும் அதன் பின் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பட்டதெனக் கூறப்படும் கம்பநாடனின் இராமாயண காப்பியத்தின் மீது கொண்ட ஆழ்ந்த ஈர்ப்பினாலும் நுண்மையாகக் கவரப்பட்டதன் விளைவாக அவ்வக் காலத்தில் தத்தம் கல்வி, அறிவு, கவியாற்றல், கற்பனைவளம், எழுத்தாளுமை, சுவைத்திறனுக்கேற்ப இராமகாப்பியம் செய்த புலவர் பெருமக்கள் பலர் என இலக்கிய வரலாறு கூறுவதாகப் பெருமைப்படுவதில் இருந்து இராமகாவியத்தின் சிறப்பு புலனாகும்.

இராமர் கதையைக் காவியமாகப் படைத்தளித்த கவிச்சக்கரவர்த்தி கம்பன் 'ஆசையின்பால் அறையலுற்றேன்!' என்றார்.

என்ன ஆச்சரியம்! இந்தக் கவிபுனை 'ஆசை' வற்றாமல் தொடரும் பொற்புடைத்து எனின் வியக்காதிருக்க முடியுமா? அதற்குப் பிரத்தியட்ச உதாரணமாக நம் கரங்களில் தற்போது கிடைத்திருக்கும் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிப்புத்தீன் அவர்களின் 'மைவண்ணன் இராமகாவியம்' விளங்குகின்றது.

புலவர்மணி M.K. ஷரிப்புத்தீனின் மைந்தரும் வைத்தியக் கலாநிதியும் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தமது சிறப்புமிக்க ஆக்கங்களினால் பெயர் படைத்தவருமான காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிப்புத்தீன் இத்தகையதோர் 'ஆசை'யின் பாற்பட்டு பாடுவதற்கு தகுதியானவர் என்பதே தமிழறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

இவர் இருபத்தாறு நூல்களின் ஆக்க கர்த்தா என்பதும் இவற்றுள் 12 ஆக்கங்கள் காப்பியங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மஹ்ஜபீன் காவியம், புனித பூமியிலே காவியம், ஜின்னஹ் இரு குறுங்காவியங்கள், பண்டாரவன்னியன் காவியம், திருநபி காவியம், தீரன் திப்பு சுல்தான் காவியம், வாத்தியார் மாப்பிள்ளை காவியம், எல்லாள காவியம், நாயனொடு வசனித்த நந்நபி (மூஸா நபி நாயகம்), அன்னை கதீஜாவும் அண்ணலார் குடும்பமும் காவியம் ஆகியவை இவரது காவியப் படைப்புகளாகும்.

இவரது கவிதைத் தொகுதிகளாக முத்துநகை, பாலையில் வசந்தம், பனிமலையின் பூபாளம், திருநபியும் நபிவழியும், வல்லுவம், விமர்சனப் பார்வையில் வாழும் எழில் காவியங்கள் ஆகியன அமைகின்றன.

மேலும், இரு சிறுகதைத் தொகுப்புகளையும் நான்கு சிறுவர் இலக்கிய நூல்களையும் இரு மொழிமாற்றக் கவிதை நூல்களையும் இரு புதின நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

எனவே 'மைவண்ணன் இராமகாவியம்' இவரது பன்னிரண்டாவது காவிய ஆக்கமாக வெளியாகியுள்ளது.

இவர் மைவண்ணனைக் காவியமாக்க கையில் எடுத்ததேன்?.

'நானோர் முஸ்லிம். உருவமில்லா வழிபாடு செய்வோன். என்றன் உயிரான தமிழ் மொழியின் உவத்தல் வேண்டும்' என அவாக் கொண்ட தம்மை கம்பனே கவிபாடத் தூண்டினான் என்கிறார்.

**'கடலெலுங் கம்பநாடன் கவிதையில் காமுற்றோன் நான்**
**படியென்று தானும் முற்றாய்ப் பருகினேன்**
**கவித்துவத்தின் கொடைக் கொண்டான் அவனே என்னைக்**
**கவிபாடத் தூண்டிவிட்டான்**
**படைத்திட விளைந்தேன் இதைப் பாரேற்க வேண்டும் என்றே'**


என்றவாறாக விபரிக்குமிவர், அதைக் கவிதையாக ஆக்கம் செய்த நோக்கம்,

**'தமிழ்க்கவி சுவைப்போரின்று தொகை குன்றிப் போனார் முன்னே**
**அமிழ்தத்தை விரும்பாராகி ஆற்றலும் அற்றே போனார்**
**எமதுடை முதுசொம் தம்மை இழந்தனர்புரிய மாட்டார்**
**எளிதினில் அறிய வென்றே இராமனின் காதை சொன்னேன்'**

என அழகாகக் குறிப்பிடுகிறார்.

அந்நோக்கிற்கேற்ப கவிச்சக்கரவர்த்தி வகுத்த பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்யகாண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம் என்ற காண்டக் கோப்புக்குள் பத்தாயிரத்துக்கும் மேற் பட்ட விருத்தப்பாக்களைக் கொண்டு கம்பர் ஆக்கியளித்த காப்பியத்தினை, அதன் கிளைக் கதையினைத் தவிர்த்து, நேரடி யாக கதையின் முக்கிய நகர்வுகளோடு பொருட்சுவையும் கருத் துச்சுவையும் கவிச்சுவையும் இனிமையும் கொண்டதாக, அதே வேளை வாசகர் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமையும் விறு விறுப்பும் கொண்டதாக ஆயிரத்து முந்நூற்று ஐம்பத்தேழு வெண் பாக்களில் கதையை வழிப்படுத்திச் செல்லும் பாங்கு சிறப் பானது.

கம்ப காவியத்தின் கவிநுட்பங்கள், கற்பனைச் சிறப்பு ஆகியன இற்றைவரை கதையின் கட்டங்கட்டமாக போற்றி ரசிக்கப்படு பவை. அந்தவகையில் அக்காவியத்தின் மேலுற்ற காதலால் பாடிய காப்பியக்கோவின் ஒரிரு கவிதைகளையேனும் ஈண்டுக்




குறிப்பிடுதல் அவசியமானதே.

முதன்முதலாகக் கன்னிமாடத்தில் நின்ற இளவரசி சீதையை மிதிலை நகர் வீதியில் வந்த ஸ்ரீராமன் காண்பதும், இருவரும் கண்ணோடு கண்ணோக்கி தம்மை மறந்து நின்றதுமான காட்சியை கம்பன் தந்த 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்ற பாடல் இனிது புலப்படுத்தி அனுபவிக்க வைக்கும். இதனை காப்பியக்கோ பின்கண்டவாறு விபரிப்பதை ரசிக்கலாம்:

**'கண்டனன் சீதை தன்னைக் காகுத்தன்**
**பிறர்பால் நோக்கான்**
**விண்டன விழிகள் தன்னை வசியஞ் செய் காரணத்தால்**
**கண்டன சீதை கூடக் காண்பவள் கண்கள் தம்மை**
**ஒன்றினை இரண்டும் ஒன்றை ஒன்றிட ஒன்றினாரே'**

**விரிந்தவை இதழ்கள் மட்டே விழிகளும் மலர்ந்த தொன்றி**
**உறைந்தன உருவம் மாறி உளங்களில் ஊன்றி யென்றப்**
**புரிந்தனர் மற்றவர்தம் பூத்ததாம் நினைவையாகும்**
**அறிந்திலார் நடந்த தென்னே அதிசயம் நொடிக்குள் ளாங்கே'**

என்றவாறாக விரிந்து செல்லும் வரிகள் அன்னாரின் கவித்திறனின் ஒரு சிறு துளி மட்டுமே.

தன் ஆருயிர் மைந்தனின் பட்டாபிஷேகச் செய்தியைத் தன் காதல் மனையாளுக்குத் தெரிவிக்கும் பேராவலுடன் கைகேகியின் அரண்மனைக்கு அவளது வஞ்சக நோக்கு அறியாத நிலையில் வந்த தசரதச் சக்கரவர்த்தி, கலைந்த கேசமும் குலைந்த ஆடை அணிகளும் சிதைந்த மலர்க் கோவைகளும் அழிக்கப்பட்ட நெற்றித் திலகக் கோலமுமாய் அவள் நிலத்தில் வீழ்ந்து கிடந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சியடைந்ததை கம்பர் வர்ணிக்கும் வேளை 'நாடக மயில் வீழ்ந்தன்ன' என உவமிக்கும் பாடல் கற்றோர் மனதைக் கொள்ளை கொள்வது. இந்தக் காட்சியை காப்பியக்கோ தமது நோக்கில் இப்படிப் பாடுவதையும் எடுத்துக் காட்டலாம்:

**'மந்தரை சூழ்ச்சியாலே மனம்மாறி வரமி ரண்டைத்**
**தந்திரமாகக் கொள்ளும் துணிவுடன் கோலம் மாறிப்**
**புந்தியில் வடிவுங் கொண்டு பத்தினி கிடந்தாள் பூங்கா**
**சிந்திய வாறாம் பூமி தாங்காத கோல மதே'**
-
**'கைவளை நொறுங்கி யாங்குக் கிடந்தன காற்சிலம்பும்**
**தையலின் உடலம் விட்டுத் தூரத்தே நெறித்துக் காணும்**
**மைவிழிச் சாந்தி ழுந்து மதியிள நெற்றிப் பொட்டைக்**
**கைகொண்டே அழித்த போலும் காரிகை நிலங்கிடந்தாள்'**
-
**'மென்பட்டுச் சேலையோடு மேகலை பின்னக் கூந்தல்**
**பின்னிய மலர்கள் கோதிப் பிய்த்தெறிந் திருப்ப மற்றும்**
**பொன்னணி இருப்பி ழுந்தே புலமெலாம் வீசிக் காண**
**மன்னவன் வரவு நோக்கி மடமகள் நிலங்கிடந்தாள்'**

என வர்ணித்துப் பாடியிருப்பதும் ரசிக்கத் தக்கதே யாம்.

மற்றுமொரு காட்சியை காப்பியக்கோ விபரிக்கும் மாட்சியையும் கூட ஈண்டு சிறிது விபரிக்கலாம். சீதாபிராட்டியின் நிலை என்ன வாயிற்று, அவள் உயிருடன் உள்ளாளா என்றவாறெல்லாம் எண்ணிக் கண்ணீர் சொரியக் காத்திருக்கும் ராமன் முன் சீதை யைத் தேடி இலங்காபுரி சென்ற அனுமன் தோன்றுகிறான்.

சீதா தேவி இருக்கும் திசைநோக்கி தெண்டனிட்டுத் திரும்பி 'கண்டனன் கற்பினுக் கனியைக் கண்களால்' என அவளது தோற் றத்தைக் குறித்து அனுமன் தரும் அரிய விளக்கமாக அமையும் கம்பரின் பாடல் என்றென்றும் நயக்கத்தக்கது.

இக்காட்சியினை காப்பியக்கோ,

**இருப்பிட மடைந்தும் ஏதும் இயம்பிய னாகச் சீதை**
**இருப்பிடம் அனுமன் நோக்கி இருகரங் குவித்து வீழ்ந்து**
**வரித்தனன் வணக்கம் இராமன் வினையது கண்டுமுற்றும்**
**கருத்துடைச் செய்கை இதென் றகத்தினுள் முடிவுகொண்டான்**

எனப் பாடுவதும் அனுபவிக்கத்தக்கது.

இவ்விதமாகக் காப்பியக்கோவின் கவிநுட்பத்தைப் பல இடங்க ளில் சுட்டிக்காட்டமுடியுமெனினும் விரிவஞ்சி நிறுத்திக் கொள்கி றோம்.

'நான் ஓர் முஸ்லிம். உருவமில்லான் வழிபாடு செய்வோன்!' என்று பிறிதொரு மத கலாசாரத்தைத் தொட்டுக்காட்டியபோதும், கம்பன் பாடிநின்ற தமிழ்க் கலாசார பண்பாட்டுடன் எவ்விதத்திலும் மாறுபாடு கொள்ளாமல் இணைந்தே செல்வது இக்கவிஞரது அறிவுத்திறனையும் பரந்துபட்ட உளப்பாங்கினையும் தமிழ் மோகத்தினையும் துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றன.

எனவே, தமிழ் அறிந்த வாசகரின் எளிமையான வாசிப்புக்கு இனிமையானதோர் காப்பியமாக 'மைவண்ணன் இராமகாவியம்' மிளிர்கின்றது.



annaluxmi.rajadurai@thaiveedu.com

# நுவரகம : சமூக பொருளாதார மாற்றங்களும்

# சாதி உறவுகளும்

ஆங்கில மூலம்:
**- ஜயந்த பெரேரா**
தமிழில்:
**- க. சண்முகலிங்கம்**

தாய்வீட்டின் ஜனவரி மாத இதழில் உலர்வலயக் கிராமமான வெவகமவின் சமூக பொருளாதார மாற்றங்கள், சாதி உறவுகள் என்பன பற்றி ஜெயந்த பெரோராவின் ஆய்வு நூலை ஆதாரமாகக் கொண்டு விபரித்தோம். இக்கட்டுரையில் ஈரவலயக் கிராமமான நுவரகம பற்றி ஜெயந்த பெரேரா கூறியிருப்பனவற்றைத் தொகுத்துக் கூறுவோம். New Dimensions of Social Stratification in rural Sri Lanka (இலங்கையின் கிராமப் பகுதிகளின் சமூக அடுக்கமை-வின் புதிய பரிமாணங்கள்) என்ற நூல் தலைப்பு உணர்த்துவது போல், குறித்த நூல் சாதி, வர்க்கம் என்ற இரு பிரதான அம்சங் களையும் உள்ளடக்கிய சமூக அடுக்கமைவு (Social Stratification) பற்றியதாகும். இக்கட்டுரையில் சாதி அடுக்கமைவு பற்றியே பிர-தான கவனம் செலுத்தப்படுகிறது. வர்க்க அடுக்கமைவு பற்றி சாதியோடு தொடர்புறுத்திச் சில குறிப்புக்கள் மட்டும் கூறப்படும் என்பதையும் முதலில் சுட்டிக் காட்டுதல் வேண்டும்.

நுவரகம கண்டி நகரில் இருந்து 17 மைல் தொலைவில் உள்ளது. கண்டி இராச்சிய காலத்தில் கண்டி மன்னனின் நேரடிக் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கிய, திசாவ பகுதிகளுள் ஒன்றான பிலிமத் தலாவ ரட்டேமகாத்தயா பிரிவிற்குள் இக்கிராமம் அமைந்திருந் தது. அவ்வகையில் தூரத்தே தனிமைப்பட்டிருந்த வெவகம போன்ற நுவரகலாவியக் கிராமங்களில் இருந்து வேறுபட்ட சமூகப் பண்பாட்டு நிலைமைகள் இங்கு நிலவின் இதன் காலநிலை, தரைத்தோற்றம் போன்ற விசேட இயல்புகளும் பொருளாதார முறையும் வேறுபட்ட தன்மைகளை வெளிப்படுத்தின.

1900 ஆண்டு வரை நுவரகம மக்கள் நெற்செய்கையைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்தனர். நெல் மகாபோகம், சிறுபோகம் என்ற இரு பருவங்களில் பயிரிடப்பட்டது. நெற்செய்கையோடு, சூழவுள்ள காடுகளில் மிளகு, வாழை போன்ற பயிர்களை சேனைப்பயிர்ச் செய்கை முறையில் நுவரகம விவசாயிகள் பயிரிட் டனர். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் நுவரகமவைச் சூழவுள்ள காட்டுநிலம் முடிக்குரிய காணியாக அரசின் உடை மையாக்கப்பட்டது. பின்னர் இக்காணிகள் 25 ஏக்கர் அளவுடைய பெரும் நிலத்துண்டுகளாக தனியார் முதலாளிகளுக்கு விற்கப்பட் டன. காடுகளாக இருந்த காணிகளில் ரப்பர் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. 1930களில் நுவரகம மக்களில் பலர் ரப்பர் தோட்டங்களில் கூலித்தொழிலாளர்களாய் வேலை செய்தனர். 20ம் நூற்றாண்டின் பொருளாதார மாற்றங்கள் நுவரகமவின் சமூகக் கட்டமைப்பிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின.

## 1938இல் நுவரகம:

1902, 1938 ஆகிய இரு ஆண்டுகளுக்கான புள்ளிவிபரங்களின் ஒப்பீட்டின் அடிப்படையில் 1938ல் நுவரகமவின் நெற்காணிகளின் உடைமை, காணி உடைமையின் அடிப்படையிலான சமூக உறவு கள் பற்றிய முக்கிய விடயங்களை அறிந்துகொள்ளலாம். 36 ஆண்டுகால இடைவெளியில் சிற்றுடைமை விவசாயிகளின் வீதா சாரம் அதிகரித்தது. நெற்காணிகள் பெருநில உடைமையாளர்கள் சிலரின் கையில் குவிந்தன. பலர் தம் காணிகளை பெருநில உடைமையாளர்களிற்கு விற்று கூலித் தொழிலாளர்களாயினர். சூழவுள்ள காடுகளில் ரப்பர் தோட்டங்கள் அமைக்கப்பட்டமை யால் நுவரகமவின் நெற்காணிகளின் அளவு ஏறக்குறைய மாற்றம-டையாமலே இருந்தது.

**அட்டவணை 1**
நுவரகமவில் நெற்காணி உடைமையாளர்கள்:
நிலத்தின் அளவின் படியான வகைப்பாடு

| நிலத்தின் அளவு (ஏக்கர்களில்) | நில உடைமை நில உடைமையாளர் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | 1902 | % | 1983 | % |
| ¼ற்கு கீழ் | 02 | 05 | 08 | 15 |
| ¼ - ½ | 05 | 10 | 14 | 26 |
| ½ - 1 | 17 | 35 | 14 | 26 |
| 1 – 2 | 19 | 40 | 10 | 18 |
| 2 – 5 | 05 | 10 | 06 | 11 |
| 5 அல்லது அதற்கும் மேல் | 00 | 00 | 02 | 04 |
| மொத்தம் | 48 | 100 | 54 | 100 |


மேலே தரப்பட்ட அட்டவணை நெற்காணியின் உடைமை சிலர் கைகளில் குவிவதனால் சிற்றுடைமையாளர்கள், நில உடைமை யாளர்கள் என்ற தெளிவான பிரிவு, முன்னரைவிட வெளிப்பட்டுத் தெரிவதைக் காட்டுகிறது. நிலமற்றோரான கூலித்தொழிலாளர் எண் ணிக்கையும் அதிகரித்தது. ஆயினும் அது அட்டவணையில் காட் டப்படவில்லை நுவரகமவின் உயர் நிலக் காணிகள் 250 ஏக்கர் வரை வெளியாருக்கு விற்கப்பட்டன. களுத்துறையைச் சேர்ந்த சிங்களவரான வியாபாரி ஒருவரும், மூன்று முஸ்லிம் வியாபாரிக ளும் நுவரகமவின் நிலங்களில் பெரும்பங்கைக் கொள்வனவு செய்தனர். நுவரகம மக்களில் எவரும் இக்காணிகளில் முதலீடு செய்யக்கூடிய நிலையில் இருக்கவில்லை.

## நுவரகமவின் சாதிக் கட்டமைப்பு:

பல படித்தரங்களைக் கொண்ட கண்டியின் மரபுவழிச் சமூகத்தின் சமூக ஒழுங்கமைப்பின் அடிப்படைத் தத்துவமாக சாதி விளங்கி யது. பிறப்பின் அடிப்படையிலான அந்தஸ்துக்கு ஏற்ப அவரவர்க் குரிய கடமைகள் எவை என விதிக்கப்பட்டிருந்தன. இக்கடமைகள் பொருளாதார நடவடிக்கைகள், சடங்கியல் செயற்பாடுகள் என்ற இரண்டு அம்சங்களையும் உள்ளடக்கியவை. கொவிகம (உழவர் கள்), வகும்புற (கருப்பட்டி காய்ச்சுவோர்), பெறவ (மேளமடிப்

போர்), ஆசாரி (இரும்பு வேலை செய்வோர்) என வெவ்வேறு சாதிகள் நுவரகமவில் இருந்தன.

கொவிகம சாதி மரபுவழிச் சமூகத்தில் உயர்நிலையில் வைக்கப் பட்டிருந்தது. எண்ணிக்கையில் கூடிய தொகையினரான கொவிகம, மேலாதிக்கச் சாதியுமாக விளங்கியது. கண்டி இராச்சியத்தின் நிர் வாகப் பதவிகள் கொவிகமப் பிரபுக்குலத்தின் தனியுரிமையாக இருந்தது. அமைச்சர்கள், பிராந்திய நிர்வாக அலகுகளின் திசாவ என்னும் உயர் நிர்வாகிகள் என்போர் முதல் கிராமங்களின் தலை மைக்காரன் வரையான பதவிகள் கொவிகம சாதியினருக்கு வழங் கப்பட்டன. ஆயினும், கொவிகம சாதியின் பெரும்பான்மையினர்




விவசாயிகளாகவே இருந்தனர். போரின்போது அரசனின் படையில் சேர்ந்து போர் புரியும் கடமையும் இவர்களுக்கு இருந்தது.

கண்டியின் கொவிகம சாதி பல உபபிரிவுகளைக் கொண்டதாக இருந்தது. ரதல என்னும் பிரிவினர் நிர்வாகப் பதவிகளை வகித்த தோடு, பெரும் நில உடைமையாளர்களாகவும் இருந்தனர். நில உடைமையாளர்களான ரதல பிரிவினருக்கு நிலத்தில் இறங்கி உழைக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. கொவிகமவின் இரண்டாவது உபபிரிவு 'கொவிவன்ச'என அழைக்கப்பட்டது. கொவிவன்ச தமது சொந்த நிலத்தில் பயிரிடுபவர்களாக இருந்த னர். கிராம மட்டத்தின் நிர்வாகப் பதவிகள் சில 'கொவிவன்ச' பிரிவினருக்கும் வழங்கப்பட்டிருந்தது. காணிகளற்றவர்களான விவ சாயிகள் மூன்றாவது பிரிவினர்களாவர். நிலமற்றவர்களாயினும் நிலத்தோடு பிணைக்கப்பட்டவர்களாக மூன்றாவது பிரிவினர் இருந் தனர். கொவிகம சாதிகளின் உபபிரிவுகள், செய்யும் தொழில் அல்லது பயிர்ச்செய்கை நிலத்தோடு உள்ள தொடர்பு என்ற அடிப்படையிலேயே வகுக்கப்பட்டிருந்தன.

1930 வரை நுவரகமவில் ரதல குடும்பங்கள் எவையும் இருக்க வில்லை. இக்கிராமத்தின் பெரும்பான்மையினர் கொவிகமவின் இரண்டாவது உபபிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். 'ராலால' என்ற பெயருடைய வம்ச பரம்பரையினரான இவர்கள் கண்டி ராச்சிய காலத்தில் கீழ்நிலை நிர்வாகப் பதவிகளில் இருந்தோரின் வம்சாவளியினராவர். 1930 களில் ராலால் குடும்பங்களில் நான்கு குழுக்கள் இருந்தன. அவற்றுள் நாலாவது குழுவான முறுதன் ராலால குழு கொவிகம சாதியின் மூன்றாவது உபபிரிவைச் சேர்ந் ததாக விளங்கியது. இக்குழுவினர் மதிலிய கோவிலிற்கு உணவு சமைத்துக் கொடுக்கும் வேலையைச் செய்தனர். மதிலிய கோவி லின் நிலங்களில் பயிரிட்டும் வந்தனர். இதனால் ஏனைய மூன்று ராலால குழுக்களை விட அந்தஸ்தில் தாழ்ந்தவர்களாகக் கருதப் பட்டனர்.

நுவரகமவின் சாதிப் படிநிலையில் அடுத்த படியில் இருந்தோர் வகும்புர சாதியினராவர். பண்டக்கறலாகே, ஹலவதுவே கெதற என்ற இருவம்சப் பிரிவுகள் வகும்புரவில் இருந்தன. பலகாரங்கள், கருப்பட்டி போன்ற உணவுகளைத் தயாரித்தல் இச்சாதியினரின் மரவுவழிக் கடமையாகும். 'பிங்கோ' எனப்படும் வெகுமதிப் பெட்டி களை கொவிகம சாதியினர் வழிநடைப் பயணமாகக் கொண்டு செல்லும் போது வகும்புர சாதி ஆட்கள் அப்பெட்டிகளைச் சுமந்து செல்வர். 19ம், 20ம் நூற்றாண்டுகளில் வகும்புரவில் பெரும்பான்மையினர் மதிலிய கோவிலின் நிலங்களில் குத்தகைக் குப் பயிரிடுவோராக இருந்தனர்.

1930களில் ஆசாரி குடும்பங்கள் இரண்டும், பெறவ குடும்பங்கள் இரண்டும் நுவரகமவில் வாழ்ந்தன. ஆசாரி குடும்பங்கள் பில்லி, சூனியம், மந்திர தந்திரம், சோதிடம் என்பனவற்றில் சிறந்து விளங் கியதோடு இரும்பு வேலையைச்(கொல்லர் தொழில்) செய்தனர். பெறவ குடும்பங்களைச் சேர்ந்தோர் மதிலிய கோவிலில் சமயச் சடங்குகளின்போது மேளம் அடிக்கும் தொழிலைச் செய்தனர். இச்சேவைக் கடமைக்கு ஈடாக மதிலிய கோவிலின் நிலங்களில் பயிரிடும் குத்தகை உரிமை இக்குடும்பங்களிற்கு இருந்தது. ஈ.ஆர். லீச் என்ற மானிடவியலாளர் கூற்று கண்டியின் சாதி முறையை விளக்குவதாக உள்ளது.

'சலவைத் தொழில் செய்வோர் சடங்கியல் சலவைத் தொழிலைச் செய்கின்றனர். மேளமடிப்போர் சமயம் சார் மேளமடித்தல் வேலை செய்வோராவர். கொவிகம, சலவைத் தொழில் செய்வோர் மேள மடிப்போர் ஆகிய எல்லாச் சாதியினரும் காணிகளில் பயிரிடும் விவசாயிகளே ஆவர். கடந்த காலத்திலும் இன்றும் இதேநிலை தான் உள்ளது.' (ஈ.ஆர். லீச், 1961).

கொவிகம அல்லாத சாதிகளும் விவசாயத் தொழிலைச் செய்தன-வேனும், நுவகமவில் 1930களில் கொவிகம அல்லாதோருக்கு காணிகள் உடைமையாக இருக்கவில்லை. அவர்கள் மதிலிய கோவிலின் நிலங்களில் அல்லது கொவிகம நில உடைமை யாளர்களின் நிலங்களில் குத்தகைக்குப் பயிர்செய்வோராக இருந் தனர்.

நுவரகம கிராமம் இரு குக்கிராமங்களைக் கொண்டதாக இருந் தது. இகலகம, பஹலகம என இவை அழைக்கப்பட்டன. முறுதன் ரால குடும்பங்களைத் தவிர்ந்த பிற எல்லாக் கொவிகம குடும்பங் களும் இகலகமவில் வாழ்ந்தன. வயல் நிலம் ஒன்று இவ்விரு குக்கிராமங்களையும் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்தது. கொவிகம நில உடைமையாளர்களிற்கு கொவிகம அல்லாதவர் கள் பலவித வேலைகளைச் செய்ய வேண்டிய கடப்பாடு உடை யவர்களாய் இருந்தனர். நில உடைமையாளர்களின் பரிவாரக் குழுக்களாகச் செயற்பட்ட கொவிகம அல்லாதோர் சடங்குகள், வைபவங்கள் என்பன நடைபெறும் போது சாதிச் சேவைகளை வழங்கினர்.

அவர்களின் மனைவிமாரும் பிள்ளைகளும் கொவிகம நில உடை மையாளர்களின் வீடுகளில் வீட்டுப் பணிகளைச் செய்தனர்.

## தெகிகம, ஹொதகம ராலால குடும்பங்கள்:

நுவரகமவில் தெகிகம, ஹொதகம என்ற இரு குடும்பங்கள் பெரும் நில உடைமையாளர் குடும்பங்களாக இருந்தன. சாதி

அடுக்கமைவின் உயர் நிலையில் இருந்த இக்குடும்பங்களிற்குப் போட்டியாக அமைந்த இரு ரதல குடும்பங்கள் 1930ல் நுவரகமவில் இகலகம பகுதியில் குடியேறின. கம்பளை வர்த்தகர் ஒருவரின் ரப்பர் தோட்டத்தின் முகாமையாளர்களாக நுவரகமவிற்கு வந்து சேர்ந்த ரதல குடும்பங்கள், வறியவர்களான இரு ராலால குடும்பங்களின் காணிகளை விலைக்குக் கொள்வனவு செய்து அவற்றில் குடியேறினர். 18ம் நூற்றாண்டில் கண்டி அரசனின் படை அதிகாரிகளாக இருந்த இருவரின் வழித்தோன்றல்களே தாம் என ரதலர் கூறினர். நுவரகமவின் ராலால குடும்பங்களில் சில, தம் மூதாதையர்களின் கீழ் தாழ்ந்த தரப் பதவிகளில் சேவை செய்தனரென்றும், தம் குடும்பங்களிடமிருந்து பல நன்மைகளைப் பெற்றனர் என்றும் ரதலர் பெருமை பேசினர். நுவரகமவின் கொவிகம அல்லாத குடும்பத்தவர்கள், குறிப்பாக ரப்பர் தோட்டங்களில் கூலித்தொழிலாளர்களாக வேலை செய்தோர் ரதல குடும்பத்தவர்களை கிராமத்தின் பெருமதிப்புக்குரிய மனிதராக ஏற்று மரியாதை செலுத்தினர். ரதல ஆண்களை 'நிலமே' என்றும் ரதல பெண்களை 'மெனிக்கே' என்றும் மரியாதைப் பெயர்களால் அழைத்தனர். ரதலவின் மேலாண்மை மனப்பாங்கும் நடத்தையும் தெகிகம, ஹொதகம நில உடைமையாளர்களுக்கு எரிச்சலை மூட்டியது. 1930களில் ரதல குடும்பத்து ஆண் ஒருவருக்கு தெகிகம குடும்பத்து நில உடைமையாளர் தமது மகளைத் திருமணம் செய்து வைக்க விரும்பிச் சம்மதம் கேட்டார். ரதல குடும்பம் சாதி அந்தஸ்தில் கீழ்நிலையில் உள்ள தெகிகம ராலாலவுடன் திருமண உறவு வைத்துக்கொள்ள மறுப்புத் தெரிவித்தது. இச்சம்பவம் இரு பகுதியாருக்குமிடையே போட்டியை அதிகரிக்கச் செய்தது. 1930களில் நுவரகமவின் சமூக உறவுகளில் சமூக மேலாதிக்கத்திற்கான இப்போட்டி முக்கிய அம்சமாக இருந்தது.

## நுவரகமவின் செல்வாக்குள்ள இரண்டு குடும்பங்கள்:

தெகிகம வம்சத்தில் தோன்றிய டி.ஆர். கிரிபண்டா என்பவர் நுவரகமவில் வேல்விதான பதவியில் இருந்தவர். அவருக்கு சுது பண்டா, களுபண்டா, புஞ்சிபண்டா என மூன்று புதல்வர்கள் இருந்தனர். 1935ல் களுபண்டா தந்தையின் வேல்விதான பதவியில் நியமனம் பெற்றார். அவரிடம் 7.4 ஏக்கர் நெற்காணி உடைமையாக இருந்தது. அவரிடம் அப்பகுதியின் மாடுகளில் பெரும் பங்கு சொந்தமாகவும் இருந்தது. அக்காலத்தில் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்காவின் ஆதரவாளராக களுபண்டா விளங்கினார். அவருடைய பிள்ளைகள் யாவரும் கல்வி கற்று வெண்சட்டை உத்தியோகங்களைப் பெற்றனர். களுபண்டா வேல் விதான பதவியில் இருந்தபடியால் அரசாங்க உத்தியோகத்தர்கள் அவரது வளவுவ வீட்டிற்கு வந்து செல்வர். கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் களுபண்டா பதவி வகித்தார்.

டி.ஆர். கிரிபண்டாவின் இன்னொரு மகன் சுதுபண்டா 1930களில் ஆசிரியராக பணிபுரிந்தார். அருகில் உள்ள குறுந்தோட்ட என்ற பெயருடைய பட்டினத்தில் உள்ள பாடசாலையில் ஆசிரியராகவிருந்த சுதுபண்டா நுவரகமவில் மட்டுமன்றி அயல் கிராமங்களிலும் செல்வாக்கு உடையவராக இருந்தார். அவருக்கு 2.5 ஏக்கர் நெற்காணி உடைமையாக இருந்தது. இக்காணியில் 1.6 ஏக்கர் நுவரகமவிற்குள் இருந்தது. இரண்டு குத்தகை விவசாயிகள் அவரது காணியை பங்குக் குத்தகை (அந்தே குத்தகை) முறையில் பயிரிட்டனர்.

மூன்றாவது மகனான புஞ்சிபண்டா குறுந்தோட்ட பட்டினத்து வர்த்தகராக இருந்தார். அவர் கராம்பு, வெற்றிலை போன்ற வர்த்தகப் பயிர்களின் வியாபாரத்தில் ஈடுபட்டார். அயலில் உள்ள மல்கம் என்ற கிராமத்தில் அவருக்கு 7 ஏக்கர் காணி உடைமையாக இருந்தது. நான்கு குத்தகை விவசாயிகள் பங்குக் குத்தகை முறையில் அக்காணிகளைப் பயிரிட்டனர்.

டி.ஆர். கிரிபண்டாவின் ஆண்மக்கள் மூவரும் மேற்குறித்தவாறு சமூகப் படிநிலையில் உயர்ச்சி பெற்றனர். அவரின் ஒரே மகளான சுமண என்பவர் தீக விவாக முறையில் கம்பளையில் உள்ள குத்தகை விவசாயியான கிராமவாசிக்கு மணம் முடித்துக் கொடுக்கப்பட்டார்.

அந்தஸ்தில் தாழ்ந்து போன சுமணவுடன் மூன்று சகோதரர்களும் உறவைத் துண்டித்தனர். செல்வாக்குள்ள இம்மூவரும் ஒன்றிணைந்து 'தெகிகம பெலன்டிய' என்ற அந்தஸ்துக் குழுவாக உயர்ச்சி பெற்றனர். சங்கரஹித்த தேரோ என்ற பெயருடையவரும் படித்த அறிவாளியுமான புத்தபிக்கு நுவரகம கிராமத்தின் புத்த கோவிலின் குருவாக இருந்தார். அவர் தெகிகம பெலன்டியவின் உறுப்பினர் அல்லாவிடினும் அவர் 'தெகிகம ஹமுது ஹவோ' என அழைக்கப்பட்டார். தெகிகம பெலன்டியவினர் அவரது ஆலோசனையைப் பெற்று நடந்தனர்.

நுவரகம கிராமத்தில் இன்னொரு செல்வாக்குள்ள ஹொதகம பெலன்டிய 1930களில் உயர்ச்சி பெற்றிருந்தது. ஜி.ஆர். ரத்னாயக்க என்பவரின் மகன் சித்துபண்டா 1938ல் நுவரகம பிரிவின் கிராமத் தலைமைகாரனாக நியமிக்கப்பட்டார். நுவரகமவிற்கு அருகே உள்ள கிராமத்தில் அவருக்கு நான்கு ஏக்கர் நெற்காணி உடைமையாக இருந்தது. அவரின் காணிகளை இரண்டு ஆசாரி குடும்பங்கள் குத்தகைக்குப் பயிரிட்டன. சித்து பண்டா கிராமத் தலைமைக்காரனான காரணத்தால் கிராமத்திற்கு வரும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அவரது வளவுவ வீட்டில் தங்கிச் செல்வர். அங்கு வரும் உத்தியோகத்தர்களுக்கு ஆடம்பரமாக விருந்து வைத்துக் கௌரவிப்பார். சித்துபண்டா வீட்டு விருந்து வைபவங்களின்போது அவரது குத்தகைக்காரர்களின் குடும்பங்கள் சமையல் வேலைகளைச் செய்து உதவுவர்.

ரத்னாயக்கவின் இன்னொரு மகன் ரத்துபண்டா ஐந்து ஏக்கர் நெற்காணியின் உடைமையாளராவார். இவற்றில் மூன்று ஏக்கர் நுவரகமவிலும் இரண்டு ஏக்கர் அயல் கிராமத்திலும் இருந்தன. நான்கு குத்தகை விவசாயிகள் அவரது காணிகளைப் பயிரிட்டு வந்தனர். அவரது இரண்டு புதல்வர்கள் கேகாலையில் உள்ள பிரபல பாடசாலையில் கல்வி கற்றபின் அரசாங்க சேவையில் எழுதுவினைஞராகக் கடமையாற்றினர். ரத்னாயக்கவின் மூன்றாவது புதல்வரான ஹீன்பண்டா மதிலிய கோவிலின் பிரதான காப்பாளராக இருந்தார். கோவிலின் நம்பிக்கைப் பொறுப்பாளர். சபையின் சார்பில் மதிலிய கோவில் நிலங்களின் குத்தகைக்காரர்களின் மேற்பார்வையும் நிர்வாகமும் ஹீன்பண்டாவின் பொறுப்பில் இருந்தன.

தெகிகம பெலன்டிய, ஹொதகம பெலன்டிய என்ற இரு அந்தஸ்துக் குடும்பங்கள் மிகுந்த செல்வாக்குள்ள குடும்பங்களாக உயர்ச்சி பெற்றதை மேலே விபரித்தோம்.

பெலன்டிய குடும்பங்களின் உயர்ச்சிக்குப் பணம், நில உடைமை, உத்தியோகம், அரசாங்க அதிகாரிகளின் தொடர்பு ஆகியன உதவின. 1940 வரை ரதல குடும்பங்கள் இரண்டும் நுவரகமவில் நெற்காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு தெகிகம, ஹொதகம குடும்பங்கள் இடம் கொடுக்கவில்லை. இதனால் இரு ரதல குடும்பங்களும் நிலமற்ற ரதலர்களாக (இடம் நத்தி ரதல) இருந்தன. நெற்காணி உடைமை அற்றவர்களான ரதல குடும்பங்களால் கிராமத்தவர் மீது செல்வாக்குச் செலுத்த முடியவில்லை. நுவரகமவின் பிரத்தியேகமான வாழ்க்கைமுறைக்குள் தம் அந்தஸ்தை நிலைநிறுத்த முடியவில்லை. அப்பிராந்தியத்தின் ரதல பிரபு வம்சத்தின் தொடர்புகளையும் 1938ல் இவர்கள் இழந்தனர். காலப் போக்கில் ராலால குடும்பங்களுடன் திருமண உறவுகள் மூலம் கலப்புற்றனர். ஆயின் தெகிகம பெலன்டிய, ஹொதகம பெலன்டிய என்ற இரண்டு பெலன்டியக்களும் தமது அயராத உழைப்பால் நுவரகமவின் சமூக அடுக்கமைவில் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்தன.

## பெலன்டிய அந்தஸ்துக் குழுக்கள்:

19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமூக பொருளாதார மாற்றங்களின் விளைவாக பெலன்டிய என்னும் அந்தஸ்துக் குழுக்கள் (Status Groups) உருவாக்கம் பெற்றதை மானிடவியலாளர் கணநாத் ஒபயசேகர 1967ம் ஆண்டில் வெளியிடப்பட்ட Land Tenure in Village Ceylon என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின்

தென் மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மூன்று உயர் குடும்பங்கள் ஐந்து தலைமுறைக்கும் மேலாக தமக்குள் திருமண உறவுகளை வைத்துக்கொண்டு,

- காணிகளின் உடைமைகளைப் பெருக்குதல்.
- அரசாங்க உத்தியோகப் பதவிகளைப் பெறுதல்.
- அந்தஸ்தில் தாழ்ந்து போன உறவுக் குடும்பங்களுடன் தொடர் புகளை அறுத்தல்.

என்ற வழிமுறைகள் மூலம் உயர்தகுதியுடைய ‘பெலன்டியா’ குடும்பங்களாக உருவாகியதை அவர் குறிப்பிட்டுக் காட்டினார். ஜயந்த பெரேராவின் நூலில் நுவரகமவின் பெலன்டிய உருவாக் கம் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. கள ஆய்வுத் தகவல் களைக் கொண்டு சிறப்பான முறையில் இது விபரிக்கப்பட்டுள் ளது.

## பெலன்டிய குடும்பங்களின் வாழ்க்கைப்பாங்கும் நடத்தையும்:

தெகிகம, ஹொதகம என்ற இரண்டு பெலன்டியக்களும் கிராமத் தின் ஏனைய உறுப்பினர்களுடன் தமது உறவுகளையும் இடையூ டாட்டத்தையும் மாற்றி அமைத்தனர். தமது வீடுகளில் நடைபெறும் திருமணம் போன்ற வைபவங்களுக்குப் பணக்காரர்களான உறவி னர்களையும், கிராமத்துக்கு வருகை தரும் பல்வேறு அரசாங்க உத்தியோகத்தர்களையும் மட்டும் அழைப்பதை வழக்கமாகக் கொண்டனர். அத்தகைய வைபவங்களில் ஆடம்பரமான விருந்து பசாரம் இடம்பெறும். வைன், விஸ்கி போன்ற குடிவகைகளையும் விருந்தினர்களுக்குப் பரிமாறினர். பெலன்டிய குடும்பங்களின் வீடு கள் ‘வளவுவ’ என அழைக்கப்பட்டன. அங்கு எல்லோரும் போக லாம். யாவருக்கும் உணவும் உண்பதற்குக் கிடைக்கும். ஆனால் விருந்தின்போது, எங்கே ஒருவர் இருக்கலாம். எப்படி இருக்கலாம் என்பனபற்றி கடுமையான விதிமுறைகள் இருக்கும். வளவுவ வீட்டில் தாழ்த்தப்பட்ட சாதியினர் சமையல் அறையில் இருந்து உணவை உண்ணலாம். வறிய கொய்கம சாதி ஆட்கள் வீட்டின் பின்புறத்தில் உள்ள விறாந்தையில் வாங்கு ஒன்றில் இருந்து உணவு உண்ணலாம். பெலன்டியவின் உறுப்பினராக உள்ள பணக்காரரும், அரசாங்க உத்தியோகத்தர்களும் முன்விறாந்தை யில் உள்ள கைப்பிடியுள்ள கதிரையில் அமர்ந்திருப்பர். என்ன வைபவம் நிகழ்கிறதோ அதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்குக் குடிவகையும் உணவுகளும் வழங்கப்படும்.

சாதாரண நாட்களில் வளவுவவிற்கு வருவோரிற்கு அவரவர் அந்தஸ்துக்கு ஏற்றபடி இருக்கைகள் வழங்கப்படும். தாழ்ந்த சாதியினருக்கு நிலத்தில் இருப்பதற்குப் பாய் கொடுக்கப்படும். பெலன்டிய உறுப்பினர் அல்லாத கொய்கம வாங்கில் இருந்து கொள்ளலாம். பெலன்டிய உறவினர்களும் அரசாங்க உத்தி-யோகத்தர்களும் கதிரைகளில் அமர்ந்து உரையாடுவர்.

நுவரகமவின் பெலன்டிய உறுப்பினர்கள் 20ம் நூற்றாண்டில் சாதி அந்தஸ்திலும், சமூக அந்தஸ்திலும் உயர்ந்து, சமூகப்படி நிலை யில் மேல்நோக்கிச் சென்றவர்கள். அவர்களிடம் சாதித்திமிரும் பகட்டும் படிப்படியாகச் சேர்ந்து கொண்டன. கிராமத்தவர்கள் நிலப் பிரபுக்களிற்கு கொடுக்கும் மரியாதைச் சொற்களால் தம்மை அழைப்பதை ஒழுக்க விதியாக ஆக்கிவிட்டனர். தமது குடும்பங்க ளின் ஆண்களை ‘நிலமே’ எனவும், பெண்களை ‘மெனிக்கே’ என வும் விளித்துப் பேசும் வழக்கத்தை ஏற்படுத்தி விட்டனர். முன்பு பிறரைப் போன்று நிலத்தில் இறங்கி உடல் உழைப்பில் ஈடுபட் டவர்கள் இன்று பிறரைக் கொண்டு விவசாய வேலைகளைச் செய் விக்கின்றனர். நுவரகமவின் குத்தகை விவசாயிகளும் கூலி உழைப்பாளர்களும் பெலன்டிய குடும்பங்களின் காணிகளில் உடல் உழைப்பை வழங்கி உற்பத்தியில் ஈடுபடுகின்றனர்.

பெலன்டிய குடும்பத்துப் பிள்ளைகள், பெலன்டிய அல்லாத குடும்பங்களின் பிள்ளைகளுடன் சேருவதில்லை. நுவரகமவின் இரு பெலன்டியக்களும் தம் பிள்ளைகளை கம்பளையில் உள்ள பாடசாலைக்கு அனுப்பினர்.


பெலன்டிய குடும்பத்தவர்களுக்கு கிராமத்திற்குள் உறவாடுவதற் குத் தகுதியுடையவர்கள் இல்லாதபடியால் வெளியிடங்களில் உள்ள பணக்கார உறவினர்களுடனும், நண்பர்களுடனும் உறவுக ளைப் பேணி வருகின்றனர். இதன் மூலம் தமது சமூக அந் தஸ்தை உயர்த்திக் கொள்ளவும் முயற்சிக்கின்றனர். வெளி இடங் களில் உள்ள உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்கும் போய் உறவுகளைப் பேணுகின்றனர். அவ்வாறு செல்லும் போது வகும் புர சாதி வேலையாட்கள் பெலன்டியலில் அன்பளிப்புப் பெட்டிக ளைச் (பிங்கோ) சுமந்து செல்வர். பெலன்டிய திருமண உறவுகள் மூலம் தம் பலத்தை மேம்படுத்தினர். தெகிகம பெலன்டியவின் பெண் ஒருவர் நுவரகமவில் இருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றின் உயர் குடிப்பிறப்பாளர் குடும்பத்து ஆண் ஒருவரைத் திருமணம் செய்தார். பின்னர் இவர் நுவரகம பிரிவின் கிராமத் தலைமைக்காரனாக நியமனம் பெற்றார்.

## முடிவுரை:

ஜெயந்த பெரேராவின் நூலில் வெவகம, நுவரகம ஆகிய இரு கிராமங்களையும் பற்றிய ஒப்பீடு சுவாரசியமான முறையில் விப ரிக்கப்பட்டுள்ளது. வெளியாரின் வருகை மூலம் இரு சமூகங் களிலும் ஏற்படும் தாக்கங்களும் சாதி உறவுகளின் மாற்றமும் ஒப் பிட்டு அலசப்பட்டுள்ளன. நுவரகலாவியப் பகுதியின் ‘வரிக’ (Variga) முறை, கண்டியின் நுவரகமவின் ‘பெலன்டிய’ உருவாக் கம் என்பன தமிழ் வாசகர்கள் அறிந்திராத அல்லது தமிழில் எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகளில் பேசப்படாத புதிய விடயங் களாகும்.



shanmugalingam@thaiveedu.com



# தேநீர்: முரண்களின் கலவை

- தேவகாந்தன்

கவிதையின் ஊற்று பற்றிய, கவிதை எதுவென்பது பற்றிய, அதன் தரம் தேரும் விமர்சனம் பற்றிய, ரசத்தைக் கண்டடையும் வழிகள் பற்றிய உசாவலானது கவிதையினளவான பழைமை வாய்ந்த தெனினும், புதிய உணர்வானுபவங்களின் மேலான அறிகைகளால் பழைய முடிவுகளின் சிதைவும், புதிய பரிமாணங்களின் தோற்றமும் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. ஆயினும் கவிதை வாசிப்பின் காலமும், மனோநிலையும் எந்த கலா ஊடகத்துக்கும்போல் கவிதைக்கும் பொதுவான அளவைகளென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லையென்று தோன்றுகிறது.

எதுபற்றியும் கவிதை எழுகிறது. புல்பற்றி, மரம்பற்றி, மேகம்பற்றி, பிரபஞ்சம்பற்றி, மனிதன்பற்றி, மனித உறவுகள்பற்றி, இன்ப துன்பங்கள்பற்றி, வாழ்வும் மரணமும்பற்றியென அது அடக்கிக் கொண்டிராத பேசுபொருள் இல்லை. செய்யுளின் இலக்கணம் மீறப்படத் தொடங்கிய காலத்திலிருந்து இப்பொருள்கள் முதன்மை பெறுவதைக் காணமுடியும். கு.ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மணி, ஞானக்கூத்தன், பிரமிள், பசுவய்யா போன்றோரின் கவிதைகளின் உன்னிப்பு ஒரு வாசகரை மேற்கண்ட முடிவில்தான் கொண்டுவந்து சேர்க்கும்.

எனவே தேநீர்பற்றியும், கோப்பிபற்றியும், அவற்றின் சுவைப் பரவசத்தில் விரியும் உரையாடல்கள் முகிழ்த்தெழும் இணைவிழைச்சுச் சுகங்கள் இழப்புகள் பற்றியுமான தனி மனித அவஸ்தைகள் கவிதைகளாய் தமிழில் தோன்றுவதற்கு முன்னதாகவே மேற்கின் கவிதையுலகில் அவை பாடுபொருள்களாய் அமைந்துவிட்டன. Poetry in Motion: The Coffee Table Book (By Howard S. Milnar Anapolsky), Collective Works of the Sweet Tea Poetry Circle, A Cot Cup of Tea (Poetry Collection by Saeedeh SH) போன்ற ஆங்கிலக் கவிதைத் தொகுப்புகளை உதாரணத்திற்குச் சுட்டலாம்.

நரம்பூக்கிகளான தேநீர் மற்றும் கோப்பி போன்றனவற்றின் அருந்துநிலைக் காலங்களும், பகிரும் விஷயங்களும், விதங்களும் அச்சொட்டாய் மேற்கில்போல் கிழக்கில் இல்லையெனினும், ஒரு கலாச்சாரமாய் அவை இருக்கவே செய்கின்றன. ஆயினும் வேறொரு குணமும் நிறமும் கொண்டவையாய் அவை. அதை இங்கே அழுத்தமாய்ச் சொல்லவேண்டும். கிழக்கின் பொருளாதார நிலையின் சமமின்மையால் தேநீர் அல்லது கோப்பி ஒரு தளத்தினரால் ஒருவிதமாய்க் காணப்படுகையில், மத்தியதர மேலடுக்கினரால் அது இன்னொரு விதமாய்ப் பார்க்கப்படுகிறது. உழைப்பின் சமூகநிலை வேறுபாடுகளுக்கிணைய அவை பாவிப்பின் எழுதாச் சட்டங்களாய் அமைந்துபோகின்றன. அதனால் தேநீர் என்னும்போது அதன் ருசி மணம் குணம் உற்பத்தி விநியோகம் மட்டுமில்லை, தேநீரின் கிளர்ச்சியில் விரியும் கண உணர்வுகள் நினைவுகளாய்ப் பதிவிறக்கம் கொள்வதும் முக்கியமாக நிகழ்கிறது. அவ்வாறுதான் அவை பதிவாகியிருக்கின்றன. அவ்வாறேதான் பதிவாகவும் முடியும். அதுவே மேலுள்ள தொகுப்புக்களிலிருந்தும் தெரிய வந்திருக்கின்றது.

தமிழில் இவ்வாறான தொகுப்புகள் இல்லையெனவே தெரியவருகிறது. கூட்டாஞ்சோறு, நிலாச்சோறு போன்ற இன்னும் உணர்வு கெழுமிய மக்களின் பல கூடற்காலங்களை தமிழ்ப் பரப்பு கொண்டிருப்பினும், தேநீர் கோப்பி போன்ற அருந்தற் காலப் பகிர்வுகள் இல்லையென்று கொள்வதில் தப்பில்லை. ஒருவேளை அவ்வாறு உண்டெனினும் 'தேநீர்: முரண்களின் கலவை'போல் இல்லை. இது வேறு வேறொரு பரிமாணம்.

'தேநீர்: முரண்களின் கலவை' நூல் வெளிவந்தமை அறிந்த பின்னும் வாங்குவதற்கு நாளாயிற்று. வாங்கிய பின்பும் வாசிப்பைத் தொடங்குவதற்கு பல்வேறு காரணங்களில் நாளாயிற்று. வாசிக்கத் தொடங்கிய பின்பும் முடிப்பதற்கு நாளாயிற்று. கருத்துக்கள் எளிமைப்படுத்தப்பட்ட கவிதைகளாக பிரதி இருக்கவில்லையென்பதை அதற்கான முதன்மைக் காரணமாய்ச் சொல்ல வேண்டும். அதனால் அர்த்தங்கள் அச்சொட்டாய்ப் பிடிபடாத கவிதைகளையும் சொற்களின் ஈர்ப்போடு ஓடிக் கடந்துசென்று இயல்பான என் வாசிப்பு வேகத்தைத் தக்கவைக்க முடிந்தது. ஆனாலும் கவிதைகளில் இன்னும் பிடிபடாத உள்ளார்ந்த விஷயங்கள் இருப்பதை மனம் உணர்ந்திருந்தது. அதனால் ஒரு இரண்டாம் மூன்றாம் வாசிப்புக்களைச் செய்யவேண்டிய அவசியத்தைத் தவிர்க்க முடியாதிருந்தது. அப்போது பல கவிதைகளின் உயிராய் உள்ளடங்கியிருந்த அர்த்தங்கள் பிடிமானமாகின.


சில பல வருஷங்களின் முன்பானால் 'இலக்கணச் சிறையுடைத்து வந்த கவிதையை மீண்டும் தளைப்படுத்தும் முயற்சி'யென இத் தொகுப்பை நான் உதாசீனம் செய்திருக்கவும்கூடும். இன்று அனுபவம் சார்ந்த அறிவு சொல்கிறது, இதுவும் வேண்டுமென்று. நீர்த்துப்போகும் பின்னடைவிலிருந்து கவிதையின் இலக்கியத் தர மீட்புக்கான வழியாக இதைக் காணமுடிகிறது. அதனால் நிதானமாக வாசித்து வாசகச் சுகத்தை அனுபவிக்க வழி பிறந்தது. ஆற்றுப்படுத்துதல் சங்க காலத்தில் மட்டுமல்ல, இப்போதுமுண்டு வென்ற நம்பிக்கையில், நான் சென்ற வழியையும் அடைந்த அனுபவத்தையும், 'தாய்க்குத் தாய் தன் மணாளனோடாடிய சுகத்தைச் சொல்லெனில் சொல்லுமாறெங்ஙனே' என்றபடியான மயக்குறு நிலை இருப்பினும் இந்த உரையீட்டில் பகிர முயல்கிறேன் - ஆற்றுப்படுத்த முனைகிறேன்.

'தேநீர்: முரண்களின் கலவை'யினுள்ளான பிரவேசம் இலகுவாயிருக்கவில்லை என்பது ஏற்கனவே சொல்லப்பட்டது. மேலும் அது ஒரு ஒற்றைப் பிரதியாய்க் கொள்ளப்படும் அமைவோடும் இருந்திருக்கவில்லை. இதை ஒரு விசேஷத்தின் தன்மையாகவே இங்கு அடையாளமாக்குகிறேன். என்னளவில் வெவ்வேறு கலைத்துவ வகைப்பாடுகள்கொண்ட நான்கு பிரதிகளின் ஒட்டுமானமாய் இந்நூல் விளங்குவதைச் சொல்லவேண்டும்.

முதல் பிரதியாக இதன் உருவப்பாடு. முன் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம்வரை மிகுந்த சிரத்தையோடு கலாபூர்வமாக பிரதி வடிவமைக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய சற்சதுர வடிவம் கொண்டிருந்தது பிரதி. அதன் அட்டைப் புற வர்ணத் தேர்வில்கூட மிக்க அவதானம் செலுத்தப்பட்டதாய் இருந்தது. எடுத்த எடுப்பிலேயே ஆதர்ஷம் பிரதியுள் புதைந்துபோயிருந்ததைக் காணமுடிந்திருந்தது.

இரண்டாவதாக, கவிதைகளின் முன்னிலும் அருகிலும் பின்னிலுமாய் அவற்றின் உள்ளுறை அர்த்தங்களைப் பிரதிபலிக்கும் வண்ணம் இடம்பெற்றிருந்த வைதேகியின் ஓவியங்களைச் சொல்ல வேண்டும். மிகைப்பில்லாத வர்ணங்களே அவற்றை வடிவாக்கவும் செய்திருந்தன. நூலின் உள்ளடங்கிய பகுதியாக சித்திரங்கள் ஆகியிருந்தாலும், தனக்கான விசேஷத்தனத்தை அவை கொண்டிருந்தன. ஒரு வடிவத்தின் வர்ணம் அதே வடிவத்தின் இன்னொரு வர்ணத்தில் வேறோர் அர்த்தத்தைப் பதித்துப் போகிறது. அந்த வகையில் சித்திர வார்ப்பு அர்த்தமுள்ள ஒரு தனிப் பிரதியாகியிருந்தது.

மூன்றாவது பிரதியாக தமிழ்க் கவிதைகளின் ஆங்கில மொழியாக்கம். தமிழ்க் கவிதைகளின் கீழே பெரும்பாலும் அதே பக்கத்தில் அமைந்ததால் மட்டுமில்லை, தமிழில் சில அர்த்தங்களை முழுமையாகும்படி வெளிக்கொணர்ந்தது என்றாலும் பிழை




யில்லை. நெய்த நூலிலும் தைத்த நூல் வலியதாக இருக்கக் கூடாதென்ற பழைய நியதியுண்டு. மொழியாக்கம் மூலத்தைக் கடந்திருந்ததென்பது தவறாக நினைக்கப்படும். ஆனால் மூலத்தை கைநழுவ விடாத அவதானம் ஒவ்வொரு கவிதையின் மொழிபெயர்ப்பிலும் காட்டப்பட்டதாய் நான் உணர்கிறேன். அந்த வகையில் அதுவொரு மீள வாசித்தலுக்கான ஜன்னலாக இருந்த வகையில் வித்யா ஸ்ரீநிவாசன் நினைக்கப்படவேண்டியவர் ஆகிறார்.

நான்காவதாக பா. அகிலனதும் கீத்தா சுகுமாரனதும் முப்பது முப்பதான அறுபது கவிதைகள். மேலே குறிப்பிடப்பட்ட பிரதிகளின் துணைவலிமையுடன் கடக்கப்பட்ட இக் கவிதைகளே முதன்மைப் பிரதியாய் நிற்கின்றன. சொல்லவந்த கருத்தைத் தவிர வேறெதுவும் கரிசனமற்று கவித்துவத்தின் மேனிலை விளையாட்டுக்கு முற்றிலுமாய் தம்மை ஆளாக்கியிருந்த கவிதைகள் அவை. அதில் புரிதல் இலேசுவாக இருக்கவில்லையெனினும், புரியப்பட்ட வேளைகளில் கவிதைப் பேரின்பம் செய்தனவென்ற நிஜத்தை இங்கே குறிப்பிடுதல் தக்கது.

புரிதலென்பது வாசக நிலை சார்ந்ததென்ற பின்நவீனத்துவக் கூற்றில் எனக்கு ஐயப்பாடு என்றும் இருந்ததில்லை. வாசகரே அர்த்தம் தோடுபவராக இருக்கிறார், அதனால் ஆசிரியர் இறந்தவர்போல் ஆகிறார் என்பதிலும் நான் மாறுபாடுகொள்ளவில்லை. அந்தவகையில் வாசகனாய் நான் புரிந்ததையே கவிஞர்களும் கருதியிருந்தார்களென்று நிச்சயம் பண்ண என்னால் முடியாது. எனதைவிட இன்னொரு வாசகரின் வாசிப்பு வேறொரு அர்த்தத்தை முன்வைக்க முடியுமென்ற நியாயப் புரிதலும் என்னிடத்திலுண்டு.

நூலிலுள்ள அணிந்துரை, முன்னுரை, மதிப்பீட்டுரைகள் பற்றி சொல்லவும் சில விஷயங்கள் உள. ரசனையின் கட்டுக்கோப்பின் அடிப்படையிலான இம் மதிப்பீடுகள் உண்மையில் மிகவும் கச்சிதமாய் அமைந்திருந்தன. றியாஷ் லத்தீபின் அணிந்துரை நூலின் மொத்த மதிப்பீட்டை கவிதை நயத்திலன்றி, கவிதையாகவே வெளிப்படுத்தியிருந்தது. சாஷ் திரிவேதியின் முன்னுரை எல்லை கடந்துவிடாத அவதானத்துடன் இருந்தது. மம்தா சாகர், மிகயேலா மிஸ்கெலியுக்கின் மதிப்பீடுகள்கூட குறைந்த வரிகளில் ஆற்றல் வாய்ந்த கருத்துக்களை முன்வைத்திருந்தன. பிற புனைவிலக்கியப் பிரதிகளில் இவ்வகை முற்தேற்றங்களினை உடலின் வீக்கம் போல், வேண்டாது வளர்ந்த கழலைபோல் எண்ணுவேனானாலும், இந்தப் பிரதியில் அவற்றை ஒரு ‘மும்முலை’க் கோட்பாடாய், வித்தியாசத்தின் விசேஷமாய்க் கண்டிருந்தேன்.

**பா.** அகிலனது முப்பதும், கீத்தா சுகுமாரனது முப்பதுமாய் அண்ணளவாய்ச் சிறிதான அறுபது கவிதைகளைக்கொண்ட தொகுப்பிது. இத் தொகுப்பின் கவிதைகளில் புரிதலும் புரியாமையும்பற்றிய விவகாரம் தலையிடுவது தவிர்க்கமுடியாமலே இருக்கும். அதனால் அவை சென்றிருந்த இலக்கியத் திசைபற்றி சில வார்த்தைகளை தெளிவுக்காக இங்கே முன்மொழிந்துவிடுவது சிறப்பு.

பல கவிதைகளின் விளக்கத்துக்கான சூட்சுமம் இதில் இருக்கிறது. ஒருவித முரணிலைகொண்ட கவிதைகள் இவை. கவிதையுள் இவ்வாறான முரணிலையைப் புகுத்துவது ஓர் ஆங்கில கவிதை முறைமை. சேக்ஸ்பியரிலிருந்து ஜெரார்ட் ஹொப்பின்ஸ் ஈறாக ஜோன் அப்டைக்வரை இந்த (Dissonance) கவிதை வகைமையைப் பெரிய அளவில் பயன்படுத்தியிருக்கிறார்கள். தமிழில் உரையில் பயன்பட்ட அளவுகூட கவிதையில் இருந்ததாய்ச் சொல்ல முடியாது. ஆயினும் சி. மணி, நகுலன், பிரமிள் போன்றவர்களிடத்தில் ஓரளவு பயன்பாடு கொண்டிருந்ததைக் காணக்கூடியதாய் இருக்கிறது. முரண்களின் கலவையென்பது தேநீரில் செங்கரும் சாயமும் வெள்ளைப் பாலும் கலப்பதான காட்சிப் புல முரண் மட்டுமில்லை, அது கடந்த உணர்நிலைக் கலப்பே இருக்கிறது. ஓர் இலக்கிய உத்தியாக அது பயன்பாடு கொள்கையில் வெளிப்புல அர்த்தங்களை மீறிய நினைவின் அடுக்கிலுள்ள படிமங்கள் காட்சிப்படுகின்றன.

இந்த Dissonance என்பது ஆரம்பத்தில் மேற்கத்தேய சங்கீதத்தி-லேயே பயில்விலிருந்தது. காலப்போக்கில்தான் கவிதைத் துறைக்குப் பரவி வந்தது. அப்போது ஹைக்கூ கவிதைபோன்றதென பலரையும் அதன் குறுகிய அடியளவும், உணர்வு முரண்களின் கலவையாக இருப்பதும் மெய்யாகவே கருதவைத்தது. ஆங்கிலக் கவிதை வரலாற்றில் பெரும்பாதிப்பை நிகழ்த்தாவிட்டாலும், பின்னால் ரசனையாளர்களுக்கு பேரின்பம் அளிப்பதான கவிதை வகையினமாக இது ஆகியிருந்ததென்கிறார்கள் ஆங்கிலக் கவிதை விமர்சகர்கள். இந்த திறப்புடன்தான் பா. அகிலனதும், கீத்தா சுகுமாரனதும் கவிதைக்குள் பிரவேசிக்கவேண்டும்.

**மு**தலில் இடம்பெற்றிருக்கின்ற கவிதைகள் பா. அகிலனுடையவை.

முதன் முதலில் வெங்கட் சாமிநாதன் மூலம்தான் பா. அகிலனது கவிதைகள் எனக்குப் பரிச்சயமாகின. அகிலனின் கையெழுத்துக் கவிதைகளிலிருந்து அவற்றை அவர் சிலாகித்திருந்தார். அன்றிலிருந்து அப் பரிச்சயம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அவரது ‘பதுங்கு குழி நாட்க’ளிலிருந்து ‘அம்மை’ ‘சமரகவிகள்’ ஈறான நூல்களின் பல கவிதைகள் நீண்ட காலம் என் மனத்தை அதிர்வு

செய்திருந்துகொண்டு இருந்திருக்கின்றன. அவற்றிலிருந்து ‘தேநீர்: முரண்களின் கலவை’ சற்று வித்தியாசமானது. பொதுவாக சொற்களின் கனதியோடு கூடியவையாக அவரது ஏனைய கவிதைகள் இருந்தபோது, இதுமட்டும் தன்னை சொற்களின் வழி மிக இறுக்கமாகக் கட்டமைந்த கவிதையாக்கிக்கொண்டிருந்தது.

இரண்டடி மூன்றடி நான்கடி ஆறடியென குறைந்த அடிகளைக் கொண்ட இக்கவிதைகள், ஒரு நல்ல வாசகருக்கு நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய சங்கத் தமிழ்த் தொகுப்புகளை நினைவுறுத்தாமல் போகாது. இது அவையல்ல. இரண்டுக்குமிடையே இரண்டாயிரமாண்டுக் காலவெளி இருக்கிறது. மட்டுமல்ல, கவிதையின் - இலக்கியத்தின் - சமூகத் தளமே இன்று வேறாகியிருக்கிறது. இலக்கியம் சமூகத்திற்காகவென்ற கருதுகோளில் முக்கியத்துவம் இருக்கிறது. ஆனாலும் இலக்கியமென்பது இலக்கியத்தின் நோக்கத்திற்கானது என்ற கருத்தியலும் மறுக்கப்பட முடியாதது. அடியளவுக் குறுக்கம், சொற்களின் அடர்த்தி, வரிகளுக்கிடையேயுள்ள வெளி ஆகியன இவற்றின் பொதுக் குணங்களாக இருப்பதனாலேயே பெரிய ஒற்றுமைகளை இரண்டினுக்குமிடையே கண்டுவிடமுடியாது.

நான் யாருமேயில்லையென்ற பிரசித்தத்துடன் தொடங்கும் முதலாவதாக வரும் நாலடிக் கவிதை, மழையிராவைத் தொடர்ந்த ஒரு குளிர்காலையில் சுயம் (Subject) தன்னை தேநீராய் வெளிப்படுத்துகிறது. தேநீரின் தேவையைச் சுட்டலாம். தேநீரே தேவையுணர்ந்து அர்ப்பணிப்புடன் சுயமாய்க் காத்திருப்பதென்பது விசேஷமான விபரிப்பு.

‘அவள் உடைந்த தேகத்தால்’ எனத் துவங்கும் நாலாவது கவிதை, தன் ஆறாவது அடியில் முடிகிறபோது உள்ளடங்கிய ரௌத்திரத்தைக் கொண்டிருக்கும். விருப்பார்வத்துடன் இருக்கவேண்டிய வாழ்க்கை கட்டாயமாகி அது அலுத்துப்போகிற ஒரு தருணத்தில் உணர்வுகள் ஒன்றிப் போகமுடியாத இருபேரின் மனநிலைகளில் ரௌத்திரம் தவிர வேறுணர்வுகள் பிறப்பது சாத்தியமில்லை. இது பெண்ணியக் குரலாய் ஒலிக்காவிட்டாலும், அநீதி விளைக்கப்பட்ட பெண்ணின் குரலாய் சமையலறையிலிருந்து ஒலிக்கிறது.

ஆறாம் கவிதை சமூகத்தின் தள நிலைமைகளினை மௌனமாய்ச் சபிப்பதாகும். தேநீரின் உருவமென்ன எனக் கேட்டு விரியும் அக்கவிதை, ‘நெடுத்து உருண்ட போத்தல் அல்லது வளைந்த சிரட்டை ஷ என்றான் தரைக்கு விரட்டப்பட்டவன்’ என்று முடிகிறபோது சமூகத்தின் இருவேறு தளங்களின் இருப்புக்கான நியாயத்தை எதுவித கோஷமுமின்றி விசாரிக்கிறது.

பன்னிரண்டாம் கவிதை ஆவி பறக்கும் தேநீருக்கு சாயத்தைத் தரும் வஸ்து, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாய் தொழிலாளர் படும் பாட்டிலிருந்து, அவர்களது செந்நீரிலிருந்து பிறப்பதாய்ப் பேசுகிறது.

அதுபோலவே தேநீரின் வேரைத் தேடுகிறது பதினேழாவது கவிதை. தேயிலையின் வரலாற்றுச் சோகத்தின் நினைவூட்டலாகிறது அது.

‘தேநீர் ஒரு நூல் ஷ அது முடிவதில்லை’ என்கிறது இரண்டடிகளைக் கொண்ட ஒரு கவிதையின் பெரும்பாகம். வாசக மனத்தின் இயல்புக்குத் தக அர்த்தங்களை விரிக்கும் வெளி அநாயாசமாகவே கவிதையில் அமைந்துவிடுகிறது. துணி தைக்கும் நூல், வாசிக்கும் நூல் எதுவாக எடுத்துக்கொண்டாலும் கவிதையின் அர்த்தம் இங்கே வேறுபடுவதில்லை. மேலும் இந்த இரண்டடிப் பெரும்பாகம் இந்த நிமிஷம்வரை ஒரு உரைநடைக் குறிப்பாகவே இருக்கவும் செய்கிறது. ‘விமலா அக்கா’ என்ற வெறும் விளி வார்த்தைகளால் அது பூரணப்படும்போதுதான் கவிதை மாயம் பிறக்கிறது.

இப்போது கவிதையை முழுதாகப் பார்க்கலாம்:

**‘தேநீர் ஒரு நூல்**
**அது முடிவதில்லை, விமலா அக்கா’**

பா. அகிலனது கவிதைகளில் வரலாற்றின் துரோகங்கள் மட்டுமில்லை, தேநீரின் நிறமும் மணமும்கூடப் பேசப்படுகின்றன. முப்பது கவிதைகளும் முப்பது விதங்களெனினும், அவை பேசுவது இழப்புகளதும் சந்தோஷங்களினதும் முரண் கலவையாகவே இருக்கிறது.

இவற்றினைத் தொடரும் கீத்தா சுகுமாரனின் கவிதைகளுடனான தொடர்பு எனக்கு அவரது ‘ஒற்றைப் பகடையில் எஞ்சும் நம்பிக்கை’ (2014) என்ற காலச்சுவடு வெளியீடான அவரது கவிதைத் தொகுப்பிலிருந்தே ஆரம்பித்திருந்தாலும், அவரது வித்தியா சமான கவிதைப் பாங்கும் எடுக்கும் கவிதைப் பொருட்களும் பெண்ணிலைப் பார்வையும் என் வாசிப்புக்கு மிக இதம் செய்ப வையாய் இருந்தன. அந்தச் சிறப்புகள் இந்தத் தொகுதியிலுள்ள பல கவிதைகளிலும் தவறாமல் இடம்பெற்றிருக்கின்றன. தம் அர்த் தத்தால், வீறார்ந்த வரிகளால், அடர்த்தியால் வாசகரை முன் னகர்த்திக்கொண்டும், முன்னகர்ந்துகொண்டுமே பிரதியில் அவை இருக்கின்றன.

**‘எழுதிக்கொண்டிருக்கிறேன்**
**நீங்கள் பார்க்கிறீர்கள்**
**எவருமற்ற சமையலறையில்**
**கலந்து இன்னும் இறங்காத தேயிலைச் சாயத்துக்காக**
**ஏங்கிக் கொதித்துக் குமிழ்களாய் அவிழும்**
**நீரை’**

என்ற அவரது முதற் கவிதையில் வரும் நீரின் கொதிப்புக்குப் பின்னாலிருக்கிறது ஒரு மனக் கொதிப்பு.

சமையலறையின் தனிமையிலிருந்து இன்னும் தேநீருக்காகக் காத்திருந்தபடி எழுதிக்கொண்டிருப்பதுவரை அவலத்தின் விரிந்தெழுகையே நிகழ்கிறது. அங்கே அவலமில்லையேல் கவிதையில்லை. அந்த அவலமே கவிதையைப் பிறப்பிக்கிறது. புரிதலின் சிரமத்திற்குக் காரணமாயிருக்கும் இந்த அம்சம் புரியப்படும்போது இலகுவாகத் தோன்றுவது மட்டுமல்ல, மேலான கவிதையின்பத்தையும் நிகழ்த்திக் காட்டுகிறது.

**‘எல்லைகளின் விளிம்பில்**
**உனக்குப் புரியாத மொழியில் நானும்**
**எனக்கு விளங்காத சொல்லில்**
**நீயும் உரையாடுகையில்**
**நமக்கிடையில் ஆறிக்கொண்டிருக்கிறது**
**ஒரு கோப்பைத் தேநீர்’**

என்ற கவிதையில் இந்த முரணும் கலப்பும் இலக்கியார்த்தமாய்ச் சிறப்பாக வெளிப்பட்டிருக்கிறது. தேநீர் ஆறிக்கொண்டிருக்கிறது. உரையாடல் நிகழ்ந்துகொண்டிருக்கிறது புரியாத மொழியில் எது தேவை என்பதில் தீர்மானமேதும் கிடைப்பதில்லை அதுவும் ஒரு முரணும் கலப்பும்தான்.

**‘கலிபோர்னியா, சிங்கப்பூர், லண்டன்**
**எல்லா நகரங்களிலும் தேநீர்க் கோப்பையைப் பற்றும்**
**உடல்கள் தேடுகின்றன**
**பரிச்சயமான எலும்பின் வடிவங்களை**
**தோலின் மடிப்புகளை**
**கண்களில் ததும்பும் ஊரின் மீதத்தை’**

என்ற கவிதை ஊரின் தவிப்பைச் சொல்வதில் மாயத்தின் விசை பெற்று சோகமாய்ப் வழிகிறது. தேநீர் ஒரு கலாச்சார அடையாளம் கீழ்த்திசை மக்களின் வாழ்வில் அவர்கள் கோப்பி குடிப்பதில்லை யாவென விதண்டாவாதம் பேசக்கூடாது. தீ சுடுமென்பது நிஜத்தின் உரையாக வெளிவருகிறபோது, தீ இனிது என்பது புனைவுடன் கவிதையாகிறது என்பார் ந. பிச்சமூர்த்தி. இந்தவகையான கவி நிலைப் பகுப்பு அது. கீழ்த்திசை மக்களின் அக்கலாச்சாரக் கூறு மேற்கத்திய நாடுகளிலும் தொடர்ந்து தம் கை பற்றியிருக்கும் தேநீருடன் பரிச்சயமான முகங்களை, ஊரின் நினைவலைகள் இன்னும் மீதமாகிக் கிடக்கும் கண்களை தேடுகிறார்கள் நிலமி

ழுந்து ஓடியவர்கள்.

தேநீர் கீழ்த்திசைக் கலாசாரத்தின் ஓர் அடையாளமாகிறபோது, அவர்கள் அருந்தும் கோப்பிகூட தேநீரே ஆகிவிடும் தவிர்க்க முடியாமை நிகழ்கையில், குளிர் மேற்றிசையின் சூழ்நிலை அடையாளமாகுவதை ஒத்துப்போகலாம். அப்போது குளிரிலிருந்து தேநீர் அருந்தியபடி அறிந்தவர் தெரிந்தவர் ஊராரைத் தேடும் புலம் இழந்தவரின் முனைப்பை கற்பனைசெய்து பாருங்கள். அத்துயரார் படிமம் ஒரு அளப்பிலாச் சோகத்தின் வார்ப்படமாகிவிடுகிறது. கீத்தா சுகுமாரனின் கவிதை அதைச் செய்கிறது.

பன்னிரண்டாம் கவிதை ஒரு தளத்தில் விரிந்து இன்னொரு தளத்திற்குப் பரந்து எழுவதைக் காண்மிக்கிறது. ஒன்று இனிமையும், மற்றது கசப்பும், சாஷ் திரிவேதி முன்னுரையில் எழுதியதுபோல் ‘வியர்வையின் உப்புக்கரிப்பும், றோஸ் இதழ்களின் நறுமணமும்’ சேர்ந்த கவிதையாகிவிடுகிறது.

**‘கூடத்தில் தேநீரைத் தந்தபின்**
**மீண்டும் சோம்பும் ஆரஞ்சுத் தோலும்**
**தேயிலையோடு அவியும் சமையலறையில்**
**முள்ளந்தண்டிலிருந்து இடுப்பின் வியர்வையிலிருந்து**
**பெயரும் கதைகளை அவர்கள் அருந்தினர் ரகசியமாய்’**

என்பது ஒரு கவிதை.

இங்கே கூடத்தில் தேநீரைப் பரிமாறிவிட்டு வந்தது யாரெனச் சொல்லப்படவில்லை. அவள் என்பதை வருவித்துக்கொள்ளலாம். அப்போது தம் பார்வை மொய்க்கும் இடுப்புப் பகுதியிலும் முள்ளந்தண்டுப் பகுதியிலும் சுரக்கும் வியர்வையிலிருந்து கதைகளைக் காண்கிறார்கள் தேநீர் சுவைப்போர். அதாவது பெண் எந்த ஊர் தேசம் கண்டத்திலும் எதிர்கொள்ளும் வேலை - கடமை - பொறுப்பு ஆதியாம் பெயர்களில் சுமத்தப்படும் பளுவினை உணர்கிறார்கள். இதுபோன்ற ஒரு கவிதையில் மேலெழுந்தவாரியான ரசனை ஒருவரை இவ்வாறான கருத்தையடைதலுக்கே இட்டுச் செல்லும். ஆனால் கவிதையின் இறுதி வார்த்தையைக் கொண்டு உடலின் விரச தரிசனக் களிப்பை மாற்றீடு செய்து பார்க்க முடியும். தேநீர் அவ்வேளை மதுவாகிவிடுகிறது. முரண்தான் ஆனாலும் கவிதையின் தன்மை அதுவாகவேயிருக்கிறது.

‘தேநீர்: முரண்களின் கலவை’யிலுள்ள கவிதைகள் இவ்வண்ணம் பல்வேறு அர்த்த வியாபகம் கொள்வதைக் கண்டு ரசிப்புற நிறைய வெளிகளைக் கொண்டிருக்கின்றன. இதில் அழுத்திக் கூறப்படவேண்டிய முக்கியமான விஷயம், Dissonance வகைக் கவிதைகளுக்கு தமிழில் இவை முன்னுதாரணமாகி இருக்கின்றன என்பதுதான். இவ்வகை முரண்நிலைக் கவிதைகள் ஆங்கிலக் கவிஞர் பிறவுணிங்கின் (Browning) கவிதைகள்போல் திட்டமிட்டமாதிரியிலும் அமைக்கலாம். ஆனால் இயல்பாக வந்து பொருந்துமிடங்களில் கவிதை அதன் உச்சத்தைத் தொடும் என்கிறார்கள். பா. அகிலனதும் கீத்தா சுகுமாரனதும் இத்தொகுப்பின் கவிதைகளிலேயே இரண்டுக்குமான உதாரணங்கள் இருக்கின்றன.

Dissonance என்ற முரணியல் வகைமையில் கவிதைகள் அமைக்கப்படுகையில் ஒரு வட்டத்துள் அடைபடும் நெருக்கடியை அது சந்திக்கக்கூடும். ஆயினும் அவ்வாறான குறைப்பாடுகள் இதன் மேல் சுமத்தப்பட்டதாய்த் தெரியவில்லை.

மொத்தத்தில் வெவ்வேறு வகைப் பிரதிகளின் சங்கமிப்பான இத்தொகுப்பில் கவிதை தன்னிலைப் பங்கை சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறதென துணிந்து சொல்ல முடியும்.



devakanthan@thaiveedu.com



# தமிழில் புத்தகக் கலாச்சாரம்: க்ரியா ராமகிருஷ்ணன் நினைவுக் கட்டுரைகள்

- மு. நித்தியானந்தன்

தமிழ்ப் பதிப்புலகில் தரமான நூல் தெரிவிலும் நேர்த்தியான நூல் தயாரிப்பிலும் முன்னோடியாகச் செயற்பட்டவர் க்ரியா ராமகிருஷ்ணன் (1944-2020). தமிழ்ப் பதிப்புலகின் நட்சத்திரமாக அவர் நோக்கப்படுகிறார். தமிழகத்தில் புத்தகக் கலாச்சாரம் பற்றிப் பேசி, இயங்கி வந்தவர்.

க்ரியா பதிப்பகத்தை 1974இல் நிறுவி, பல்துறை சார்ந்த நூல்களைத் துணிவோடு வெளியிட்டவர். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய மூல மொழிகளில் இருந்தே தலைசிறந்த படைப்புகளை




தமிழில் கொண்டு வந்தவர். ராமகிருஷ்ணனின் பெரும் ஈடுபாட்டில் உருவான 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி' நவீன தமிழ் உலகிற்குக் கிடைத்த அருங் கொடையாகும்.

'கசடதபற', 'நடை', 'இனி' போன்ற சிற்றிதழ்களோடும், நவீன ஓவியர்களோடும் இணைந்து செயற்பட்டவர். ந. முத்துசாமி, ஜி. நாகராஜன் ஆகியோரின் படைப்புகளை டேவிட் ஷுல்மனுடன் இணைந்து ஆங்கிலத்தில் வெளிக்கொண்டு வந்தார். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், மொழி அறக்கட்டளை, கூத்துப்பட்டறை போன்ற அமைப்புகளின் மூலவராக இயங்கியவர். அவர் எழுதிய சிறுகதைகள் 'பின்கட்டு' என்ற தலைப்பிலும், கட்டுரைகள் 'நெடும் பயணம்' என்ற தலைப்பிலும் அவரது மறைவின் பின்னர் தொகுக்கப்பட்டு வெளியாகின.

அமரர் க்ரியா ராமகிருஷ்ணன் நினைவாக ஏப்ரல் 2021ல் பேராசிரியர் இ. அண்ணாமலை அவர்களின் முன்னெடுப்பில் நடைபெற்ற இணையவழிக் கருத்தரங்கில், தத்தம் துறைகளில் தலைசிறந்த பதினான்கு பேர் அனைத்துலக அளவில் கலந்துகொண்டு, தமது உரைகளைச் சமர்ப்பித்திருந்தனர். புத்தகக் கலாச்சாரத்துடன் தொடர்பான எடிட்டிங், நூல் வடிவமைப்பு, ஆக்க இலக்கிய மொழி, மொழிபெயர்ப்பு, அகராதியியல் ஆகிய ஐந்து பொருண்மைகளின் கீழ் ஆற்றப்பட்ட இக்கருத்தரங்கு உரைகள் தொகுக்கப்பட்டு, 'தமிழில் புத்தகக் கலாச்சாரம்: க்ரியா ராமகிருஷ்ணன் நினைவுக் கட்டுரைகள்' என்ற தலைப்பில் க்ரியா வெளியீடாக அண்மையில் வெளியாகியுள்ளது. க்ரியாவிற்கே உரிய பதிப்பு முத்திரையுடன் பளபளப்பான தாளில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் அமைந்த கட்டுரைகளைக் கொண்டு நூல் அற்புதமாக வெளியாகியிருக்கிறது.

ஓவியர் ப. மணிவண்ணனின் சார்க்கோல் மூலம் வரையப்பட்ட ராமகிருஷ்ணனின் உருவப்படத்துடன், சுதர்சன் கிரபிக்ஸ் சுப்ரமணியத்தின் நுட்பமான அச்சாக்கத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாக இந்நூல் பொலிகிறது.

இந்த நூலைச் செப்பனிட்டுப் பதிப்பிப்பதில் இ. அண்ணாமலை, சி.டி. இந்திரா, கிறிஸ்டினா முரு, டி. ஸ்ரீராமன் ஆகியோர் தம் பதிப்பு மேன்மையைப் பதித்திருக்கிறார்கள். அகராதி, எடிட்டிங், வடிவமைப்பு, இலக்கியமொழி, மொழிபெயர்ப்பு ஆகிய ஐந்து பிரிவுகளில் 3 தமிழ்க் கட்டுரைகளும் 11 ஆங்கிலக் கட்டுரைகளும் என்று, ஆக 14 கட்டுரைகளைக் கொண்டு இந்த நூல் அமைந்துள்ளது.

இந்நூலின் 382 பக்கங்களில் அகராதி சார்ந்த கட்டுரைகள் 40 வீதத்தையும், எடிட்டிங், வடிவமைப்பு, மொழி சார்ந்த கட்டுரைகள் 30 வீதத்தையும், மொழிபெயர்ப்பு சார்ந்த கட்டுரைகள் 30 வீதத்தையும் கொண்டுள்ளன.

'தமிழில் புத்தக கலாச்சாரம் என்பது இல்லை என்பது ராமகிருஷ்ணன் அடிக்கடி வெளிப்படுத்தும் வருத்தங்களில் ஒன்று' என்று ஆசைத்தம்பி இந்த நூலில் மிகச் சரியாகவே கூறிச் செல்கிறார். 'புத்தகம் என்பது நமது அன்றாடப் பிரக்ஞையினுடைய ஒரு

வெளிப்பாடாகவும், ஒரு பகுதியாகவும், நமக்குச் சக்தி கொடுக்கக் கூடிய பல விஷயங்களில் ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த உணர்வுதான் என் உழைப்புக்கெல்லாம் அடிப்படை' என்று ராமகிருஷ்ணன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிறார்.

'வரும் பத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தக வெளியீடு' பற்றிய கருத்தரங்கு சென்னையில் நவம்பர் 28, 1977ல் நடைபெற்றபோது, 'சிறு பதிப்பாளர்களின் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் உரையாற்றிய க்ரியா ராமகிருஷ்ணன் பின்வருமாறு குறிப்பிட்டார்:

'எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் தமிழ்நாட்டில் இன்னும் 'புத்தகக் கலாச்சாரம்' தோன்றவில்லை என்பதுதான். பெரும்பாலானோர் இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வருடத்திற்கு எத்தனை புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன, எத்தனை பதிப்பாளர்கள் இருக்கிறார்கள் என்று கணக்குக் காட்டுவார்கள். ஆனால் புத்தகம் என்ற சாதனத்தைப் பற்றியும், அறிவு வளர்ச்சியின் தன்மை பற்றியும், இவற்றோடு இணைந்த மற்ற எல்லா விஷயங்களைப் பற்றியும் இன்று நிலவும் மனப்போக்கு புத்தகக் கலாச்சாரத்தை உருவாக்கவோ, ஆதரிக்கப்போவதோ போதுமானதில்லை. இம்மாதிரி நிலைமையில் சிறு பதிப்பாளர்கள் தோன்றுவார்கள் மறைந்து விடுவார்கள். ஆனால், ஒரு சிறுபதிப்பாளர் வெளியீட்டுத்துறையை விட்டகன்றால் இன்னொருவர் வருவார். இது ஒன்றுதான் தமிழ்ப்



தங்க ஜெயராமன்

புத்தகத்துறையின் பெரிய நம்பிக்கை.'

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, புத்தகக் கலாச்சாரத்திற்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, தனது க்ரியா நிறுவனத்திற்கூடாக அயர்வின்றி உற்சாகமாக உழைத்து வந்தவர் ராமகிருஷ்ணன்.

க்ரியா ராமகிருஷ்ணன் நினைவாக நடத்தப்பட்ட கருத்தரங்கு மிகப் பொருத்தமாகவே 'புத்தகக் கலாச்சாரம்' என்ற பொருண்மையில் அமைந்துள்ளது. 'அகராதி' என்ற தலைப்பின் கீழ் தங்க ஜெயராமன் சமர்ப்பித்துள்ள 'தற்காலத் தமிழ் அகராதி: சமூகம், கலாச்சாரம் சார்ந்த சில பிரச்சினைகள்' என்ற கட்டுரை மகுடமாக அமையவல்லது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியினை அடிப்படையாகக் கொண்டு தங்க ஜெயராமன், தமிழ் அகராதி எதிர்காலத்தில் செல்லவேண்டிய திசைவழிப் பயணத்தைத் தனது கட்டுரையில் கோடிகாட்டுகிறார். தமிழ்க் கிராமியச் சொல்வழக்கின் காவல் தெய்வமாகத் தலைநிமிர்கிறார் தங்க ஜெயராமன்.

தமிழர் வாழ்வின் கிராமியச் செழுமைகளை, தொன்மைகளை, சமய நம்பிக்கைகளை, கலாச்சார நடைமுறைகளை, சமூக வாழ்வியலின் சீர்மைகளை கி. ராஜநாராயணன், தொ. பரமசிவம், ஆ. சிவசுப்ரமணியம், அ.கா. பெருமாள், தங்க ஜெயராமன் போன்ற அறிஞர்கள் தங்களின் ஆய்வு, அனுபவப் பெரும் பலத்தில் அறிவுலகின் முன் படைத்துள்ளனர். அவ்வகையில், இன்றைய அகராதிகள் ஆங்கில அகராதிக் கருத்தமைவுக்கு இசைவாக, எழுத்துத் தமிழ் ஆட்சியினையே முதன்மைப்படுத்தி, கிராமிய வழக்குகளைப் புறந்தள்ளும் போக்கினைக் கைக்கொள்வது பற்றிய கரிசனையைத் தனது கட்டுரையில் தங்க ஜெயராமன் வலிமையாக முன்வைத்திருக்கிறார். கிராமியச் சொல்வழக்குக் களஞ்சியத்தை கணக்கில் எடுக்காதுபோனால், நவீன-தற்கால அகராதியின் epistemology யே கேள்விக்குள்ளாகும் என்று எச்சரிக்கை விடுக்கிறார் தங்க ஜெயராமன். சுவரொட்டி, அறை, குணவடை, கடைமடை, குறாள், கழனி, காரிக்கன், சடங்கு, நடவாள், குடியானவன், குடி படை போன்ற கிராமத்தில் வழக்கிலுள்ள அர்த்தச் செறிவுமிக்க சொற்களுக்குத் தங்க ஜெயராமன் தரும் அகராதியியல் விளக்கங்கள் செழுமையானவை.

தங்க ஜெயராமனின் கருத்தியலுக்கு இசைவாக டேவிட் ஷுல்மன் தந்திருக்கும் 'மொழியின் இரட்டை வழக்கும், பன்மை வழக்கும் அதன் எழுத்துருவாக்கத்திலும் இலக்கியவாக்கத்திலும்' என்ற கட்டுரை அமைந்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலிருந்தே தமிழில் பேச்சுவழக்கினை இலக்கியப் படைப்புகளில் கொணரும் போக்கு காணப்படுவதாகக் கூறப்படுகிறது. புதுமைப்பித்தன், பிற்காலத்தில் ஜி. நாகராஜன், ந. முத்துசாமி, தி. ஜானகிராமன், இமையம் போன்றோரை இந்த நவீன இலக்கியச் செல்நெறிக்கு உதாரணப்படுத்துவதையும் காண்கிறோம். ஆனால், தமிழ் இலக்கியச் சொல்லாடலில் பேச்சுவழக்கு கையாளப்பட்டதற்கு நீண்ட வரலாறு இருக்கிறது என்கிறார் டேவிட் ஷுல்மன்..

**சிங்கன்: பார்க்கிலதிசயந் தோணுது சொல்லப்**
**பயமாயிருக்குதடி சிங்கி**

**சிங்கி: ஆர்க்குப்பயமினித் தோணின காரியம்**
**அஞ்சாமற் சொல்லடா சிங்கா**

என்று திருக்குற்றாலக்குறவஞ்சியில் 'சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதம்' என்ற பகுதியிலிருந்து டேவிட் ஷுல்மன் காட்டும் உதாரணங்கள் 17ம் 18ம் நூற்றாண்டிலேயே பேச்சுவழக்கு இலக்கியவாக்கத்தில் இடம்பெற்றிருப்பதை விளக்குகிறது. சிற்றிலக்கியம் எனப்படும் நொண்டி நாடகம், பள்ளு, விறலிவிடுதூது போன்ற இலக்கியங்களிலும் வெவ்வேறு வகையிலான சமூக, புவியியல்சார் பேச்சுவழக்குகள் கையாளப்பட்டிருப்பதை ஷல்மன் குறிப்பிடுகிறார்.

பேச்சுமொழியை இலக்கிய ஆக்கத்தில் கையாளும் முறை கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே காணப்படுவதற்கு, தெலுங்குப் பிரபந்த இலக்கியங்களிலிருந்தும் ஷல்மன் ஆதாரம் காட்டுகிறார்.

தங்க ஜெயராமன் முன்வைக்கும் அகராதியியல் கருத்தியலுக்கு வலுச்சேர்க்கும் கட்டுரையாக ஷல்மனின் கட்டுரை அமைந்துள்ளது. அகராதி மீதான ஒரு பயனாளியின் பார்வை எப்படி உருவாகிறது, அகராதியின் நம்பகத்தன்மை எப்படி வலுப்பெறுகின்றது என்பது பற்றி பா.ரா. சுப்பிரமணியன் தனது 'அகராதி மீதான பார்வையும் நம்பிக்கையும்' என்ற கட்டுரையில் பேசுகிறார். 'க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி'க்கான தளத்தினை நிர்மாணித்து, அவ்வகராதிக்குப் பூரண வடிவம் தந்தவர் பா.ரா. சுப்பிரமணியம் ஆவார்.

'ஜாஃபா கேக்கும் பில்டர் காப்பியும்: அகராதியியலில் சில சவால்கள்' என்ற க்ரெகரி ஜேம்ஸ் அவர்களின் கட்டுரை அகராதி மொழியின்மீது செலுத்தும் ஆதிக்கம், எவ்வாறு அகராதி மொழியில் உட்புகுந்துள்ள சொற்களைக் களை எடுக்கிறது, மொழியின்மீது விதிமுறைக் கட்டுப்பாடுகளை எவ்வாறு நியமிக்கிறது, ஒரு சொல்லின் சாதாரண, மக்கள் புழங்கும் கருத்தில் அர்த்தம் என்ன, சொல்லின் வரைவிலக்கணம் என்பதன் போதாமை, சட்டபூர்வமான விளக்கங்களில் சொற்கள் வியாக்கியானம் செய்யப்படும் முறை, அகராதியியலைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்துப் பேசும் சிறந்த கட்டுரையாகும்.

உயிரிழந்துபோன சொற்களைப் பதனப்படுத்தி வைக்கும் அரும் பொருட் காட்சியகமாகவே அகராதி பார்க்கப்படுகிறது. நடை முறையில் மொழி எவ்வாறு பாவிக்கப்படுகிறது என்பதைவிட, மொழியை எவ்வாறு செம்மையாகப் பயன்படுத்துவது என்று அதி



க்ரெகரி ஜேம்ஸ்

காரபூர்வமாக விதி செய்யும் ஓர் ஏற்பாடாகவே அகராதி நோக் கப்படுகிறது என்று இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே க்ரெகரி குறிக்கிறார்.

'ஆங்கில மரபுச் சொற்றொடரின் அர்த்தத்தை நிர்ணயம் செய் தலும் அதன் தூய்மையைப் பேணுதலுமே அகராதியின் பிரதான நோக்கம்' என்ற சாமுவேல் ஜோன்சன் கொண்டிருந்த கருத்து அக ராதியியலில் பெரும் செல்வாக்கு செலுத்தியவண்ணமே இருந்தா லும், இதற்கு மாற்றான கருத்துகளும் எழுந்தவண்ணமே உள்ளன. 'ஒரு சொல் எந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது என்று தெரியாத பட்சத்தில், ஒரு வார்த்தைக்கு எந்த அர்த்தமுமில்லை' என்று பிலிப் ரூபின் கூறுவதை க்ரெகரி ஜெம்ஸ் மேற்கோள் காட்டுகிறார்.

தக்காளி பழவகையைச் சேர்ந்ததா, காய்கறி வகையினத்தைச் சேர்ந்ததா என்ற கேள்வி அமெரிக்காவில் பெரும் சட்டப் பிரச் சினையை எழுப்பியது. தக்காளி என்பதற்கு அகராதி தரும் வரை விலக்கணங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டன. தக்காளி இறக்குமதிக்கு வரி விதிப்பது தொடர்பான வழக்கில், அமெரிக்க உயர் நீதிமன்றம், தக்காளி என்பது 'பொதுமக்களின் வழக்கின் பேரில்' காய்கறி என்று தீர்மானித்துத் தீர்ப்பளித்தது.

அதேபோன்று மீன்குட்டையில் அலங்கார மீன்கள் வளர்ப்பு, வரி விதிப்பிற்கு உட்படுத்தப்பட்டபோது கால்நடை வளர்ப்பில் மீன்கள் விலங்கின வகைக்குள் வரமாட்டாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இங்கிலாந்தில் பிரசித்திபெற்ற ஜாஃபா கேக் (Jaffa Cake) வழக் கில் ஜாஃபா கேக்கிற்கு vat வரி விதித்தல் பற்றிய பிரச்சினையில் அது கேக் வகையினமா? பிஸ்கட் வகையினமா? என்ற கேள்வி எழுந்தது. இந்த வழக்கில் ஆங்கில அகராதிகள் கேக், பிஸ்கட் என்பனவற்றிற்கு தந்த வரைவிலக்கணங்களை க்ரெகரி ஜேம்ஸ் தனது கட்டுரையில் விரிவாக ஆராய்கிறார். ஜாஃபா கேக், கேக் கின் குணாம்சங்களையும் பிஸ்கட்டின் குணாம்சங்களையும் ஒருசே ரக் கொண்டிருந்தபோதும் அது கேக்கின் குணாம்சங்களையே பெருமளவு கொண்டுள்ளது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவ் வாறு முடிவுக்கு வருவதற்கு ஒரு முக்கிய வேறுபாடு நீதிமன்றின் கருத்தில் கொள்ளப்பட்டது. அதாவது புதிய ஒரு கேக் நாட்பட்டுப் பழசாகிப்போனதும் தடிப்பாகிப்போகிறது. ஆனால், பிஸ்கட் நாளாகிப்போனதும் மெதுவாகிப்போகிறது.

கேக்கையும் பிஸ்கட்டையும் வேறுபடுத்தும்போது இவற்றிற்கி டையே காணப்படும் வேறுபாடுகள் பற்றிய தகவல்களில் எந்தளவு விபரங்களை ஓர் அகராதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. நுணுக்கமான விபரிப்பிற்கும் உள்ளடக்க வேண்டிய தகவல்களின் எல்லைப் பரப்பிற்கும் இடையே அகராதி சமரசம் காணவேண்டி ஏற்படுகிறது. ஜாஃபா கேக் என்பதற்கு ஓர் அகராதி தரக்கூடிய சாதாரண விளக்கம் என்ன? என்று வினா எழுப்புகிறார் க்ரகெரி ஜேம்ஸ்.

அகராதியியலைப் பற்றிய விழிப்புணர்வையும் அறிவையும் ஏற் படுத்தும் வகையில் ஆறாம் வகுப்பு முதற்கொண்டே பாடத் திட்டத்தில் 'அகராதியை அறிவோம்' என்னும் பாடத் தலைப்பைச் சேர்க்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தினை கிரகெரி ஜேம்ஸ் முன் மொழிகிறார்.

தங்க ஜெயராமன் தனது கட்டுரையில் சுட்டியிருக்கும் செல் நெறிக்கு ஆதாரமாக, பவல் ஹான்ஸ் என்ற செக் குடியரசின் தமிழ் ஆய்வு அறிஞரின் 'தற்காலத் தமிழ் இலக்கியத்தில் மொழிப் பயன்பாடு' கட்டுரை அமைந்திருக்கிறது. நவீன தமிழ் இலக்கியத்தின் ஆரம்பதிசையில் ஆதிக்க சாதியினரைச் சார்ந்த வர்களின் ஆதிக்கத்தில் இவ்விலக்கியம் இருந்ததற்கு மாறாக, இன்று சமூகத்தின் பலதரப்பட்ட தளங்களிலிருந்தும் பல வட்டார வழக்குகளின் பிரயோகத்துடனும் புதிய எழுத்தாளர்கள் கால் பதித்துள்ளனர்' என்று பவல் ஹான்ஸ் அவதானிக்கிறார்.



பவல் ஹான்ஸ்

இந்த வட்டார இலக்கியத்தின் வளர்ச்சி இன்று உச்சக் கட்ட வளர்ச்சியினை எட்டியுள்ளது என்றும், தமிழ் மொழியின் சகல தளங்களிலும் ஊடுருவி, அதன் செழுமையினைத் திரட்டித் தருவ திலும், தாம் வாழும் பிரதேசத்தின் மீதான பெரும் பாசத்தை வெளிப்படுத்துவதிலும், தங்கள் பிராந்தியங்களின் நாட்டார் வழக் காறுகளை ஆராய்வதிலும், அக்கலாச்சார முதுசத்தைப் பேணுவ திலும் தலித் எழுத்தாளர்கள் காட்டும் இந்த அக்கறை, அவர்கள் பிரயோகிக்கும் பன்முகப்பட்ட மொழிநடை, கையாளும் பொருட் பரப்பு, புனையும் பாணியும் (genre), லாவகமாக எழுதும் வட்டார வழக்குகள், பயன்படுத்தும் சொற்களஞ்சியம் என்பனவற்றில் வெளிப்படுகிறது என்கிறார் பவல் ஹான்ஸ்.

கி. ராஜநாராயணன் கரிசல் மண்ணின் வட்டார வழக்கு அகரா தியை 1988ல் வெளியிட்டபோது, அது விலைபோகாமலிருந்த நிலைமாறி, இன்று டசன் கணக்கில் வட்டார வழக்கு அகராதிகள் வந்துவிட்டன என்றும், இன்றைய தமிழ்ப் புனைகதையுலகில் மக் களின் பேச்சுமொழியில் எழுதுவதும், அவ்வப் பிராந்திய மொழி யைக் கையாள்வதும் நியமமான போக்காக மாறியுள்ளது என்கி றார் அவர்.

நியூயோர்க் மாநிலத்தின் சியனா கல்லூரியில் இணைப் பேராசிரிய

ராகக் கடமையாற்றும் பெருந்தேவி சீனிவாசன் இத்தொகுப்பில் எழுதியுள்ள 'நவீன தமிழ்க் கவிதையில் ஆங்கிலம்: தற்காலத்தை எழுதுதல்' என்ற ஆய்வுக் கட்டுரையும் மேலே கூறிய அறிஞர் களின் ஆய்வுக்கண்ணியின் அடுத்த மணியாகத் தொடர்கிறது.

மணிக்கொடிக்கால எழுத்தாளர்களில் பெரும்பான்மையோர் கற்ப



பெருந்தேவி சீனிவாசன்

னாவாதிகளாகவும், அவர்களின் தனிநபர்வாதம், அழகியல் முனைப்பு, சிருஷ்டி வேட்கை என்பன இடவேளைச் சூழல் களுக்கியைந்ததாகவும், உணர்வுநலன் கொண்டதாயும், சுயேச் சையான மொழி, நடை கொண்டதாயும் அமைந்தது என்றும், அவர்களுக்குத் தூய தமிழ் என்பது அருவருக்கத்தக்கதாயிருந்தது என்றும் கூறும் பேராசிரியர் க. கைலாசபதியின் கூற்றினை மேற் கோள் காட்டும் பெருந்தேவி, அறிஞர் பேட் (Bate) முன்வைக்கும் திராவிட பொது-அரசியல் மேடைப் பேச்சு (Public Space of Dravidian Political Oratory) கோட்பாட்டினை கைலாசபதியுடன் இணைத்து, அதற்கு மாற்றுக் கோட்பாடாக, நவீன தமிழ் இலக் கிய எழுத்தினை முன்வைத்து, இரட்டை மொழிவழக்கு சார்ந்து இருமைக் கோட்பாட்டாக்கத்தை உருவாக்குகிறார். நவீன தமிழ் இலக்கிய மொழி பற்றிய கருத்தோட்டத்தில் பேச்சுவழக்கினை ஒரு போதும் கைலாசபதி மறுத்தவர் அல்லர். ஈழத்தில் சாதி ஒடுக்கு முறை சார்ந்த புனைவிலக்கியத்தில் சனாதன - பண்டித மொழி மரபிற்கெதிராகத் தொடர்ந்து போராடிவந்தவர் பேராசிரியர் கைலா சபதி ஆவார்.

ஆனால், இந்த இருமுனைவாதப் போக்கு இன்றைய சிக்கலான தமிழ்ச் சூழலில் பொருத்தமற்றது என்று பெருந்தேவி கூறுகிறார். பேச்சுமொழியைக் கவிதையில் பிரயோகித்த போக்கிற்கு பாரதி யார், ந. பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன் ஆகியோரிலிருந்து பிர மிள், ஞானக்கூத்தன், பழமலய், இசை, மனுஷ்யபுத்திரன், பச் சோந்தி வரையிலான கவிதைப் பரப்பினைச் சிறந்த, சுவாரஸ்ய மான ஆய்வுக்குட்படுத்தியிருக்கிறார். நவீன தமிழ்க் கவிதையில் ஆங்கிலச் சொற்களின் பிரயோகம் உடனடித்தன்மை, நிகழ்காலத் தன்மை, நொடிக்குள் செயற்படுதல் ஆகிய விசேடித்த விளைவு-களை ஏற்படுத்திச் சமகாலத்தை உருவாக்குவதை, சமகாலத்தை எதிர்நோக்குவதைச் சிறந்த உதாரணங்களுடன் நுட்பமாக ஆராய்ந்திருக்கிறார் பெருந்தேவி.

'எடிட்டிங்' என்ற தலைப்பில் மினி கிருஷ்ணன் எழுதியிருக்கும் 'இலக்கிய மொழிபெயர்ப்பைச் சீரமைத்தல்: இந்தியச் சாளரத்தின் வழி ஒரு பார்வை' என்ற கட்டுரை, முப்பது ஆண்டுகளாகப் பல இந்திய மொழிகளிலிருந்து ஆங்கிலத்தில் மேற்கொள்ளப்பட்ட மொழி பெயர்ப்புகளைப் பதிப்பிப்பதில் கொண்டிருந்த அவரது ஆழமான அனுபவத்தினைப் பகிர்கிறது.

எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், எடிட்டர் ஆகிய மூவரில், எடிட் டரின் பிரசன்னம் என்பது எப்போதுமே வெளித்தெரியவராத மாயா வியின் தோற்றமாகவே இருந்திருக்கிறது. ஒரு மொழிபெயர்ப்புப் பிரதியைச் செம்மைப்படுத்துவது பற்றிய கலந்துரையாடலில், எடிட்டருக்கு எந்த இடமும் இல்லை என்று மினி கிருஷ்ணன், க்ரியா ராமகிருஷ்ணனிடம் பேசிக்கொண்டிருந்தபோது, 'குறைபடா தீர்கள்! எவ்வளவு வெளிக்குத் தெரியாமல் இருக்கிறோமோ அவ்வ ளவுக்கு நல்லது' என்று சொல்லியிருக்கிறார் ராமகிருஷ்ணன்.

நமது இந்திய இலக்கியங்கள் உலக வாசகப்பரப்பிற்குக் கொண்டுசெல்லப் படவில்லை என்றும், பல்வேறு சமகால இந்திய மொழி இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டிய தேவை மிகமிக முக்கியமானது என்று தனது கட்டுரையில் வலியுறுத்தும் மினி கிருஷ்ணன், மொழிபெயர்ப்பில் மாயப்பிரசன்னம் தரும் எடிட் டரின் பணியும் முக்கியமும் எத்தகையன என்பதையும் அழுத்திக் கூறுகிறார்.

'நாங்கள் பல நூற்றாண்டுகளை எங்களுக்குள் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம். இந்தியமொழி சார்ந்த எழுத்தாளன் கடந்துபோன ஒரு நூற்றாண்டுக் கதையைச் சமகால மொழியிலும் உத்திகளாலும் உருவாக்கவல்லவன்' என்ற யு. அனந்தமூர்த்தியின் கூற்றினை மேற்கோள் காட்டும் மினி கிருஷ்ணன், மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்பில் பெரும் சவால்களை எதிர்கொள்கிறான் என்



மினி கிருஷ்ணன்

கிறார். இத்தாலி, பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்ப வர்களின் பிரதிகளில் வெளியீட்டாளர்கள் எந்த அளவிற்கு எடிட் டிங் செய்கிறார்கள்? என்று அந்தந்த மொழிகளில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளும் எழுத்தாளர்களிடம் கேட்டபோது, தங்களது மொழி-பெயர்ப்பில் 2 இலிருந்து 5 வீதமான பகுதிவரை எடிட் பண்ண அனுமதிப்போமே தவிர, அதற்கு மேல் அனுமதிக்கமாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், ஆங்கில எடிட்டராக இருக் கும் ரிட்டு மேனன் தனது ஆங்கில மொழிபெயர்ப்புகளை, பத்துத் தடவைகளாவது 'இங்லிஷ்' பண்ணவேண்டி இருக்கிறது என்கிறார்.

'புத்தக ஆங்கிலத்தில்' வளர்ந்த இரண்டு தலைமுறை இந்தி யர்கள் கற்பிதப்படுத்தப்பட்ட நியம ஆங்கிலத்தில் (Imagined Standard English ) நெறிப்படுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய ஆங் கில மனப்போக்கினால், இந்திய எழுத்தாளர்களது சிருஷ்டிகளின் தனித்துவம் 30 வீதம் மொழிபெயர்ப்பில் கரைந்துபோய்விடுகிறது என்கிறார் மினி கிருஷ்ணன். எழுத்துநடையில் தத்தமக்கென விசேஷ தனித்துவம் கொண்ட புதுமைப்பித்தன், ப. சிங்காரம், சு.ரா, அசோகமித்திரன், தோப்பில் முஹம்மது மீரான், அம்பை, இமையம் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளின் தனித்துவம் ஆங்கிலத்தில் கரைந்துதான் போயிருக்கிறது என்கிறார் அவர்.

மொழிபெயர்ப்பாக்கத்தில் எடிட்டிங் என்பதன் முக்கியத்தை அழுத் தமாகப் பதிவுசெய்கிறார் மினி கிருஷ்ணன்.

'க்ரியா ராமகிருஷ்ணன்: தமிழில் முன்னுதாரணமில்லாத ஒரு எடிட் டர்' என்ற தலைப்பில் தே. ஆசைத்தம்பி தந்திருக்கும் கட்டுரை,

தமிழில் இன்று எடிட்டிங் பற்றி நிலவும் தவறான கருத்துகளின்


தே. ஆசைத்தம்பி

மத்தியில், நேர்த்தியாக எடிட்டிங்கின் முக்கியத்தை ராமகிருஷ்ணனை முன்வைத்துப் பேசுகிறது. ராமகிருஷ்ணனின் எடிட்டிங் பற்றிய கட்டுக்கதைகளை உடைத்து, அவரின் பதிப்புப்பணியினை நேரில் இருந்து பார்த்து, அனுபவித்த உணர்வின் பலத்தில் நின்று பேசும் சிறந்த கட்டுரை இதுவாகும்.

இன்றைய தமிழின் முக்கிய எழுத்தாளரான இமையத்தின் பதின்மூன்று நாவல்களை, க்ரியா ராமகிருஷ்ணன் எடிட் செய்து பதிப்பித்திருக்கிறார். 'க்ரியா ராமகிருஷ்ணனும் என் கதைகளும்' என்ற தலைப்பில் இமையம் எழுதியிருக்கும் கட்டுரை, ஒரு நூலாக்கத்தில் எடிட்டர் என்பவரின் பங்கு எத்தகையது என்பதற்கு ஒரு பாடநூல் இலக்கணமாக ராமகிருஷ்ணன் திகழ்ந்திருக்கிறார் என்பதைப் பேசுகிறது. 'பள்ளியில், கல்லூரியில் மொழி அறிஞர்கள் கற்றுத்தராதவற்றையெல்லாம் எனக்குக் கற்றுத்தந்தவர் ராமகிருஷ்ணன்' என்கிறார் இமையம் என்ற பள்ளி ஆசிரியர்.

'புத்தக அழகியல் பற்றிச் சில பார்வைகள்' என்ற கட்டுரையை எழுதியிருக்கும் வின்சென்ஸோ லெத்த, இத்தாலிக்காரர். இத்தாலியப் பதிப்பகத்தில் வடிவமைப்பாளராகப் பணியாற்றுபவர். கணினிக் கலை, மேடை நாடக ஒளியமைப்பு, ஒலி-ஒளி ஆக்கங்கள், ஆவணப்படங்களின் புகைப்பட நுட்பம் ஆகியவற்றில் தொழில்


வின்சென்ஸோ லெத்த

முறைத் திறன்மிக்க வின்சென்ஸோவ லெத்த, இத்தொகுப்பின் கட்டுரையாளர்களில் ராமகிருஷ்ணனுடன் நேரடிப் பரிச்சயம் அற்றவர் இவர் ஒருவரே! எனினும் புத்தக அழகியல் இந்த இருவரையும் நெருக்கமான புள்ளியில் இணைத்திருக்கிறது. புத்தக அழகியல் பற்றிய அறிவார்ந்த சிறந்த கட்டுரை இதுவாகும். காலவெளியில் நிலைத்து நிற்கப்போகும் ஒரு புத்தகம் எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டும் என்ற அக்கறை, அந்த நூலின் உள்ளடக்க அம்சத்திலும் பார்க்க, கூடிய முக்கியத்துவம் கொண்டது என்கிறார் வின் சென்ஸோ.

பென்குயின், கடலாமை என்ற இரண்டு ஜீவிகளை ஒப்புமை காட்டும் அவர், பென்குயின் ஒரே ஒரு குஞ்சை உருவாக்கி, பிறந்ததிலிருந்து அது தன்னைத்தானே பார்த்துக்கொள்ளும்வரை கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக்கொள்ளும். கடலாமை பல முட்டைகளைப் பாதுகாப்பான இடத்தில் இட்டுவிட்டுப் போய்விடுகிறது. அவை பொரித்து வெளியில் வந்ததும் தன்பாட்டில் அவை தம்மைப் பாதுகாத்துக்கொள்கின்றன. கடலாமை அவற்றைப் பாதுகாப்பதில்லை.

அச்சின் வருகைக்கு முன்னரான புத்தகத் தயாரிப்பானது, பென்குயின் குஞ்சு பொரிப்பதைப் போன்றது. அப்போது புத்தகங்கள் கையில் எழுதப்பட்டன. அந்நூலின் ஒரு பிரதியோ அல்லது மிகச் சில பிரதிகளோதான் தயாரிக்கப்பட்டன. கிறிஸ்தவ மடாலயங்களிலும் கன்னிமடங்களிலும் தனி ஆணைகளின் கீழ், மிக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அவை தயாராகின. இந்நூல்கள் வாசகர்களின் அதி உயர் குழுமத்திற்காக உருவாக்கப்பட்டவை. அச்சியந்திரத்தின் வருகையுடன், நகராக்கமும் இணைந்து, வாசிப்புப் பரவலாக்கத்துடன் வாசகர் கூட்டம் உருவானது. இக்கட்டத்தில்தான் புத்தகம், விற்பனை செய்யக்கூடிய ஒரு பண்டமானது. அச்சு வச-


ஓவியர் மணிவண்ணன்

திகளுடன் பெருந்தொகைப் பிரதிகளை அச்சிட்டு நூல்களை வெளியிடக்கூடிய புத்தகச் சந்தை தோற்றம் பெறுகிறது. இந்தப் புரட்சிகர மாற்றங்களுடன் புத்தகத்தின் அழகியலும் மாற்றமுறத் தொடங்கியது. முதலில் ஒரு திசைகாட்டியாகத் திகழ்ந்த புத்தகமானது, தற்போது தொடர்பாடலுக்கான தொழிற்பாட்டைக் கொண்டு, விற்பனையை மையமாக்கியுள்ளது. வாசகரை வசப்படுத்துவது அதன் முக்கிய இலக்காகிப்போனது.

புத்தகத்தின் அழகியல் என்பது ஒருவரின் விருப்பத் தேர்வு அல்ல. புத்தக உருவாக்கத்தில் அழகியல் என்பது தவிர்க்கப்படக் கூடிய ஒன்றல்ல அதனைச் சேர்க்காமல் விடுவதற்கில்லை என்கிறார் வின்சென்ஸோ லெத்த. லொனார்டோ டவின்சி, டெக்கமேரோன் ஆகிய நூல்களின் வடிவமைப்பை படவிளக்கத்தோடு விளக்கும் வின்சென்ஸோ லெத்த, 'அழகு மட்டுந்தான் உலகத்தைக் காக்கவல்லது' என்ற மேற்கோளோடு தனது கட்டுரையை அழகாக முடித்திருக்கிறார்.

'ஒரு புத்தகத்தின் புற அமைப்பு அதன் உள்ளடக்கத்தின் ஆன்மாவைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்' என்ற ராமகிருஷ்ணனின் கூற்றை மேற்கோள் காட்டும் ஓவியர் மணி-

வண்ணன், ராமகிருஷ்ணனுடன் நான் வேலைசெய்த அந்த ஒட்டு மொத்த அனுபவம்தான் இன்றுவரை நான் செய்து கொண்டிருக் கும் முகப்பு ஓவியங்களுக்கு ஒரு அஸ்திவாரம் அமைத்துக் கொடுத்தது என்கிறார். ஒரு ஓவியக் கலைஞனாக என் முழுப் பங் களிப்பையும் ஒரு புத்தகத்தின் முகப்பின் வடிவமைப்பிற்குக் கொடுத்திருந்தாலும், கதைக்குத் தக்க நுணுக்கங்கள், நுட்பமான செய்நேர்த்தி, வெளிப்படுத்தும் முறை ஆகியவை எல்லாம் நான் ராமகிருஷ்ணனிடமிருந்து உள்வாங்கிக்கொண்டவை என்ற தன் அனுபவத்தைப் பகிர்கிறார் மணிவண்ணன். க்ரியாவின் புத்தக அழகியலுக்கு ஓவியர் மணிவண்ணன் தரும் சான்றிதழ் பெறுமதி-மிக்கது.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் தென்னாசிய மொழிகள், நாகரீகங் கள், ஒப்பியல் இலக்கியத் துறையின் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றும் சாஷா ஏபெலிங் அவர்களின் 'தமிழ் மொழிபெ



சாஷா ஏபெலிங்

யர்ப்பில் உலக இலக்கியங்கள்: வரலாற்றுப் பார்வைக்குச் சில குறிப்புகள்' என்ற கட்டுரை க்ரியா ராமகிருஷ்ணனின் இதயத்திற்கு நெருக்கமான ஒரு துறை குறித்துப் பேசுவது இத்தொகுதிக்குச் சிறப்புச் சேர்க்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து மேற் கொள்ளப்பட்ட பிறமொழி இலக்கிய மொழிபெயர்ப்புகளும், பொதுவாக உலக இலக்கியத்தில் காட்டப்பட்ட ஈடுபாட்டின் அதி-கரிப்பும் நவீன தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு முக்கிய செழுமை யைக் கொடுத்திருக்கிறது என்கிறார் சாஷா. தமிழ் மொழிபெயர்ப் பில் உலக இலக்கியம் பற்றிய முழுமையான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படாத நிலையில் தனது இந்த ஆய்வுக்கட்டுரை ஓர் ஆரம்பகட்ட வரைவுதான் என்கிறார் அவர்.

தமிழ் இலக்கியச் செயற்பாடுகள் 1850களில் அதிகரிக்கத் தொடங் கியபோது, தமிழ் மொழிபெயர்ப்புகளும் புதிய தமிழ்ப் படைப்புக ளும் ஏககாலத்தில் வாசகர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. உலக இலக்கியத்தை வாசித்து அவற்றுடன் பரிச்சயம் கொண்ட எழுத் தாளர்கள் அவற்றை நேரடியாக மொழிபெயர்ப்பதை விடுத்து, தாமே சுயமான படைப்புகளைத் தமிழில் தர முயன்றனர். தமிழில் ஆரம்பகால மொழிபெயர்ப்புகளை ஆராயும்போது அதனைப் பத் தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தின் பரந்த இலக்கியக் களத்தின் பின்னணியில் அணுக வேண்டும் என்கிறார் சாஷா. நாவல், வசன நடை இலக்கியம் என்பனவற்றின் எழுச்சியுடன் இலக்கியத்தை சமூகச் சீர்திருத்தத்திற்காகப் பயன்படுத்தும் கருத் தியலுடன் புதிதாக அரும்பும் நவீனத்துவத்தை அதன் எல்லா வடி வங்களிலும் வெளிப்படுத்தவல்ல, அக்கறை செலுத்தக்கூடிய புதிய சுதேச மொழிகளை உருவாக்கும் இயக்கப் போக்குடன் இணைத்துப் பார்க்க வேண்டும் என்கிறார். அவ்வாறு நோக்குகை யில் பாரதியாரின் கவிதைகளோடு நவீன தமிழ் இலக்கியம் தோன்றுகிறது என்று வழமையாகக் கூறப்பட்டு வருவதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னரேயே நவீன தமிழ் இலக்கியத்தின் கூறுகள் தோன்றிவிட்டன என்கிறார் சாஷா.

ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்கள் 1870 - 1920 காலப்பகுதி யில் தமிழில் எந்தெந்த நோக்கில் மொழிபெயர்க்கப்பட்டன என் பது பற்றிய சுவாரஸ்யமான ஆய்வை சாஷா இக்கட்டுரையில் தந் திருக்கிறார். இக்காலப்பகுதியில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் குறைந்தது 91 தமிழ் மொழிபெயர்ப்புகள் கிடைக்கின்றன என்ற நாடக அரங்கியல் ஆய்வாளர் பூணம் திரிவேதி தரும் தகவலை மேற்கோள் காட்டுகிறார் சாஷா.



வெ. ஸ்ரீராம்

காஃப்காவின் சிறுகதையை 'எலி சொல்லுகிறது' என்ற தலைப்பில் புதுமைப்பித்தன் மொழிபெயர்த்ததை, ஜேர்மனிய மொழி மூலத் திலும் ஆங்கில மொழிபெயர்ப்பிலும் ஒப்பிட்டு நோக்குவதிலும், மேக்சிம் கோர்க்கியின் 'தாய்' நாவலின் முதல் வாக்கியத்தினை ரஷ்ய மூலத்துடன் சிதம்பர ரகுநாதனின் மொழிபெயர்ப்பை ஒப் பிடுவதிலும் சாஷா ஏபெலிங் வெளிப்படுத்தும் பன்மொழிப் புலமை வியப்பூட்டுவது.

தமிழின் நவீன இலக்கியத்தில் மொழிபெயர்ப்புகள் சார்ந்து மேற் கொள்ள வேண்டிய புலமை ஆய்வின் தேவையை சாஷா ஏபெலிங்கின் இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

பிரெஞ்சிலிருந்து தமிழுக்கு நேரடியாகப் பதினொரு நூல்களை க்ரியாவின் மூலமாக வெளிக்கொணர்ந்த வெ. ஸ்ரீராமின் 'பிரெஞ்



மீனாட்சி ஹரிஹரன்

சிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு: புத்தகத் தேர்வும் நேரடி

மொழிபெயர்ப்பும்' என்ற கட்டுரை வெவ்வேறு பிரெஞ்சு நூல்கள் தமிழ் மொழிபெயர்ப்பின்போது எத்தகைய பிரச்சினைகளைத் தருகின்றன என்பதை நுட்பமாக விபரிக்கிறது.



சி.டி. இந்திரா

பிரெஞ்சு-தமிழ் மொழிபெயர்ப்புகளின் கனதியான இலக்கியத் தொகுப்பினை நாம் உருவாக்க வேண்டும் என்ற ராமகிருஷ்ண-னின் கனவு அவரின் மறைவினால் முற்றுப்பெறாமல் போய்விட்டது என்ற துயரக் குறிப்புடன் ஸ்ரீராம் தனது கட்டுரையை நிறைவு செய் கிறார்.

'ஆஸ்திரேலிய இளையர் புதின மொழிபெயர்ப்பு: பிரச்சினைகளும் சவால்களும்' என்ற மீனாட்சி ஹரிஹரனின் கட்டுரையே இத் தொகுப்பில் 42 பக்கங்களைக் கொண்ட நீண்ட கட்டுரையாகும்.




டேவிட் ஷுல்மன்

'தமிழ்நாட்டில் புத்தகப் பண்பாடு வேர்கொள்ளவில்லை என்பது, ஏழு கோடித் தமிழர்கள் இருக்கும் தமிழ்நாட்டில் ஒரு புத்தகம் சராசரியாக இன்னமும் ஆயிரம் பிரதிகள்தான் அச்சடிக்கப் படுகின்றன என்பதிலிருந்து புலப்படும்' என்ற க்ரியா ராமகிருஷ்-ணனின் குறிப்பினை மேற்கோள்காட்டும் மீனாட்சி, தனது தமிழ் மொழியாக்கத்தில் ராமகிருஷ்ணன் காட்டிய சிரத்தையை நினைவு கூர்கிறார்.

ஆஸ்திரேலிய எழுத்தாளர் ஹேசல் எட்வர்ட்ஸ் எழுதிய Fake Id 2002 என்ற techno-gothic வடிவத்திலிருக்கும் ஒரு கொலைக்கதையினை 'போலி அடையாளம்' என்ற தமிழ் நூலாக மொழிபெயர்த்ததில் கணினி கலைச் சொற்களையும் ஆஸ்திரேலிய வழக்கு மொழிச் சொற்களையும் சமகாலத் தமிழில் கொண்டுவர ராம-கிருஷ்ணன் எவ்வாறு உதவினார் என்று தொகையான உதாரணங் கள் காட்டி தனது நீண்ட கட்டுரைக்கு நியாயம் செய்திருக்கிறார் மீனாட்சி ஹரிஹரன்.

ராமகிருஷ்ணன் ஒரு நூலின் உள்ளடக்கத்திற்கு மட்டுமல்ல, நூலின் வெளிப்புறம் எவ்வாறு அமைகிறது என்பதையும் கவனத்தில் கொள்பவர். புத்தகம் எந்த ரகத் தாளில் அச்சிடப்படவேண்டும், எழுத்துருக்கள், அட்டை வடிவமைப்பு எவ்வாறு அமைந்தால் நூலை வாசிக்கிற ஒரு வாசகருக்கு மனதிற்கு நிறைவையும் அழகியல் உணர்வையும் ஊட்டுவதாக அமையும் என்பது குறித்து மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்பவர் என்று, இத்தாலியில் டுஷா பல்கலைக்கழகத்தில் மொழியியலில் ஆய்வாளராகப்பணிபுரியும்



இ. அண்ணாமலை

கிரிஸ்டினா முரு, ராமகிருஷ்ணன் பற்றிய தனது நினைவேந்தல் கட்டுரையில் குறிக்கிறார்.

இந்நூல் தமிழில் புத்தகக் கலாச்சாரம் பற்றி நமக்குக் கிடைத் திருக்கும் அரிய பொக்கிஷம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலப் பேராசிரியையாகத் திகழ்ந்த சி.டி. இந்திரா இந்நூலுக்கான அறிமுகத்தை அற்புத மாக எழுதியிருக்கிறார். யேல் பல்கலைக்கழகம், சிகாகோ பல் கலைக்கழகங்களின் ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியரான இ. அண்ணாமலை இந்த ஆய்வரங்கினை ஒழுங்குபடுத்தி, இந் நூலின் ஆக்கத்தில் முக்கிய பங்கு வகித்ததுடன், அரிய முத் தாய்ப்பாக ஒரு பின்னுரையினை நல்கியுள்ளார். ராமகிருஷ்ணன், அவரின் சமகாலத்தவர்களாலும் பின்வரும் சந்ததியினராலும் ஏன் நினைவு கூரப்பட வேண்டும் என்று தனது பின்னுரையில் குறிக் கிறார். புத்தகக் கலாச்சாரத்தை தமிழ்ச் சூழலில் வளர்த்தெடுப்பதி லும், பரிசோதனை முயற்சிகளிலும், புத்தக நேர்த்தியில் பூரணத் துவத்தை எட்டுவதிலும், புத்தக வெளியீட்டை வாணிபமாக அல் லாமல் சமூக லட்சியமாக முன்னெடுத்ததிலும், நூல் வெளியீட் டிற்கு மிக உயர்ந்த நியமங்களை வரையறுத்ததிலும், எழுத்து மொழியிலும் பேச்சுமொழியிலும் நிலவும் தொடர்புத் தடைகளை ஊடுருவி, தற்காலத் தமிழ்மொழிக்கு சிருஷ்டிகரத்தை வழங்கும் புதிய தடங்களைச் செப்பனிட்டதிலும் ராமகிருஷ்ணன் என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர் என்பதை பேராசிரியர் அண்ணா-மலை இக் குறிப்பில் நிறுவுகிறார்.

தமிழில் புத்தகக் கலாச்சாரம் பற்றிய துறையில் ஒரு பொக்கிஷத்தைத் தந்திருக்கிறார் அண்ணாமலை அவர்கள்.

(நிறைவு)



nithiyananthan.m@thaiveedu.com


வீடு வியாபாரம் காணி வாங்க விற்க அழையுங்கள்!
BUY & SELL HOMES, BUSINESSES, LAND & MORE!

REAL ESTATE HALL OF FAMER
PAT PUSHPAKANTHAN
FULL-TIME BROKER | 20 YEARS OF EXPERIENCE

416-894-1187
WWW.PATPUSH.COM

- FREE BUY & SELL DEALS*
- FREE STAGING*
- FREE HOME MARKET ANALYSIS
- NEW CONDO VVIP PRIORITY ACCESS
- FREE HOME INSPECTION*
- FREE HOME SELLING SERVICES*
- FREE INVESTMENT STRATAGIES CONSUTING*

RESIDENTIAL & COMMERCIAL RENTAL SERVICES & PROPERTY MANAGEMENT SERVICES AVAILABLE •



COMMITMENT | RELIABILITY | PROFESSIONALISM

CENTURY 21 Century21 Affiliate Realty Inc.
111 Morland Cres, Aurora, ON OFF:416-290-1200

The dependable realtor you've been looking for.
nhome2025@gmail.com

Each office is individually owned and operated * conditions apply. Not intended to solicit clients those are under contract.



Bringing Your Dreams To Life!

மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி

Mahesan Subramaniam
BROKER

RE/MAX
REAL ESTATE CENTRE INC. BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Free Home Evaluation with No Obligation

416-816-0141



141-1140 Burnhamthorpe Road West, Mississauga, ON L5C 4E9
Office : 905-270-2000 Fax : 905-270-0047
* Not intended to solicit properties already listed for sale, or buyers under contract.

# இலங்கைத் தமிழ்வெளியில் கம்யூனிஸ்ட் அறிக்கை

- ச. சத்யதேவன்


175 ஆண்டுகளுக்கு முன் உலகத் தொழிலாளர்களிடையே பரவி புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு முறையே 30, 28 வயதானவர்களான கார்ல் மார்க்ஸ்சும் பிரெடிக் எங்கல்ஸ்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதினார்கள். உலகளவில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட, அதிக செல்வாக்கு செலுத்திய அரசியல் ஆவணமாகவும், அதிகமான மொழிகளில் மொழி-பெயர்க்கப்பட்ட நூல்களில் பைபிளுக்கு அடுத்ததாகவும் கம்யூனிஸ்ட் அறிக்கையே உள்ளது. 1848ல் ஜேர்மன் மொழியில் ஒரு புலமைசார் ஆய்வாக அல்லாமல் ஓர் அரசியல் வேலைத் திட்டமாக எழுதப்பட்ட அது, ஒரு சரித்திர ஆவணமாகவும் சமூக, பொருளாதார ஆய்வாகவும் அமைந்துள்ளது.

பல்வேறு மொழிகளிலும் பிராந்தியங்களிலும் 50 ஆண்டுகளுக்குள்ளாகவே இம்மொழியாக்கங்கள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. அடிப்படைக்கூறுகளில் மாற்றங்கள் இல்லாத போதிலும் உலகெங்கிலும் நடைபெற்ற நிகழ்ச்சிப் போக்குகளின் அடிப்படையில் அறிக்கையில் ஏற்படவேண்டிய மாற்றங்களும் திருத்தங்களும் அதன் முகவுரைகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மார்க்ஸ்-சின் மறைவின் பின்னர் 1893ல் இத்தாலியப் பதிப்புக்கு எங்கல்ஸ் எழுதிய முகவுரையிலேயே அதன் இறுதி இற்றைப்படுத்தல் செய்யப்பட்டது.

1922ல் ராம்சோத்தாஸ் புவன் லோட்வாலா என்பவரால் ரகசியமாக இந்தியாவுக்கு கடத்திக் கொண்டுவரப்பட்ட ஆங்கில மொழியாக்கத்தினூடாக தென்னாசியாவுக்கு கம்யூனிஸ்ட் அறிக்கை அறிமுகமாகியது. (பெரும்பாலும் இது 1888 ஆங்கிலப் பதிப்பாக இருக்க வேண்டும்). இந்தியத் துணைக்கண்ட மொழிகளில் முதன்முதலில் வங்காளியிலும் அதனைத் தொடர்ந்து உருது, மராத்தி ஆகிய மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது.

தமிழுக்கு கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் அறிமுகம் பெரியாரால் வெளியிடப்பட்ட வார இதழான 'குடியரசு இதழ்' மூலமாகவே நடைபெற்றது. 1931.10.04ம் திகதிமுதல் தொடர்ச்சியாக ஐந்து இதழ்களில் 'சமதர்ம அறிக்கை' என்னும் தலைப்பில் கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதல் பகுதி (பூர்ஷ்வாக்களும் கம்யூனிஸ்டுகளும்) வெளிவந்தது. மொழி பெயர்ப்பாளரின் பெயர் அதில் குறிப்பிடப் படவில்லை. 1931.11.01 திகதிய குடியரசு இதழில் அறிக்கையின் முதல் பகுதியின் கடைசிப் பந்தி வெளிவந்தது. 'இத்துடன் முதல் பாகம் முடிந்தது. இனி அடுத்த பாகம் வெளிவரும்' என்ற குறிப்பை வெளியிட்டிருந்த போதிலும், அதன் பின்னர் அறிக்கையின் பிற பகுதிகள் வெளிவரவில்லை. பொது மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் 90 ஆண்டுகளுக்கு முன்பே குடியரசு இதழ் செய்த முன்னோடியான ஆனால் குறையான கம்யூனிஸ்ட் அறிக்கையின் தமிழ் மொழியாக்கப் பணி மிகவும் முக்கியமானது. இருந்த போதிலும் கம்யூனிஸ்ட் அறிக்கையின் முழுமையான தமிழ் மொழிபெயர்ப்பு, அறிக்கை வெளியிடப்பட்டு நூறு ஆண்டுகளுக்கு பின்பு 1948ல் தான் வெளிவந்தது.

1948ம் ஆண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரு கட்சிகளாலும் அது முழுமையாகத் தமிழ்ப் படுத்தப்பட்டது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மொழிபெயர்ப்பு எஸ். இராமசாமி ஐயர் மற்றும் எஸ்.கே. கந்தையா ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டு 1948 பெப்ரவரியில் வெளியிடப்பட்டது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு எம். இஸ்மத் பாஷாவால் தமிழாக்கப்பட்டு ஜனசக்தி பிர-சுராலயத்தால் 1948ல் வெளியிடப்பட்டது. அதுமுதல் சமகாலம்




வரைக்குமான 75ஆண்டுகளில் தமிழில் கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு 09 மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. எஸ்.வி. இராஜதுரையின் விளக்கக் குறிப்புக்களுடன் கூடிய வெளியீட்டையும் சேர்த்தால் 10 மொழிபெயர்ப்புக்களாகின்றன. தமிழகத்திலிருந்து 07 மொழிபெயர்ப்புகளும் இலங்கையிலிருந்து 03 மொழிபெயர்ப்

புகளும் வெளிவந்துள்ளன. ஆயினும் 1979ல் வெளியிடப்பட்ட 1888 ஆங்கில பதிப்பை மூலமாகக் கொண்டு ரா. கிருஷ்ணையாவால் மொழிபெயர்க்கப்பட்டு, முன்னேற்றப் பதிப்பகத்தால் வெளியிடப் பட்ட பதிப்பே தமிழ்வெளியில் பரவலாக அறியப்பட்டதும் அங்கீ-கரிக்கப்பட்டதுமான மொழிபெயர்ப்பாக உள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் செய்யப்பட்ட தமிழ் மொழி பெயர்ப்பு 1948 ஜனவரியில் வெளியிடப்பட்டிருந்தாலன்றி, கம்யூ னிஸ்ட் அறிக்கையின் முழுமையான முதல் தமிழ் மொழி பெயர்ப்பாக அமையாது. (இம் மொழிபெயர்ப்பு என் பார்வைக்கு கிடைக்கவில்லை ஆதலால் வெளியீட்டு விபரங்கள் உறுதிப் படுத்தப்படவேண்டும்). ஆகையால் எஸ். இராமசாமி ஐயர் மற்றும் எஸ்.கே. கந்தையா ஆகியோரால் தமிழாக்கப்பட்டு 1948 பெப்ர வரியில் இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ் மொழிபெயர்ப்பே கம்யூனிஸ்ட் அறிக்கையின் முழுமையான முதல் தமிழ் மொழிபெ யர்ப்பாக கருதவேண்டியுள்ளது. வெளிவந்து 75 ஆண்டுகளாகின்ற போதிலும் இலங்கை மொழிபெயர்ப்பு குறித்து கம்யூனிஸ்ட் அறிக்கை குறித்த கருத்தாடல்களில் தவறவிடப்பட்டுள்ளது. இம் மொழிபெயர்ப்பு குறித்த தகவல்கள் கிடைக்காமை இதற்கான கார ணமாக இருந்திருக்கலாம் என்பதால் அது குறித்து சற்று விரிவாக பதிவுசெய்வது அவசியமாகிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கமிட்டி இம்மொழி பெயர்ப்பை வெளியிட்டுள்ளது. 'கம்யூனிஸ்ட் அறிக்கை' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட இது அட்டை தவிர்த்து 74 பக்கங் களை கொண்டுள்ளது. முன்னட்டையில் 'கார்ல் மார்க்ஸ்' என்ற படவிளக்கத்தோடு கார்ல் மார்க்ஸ்சின் படமும் அதன் கீழே 'கம்யூ னிஸ்ட் அறிக்கை' என்றும் அச்சிடப்பட்டுள்ளது. அறிக்கையின் பின்னட்டையில் அக்காலத்தில் விற்பனைக்கு இருந்த தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மார்க்சிய நூல்கள் பற்றிய விபரங்களுடன் யாழ்ப்பாணம், நல்லூர் 'லலிதாவிலாஸ் புத்தகசாலை' விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது. 'சோவியத் கம்யூனிஸ்ட்கட்சி சரித்திரம்', 'தொழிற்சங்கம்', 'கூலிஉழைப்பும் மூலதனமும்', 'இன்றைய இந் தியா - 2 பாகங்கள்' ஆகிய நூல்கள் விற்பனைக்குள்ளதாக விளம்பரப்படுத்தப்பட்டள்ளன.

தலைப்பு பக்கத்தில் 'கம்யூனிஸ்ட் அறிக்கை' என்ற தலைப்பும் 'எழுதியவர்கள் கார்ல் மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கல்ஸ்.' என்று முள்ளது. அதற்கு அடுத்ததாக 'மொழி பெயர்ப்பு: எஸ். இராம-சாமி ஐயர், எஸ்.கே. கந்தையா' என்பது உள்ளது. கீழே 'பதிப் பாளர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கமிட்டி, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்' எனக் குறிப்பிட்டு 75 சதம் என விலை குறிக்கப்பட்டுள்ளது. அதன் உட்பக்கத்தில் (verso page) 'முதற்பதிப்பு: 1948 பெப்ரவரி' என்பதுவும் 'உலகத் தொழிலாளர் களே! ஒன்று சேருங்கள்!' என்பதுவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த பக்கத்தில் பதிப்புரை 18-02-1948 திகதியிடப்பட்டுள்ளது. இவற்றுடன், அச்சக முகவரி போன்றவற்றின் விபரங்களிலிருந்து இலங்கை தமிழ் மொழிபெயர்ப்பு 1948-02-18 அன்று இறுதி செய் யப்பட்டு 1948-02-20 அன்று Sri Shanmuganatha Pressஇல் அச்சடிக் கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

*'ஐரோப்பாவை கம்யூனிஸப் பூதம் பயமுறுத்துகிறது என்று ஐரோப்பிய பிற்போக்காளர்கள் பொய்யாகப் பயமுறுத்திக் கொண்டிருந்தபோது 1848ல் கம்யூனிஸ அறிக்கையை மார்க்சும் ஏங்கல்ஸ்சும் எழுதி வெளியிட்டார்கள். அறிக்கையின் நூறாவது ஆண்டாகிய 1948ல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், அவர் களை பின்பற்றும் ஒவ்வோர் தேசத்துப் பிற்போக்குக் கும்பலும் கம்யூனிஸ பூதம் பற்றியே ஓயாது உளறுகின்றனர். இன்று ஒவ் வொரு தேசத்திலும் கம்யூனிஸ்ட் இயக்கம் வளர்கின்றது. சோவி யத் நாட்டில் மார்க்ஸ் ஏங்கல்ஸ் கோட்பாடுகள் நடைமுறைக்கு வந்து முப்பது ஆண்டுகள் ஆகின்றது. ஆயினும் கம்யூனிஸத் தைப் பற்றிய துர்ப்பிரசாரத்தை எதிர்க்க வேண்டியிருக்கிறது. கீழைத் தேசங்களின் இயல்புக்கு கம்யூனிஸம் மாறானது. மேலைத்தேச ஜனநாயக முறைக்கும், அது மாறாதெனக் கூறப் படும் பொய்களை அழிக்கவேண்டும்'*

என்பதற்காகவும்

*'கம்யூனிஸ்ட் அறிக்கை உலகசரித்திரப் போக்கை துருவி ஆராய்ந்தெழுதப்பட்டது. அதிலுள்ள கருத்துக்கள் ஒவ்வொன்றும் விரிவாக வளரக்கூடியன. இவ்வறிக்கையிலிருக்கும் ஒவ்வொரு வசனமும் சிந்தனைக்கிளையாக வளர வேண்டியது. அப்படி வளர்ந்து உலக சரித்திரத்தின் பல அம்சங்களையும் இக்கருத் துக்கள் தெட்டத்தெளிவாக விளக்கக் கூடியன. எனவே, தமிழன்பர் மொழிபெயர்க்கப்பட்ட இவ்வறிக்கையை வசனம் வசனமாக, ஆராய்ந்து படிக்க வேண்டும் அப்போது கம்யூனிஸம் உலக இயல்பின் போக்கில் தவிர்க்க முடியாது வளர்வது, ஒவ்வோர் தேசத்துக்கும் ஏற்றது என்பது விளங்கும். கம்யூனிஸம் ரஷ்யச் சரக்கல்ல. அது ஓர் உலகதத்துவம் என்பதை தமிழன்பர் உணர வேண்டும் என்ற ஆவலினால்'*

அறிக்கையை மொழிபெயர்த்து நூறாவது ஆண்டில் வெளியிடுவ தாகக் பதிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னுரை மற்றும்...


I. பூர்ஷ்வாக்களும் புரோலிட்டேரியட்டுக்களும்
II. புரோலிட்டேரியட்டுகளும் கம்யூனிஸ்டுகளும்
III. சோஷலிஸ்ற் கம்யூனிஸ்ற் நூல்கள்
IV. தற்போதுள்ள சகல எதிர்க்கட்சிகள் தொடர்பாக கம்யூனிஸ்டுகள் எடுக்கும் நிலை

ஆகிய 04 பகுதிகளாக தலைப்பிடப்பட்டு மொழிபெயர்க்கப் பட்டுள்ள கம்யூனிஸ்ட் அறிக்கையில் வழமையான பிரிப்புகளும் உப தலைப்புக்கும் அவ்வாறே பேணப்பட்டுள்ளன. பிந்திய மொழிபெயர்ப்புகளில் காணப்படுகின்ற பல்வேறுமொழிப் பதிப்பு களுக்கு எழுதப்பட்டுள்ள முகவுரைகளில் எதுவுமே இம்மொழிபெ யர்ப்பில் இடம்பெறவில்லை. பெரும்பாலும் 1888 ஆங்கில பதிப் பிலிருந்தே தமிழிலில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கச் சாத்திய மிருக்கின்றது. அறிக்கையில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்கள் மற்றும் சொல்லாடல் போன்றவற்றுக்கு அடைப்புக்குள் ஆங்கிலச் சொற்களும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் தேவையானவற்றுக்கு அடிக்குறிப்பிட்டு விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அறிக் கையின் நடை புரிந்து கொள்ள இலகுவாகவும் கருத்து தெளிவா கவும் இருக்க வேண்டுமென்பதில் என்பதில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது. ஆயினும் அக்கால யாழ்ப்பாண வழக்குக்கமைய சமஸ்கிருதச் சொற்களும் தமிழ் பைபிள் சொற்களும் நடையும் கணிசமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

மொழிபெயர்ப்பாளர்களான தோழர் எஸ். இராமசாமி ஐயர் மற்றும் தோழர் எஸ்.கே. கந்தையா ஆகிய இருவரும் இலங்கை கம்யூ னிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கமிட்டியின் ஆரம்பகால உறுப் பினர்கள் என அறிய முடிகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் முன் னோடி உறுப்பினர்களில் ஒருவரான தோழர் கார்த்திகேசன் அவர் களது முயற்சியால் 1945ம் ஆண்டளவில் 'இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கமிட்டி ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. தோழர் எஸ்.கே. கந்தையா ஆவர்களின் துணைவியார் வேதவல்லி அம்மையாரும் கம்யூனிஸ்ட் இயக்க செயற்பாடுகளில் பங்கெடுத்த முக்கிய தோழர்களில் ஒருவராவார். தோழர் எஸ். இராமசாமி ஐயர் அவர்களாலே 'லலிதாவிலாஸ் புத்தகசாலை' நடத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மார்க்சிய நூல்களின் பரவ லாக்கத்துக்காக அப்புத்தக நிலையம் செயற்பட்டுள்ளது. மிகச் சொற்பமான இந்த தகவல்களைத் தவிர வேறு தகவல்களை என் னால் அறியமுடியவில்லை.

இம்முதல் மொழிபெயர்ப்பு தவிர கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு மேலும் இரு மொழிபெயர்ப்புகள் இலங்கையர்களால் செய்யப்பட் டுள்ளது. ஒன்று அண்மையில் காலஞ்சென்ற இலங்கையின் மூத்த

நாவலாசிரியரும் மார்க்சியருமான அமரர் செ. கணேசலிங்கன் அவர்களினால் ‘மார்க்சும் ஏங்கல்சும் 1848-ல் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை’ என்ற தலைப்பில் மொழிபெயர்க்கப்பட்டு 2014ல் குமரன் பப்ளிஷர்ஸ் இனால் வெளியிடப்பட்டது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும் இலங்கை முற்போக்கு எழுத்




தாளர் சங்க செயலாளராக இருந்தவருமான ‘பிரேம்ஜி’ எனப்படும் தோழர் ஞானசுந்தரம் அவர்களின் நினைவாக இத்தமிழ் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே பல தமிழ் மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ள நிலையில் கம்யூனிஸ்ட் அறிக்கையை பயில்நிலையில் இருப்பவர்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்குக்கு முதன்மை அளிக்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதனால் இது மூலத்தின் தழுவல் மொழியாக்கமாகவே அமைகிறது. மார்க்ஸ் ஏங்கல்ஸ் முகவுரைகள் இடம்பெறவில்லை. புரிந்துகொள்வதற்கு வசதியாக செ. கணேசலிங்கன் அவர்களின் முன்னுரை இடம்பெற்றுள்ளது.


இரண்டாவது மார்க்சிய செவ்வியல் நூல்களை சரியாக மொழிபெயர்க்க வேண்டும் என்ற முனைப்பில் மொழிபெயர்ப்பில் ஈடுபடும் தோழர் மு. சிவலிங்கம் அவர்களினால் செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் அறிக்கையின் மொழிபெயர்ப்பு. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை என்ற தலைப்பில் 2014 by Creative Commons Attribution-Share Alike 2.0 International License இன் கீழ் இலவசமாக யாவரும் வாசிக்கக்கூடியதாக வெளியிடப்பட்டுள்ள இம்மொழிபெயர்ப்பில் எங்கல்ஸ் இருந்த வரையான அனைத்து இற்றைப்படுத்தல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் இடங்களில் அந்தந்த இடங்களிலேயே விளக்கக்குறிப்புக்களும் பதிப்புரையில் அவ்வப்போது சுட்டிச் செய்யப்பட்ட இற்றைப்படுத்தல்களும் கொடுக்கப்பட்டுள்ளமை அறிக்கையின் செறிவையும் கருத்தமைதியையும் வளர்ச்சியையும் விளங்கிக் கொள்வதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றன. இது இம்மொழிபெயர்ப்பின் சிறப்பு. இலங்கையில் வெளிவந்த மொழிபெயர்ப்புகளில் மட்டுமல்லாமல் இதுவரையான தமிழாக்கங்களிலும் அறிக்கையின் கருத்தை மூலத்திற்கு நெருக்கமாக விளங்கி கொள்வதற்கு சிறந்ததாக இம் மொழிபெயர்ப்பே இருக்கிறது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளிவந்து 50 ஆண்டுகளாக இலங்கையின் தமிழ் வெளியில் கவனம் கொள்ளத்தக்க கருத்தாடல்களோ வினைகள், எதிர்வினைகளோ நடைபெற்றதாக அறியமுடியவில்லை. சோவியத் யூனியன் வீழ்ச்சிக்கு பின்னர் 1998ல் கம்யூனிஸ்ட் அறிக்கை வெளிவந்த 150 வது ஆண்டு கம்யூனிஸ்ட் அறிக்கை மீது உலகளவில் பல்வேறு எதிர்வினைகளையும் உரையாடல்களையும் தோற்றுவித்தது. தமிழ்ச் சூழலிலும் அதன் தாக்கங்கள் இருந்தன. இலங்கைத் தமிழ் வெளியில் கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு புலமைத்துவ எதிர்வினை ஆற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் மார்க்சிய பெண்ணியச் சிந்தனையாளரான செல்வி திருச்சந்திரன். மேலே குறித்த அறிக்கையின் 150வது ஆண்டையொட்டி இனத்துவ கற்கை நெறிகளுக்கான சர்வதேச நிலையத்தால் 1998 டிசம்பர் 05ல் கொழும்பில் நடத்தப்பட்ட செயலமர்வில் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அவரது கட்டுரையில் இப்புலமைத்துவ எதிர்வினையை ஆற்றியிருந்திருந்தார். ‘புதிய கொம்யூனிஸ்ட் பிரகடனம் ஒன்றிற்கான தேவையை நோக்கி’ என ஐ. சாந்தனால் மொழியாக்கம் செய்யப்பட்ட இக்கட்டுரை, செல்வி திருச்சந்திரன் அவர்களது ‘மாற்றுச் சிந்தனையும் விரிபடுகளமும்’ (வெளியீடு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்) நூலில் இடம்பெற்றுள்ளது. இது தவிர குறிப்பிடத்தக்க ஆய்வுகள் எதிர்வினைகள் குறித்து அறியமுடியவில்லை.

அண்மைய ஆண்டுகளில் கார்ல் மார்க்ஸ் மற்றும் எங்கல்ஸ் ஆகியோர் பிறந்த 200வது ஆண்டுகள் கொண்டாடப்பட்டபோது மார்க்சிய நூல்களின் மீதான கருத்தாடல் மீளவும் உயிர்பெற்றது. அதன்போது கம்யூனிஸ்ட் அறிக்கையின் புதிய பதிப்புகள், மொழிபெயர்ப்புகளுடன் அது குறித்த உரையாடல்களும் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன. உண்மையில் கம்யூனிஸ்ட் அறிக்கை ஒரு நூல், வெளியீடு என்பதாக அல்லாமல் அரசியல் வேலைத்திட்டம் என்ற அதன் தன்மையிலே பொருள்கோடல் செய்யப்பட்டு அறியப்படுவது. இலங்கைத் தமிழ்வெளியில் அதன் இயங்குதல் மற்றும் பரிமாணம் குறித்தவற்றுக்கே இக்கட்டுரையின் தலைப்பு பொருத்தமாக இருக்கின்றது. ஆயினும் கம்யூனிஸ்ட் அறிக்கை குறித்த உரையாடலற்றதாகவே இலங்கையின் சமகாலத் தமிழ் வெளியுள்ளது. இலங்கையிலிருந்து முதன்முதலில் தமிழில் வெளிவந்த கம்யூனிஸ்ட் அறிக்கையின் பவளவிழா ஆண்டில் அது பற்றியதும் அதில் பங்கெடுத்த தோழர்கள் பற்றியதும் அதனை வெளியிட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண கமிட்டி பற்றியதும் விரிவான தகவல்களை பதிவுசெய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும், அத்துடன் இலங்கையிலிருந்து வெளியிடப்பட்ட மார்க்சிய நூல்களின் பதிப்பு வரலாறும் எழுதப்பட வேண்டும் என்ற அவாவினால் அதன் பதிப்பு வரலாற்றை ஒட்டி சிலவிடயங்களை கவனப்படுத்தும் முயல்வாக இக்கட்டுரை எழுதப்பட்டது.

**குறிப்புகளும் துணையும்:**

- கம்யூனிஸ்ட் அறிக்கையின் முதலாவது இலங்கை மொழிபெயர்ப்பை www.noolaham.org மெய்நிகர் ஆவண காப்பகத்தில் இலவசமாகத் தரவிறக்கி வாசிக்க முடியும் (நூலக எண் 67682).
- மு. சிவலிங்கம் அவர்கள் மொழிபெயர்த்த கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை https://www.marxists.org/tamil/marx/1848/communist-manifesto/index.htm என்ற இணையத் தளத்தில் இலவசமாக வாசிக்கவும். https://freetamilebooks.com/ebooks/manifesto-of-the-communist-party/ என்ற தளத்தில் இலவசமாகத் தரவிறக்கவும் முடியும்.
- கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திய மொழிபெயர்ப்புகள் மற்றும் குடியரசு மொழி பெயர்ப்பு பற்றிய தகவல்கள் ‘கார்ல் மார்க்ஸ் 200 - உயிர் எழுத்து கட்டுரைகள்’, பதிப்பாசிரியர் எஸ்.வி. ராஜதுரை, நியுசெஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்., July, 2019. நூலிலுள்ள ‘குடியரசு ஏட்டில் பெரியார் ஈ.வெ.ரா. வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் முதல் தமிழாக்கம்’ கட்டுரையிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. இக்கட்டுரை ‘உயிரெழுத்து, டிசம்பர் 2018’ இதழில் வெளிவந்தது.
- 1925ஆம் ஆண்டுகளில் கொழும்பு துறைமுகத் தொழிலாளர்களிடையே கம்யூனிஸ்ட் அறிக்கையின் மலையாள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பு இருந்ததாக ஒரு செவிவழி செய்தி உள்ளது. அதுதொடர்பில் நம்பகமான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.



sathiyathevan.s@thaiveedu.com

# ப. சிங்காரத்தின் நாவலில் பலகுரல் தன்மை

- சு. வேணுகோபால்

ப. சிங்காரம் 1920ம் ஆண்டு சிங்கம்புணரி கிராமத்தில் பிறந்தவர். 18 வயதில் இந்தோனேஷியாவில் உள்ள மைடான் நகரில் வட்டிக் கடைக்கு ஊழியராகச் சென்றார். மதுரை தினத்தந்தி அலுவலகத்தில் நீண்ட காலம் பணியாற்றி 1997-ல் மறைந்தார். மைடான் - சின்னமங்கலம் (சிங்கம்புணரி) - மதுரை இந்த மூன்று ஊர்களும் அவர் வாழ்வோடு பின்னியிருப்பவை. அவர் எழுதியிருக்கும் 'கடலுக்கப்பால்' (1950) 'புயலிலே ஒரு தோணி' (1962) இரண்டு நாவல்களிலும் இந்த ஊரின் இயக்கம் - பேறுகால வாசம் என்கிறோமே - அப்படி, மனிதர்களின் வாசத்தோடு படைக்கப்பட்டிருக்கின்றன.

ப. சிங்காரத்தின் எழுத்து சுயம்புவானது. எப்படி புதுமைப்பித்தன் எழுத்தை மற்றொருவர் பின்பற்ற முடியாதோ. அப்படி ப. சிங்காரத்தின் எழுத்தையும் மற்றவர் வசப்படுத்திவிட முடியாத தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. இந்த எழுத்துமுறை தமிழ்ப் பண்பாட்டின் சாரத்திலிருந்து உருவாக்கிக் கொண்டதுதான். இதில் ப. சிங்காரம் என்ற படைப்பாளியின் குணமும் சேர்ந்து தொழிற்பட்டு தனித்துவமான நடையை உருவாக்கியிருக்கிறது. கொங்கு, கரிசல், வண்டல் பிரதேச வாழ்க்கையை அப்படியே கொண்டுவந்தவர்கள் உண்டுதான். ஆனால் பார்வையின் தீட்சண்யம் இல்லாமல் வெளிப்பட்ட படைப்புகளே அதிகம். ப. சிங்காரம் பாண்டி நாட்டு மண்ணையும் மைந்தர்களையும் கண்முன் நிறுத்தியதோடு அல்லாமல் அதில் அவரின் படைப்பு மேதமை வெகு நுட்பத்தோடு வெளிப்பட்டிருக்கிறது.

தெருவில் சாதாரணமாக நடந்து செல்லும் நேரத்திலும் சரி, அவர சமான நேரத்திலும் சரி எதிர்படுபவரின் நடை உடை பாவனைகளைச் சட்டென இரண்டொரு வார்த்தைகளில் சொல்லிவிட்டு விசயத்திற்குப் போய்விடுகிறார். 'முழுக்கை பனியனும் சிவப்புக் கொட்டடிக் கைலியும் கட்டை மிதியடியும், புகை வீசும் சுருட்டுமாய் மரக்காயர் நின்றார்' என்று எழுதித்தான் மேலே நகர்கிறார்.

அதேபோல மாந்தர்களிடம் வெளிப்படும் உடல்மொழியை ஓர் அர்த்தத்தோடு கையாள்கிறார். வைரவன் பிள்ளையைச் சந்திக்காரன் செல்லையா. தன் பேச்சை மீறி இராணுவத்திற்குப் போய் வந்தவன். அவனை கடையிலிருந்து விலக்கிவிட நினைக்கிறார்.

'ம்ம்... சரி உக்காரு' இடது உள்ளங்கை மாறிமாறி இரு புருவங்களையும் தடவியது. கண்கள் மூடின. இடது தொடைமீது அட்டணை போட்டிருந்த வலது கால் கடுவிரைவாய்த் துடித்துக் கொண்டிருந்தது. இந்தத் தோரணையே அவரின் மனநிலையையும் புலப்படுத்திவிடுகிறது.

நொடிப்பொழுதில் எதிர்பட்டு கடந்துவிடுகிற சமயங்களிலும் நோக்கங்களைப் பொறிபோல வெளிச்சமாக்கிவிட்டு நகர்ந்து போய்விடுகிறார். 'நடைபாதை இருட்டில் பச்சூலி மணம் கமழ நின்றவள் தோலைக் குலுக்கி நெளிந்தாள். ஒரு சீனன் உற்றுப் பார்த்துவிட்டுப் போனான்' நாம் யூகித்துக் கொள்ளலாம்.

எதேச்சையாகக் காணும் காட்சியை உரையாடலுக்குள் கொண்டு வந்து பல மாயங்கள் நிகழ்த்துகிறார். கிளுகிளுப்பான விசயத்தைச் சொல்லி ஒருசார் தமிழர்களின் நடத்தை பற்றிய விமர்சனமாக வைக்கிறார். பெட்டியடியிலிருந்து பேச்சு கிளம்புகிறது.

'பாவன்னா, கொஞ்சம் எட்டிப்பாருங்க அந்தப் பக்கம். வடக்கத்தி மாடுபோலப் போறாளே மலாய்க்காரி, தெரிகிறதா?'

'யாரவள்?' எட்டிப்பார்த்துவிட்டு உட்கார்ந்தான்.

'யாரவளா?' 'தங்கத் தண்டைக்காரி' யாஸ்மின். உடம்பு எப்படி? வயது நாற்பத்தைந்துக்கு மோசமில்லை.'

'என்ன அவ்வளவு வயது இருக்குமா!'

'நல்லாச் சொன்னியக போங்க' வார்த்தைகளைக் குறுக்கி வளைத்திமுத்துச் செட்டிநாட்டுப் பாணியில் பேசலானார். 'அவுத்துப் பாத்தா அண்ணாமலையான் தின்னுத்திப் பைபோல இருக்கும். அஞ்சு பிள்ளைக.'

'ஆறு பிள்ளைகள் என்று கேள்வி' தில்லைமுத்து திருத்தம் கூறினான்.

'அடியம்மத்தா! பாத்தியளா பாவன்னா! எந்தப் புத்தில எந்தப் பாம்பு கிடக்குமுனு எப்படிச் சொல்றது!' கண்களை உருட்டினார். 'வாத்தியார் மேப்படி சங்கதியகள்ள எம்புட்டுக் கணக்காயிருக்கார். பாத்துக்கங்க.'

'தில்லைமுத்து ஊமைக்கள்ளன்' தங்கையா சொன்னான்.

'சரி சரி, ரொம்பச் சரியனனேன். அது போகுது, பேச்சை விட்ராதியக. என்ன பாவன்னா, நம்ப செட்டி வீட்டு ஆளுக இன்னைக்கும் செம்மறியாட்டு மந்தையாட்டம் அவள்ள போயி விழுறாங்கய?'


'அவ கிடக்கா, நாத்தச்சிறுக்கி. நீங்க பினாங் வியாபாரத்துக்கு வரலையா?

பேச்சு அப்படியே பினாங் வியாபார திட்டத்திற்குள் போகிறது. பேசவந்த பிரச்சினையின் ஊடே அதனைச் சுற்றி நிகழும் இன்னபிற விசயங்களையும் கொண்டுவந்து செறிவாக்குகிறார்.

தகவல்களாகப் போய்விடக்கூடிய எண்ணற்றச் சமாச்சாரங்களைச் செறிவானமொழியில் அனுபவங்களாக மாற்றித் தந்திருக்கும் வித்தை நாவல் முழுக்க அப்பியிருக்கிறது. வேற்றுதேச இடப்பின்னணியில் நிகழ்வதால் தமிழ் மனங்களின் நானாவிநோ தங்களைத்

தமிழர் எண்ணங்களின் சாராம்சங்களை - வெளிப்படுத்திக் கொள்ள அதுவே வாய்ப்பாக அமைகிறது. வியாபார நிமித்தமாக புலம்பெயர்ந்த தமிழர்வாழ்வு அற்புதமாக இதற்குக் கைகொடுக் கிறது. யுத்த நெருக்கடி தமிழர்களின் பண்டைய வரலாறுகளை ஆழ்மனங்களிலிருந்து கிளறிவிடுகிறது.

தமிழ்ப் பண்பாடு உருவாக்கிய அனைத்து வெளிப்பாட்டு முறை களும் அழகியலின் அத்தனை நுட்பங்களும் இவரது இரு படைப் புகளிலும் கூடி வந்திருக்கின்றன. பேச்சு, அறிமுகம், எண்ணம், தோற்றம், பாவம் எனப் பல்வேறு அழகியலை - அவை அப்ப டியான அழகியல் என்ற வெளிப்படை உணர்வு இல்லாமல் வெளிப்படுத்தியிருக்கிறார்.



மலேயரை கலப்புமணம் செய்துகொண்ட தமிழச்சியின் அடிமன-தில் ஓடும் தமிழ் மனத்தை ஒரு வரியில் வென்றெடுக்கிறார்.

'பாண்டியன் நெற்றியைத் தடவினான். இந்த முகத்தில்தானே மலாய்காரி போல் உடை அணிந்திருந்த தமிழ்ப்பெண், 'கண்ணு வலிக்கி நேர்ந்துக்கிட ஊர்ல கண்ணாத்தா கோயில்னு இருக்கு தாமே, தெரியுமா? என்று கேட்டாள்.' அந்த இடத்தைக் கடக்கும் பாண்டியனுக்கு ஏனோ நினைவு வருகிறது.

ஆண்டியப்பப்பிள்ளை தான் வட்டிக்கடைக்கு பெட்டியடி ஆளாக வந்த பழைய கதையைச் சொல்லி வரும்போது அண்ணாமலைப் பிள்ளை இடையீடு செய்கிறார். தகவலை நேராக்க. காலக்குறிப்பு பற்றி பேச்சு இவ்வாறு அமைகிறது.

'நான் மூணாங்கணக்கு மைடானுக்கு வரச்சே, பிலவான்ல நாலு நாள் கப்பலைவிட்டு இறங்கக் கூடாதுன்னு சொல்லிப்பிட்டான்.' சோறு நிறைந்த வாயுடன், 'உப்புகண்டம்' அண்ணாமலைப் பிள்ளை கூறினார். 'அப்ப, மலாய் டாப்புல கால்ராவோ என்ன மோன்னு சொன்னாங்ய, அது, ம்ம்... தொள்ளாயிரத்தி முப்பதோ முப்பத்தி ஒண்ணோ நினைப்பில்லை - கொப்பனாபட்டி நாவன்னா மூணா மார்க்கா நொடிச்ச வருசம்.'

'நாவன்னா மூனா மார்க்கா நெடிச்சது முப்பத்தி ஒண்ணு' அங்க-முத்து தெரிவித்தான். 'அந்த வருசந்தான் அவுக பினாங்குக் கடை யில பெட்டியடிக்கி வந்தேன்.'

தமிழர்களின் இந்த உரையாடல் முறையே இன்று அழிந்துபோய் விட்டதோ என்று தோன்றுகிறது. எல்லா உரையாடல்களையும் ஒரே மாதிரி ஆக்கிவிட்டன ஊடகங்கள். தமிழரின் உரையாடல் நுட்பங் களை அறிய இதுபோன்ற செவ்வியல் நாவல்களைத்தான் நாட வேண்டியதிருக்கிறது.

தமிழ்ப்பெண்ணை ஜப்பான் மேஜர் தூக்கிச்செல்கிறான். இதுபற்றி கடையில் இருப்பவர்கள் நவீன - புராணிக மொழியில் பேசிக் கொள்கின்றனர்.

'போன வாரம் இந்தியா - ஜப்பான் உறவு மிகமிக ஆபத்தான கட்டத்துக்குப் போய்விட்டது. இம்மி தப்பியிருந்தாலும் யுத்தம் தான். முழு விபரம் வேண்டுமென்றால் மாணிக்கத்தைக் கேள்.' பழனியப்பன் முகம் முறுவலித்தது.

'சொல்லவா?' மாணிக்கம் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'சொல்லித் தொலை' செல்லையாவின் முகத்தில் மெல்லிய புன் னகை தோன்றி மறைந்தது.

'சரி, வயிற்று மணி அடிக்கப்போகிறது. சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன். போனவாரம் வெள்ளிக்கிழமை நண்பகலில், சையாம் சாலைக் கனகவல்லியைக் கெம்பித்தாய் மேஜர் கெனியோச்சி இச்சியாமா தூக்கிச் சென்றுவிட்டான்.'

'தொலையட்டும், மூதேவி. நீதான் ராமன் இருக்கிறாயே, கொரில் லாப் படையுடன் போய் மீட்பதுதானே?'

'இது மலேயா ராமாயணம், நினைவிருக்கட்டும். ராவணன் வாரித் தூக்க வந்தான். சீதை என்ன செய்தாள்? 'இதோ வருகிறேன், காதலரே! என்னைக் கட்டி அணைத்துத் தூக்கிக்கொண்டு போங் கள்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவனை நியூபீச் அசோகவனத்தில் கொண்டு போய்ச் சிறை வைத்துவிட்டான் லங்கேசுவரன்...'

'சையாம் ரோடுச் சீதை போனால், பட்டாணி தோடுக் கோதை என்று ராமர் பேசாமல் இருந்துவிட்டாரோ?'

நம் ஊர் கதையுலகம் வெவ்வேறு விதமாக மாறியதையும், அதையே சாதகமான விமர்சனமாக வைத்து நகையாடுகிறார். 'கட லுக்கு அப்பால்' நாவலில் வேறு சமாச்சாரங்கள் வேறு இடங் களில் தொடப்படுகின்றன. ஒரு பக்கம் மலாய்காரியை தமிழர் கூத்திகளாக வைத்திருக்கிறார்கள். மற்றொரு பக்கம் சின வியா பாரி தமிழ்ப்பெண்ணை கீப்புகளாக வைத்திருக்கிறான். ஒரு கலப்பு பண்பாடு மாறிக்கொண்டிருப்பதை நாவலில் பார்க்கமுடிகிறது.

சிங்கம்புணரி பேச்சுமொழி இரு நாவல்களிலும் துள்ளிவிளையாடு கிறது. நாவலின் மிகப்பெரிய பலமாக இதைக் கருதுகிறேன். வியாபார நிமித்தமாக கப்பலில் பிளாங் செல்கிறார்கள். ஆவன்னா தான் இங்கு வந்ததை சொல்லிக்கொண்டு வருகிறார்.

'முவாருக்கு அம்புட்டும் உருப்படாத பயகளாப் போயிக் கடையக் கழுதைப் புரட்டாக்கிப்பிட்டாங்யளே... இந்தப் பயலை மேலா ளுக்கு அனுப்பிச்சிப் பார்த்தால் என்ன... வயசு காணாது. நம்ம ஆளுகளும் கர்ருபுர்ரும்மா, ம்ம், இருக்கட்டும், அனுப்பிச்சிப் பார்ப்பம்...'

வட்டிக்கடையில் பற்றுவரவு சரிபார்த்தல் என்பது ஒரு தொழில் மறை. இதில் கணக்கு சரிபார்த்தல் என்ற முறையை உத்தியாகப் பயன்படுத்தி மனிதர்களின் புதிர்களைப், பண்பாட்டு மாற்றங்க ளைச் சொல்லி - கடைகளுக்கு வரும் நண்பர்களை முன்நிறுத்தி

உரையாடலை வேறொரு தளத்திற்குக் கொண்டுசெல்கிறார். சொந்த விவகாரங்களோடு உலக விசயங்கள் பேச்சில் இணைந்து விடுகின்றன.

யுத்தச் சூழல், புலம்பெயர்ந்து வாழும் சூழல், புதிய பண்பாட்டுச் சூழல் எல்லாம் உரையாடலுக்கான அனைத்து சாத்தியங் களையும் திறந்துவைத்தே விடுகின்றன. சிங்காரம் இதனை இலக் கிய வெளிப்பாடாக மாற்றிக்கொண்டார்.

'முத்துசாமி பிள்ளை கைப்பெட்டியை நகர்த்திக் காலைப் பரப் பிக்கொண்டு கோப்பிக்கடை சீனர்களிடம் கேள்விப்பட்ட யுத்த வதந்திகளைக் கூறலானார். 'பிரிட்டிஷ் படை வடக்கு மலேயாவில் தரையிறங்கி அலோர்ஸ்டார் நகரைப் பிடித்துவிட்டது. ஒரு சீனன் ஜப்பானியச் சிப்பாய் வேஷத்தில் போய், ஜெனரல் யாமஷித்-தாவைச் சுட்டக்கொன்றுவிட்டான்.

மற்றப் பெட்டியடிக்காரர்கள் பிளந்த வாயுடன் மூனாவின் சேதிக-ளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். காளிமுத்துவின் வாய் பாண்டிய னின் காதோரம் நெருங்கியது.

'இப்பக் கொஞ்சம் குணமாயிருக்குதண்ணே, எரிச்சல் குறைஞ்சி ருக்கு. அந்த மருந்துதான் கிடைக்கல. பணமும் தடவல்.'

இந்தப் பெட்டியடி உரையாடலில் காளிமுத்து கமுக்கமாக தனக்கு வந்த பால்வினை நோய்க்கான மருந்தை சந்தடிசாக்கில் கேட்டுவிடுகிறான்.

போர்ச்சூழல் நிலமை தலைகீழான மாற்றத்தை உண்டாக்கிவிடுகி றது. இதை வாழ்ந்து கெட்டவர் தனது உரையாடலில் வெளிப் படுத்துகிறார்.

'பெரியவுக சொன்னதெல்லாம் அப்படி அப்படியே நடக்குது. பார்த்துக்கிணுதானே இருக்காய்... குப்பை உயருது, கோபுரம் தாழுது. பிளசர்ல போனவன் நடந்து திரியுறான், நடந்து திரிஞ்ச வன் ஏரப்ளான்ல பறக்கிறான்... உங்க தகப்பானரெல்லாம் எப் பேர்ப்பட்ட மனுசன்! சொன்ன சொல் தவறாத சத்தியவான். அவ ரெல்லாம்... ஹ்ம்... திருவிழாவிலே வேசம்போட்டு ஆடினவன்லாம் இன்றைக்கி உங்க ஊர்க் கடைவீதியில மனுசன்னி உட்கார்ந் திருக்கான்டா... அக்கரைச் சீமைச் சங்கதியும் அப்படித்தான் போச்சு... எல்லாம் காலக் கோலமுடாப்பா...'

தெருக்களும் கடைகளும் அதில் ஊடாடம் மனிதர்களும் இயக்க மும் சொல்லித் தீரமுடியாத விதத்தில் சொல்லப்பட்டுக்கொண்டே வருகின்றன. சிங்காரம் லேவாதேவி கடையில் ஊழியராக வந்த தும், தெருத்தெருவிற்குப் போய் வசூல் செய்யும் வேலை அமைந் ததும் மக்கள் இயக்கத்தை நெருக்கமாக கவனிக்க நேர்ந்திருக் கிறது. இது இந்நாவலின் அடிப்படைக்குப் பெரிய பங்களிப்பாக அமைகிறது.

பெட்டியடி பையனாக வந்து வட்டிக்கடை முதலாளியான வானா யீனாவின் வாழ்க்கையை பாவனையோடு கூடிய நான்குவரி எழுத்தில் சட்சட்டென வளர்த்தெடுக்கிறார். 'ஆதியில், மேல் துண்டை இடுப்பில் சுற்றிக்கொண்டு லேவாதேவித் தொழிலில் புகுந்தார். அடுத்தாளானபின், துண்டு இடது கைப்பிடிக்கு உயர்ந் தது, அப்புறம், மேலாளான பிறகு, முழங்கை மடிப்பில் சிறிது காலம் தொங்கியபின், பட்டும்படாமல் தோளைத்தொட ஆரம்பித் தது. வானாயீனா மார்க்கா முதலாளியான பிறகுதான், மேல்துண்டு தோளில் நன்கு படிந்து இருபுறமும் தொங்கத் தொடங்கிற்று.'

புதுமைப்பித்தன் நடையைப்போல எள்ளல்தன்மை மிக்கது என்றாலும் ஒருவித நிதானமும், உள்ளத்தின் விழிப்பும், நுட்பமான விமர்சன தொனியும் கொண்ட எழுத்துவகை சிங்காரத்தினுடையது. புதுமைப்பித்தனைப் போல அவசர அவசரமாக எழுதாமல் சாவகாசத்தோடு எழுதுவதற்கான - நாவல் என்ற கலைச்சாதனத் தைக் கையில் எடுத்ததால் மிகச்சிறப்பான இலக்கியப் படைப்பு களாக உருவாக்கிவிட்டார். பத்திரிக்கையின் தேவையின் பொருட்டு அவசர அவசரமாக சிறுகதைகள் எழுதுவதை சிங் காரம் தவிர்த்ததால் நாவலில் அத்தனை அழகுகளையும் ஆழங் களையும் அவரால் கொண்டுவர முடிந்திருக்கிறது.

தெருவை விவரித்தாலும் அதில் படிந்திருக்கும் காலத்தின் சுவடு-களைச் சொல்லி தொழில் நிமித்தமாக ஓடும் மக்களைக் காட்டுகி-றார். இதில் நேற்றைய ஆனந்த நினைவுகளின் அலையோ, நாளைய நிச்சயமற்ற தன்மையிலும் வாழவழிதேடும் முயற்சிகள் துடிப்பதையே நாம் காணும்படி சித்திரமாக்கி விடுகிறார்.

நேரடியாகவோ, ஒன்றைத்தொட்டு நினைவு கூறுதலின் வழியா கவோ செவி வழி கேட்டதாகவோ, புனையப்பட்டு உலவும் செய்தி யாகவோ வேறு பல்வேறு மாந்தர்களின் வழி விசயங்கள் பரப் பப்படுகின்றன. விசயங்கள் எழுதப்படுதலை அல்ல மொழியப் படுதலையே உரையாடலில் கொண்டாடி வந்த தமிழ்ச் சமூகத்தின் வெளிப்பாடு இந்த நாவல், தமிழ் மனங்களின் ஊற்றுக் கண் ணைத் திறந்தவர் சிங்காரம். வட்டார மொழி நாவல் முழுக்கப் பெருகி வருகிறது. மதுரை பரப்பும், சிவகங்கை பரப்பும், மலேய, இந்தோனேசிய தேசங்களில் மிதந்தபடியே இருக்கின்றன. இந்த மண் மனத்தை அவர்களின் சிறுசிறு அசைவுகளிலிருந்தும் நீக்கமு-டியாதபடி இருக்கிறது. இது 1940ம் ஆண்டு சமாச்சாரம் என்ப தையும் கணக்கில் கொள்க. இன்றைய வெளிநாட்டு வாழ்முறை யிலிருந்தல்ல.

பினாங் போகும் கப்பல் புயலில் சிக்கிக்கொள்கிறது. 'மாரியும் காற்றும் கூடிக்கலந்து ஆடிக் குதித்துக் கெக்கலித்தன. அலை-யோட்டம் தெரியவில்லை. வானுடன் கடல் கலந்துவிட்டது. மழை தெரியவில்லை வளியுடன் இணைந்துவிட்டது. தொங்கான் தாவிக் குதித்து விழுந்து பம்பரமாய்ச் சுற்றுகிறது. வலப்புறம் இடப்புறம். அப்படியும் இப்படியுமாய்த் தாவிக் குதித்து விழுந்து திணறித் தத்தளிக்கிறது. எலும்புகள் முறிவதுபோல் நொறுநொறு நொறுங் கல் ஒலி. தலைக்கமேல் கடல்... இருளிருட்டு, இருட்டிருட்டு, கடல் மழை புயல் வானம். அருவியருவி உப்பருவி கடலருவி. மின் னொளி, கப்பித்தான் பொந்து தாவும் பேயுருவங்கள்...' இவ்விதம் அந்த அனுபவத்தை படைப்பெழுச்சியோடு எழுதிச் செல்கிறார்.

சிங்காரத்தின் இந்த நாவல்களில் நவநவமான அழகியல் வெளிப்பாடுகள் கொட்டிக் கிடக்கின்றன. 'பகல் இரவாகிப் பகல-ாகி இரவாகியது', 'வாயில் தீயொளி வீசும் சிகரெட்' இப்படி தெறிப்பான நடை, 'மாலையில் குளக்கரை உள்தட்டு நெடுகிலும் நெருக்கமாய் அகல் விளக்குகள் எரிய, எண்ணற்ற தங்க வேல் களால் குத்துண்டதுபோல் தண்ணீர் குழம்பி மின்னும்' இப்படி யான கவித்துவ காட்சிகள், 'எல்லாம் இடங்கால வாய்ப்புகளின் விளைவு', 'பாரத மக்கள் அனைவருமே கண்விழிப்பதற்கான முழு முதல் தேவை கடுமையான அதிர்ச்சி வைத்தியம்' இப்படி சிந் தனை தெறிப்பு, 'அத்தறுதி' முத்துக்கருப்பப் பிள்ளை, இரட்டை வீட்டு முத்துலட்சுமி, சொல்மாரி சோமசுந்தரம், விடாகண்டன் செட்டியார், குங்குமப்பொட்டு உலகளந்த பெருமாள் நாடார் இப்படி அடைப்பெயரோடு உலவும் மனிதர்கள், 'காங்கை', 'தா-வோட்டம்', 'மறுகோளிப்பயல்' 'அக்கிரமச்செலவு', 'அத்தாப் புவீடு', 'பவ்வநீர்' இப்படி மண்வாசனையோடு வரும் வட்டார கலைச்சொற்கள், 'ராயல் மன்மத சஞ்சீவி மாத்திரை', 'ஸ்கின்கிஸ் சோப்' என விதம்விதமான விளம்பரப் பொருட்கள். பல விசயங் கள் கலந்து நாவலுக்குப் பேரழகைத் தருகின்றன.

கப்பலில் செல்கிறார்கள். இந்தப் பயணத்தில் மட்டும் எத்தனை கவனமான வரிகள் எழுதப்பட்டிருக்கின்றன என்று பாருங்கள். 'கட லில் காறித்துப்பிவிட்டு வந்த நல்லக்கண்ணுக் கோனார் கூறினார். 'கந்தகத் தண்ணி சனியன்', 'பக்கங்களில் மொத்து மொத்தென்று மோதிச்சிதறிய கடல் அலைகளின் ஓசை நேரே சீராய் எழுந்து தேய்ந்தெழுந்தது.' 'ஆற்றுவாயில் சகதிக் கலங்கலாயிருந்த பவ்வ நிர் பச்சைமாகி ஊதாவாகி, நீலமாகி நீல்மைக்கும் கருமைக்கும் நடுமையமான கருநீலமாகி நின்றது.'

தினத்தந்தி என்ற செய்தி நிறுவனத்தில் பணியாற்றிய ப. சிங்கா ரத்தால் எப்படி இப்படி படைப்புமொழியைச் சாகசமாகக்

கையாண்டார் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. படைப் பூக்கம் மிக்க ஒரு மகத்தான கலைஞனுக்கு உரிய அங்கீகாரம் தராத இந்தத் தமிழ்ச்சூழல் அவரை மேற்கொண்டு எழுதவிடாமல் முடக்கி அழித்தது. ஒவ்வொரு நாவலும் எழுதப்பட்டு பிரசுரம் செய்ய ஆளில்லாமல் பத்தாண்டு பத்தாண்டு கழித்தே வெளிவந் திருக்கிறது. தமிழனுக்கு இதைவிட என்ன பாக்கியம் வேண்டும்!

ப. சிங்காரத்தின் படைப்பு மனம், மனிதமனங்களின் விசித்திரங் களைப் பல்வேறு விதங்களில் வென்றெடுத்திருக்கிறது. சில இடங்களை மட்டும் இங்கே தொட்டுக்காட்டலாம்.

உலக அரங்கில் ஜப்பான் தோற்கிறது. இந்திய தேசிய ராணு வத்தில் பணியாற்றி தமிழ் இளைஞர்கள் விலகிக்கொள்ள நினைக் கின்றனர். ராணுவ முகாமிலிருந்து பிரிந்து காட்டுவழியாக வருகின் றனர். தமிழ் படைக்கும் - ஜப்பன் படைக்கும் இடையே போர் நடக்கிறது. 22 தமிழர்கள் மாண்டு போகின்றனர். நல்லடக்கம் நடக்கிறது. இஸ்லாமியத் தமிழனுக்காக லெப்டினட் அப்துல்காதர் தொழுகை நடத்துகிறார்.

மற்ற தமிழர்களை ஐந்து ஜாத்தி மரத்தினடியில் நல்லடக்கம் செய்ய முனைகின்றனர். ஒரு வீரன் சொல்கிறான். 'யாருக்காவது திருப்புகழ், தேவாரம் தெரியுமா?' என்கிறான். சுமத்ரா லேவாதே விக்கடை ஒன்றிலிருந்து போராட வந்த சங்கப்பன் திருப்புகழ் தெரியும் என்கிறான். குரலை உயர்த்தாமல் பாடச் சொல்கின்றனர். வீரமரணம் அடைந்தவர்கள் முன் கை கூப்பி பாடுகிறான்.

***கருவினுருவாகி வந்து***
***வயதளவிலே வளர்ந்து***
***கலைகள் பலவே தெரிந்து மதனாலே***
***கரிய குழன் தங்கள் அடிசுவடு மார்புதைந்து***
***கவலை பெரிதாகி நொந்து மிகவாடி...***
***பகையசுரர் சேனை கொன்று***
***அமரர் சிறை மீள வென்று...***

தோள்களில் துப்பாக்கியை மாட்டியவாறு புதைகுழியைச் சுற்றி லும் கைசுப்பி நின்ற தமிழர்களின் மெய் சிலிக்கின்றன. கண்களில் நீர் சொரிகின்றன. காட்டிற்குள்ளிருந்து வந்த ஈரக்காற்று அவர்கள் முகத்தில் தழுவி சில்லிடுகிறது. படிப்பவர் நமக்கு கண்களில் கரைகட்டுகிறது.

வயிரமுத்துப் பள்ளை பிணாங்கில் வட்டிகடை வைத்திருப்பவர். அவரின் காலைநேர பூசையைப் படித்தால் சிரிப்பு வரத்தான் செய்கிறது.

'பச்சைக் குண்டஞ்சுக்கரை வேட்டியைத் தார்மடிவைத்துக்கட்டி, பனியனுக்குள் உடலைச் சொருகினார். 'வேல் மயிலம்! முருகா!' தண்ணீர்மலையான் கோயில் திருநீறு பட்டை பட்டையாய் நெற்றியில் ஏறியது. கோவணாண்டியாய்க் காட்சியளித்த முருகப் பெருமான் படத்துக்குக் கீழே போய் உட்கார்ந்து, கைகூப்பிக் கண்ணை மூடினார். பாட்டுக்கிளம்பியது.

சீர்சிறக்கு மேனி பசேல் பசேலென
நூபுரத்தின் ஓசை கலீர் கலீரென...

'மரகதம்! அந்தப் பய கருப்பன் வந்திட்டானா?'

'அவர் இன்னும் வரலைப்பா.'

நூபுரத்தின் ஓசை கலீர் கலீரென...

'மரகதம்! குழாயடியில் சாவிய வெச்சிருக்கனான்னிப்பாரு.'

கலீர்கலீரென, சேரவிட்ட தாள்கள்...

'காமாச்சி! அந்த கிராணி சம்சாரத்துக்குக் கொடுத்த கைமாத்து வெள்ளி வந்திருச்சா?'

'இன்னமில்லை. நாளைக்குத் தரமுன்னிச்சு.'

சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்...
வயிரமுத்துப் பிள்ளையின் திருப்பகழ் முழுக்க வட்டிப்புகழாகத் தான் வெளிப்படுகிறது.

தமிழ்நாட்டில் இருப்பது போன்ற தோற்றத்தை, வியாபாரத் தளங்களின் இயக்கத்தை அந்நில மண்ணில் எழுதும்போது ஒரு கவர்ச்சியைக் கொடுக்கிறது. சைக்கிளை எடுத்து தெருவிற்குக் கொண்டுவருவதுகூட ஒரு வசீகரத்தைத் தருகிறது.

வயிரமுத்துப் பிள்ளையின் மனைவி காமாட்சி, மகள் மரகதம் பினாங்கைப் பார்த்துவிட்டுப் போக வந்தவர்கள். யுத்தத்தில் ஊர்த் திரும்பமுடியாமல் மாட்டிக்கொள்கின்றனர். மரகதம் தினம் மஞ்சள் பூசி குளிப்பதைப் பக்கத்துவீட்டுப் பெண்கள் கேலி பேசுகின்றனர். அம்மா மஞ்சளின் பெருமையைச் சொல்லி, பூசிக் குளிக்க வைத்து விடுகிறாள். சின்ன விசயத்தில்கூட பிறரின் மனம் எப்படி இருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்.

நல்உணர்ச்சியின் சில உச்சங்கள் ஐரோப்பிய நாவல்களைவிட தமிழ் நாவல்களில் சிறப்பாக வெளிப்பட்டிருக்கின்றன. 'கடலுக்கு அப்பால்' நாவலில் செல்லையா மரகதத்தின் காதல் தீய்ந்து போகிற நிலையிலும் அவர்களின் இதயங்களில் மேன்மையான அன்பு வெளிப்படுகிறது. இங்கு இதற்கு உதாரணம் தரவில்லை. வாசகர்கள் படித்துப்பார்க்கட்டும்.

வயிரவன் பிள்ளை தன் மகளின் காதலைப் பக்குவமாக ஒழித்துக் கட்டி விடுகிறார். அவர் ஒரு கடுமையான யதார்த்தவாதி. தமிழர்த் தந்தைமார்களின் இதயம் என்று அவரைத்தான் குறிப்பிட வேண்டும். மிகச்சிறப்பான முறையில் உருவான பாத்திரம். அவர் தனது நியாயத்தில் அசைந்து கொடுக்காத நங்கூரமாக இருக் கிறார். காதலுக்கு எதிரி அல்ல அவர். காதலிக்கிறவன் குடும்ப வாழ்க்கைக்குப் பொறுப்பானவன் அல்ல என்று நினைக்கிறார். அவர்மீது வெறுப்பு தோன்றுவதில்லை. இந்தப் பிடிவாதம் ஆகாது சாமி. விட்டுத்தந்தால் என்ன என்று கேட்க மட்டுமே தோன்றுகிறது. கொஞ்சம் பிசகினாலும் வில்லத்தனம் ஆகிவிடும். சிங்காரம் அவ ரின் கண்களிலிருந்து பார்க்கத் தெரிந்த படைப்புகில்லாடி. அத னால் ரத்தமும் சதையுமான மாந்தராக நிறுத்திவிட்டார். வயிர முத்து பிள்ளையின் நியாயத்தைப் பார்க்க வேண்டுமல்லவா!

'இடது கை தலையைத் தடவியது. 'செல்லையாப் பய இப்படி மோசம் பண்ணிப்பிட்டானே. என்னமெல்லாம் நினைச்சிருந்தம், காலிப்பயகளோட சேந்து பட்டாளத்துக்குப் போனதிலயிருந்து கழு தையாப் போனான். நெஞ்சைத் தூக்கிக்கிணு திரியிறானே, இப் படியிருந்தால் இந்தத் தொழிலுக்கு லாயக்கப்படுமா? எதிரி நாலு போடு போட்டுப்பிட்டாலும், வாயைவிடாமல் காரியத்திலயில குறி யாயிருக்கணும். சப்பான்காரன்னா கர்பங் கலங்கும். அவங்யளப் போயிகொன்னு குமிச்சிருக்கானே, என்ன ஏத்தம், ம்ம்ம்... அது பத்தாதுன்னி மில்ட்டேரி தொரையப் பிடிச்சி அடிச்சிருக்காங்ய. நாளைக்கு நம்மள்ளாம் எம்மாத்திரம்? ஒன்னு ஆனாப் போனால் என்னமாச்சும் சொல்ல முடியுமா... இவன் தொழிலுக்கு லாயக்குப் படமாட்டான். டுப்பாக்கி பிடிச்ச பய டப்புடுப்புன்னித்தான் புத்தி போகும். இந்த வயசிலயே நானுங்கிற ஆங்காரம் வந்திருச்சே. அதுனாலத்தானே சண்டைக்கிப் பாய்ஞ்சிருக்கான். இங்லீஸ் படையே சப்பான்காரனைக் கண்டு கால்கிளப்பி ஓடுச்சி. நீ என்ன லாடு கிச்சனர் மகன் கெட்டுப் போனாய்... மறிச்சான்னா, வெலகிக் கிணு போறது. இல்லாட்டி கால்ல விழுந்து கெஞ்சிக் கேக்கிறது. எங்க தாய்பிள்ளையப் போய்ப் பார்க்கணுமினு. நானுன்னி முன் னால நிக்கிறதுக்கு அப்பிடி எத்தினி கோடி சம்பாரிச்சுக் கொடி கட்டிப் பறக்கவிட்டிருக்காய். அப்படித்தான் நீ என்ன பவுண்தாஸ்

சேட்டா, இல்லாட்டி ராசாச் செட்டியாரா...

... பணம் சம்பாரிக்கிறதின்னாச் சும்மவாயிருக்கு. பர்மா டாப்புல நான் அடுத்தாளுக்கு இருக்கச்சே, வசூலுக்குப் போன எடத்தில எத்தினி பர்மாக்காரன் கைநீட்டி அடிச்சிருக்கான். வாயைத் தொறப்பானா... ம்ம்ம்... இந்தப் பயன்னாக்கா பெரிய பட்டாளத்து நாய்க்கராட்டம் பாய்ஞ்சிருக்கான். பாய்ஞ்சு என்ன செய்ய? நம்ம பணம்தான் போகும். வீரியமா பெருசு, காரியமில முக்கியம். இந்தத் தொழிலுக்கு அடக்கமில வேணும். நானுன்னி நெஞ்சைத் தூக்கிக்கினு திரியிறதுக்கு இதென்ன கவர்மெண்டு வேலையா... சப்பான்காரன் சங்கதியவும் மில்டேரி தொரை சங்கதியவும் காமாச் சிட்டாச் சொன்னா, 'இப்பவே அடிச்சி விரட்டுங்க'ன்னி ஒத்தைக் கால்ல நிப்பா. பாவம், நாமள் கூட்டியாந்த பிள்ளை, நம்மளால கெட்டதாயிருக்கக் கூடாதின்னி நாமள் பார்க்குறம்...'

வயிரமுத்துபிள்ளை எங்குபேசினாலும் அவர் அவராகத்தான் இருக்கிறார். ப. சிங்காரம் காதலனாக நின்று அவரைப் பார்க்கவில்லை. அவரை பணம் மீது பற்றுக்கொண்ட எல்லா தந்தைமார்களைப் போல் ஒரு தந்தை என்ற நிலையில் இருந்து பார்த்ததால் நேசித்து எழுதமுடிந்திருக்கிறது. இவரது மகளைக் காதலிப்பவன் தான் செல்லையா. இதில் வயிரமுத்து பிள்ளைக்கும் உள்ளூர விருப்பம். அது ராணுவத்தில் சேரும் முன்புவரை.

'கடலுக்கு அப்பாலி'ல் வரும் செல்லையாவின் தொடர்ச்சிதான் புயலிலே ஒரு தோணியில் வரும் 'பாண்டியன்'. செல்லையாவின் மனப்போக்கு பணத்தைச் சேமிக்க முடியாது என்ற கணிப்பு ஓரளவு சரிதான். ஆனால் ராணுவத்தில் உயிர்பயம் இல்லாமல் சாகசங்களில் துணிந்து ஈடுபடுகிற வீரனுக்கு பணம் வந்துகொட்டும் என்பதற்குப் பாண்டியன் உதாரணமாக இருக்கிறான். வயிரமுத்து பிள்ளை போன்றவர்களுக்கு இது ஒரு பதில்தான். இந்தப் பணத்தை பாண்டியன் போற்றவில்லை. தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் ஒரு போராட்டத்தில் குதிக்கிறார். லட்சியம் பலரை குறுக வைக்கிறது.

'புயலிலே ஒரு தோணி' நாவலில் வரும் சுந்தரம் பணத்திற்காக உடன் போராடிய நண்பர்களைக் காட்டிக்கொடுக்கிறான். உல்லாசமாக இருக்கிறான். மாட்டிக்கொள்கிறான். பாண்டியன் தலைமையில் நான்கு நண்பர்கள் திட்டம்தீட்டி தீர்த்துக்கட்ட சுற்றி அமர்ந்திருக்கின்றனர். திவான் கடையிலிருந்து 'பண்டித மோதிலால் நேருவை பறிகொடுத்தோமே' என்ற சுந்தரம்பாள் பாடல் ஒரு முரண் நகையாக ஒலிக்கிறது. சாவு பயத்திலும் சுந்தரத்திற்கு வேறொரு நினைப்பு வருகிறது. 'வயிறு கிள்ளுகிறது... சிங்லி-யோங்கில் பீபியும் ருமீலாவும் காத்திருப்பார்கள்' என்ற நினைவு வருகிறது. இந்த மனத்தை என்னவென்பது? இப்படியான மானிட மர்மத்தை நெருக்கடியான சூழலிலும் வெளிப்படுத்துகிறார்.

தான் செய்த துரோகத்திற்குப் பொறுப்பேற்று சாகும் தருவாயில் வீரனாக இருந்து இந்த மரணத்தை ஏற்றுக்கொள் என்று நிர்பந்தம் செய்கிறார்கள். சுந்தரம் திரும்பத் திரும்ப 'காப்பாத்துங்கண்ணே' என்றுதான் கெஞ்சுகிறான். வாழ்ந்துவிட வேண்டும் என்றுதான் உள்ளம் துடிக்கிறது. படைப்பெழுச்சியில் உச்சமாக வெளிப்பட்ட அத்தியாயங்களில் இதுவும் ஒன்று.

பாண்டியனுக்குப் போர்முனையில் மரணம் சம்பவிக்கிறது. இத்தருணத்தில் மனதில் அடியாழத்தில் ஓயாமல் அலையடித்த சின்னமங்கல கிராமத்து நினைவுகளும், மதுரை நகர நினைவுகளும் மிதந்து வருகின்றன. பிறந்த பூமியிலும் புலம்பெயர்ந்த பூமியிலும் நிலைகொள்ள முடியாது புயலில் சிக்கிய தோணிபோல நிஜத்திற்கும் - நினைவிற்கும் அலைவுற்றபடி மரணிக்கிறான்.

இளைப்பாற விரும்பிய ஒரு இளம் போராளியின் மரணம் காவிய சோகத்தோடு முடிவுபெறுகிறது. மரணத்தின் கரங்களில் அமர்ந்துவிட்ட நொடியில் அவன் எதை விரும்பினான் என்பதை அறிய முடிகிறத. கள்ளம்கபடமற்ற அவனது குழந்தைப் பருவம் சிரிப்போடும் வியாபாரத்தில் வெற்றியடைந்த கூவலோடும் வருகிறது. அந்த அழகிய உலகைத்தான் நேசிக்கிறான். தமிழ்ப் பண்பாட்டின் அந்த இழைகளையும் பின்னியபடி அசையும் நாவல் புயலிலே ஒரு தோணி.

**போ**ரையும் போர்க்கால சூழலையும் நேர்முகமாகக் கண்டவர் ப. சிங்காரம். அப்போது வயது 20. சாகசத்தின் மீது பேரார்வம் கொள்ளும் வயது. விடுதலையின் மீதும் மானுடத்தின்மீதும் கொள்ளும் தீவிர காதல் வயது. இந்தப் பேரார்வம் காலத்தோடு தன்னை ஓர் அங்கமாக்கிக் கொள்கிறது. நேரடியாகப் போர்முனையில் இல்லையென்றாலும் அந்தக் கனவு ஒரு போர்வீரனைவிட பல்வேறு விருப்பங்களில் ஊடுபாய்கிறது. இதனால் போரைப்பற்றி இன்னும் இன்னும் ஆர்வத்தோடு அறிந்துகொள்ள முயன்றிருக்கிறார். போரிடும் இடங்களிலும் சரி, பின்வாங்கும் இடங்களிலும் சரி, தோல்வியிலும் சரி, வெற்றியிலும் சரி, இந்தப் பின்னலில் மனிதர்களின் செயல்பாடுகளும் சரி ஒரு அசாதாரண எல்லைக்குச் செல்கின்றன. இதையெல்லாம் சிங்காரம் கற்றிருக்கக்கூடும். ஜெர்மன், ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் போரில்கண்ட படிப்பினைகளை வெற்றி தோல்விகளை வரலாற்று உணர்வோடு படித்திருக்கிறார். இதன்சாரம் இந்த நாவலுக்குள் தொழில்பட்டிருக்கிறது.

ஓரிடத்தை மட்டும் இங்கு சுட்டிக்காட்டலாம். விடுதலை இயக்கத்தில் தொடர்ந்து செயல்படாமல் நண்பர்கள் ஒதுங்கிக்கொள்கின்றனர். பாண்டியன் தொடர்ந்து செயல்பட விரும்புகிறான். இதற்கு அவனது வாசிப்பும் ஊக்கத்தைத் தருகிறது. பாபரைப் பறிய நூல் ஒன்றை வாசிக்கிறான். அதில் ஒரு பகுதி அவனைக் கவர்கிறது.

'இந்தியாவில் மொகலாயப் பேரரசுக்கு வித்திட்ட பாபர் எந்த ஊரிலும் இருமுறை ரம்ஜான் பண்டிகை கொண்டாடியதில்லை, ரம்ஜான் கொண்டாடாமல் இருந்ததுமில்லை. கங்கை உட்பட எதிர்ப்பட்ட ஆறுகள் அனைத்தையும் இருமுறை குறுக்கு மறுக்காக நீந்தியிருக்கிறான். எப்போதுமே செயல் பரபரப்பில் ஈடுபட்டிருந்ததால் அவனுக்கு ஒருபோதும் மனக்குழப்பம் தோன்றிய-தில்லை.'

இப்பகுதி பாண்டியனை புதிய மனிதனாக்குகிறது. பாண்டியன் பாத்திரப்படைப்பின் பொருத்தம் கருதி இதனை வாசிப்பதாக எடுத்துவைக்கிறார். மற்றபடி வாசிப்பு வரலாற்று உணர்வை ஊக்கியிருக்கிறது என்று சொல்ல மட்டும்தான்.

இந்த நாவலில் வரும் பாண்டியனைத் தன்னின் அடையாளமாக வெளிப்படுத்திக் கொண்டார் என்றே நினைக்கிறேன். இன்னின்ன இடங்களில் தான் இருந்திருந்தால் இப்படி வெளிப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கும் என்று நம்புகிற மனதுதான் இந்தப் பாண்டியன். அதிகார தோரணை கொடுக்கும் 'சிகரெட் பிடித்தல்' என்பதைக்கூட சிறுவயது சிங்காரம் கைக்கொண்டிருக்கலாம். பெரும்பாலும் ராணுவ அதிகாரிகள் சிகரெட் பிடிப்பதின் நோக்கம் இதுவாகக்கூட இருக்கலாம்.

ராணுவ முகாமில் பலவேசமுத்துவை ரக்பீர்லால் அடித்து துவம்சம் செய்துவிட்டான் என்று கேள்விப்பட்டதம் பாண்டியன் மின்னல் வேகத்தில் வந்து தாக்குகிறான். வீழ்த்துகிறான். அதே சமயம், கறாரான யதார்த்தத்தையும் நேர்முகமாக சந்திக்கிறான். இந்திய தேசிய ராணுவத்தில் தான் ஒரு கமாண்டோ காப்டன் என்று தன்னை ஜப்பானிய கீழ் அதிகாரியிடம் அறிமுகம் செய்கிறான். அவன் பலத்த சிரிப்பொன்றை வெளிப்படுத்திவிட்டு, 'இந்திய தேசிய ராணுவத்தில் கமாண்டோ அணிகளோ காமிகாஸே பிரிவே கிடையாது. உன்னை மீண்டும் மந்தையில் சேர்க்கவே இந்த உபாயம்' என்கிறான். இதுதான் உண்மையான நிலவரம். நாவலில் சாதாரண ராணுவவீரனாக இருந்து கொரிலா படைக்கே இறுதியில் தலைவனாகிறான் பாண்டியன். இது தீரத்தின் கனவு. அல்லது கொரிலா தலைவனாக இருந்த

ஒருவனை பாண்டியனாக்கியிருக்கும் புனைவு. விடுதலைப்போரில் தமிழர்களின் பங்களிப்பை மேம்பட்ட நிலையில் பார்க்கவேண்டும் என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடு.

இப்படிச் சொல்வதால் பாண்டியன்தான் ப. சிங்காரம் என கொள்ளக்கூடாது. பாண்டியன் அவரது கனவு. பல்வேறு வீரதீர இளைஞர்களின் இணைவு. தான் ஒரு ஆண் என்ற மனநிலை பல இடங்களில் பாண்டியனிடம் வெளிப்படுகிறது. ஒரு ராணுவ அதிகாரி எப்படி வெளிப்படுத்திக் கொள்கிறானோ அப்படி சில இக்கட்டான இடங்களில் முரட்டுத்தனமாகப் பேசுகிறான். ராணுவ நடைமுறையில் கண்டு கேட்டு உணர்ந்த நல்லவனும் கெட்டவனுமான புனைவு பாத்திரம்தான் பாண்டியன். இந்த நூலில் வரும் பாண்டியனை சே குவேராவுடன் ஒப்பிடலாம். மானுடவிடுதலை, சமதர்ம கனவு தீராத தாகத்தோடு இயங்குகிறது. மனிதன் என்ற வகையில் ஆசாபாசங்கள் கூடிய ஒரு லட்சியவாதி, கியூபா விடுதலைக்குப்பின் குவேரா பொலிவியா விடுதலை இயக்கத்திற்குத் தாவுகிறார். போர்முனையில் அவர் என்ன நினைத்தார்? சொல்லப்படாத பகுதி இருக்கலாம். பாண்டியன் கொரில்லா படைக்கு தலைமையேற்று டச்சுப்படைகளை மூன்று இடங்களில் சிதறடிக்கிறான். என்றாலும் எளிய வாழ்க்கை முறையிலிருந்து பிரிந்து காட்டில் கிடப்பது அலுப்பையும் அந்நியத் தன்மையையும் உண்டாக்குகிறது. எல்லோரையும் போல அமைதியான வாழ்க்கை வாழவேண்டும் என்று மனது ஏங்குகிறது. போர் முகாமிலிருந்து விடுபட்டு சின்னமங்கலம் செல்லவும் முயல்கிறான். இந்த இடம் முக்கியமானது. வெளியிலிருந்து ராணுவவீரர்களை நாம் பார்ப்பதற்கும், உள்ளிருந்து அவர்கள் பார்ப்பிற்கும் வித்தியாசம் இருக்கிறது. லட்சியவாதிக்குள் ஏற்படும் எளிய ஆசையைத் தொடுகிறார். இதுதான் படைப்பு மனம் என்பது.

பெண்களை பாண்டியன் போன்ற இளைஞர்கள் தங்கள் பேச்சில் புழுபோல பார்த்தாலும் அதே பெண்களை அவர்களுடைய கோணத்திலிருந்து பேசவைத்திருக்கிறார். அவர்கள்படும் துன்பம், ஏமாற்றம், விருப்பம் பற்றியும், அழகு, வெறுப்பு பற்றியும், வாடிக்கையாளர்களின் அசிங்கத்தையும் மனம்விட்டு பேசுகின்றனர். ஆயிஷா, விலாசினி போன்ற பெண்கள் தங்களுக்குப் பிடித்தமான ஆண்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகின்றனர்.

தமிழ் நாவல் வரலாற்றில் 'புயலிலே ஒரு தோணிக்கு' தனித்த இடம் உண்டு. குடும்பப் பின்னணியில் இயங்கிய நாவல் உலகை பொதுவெளியில் அதுவும் புலம்பெயர்ந்த பூமியில் மானிட உலகை திறந்த முதல் நாவல். தமிழ் நாவல் மரபை உடைத்து புதுமரபைத் தோற்றுவித்த நாவல். எம். கல்யாணசுந்தரத்தின் 'இருபது வருடங்கள்', சி.சு. செல்லப்பாவின் 'வாடிவாசல்' ரகுநாதனின் 'பஞ்சும் பசியும்' ராஜம்கிருஷ்ணனின் 'குறிஞ்சித்தேன்' டி. செல்வராஜின் 'தேநீர்' சுந்தர ராமசாமியின் 'புளியமரத்தின் கதை', சா. கந்தசாமியின் 'சாயாவனம்', ஜி. நாகராஜனின் 'நாளை மற்றும் ஒரு நாளே', அசோகமித்திரனின் 'பதினெட்டாவது அட்சக்கோடு' போன்ற நாவல்கள் குடும்பத்திற்கு வெளியே இயங்கினாலும் ஏதோ ஒரு பிரச்சினையை மையமிட்டுச் சுழல்கின்றன. சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி'யில் பல்வேறு பிரச்சினைகள் நாவல் என்ற மையத்திற்குள் வந்து சுழல்கின்றன. அவை விவாதத்திற்குள்ளாகின்றன.

யுத்தச் சூழலில் மனிதர்களிடம் ஏற்படும் அச்சம், மர்மம், வியூகம், சந்தர்ப்பம் எல்லாம் ஒன்றுதிரண்டு நாவலைக்கொண்டு செலுத்துகிறது. தமிழர்களோடு பல்வேறு தேசத்தவர்களின் ஓட்டங்களை அரவணைத்துப் புத்தம் புதிதான அனுபவ உலகை இந்நாவல் தருகிறது. அதே சமயம் மனதிற்கு நெருக்கமாகவும் இருக்கிறது. இங்கு தமிழர்களோடு தெலுங்கர், கன்னடர், இசுலாமியர், மராட்டியர் கலந்து வாழ்வதுபோல, மலேய, சீன, இந்தோனேசியர்களோடு தமிழர்கள் இயங்குவது இயல்பாகவும் சகஜத்தன்மையோடும் தோற்றம் கொள்கிறது. இது 1940களின் சித்திரம் என்பது மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த நாவலின் இயக்கம் ஒற்றைத்தன்மையில் இல்லாமல் நாலா பக்கமும் விரிந்து பரவுகிறது. யுத்த பின்னணி உண்டாக்கும் மர்மத்தைச் சிங்காரம் நவநவமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

காதலர்கள், குடிகாரர்கள், வேசையர்கள், ரிக்ஷக்காரர்கள், மலேயகுமரிகள், கடை பையன்கள், சீனச்சிறுவர்கள், விளம்பர நடிகைகள் என எத்தனையோ மனிதர்கள் அவர்களின் வேலைகளோடு நாவலின் ஓட்டத்தில் சாதாரணமாக ஊடாடுகின்றார்கள். இந்தச் செறிவு வேறு எந்த தமிழ் நாவலிலும் கூறவரவில்லை.

போர்ச்சூழலில் பல தமிழ் நாவல்கள் வந்துள்ளன. நான் படித்தவரை அந்த நாவல்கள் உண்மையின் அருகில் வர முயற்சிக்கின்றன. காரணம் எழுதியவர்களுக்கு நேரடி அனுபவம் இல்லை. நேரடி அனுபவம் இருந்தும் வாழ்க்கை பறிய பார்வை இல்லை. சிறிய அனுபவத்தை மூலாதாரமாகக் கொண்டு கேள்விப்பட்டவற்றை, அறிந்தவற்றைத் தொகுத்துக்கொண்டு கதை ரூபத்தில் சொல்வதாக இருக்கின்றன. இதற்கெல்லாம் அப்பால் விசயங்கள் படைப்பெழுச்சியால் தீண்டப்படாமல் அடுக்கப் பட்டிருப்பதும் ஒரு காரணம். சிங்காரத்தின் எழுத்து உண்மையின் உள்நின்று இயங்குவதாக இருக்கின்றது. அவர் மரபான எல்லா கவசங்களையும் கழற்றி வைத்துவிட்டு எழுதுகிறார். எழுத்துக்கான இந்த அடிப்படை அவரின் இயல்பில் பெருகி வருகிறது. தமிழில் எழுதப்பட்ட போர் இலக்கியத்தில் 'புயலிலே ஒரு தோணி' போல மற்றொரு மிகச்சிறந்த நாவல் தமிழில் இல்லை. வாழ்க்கையை விமர்சனப் பூர்வமாக அணுகியதால் இந்த வெற்றி சாத்தியமாயிற்ற எனலாம்.

சைலேந்திரனின் ஆட்சியை வீழ்த்தி சோழரின் ஆட்சியை நிலை நாட்டிய தெற்காசிய நாடுகளில் சீனர்களின் செல்வாக்கு உயர்கிறது. சீனர்களுக்குச் சொந்தமான கப்பல், கடைகள், மாளிகைகள் ஓங்குகின்றன. தமிழரின் வீழ்ச்சி நிகழ்ந்தேறுகிறது. 2000 ஆண்டு தமிழ்ச்சமூக அரசியல் வரலாற்றில் சில பேரலைகள் பாண்டியன் வாயிலாக புரளுகின்றன. ஏற்றத்தையும் சரிவையும் சொல்லி விமர்சிக்கப்படுகின்றன. பன்முகக் குரல்களுக்குத் தன்னை திறந்து வைத்த முதல் தமிழ்நாவல் இது.

லேவாதேவி கடை நடத்தும் அனைத்து தமிழ்ச்சாதியினரும் அங்கு செட்டிகளே. செட்டிகளின் வைப்பாட்டி உலகத்தை விதவிதமாகக் காட்டுகிறார். புதுக்கோட்டை, நாட்டரசன்கோட்டை ஊர்களில் செட்டிகளின் தானதருமம், கஞ்சத்தனம், மருமக்களின் ஆர்ப்பாட்டம், தத்தெடுக்கப்பட்டவர்களின் ஜாலம், நிர்வாகத்திறமை, பொறுப்பற்றத்தன்மை, குதிரைப் பந்தயமோகம், காமகளியாட்டம், ஏமாளித்தனம், வைப்பாட்டிகளுக்கு இரைக்கும் கூத்து, ஊதாரித்தனம், கைதூக்கிவிட்டவர்கள் இந்த உலகம் விரிவாகப் பேசப்படுகிறது.

தொழில் நிமித்தமாகப் புலம்பெயர்ந்து வந்தவர்களுக்கு சொந்த மண்ணின் பண்பாட்டு நிகழ்வுகளும் அந்த மனிதர்களின் விசேசமான குணங்களும் நினைவுகளில் ததும்பியபடியே இருக்கின்றன. பிழைக்கவந்த அந்நிய தேசத்தில் தமிழ் அடையாளங்களோடு வாழ்கின்றனர். இந்த முதல் தலைமுறையிலிருந்து பண்பாட்டு மாற்றம் இரண்டாம் தலைமுறைகளில் தென்படத் தொடங்குகின்றன. அதே சமயம் மலேய, இந்தோனேசிய மண்ணில் இருக்கும் மூன்றாம் தலைமுறை வழிவந்த தமிழர்கள் மனங்களில் சிராவயல் ஜல்லிக்கட்டு, மதுரை தெப்பக்களும், வைகை ஆறு, காரைக்குடி தோட்டங்கள், சந்தைகள், மதுரை மீனாட்சி... இடங்களின் வசீகரம் கொள்கின்றன. ஒருமுறையேனும் தமிழ் நாட்டிற்கு வந்து எல்லாவற்றையும் பார்த்துவிட நினைக்கின்றனர்.

பாண்டியனுக்கு மதுரையும் சின்னமங்கலமும் ஓயாத அலைகளாக புரண்டபடியே இருக்கின்றன. சின்னமங்கலம் கிராமத்தின் சாயலை எல்லாம் கொண்டு வருகின்றன. மதுரை பிழைப்பின் பல்வேறு ரூபங்களைக் கொண்டுவருகின்றன. மதுரை விதவிதமான மனிதர்களால் நிரம்பி இருக்கின்றது. பல்பொடி விற்பவர், சோற்றுக்கடையில் சூடாக கழி உருண்டை சாப்பிட கூவுபவர்கள், தாதாக்கள்,

மாமாக்கள், மந்திரவாதிகள், கூடை வியாபாரிகள், இட்லிகடைகள், வேசிகள், நாடகக்காரர்கள், சினிமாரசிகர்கள் என யார்யாரோ வரு கிறார்கள். சித்திரை நிலவுநாளில் வைகையாற்றில் கூட்டம் கூட்ட மாக அமர்ந்திருக்கும் கிராமமக்கள், பேருந்துகளின் போட்டா போட்டிகளில் தூசி பறக்க வந்த வண்டிகளில் ஒன்று கண்மாய் நீரில் இறங்கி முந்திச் செல்கிறது.

சின்னமங்கலம் ஊரின் சந்தைபரபரப்பு, பள்ளிச்செல்லும் ஆராட் டம், தெருக்களில் நெல்கிண்டும் பெண்களின் பேச்சு. இளைஞர்-களின் கிட்டி விளையாட்டு, கீழத்தெருவிலிருந்து வரும் உருமி சப்தம், செட்டிப் பையன்கள் சடைபோட்டு பூச்சூடு பள்ளிக்கு வரும் கோலம், நந்தவனம், கிறித்துவ தேவாலயம் என எத்தனை-யோ காட்சிகள் வருகின்றன.

சின்னமங்கலம், மதுரை ஊர்ப்படலம் மதுரைக்காஞ்சி போல இருக்கின்றன. முக்கியமான நிகழ்வுகள், முக்கியமற்ற நிகழ்வுகள் என்று வேறுபடுத்திவிட முடியாத நினைவுகளால் அலையடித்துக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொருவரின் வயதிற்கு ஏற்ப வந்து தாக்குகின்றன. இந்த நினைவுகளில் வரும் மனிதர்கள், இடங்கள் வாழ்க்கை முறைகள் மாறி இருக்கலாம். சிதைந்து உருமாறி இருக்கலாம். அழிந்து போயிருக்கலாம். புதிய பண்பாட்டு முறை கள் தோன்றி இருக்கலாம். குண விசேசங்களில் எவ்வளவோ மாற் றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 1940களின் வாழ்க்கை இந்த கணம் நிகழ்ந்து கொண்டிருப்பதுபோல உயிர்பெற்று அசைகின்றன. மதுரை, சிங்கம்புணரி, சின்னமங்கலம், மெடான், பினாங், சிங் கப்பூர் ஊர்களில் மக்கள் எப்படி இருந்தனர், எப்படியெல்லாம் தங்கள் அகத்தையும் புறத்தையும் வெளிப்படுத்திக் கொண்டனர், தமிழர்களின் சொந்தபூமி, புலம்பெயர்ந்த பூமி என்ற இரு உலகங் களில் தங்கள் ஆசாபாசங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றனர். போர் நெருக்கடியும் நினைவுகளால் நிரம்பிய வாழ்க்கையும் நிச்சயமற்ற - நிம்மதியற்ற நிகழ்கால வாழ்க்கையும் மாறிமாறி உருள்கின்றன.

யுத்தம் என்ற புள்ளியில் மனிதர்களின் முன்பின்னான மனிதர்களின் தலைகீழ் மாற்றங்களை, மனதின் வேடிக்கைகளை ஆழ்ந்த எள்ளலோடு பேசுகிறார். இந்த மனிதர்களின் நிலையற்றத் தன்மை புதிய இருத்தல் பிரச்சினையாக உருவெடுக்கிறது. புயலிலே ஒரு தோணிபோல நிலையற்று நகர்கிறது.

இந்த நாவலை மனித சமூகத்தின் மாபெரும் இயக்கம் என்று சொல்லலாம். முன்னும் பின்னுமாக நிஜத்திலும் நினைவுகளிலும் காலம் மலர்ந்தாலும் அதில் தொழில்சார்ந்த இயக்கம் நிகழ்ந்த படியே இருக்கிறது. இந்த இயக்கம் பணத்தை நாடியோ அதி காரத்தை நாடியோ முன்னேற்றத்தை நாடியோ புகழை நாடியோ, காமத்தை நாடியோ இயங்கிக்கொண்டே இருக்கிறது. வீழ்ச்சியும் எழுச்சியும் நேர்கின்றன. தீதும் நன்றும் பிறர்தரவாரா என்பதற்கு ஏற்ப அவரவர்களுக்கானப் பலாபலன்களை அவரவர்கள் பெறு கின்றனர். நம் நடத்தைகளுக்கு அப்பாலும் மாயக்கரங்கள் நம்மை தீர்மானிக்கின்றன. இதில் அபூர்வமாக சில உன்னதத் தருணங்களும் எரிநட்சத்திரம்போல வந்து போகின்றன.

மனிதமனமே சந்தைத் தனத்தால் ஆன உலகமாக மாறிவிட்டிருக் கிறது. பிறர் நலன் மங்கியே எங்கும் இருக்கிறது. இதை கலாப் பூர்வமாக 'புயலிலே ஒரு தோணி'யில் கொண்டுவந்திருக்கிறார் சிங்காரம். வறண்ட பிரதேசத்தில் ஒரு பழக்காட்டை உருவாக் குவது போன்ற அரிய செயலைச் செய்ய பாண்டியன் முனை கின்றான். இது ஒரு விவசாய மனநிலையும்கூட, பாண்டியன் இதற்கு சம்பந்தமற்ற உலகிலிருந்து வந்திருந்தாலும்,

'கடலுக்கு அப்பால்' எளிய வாழ்க்கையிலிருந்து கிளம்பிவந்த இளைஞர்களின் தன்னெழுச்சியான இந்திய விடுதலைக் கனவைக் கொண்டது. இந்த இளைஞர்களின் எழுச்சிக்கும் - மூத்தோர்களின் தொழில் முன்னேற்றத்திற்குமான இடையறாத பனிப்போரை திறம் பட வெளிப்படுத்தியிருக்கிறார். நேதாஜியின் மரணமும், ஜப்பா னின் தோல்வியும் திகைக்க வைக்கிறது. இராணுவ இளைஞர்கள் வழிகாட்டுதல் இல்லாமல் அவர்களுக்குத் தெரிந்த - விரும்பிய முடிவுகளை எடுத்து நிலைகொள்கின்றனர். சிலருக்கு இது நிலையற்ற சூனியத்தைத் தருகின்றது. யார் வென்றார்கள் என்ற தெளிவற்ற நிலை அந்தத் தேசத்தில் நிலவுகிறது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் விடுதலைக்குரலும் ஒலிக்கிறது. இந்த விநோத சூழல்தான் தமிழ் இளைஞர்களைத் திடமான முடிவுகளை எடுக்க விடாமல் பண்ணுகிறது. மனதின் ஆழத்தில் திரும்பவும் இந்த இங்லீஸ்காரனை வெல்லமுடியும் என்ற நம்பிக்கையும் எழுகிறது. ஆனால் போர் நின்றுவிட்ட முடிவு ஏமாற்றமளிக்கிறது. தோல்வி யைப் போரில் நேர்மிகமாகக் கண்டிருந்தால் அடங்கி ஒடுங்கி ஒரு வாழ்வை தேடியிருக்கமுடியும். வென்றிருந்தால் குடும்பங்க ளில் மதிப்பு கிட்டியிருக்கும். தோற்காமலே பிரிட்டிஸ் ஆட்சியின் கைப்பிடிக்குள் நிற்கவேண்டிய சூழல். யதார்த்தம் ஒரு பக்கம். கனவு ஒரு பக்கம். செல்லையாவின் வீழ்ச்சியை இந்த மாயச்சூழல் செய்கிறது.

வீரத்தனத்தை முற்றாகக் கழற்றி எறிந்துவிட்டு கணக்கு எழுதும் பையனாக அமரமுடியவில்லை. மனமெங்கும் நிரம்பியிருக்கும் காதலையும் துறக்க முடியவில்லை. அவனை யதார்த்தம் தோற் கடிக்கிறது. காதலை இழக்க வேண்டியதாகிறது. போராளிக்கு யதார்த்தம் தரும் மதிப்பின்மையைச் சிறப்பாக வெளிப்படுத்தி யுள்ளது 'கடலுக்கு அப்பால்' நாவல்.

போராளியாகச் சென்றுவந்தவனைக் குடும்பம் என்ற அமைப்பு பொருத்தமற்றவன் என்று வெளியே தூக்கி எறிவதை 'கடலுக்கு அப்பால்' நாவல் சொல்கிறது என்றால், போராளியாக இருப்பவ னைக் குடும்ப அமைப்பு இழுக்க இழுக்க அவன் பற்றுகளை அறுத்துக்கொண்டு இன்னும் தீவிரமாக பொதுவெளியில் புகுந்து செல்லுதலை 'புயலிலே ஒரு தோணி' சொல்கிறது எனலாம். இரு நாவல்களிலும் ஒரு தீவிரத்தன்மை இருக்கிறது. ஒரு போராளி தன் காதலியின் வாழ்க்கைக்காக தன் காதலை தியாகம் செய்கிற மகத்தான காரியத்தை உக்கிரத்துடன் வெளிப்படுத்துகிறது 'கட லுக்கு அப்பால்'. நண்பர்கள், பணம், போகம், குடும்பம், நிம்மதி, ஊர் என அமர்ந்துவிடுகிறபோது இந்த லௌகீக பந்தங்களைத் தூக்கி எறிந்துவிட்டு சமூக விடுதலைக்காகத் தன்னை ஒரு சுட ராக்கிக்கொண்டு விடுதலைத் ஜோதியில் கலக்கிறான் 'புயலிலே ஒரு தோணி' நாயகன். கடலுக்கு அப்பால் நாவலில் பேராளியின் காதல் தமிழ் மனங்களின் விதிப்படி தீர்மானிக்கப்படுவது சிதைக் கப்படுகிறது. புயலிலே ஒரு தோணி நாவலில் போராளியின் லட்சியக் கனவு நண்பர்கள் கைவிட்டதால் வீழ்கிறது.

புயலிலே ஒரு தோணியை ஒரு பின் நவீனத்துவப் பிரதி என லாம். தமிழ் இலக்கியப் பரப்பின் மீது நவீன மனிதர்கள் வைக் கும் விசாரணை இந்த நாவல். அறம், ஒழுக்கம், வீரம், கற்பு, அமுதசுரபி எல்லாம் தலைகீழாவிட்ட ஒரு வாழ்க்கை முறையில் பண்டைய இலக்கியம் தரும் உயர்ந்த கருத்துக்கள் நகையாடப் படுகின்றன.

பாண்டியன் தமிழ்ப் பெருமைகளையும் தமிழர் பெருமைகளையும் புரட்டிப் போடவது இழிவு நோக்கம் கருதி அல்ல. இழிந்த நிலையை மாற்றவேண்டும் என்ற ஆழ்ந்த பற்றுடனே பேசுகிறான். நாவலில் அப்படியான பாத்திரத்தையும் ஏற்று தெற்காசிய நாடக-ளில் காலூன்றி போராடுகிறான்.

வேசையர் உலகை ஜி. நாகராஜனைவிட இன்னும் பட்டவர்த்தன-மாகக் காட்டியவர் சிங்காரம். அவர்கள் வெளிப்படுத்தும் மொழி யும், உறவுகளும் பூச்சற்று அசலாக இருக்கின்றன. பக்க அளவில் குறைவு என்றாலும் அசல். ஜி.நா., வாழ்க்கை மீது அல்ல - எழுத்தில் வந்த வேசையர் மீது ஒரு பச்சாதாபக்குரலை வெளிப் படுத்துகிறார். வேசையரை வேசையராகவே வெளிப்படுத்துகிறார் சிங்காரம்.

வியாபாரி மனைவி, வெங்கலக்கடைத் தெருக்காரி, மேலமாசி முத்து நாயகி, வடக்காவணி வீதி ரங்கூன் ராஜசுந்தரி, இரட்டை

வீட்டு முத்துலட்சுமி, குன்றக்குடி வள்ளி, கப்பல்காரி என எத்தனையோ பெண்கள் பார்வையிலும், பேச்சிலும் நினைவுகளிலும் ஊடாடுகின்றனர்.

எல்லா தாசிகளுக்கும், வேசைகளுக்கும் ஒரு கனவு இருக்கிறது. அன்பான ஆடவனை மணந்து மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்ற விருப்பத்தை ஏதோ ஒரு நொடியில் வெளிப்படுத்தி விடுகின்றனர்.

நாவலின் துவக்கமே ஒரு அசாதாரண சூழ்நிலையிலிருந்துதான் விரிகிறது. ஆங்கிலேயர் தோற்று பின்வாங்கி விட்டனர். ஜப்பானியர் நுழைகின்றனர். ஆட்சி மாற்றம் மனிதர்களிடம் பதுங்கி இருந்த ஆசையைக் கிளறிவிடுகிறது. விநோத கூத்தக்களை அரங்கேற வைக்கிறது. இனவெறி, பசிவெறி, காமவெறி, பழிவெறி, ஏழ்மைவெறி, விடுதலை வெறி, மூர்க்கவெறி, பொருள்வெறி, இழிவுவெறி எல்லாம் பீரிட்டு மெடான் நகர வீதிகளைத் தாக்குகிறது. வரலாறு முழுக கட்டுப்பாடு, காவல் இல்லாக் காலங்களில் அடிமை மனிதர்கள், போக்கிரிகள், உதிரிகள், ஏழைகள் எல்லாம் வேறொரு மனிதர்களாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்வதை இங்கு பார்க்கிறோம். ஜப்பான் வீழ்ந்தபோதும் இதே காட்சியைப் பினாங் நகரில் பார்க்கிறோம்.

ஒரு கொள்ளைக்கும்பல், 'டியூக் ஹோட்டலிலிருந்து வெள்ளிக் கலங்கள், கண்ணாடிப் பண்டங்கள், மேசைகள், இருக்கைகள், லினன் விரிப்புகள், வெல்வெட் திரைகள் எல்லாவற்றையும் அள்ளிக்கொண்டு' செல்கின்றது. 'மெடானில் சிக்கிக்கொண்ட அம்பொனிய சிப்பாய்கள் - உடல் நலிவு காரணமாய் வெளியேற முடியாத நிலையிலிருந்தவர்கள் - அடி மிதி தாங்க முடியாமல் அலறுகின்றனர். 'வெள்ளைக்கார பெண்களை இழுத்து வந்து துயில் உரிகின்றனர். ஆடை இழந்து அம்மணமான அபலைகள் 'ஓ மரியா' ஆயயவோவ் மரியா என்று கத்தக்கத்த கொண்டைப் பிடியாய், கைப்பிடியாய், கால்பிடியாய் புல்விரிப்புக்கு இழுத்துச் செல்கின்றனர். பட்டப்பகலில் ஊரறிய உலகறிய காதறிய கண்ணியறிய பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர். கொள்ளை கொலை கற்பழிப்பு' என நீளும் கலவரத்தை சிங்காரம் மெல்ல விலகி நின்று பார்க்கிறார். அவரின் மரபறிவு தட்டிக் கொண்டு வருகிறது 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனில் இன்றால்' என்ற வாசகத்தை. இந்த மனித உளவியல் வெளிப்பாட்டை 'எல்லாம் இடங்கால வாய்ப்புகளின் விளைவு' என்கிறார்.

இது இப்படி என்றால் ஜப்பானிய ராணுவம் தனது அதிகாரத்தைக் காட்டுகிறது. 'பள்ளியிலிருந்து மேசை நாற்களை ஏற்றிச் செல்கின்றனர். விறகுக்காக ஜன்னல் கதவுகளும், கரும்பலகைகளும் நொறுக்கப்படுகின்றன.' 'கொள்ளையர்களை அடக்கவும் மக்களை பயமுறுத்தவும் நடு பஜாரில் ஐந்து பேரின் தலைகளை வெட்டி அடுக்குகின்றனர்.' இந்தக் காட்சியோடு நிறுத்தவில்லை சிங்காரம். வெட்டிவைக்கப்பட்ட தலைகளின் அடியில் ரத்தம் பெருகி இறுகுகிறது. அந்த தலைகளின் தலைமுடியை ஒரு ராணுவ வீரன் தலைவாரிவிட்டு விளையாடுகிறான். பாண்டியன் இளமைக்கே உரிய துடிப்புடன் தெருக்களில் வலம் வந்தபடி கொடூரங்களை நேர்முகமாகக் காண்கிறான். பாண்டியன் ராணுவ வீரனாகும்போது இந்த மூர்க்கத்தனத்தை காரியத்தின் பொருட்டு சில இடங்களில் கையாளுகிறான். கொள்ளையடிப்பவர்கள் யார், கற்பழிப்பவர்கள் யார், கொலை செய்பவர்கள், கண்காணிக்கப்படுபவர்கள் யார் என்பதை சிங்காரம் நேரடியான வார்த்தைகளில் சொல்வதில்லை. விபத்திற்கு முன் பின்னாக வெளிப்படும் சில சொற்களில் யூகித்துக் கொள்ளும்படியாக வைத்திரக்கிறார். உள்ப்பகை, வெளிப்பகை என்பதற்கெல்லாம் வரலாறு உண்டு.

பாண்டியன் என்ற கதாமாந்தனின் மெல்லிய இழையின் வழியே மனிதர்களின் அத்தனை முகங்களையும் காட்டுகிறார். பாண்டியனின் சாகசத்தை சொல்வதுமட்டுமே அல்ல நாவல். இந்தோனேசியாவில் அவன் இருந்தாலும் சொந்த மண்ணின் நினைவுகளில் வாழ்ந்தபடியே இருக்கிறான். அந்த வாழ்க்கை புரண்டபடியே இருக்கிறது. எங்கும் காமம் கண்விழித்தபடி இருக்கிறது. சின்னவர், பெரியவர், நல்லவர், கெட்டவர், அறிஞர், சாமானியன், சீனன், பஞ்சாபி, மலையாளி, தமிழன், மலேசியன், வீரன், கோழை, பத்தினி, பரத்தை, காதலி, வைப்பாட்டான், வைப்பாட்டி, காமக் கிழவி என அனைவரும் காமச்சுழலில் உழல்வதையோ, உழன்றதையோ எல்லா திசைகளில் இருந்தும் காட்டுகிறார். இதனை லாவகமாகக் கையாண்டு முன்னேறிய வியாபாரிகளையும், அந்தச் சூழலிலேயே மேடேறாமல் மூழ்கிப்போன முதலாளிமார்களின் வாரிசுகளையும் காட்டுகிறார்.

எழுச்சி, வீழ்ச்சி, குரோதம், நேசம், ஏமாற்றுதல், நம்பிக்கை, காதல், விட்டேத்தித்தனம் என மனிதர்களின் அகக்கோலங்களைத் திறந்து வைக்கிறார். கடல் அலைபோல ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கும் பல குரல்தன்மைதான் இந்த நாவலின் ஆதார சுருதி.

சின்னமங்கலம் ஊர்த்திருவிழாவில் பெரிய மனிதர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். அவர்களைப் பற்றி எழுதுகிறார். '... பெட்டிக் கடைக்கு அருகே வெற்றிலையும் கையுமாய்த் தென்படுகிறாரே, அவர்தான் சத்தியக்குடி பெரிய அம்பலக்காரர். இந்த வட்டகையிலேயே தலையாய பட்டாதார். அம்பலகாரரின் நிலபுலன்களில் பெரும்பாலானவை உருட்டிமிரட்டியும், அடித்துப்பறித்தும் சேர்த்தவை என்றாலும் பரம்பரையாக வரும் சில பொட்டல் காடுகளும் உண்டு. அவருக்குப் பின்னால் ஏழெட்டுப் பேர் கைகட்டி நிற்கிறார்களே, அவர்களைப் பற்றி எல்லாருக்கும் தெரியும். ஆனால் வாய்விட்டச் சொல்லமாட்டார்கள். சொன்னால் கை காலுக்கு ஆபத்து, மாடு கன்றுக்கு ஆபத்து, வீடு வாசலுக்கு ஆபத்து... தென்புறத்தில், எடுபிடி ஆட்கள் புடைசூழ, கோலா மல்வேட்டி - முட்டைமார்க் பனியன் - டைமன் துண்டு கோலத்தில் நிற்பவரே 'பவுண்' ராவன்னாமானா. தாசிகளுக்குப் பவுண் காசுகளாய்க் கொடுப்பவர் அவர்தான். கோயிலுக்கு முன்னால் கைகூப்பி நிற்கிறாரே ஒரு நரைத்தலை மூதாட்டி, அவர் 16-18 வயதுப் பையன்களுக்கு வாரி வாரிபணம் வழங்குவார் என்று கேள்வி. அம்மையாரிடம் வயதை ஏய்க்க முடியாது. முதுகெலும்பைத் தட்டிப் பார்த்தே சரியான வயதைக் கணித்து விடுவாராம்...'

தமிழர்களின் சங்கப்பெருமை பற்றிப் பேசும் நண்பர்கள் இடையே சாதி பிரச்சினை எழுகிறது. அதன் பல்வேறு வேர்களைப் பற்றி எதிர் நின்று சில நண்பர்கள் அலசுகின்றனர். பூசி மெழுகுபவர்களுக்குச் சூடான பதில்கள் தரப்படுகின்றன. சாதி ஒழிய வேண்டிய பல வழிகள் பற்றியும் அலசுகின்றனர்.

ப. சிங்காரம் கதையை நகர்த்துவதை மட்டுமே நோக்கமாகக் கொள்ளவில்லை. காலத்தின் நகர்வில் மக்களின் அன்றாட நிகழ்வின் ஊடே ஒவ்வொரு அத்தியாயத்திலும் சமூகத்தில் நிலவும் சிக்கல்களைத் தொட்டு அலசுகின்றனர். நாவலை ஒரு விவாதக் களத்திற்கான ஒரு மேடையாக வெற்றிகரமாக மாற்றிவிடுகிறார் சிங்காரம்.

ஜெர்மனி, ஜப்பான் தோல்வி நோக்கி சரியத்தொடுங்குவதற்கானக் காரணங்களை சீனர்களின் ஆதரவுடன் கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் ஊடுருவி புரட்சியில் ஈடுபடுவதை, இந்தோனேசிய இளைஞர்களின் சுதந்திர பிரகடணங்களை விவாதத்திற்கு உள்ளாக்குகிறார். இந்திய இளைஞர்கள் நேதாஜி படையில் இணைந்து பாரதவிடுதலைக்கான போரில் ஈடுபடுவதான ஒரு தோற்றத்திற்கு உள்ளே தனிமனிதர்களின் அக்கிரமங்களைக் காட்டுகிறார். ஜாராங் படை முகாமில் ரக்பீர்லால் சில ராணுவவீரர்களுடன் சேர்ந்துகொண்டு படைமுகாமுக்கு வரும் உணவுப் பண்டங்களையும் துணிமணிகளையும் பதுக்கி கள்ளமார்க்கட்டில் விற்கிறான். பணம் திரட்டி உல்லாச வாழ்க்கையில் ஈடுபடுகிறான். தட்டிக்கேட்ட பலவேசமுத்துவை கொன்றே போடுகிறான். பாண்டியன் ரக்பீர்லாலைக் கொள்கிறான். ப. சிங்காரம் புதுமைப்பித்னைப் போல பொய்மைகளை எங்கும் எக்காரணம் கொண்டும் மறைப்பதில்லை. போட்டுடைப்பதில் ஆர்வமே வெளிப்படுகிறது. உன்னதமான விடு

தலைப்போர் என்று சல்லித்தனங்களை மறைப்பதில்லை. மிகைப் படுத்துவதும் இல்லை.

நேதாஜியின் பள்ளித்தோழராகவும் நம்பிக்கைக்குரிய போர்ப் படைத் தளபதியாகவும் மலையாள தேசத்தைச் சேர்ந்த மாதவன் இருக்கிறான். இவனுடைய தங்கை விலாசினி கணவனாலே கெட்ட சகவாசங்களில் ஈடுபட நேர்கிறது. பல்வேறு அதிகாரிகளுடன் புரள்கிறாள். பல்வேறு அதிகாரிகள் புரட்டி எடுக்கின்றனர். மாதவன், விலாசினி புனைவாக இருக்கலாம். ஆனால் நேதாஜி ராணுவத்தில் இருந்த பல தளபதிகளின் அந்தரங்கம் இவ்வகையானது என்று சொல்லத்தான் விலாசினியை முன்வைக்கிறார்.

நேதாஜிக்கும் ஜப்பான் போக்கிற்கும் இடையே கருத்து முரண் ஏற்பட்டு இதுபற்றி கடிதம் எழுதியதாகவும், அதை ஜப்பான் அதிகாரி யாமசாக்கி வைத்திருப்பதாகவும், விலாசினிக்கும் - யாமசாக்கிக்கும் இருந்த கள்ள உறவை பயன்படுத்தி கடிதத்தை மீட்பதாகவும் ஒரு பகுதி வருகிறது. இதில் இரண்டு விசயங்கள். நேதாஜிக்கு ஜப்பானின் நடவடிக்கைகளில் அதிர்ச்சி இருந்தது என்பதை சொல்ல வருகிறது. யாமசாக்கி போன்ற அதிகாரியைக் கொள்ள கஞ்சா, தண்ணி, டாப்பராகத் திரியும் மொக்தார் என்ற போக்கிரியுடன் இணைந்து செய்கின்றனர். அக்காலத்தில் அதிகாரிகளைக் கொள்ள எவ்விதமான வலைப்பின்னலில் நடத்தினார்கள் என்பதைப் புரிந்துகொள்ளத்தான்.

இன்று பசுவதை தடுப்புச்சட்டம் பற்றி ஊடகங்கள் பரபரப்பான செய்தியைத் தருகின்றன. வடநாட்டில் இதன் பெயரில் அப்பாவி மக்கள், இசுலாமியர் கொல்லப்பட்டதும் நம்மை நடுங்கவைத்தன. அக்காலத்திலேயே பசுகறியை உண்பது குறித்து இந்நாவலில் ஒரு அத்தியாயம் அலசுகிறது. தமிழன் மாட்டுக்கறி மட்டுமல்ல யானைக்கறியும் தின்றான் என்பதற்கான சான்றுகள் விவாதங்களிடையே வருகின்றன.

ஜனகனின் குலகுரு யாக்ஞவல்கி மாட்டிறைச்சி தின்பது குறித்து சொல்லி இருப்பதை பாண்டியன் வாயிலாக முன்வைக்கிறார்.

‘மாட்டுக்கறி தின்பது பாபமாக இருக்கலாம். இருப்பினும் பல்லுக்கு மெதுவாக இருந்தால் தின்னவே தின்பேன்’ என்கிறான். தின்னலாம் என்பதற்கும் ‘தின்னக்கூடாது’ என்பதற்கும் இருசாரார் உரைவிளக்கம் எல்லாம் தருகின்றார்.

குடவாயில் கீரத்தனார் பசுகறி தின்பது குறித்து சொன்ன,

*‘கலங்கு முனைச் சீறூர் கைதலை வைப்பக்*
*கொழுப்பாத் தின்ற கூர்ம்படை மழவர்...’*

முழு பாடலை எடுத்துவைக்கிறார். இதற்குமுன் யானைக்கறி தின்றார்கள் என்பதை,

*‘புலி தொலைத்துண்ட பெருங்களிற்றொழி ஊன்*
*கலி கெழு மறவர் காழ்க்கோர் தொழிந்ததை...’*

என்ற தொண்டியாமூர் சாத்தன் பாடல் வழி எடுத்து விவாதிக்கிறார்.

புதுமைப்பித்தன் கூட இம்மாதிரி இடங்களைத் தொடமாட்டார் என்றே நினைக்கிறேன். சிங்காரம் எதையும் விடுவதில்லை. எல்லாவற்றையும் கலைத்துப் போடுகிறார். சிங்காரத்திற்கு இருந்த மரபிலக்கிய அறிவு அவரை பல்வேறு உயரங்களுக்குக் கொண்டு செல்கிறது. இப்படி ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு பிரச்சினை நாவலின் போக்கில் தோதானவிதத்தில் விவாதிக்கப்படுகின்றது.

மொக்தார் என்ற பொறுக்கியை மிரட்டும் இடமும் சரி, சுந்தரத்தை கதறவிடும் இடத்திலும் சரி பாண்டியன் கல்நெஞ்சம் படைத்த கூலிப்படைத் தலைவன்போல் செயல்படுகிறான். இதை ராணுவ நீதி என்று மட்டுமே சொல்ல முடியும்.

டச்சுப்படை தோற்கிறது. அப்படையின் தளபதியாக இருந்த டில்டன் கிழிந்த ஆடையுடன் மணல் அள்ளும் ராணுவ கைதிகளுடன் அல்லாடுகிறான். மதிய உணவு நேரத்தில் தனியாக மரத்தடியில் காய்ந்துபோன சின்ன சோற்று உருண்டையை உண்ணமுடியாமல் உண்ணுகிறான் வயதான ராணுவ அதிகாரி. பாண்டியன் அந்த அதிகாரிக்கு நல்உணவு அளிக்க ஜப்பான் அதிகாரியுடன் பேசுகிறான். மேஜருக்குத் தெரிந்தால் உன் தலை உருளும் என்று தடுத்தும் உதவுகிறான். அத்தோடு தினம் சிகரெட் பாக்கட் தருகிறான். இப்படியொரு மகத்தான காரியத்தை செய்த பாண்டியன்தான் சுந்தரத்தை ஈவு இரக்கம் இல்லாமல் மரணத்தில் தள்ளுகிறான். பாண்டியன் துரோகத்தை மன்னிப்பது இல்லை. ராணுவம் யுத்த காலத்தில் எப்படியெல்லாம் செயல்படும் என்பதான ஒரு புரிதலை இச்சம்பவம் தருகிறது.

ஜப்பானில் குண்டு வீசப்பட்டதால் தெற்காசிய நாடுகளில் இருந்த ஜப்பானிய படை பின்னடிக்கிறது. ‘நாவாப் ஜாடா’ ஆங்கிலேயரால் கைதி செய்யப்படலாம். பாண்டியன் தப்பித்துப் போய் விடுங்கள் என்கிறான். ஆங்கிலேயரிடம் கைதாவதையே பெரிதும் விரும்புகிறேன் என்று சிரிக்கிறான். இவனது உத்தரவின் பேரில்தான் யாமசாக்கியைக் கொன்று நேதாஜியின் கடிதத்தை மீட்கிறான். ‘ஆங்கிலேயர் என்னை கைதி செய்யட்டும். நான் பாசின்பூர் நாவாப் குமாரன். எனது தமையன் மத்திய சர்க்கார் காரியதரிசி. தாய்மாமா ஹைகோர்ட் நீதிபதி’ என்கிறான். நாவாப்பின் விடுதலை என்பது மிகமிக சுலபமான ஒன்று என்பதைக் கோடிடுகிறார். பாண்டியன் போன்ற எளிய வீரர்கள் சிக்கும்போது சித்திரவதைக்குள்ளாகிறார்கள். இந்த முரணை எள்ளலோடு வெளிப்படுத்துகிறார்.

குண்டு வீச்சுக்குப் பின் ஜப்பானின் பணமதிப்பு இழக்க நேரும் என்ற நிலை வருகிறது. உடனே அல்ல என்றாலும் குறுகிய காலத்தில் அவ்விதமே நேரும். இதற்கு இருக்கும் கொஞ்சநாள் மதிப்பைப் பயன்படுத்திக்கொள் என்று கத்தை கத்தையாகத் தருகிறான். அத்தோடு டச்சு பணக்கட்டுகளையும் தருகிறான்.

இந்தப் பணம் வெறும் காகிதமாவதும், வெறும் காகிதம் மதிப்பு பெறுவதுமான இந்த கால விளையாட்டைப்பற்றி விவாதம் வருகிறது. சென்ற ஆண்டு 500, 1000 ரூபாய் நோட்டுகள் ஒரே நாளில் மதிப்பிழக்கச் செய்ததும் கத்தை கத்தையாக வெளியேறின. குறிப்பிட்ட காலம் செல்லும் என்ற நிலையில் எல்லா பித்தலாட்டங்களும் நடந்தன. நாவலில் நாற்பதுகளில் பேசப்பட்ட சில விசயங்கள் இன்றைய பிரச்சினைகளுக்கு ரொம்ப பொருத்தமாக இருக்கிறது.

இங்கேயே பிறந்து வளர்ந்த டச்சுக்காரர்கள், அந்நியர்களா - இம் மண்ணின் மக்களா என்ற பிரச்சினை எழுகிறது. இந்தோனேசியர்கள் அவர்களை அந்நியர்களாகப் பார்க்கின்றனர். அறிவியக்கத்திற்கும் உணர்வியக்கத்திற்குமான மோதல் உருவாகிறது. இரு தரப்பு நியாயங்கள் ஆராயப்படுகின்றன. டச்சு இளைஞன் தன்னை அந்நியனாக பார்க்கப்படுவதற்கு ஒரு பதில் சொல்கிறான். டச்சுக்கொடி பறக்க இந்தோனேசியா தங்கள் கைக்குள் இருக்க விரும்புகிறான். இப்படியான உளவியல் வெளிப்பாடுகள் பிரச்சினையின் பின்னணியிலிருந்து கிளம்புகின்றன.

போர் அறம் என்பது மிகமிக சிக்கலான ஒன்று. மோதிக்கொள்ளும் இருவேறு நாடுகள் அல்லது போராட்டக் குழுக்கள் தாங்கள் வகுத்த பாதையில் வெற்றியடைய வேண்டுமென்று விரும்பி மோதுகின்றன. ஒன்றின் செயல்திட்டம் எதிர் அணிக்கு அறமற்றதாக அமைகிறது. தோல்வியுற்ற துருப்புகள் வெற்றியடைந்தவரின் பல்வேறு இம்சைகளுக்கு ஆளாகின்றன. அவமானத்திற்குள்ளாகின்றனர். வக்கிரமான முறையில் சிதைக்கப்படுகின்றனர். தோற்றக் குழு வென்றிருந்த காலத்தில் இதைத்தான் செய்திருக்கிறது. தோற்றவர்களுக்கு அறமற்றதாகவே தெரிகிறது. மனித குலத்தில் போர் என்ற வடிவம் தோன்றிய அந்த நொடியிலேயே இந்த அறத்தின் வீழ்ச்சி நடக்கத் தொடங்கிவிட்டது.

இதில் இன்னொரு சிக்கல். இணைந்து பணியாற்றிய இரு அணிக

ளுக்கு இடையே கருத்துமுரண் வரும்போதும் விபரீதம் ஏற்படுகி றது. தங்கள் அணியை எதிர்வரும் காலப்பழியிலிருந்து காப்பாற் றிக் கொள்ளவோ, உடனடி நலத்திற்காகவோ சுயநல அழித் தொழிப்பில் ஈடுபடுகின்றனர்.

மற்றுமொரு சிக்கல். ஒரு போர்க்குழுவிற்குள்ளேயே காட்டிக் கொடுக்கிறவனைத் தேடி அழித்தொழிக்கிற இடமும், கருத்து வேறுபாட்டால் பழிவாங்குகிற இடமும் பேரறத்தின் மாபெரும் வீழ்ச்சியாக நடந்தேறுகிறது. போரின் சந்நிதானத்தில் இதுவும் அவர்களுக்கான போர் அறமாகக் கொள்ளப்படுகிறது.

ஈழப்போரில் பங்குகொண்ட போராளிக்குழுக்களின் உள் விவ காரங்களைப் புரிந்துகொள்ள ப. சிங்காரத்தின் புயலிலே ஒரு தோணி நாவல் கூடுதலான புரிதலை உண்டாக்குகிறது. ஈழத்து நாவல்களைவிட.

ஈழத்துப்போரை முன்வைத்த எழுதியவர்கள் அதை குழு சார் பாகவோ, இனச்சார்பாகவோ எழுதியுள்ளனர். இது ஒன்றும் தவறு இல்லை. இதற்கான வரலாற்று சமூக காரணங்களும் இருக்கின் றன. ஆனால் தமிழ்ச் சமூகத்தை அல்லது பிற சமூகத்தை, போரை உள் விவகாரங்களை, சற்று விலகி நின்று எழுதும்போது அங்கே நாம் காண இருப்பது மானிட அவலமும் அபத்தமும் தான். இதனை சிங்காரம் தன் படைப்பின் வழி வென்றெடுத் திருக்கிறார்.

உலகப்போரில் தோற்ற ஜப்பானிய ராணுவம் இன்னும் முற்றாக விலகிக் கொள்ளாத நிலை. ஆங்கிலப் படையும் வந்து சேராத நிலை. அடிவாங்கி நொறுங்கிக் கிடந்த டச்சுக்காரர்கள் மீண்டும் எழுந்துவிடலாம் என்ற நம்பிக்கை. போராடிய தமிழ் இளைஞர்கள் சிலரிடம் பணமும் விளையாடுகிறது. பாண்டியனும் அவனது நண் பர்கள் கதிரேசன், சாத்தையா, மாசானம் நால்வரும் கொண்டாட் டத்துடன் பகலில் பேங்காக் நகர கிராமப் பகுதியான நெல் வயலும், தென்னந் தோப்புகளும் விரிந்த பகுதியில் காரில் செல் கின்றனர். கிராமத்து வழியாகக் கார் போகிறது. ‘குடில்களுக்கு முன், காலை நீட்டி உட்கார்ந்து வெற்றிலைமென்று அசைபோட் டுக் கொண்டிருந்த பெண்கள் கள்ளங்கபடின்றிப் பேசி சிரித்துக் கொண்டிருந்தனர். சிறுவர்கள் பிரப்பம் பந்துகளைத் தூக்கி எறிந்து ராஜா ராஜா விளையாடுகின்றனர்’ என்று இருவரிகளில் அழகான காட்சியைக் காட்டிவிட்டுப் பின்னே கொதிப்பின் உக்கிரமான - கள்ளத்தனம் மிக்க உலகைக் காட்டுகிறார். இந்த இரண்டு நிலைகளை சட்டென பொருத்திப் பார்க்க முடியாதவி தத்தில் தேர்ந்த வாசகன் பொருத்திப் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையில் வெகுநுட்பமாக எழுதியிருக்கிறார். இந்தக் கலை வெளிப்பாடு நாவல் முழுக்க விரவியிருக்கிறது.

மாலை மூன்லிங் கேளிக்கை விடுதிக்கு வருகின்றனர். இருள் கவ்வுகிறது. விடுதி ஜெகஜோதியாகக் கோலாகலம் கொள்கிறது. பெரும்பெரும் பணக்காரர்கள் வந்து உண்டு மகிழ்கின்றனர். ராணுவ அதிகாரிகள் அழகான வேசையர்களை அணைத்தபடி குடித்துக் கொண்டாடுகின்றனர். பாண்டியன் நண்பர்களும் குடித் துக் கொண்டாடுகின்றனர். தெற்காசியாவைப் பொறுத்தளவில் போர் ஓயத்தொடங்குகிறது. கதிரேசன் உற்சாகத்திலும் உள் ளார்ந்த கடுங்கோபத்திலும் எழுந்து தன்னை ஒரு தீர்க்க தரிசி யாக அறிவித்துப் பேசுகிறான்.

சுய இழிவு மொழியால் ஆங்கிலத்தில் தமிழ் இனத்தைத் திட்டுகி- றான். பழுப்பு, மஞ்சள், கருப்பு இனத்தவர்களையும் திட்டுகிறான். உடலில் மேல் தோலை அறுத்து வெள்ளையாக்கிக் கொள்ளுங் கள் என்று இழித்துக் கூறுகிறான். ‘அணுகுண்டு வீசி குழந்தை குட்டிகளை நாசமாக்கிய வெள்ளை அஞ்ஞானியே மூடுவாயை, தீர்க்கதரிசியின் கொடுஞ்சாபத்திற்கு உள்ளாகி மீளாத்துயரில் உழலக்கடவாய்’ என்று சாடுகிறான். பேச்சு எங்கெங்கோ செல் கிறது. வம்பிழுக்கிறான்.

ஆசிய மக்களின் அடிமை வாழ்வை கதிரேசன் தூற்றுகிறான். வெள்ளை என்ற நிறம் தவிர மற்ற நிறம் கேவலத்திற்குரியது என் கிறான். மது அருந்தியபடி தீர்க்கதரிசி என்ற போர்வையால் வெள்ளையர்களைப் புகழ்வதுபோல பழித்துப் பேசும் மொழியை வெள்ளைக்கார கர்னல் புரிந்து கொள்கிறான். வம்பு இழுத்து ஒரு கலாட்டாவை நிகழ்த்தத் திட்டமிட்டே வந்திருப்பது போலவும் இருக்கிறது. கதிரேசனால் இந்த மோசமான சூழல் உருவாகிறது என்பதும் சரி. ஆங்கிலேய கர்னல் தாக்க வருகிறான். கதிரேசன் ஆவேசம் கொண்டு தாக்கி வீழ்த்துகிறான். ‘பகடிக்கே சொந்தக் காரர்’ என்பது இதுதானா? என்று கிண்டல் அடிக்கிறான்.

கேளிக்கை விடுதியில் குடித்து மகிழ்ந்து கொண்டிருந்த மஞ்சள், பழுப்பு, கருப்பு நிறத்தவர்கள் கைத்துப்பாக்கிகளை உருவி எடுத்து வெள்ளையர்கள் வரிசையைக் குறிபார்க்கின்றனர். எப்ப டிப் புரிந்து கொண்டார்கள் என்பதே ஆச்சரியமாக இருக்கிறது. சுதந்திர வெளிப்பாட்டின் ஆழ்மனக் கோவத்திலிருந்து கிளம்பிய- தாக இருக்கிறது. தன்மானம் அவர்களுக்குள்ளும் பதுங்கி இருந் திருக்கிறது.

பிரிட்டிஸ் சாம்ராஜ்யம், வெள்ளைத்திமிர், ஆளப்பிறந்தவர்கள் என்ற ஆணவம் ஒரு கணம் நொறுங்கி வீழ்கிறது. விடுதியில் அசாதாரணமான பேரமைதி நிலை கொள்கிறது. ஒரு துப்பாக்கிக் குண்டு யாரிடமிருந்து கிளம்பினாலும் ரணகணம்தான். என்னென் னமோ நிகழ்ந்துவிடும். ஒரே ஒரு குண்டு. அமைதி நீடிக்கிறது.

பழுத்த பக்குவப்பட்ட வெள்ளைக்கார கிழவன் எழுந்து தோழமை என்று கைவிரித்து வருகிறான். அசாதாரண சூழல் அடங்குகிறது. மெல்ல புன்னகை மலர்கிறது யாவரிடத்தும். ப. சிங்காரம் மனதின் ஆழத்திற்குள் எவ்வளவு தூரம் சென்று பார்க்கமுடியுமோ அவ்வ ளவு தூரத்திற்குப் போகிறார். பிரச்சினையை புனைவிற்குள் கட்ட மைத்து பயணப்பட்டுப் பார்க்கிறார். இந்த இந்த நெருக்கடியில் இந்த இந்த விதமாக வெளிப்படுத்துவான் என்ற சாத்தியப் பாட்டை கண்டடைகிறார்.

கதிரேசன் நுட்பமான எள்ளல் மொழியில் தன் நண்பர்கள் சூழ குடித்தபடி வெளிப்படுத்திக் கொண்டதின் காரணம் என்ன? ஜப் பான் வீழ்ந்துவிட்டது. மீண்டும் ஆங்கில ஆதிக்கம் நுழையப் போகிறது. வெள்ளைத்தோல் விவகாரம் மேலெழலாம். இளைஞ னின் விடுதலைக்கனவு வீழ்ச்சியுறவிருக்கிறது. இந்த ஆதங்கத்தின் வெளிப்பாடாக இருக்கிறது அங்கதம். நான்கு இளைஞர்கள் தங் களை இவ்விதம் வெளிப்படுத்திக்கொண்டவிதம் உலக இலக் கியத்தில் இல்லாதது. தமிழிலும் சரி, பிற இந்திய நாவல்களிலும் சரி இப்படியான ஒரு வெளிப்பாடு இல்லை. இந்த அபத்த தரிசனத்தை உயர்ந்த தரத்தில் வெகு சுழுவாக சிங்காரம் இவ்விடத்தில் வெளிப்படுத்திவிட்டார். நாவல் இலக்கியத்திலே ஒரு பேருணர்ச்சியை அளித்த நாவல் புயலிலே ஒரு தோணி. தமிழில் பேருணர்ச்சியை உண்டாக்கிய ‘சிலப்பதிகாரம்’, ‘கம்பராமாயணம்’ என்ற காப்பியங்களோடு ஒப்பிட வேண்டாம் என்று மனம் சொன் னாலும் இப்போதைக்கு இந்த ஒப்பீடே சரியாகத் தோன்றுகிறது.

சிங்காரம் உயிரோடு இருந்திருந்தால் இந்த அத்தியாயத்தை இப்படி எழுதத்தூண்டிய மனநிலை என்ன என்று கேட்டிருக்கலாம். ஒருவேளை தமிழ் மரபிலக்கியம் இந்த வித்தையை எழுதும்படி ஊக்கி இருக்கலாம். வஞ்சப்புகழ்ச்சி எழுத்து வகைக்குத் தமிழ் இலக்கியப் பரப்பிலேயே சிங்காரம் எழுதிய இப்பகுதிதான் உச் சம். நான் படித்த அளவில் ஐரோப்பிய, இந்திய நாவல்களில் இப் படியான ஒரு பகுதி இல்லை. இதனை இன்று பின் நவீனத்துவ எழுத்துவகை என யாரேனும் பெயரிட்டுக் கொண்டாடலாம். படைப்பாளியின் மனம் இசங்களால் ஆனதல்ல. படைப்பு ஊற் றுக்கண்களின் விசித்திரங்களால் உருவாவது. சூழலும் நெருக் கடியும் சிதைவும் கூட இப்பகுதியை இவ்விதம் எழுதத்தூண்டி இருக்கலாம்.



venugopal@thaiveedu.com

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING

$2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



**KIRUBA THANABALASINGHAM**

Mortgage Agent Lic# M12002440

info@mortgagesolutions.ca

www.MortgageSolutions.ca

Ultimate Mortgage and Finance Solutions Inc. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING


B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

# திருநெல்வேலி நீர்--நிலம்-மனிதர்கள்

**- நெல்லை ஜெயசிங்**

மறந்து கொண்டிருப்பது மனிதனின் இயல்பு, நினைவு-படுத்திக் கொண்டிருப்பது வரலாற்று ஆய்வாளனின் கடமை' என கூறிச்சென்ற வரலாற்று ஆய்வாளர் திரு. Eric Hobsbawm அவர்களின் கூற்றுக்கமைய தென்தமிழகத்தில் திருநெல்வேலி மண்ணின் வரலாற்று பெருமைகளை ஆதாரங்க ளுடன் 'நீர் - நிலம் - மனிதர்கள்' என்ற தலைப்பில் நூலாக வடிவமைத்துள்ளார் எழுத்தாளர் தோழர் இரா. நாறும்பூநாதன் அவர்கள்.

சென்னை சந்தியா பதிப்பகத்தால் அச்சிடப்பட்ட 270 பக்கங்க ளைக் கொண்ட இந்நூல் அண்மையில் வெளிவந்து, அதன் வர லாற்று உண்மைத் தன்மை காரணமாக வரலாற்று ஆர்வலர்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. தமிழர்களின் பண்டைய வர லாற்று நிகழ்வுகளை இலகு தமிழில் சுவைபட எடுத்துரைத்த




சிறப்பு காரணமாக, கடந்த டிசம்பர் 28ம் நாள் தமிழக அரசின் அரசு விழாவில் நெல்லை வாழ் மக்கள் மத்தியில் மிகச் சிறப் பான முறையில் இந்நூல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத் தக்க தாகும்.

பாளையங்கோட்டையில் அமைந்துள்ள அரசு அருங்காட்சி யகத்தில் நெல்லை மாவட்ட ஆட்சியர் திரு. விஷ்ணு அவர்கள் தலைமை தாங்கிய விழாவில் தமிழக தொழிற்றுறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் நூலை வெளியிட, தமிழக சட்ட பேரவை சபாநாயகர் திரு. அப்பாவு அவர்கள் முதற் பிரதியை பெற்றுக்கொண்டார். பாளை சட்டமன்ற உறுப்பினர் திரு. அப்துல் வகாப் உட்பட ஏராளமான அரசு அதிகாரிகளும் கலை இலக்கிய ஆர்வளர்களும் எழுத்தாளர்களும் கலந்து நூல் வெளியீட்டு விழாவை சிறப்பித்தனர்.

திருநெல்வேலி மண்ணின் மாண்புகளை, வரலாற்றுச் சிறப்புகளை நிகழ்காலத்தில் நினைவுகூற வேண்டியவைகள் என வரையறுத்து பல்வேறு பதிவுகளை எளிய நடையில் 41 கட்டுரைகளாக சுவை குன்றாது நூலாசிரியர் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். பொ.ஆ.மு 900 வருடங்களுக்கு முன்னர் தமிழர்களின் தொன்மை வரலாற்றை உலகிற்கு உரக்கச் சொல்லும் ஆதிச்சநல்லூர் அகழாய்வு முதல் குளுகுளு குற்றாலம் அருவியின் பெருமை வரை ஆசிரியர் மிக நுணுக்கமாக குறிப்பிட்டுள்ளார். கழுகுமலை கரிசல் மண்ணின் மைந்தரான நூலாசிரியர், தாமிரபரணி நதி பாயும் நெல்லை நக ருக்கு இளைஞனாக இடம்பெயர்ந்தது முதல் ஒவ்வொரு வர லாற்று நினைவிடத்தையும் அனுபவ வாயிலாக மிகவும் ஆழமாக தொட்டும் பார்த்தும் கைதேர்ந்த சிற்பியாக எழுத்துக்களை வடி வமைத்து, படிப்போரை பரவசப் படுத்துகிறார் எனலாம்.

நெல்லையில் 'ஒவ்வொரு நூறு அடிக்கும் ஒரு வரலாறு இருக்கும்' என்ற நூலாசிரியரின் கூற்று நிரூபணமாகும் வகையில் நெல்லை மாவட்டத்தில் வரலாற்று சிறப்புகள் புதையுண்டு இருப்பதை நூலை படிப்பதன் மூலமாக அறியலாம். 2000 வருடங்களுக்கு முன்பு தென் தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த அகநானூறு கூறும் 'கொற்கை துறைமுகம்' இருந்ததை கூறும் நூலாசிரியர் வெளி நாட்டு வணிகர்கள் வந்தமை, நாணயங்கள் பொற்காசுகள் புழக் கத்தில் இருந்தமை என பல வரலாற்று சிறப்புகளையும் நூலில் விவரிக்கிறார்.

தென்னகத்து எல்லோரா என கூறத் தக்க கழுகுமலை வெட்டுவான் கோவில் சிறப்புகளை நூலாசிரியர் அனுபவித்து எழுதியுள்ளதை காணலாம். ஒரே கல்லில் கலை நயத்துடன் கோவில் எழுப்பப் பட்டுள்ளமை அற்புதமாகும். கழுகுமலை வெட்டுவான் கோவில் சிற்பங்கள், சமண துறவிகள் வாழ்ந்த வாழ்க்கைக்கான அடை யாளங்கள், சமண தீர்த்தங்கரர்களின் சிலைகள் என சிறப்பு வாய்ந்த வரலாற்று அடையாளங்கள் அங்கே காணப்படுகின்றன. புகழ் பெற்ற மகாபலிபுரத்திற்கு நிகராக கழுகுமலை சிற்பங்கள் இருப்பதாக நூலாசிரியர் கூறுகிறார்.

கல்வியில் தென்னகத்து 'Oxford' என பாளையங்கோட்டை நகரை அழைப்பதற்கு அடித்தளமிட்ட பல்வேறு கல்வி நிறுவனங்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், கிறிஸ்தவ மத போதகர்கள் என பல்வேறு அம்சங்களை கூறும் நூலாசிரியர் 'Clarinda Church' பற்றி கூறுவது மனதை மிகவும் தொடுவதாக இருக்கிறது. கோகிலா என்ற இந்து மத பிராமணப் பெண் தஞ்சாவூரில் 1770களில் கணவன் இறந் தமையால் உடன் கட்டை ஏற நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்த கொடிய நிகழ்வை பலரும் வேடிக்கை பார்க்க தீயில் வெந்த நிலையில் ஆங்கிலேய படை அதிகாரி லிட்டில்டனால் காப்பாற் றப்பட்டு பின்பு நெல்லை வந்த கோகிலா என்ற இந்து மதப் பெண் கிளாரிந்தா என தன் பெயரை மாற்றி கிறிஸ்தவ மதத்திற்கு மாறி நெல்லையில் கிளாரிந்தா ஆலயத்தையும் ஆரம்ப பாட சாலைகளையும் ஆரம்பித்த வரலாற்றை நூலாசிரியர் உணர்ச்சி மேலிட எழுதியுள்ளமை நெஞ்சைத் தொடுகிறது.

ஐரோப்பியர்கள் மத போதனைக்காக வந்த போதும் அவர்கள் தமிழ் மொழிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பெரும் தொண்டாட்டிய நிகழ்வுகளை நூலாசிரியர் ஆதாரங்களுடன் நடுநிலையோடு கூறி யிருப்பதை காணலாம். பலரின் சேவைகளை நூலாசிரியர் குறிப் பிட்டுள்ள நிலையில் பிரஷ்ய தேசத்திலிருந்து வந்த ரேனியல் அடிகளாரை முதன்மை படுத்துகிறார். 120 கல்விக் கூடங்களை திறந்த பெருமை இவருக்கு உண்டு. இன்று சாதாரண குடும்பத்து

பிள்ளைகளும் இன மத மொழி வேறுபாடின்றி பயிலக்கூடிய மேரிசார்ஜண்ட் பாடசாலையை 1823ல் நிறுவியதுடன், பிஷப் சார் ஜண்ட் ஆசிரியர் பயிற்சி பள்ளியையும் நிறுவிய இவர் தமிழ் இலக்கணம், பூமிசாஸ்திரம் உட்பட 20க்கும் மேற்பட்ட நூல்களை தமிழ் மொழியில் எழுதியிருப்பதாக நூலாசிரியர் பதிவிட்டுள்ளார். பாளையில் புகழ்பெற்ற 'மாம்பழச்சங்க திருவிழா'வை ஆரம்பித்து வைத்தவரும் ரேணியல் அடிகளாரே எனவும் குறிப்பிடுகிறார்.

தென் தமிழகத்தில் நெல்லையில் 1895ல் பெண்களுக்காக உரு வாக்கப்பட்ட முதல் கல்லூரியான சாராடக்கர் கல்லூரி, அதற்கு காரணமான Sarah Tucker அவர்கள், 1890ல் உருவான பார்வை யற்றோர் பள்ளி, அதனை உருவாக்கிய Askwith அவர்கள், 1889ல் உருவான காது கேளாதோர் பள்ளி, அதனை உருவாக் கிய Florence Swainson அவர்கள், டோனாவூர் அநாதைகள் இல் லம் அதனை உருவாக்கிய Amy Wilson Carmichael அவர்கள் என இவ்வாறு நூற்றாண்டுகளுக்கு முன்பே உருவான நெல்லை யின் வரலாற்றை நினைவுபடுத்தும் பல்வேறு அம்சங்களை எழுத் தாளர் தோழர் நாறும்பூநாதன் நம் கண்முன்னே மிக அழகாக நிலைநிறுத்துகிறார். நூலாசிரியர் குறிப்பிட்டுள்ள மேற்படி நான்கு பெண்மணிகளின் சேவை மிகவும் மகத்தானது. காது கேளாதோர், கண் பார்வை அற்றோர், வாய் பேச முடியாதோர் என பலரையும் உள்ளடக்கிய மாற்றுத் திறனாளிகளின் வருங்கால நலன் பற்றி நாமும் அரசுகளும் அண்மைக் காலங்களில்த்தான் அதிகமாக எண்ணத்தொடங்கி உள்ளோம். ஆனால், இந்த பெண்மணிகள் 100 ஆண்டுகளுக்கு முன்பே தம் செல்வங்களைக் கொண்டு மாற் றுத்திறனாளிகள், பெண்கள், சமூகத்தால் கைவிடப்பட்டோர் என பலரின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமிட்டுள்ள அர்ப்பணிப்பை நூலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது.

நெல்லை பாளையங்கோட்டை இடையே தாம்பரபரணி நதியில் 1843ல் கட்டப்பட்ட சுலோச்சனா முதலியார் பாலத்தின் வரலாற்றை சுவையான கதையாக கூறும் எழுத்தாளர், பாலத்தை கடந்து காணப்படும் பாரதியார், வ.உ.சி., புதுமைப்பித்தன் என தமிழ் உலகம் பாராட்டும் பெரியோர் பயின்ற 'மதுரை திரவியம் தாயுமா னவர் இந்துக்கல்லூரி'யின் சிறப்பு பற்றியும் கூறத்தவறவில்லை.

மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்த உயர் கட்டடங்களின் வரலாற்று பின்னணியை விவரிக்கும் நூலாசிரியர் மனிதர்கள் மாண்புர பணியாற்றிய பெரியோர்களின் வரலாற்று பெருமைகளையும் நம்முடன் பகிர்ந்து கொள்ளும் பாங்கு மிகச் சிறப்பானது. பல நூற்றுக்கணக்கானவர்களின் பங்களிப்பை நூலில் குறிப்பிட்டுள்ள நிலையில் ஒரு சிலரை மட்டும் நாம் கவனத்தில் கொள்ளலாம்.

நெல்லை நாகலாபுரத்தில் பிறந்து சீராப்புராணம் நூல் வடிவம் பெற காரணமான உமறுப்புலவரின் தமிழ் இலக்கிய தொண்டு நினைவில் நிற்கிறது. நாட்டுப்புறப் பாடல்களை தேடித்தேடி தொகுத்து வெளியிட்ட பேராசிரியர் நா. வானமாமலை, தமிழறிஞர் சாத்தான் குளம் அ. ராகவன், நேரு கலையரங்கம் எதிரே அமைந்துள்ள மாநில தமிழ்ச்சங்கத்தில் இலக்கிய கூட்டங்களை தொய்வின்றி நடத்தும் இலக்கிய ஆர்வலர் பேராசிரியர் வளனரசு, நாதஸ்வர இசையின் மேன்மையை மேலோங்கச் செய்த காருக் குறிச்சி அருணாசலம் என நெல்லை மாவட்ட மண்ணின் மைந் தர்களின் இலக்கிய பணிகளை நூலாசிரியர் அழகுர கூறுவதை காணலாம். அண்மையில் மறைந்த பேராசிரியர் தொ. பரமசிவம் அவர்களை பண்பாட்டு ஆய்வாளர்களுள் முதன்மையானவராக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். பெரியாரின் கருத்துக்களை உயிர் மூச்சாய் கொண்டிருந்த பேராசிரியர் இருபதுக்கும் மேற்பட்ட நூல் களை எழுதியுள்ள ஒரு நடமாடும் தகவல் களஞ்சியம் என பெருமை பொங்க குறிப்பிடுகிறார். கி.ரா. பற்றி நூலாசிரியர் கூறும்போது அவர் ஒரு அடர் வனம். அதற்குள் நுழைந்தால் வினோதமான உணர்வுகள் ஏற்படும் என்கிறார்.

நாம் அறிந்த அறிந்திராததென பல்வேறு அம்சங்களை எழுத்தா ளர் நாறும்பூநாதன் தனது நூலின் பல்வேறு பகுதிகளில் சுவைபட கூறியுள்ளார். குலசேகரப் பட்டிண தசரா விழா, பாளை தசரா திருவிழா, கையால் நெய்யப்படும் புவிசார் தகுதி பெற்ற உலகப் புகழ் பெற்ற பத்தமடை பாய், அவற்றில் ஒன்று இங்கிலாந்து இள வரசர் சார்லசுக்கு அன்புப் பரிசாக அளிக்கப்பட்ட தகவல், ரஷ்ய முன்னாள் அதிபர் கோர்பச்சேவ் வீட்டின் வரவேற்பறையில் பத்த மடை பாய் இருக்கின்ற தகவல், நெல்லை நகர சித்தர் தெருவில் 1984 முதல் நடைபெறும் பொருனை இலக்கிய கூட்டம், பாளை வ.உ.சி. மைதானம் உருவான கதை, கூந்தன் குள பறவைகள் சரணாலயம், நெல்லை கோயில்களில் மூலிகைச் சாறு கொண்டு வரையப்பட்ட ஓவியங்கள், இடதுசாரி சட்டமன்ற உறுப்பினராக இருந்த தோழர் அழகர்சாமியின் அலுவலகமாக செயல்பட்ட கோவில்பட்டி தேநீர் நிலையம், தனது பேராசிரியருக்காக போராட் டக்களத்தில் உயிர் துறந்த மாணவன் லூர்துநாதன் சிலையின் பின்னணி, நெல்லை சந்திப்பில் இருக்கும் பழமையான த.மு.கட்டடம், பாளை மாணவர்களின் வேடந்தாங்கலாக இருந்த மரியா Canteen, பட்டுப் புடவைக்கு பெயர் பெற்ற ஆர்.எம்.கே.வி. விற்பனை நிலைய உரிமையாளரின் இலக்கிய ஈடுபாடு, தாமிர பரணி நதிக்கரையில் குடியேறிய அரபு நாட்டு குடும்பங்களின் குடியேற்றத்துடன் உருவான நெல்லையில் பெயர் பெற்ற மேலப் பாளையம், பாளை காந்திமதி பள்ளியில் பயின்ற திருமதி சிவக ாமசுந்தரி ஆசிரியையின் மாணவி கோகிலா லண்டனில் மருத்துவ செவிலியராக புகழ் பெற்ற வரலாறு என பல்வேறு கடந்தகால, நிகழ்கால - மனதைவிட்டு நீங்காத அம்சங்களை நயம்பட வரை வதில் எழுத்தாளர் வல்லவராக விளங்குவதை வாசிக்கும் வாசகர் கள் அறிவர்.

நீர் நிலம் மனிதர்கள் நூலின் ஆசிரியர் தோழர் நாறும்பூநாதன் நெல்லை வரலாற்றின் ஒரு துளி அளவு மட்டுமே இங்கு கூறி இருப்பதாக கூறுகிறார். அதுவே பெரும் ஆல விருட்சமாக பரந்து விரிந்து கிடக்கிறது. வரலாற்று ஆர்வலருக்கு இந்நூல் ஒரு தூண்டுகோலாக வழிகாட்டியாக அமைந்துள்ளது. தமிழ் நாடு முற் போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் மாநில துணை செயலாளராக இருக்கும் இந்நூலாசிரியர் வீதி நாடகங்களிலும் தன்னை இணைத்துக் கொண்ட அனுபவம் காரணமாக மனித இத யங்களை தொடும் வண்ணம் விறுவிறுப்பு குறையாமல் பக்கங் களை நகர்த்தியுள்ளார். இவரது இந்நூலில் மனிதநேய உணர்வு கள் மட்டுமல்லாமல் சிவப்பு சிந்தனைகளும் சிதறிக் கிடப்பதை காணலாம். 'முத்துப்பட்டனின் காதல்' கதை வாயிலாக சாதி மறுப்பு திருமணத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

சமத்துவ சமூகத்தை உருவாக்க உழைக்கும் எண்ணம் உள்ள நூலாசிரியர் நெல்லை தொழிற்சங்க தோழமைகளைப் பற்றி கூறி யிருப்பதுடன் தனது கரிசல் மண்ணில், கோவில்பட்டியில் சம காலத்தில் தன்னுடன் பயணித்த, தனக்கு தூண்டுகோலாக இருந்த எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றி அவர்களின் படைப்புகள் ஊடாக பதிவிட்டுள்ளார்.

பெருமை மிகு நெல்லைச் சீமை, தட்டச்சு கால கனவுகள், ஒரு பாடல் ஒரு கதை, கனவில் உதிர்ந்த பூ, ஜமீலாவை எனக்கு அறி முகப் படுத்தியவன் உட்பட பத்துக்கு மேற்பட்ட நூல்களை எழுத் தாளர் இரா. நாறும்பூநாதன் எழுதியுள்ளார். இவரது சில நூல்கள் நெல்லையில் உள்ள தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பல் கலைக்கழகத்திலும் பாடமாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

நீர் நிலம் மனிதர்கள் என்ற வரலாற்று நூல் உண்மைச் சம் பவங்களை ஆதாரமாக கொண்டு எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் வரலாற்றை சொல்லும் விதம் நம்மை மேலும் மேலும் வாசிக்கத் தூண்டுவதுடன் அவர் கூறும் நினைவுச் சின்னங்களை பார்க்க வேண்டும். அவர் அடையாளம் காட்டும் கலைஞர்களை, எழுத் தாளர்களை, பேராசிரியர்களை, இலக்கியவாதிகளைப் பார்க்க வேண்டும், அவர்களுடன் கதைக்க வேண்டும் என்ற ஆவல் - ஆர் வம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது. எழுத்தினூடே எழுத்தாளர் எம்மையும் ஒவ்வொரு இடமாக அழைத்துச் செல்கிறார். நூலை வாசிக்கும் போது நாமும் அவருடன் பயணிப்பதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது. சமூக உணர்வு உள்ள ஓர் எழுத்தாள னுக்கு மட்டுமே அது சாத்தியம். தோழர் நாறும்பூநாதன் அந்த வகையில் வாசிப்போரின் மனங்களை வெற்றி கொண்டவராக திகழ்கிறார்.



jeyasingh@thaiveedu.com

# கிறிஸ்தவமும் தேசியவாதமும் சுதந்திரமும்

ஆங்கில மூலம்:
**- சி. அரசரெத்தினம்**
தமிழில்:
**- க. சண்முகலிங்கம்**

19ம், 20ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய வாய்ப்புக்களை வழங்கின. அவை புதிய பிரச்சினைகளையும் உருவாக்கியதோடு அப்பிரச்சினைகளிற்குத் தீர்வுதேடும் அவசியத்தையும் உருவாக்கின. பிரித்தானிய ஏகாதிபத்தியம் இந்தியத் துணைக்கண்டத்தையும் இலங்கையையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததோடு இப்பிராந்தியத்தில் தான் வைத்ததே சட்டம் என்ற நிலையைத் தோற்றுவித்தது. கிழக்கத்தைய சமூகங்கள் சிலவற்றைவிட பொருளாதார, அரசியல் வளர்ச்சியில் பின்தங்கியதாக ஐரோப்பா இருந்த நிலைமாறி, கிழக்குலகிற்கு அச்சமூட்டும் வகையில் அரசியல், பொருளாதார, சமயத் துறைகளில் பலம் மிக்கதாக ஐரோப்பா மாறியிருந்தது. அங்கு கைத்தொழில்துறையும் வியாபாரமும் வளர்ச்சி பெற்று முன்னேறியது. தனிநபர் வாதம் மேலோங்கியிருந்தது. தம் மதத்தைப் பரப்புவதிலும் ஐரோப்பியர் மத்தியில் மன உறுதி காணப்பட்டது.

ஐரோப்பா அடையாளம் தெரியாத அளவிற்கு முன்னைய நிலையில் இருந்து மாறியிருந்தது. ஐரோப்பிய நாடுகளுள் பிரித்தானியா முன்னிலையில் திகழ்ந்தது. அதன் இராணுவமும் கடற்படையும் பலம்மிக்கனவாக விளங்கின. முன்னேற்றம் பற்றிய கருத்தியல் பிரித்தானியாவை முன்தள்ளித் தூண்டியது. மதமாற்ற இயக்கத்தினர் பிரித்தானிய அரசின் துணைக் கருவியாகச் செயற்பட்டனர். பிரித்தானியாவின் அரசியல் ஆதிக்கம் மதப் பிரசாரகர்களின் செயற்பாடுகளுக்கு வலுவூட்டியது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆதிக்கம் பிரித்தானியாவுடன் ஒப்பிடும் போது குறுகிய எல்லைக்குட்பட்டதாக இருந்தது. பிரித்தானியா தன் அரசியல் அதிகார எல்லையை விஸ்தரித்துக் கொண்டமை கிறிஸ்தவப் பிரசாரகர்களுக்கும் பரந்த ஒரு பிரதேசத்தில் தம் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் வாய்ப்பை வழங்கியது.

இலங்கையின் கடற்கரையோர மாகாணங்கள், மலபார், தமிழ் நாட்டின் தென்கிழக்குக் கடற்கரைப் பகுதிகள், பழைய கோட்டைகள் அமைந்துள்ள நகரங்கள் என்பனவற்றில் மிசனரி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவ்விடங்களில் இடப்பட்ட அத்திவாரத்தின் மேல் கிறிஸ்தவர்கள் தம் மதம் பரப்பும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாயினர். மேற்குறித்த பகுதிகளுக்கு கத்தோலிக்கர், லூதர் சபையினர், இலங்கை அமெரிக்கன் மிசன் ஆகிய மதப்பிரிவினர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சென்றபோது அங்கே தமக்கு முன்னே பணிபுரிந்தோர் உருவாக்கிய அமைப்பு முறைகள் பாழடைந்த நிலையிலும், அரைகுறையாகவும் இருப்பதைக் கண்டனர். இவற்றைப் பழைய நிலைக்கு மீளக்கட்டியெழுப்புவதை சில மதப்பிரசாரகர்கள் தம் இலக்காகக் கொண்டு செயற்பட்டனர். மதப் பிரசாரம், கல்வி, மருத்துவ சேவை, அநாதைகளைப் பராமரித்தல், தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர் ஆகியோர் மத்தியில் பணியாற்றுதல் எனப் பல்துறைப்பட்டதாகத் தம் நடவடிக்கைகளை விரிவாக்கினர்.

புதிய மிசனரிப் பிரிவினர்கள் பலரும் புகுந்து எஞ்சியிருந்த பிரதேசங்களிற்கும் கிறிஸ்தவ மத நடவடிக்கைகளை பன்முகமாக விஸ்தரித்தனர். பிரஸ்பிற்றேரியன், மெதடிஸ்ட், சேர்ச் மிசனரி சபை, பப்றிஸ்ட் என்ற பல பிரிவினரும் புகுந்து நிர்வாக ஒழுங்கமைப்பு, திறன்கள், பிற வளங்கள் என்பனவற்றால் கிறிஸ்தவ மத நடவடிக்கைகளைப் பலப்படுத்தினர். வடஇந்தியாவிலும் இக்காலத்தில் தான் கிறிஸ்தவ மிசனரி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. பழைய மிசனரிப் பிரிவினர்களும், களத்தில் புதிதாக வந்திறங்கிய புதிய மிசனரிப் பிரிவினர்களும், இந்தியாவிலும் இலங்கையிலும் செயற்படத் தொடங்கினர். இதனால் பல்துறையினரின் பங்களிப்பால் ஆய்வறிவுத்துறையிலும், சமூகப்பண்பாட்டுத் தளத்திலும் சுறுசுறுப்பான நடவடிக்கைகளும் இடைத்தொடர்புகளும் ஏற்பட்டன.

ஆரம்ப கட்டத்தில் இருந்ததைப் போன்ற இரு வகையான மத மாற்றங்கள் தொடர்ந்தன. உயர்சாதி இந்துக்கள், கிறிஸ்தவப் போதனைகள் பற்றி அறிவைப் பெற்று அதனைத் தமது சமய நெறியாக ஏற்றுக் கொள்ளல் ஒரு வகை மதமாற்றமாகும். இது தனிநபர் நிலையில் நிகழ்வது. இரண்டாவது வகை மதமாற்றம் ஒரு குழுவாக மக்கள் மதம் மாறுவதாகும். ஒரு கிராமத்தின் ஒரு சாதிப் பிரிவினர் அல்லது உறவுக் குடும்பங்களின் குழு திரளாக ஒருங்கே மதம் மாறுவதை இவ்வகைக்கு உதாரணமாகக் கூறலாம். இவ்விதம் மக்கள் திரளாகக் கிறிஸ்தவத்திற்கு மாறுதல் தாழ்த்தப்பட்ட சாதியினர் மத்தியில் ஏற்பட்டது. பெரும்பான்மை தீண்டத்தகாதோரும், பழங்குடியினரும் இவ்விதம் கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

மிசனரி நடவடிக்கைகள் பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட போது மினசரிகள் சாதிப் பிரச்சினையை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. 19ம் நூற்றாண்டில் மிசனரிகள் சாதிப் பிரச்சினையை பெரியதொரு சமூகப் பிரச்சினையாகக் கருதினர். நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று சாதி முந்திய கட்டத்தில் ஒரு பிரச்சினையாக நோக்கப்படவில்லை. அக்காலத்தில் மரபுவழிப்பட்ட சமயச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளுமே முக்கிய பிரச்சினையாகக் கருதப்பட்டது. மரபு வழிச் சமூக ஒழுங்கமைப்பு அப்போது ஒரு பிரச்சினையாகத் தோற்றவில்லை. கத்தோலிக்க மிசனரிகளும். லூதர் சபையினரும் தம் மதத்திற்கு மாறிய புதியவர்கள் சாதி நடைமுறைகளைப் பின்பற்றுவதை அனுமதித்தனர்.

19ம் நூற்றாண்டின் கிறிஸ்தவ மிசனரிகள் தனிநபர்வாதம், மானி

டவாதம், சமூக சமத்துவம் ஆகிய கோட்பாடுகளால் வழிநடத்தப் பட்டவர்களாய் அவற்றிற்கு அழுத்தம் கொடுத்தனர். ஆகையால் சாதியை ஒரு பெரும் சமூகத் தீங்காக அவர்கள் நோக்கினர். மத மாற்றத்திற்கு சாதி ஒரு பெரும் தடையாக இருந்தது மட்டு மல்லாமல் புதிதாக மதம் மாறியவர்கள் சாதி நியமங்களின்படி தொடர்ந்தும் ஒழுகும்போது மரபு வழியில் சமூகத்துடன் உள்ள தொடர்புகளை அவர்கள் தொடர்ந்து பேணி வந்ததனால் மரபு வழிச் சமயத்திற்கு மீண்டு செல்லும் வாய்ப்பும் இருந்தது. தாம் விரும்பியபடி புதிதாகத் தழுவிக் கொண்ட கிறிஸ்தவத்தைக் கைவிட்டு கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களாக அவர்கள் மாறும் ஆபத்து இருந்தது. ஆகையால் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறியவர்களிடம் பழைய சாதி வழமைகள் நடைமுறைகளின் எச்ச சொச்சங்கள் எதுவும் இல்லாதபடி அவற்றைக் களைந்து விடுதல் மிகவும் அவ சியமானது என மிசனரிகள் கருதினர். மரபுச் சமூகத்துடன் உள்ள தொடர்புகளை முற்றாக அறுத்துக் கொண்டவர்கள் கிறிஸ்தவ சமூ கத்துடன் விரைவில் ஒன்றிணைந்து கிறிஸ்தவர் ஆகிவிடுவர் என் றும் கருதப்பட்டது.

சாதிக் கட்டமைப்பின் உயர் படியில் இருந்தோர் தமது சாதிப் பற் றையும், சாதி வழமைகளையும் கிறிஸ்தவத்திற்கு மாறும்பொழுது முற்றாகத் துறந்து விடத் தயாராக இருந்தனர். ஏனெனில் கிறிஸ் தவராக மாறும் அவர்களது முடிவு தனிப்பட்ட முறையில் செய்யப் பட்ட முடிவாக இருந்தது. இம்முடிவைச் செய்தோர் பலவற்றைத் தியாகம் செய்துவிட்டே கிறிஸ்தவத்திற்கு மாறினர். ஆகையால் தாம் அனுபவித்த சலுகைகளையும் உயர் அந்தஸ்தையும் துறந்த வர்களுக்கு சாதியைக் கைவிடுதல் பெரிய விடயமாக இருக்க வில்லை. இதனைப் போன்றே கிறிஸ்தவர்களாக மாறிய தாழ்த்தப் பட்டோரும் சாதிய அடையாளத்தையும் சாதி வழமைகளையும் துறப்பதற்குத் தயாராக இருந்தனர். தாழ்த்தப்பட்டோருக்கு மதம் மாறுவதால் இழப்பதற்கு எதுவும் இருக்கவில்லை. அவர்கள் மதம் மாறியதால் பெற்ற நன்மைகளோ ஏராளம். அவர்கள் தம்மை அடி மைப்படுத்திய சாதி விலங்குகளைத் தூக்கி எறிவதில் மகிழ்ச்சி கொண்டனர்.

சாதிப்படிநிலையின் இடைத்தரத்தில் இருந்தோருக்கே சாதியைத் துறப்பதற்குக் கடினமானதாக இருந்தது. கிறிஸ்தவர்களுக்குள் தாழ்த்தப்பட்ட சாதியினருடன் சமத்துவம் பேணி நடப்பதை இடைத்தரச் சாதிக் கிறிஸ்தவர்கள் விரும்பவில்லை. இடைத்தரச் சாதியினர் பெரும்பான்மையினராக ஆதிக்கம் பெற்றிருந்த பகுதி களின் தேவாலயங்களின் பாதிரிகள் அச்சாதியினரின் சாதி உணர் வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டியதை உணர்ந்தனர். தேவாலயங் களில் பிறிதான ஆசனங்களைக் கொடுத்தல், ஒருசேர இருந்து உணவு உண்பதைத் தவிர்த்தல் என்பன போன்ற வழக்கங்களும் யாவரும் ஒரே கிறிஸ்தவ சமூகத்தினர் என்ற உணர்வு இன்மையும் இத்தகைய தேவாலயங்களில் காணப்பட்டன.

சாதியின் பிடியில் உள்ள இத்தேவாலயங்களைப் போன்று பாடசா லைகளிலும் மாணவர்களுக்குத் தனியான விடுதிகள், தனியான உணவு உண்ணக் கூடிய மண்டபங்கள் என்பன இருந்தன. இத்த கைய சலுகைகளைச் சாதியில் உயர்ந்தோருக்கு வழங்குவதில் மிசனரிகளுக்கு விருப்பம் இல்லாத போதும் தேவாலயம் பிள வுண்டு அழிந்திருக்கும் என்ற பயம் காரணமாக இவற்றை வழங் கினர். இவ்வாறான சலுகைகள் தென்னிந்தியாவின் தேவாலயங்க ளில் நடைமுறையில் இருந்தன. இலங்கையின் வடபகுதியிலும் இது ஓரளவிற்கு நிலவியது. ஆயினும் வங்காளம், பம்பாய், பஞ் சாப் போன்ற வடமாநிலங்களில் கிறிஸ்தவ தேவாலங்களில் சாதி பேதம் காட்டுதல் முற்றிலும் தவிர்க்கப்பட்டது.

மிசனரிகளையும், புதிதாகக் கிறிஸ்தவத்தில் சேர்ந்தோரையும் கவ லைக்குள்ளாக்கிய விடயமாக சாதிபேதம் பற்றிய சர்ச்சை இருந் தது. 1830களிலும் 1840களிலும் இது பற்றிய விவாதங்கள் நடந் தன. பிஷப் ஹீபர் இந்தியாவின் முன்னணியில் விளங்கிய கிறிஸ் தவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து இவ்விடயம் குறித்து ஆலோசனை நடத்தினார். தஞ்சாவூர் இடைத்தர சாதிக் கிறிஸ் தவர்களான விவசாயிகள் நிறைந்த இடமாகும். இவ்விடத்தைச் சேர்ந்த வண. கிறிஸ்ரியன் டேவிட் என்ற பாதிரியார் சாதிப் பிரிவி னைகள், சமூகத்தில் காணப்படும் வர்க்கப் பிரிவினைகள் போன்ற ஒன்று என்றும் கிறிஸ்தவ மதக் கொள்கைகளுக்கும் இவற்றுக்கும் உள்ளார்ந்த உறவு இல்லை என்றும் குறிப்பிட்டார். சாதியை நியாயப்படுத்திய கிறிஸ்ரியன் டேவிட் போன்றோர் சாதி ஒரு சமூக நிறுவனம் என்றும் அது ஒரு சமய நிறுவனம் அன்று என் றும் கூறினார்.

இவ்வாறான அவர்களின் வாதம் தொடக்க காலத்தில் றொபர்ட் நொபிலி அவர்கள் முன்வைத்த வாதத்தை ஒத்ததாகும். நொபிலி யும் சமூக வழமைகளில் இருந்து சமய நம்பிக்கைகளை வேறு படுத்திப் பார்க்க வேண்டும் என்று கூறினார். தென்னிந்தியாவின் இடைநிலைச் சாதிகளின் அழுத்தம் காரணமாக மிசனரிகளும் சாதி எதிர்ப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கத் தோலிக்கத் திருச்சபை தனது சமயத்தைத் தழுவியவர்களிடையே சாதிபேதம் நிலவியதை ஒரு பெரும் பிரச்சினையாகக் கருத வில்லை. கத்தோலிக்க சமயிகளிடம் திருச்சபை ஒழுக்கக் கட்டுப் பாட்டை உறுதியுடன் பேணுவதில் வெற்றி கண்டது.

1850ம் ஆண்டு மிசனரியில் புரட்டஸ்தாந்திய மதப் பிரிவினர்களின் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் சாதி மன்னிக்கமுடியாத ஒரு தீங்கு என்றும், கிறிஸ்தவராக மதம் மாறுவோர் சாதி ஆசாரங் களைக் கைவிட்டவர்களாகவே ஞானஸ்தானம் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானம் செய்யப்பட்டது. வட இந்தியாவில் கிறிஸ்தவத்தில் சேர்ந்து கொள்வோர் ஞானஸ்தானத்தின் முன்ன ராக சாதி ஆசாரங்களை முறைப்படி துறக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் இவ்விதமான வற்புறுத்தல் இல்லாத காரணத்தால் சாதிப் பிரச்சினை இருபதாம் நூற்றாண்டிலும் கூடத் திருச்சபைக்குத் தொல்லை தரும் ஒரு விட யமாக இருந்து வந்தது. கிறிஸ்தவத்திற்கு மாறிய ஒருவருக்குச் சாதியைத் துறப்பதா இல்லையா என்பது அறிவுக்கும் அறி யாமைக்கும் இடையிலான பிரச்சினை அன்று. அது பல்வேறு பரி-மாணங்களைக் கொண்ட சிக்கலான பிரச்சினையாகும்.

சாதியைக் கைவிடும் ஒரு கிறிஸ்தவர் தனது முன்னைய சாதியி லும் அந்தஸ்திலும் குறைந்த புதுச்சாதியில் சேர்ந்து கொண்டவ ராகவே கணிக்கப்படுகின்றார். அவர் ஒரு கிராமத்தில் வசிப்ப வராக இருந்தால் அவர் முன்னர் பெற்று வந்த சலுகைகள் பல வற்றை இழக்க வேண்டியராய் இருப்பார். போர்த்துக்கீசர் காலத் தில் தொடக்கத்தில் மிசனரிகள் மதம் மாற்றிய போது மதம் மாறி யவர்களிலிருந்து பறங்கியக் கலப்பினம் உருவானது. ஆகையால் அவர்கள் தாழ்ந்த சாதியாக்கப்பட்டனர். கத்தோலிக்கர்களுக்கு நேர்ந்த இக்கதி தமக்கும் ஏற்படக் கூடாது என இந்தியக் கிறிஸ் தவர்கள் விரும்பினர். கிறிஸ்தவராக மாறும் ஒருவர் தாம் அகில இந்திய ரீதியில் கிறிஸ்தவர் என்ற பரந்த சமூகத்தின் உறுப்பின ராகின்றார் என்ற திருப்தி தரும் மன உணர்வு அவருக்கு இருந் தது என்பது உண்மையே. ஆயினும் உள்ளூர் மட்டத்தில் தாழ்ந்த சாதியாக்கப்பட்டு மரபுவழிச் சமூகத்தில் இருந்து துண்டிக்கப்படு வோம் என்பது அவரால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. தாம் மரபுச் சமூகத்தில் உறுப்பினராக இருந்து கொண்டே கிறிஸ் தவர் என்ற வகிபாகத்தையும் ஏற்பதையே அவர் விரும்பினார். கிறிஸ்தவத்தை சுதேச மயப்படுத்தி அதை உள்ளூர் மதமாக மாற்றுவதன் மூலம், தமது சாதியினரால் தம் சாதியின் அங்கத்தி-னராக ஏற்று மதிக்கப்படுவதையே அவர் விரும்பினார்.

இலங்கையின் கிறிஸ்தவ திருச்சபைகளில் சாதி தீவிர பிரச்சினை யாக இருக்கவில்லை. ஆயினும் யாழ்ப்பாணத் தமிழர்களிடம் இப் பிரச்சினை தொடர்ந்திருந்து வந்துள்ளது. தென்னிந்தியாவில் இருந்த மிசனரிகளைப் போன்றே யாழ்ப்பாணத்தின் மிசனரிகளும் இவ்விடயம் குறித்து நிறைய எழுதியிருக்கிறார்கள். இப்பிரச்சினை தொடர்ந்திருந்த போதும், பாழ்ப்பாணத்தின் கிறிஸ்தவர்கள் சமூ கத்தின் அடித்தளத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர் நிலைக்குத் தள் ளப்பட்டுச் சமூகத்தில் இருந்து துண்டிக்கப்படும் நிலை ஒரு போதும் எழுந்ததில்லை. சிங்கள சமூகத்தில் இது நடைபெறும் சாத்தியம் இருக்கவில்லை. காரணம் பௌத்தத்தில் தூய்மை, துடக்கு என்னும் கருத்து ஊடுருவியிருக்கவில்லை. கருத்தியல் நிலையில் பௌத்தம் சாதிக்கு எதிரானதொரு மதமாகும்.

வட இலங்கையின் தமிழர்களிடமும் 400 ஆண்டுக்கால அரசியல்,

பொருளாதார, மாற்றங்களினால் ஏற்பட்ட நன்மைகள் சாதி உணர்வை மழுங்கச் செய்தன. 19ம் நூற்றாண்டில் பிரித்தானியரின் சட்டமுறை வழமைச் சட்டத்தினை ஒழித்தது. இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் நிர்வாக நடவடிக்கைகள் மூலமான அரசின் தலையீடு மக்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள உதவியது. 19ம் நூற்றாண்டில் பெருந்தொகையினர் மாறியபடி யால் சமூகத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை கணிசமான அள வில் இருந்தது. இதனால் அவர்களைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைப்பது சாத்தியமற்றதாகவிருந்தது. நாம் முன்னர் குறிப் பிட்டதுபோல் கிறிஸ்தவம் பல கிராமங்களில் புகுந்தது. அவற்றில் கிறிஸ்தவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எண்ணிக்கையினரான சிறுபான்மையினராகவும் காணப்பட்டனர்.

1901ம் ஆண்டில் தமிழர்களில் 11.5 வீதத்தினர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். வடக்கின் மாவட்டங்களைத் தனியாக எடுத்து நோக்கி னால் அங்கு வாழ்ந்தோரில் 20 வீதமானோர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். அத்தோடு இந்தியாவைப் போன்று அல்லாது கிறிஸ் தவர்கள் சில பகுதிகளில் செறிவாக வாழ்ந்து வந்தனர். (இந்தி யாவில் கேரளம் விதிவிலக்கானது).

இலங்கைத் தமிழரிடைச் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உள் ளவர்களிடமும் கிறிஸ்தவம் பரவியிருந்தது. ஒரு மாதிரிக் கிரா மத்தை எடுத்துக் கொண்டால், அங்கு கிறிஸ்தவர்கள் சிறுபான்மை யினராக இருப்பார்கள். அக்கிறிஸ்தவர்களிடையே கிராமத்தின் முக்கிய சாதிகள் யாவற்றையும் சேர்ந்த குடும்பங்கள் இருக்கும். இக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவர்கள் என்ற முறையில் தம் மதத் தைச் சேர்ந்த பிற குடும்பங்களுடன் உறவு கொள்வார்கள். இவ்வு றவு மேல் - கீழ் நோக்கியதாக இருக்கும். அதேவேளை ஒவ் வொரு சாதியைச் சேர்ந்த கிறிஸ்தவர்களும், தத்தம் சாதியினரு டன் இந்து, கிறிஸ்தவர் என்ற வேறுபாட்டைக் கடந்த சாதியடிப் படையிலான கிடைப்பக்க உறவை வைத்திருப்பார்கள். சமூக நிகழ்வுகளில் குடும்பங்களின் உறவு சாதியடிப்படையில் கிடைப் பக்கமாக அமையும். கிறிஸ்தவர்கள் கணிசமான எண்ணிக்கையில் இருந்தால் கிராமத்தின் உறவுக் குடும்பங்களிடையே திருமண உறவுகள் இருக்கும். மிகவும் அருந்தலாக கிறிஸ்தவர் குடும்பத் தைச் சேர்ந்தவர் ஒருவர் இந்துவை மணம் முடிப்பதும் நிகழ்வ துண்டு. ஆனால் கிறிஸ்தவர்கள் தம்மிடையே சாதிமாறித் திரு மணம் செய்வது இல்லை. மேற்குறித்தவாறான பொதுவிதிகள் சிங் கள சமூகத்திற்கும் பொருந்தும். ஆயினும் சிங்களக் கிறிஸ்தவர் கள் சாதிமாறி மணம் முடிப்பதில் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப் பிடிப்பவர்களாக உள்ளார்கள்.

இலங்கையின் கிறிஸ்தவ சமூகம் அதற்கு வெளியே உள்ள இந் துச் சமூகத்தினதும், பௌத்த சமூகத்தினதும் அச்சுவார்ப்பாகவே உள்ளது எனலாம். கிறிஸ்தவம் தனது மரபுவழிச் சமூகத்துடன் உள்ள உறவைத் துண்டிக்கவில்லை. இதனால் இந்தியக் கிறிஸ் தவர்களைவிட இலங்கைக் கிறிஸ்தவர்களால் சுலபமாகத் தமது மரபுவழிச் சமூகத்துடன் இணைந்துகொள்ள முடிகிறது. ஆகை யால் அது தனது கிறிஸ்தவப் பண்பை ஓரளவுக்கு இழந்தும் உள் ளது. இலங்கைக் கிறிஸ்தவர்கள் தென்னிந்தியாவின் இடைத்தர சாதிகள் தேர்ந்து கொண்ட மாதிரியை தேர்ந்து கொண்டார்கள். இதன் காரணத்தால் இருபதாம் நூற்றாண்டில் தேசியவாதம் குறித்து இந்தியக் கிறிஸ்தவர்கள் எடுத்த நிலைப்பாட்டைவிட இலங்கைக் கிறிஸ்தவர்களின் நிலைப்பாடு வேறுபட்டதாக இருந் தது.

கிறிஸ்தவத்திற்கும் இந்து சமயத்திற்கும் இடையிலான கருத்தியி யல் உறவுகளை அடுத்து நோக்குவோம். 19ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கிறிஸ்தவர்களிடையே 16ம் நூற்றாண்டின் அடிப்படை வாதத்தைத் தழுவும் போக்குக் காணப்பட்டது. இந்து சமயத்தை விரோத மனப்பாங்குடன் பார்ப்பதும், அகங்காரம் மிக்க நடத்தையும் கிறிஸ்தவர்களிடம் வெளிப்பட்டது. இதற்குக் காரணம் மதமாற்ற நடவடிக்கைகளில் அவர்கள் எதிர்நோக்கிய எதிர்ப்பு ஆகும். மரபுவழிச் சமயங்கள் மதம் மாற்றுதலுக்கு எதி ராக விதித்த தடைகள் மிசனரிக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. இக்காலத்தில் இந்து சமயத்தவர்களால் எழுதப்பட்ட நூல்கள் கட் டுரைகள் முன்னைய காலத்தில் அவர்கள் முன்வைத்த வாதங்கள், கண்டனங்கள் என்பனவற்றின் திருந்திய வடிவங்களாக இருந்தன. அவர்கள் இவ் இடைக்காலத்தில் பல விடயங்களைக் கற்று அறிந்து கொண்டிருந்தார்கள்.

18ம் நூற்றாண்டில் மேற்குலகில் புதிய அறிவொளி இயக்கம் ஒன்று வெளிப்பட்டது. மேற்குலக அறிவாளிகளின் எழுத்துக்களில் மேற்குக்கு வெளியே உள்ள சமயங்கள் பற்றிய சகிப்புத் தன்மை யும். தற்சார்பு இன்றிப் பிற பண்பாடுகளை நடுநிலை நின்று நோக்கும் பண்பும் வெளிப்பட்டது. குறிப்பாக பிரான்சு நாட்டுக் கலைக்களஞ்சியப் பள்ளியினரின் எழுத்துக்களில் இப்போக்கு வெளிப்பட்டதைக் காணலாம். இந்து அறிவாளிகளின் எழுத்துக் களில் இவற்றின் தாக்கம் வெளிப்பட்டது.

இந்து நிறுவனங்களையும் இந்து சமய நடைமுறைகளையும் கண் டனம் செய்து மிசனரிகள் எழுதியவை, இந்தியாவைப் பற்றி எழு திய பிரித்தானியாவின் பயன்வாதிகள் (Utilitarians) விபரங்கள் எனப்படும் இவை முற்போக்குவாதிகள் எழுத்துக்களில் பிரதிபலித் தன. யேம்ஸ் மில் இந்திய வரலாறு என்னும் தமது முக்கியமான நூலில் இந்திய வரலாற்றின் இந்துசமய இஸ்லாமிய சமய கால வரலாற்றைக் கேலி செய்து எழுதினார். அத்தோடு இந்தியாவில் பிரித்தானியா உருவாக்கவிருக்கும் பொற்காலத்தோடு ஒப்பிடும் போது இச்சமயங்களின் செல்வாக்குக்கு உட்பட்ட பழைய கால வரலாறு அர்த்தமற்றது என்றார். மில் போன்றோரின் இதுபோன்ற கருத்துக்களைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிறிஸ்தவத்தைத் தழுவிய கல்வி கற்றவர்களான இந்தியர்களில் பெரும்பான்மையினர் ஏற்றுக் கொண்டனர்.


இதற்கு மாறுபட்ட கருத்தை முதன்முதலில் எடுத்துக் கூறியவர் களாக ராஜா ராம்மோகன் ராய் அவர்களையும் அவரது பிரம்ம சமாஜ இயக்கத்தினரையும் குறிப்பிடலாம். ராஜா ராம்மோகன் ராய் முதலில் கிறிஸ்தவத்தோடு உடன்பாடு கொண்டவராய் அதற்கு நெருக்கமானவராக இருந்தார். பின்னர் அவர் தம் கருத்தை மாற்றி இந்து சமயத்தை திருத்தம் செய்து நவீனமயப் படுத்த முயன்றார். 19ம் நூற்றாண்டில் பிரம்மசமாஜம் வங்காள அறிவாளிகள் மத்தியில் செல்வாக்குடையதாய் இருந்தது. பிரம்ம சமாஜத்தின் கருத்துக்கள் அக்கால வங்காளியரின் மனநிலைக்கு ஏற்றதாக இருந்தது. பிரம்மசமாஜத்தின் தீவிரவாதப் பிரிவினரின் கொள்கைகள் கிறிஸ்தவக் கருத்துக்களோடு இணக்கம் உடைய னவாய்க் காணப்பட்டன. அவர்கள் போதித்த கடவுள் கொள்கை, பின்பற்றிய வழிபாட்டு முறைகள், பிரசார உத்திகளும் முறைக ளும் என்பன யாவும் கிறிஸ்தவக் கருத்துக்களைத் தழுவியனவாய் இருந்தன.

பிரம்மசமாஜத்தின் சிந்தனையாளர்களில் ஒருவரான கேசவ் சந்திர-சென் இந்து - இந்தியாவின் எல்லா மதங்களிற்கும் பொதுவான இந்தியத் திருச்சபை என்ற நிறுவன அமைப்பு வேண்டும் என்ற கருத்துடையவராக இருந்தார். முஸ்லிம்களும் இந்துக்களும் சமய அடிப்படையில் ஒற்றுமைப்படலாம் என நினைத்தார். பிரம்ம சமா ஜத்தினர் இந்து சமயத்தை சடங்குகளில் நம்பிக்கையற்ற சாதி-பேதம் பாராட்டாது ஒரு மதமாகவும், பரம்பரை வழியாகப் பூசல் களைக் கொண்டதும், புராணங்களில் நம்பிக்கை உடையதுமான மதமாக அன்றி கிறிஸ்தவத்தைப் போன்ற ஆத்மிக நெறிசார்ந்த ஒரு சமயமாக இந்து சமயத்தைக் கருதலாயினர். பிரம்ம சமாஜத் தின் இவ்வாறான கருத்துகள் இந்தியாவின் கிறிஸ்தவ அறிவாளிக ளின் சிந்தனையில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் தேசியவாதம் எழுச்சிபெற்ற பின்னணியில் கிறிஸ்தவத்தை அதன் மேற்குலக மூலத்திலிருந்து பிரித்து இந்தியாவிற்குரிய ஒன்றாக நோக்கத் தொடங்கினர்.

இந்தியாவின் கிறிஸ்தவ இறையியல் சிந்தனையில் மேற்கூறிய கருத்துக்கள் தாக்கத்தை ஏற்படுத்தின. இந்துசமயத்திற்கு எதிரான விரோதப் போக்கையும் எதிர்ப்பையும் சில மிசனரிகள் தூண்டிக் கொண்டிருந்ததைத் தவறு எனச் சில அறிவாளிகள் கண்டித்தனர். விரோத உணர்வை வளர்ப்பதற்குப் பதிலாக கிறிஸ்தவத்திற்கும் இந்து சமயத்திற்கும் பொதுவான இயல்புகள் எவையென்ற தேட லில் கவனம் செலுத்தவேண்டும் எனக் கிறிஸ்தவ அறிவாளிகள் கூறலாயினர். இக்கருத்தை மிகவும் அழுத்தம் திருத்தமாகவும்

கவர்ச்சியான ஒரு கொள்கையாகவும் முன்வைத்தவர் பிரம்மபந்த உபாத்தியாயர் ஆவார். இவர் தம்மை இந்துக் கத்தோலிக்கர் எனக் கூறினார். மத்தியதர வகுப்பு வங்காளிக் குடும்பத்தில் பிறந்த உபாத்தியாயர் 1891ல் புரட்டஸ்தாந்து மதத்தைத் தழுவினார். பின்னர் அவர் கத்தோலிக்கத்தில் சேர்ந்து கொண்டார். அவர் தம் எழுத்துக்களில் இந்து தத்துவஞானத்தையும் கத்தோலிக்க இறையியலையும் இணைக்க முயன்றார்.

இந்துமதம் பல்வேறுவகைப்பட்ட நம்பிக்கை முறைமைகளின் தொகுப்பு என்றும் அதனை எல்லாம் தழுவிய இந்து என்ற ஆன்மா ஊடுருவி நின்று ஒன்றிணைகின்றது என்றும் உபாத்தியாயர் கருதினார். சுருங்கக்கூறின் நாம் எமது உடலமைப்பிலும், உள்ளத்தின் பாங்கிலும் இந்துக்களாக உள்ளோம். ஆயின் அழிவில்லாத ஆன்மாக்கள் என்ற முறையில் நாம் எல்லோரும் கத்தோலிக்கர்களே. எம்மை இந்துக் கத்தோலிக்கர்கள் என்று கூறலாம் என்பது உபாத்தியாயரின் கருத்து ஆகும்.



பேராசிரியர் சி. அரசரத்தினம்

ஏனைய கிறிஸ்தவ அறிவாளிகள் உபாத்தியாயர் போன்று இந்துக் கிறிஸ்தவ ஒற்றுமையை தீவிரமாக வெளிப்படுத்தவில்லை. அவர்கள் கிறிஸ்தவத்தினை நிறுவனமயப்படுத்துவதிலேயே அக்கறை கொண்டிருந்தனர்.

வண. கே.சி. பானர்ஜி என்ற கிறிஸ்தவ மதபோதகரும் கே.எம். பானர்ஜி என்ற கிறிஸ்தவரும் வங்காளத்தைச் சேர்ந்தவர்கள். டாக்டர் பரணி ஆண்டி, திவான் பகதூர் அப்பாசாமிப்பிள்ளை என்ற இருவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். இந் நால்வரையும் கிறிஸ்தவத்தை இந்துசமய நோக்கில் விளக்கம் கூறியவர்களாகக் கொள்ளலாம். இவ்விளக்கங்களில் பெரும் பான்மையானவை சொற்பொழிவுகள், வினாக்களுடன் கூடிய சொல் விளையாட்டாகவே இருந்தன. உதாரணமாக வேதத்தில் உள்ள சில பெயர்களை வைத்துக்கொண்டு கிறிஸ்தவத்தின் தீர்க்க தரிசனம் வேதத்தில் செயல்படுத்தப்பட்டது எனச் சிலர் விளக்கங்கூறினர். இவ்விளக்கங்கள் தத்துவஞான வளர்ச்சிக்கோ அல்லது இறையியலின் வளர்ச்சிக்கோ எவ்வித பங்களிப்பையும் செய்யவில்லை.

இந்தியாவின் கிறிஸ்தவ திருச்சபை இந்தியாவின் அறிவியல் சிந்தனை மரபில் காலூன்றி நிற்பதற்கு கொண்டிருந்த விருப்பத்தின் வெளிப்பாடாகவே இதனைக் கொள்ளவேண்டும். மரபுவழிச் சமூகத்தின் சாதி மரபைத் தழுவிக்கொண்டதைப் போன்றே கிறிஸ்தவம் அச்சமூகத்தின் சமூகத் தளத்தில் ஆழவேர் பதித்துக் கொள்ளவும் விளைந்தது.

மிசனரிகளின் மேற்குறித்த முயற்சிகள் அவர்கள் இந்துசமயத்தைப் பற்றி எழுதியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதற் கொண்டு மேற்கு நாட்டு மிசனரிகள் இந்துசமயத்தைப் புதிய கண்ணோட்டத்தில் நோக்கத் தொடங்கின. அவர்களின் எழுத்துக்களில் விரோத உணர்வு குறைவாக இருந்தது. கண்டனங்களும் மிகையாக இருக்கவில்லை. இந்து சமயத்தின் நல்ல அம்சங்களை ஏற்று அழுத்தம் கொடுக்கும் பண்பு வெளிப்பட்டது. கிறிஸ்தவத்தோடு இந்துசமயம் உடன்படும் அம்சங்களைச் சுட்டிக்காட்டினர். இந்தியாவின் பழைய பண்பாட்டை மீள் கண்டுபிடித்தல் என்ற பணியில் அவர்களும் இணைந்து கொண்டனர். ஆங்கில மொழிபெயர்ப்பில் பல சமய நூல்களை வெளியிட்டனர். இந்தியாவின் மரபுரிமை என்ற தலைப்பிலான தொடர் வெளியீடுகளை பிரசுரித்தனர்.

தென்னிந்தியாவில் ஜி.யு. போப், பொப்லே ஆகியோர் தமிழரின் செவ்விலக்கியப் பக்திப் பனுவல்களை மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டனர். இவ்வகையில் திரட்டப்பட்ட ஆதாரங்கள் யாவும் கிறிஸ்தவம் இந்துசமயத்தின் நிறைந்த வடிவம் என்ற கருத்தை எடுத்துக் கூறின. ஜெ.என். ஃபார்குவார் எழுதிய இந்துசமயத்தின் மணிமுடி (Crown of Hinduism) என்ற நூல் இக்கருத்தை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறியது.

இந்தியக் கிறிஸ்தவர்களிடையே தேசியவாத அரசியலின் தாக்கம் முதன்முதலாக வங்காளத்தில் ஏற்படுவதைக் காணலாம். கே.எம். பானர்ஜி தலைமையில் 'வங்காள கிறிஸ்தவ கழகம்' என்ற அமைப்பு 1868ல் உருவாக்கப்பட்டது. இதற்குச் சில ஆண்டுகளின் பின்னர் 'வங்காள கிறிஸ்தவ மாநாடு' என்ற அமைப்பு முன்னைய அமைப்பை ஒத்த இலட்சியங்கள் கொண்டதாய் அமைக்கப்பட்டது. 1887ல் கே.சி. பானர்ஜி தாம் தொண்டாற்றிய கிறிஸ்தவ சபையுடன் முரண்பட்டவராக வெளியேறி கிறிஸ்தவ சமாஜ் என்ற பெயரில் ஒரு அமைப்பை நிறுவினார். பிரம்ம சமாஜத்திற்கு ஒப்பான ஒரு அமைப்பாக கிறிஸ்தவ சமாஜ் விளங்கியது வெளிப்படையானது.

கிறிஸ்தவ சமய வழிபாட்டையும் அதன் இறையியலையும் கிறிஸ்தவமயப்படுத்தி இந்தியக் கிறிஸ்தவர்கள் யாவரையும் ஒரு திருச்சபையின் கீழ் ஒன்றிணைப்பது கிறிஸ்தவ சமாஜ் அமைப்பின் இலட்சியமாக விளங்கியது. பரணி ஆண்டி இந்தியத் தேசிய திருச்சபை (National Church of India) என்னும் பெயரில் சென்னையில் ஒரு அமைப்பை நிறுவினார். பிரம்மசமாஜம் போன்ற அமைப்புக்களின் தோற்றம் என்ற போக்கிற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். நிறுவனமயப்பட்ட சமயத்திற்கு வெளியே தொடக்கப்பட்ட இயக்கங்களாக இவை அமைந்தன. பழமரபுச் சமயக் கோட்பாட்டாளர்களின் எதிர்ப்பால் இவ் இயக்கங்கள் விரைவில் அடங்கிப் போயின.

தீவிரவாதம் இல்லாத மிதவாத இயக்கங்களும், நிறுவனமயப்பட்ட திருச்சபைகளின் ஆதரவுடன் தோன்றின. இவை இறையியல் சார்ந்த விளக்கங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்தன. சமூக சீர்திருத்தம், அரசியல் நோக்குடைய நடவடிக்கைகள் என்பவற்றை இவை ஆதரித்தன. இவற்றிற்கு மிசனரிகளின் ஆதரவும் கிடைத்தது. 1890 முதல் இந்தியக் கிறிஸ்தவ கழகங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டன. இக்கழகங்கள் கல்விகற்ற வகுப்பினர் அரசியல் ரீதியில் ஒன்றிணைவதன் வெளிப்பாடாகும். தேசிய காங்கிரசும் அமைக்கப்பட்டது. இந்திய தேசிய வாதத்தின் முதற் கட்டத்தில் இனம், மதம் என்ற பிரிவுகளைத் தாண்டி மக்கள் இணைந்தனர். இது ஒரே கருத்துடையவர்களை இந்தியா எத்திசையில் செல்லவேண்டும் என்ற நோக்கில் ஒன்றிணைப்பதாக அமைந்தது. இது கிடைப்பக்கமான ஒன்றிணைத்தலாகவும் இருந்தது.

இந்திய காங்கிரசின் பின்புறத்தில் நின்று செயற்பட்ட புதிய குழாத்தின் உறுப்பினர்களாகப் பல கிறிஸ்தவர்கள் விளங்கினர்.

1891ல் மாநில சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் விரிவாக்கப்பட்ட போது இந்தியக் கிறிஸ்தவர்கள் சிலரும் மாநில சட்டசபையில் நியமனம் பெற்றனர். காங்கிரசின் வருடாந்த மாநாடுகளில் பலர் பங்குபற்றினர். லிபரல் முற்போக்குச் சிந்தனையுடைய சமூக சீர் திருத்த மாநாடு கூட்டங்களிலும் பங்குபற்றினர். கிறிஸ்தவ திருச் சபையை தேசியமயமாக்குதலில் தம்மைச் சூழப் பிறதுறைகளில் சமூகத்தில் புகுந்துகொள்ளும் கருத்துக்களைத் திருச்சபையிலும் புகுத்துதலாக நோக்கப்பட்டது.

இலங்கையில் இந்தியாவைப் போன்று சுதேச கிறிஸ்தவத்தை உருவாக்கும் போக்குக் காணப்படவில்லை. பௌத்தம், இந்து சமயம் ஆகியவற்றின் உண்மைகளை உள்வாங்கி அவற்றின் ஒளி யில் கிறிஸ்தவத்தை மறுவிளக்கம் செய்யும் முயற்சிகளும் இலங் கையில் 19ம் நூற்றாண்டில் இடம்பெறவில்லை.

பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் இலங்கையில் பிந்தித் தோன்றிய தும், அது அவ்வாறு தோன்றியபோது தீவிரவாத கிறிஸ்தவ எதிர்ப்பாக வெளிப்பட்டதும் இதற்கான காரணம் ஆகும். இந்து சமயம் பிரம்மசமாஜ இயக்கத்தின் கீழ் கிறிஸ்தவக் கொள்கையை நியாயப்படுத்தும், ஏற்றுக்கொள்ளும் மறுமலர்ச்சி இயக்கமாக ஆரம்பித்தது போல் இலங்கையில் ஆரம்பம் அமைய வில்லை. இன்னொரு காரணமும் இருந்தது. தத்துவார்த்த நிலையில் கிறிஸ் தவத்திற்கும் இந்துசமயத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் காணப் பட்டன. ஆயின் கிறிஸ்தவத்திற்கும் பௌத்தத்திற்குமிடையே இவ் வாறான ஒற்றுமை காணப்படவில்லை.

இந்துசமய மறுமலர்ச்சியைப் பொறுத்தவரை இலங்கையில் 1870கள் வரை எவ்வித மாற்றமும் வெளிப்படவில்லை. இதன் பயனாக இந்தியாவில் இந்துசமயத்திற்குள்ளேயும், கிறிஸ்தவ சமயத்திற்குள்ளேயும் நடைபெற்ற விவாதங்கள் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. அவ்வாறே இந்து சமயத்திற்கும் கிறிஸ்தவ சமயத்திற்கும் இடையே நடைபெற்ற விவாதங்களும் இலங்கையில் புகுந்து கொள்வதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெவ்வேறு சமயத்தினரான இலங்கை அறிவாளிகளான சிங்களவர்களும், தமிழர்களும் சமயச் சார்பற்ற தேசியவாதத்தின் கீழ் இணைந்து கொண்டனர். சிங்கள வர், தமிழர் இருசாரார் மத்தியிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களான புதிய உயர்குழாம் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் தத்தம் இனம் சார்ந்த கழகங்களில் உறுப்பினர்களாகவும் இணைந்தனர். சட்டசபைப் பிரதிநிதிகளாக நியமனம் பெற்றனர் சிலர் தேர்தல் மூலம் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தியாவில் இருந்ததைப் போன்று கிறிஸ்தவர்களிடையே வெவ் வேறு பிரிவுகளிடையிலான அமைப்புக்களும் கழகங்களும் இருக் கவும் இல்லை. சமூகமட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் கிறிஸ் தவர்கள் என்ற முறையில் ஒன்றுபட்டு இயங்கவேண்டும் என்ற தேவை இலங்கைக் கிறிஸ்தவர்களிடையே காணப்படவில்லை. அவர்கள் இலங்கைச் சமூகம் என்ற முழுமையுடன் தனிப்பட்டவ ரான உறுப்பினர் என்ற வகையிலேயே பங்குகொண்டனர். சமூகம் சமயச் சார்பற்றதாதல் என்ற போக்கு 19ம் நூற்றாண்டில் வெளிப் பட்டதன் விளைவாகவும் இதனைக் கொள்ளமுடியும்.

இனவாதம் இலங்கை அரசியலில் புகுந்தபோது சிங்களவர், தமி ழர் என்ற இரு பிரிவினரும் மொழியடிப்படையிலான இனப் பிரி வினராகத் தம்மைப் பிரித்து அடையாளப்படுத்தினர். இலங்கை முஸ்லீம்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தனர். அவர்கள் தம்மை தம்மதத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்திக் கொண்டனர். இதற்கு மாறாக இந்தியாவில் சமூகக் குழுக்கள் அர சியல் தேவைக்காக மதப்பிரிவினர் என்ற முறையில் இணைந்து கொண்டன.

இந்தியாவின் தேசியவாத இயக்கம் இரண்டாவது கட்டத்திற்கு நகர்ந்தபொழுது இந்தியக் கிறிஸ்தவர்கள் அதனுடன் இணங்கிப் போவதில் சில சிக்கல்களை எதிர்கொண்டனர். இவ்விரண்டாம் கட்டத்தில் தேசியவாதம் சமயச்சார்பின்மையைக் கைவிட்டது. அது ஆழமான சமய மரபுகளின் அடிப்படையில் தன்னைத் தாபித்துக் கொள்ளவும், பண்டைய மரபுடன் இணைந்ததாக தனது இலக்கு களை விளக்கம் செய்யவும் முற்பட்டது. இக்கால கட்டத்தில் எழுச்சி பெற்ற ஆரியசமாசத்தின் தீவிரவாத இந்து மறுமலர்ச்சிக் கொள்கையில் இது வெளிப்பட்டது. அது பண்டைய பொற்காலம் ஒன்றை மீளக்கொண்டுவர முயற்சித்தது.

ஆரியசமாசம் பஞ்சாப் மாகாணத்தில் தீவிரத்துடன் செயற்பட்டது. அங்கு பிரஸ்பிட்டேரியன் பிரிவினரும் மெதடிஸ்ட்டுகளும் பணி யாற்றிக் கொண்டிருந்தனர். சீக்கியரும் முஸ்லீம்களும் பஞ்சாப் பில் 1890 - 1910 காலத்தில் கிறிஸ்தவர்களோடு முரண்படும் நிலை அங்கு தோன்றியது. அதைப்போன்ற தீவிர முரண்பாடும் மோதலும் நாட்டின் வேறு எந்தப் பகுதியிலும் அக்காலத்தில் இருக்கவில்லை. ஒருவரையொருவர் மாறிமாறிக் கண்டனம் செய் வதும் அதனால் எழுந்த கசப்புணர்வும் மேலோங்கியிருந்தது. பஞ் சாப்பில் தீண்டப்படாத சாதிப் பிரிவினர் தமது தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்து மீள்வதற்காக அக்காலத்தில் கிறிஸ்தவத் திற்குப் பெருந்திரளாக மதம் மாறிக் கொண்டிருந்தனர். ஆரிய சமாசம் தீண்டப்படாதோர் மீது கவனம் செலுத்தியது. ஆரியசமா சத்தின் தலையீடு பஞ்சாப்பில் நிகழ்ந்த மதமாற்றத்தைத் தடுக்க உதவியது. இப்பணியின் பயனாக மகாத்மா காந்தி பின்னாளில் தீண்டப்படாதவர்களை ஹரிஜனங்கள் என்று அழைக்கவும் அவர் களை இந்து சமயத்துக்குள் உள்ளீர்க்கவும் முடிந்தது. காந்தி இந்துசமயத்தை அதன் உள்ளிருந்தே சீர்திருத்தம் செய்துகொள்ள முயற்சித்தார். அத்தோடு அந்த மரபைப் பயன்படுத்தி வெளியில் இருந்து வந்த தாக்குதலை எதிர்கொள்ளும் வலுவை அதற்கு அளிக்க முயன்றார். இந்துசமய மரபின் மீது நம்பிக்கையை வளர்ப்பதற்கு காந்தியின் பணி பெரும் உந்துதலாக அமைந்தது. இந்துசமயம் கிறிஸ்தவர்களின் தாக்குதலாலும், இந்து சீர்திருத் தவாதிகளின் பணிகளில் இருந்த குறைபாடுகள் காரணமாகவும் இந்தியாவில் கிறிஸ்தவத்தின் பரவலைத் தடுக்கும் சக்தியற்றதாக இருந்தது. அவ்வேளை காந்தியின் பணி நம்பிக்கையை அளித் தது.

இலங்கையில் சமகாலத்தில் பௌத்த சீர்திருத்த இயக்கமும் இந்துசமய சீர்திருத்த இயக்கமும் எழுச்சியுற்ற போதும் அவை தேசியவாதத்துடன் இணையவில்லை. ஆனால் இந்தியாவைப் போன்றே இலங்கையிலும் கிறிஸ்தவத்தின் பரவலை இவை தடுத்து நிறுத்தின. ஆரியசமாசம் பஞ்சாப்பில் கிறிஸ்தவத்தை நேருக்கு நேர் எதிர்கொண்டதைப் போல் இலங்கையில் பௌத்த மும் கிறிஸ்தவத்துடன் நேரடியாக மோதியது. விவாதங்களிலும், துண்டுப் பிரசுரங்கங்களையும் கண்டனங்களையும் வெளியிடு வதிலும் பௌத்தர்கள் ஈடுபட்டனர். கிறிஸ்தவர்கள் பௌத்தத்திற்கு எதிராகக் கையாண்ட தந்திரோபாயங்களைத் தாமும் கையாண்டு பௌத்தர்களும் கிறிஸ்தவத்தை எதிர்த்தனர். சைவ மறுமலர்ச்சி இயக்கத்தின் எதிர்ப்பு பௌத்தர்களின் எதிர்ப்பை விட மிதமான-தாக இருந்தபோதும் செயல்வலு மிக்கதாக இருந்தது. இதனால் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை இருபதாம் நூற்றாண்டில் மொத்த சனத்தொகையின் 9-10 வீத எல்லையைத் தாண்ட முடியாமல் தேக் கமுற்றது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ளூர் மக்களின் பிரதிநிதிக-ளுடன் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் போக்கு வளர்ச்சி பெற்றது. இதனால் கிறிஸ்தவர்கள் புதிய அறை கூவல்களை எதிர் கொண்டனர். இந்தியாவில் காந்தியின் தலை மையில் எழுச்சிபெற்ற சுதந்திர இயக்கம் முழுமையான விடு தலையை வேண்டியதோடு உடனடியாகவே சுதந்திரம் வேண்டும் என்றும் கோரியது. காந்தியும் சுதந்திர இயக்கத்தின் பிற தலைவர் களும் புதிய இந்தியா எவ்விதமானதாக இருக்க வேண்டும் என்ற விவாதங்களால் தம் பாதையில் இருந்து திசைமாறாமல் இருந்த தோடு, எதிர்கால இந்தியா எப்படி இருக்கும் என்பது பற்றி தெளிவற்ற நோக்கையே வெளிப்படுத்தினர். சிறுபான்மையினர் முன்னுள்ள கேள்வியாக இந்திய சுதந்திரம் பெறவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்பதா? இல்லையா? என்பதாகவே இருந்தது. முஸ்லீம்கள் இக்கோரிக்கையை நிராகரித்ததோடு இந்திய காங் கிரசின் கோரிக்கைக்குமாறாக தனியான அரசியல் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். கிறிஸ்தவர்கள் சீக்கியர்களை விட எண் ணிக்கைப் பலம் கூடியவர்களாய் முஸ்லீம்களுக்கு அடுத்து மூன் றாவது பெரிய சமயப் பிரிவினராக இருந்தார்கள். அவர்கள் இந்

திய சுதந்திரம் பற்றிய தமது கொள்கை யாது என்பதை வகுத்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர்.

இந்தியக் கிறிஸ்தவர்கள் சீக்கியர்கள் போல் அல்லாது நாடு முழுவதும் சிதறிப் பரவியிருந்தனர். பல இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்களாயும், பல மொழிகளைப் பேசுவோராகவும் கிறிஸ் தவர்கள் இருந்தனர். இதனால் ஐக்கியப்பட்ட ஓர் அழுத்தக் குழு வாகத் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்வது கடினமான காரியமாக இருப்பதைக் கிறிஸ்தவர்கள் உணர்ந்தனர். ஆயினும் 1930 களின் அரசியல் போராட்டங்களின் பின்னணியில் எந்தவொரு குழுமமும் ஏதோவகையில் ஒழுங்கமைக்கப்பட்டதாக இருத்தல் அவசியமான-தாக இருந்தது.

1922 முதல் இந்தியக் கிறிஸ்தவர்கள் அகில இந்திய மாநாடு, சபை என்ற அமைப்புக்களில் ஒன்றுகூடி விவாதங்களை நடத் தினர். இக்கூட்டங்களிற்கு உள்ளூர் அமைப்புக்களும் மறை மாவட்டங்களும் பிரதிநிதிகளை அனுப்பிவைத்தன. வருடாந்த மாநாடு சார்பில் கே.ரி. போல் இந்திய அரசியல் யாப்பு வட்ட மேசை மாநாடு (1929/31) நடைபெற்ற வேளை அதற்கு அறிக்கை-யொன்றை அனுப்பிவைத்தார். இந்தியக்கிறிஸ்தவர் சமூகத்தின் கோரிக்கைகளை அவர் பின்வரும் நான்கு தலைப்புக்களின் கீழ் பட்டியலிட்டார்:

- அடிப்படை உரிமைகள்
- சபைகளில் பிரதிநிதித்துவம்
- அரசாங்க பொதுச்சேவையில் இடம்
- நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கான ஒழுங்கமைப்பும் அரசயந்திரமும்

இனவாரி பிரதிநிதித்துவம் பற்றிக் கூறும்போது நீண்டகால எல்லை யில் அது தேவையற்ற விடயமாக ஆகிவிடும். இருந்தபோதும் இப்போது நாடு அந்நிலையை அடையவில்லையாதலால் இக் கட்டத்தில் அது தேவையென்று குறிப்பிட்டார். எல்லாச் சட்டசபை களிலும் ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் இருக்கவேண்டும் என்றும் இவ் வாறு ஒதுக்கப்பட்ட ஆசனங்களுக்கு தனித்தொகுதிகள் மூலமாக அன்றி ஒன்றிணைந்த தொகுதிகள் மூலம் தேர்தல் நடைபெற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

1930களில் வகுப்புவாத அரசியல் மிகமுக்கியமான பிரச்சினையாக இருந்தது. அது மக்களைப் பிளவுபடுத்தும் சக்தியாக இருந்தது. இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்திய காங் கிரஸ் வகுப்புவாதத்தைக் கடுமையாக எதிர்த்தது. அத்தோடு சிறு பான்மையினர் உரிமைகள் என்ற விடயத்தை அடக்கி வாசித்தது. முஸ்லீம் தலைவர்கள் மிகவும் தீவிரமான கோரிக்கைகளை முன் வைத்தனர். இந்தியக் கிறிஸ்தவர்களையும் வகுப்புவாதம் பிளவு-படுத்தியது. கல்விகற்றவர்களாகவும் உயர் தொழிலர்களாகவும் இருந்த கிறிஸ்தவ உயர்குழாம் தனியான பிரதிநிதித்துவத்தை ஆதரிக்கவில்லை. குறிப்பாக வங்காளிகளான கிறிஸ்தவ உயர் குழாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எதிர்த்தது. இந்தியக் கிறிஸ்தவர்கள் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்திய அகில இந் திய தேசியவாதத்தை முழுமனதாக ஆதரிக்க வேண்டுமென அவர் கள் கருதினர்.

இந்திய கிறிஸ்தவர்களுள் பிரபலம் மிக்கவர்களில் ஒருவரான டாக்டர் எஸ்.கே. டற்றா இக்கருத்தைச் சிறப்பான முறையில் எடுத் துக்கூறினார். அவர் வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையினர் குழுவின் பிரதிநிதியாகவும் இருந்தார். கிறிஸ்தவ சமூகத்தின் முக்கியமான பிரதிநிதிகள் கொண்டிருந்த கருத்துக்கு மாறுபட்ட கருத்தை டாக்டர் எஸ்.கே. டற்றா எடுத்துக் கூறினார். முக்கியமான பிரதிநிதிகள் என்று கூறத்தக்க கிறிஸ்தவத் தலைவர்கள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர்.

சென்னை மாகாணம் கிறிஸ்தவர்களை அதிகம் கொண்டிருந்த பகுதியாகும். வகுப்புவாரி ஒதுக்கீட்டு முறையினால் சென்னைக் கிறிஸ்தவர்கள் தமது பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியும், அது அவசியமானது என இத்தலைவர்கள் கருதினர். தமிழ் கிறிஸ்தவத் தலைவரான பன்னீர்ச்செல்வம் இக்கருத்தை எடுத்துக் கூறினார். மகாத்மா காந்தியினதும் வட்டமேசை மாநாட் டின் இந்துப் பிரதிநிதிகளதும் இரக்கமற்ற நடத்தைப்பாங்கு கிறிஸ்தவர்களை அச்சமடையச் செய்தது. முஸ்லீம்கள், தாழ்த் தப்பட்ட வகுப்பினர், ஆங்கிலேயர்கள் - இந்தியர்கள், ஐரோப் பியர்கள் ஆகிய பிரிவினர்களுடன் இணைந்து நின்ற கிறிஸ் தவர்கள் வகுப்புவாதப் பிரச்சினையை முதலில் தீர்த்து வைக்க வேண்டும் என்ற பொதுக்கோரிக்கையை முன்வைத்தனர்.

1909ம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டம் முதன்முறையாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை இந்தியாவிற்கு அறிமுகம் செய் தது. 1919ம் ஆண்டுச்சட்டம் இதனை மேலும் விரிவாக்கியது. சென்னை மாகாணத்தில் இதன் மூலம் விசேட தொகுதிகள் கிறிஸ் தவ சிறுபான்மையினருக்குக் கிடைத்தன. இது சமூகத்தில் பிரிவி னையை வளர்த்தது. கத்தோலிக்கர்கள், சிரியக் கிறிஸ்தவர்கள், புரட்டஸ்தாந்தியர்கள் முதலிய கிறிஸ்தவப் பிரிவினர்களிடையே குழுவாதப் பிரிவினைகளை இது தோற்றுவித்தது. இருந்தபோதும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கிறிஸ்தவர்களிடையே தமக்கு அங்கீகாரமும், பிரதிநிதித்துவமும் வேண்டும் என்ற ஆசையை திருப்தி செய்வதாக அமைந்தது.

பிரதம மந்திரி ராம்சே மக்டொனால்ட் 1932ல் வழங்கிய இப்பிரதி நிதித்துவம் ஏனைய சிறுபான்மையினர் போன்று பல மாகாணங் களில் கிறிஸ்தவர்களும் தனித்தொகுதிகள் மூலம் விசேட பிரதி நிதித்துவத்தைப் பெறமுடிந்தது. சென்னை மாகாணத்தில் 134 ஆசனங்களில் 9 ஆசனங்கள் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்தன. ஏனைய மாநிலங்களில் சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப ஒன்று முதல் மூன்ற வரையான ஆசனங்கள் கிறிஸ்தவர்களுக்குக் கிடைத்தன.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சுதந்திர இயக்கம் வீறுகொண்டு எழுந்தது. பிரித்தானிய ஆட்சியிடம் இருந்து விடு தலை பெறவேண்டும் என்ற எண்ணம் லேலோங்கியது. கிறிஸ்த வர்களும் இவ்வெழுச்சி அலையால் அடித்து செல்லப்பட்டனர். தம்மைச் சுதந்திர இயக்கத்துடனும் அதன் தலைவர்களுடனும் சேர்த்து அடையாளப்படுத்த விரும்பிய கிறிஸ்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் காங்கிரஸில் இணைந்து கொண்டனர். 1946ல் அரசியல் யாப்பு அவை தெரிவு செய்யப்பட்டபோது கிறிஸ் தவர்கள் போன்ற சிறுபான்மைப் பிரிவினர்களுக்கு அவையில் பிர-திநிதித்துவம் கொடுக்கப்படவேண்டும் என்பதில் காங்கிரஸ் விசேட கவனம் செலுத்தியது. கிறிஸ்தவ சமூகத்தின் பிரதிநிதிகளில் ஒரு-வராகிய டாக்டர் எச்.சி. முக்கர்ஜி சிறுபான்மையினருக்கான உப-குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் என்ற பாதுகாப்பு சிறுபான்மையினருக்குத் திருப்தியானதாக இருந் தது. கிறிஸ்தவ சமூகம் சமயச்சார்பற்ற அரசின் கீழ்வேறு எவ்வித அரசியல் பாதுகாப்பு உத்தரவாதங்களும் இன்றி வாழ்வதற்குத் தயாராக இருந்தது.

இலங்கையில் 1931ம் ஆண்டு சர்வசன வாக்குரிமை வழங்கப் பட்டமை அரசியல் நடவடிக்கைகளின் போக்கில் பெரும் மாற் றத்தை ஏற்படுத்தியது. சட்டசபைகளில் கிறிஸ்தவர்களின் குரல் ஓங்கி ஒலித்தது. அவர்கள் அரசியல் செயல்முறையிலும் பெரும் பங்கை வகித்து வந்தனர். மக்கள் திரளைத் தம்பக்கம் அணி திரட்டுவதற்காக அரசியல் கட்சிகள் வகுப்புவாதத்தைக் கருவி யாகக் கையாண்டன. சிங்களவர் தமிழர் என்ற இருபெரும் மொழிச் சமூகங்களும் நீண்ட அரசியல் போராட்டத்திற்குத் தயாரா கின. இந்த மோதல் பின்னணியில் கிறிஸ்தவர்கள் தம்மைத் தத் தம் மொழிப் பிரிவினருடன் அடையாளப்படுத்திக் கொண்டனர். அவர்களில் பலர் தமது மொழிப் பிரிவினரின் தலைவர்களாகவும் ஆயினர்.

இந்தியாவில் நிகழ்ந்தது போன்று கிறிஸ்தவத் தேசிய நலன்களை நாட்டின் சுதந்திரம் பற்றிய விவாதங்களின் போது தனியாக எடுத் துரைக்கவோ வாதிடவோ தேவை ஏற்படவில்லை. இந்தியாவில் டாக்டர் எஸ்.கே. டற்றா 'நான் பிரதிநிதித்துவம் செய்யும் சமூகத்

திற்குப் பாதுகாப்பு எதுவும் தேவையில்லை' என்று கூறியது போன்று இலங்கையின் கிறிஸ்தவர்களும் கூறக்கூடிய நிலையில் இருந்தனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் தனது அரசியல் யாப்பை மீளவரைந்து கொள்ளவில்லை. இதனால் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பை வழங்கக்கூடிய அடிப்படை உரிமைகளை அரசியல் யாப்பில் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. இதன் தேவை உடன-டியாக உணரப்படவில்லை. சுதந்திரத்திற்குப் பிந்திய அரசாங் கங்கள் சமயச்சார்பின்மைக் கொள்கையில் நம்பிக்கையுடையன வாக இருந்தால் சமய விடயங்களில் தலையிடும் தன்மையுடைய னவாய் இருக்கவில்லை. ஆதலால் இலங்கையில் மதச்சிறுபான்மையினரும், மொழிச்சிறுபான்மையினரும் பெரும் பான்மையினருடன் மோதிக்கொள்ளக்கூடிய சாத்தியம் இந்தியா-வோடு ஒப்பிடுமிடத்து கூடிய அளவில் காணப்பட்டது.

இலங்கையில் கிறிஸ்தவர்கள் உட்பட சிறுபான்மைக் குழுக்கள் பொதுவாழ்க்கையில் பல்வேறு துறைகளிலும் செல்வாக்கும் அங்கீ காரமும் மிக்கவர்களாக விளங்கினர். இச்சமநிலையற்ற தன் மையை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக எதனையும் செய்யாவிடினும், இச்சமநிலையற்ற தன்மையால் ஏற்பட்ட உணர்வுகள் எதிர்காலத்தில் மோதல்கள் உண்டாக்க வல்லனவாக இருந்தன. 1956ல் சிங்களத் தேசியவாதத்தை முன்னெடுத்த அர சாங்கம் ஒன்று தெரிவு செய்யப்பட்டபோது இந்நிலை உருவானது. இது இலங்கை அரசியலில் புதிய யுகத்தைத் தோற்றுவித்தது. அரசியல் மனப்பாங்கிலும் அணிச்சேர்க்கையிலும் அடிப்படை மாற்றத்தை உண்டாக்கிய சிங்களத் தேசியவாத அரசியல் அதி காரத்தைக் கைப்பற்றியது.

இந்தியாவில் கிறிஸ்தவ சிறுபான்மையினரின் பிரச்சினைகளின் மூலமாக அரசு பிரகடனப்படுத்திய தத்துவங்களும் கொள்கைக ளும் அமையவில்லை. அக்கொள்கைகள் எப்பிரிவினருக்கும் பார பட்சம் காட்டாதனவாகவும், அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப் பட்ட அடிப்படை உரிமைகளால் பாதுகாக்கப்பட்டனவாய் இருந் தன. இந்தியாவில் கிறிஸ்தவ சிறுபான்மையினர் எதிர்கொண்ட பிரச்சினைகள் தீவிரவாத இந்து தேசியவாதத்தின் பிரசாரத்தினா லும் எழுந்தவையாகும். செல்வாக்கு மிக்க மார்க்சியக் கட்சிகளும் கிறிஸ்தவத்தின் மீது எதிர்மறை உணர்வையே கொண்டிருந்தன.

இந்துத்தேசியவாதிகள் மதமாற்றம், பாடசாலைகள் மூலம் மதக் கருத்துக்களை பரப்புதல், வேறுவகையில் மதக்கருத்துக்களை பரப்பி மக்கள் மனதை மாற்றுதல் போன்ற வழிகளில் இந்து சமயத்திற்குள் ஊடுருவுவதை எதிர்த்தனர். இவ்விதம் கிறிஸ்தவ மதக் கருத்துக்களைப் பரப்புவதை அந்நிய முறைகளின் ஊடுரு வல் ஆகவும் கருதப்பட்டது. சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் கிறிஸ்தவப் பிரச்சாரம் தீவிரமான ஒடுக்குமுறைக்கு உள்ளானது. இந்துத் தீவிரவாதிகளின் அரசியல் செல்வாக்கு மிகுந்திருந்த மாநிலங்களில் அரசின் கொள்கை மீது தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியுடையவர்களாகவும் இந்துத் தீவிரவாதிகள் விளங்கினர். மத் தியப்பிரதேச மாநில அரசாங்கத்தைக் கொண்டு விசாரணைக்குழு ஒன்றை நியமிக்கச் செய்தமை யாவரது கவனத்தையும் ஈர்த்த விட யமாகும். நியோகிகுழு (NIYOGI COMMITTEE) என்ற பெயரால் அழைக்கப்பட்ட இக்குழு அந்நிய கிறிஸ்தவ மிசனரிகளின் செயற் பாடுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டது.

அந்தக்குழு மிசனரி நடவடிக்கைகளை தேசவிரோதமானவை-யென்றும், குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கமுடையவை என்றும் வன்மையாக கண்டிக்கும் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை ஒரு புயலைக் கிளப்பியபோதும் இதையடுத்து நிகழ்ந்த பொது விவாதம், குழுவின் அறிக்கையில் உள்ள கருத் துக்கள் நாட்டின் பெரும்பான்மையினரான ஒரு பகுதியினரின் கருத்து அன்று. அவை சிறுபான்மையினரான ஒரு பகுதியினரின் கருத்தே என்பது வெளிப்படையாயிற்று. இதன் பயனாக அந்நிய மிசனரிகளிற்கு நுழைவு அனுமதிப்பத்திரம் (VISA) வழங்குதல், இந்தியாவிற்குள் தங்கியிருத்தல் என்பன பற்றிய கட்டுப்பாடுகள் இறுக்கமடைந்தன என்பதைத் தவிர்ந்த வேறு எதிர்மறை விளைவு கள் ஏற்படவில்லை.

கல்வித்துறையில் கிறிஸ்தவர்கள் ஆற்றிய பணிகளுக்கு மிகப் பெரிய அறைகூவல் இந்தியாவில் எழலாயிற்று. சிலமாநிலங்களில் கிறிஸ்தவர்களின் கல்வி நிலையங்களை அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சட்டங்கள் இயற் றப்பட்டன. 1957ம் ஆண்டு கேரளத்தில் கொண்டு வரப்பட்ட கல் விச்சட்டம் இவ்வகையில் தீவிரமானதும் மிகப் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியதுமான சட்டமாகும். கேரளமாநிலத்தில் 22 வீதமாகவி ருந்த கிறிஸ்தவர்கள் அம்மாநிலத்தில் மிகப்பெரிய கல்வி வலை யமைப்பைக் கொண்டிருந்தனர். பெரும் எண்ணிக்கையிலான பாட சாலைகளும் கல்லூரிகளும் அவர்களின் கட்டுப்பாட்டில் இருந் தன. மாநிலத்தின் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் இப்பாடசாலைகளை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. இதன் மூலம் அரசு பாடசாலைச் சொத்துக் களின் உடைமையினைத் தன்னிடம் எடுத்துக்கொண்டது.

கிறிஸ்தவ சமயப்பிரிவினர் தனியார் பாடசாலைகளை நடத்திய இந்து அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து இச்சட்டத்திற்கு எதிராக பெரும் எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்தனர். நீதிமுறையின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அரசியல் வழி யில் எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி ஆட்சியை வீழ்த்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எதிர்ப்பியக்கம் வெற்றிபெற்றது. தனியார் கல்விநிறுவனங்களின் நலன்களைக் காக்கும் வகையில் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

நியோகி அறிக்கை, கேரளாவின் கல்விச்சட்டம் என்பனவற்றின் நெருக்கடியைக் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தபோது, அவர்கள் நடத்திய போராட்டத்தில் அவர்களுக்குத் துணையாக பிற சிறுபான்மையினரும், இந்துக்களில் லிபிரல் முற்போக்குச் சிந்தனை உடையவர்களும் ஆதரவளித்தனர். இந்த ஆதரவு காரணமாக இந்த நெருக்கடிகளின் போது பாதிப்புக்கள் அதிகம் இல்லாது கிறிஸ்தவர்கள் மீட்சிபெற முடிந்தது. இந்தியாவின் பண் பாட்டில் மிளிரும் பன்மைத்துவத்திற்குக் கிறிஸ்தவமும் பங்காளி யாக இன்று உள்ளது. சிறுபான்மைப் பண்பாடுகளையும், சிறு பான்மையினர் நலன்களையும் பேணிக்காப்பதற்கும் கிறிஸ்தவம் துணையாக உள்ளது. கிறிஸ்தவர்கள் இந்திய தேசத்தின் அடிப் படைகளை ஏற்றுக்கொண்ட காரணத்தாலும் இந்தியப் பண்பாட்டையும், இந்திய வாழ்வியல் முறையையும் ஏற்றுக் கொண்டதாலும் அவர்கள் இப்பன்மைத்துவதத்தின் பங்காளிகளாக ஏற்கப்பட்டுள்ளனர்.

இலங்கை முரண்பாடான ஒரு நிலையை எடுத்துக்காட்டுகிறது. ஆரம்பத்தில் இங்கே கிறிஸ்தவர்கள் தம்மை உறுதியாக நிலை நிறுத்திக் கொண்டார்கள். புதிய தேசியவாதத்தின் எழுச்சியும் அதன் அச்சுறுத்தலும் கிறிஸ்தவத்தை நிலைகுலைய வைத்துள் ளது. கிறிஸ்தவம் தனது இருப்புக்காகப் போராடிக் கொண்டிருக் கின்றது. இந்தியாவில் இருந்து வேறுபட்ட இந்நிலைமைக்கு பல

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**
**Toronto: 416.659.SELL (7355)**
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



காரணங்கள் உள்ளன. முதலாவதாகக் கிறிஸ்தவர்கள் இலங்கையில் சமூகத்திலும் அரசியலிலும் நீண்டகாலமாக முக்கியமான இடத்தை வகித்து வந்தனர். இந்தியக் கிறிஸ்தவர்கள் அவ்வாறு செல்வாக்குள்ளவர்களாக ஒருபோதும் இருக்கவில்லை. ஆகவே இலங்கையில் இச்செல்வாக்குக்கு எதிராக பதிற்குறி வெளிப்பட்ட போது, அது கடுமையானதாக இருந்தது. சமத்துவம் நோக்கிய பயணமும் வலிமிகுந்ததாகவே இருந்தது.

கிறிஸ்தவர்கள் மீதும் பிறசிறுபான்மைக் குழுக்கள் மீதும் பெரும்பான்மையினரின் தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்டதாகவும் ஒரு முகப்பட்டதாகவும் இருந்தது. பெரும்பான்மைக்குழுக்கள் ஐக்கியப்பட்டு நின்று பலமாக தாக்கினர். இந்தியாவில் கிறிஸ்தவ எதிர்ப்புணர்வு கொண்டோர் தேசிய மட்டத்தில் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தபோதும் தேசிய மட்டத்தில் அதிகாரம் உடையவர்களாக இருக்கவில்லை. 1956ன் பின்னர் இலங்கையில் நிகழ்ந்தது போல் தேசியக்கொள்கையின் அங்கமாக கிறிஸ்தவ எதிர்ப்பு மாறவில்லை. இலங்கையில் சுதந்திரம் கிடைத்து எட்டு ஆண்டுகளில் சீர்திருத்த நடவடிக்கைச் செயல்முறையில் தாமதம் இருந்தது. பின்னர் அது சீர்திருத்தம் என்ற முறையில் அல்லாமல் புரட்சியாக அமைந்தது.

மேற்கூறிய யாவற்றினதும் விளைவாக 1960 தொடக்கம் இலங்கையில் கிறிஸ்தவர்கள் தற்காப்பு நிலைக்குத் தம் நடவடிக்கைகளை குறுக்கிக் கொண்டனர். அவர்கள் தாம் தனிமைப்பட்டவர்களாய் இருப்பதை உணர்ந்தனர். இதுபோன்ற தனிமையுணர்வை இந்தியக் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் அனுபவித்ததில்லை. இலங்கையில் 1955ல் பௌத்த குழுவின் அறிக்கை நியோகி அறிக்கையைவிடப் தீவிரம் மிக்கதாய் இருந்தது. கிறிஸ்தவ நடவடிக்கைகள் பலவற்றைத் தடைசெய்யவேண்டும் என அவ்வறிக்கை கூறியது.

கிறிஸ்தவர்களின் பலம் பாடசாலைகளின் மீது அவர்களுக்கு இருந்த கட்டுப்பாடாகும். பௌத்த அறிக்கை இதன் மீது குறி வைத்துத் தாக்கியது. எல்லாப் பாடசாலைகளையும் தேசியமயமாக்கி தேசிய கல்விமுறையொன்றைத் தாபிக்க வேண்டுமென இக்குழு சிபார்சு செய்தது. பாடசாலைகளைத் தேசியமயமாக்கும் 1960-61 சட்டம் கேரளாவின் சட்டத்தை விடத் தீவிரமானதாக இருந்தது. கேரளச்சட்டத்தை எதிர்ப்பதில் இந்தியக் கிறிஸ்தவர்கள் ஓரளவு வெற்றி கண்டனர். இந்திய - இலங்கை நிலைமைகளிடையே முக்கிய வேறுபாடு ஒன்று இருந்தது. இந்தியாவில் கிறிஸ்தவர்களுக்கு இந்து சமயப்பிரிவினர்களால் நடத்தப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஆதரவு கிடைத்தது.

இலங்கையில் பாடசாலைகளைத் தேசியமயமாக்குதல் பௌத்தர்களின் கோரிக்கையாக இருந்தது. ஆதலால் அதற்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்பியக்கங்கள் வெற்றியடையமுடியாமல் குறுகிய காலத்திற்குள்ளேயே மறைந்தன. கிறிஸ்தவர்கள் தம்மிடமிருந்த பாடசாலைகள் யாவற்றையும் இழந்தனர். அரசாங்க உதவிபெறாத பாடசாலைகளாகச் சில பாடசாலைகளை மட்டும் வைத்திருந்தனர்.

பெறுமதிமிக்க சொத்துக்களான பாடசாலை உடைமைகளை இழந்தமை கிறிஸ்தவ சமூகத்தின் நீண்டகால நலன்களைக் கருத்தில் கொண்டு நோக்கும் போது அதற்கு நன்மையானதாகவே முடிந்தது. கிறிஸ்தவ அமைப்புக்கள் இப்போது வசதிகள் எதுவும் அற்றவர்களாய் ஒரு தொண்டர் நிறுவனம் என்ற நிலைக்குத் தாழ்ந்து விட்டனர். ஆகையால் தேசியமட்டத்தில் நிகழும் தவறுகளுக்குக் கிறிஸ்தவர்களை பலிகடாக்களாகிக் குற்றம் சுமத்தும் நிலை இன்று இல்லை. இலங்கையில் கிறிஸ்தவர்கள் இன்று இந்தியக் கிறிஸ்தவர்கள் நிலைக்குத் தாழ்ந்து பலமற்றவர்களாக உள்ளனர். ஆனால் அவர்களின் பலவீனத்தில் இருந்து கிறிஸ்தவர்கள் பலத்தைப் பெற்று கொள்கிறார்கள். அதிகாரமும் மிகுந்த செல்வாக்கும் உடையவர்களாய் பிறர்பார்த்துப் பொறாமைப்படக் கூடிய நிலையில் இருந்தனர். சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் இலங்கையின் கிறிஸ்தவர்கள் உலகளாவிய அளவில் மிகப்பலமற்ற குழுக்களில் ஒன்றாகத் தாழ்ந்துபோயினர். ஆயினும் அவர்களின் தளராத முயற்சியும் தியாகமும் கிறிஸ்தவ நிறுவனங்களை வளர்ப் பதற்கும் பேணுவதற்கும் உதவியுள்ளது.



shanmugalingam@thaiveedu.com




# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# கல்ஹின்னை மண்தந்த கவிஞர்களும் மலையகக் கவிதைகளும் 19

- மல்லியப்புசந்தி திலகர்

இலங்கையில் தமிழ் வளர்த்த கிராமங்களிலே கண்டி மாவட்டம் கல்ஹின்னை கிராமத்துக்கென தனியான வரலாறு உண்டு. அங்கு வாழும் முஸ்லிம் மக்களின் தமிழ்ப்பற்று வியந்து பாராட்டப்படக் கூடியது. இக்கிராமத்தை 'மலையகத்தின் தமிழகம்' என பேராசான் சு. வித்தியானந்தன் பாராட்டியுள்ளார். அங்கிருந்து வந்த படைப்பாளர்களுள் கல்ஹின்ன ஹனிபா, கவிஞர் சுபைர், ஹலீம்தீன் போன்றவர்கள் முக்கியமானவர்கள் எனக் குறிப்பிடுகின்றார் அந்தனிஜீவா.



1960களில் கண்டியிலிருந்து வெளிவந்த 'முத்தமிழ் முழக்கம்', 'மலையகம்' என்ற முன்னெடுப்போடு 'மலைமுரசு' ஆக மாற்றம் பெற்றது. மணிக்கொடி தமிழகத்தில் செய்ததை மறுமலர்ச்சி யாழ்ப்பாணத்தில் செய்ததை மலைப்பிராந்திய எழுத்தாளரிடையே 'மலைமுரசு' செய்தது என்கிறார் மலையக ஆய்வு எழுத்தாளர் சாரல்நாடன் (மலையகம் வளர்த்த தமிழ்).

இந்த 'மலைமுரசு' இதழில் கவிமணி எம்.ஸி.எம். சுபைர் எழுதிய கவிதை ஒன்று இவ்வாறு அமைகிறது.

*தேயிலைத் தோட்டத்திலே - உடல்*
*தேய்ந்து துரும்பாகி மெலிந்திட*
*ஓய்வின்றி நாமுழைத்தோம் - மச்சான்*
*நோய் கொண்டு தானிளைத்தோம்*

*உடல் ஊறிச் சுரந்திடும் வேர்வைப்புனல் பாய்ச்சி*
*ஓங்கும் பயிர் வளர்த்தோம் - வளம்*
*தாங்கும் உயிர்கொடுத்தோம்*

*வரும் சாவிலும் நாமிந்த தேயிலைக்கே*
*உரம் ஆகப் புதைந்திடுவோம்*
*பெரும் தியாகம் புரிந்திடுவோம்*

'மணிக்குரல்' எனும் மாணவர் இதழை வெளியிட்டவர் கவிஞர் எம்.சி.எம். சுபைர். எழுத்தாளர்கள், கவிஞர்களை கல்லூரிக்கு அழைத்து தனது மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தவர். அவருடைய மாணவர்கள் பலர் பிரபல எழுத்தாளர்களாக பரிணமித்துள்ளனர். அவர்களுள் சதர்லன்ட் மு. துரைசாமி, தெமோதரை நெதர்விலைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் (குறிஞ்சிவாணன்) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் என கவிஞர் சுபைர் அவர்களின் மலையகத்துக்கான கவிதைப் பங்களிப்பை நினைவூட்டுகிறார் தெளிவத்தை ஜோசப் அவர்கள் (அணிந்துரை: நாளெந்த நாளோ - மு. துரைசாமி - குறிஞ்சிப்பேரவை வெளியீடு 2010).

1933ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி பிறந்த கண்டி மாவட்டம் கல்ஹின்ன கிராமத்தில் பிறந்தவர் எம்.சி.எம். சுபைர். பயிற்சி பெற்ற ஆசிரியரான இவர் பாடசாலை அதிபராகவும் கடமையாற்றி முப்பத்தைந்து வருடகால கல்விப் பணியாற்றியவர். 'மணிக்குரல்' எனும் பதிப்பகம் நடத்திய பல நூல்களையும் பிரசுரித்துள்ளார். 1956ம் ஆண்டு 'மலர்ந்த வாழ்வு' எனும் தலைப்பில் தனது முதலாவது நூலை வெளியிட்டுள்ளார். இந்தக் கவிதை நூல் முஸ்லிம் பாடசாலைகளில் ஓர் உப பாடநூலாகவும் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.

குழந்தை இலக்கியத்தில் அதிக ஆர்வம் காட்டிய கவிஞர் சுபைர்

குழந்தைகளுக்காக 'பாலர் பாமாலை' எனும் நூலை 1967ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இந்த நூலுக்கு தமிழகத்தின் அழ. வள்ளியப்பா அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்.

இந்த நூலில் வரும் குழந்தைப்பாடல் ஒன்று இவ்வாறு அமைகி றது.

*பொன்விளையும் பூமியெங்கள்*
*தாய்த்திருநாடு - அதன்*
*பொலிவு காண உழைப்பதெங்கள்*
*பொறுப்பென நாடு*
*நீர்வளம் நிரம்பியது*
*எங்கள் வளநாடு - எனில்*
*நெல்வயல் விளைத்திடாது*
*என்ன பயன் காண்போம்*

இலங்கையில் இப்போது எழுந்திருக்கும் அரிசிக்கான நெருக்கடி குறித்து நோக்குகையில் கவிஞர் சுபைர் அன்றே எழுப்பிய கேள்வி தீர்க்கதரிசனமாக அமைந்துள்ளது.

1969ம் ஆண்டு இவர் வெளியிட்ட 'கண்ணான மச்சி' எனும் கவிதை நூல் கிராமியக் காதலை வெளிப்படுத்துவதாக அமைந் துள்ளது. 1981ம் ஆண்டு 'காலத்தின் குரல்', 1984ம் ஆண்டு 'எங் கள் தாய்நாடு' எனும் கவிதை நூல்களையும் தந்துள்ளார். சீறாப துறுப் பாடலுக்கு உரை எழுதியுள்ள இவர் புதுகுஷ்ஷாம் முஹம் மதியாக் காண்டம் திருத்திய பதிப்பை வெளியிட்டு பாடநூல் ஆக்கத்துறைக்கும் பங்களிப்புச் செய்துள்ளார்.

'குறிஞ்சிக்குயில்' எனும் புனைப்பெயரிலும் இவர் கவிதைகளை எழுதியுள்ளார். க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன், அழ. வள்ளியப்பா போன்றவர்களின் பாராட்டைப் பெற்ற இவர், ஏ.எஸ். நல்லையா எனும் ஆசிரியரிடத்தில் தமிழ் கற்றுள்ளார்.

கல்ஹின்னை முஸ்லிம் தேசிய பாடசாலையின் பாடசாலைக்கீதம் இவரால் எழுதப்பட்டதோடு இன்றும் அந்தக் கீதமே இசைக்கப் படுகிறது. தனது வாழ்வில் பெரும்பாலான காலப்பகுதியை யானைக்கால் நோயுடன் கழித்த அவர் அதனை ஒரு பொருட்டா கவே கொள்ளாது தனது பணிகளை முறையாகச் செய்து வந்துள் ளார்.

கல்ஹின்னை மண் தந்த இன்னுமொரு கவிஞர் எம்.எச்.எம். ஹலீம்தீன். கல்வீட்டுக் கவிராயர் என அழைக்கப்பட்ட இவர் 'தியாகச் சுடர்' எனும் நூலை 1969ம் ஆண்டு வெளியிட்டுள்ளார். 1984ம் ஆண்டு 'காலத்தின் கோலங்கள்' எனும் 103 கவிதைகள் கொண்ட நூலை எழுதியுள்ளார். இந்த நூலில் தேயிலைத் தோட் டத் தொழிலாளர்கள் 'அந்தரத்தில்', 'நாங்கள்தான் உயர்ந்தவர்கள்' போன்ற கவிதைகள் முக்கியமானவை.

*மலையென்ன காடென்ன*
*மடுவென்ன எல்லாமே*
*நிலைகொண்ட எம்துயரை*
*நிதர்சனமாய்க் கண்டவையாம்*

என, அந்தரத்திலே எனும் கவிதையிலே எழுதியுள்ளார்.

*முதலாளி ஐயாவே வாருங்கள்*
*'முதலை'யல்லவா? நீங்கள்*
*இதமான ஓர் வார்த்தையேனும்*
*ஏனையா பேச மனமில்லை*
*உதயத்தைக் கண்டு வாழ்வில்*
*உள்ளம் பூரித்து நிற்கின்றீர்*
*இதயம்தான் உங்களுக்கு*
*உண்டுமோ? யார் அறிவார்?*

புல்லரினைப் பொசுக்கிடாதோ? எனும் கவிதையில் இவ்வாறு எழு- துகிறார்

*'அடைமாரி தான் பொழிவதென்றால்*
*அதிலேதும் புதுமையே காணோம்*
*தடையற்றுக் கொடும்பிணிக ளூற்றே*
*திறங்காட்டி நலிந்தோர் களெல்லாம்*
*அடைக்கலமா யிங்குவந்த அபலையாவர்*
*அணுவுமே உரிமையில்லை என்று தீர்க்கும்*
*கொடுங்கனலின் பிழம்பாலே உருகியோடும்*
*கண்ணீர்தான் மழையென்று அறிவாயன்றோ'*

'அணுவுமே உரிமையில்லை' படிமத்தின் ஊடாக மலையகம் தோட்டத் தொழிலாளர்களின் உரிமை மறுப்பை சுட்டி நிற்கும் கவி ஞர் ஹலீம்தீன், அந்த ஏழைகளின் கண்ணீர்தான் மழையாக பொழிவதாக எழுதிச் செல்கிறார். கவிஞர் ஹலீம்தீன் அவர்கள் தமிழில் மாத்திரமல்லாது ஆங்கிலத்திலும் கவிதை நூல்களைத் தந்தவர் என்றும் குறிக்கின்றார் அந்தனிஜீவா.

'எங்கள் ஊர் கல்ஹின்னை' எனும் தலைப்பில் இவர் எழுதியுள்ள கவிதை ஒன்றில்,

*குறிஞ்சியும் மருதமொன்றாக*
*குடியிருக்கும் மலையகத்தின்*
*அரும்தலையகமாம் கண்டிக்கு*
*அண்மையிலே அமைந்துள்ள*
*சிறுகிராமம் கல்ஹின்னையின்*
*சிறப்புக்குக் காரணிகள்*
*நிறையவுண்டு என்றாலும்*
*நினைக்கின்றேன் - சிலவற்றை...*

என எழுதி இருப்பதுபோல 'மலையகத்தின் தமிழகம்' எனப் போற் றப்படும் கல்ஹின்னை கிராமம் பற்றி இன்னும் பல வரலாறுகள் உள்ளபோதும் மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறியோடு தொடர்புபடுத்தியதாக இந்த இரண்டு கவிஞர்களின் பங்களிப் புகள் மாத்திரம் இங்கே பதிவு பெறுகிறது.

(செல்நெறி தொடரும்)



thilagar@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2020)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272

# மனிதருள்...

- முல்லைஅமுதன்

தன் வாழ்வை நிலத்திலிருந்து பெயர்ந்து பதியம் போட்டுக் கொண்டாலும், தங்களின் கலை இலக்கியப் பயணத்தை கட்டமைத்துக்கொண்ட பலரில் வண்ணை-தெய்வம் அவர்களும் ஒருவர். வடபுல யாழ்ப்பாணத்தில் வண்ணார்-பண்ணையில் பிறந்த (22/08/1950) வண்ணைதெய்வம் (நா. தெய்வேந்திரம்) அவர்கள் கலையை, எழுத்தை மிகவும் நேசித்தவர். இவர் தன் ஆரம்பக் கல்வியை அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பயின்றாலும், வாழ்வியல் அனுபவம் அவரை இன்னொரு கோணத்தில் அமைத்துக்கொண்டது. கம்யூனிச சித்தாந்தத்தை கொள்கையாகக் கொண்டு கலை வாழ்க்கையையும் ஒருங்கிணைத்து பலரின் நட்பையும் இணைத்தபடி பயணித்தார். யாழ்ப்பாணம் தெங்கு பனம்பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் லிகிதராகக் கடமையாற்றினார். அப்போது டானியல், டொமினிக் ஜீவா மீதும், அவர்களின் எழுத்தின் மீதான ஈர்ப்பும் இவரை எழுதவைத்துள்ளது எனலாம். முதலில் சமூக அக்கறை மிகுந்த படைப்புக்களைக் கொண்டுவருவதில் தன் ஈடுபாட்டைக் காட்டினார்.

ஊரில் கலைஞராக வாழ்பவர் பணத்தில் புரள்வதில்லை என்பதே உண்மை. இவரால் தன் தேடுதலை நிறுத்திவிட முடியாதபடி நாடகத்தைத் தன் கலை இலக்கிய செயல்பாட்டிற்கு வடிகாலாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்.

இளவயதில் 'மனுநீதி' எனும் நாடகத்தைத் தானே எழுதியும் நடித்தும் இயக்கியுமுள்ளார். அக்காலகட்ட இயங்கு நிலையில் இருந்த நண்பர்களின் ஒத்துழைப்பினால் பல நாடகங்களை மேடையேற்றினார். யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் நாடகங்களை அரங்கேற்றி ரசிகர்களின் பாராட்டுக்களையும் பெற்றிருந்தார். இவருக்கு பெருமை சேர்த்த நாடகங்களாக மனுநீதி, இரத்தக்கடன், பதிலுக் குப்பதில், வீரம் விளைந்தது, தங்கையா? தாரமா?, இதயமற்றவன், சாவுக்குச் சவால், ஐயா மேடைக்கு வருகின்றார், பண்டார வன்னியன், கிழமைசீட்டு என பலவற்றைக் குறிப்பிடலாம். சரித்திர, வரலாற்று நாடகங்களுடன், சமூக விழிப்புணர்வு நாடகங்களையும் விரும்பி, தனக்கேற்ற கதாபாத்திரங்களைத் தெரிவுசெய்து நடித்துப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுமிருந்தார்.

யாழ். ஈழநாடு பத்திரிகையில் இவரது முதல் சிறுகதை வெளிவந்தது. இதனைத் தொடர்ந்து கவிதை, கட்டுரை எழுதுவதிலும் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

வாழ்வில் மறக்கமுடியாதது எது எனக் கேட்டால்... கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவிடம் பாராட்டுப்பெற்றமையும், லண்டன் தந்த ஈழத்துக் கவிஞர் 'செவாலியே' அமுதுப்புலவர் ஐயாவின் பாராட்டுடன், 'கலைஞர் காவலர்' பட்டமும் பெற்றமையும் எனச் சொல்லுவார். இவ்விருவரும் ஈழத்திற்குப் பெருமை தேடித் தந்தவர்கள் என்று கூறுவார்.

தனது 23வது வயதில் 'சாட்டை' எனும் இதழை (1973) நடத்தினார். மூன்று இதழ்களே வெளிவந்திருந்தன.

கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகங்களுக்கு அப்பால் உருவகக் கதைகள் சிலவற்றை எழுதினார். இதற்கு காசி ஆனந்தன் அவர்களின் எழுத்தே உந்துசக்தியாக இருந்துள்ளது. புதுமைப்பித்தன், டானியல், யோ. பெனடிக்பாலன், நவாலியூர் நா. செல்லத்துரை போன்றோரின் கதைகள் சமூக அக்கறை, சமூக சீர்திருத்தக் கருத்துக்களுடன் செய்தி ஒன்றை சொல்லக்கூடியவாறு எழுதுகின்ற படைப்புக்களின் தாக்கம், அதன் வடிவம், கருத்துக்களின் அதீத பற்று இவர் சிறுகதைகளையும் எழுதத் தூண்டும் ஆர்வத்திற்கு தீனிபோட்டன.

நாட்டி ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை காரணமாக பிரான்ஸிற்கு புலம்பெயர்ந்தபின் தன் கலை ஆர்வத்தை மேலும் வளர்த்துக்



கொள்ளும்படியாக நண்பர்களுடன், கலை இலக்கிய அமைப்புக்களும் உதவின. அதனால் சிறுகதை, கவிதை, உருவகக்கதை, நாடகம், நடிப்பு, சின்னத்திரை, இதழியல் என வீரியம் மிக்க செயல்பாட்டுடன் இயங்கினார்.

இவரின் படைப்புக்களை உள்வாங்கிய அல்லது வெளியிட்ட அச்சு, ஒலி, ஒளி ஊடகங்கள் அனேகம். அவற்றுள் வீரகேசரி, தினக்குரல், காற்றுவெளி, வண்ணை, உதயன்(கனடா), ஏ.பி.சி வானொலி(பிரான்ஸ்), ரி.ஆர்.ரி வானொலி(பிரான்ஸ்), தமிழ் விசை (இணையம்), எழில், தினமுரசு, வாகுல்(இணையம்), புதினம் (லண்டன்), ஈழகேசரி(லண்டன்), ஈழநாடு(பாரிஸ்), ரி.ரி.என் தொலைக் காட்சி(பிரான்ஸ்), சாட்டை(யாழ்), ஈழநாடு(யாழ்), சிரித்திரு, ஐரோப்பிய தமிழ் வானொலி(ஜேர்மனி), அகரம்(ஜேர்மனி), இனிய நந்தவனம்(இந்தியா) ஏழைதாசன்(இந்தியா) இவைகளுடன் அமைப்புக்கள் அல்லது தனித்து வெளியிடப்படும் பருவ மலர்கள் /

இதழ்கள் என பலவற்றிலும் எழுதி வந்துள்ளார்.

இதழியல் ஆர்வத்தின் வெளிப்பாடாக 'வண்ணை' இதழையும் நடத்தியதோடு மட்டுமல்லாது 'தாகம்' இதழின் இதழாசிரியராகவும் கடமை புரிந்துள்ளார். மேலும், முற்றம், அகரம், சிரித்திரு எனும் இதழ்களுடனான தன் பங்களிப்பையும் நல்கியிருந்தார். தினக் குரலில், அகரத்தில் தொடராக பல கட்டுரைகள் எழுதிவந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகில் வாழும் படைப்பாளர்களுடன் இணைந்து எழுதப்பட்ட 'விழுதல் என்பது' எனும் நாவல் தொடரிலும் இவரின் பங்களிப்பு இருந்தது. மறைந்த ஈழத்துப் படைப்பாளர்களின் கட்டுரைத்தொகு தியிலும் (இலக்கியப்பூக்கள்) கட்டுரைகள் எழுதியுள்ளார். பரந்த எண்ணங்களுடன் வாழ்ந்தவர். இலக்கியம் பற்றிப் பேசவேண்டு மெனில் எந்நேரமும் சலிக்காமல் கதைப்பதைப் பார்த்து நான் வியந்ததுண்டு. ஐரோப்பிய தமிழ்வானொலியில் வாராவாரம் தொகுத்துவழங்கிய 'ஏடும் எழுத்தாணியும்' நிகழ்வில் அனேக படைப்பாளர்களின் நூல்களை அறிமுகம் செய்தமையும், கலை ஞர்களை அறிமுகப்படுத்தியமையும் அவரது சிறப்பு.

ரி.ரி.என். தொலைக்காட்சி நிகழ்வில் இவர் பங்காற்றிய கவிதை அரங்கம் சிறப்பானது. நான் நடத்தும் காற்றுவெளி இதழில் எழுதி யதும், நான் தொகுத்து வழங்கும் 'இலக்கியப்பூக்கள்' வானொலி சஞ்சிகை நிகழ்விலும் பங்குபற்றி நிகழ்விற்குப் பெருமை சேர்த்தார்.

இவரின் கலைச் சேவையைப் பாராட்டி பிரான்ஸ் கம்பன் கழ கமும், பிற கலை அமைப்புகளும் சிறப்புப் பட்டயங்களை வழங்கியதுடன், பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிய 'ஈழத்தமிழ் விழி' எனும் சிறப்புப்பட்டமும், சுவீஸ் மனிதநேய அமைப்பு வழங்கிய 'மனிதருள்' சிறப்புக் கௌரவமும் (கல்லாறு சதீஸ் அவர்களால் வழங்கப்பட்டது), 'கலைக்கரும்பு' சிறப்புப் பட்டமும்(ஞானம் பீரீஸ் அவர்களால் வழங்கப்பட்டிருந்தது) வாழ் வின் சிறப்பான கௌரவமாகும்.

காதலித்து திருமணம் செய்துகொண்டவர். மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான இவர், எழுத்து கலைப்பணியுடன் பேரப்பிளைகளுடன் நேரத்தை செலவிடுவார்.

பல நூல்களை வெளியிட்டிருந்தாலும் இன்னும் பல நூல்களை வெளியிடும் ஆற்றலுள்ளவராகத் திகழ்ந்தார். இவரின் நூல்களாக விடிவை நோக்கி, பொல்லாத மனிதர்கள், கொந்தல் மாங காய்(2005), கலைப்பாதையில் இவர் (கிரகறி தங்கராஜா கலைப் பதிவுகள்), கதாநாயகன் (பெஞ்சமின் இமானுவல் கலைப் பதிவுகள்(1994), கலைத்துறையில் இரு மலர்கள், யாழ்ப்பாணத்து மண்வாசனை (2003), தாயக தரிசனம் (2003)காலங்கள் வாழ்த்தும் 300 கலைஞர்கள் (2005), எடுத்துக்காட்டாக விளங்கிய நாகேந்-திரன் குடும்பம் (2002), வானலையில் எங்கள் கவிதைகள் (தொ-குதி 1, 2), மறக்கவியலா யாழ்ப்பாண மண்ணின் நினைவு கள் (மண்ணின் நினைவுகள்), ஒரு வெளிநாட்டுத் தாயின் வாழ்க்கை என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் 'கொந்தல் மாங்காய்' உருவகக் கதைகளின் தொகுதி பலரையும் திரும்பிப் பார்க்க வைத்த நூலாகும்.

கலைஞர்களின் பதிவுகளில் கிரகறி அவர்களின் கலைப் பதிவு களும், பெஞ்சமின் அவர்களின் கலைப்பதிவுகளும் உண்மையில் ஒரு வரலாற்றுப் பதிவெனக் கொள்வதில் மிகையாகாது. மேலும் ஈழத்துக் கலைஞகளின் விபரங்களைத் தேடிச் சேகரித்து பெரிய நூலாக தந்துள்ளதோடு அதன் திருத்திய பதிப்பையும் கொண்டு வர முயன்று கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிறை வாக, அச்சிட்ட இரு சிறுகதைகளின் தொகுதிகள், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இன்னும் வெளியிடப்படவில்லை.

ஈழத்து எழுத்தாளர் நவாலியூர். நா. செல்லத்துரை அவர்களின் 'முகை வெடித்த மொட்டு'(1967) நாவலை மீள் பிரசுரம் செய்ய விரும்பியிருந்தார். முடியாமல் போயிற்று.

ஈழத்து நடைபெற்ற நூல் கண்காட்சியினை பாராட்டியதுடன், பிரான்ஸிலும் அதைப் போல நடத்தும்படியும் கேட்டிருந்தார். என் னால் முடியவில்லை. எனது 'எழுத்தாளர் விபரத்திரட்டு' ஆவண நூலுக்கான மிக நீண்ட அறிமுகத்தையும் இவர் எழுதியிருந்தார்.

சமூக அக்கறையுடன் எழுதப்படும் படைப்புக்கள் மக்கள் மனதில் நிற்கும். அந்த வகையில் புதுவையின் கவிதைகள் மீதான அபி-மானத்தில் புதுவையின் கவிதைகளை விரும்பி வாசித்தார்.

இலக்கியத்தின் அனைத்து பக்கங்களையும் தொட்டிருந்தாலும் கவிதை எழுதும் போதும், பிறரின் கவிதைகளை வாசிக்கும் போதும் அலாதியான சுகம் இருப்பதாகவும், பலர் இன்று கவிவடி வங்களை லாவகமாக எழுதுகிறார்கள் என்கிற வியப்பும் இவரை ஒரு சுவைஞராக வெளிப்படுத்துகின்றது. சக படைப்பாளர்களை நேசிப்பதிலும், இளம் படைப்பாளர்களை ஊக்குவிப்பதிலும் ஆர் வம் காட்டியவர். கலைஞர் அமரர் 'முகத்தர்' ஜேசுரட்னம், கலை ஞர் இமானுவல் பெஞ்சமின், அமரர் அமுதுப்புலவர் ஆகியோரு டன் மிகுந்த நேசிப்புடன் பழகிவந்தவர். ஐரோப்பிய தமிழ் அறி ஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் வளர்ச்சி சம்மேளனம் (2006) மூலம் இவர் கலைஞர்கள், படைப்பாளர்களுக்கான ஞாப கார்த்த விருதுகளையும் கொடுத்து கௌரவித்தமை இன்றும் நினைவில் நிற்கிறது.

நிறைய எழுதும் வல்லமையுடையவர். இதுவரை ஆங்காங்கே எழுதிக்குவித்தவைகளையும் தொகுத்தால் நிச்சயம் இன்னும் பல தொகுப்புக்களைக் கொண்டுவந்திருக்கமுடியும்.

நாட்டில் ஏற்பட்ட நோய்த்தொற்று அச்சுறுத்தல் யாவரையும் விட்டு வைப்பதாயில்லை. பல கலைஞர்களையும், படைப்பாளிகளையும் இழந்துவரும் சூழலிலேயே... நாம் வண்ணைதெய்வம் அவர்களை யும் (21/01/2021) இழந்துள்ளோம். நண்பனை இழந்ததில் நாமும், ஓர் ஈழத்துப் படைப்பாளரை இழந்ததில் இலக்கிய உலகமும் அடைந்த சோகத்தை எழுத்தில் சொல்லிவிடமுடியாது.

சக கலைஞரை மீள மீள நினைவுபடுத்தும் காலங்கள் அவரை வாழ்த்திக்கொண்டே இருக்கும். அவரின் படைப்புகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். அதே சமயம், அவரின் கனவைக் கட்டி யெழுப்ப நண்பர்களாகிய நாம் ஒருசேர செயற்படவேண்டும் என்பதே அவருக்கு எம்மாலான நினைவு கூரலாகவும் அமையும்.




mullaiamuthan@thaiveedu.com



# கருத்தோவியச் சிந்தனையாளர் சிரித்திரன் சுந்தர்

- வே. விவேகானந்தன்

ஈழத் திருநாட்டிலே அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளையும் சீர்கேடுகளையும் நகைச்சுவை ததும்ப கேலிச்சித்திரங்கள், கருத்தோவியங்கள் ஊடாக, சிரித்திரன் சஞ்சிகையில் வெளிக்கொணர்ந்து, மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தவர் 'சுந்தர்' என அழைக்கப்பட்ட அமரர் சிவஞானசுந்தரம் அவர்கள். 'செய்தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்' என்பதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு, நகைச்சுவை இலக்கிய வானில் தனக்கே உரிய தனித்துவத்துடன், கொடிகட்டிப் பறந்தார். இவர் கல்விச் சான்றோர்களும், கலைஞர்களும் நிரம்பப் பெற்ற வடமராட்சியில், கரவெட்டி என்னும் கிராமத்திலே, திரு. திருமதி. சிற்றம்பலம் குடும்பத்தில் மகனாக, 1924ம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை



'மொடல் ஸ்கூல்' என அழைக்கப்பட்ட நெல்லியடி மகாவித்தியாலயத்தில் கற்றார். உயர்தரக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் தொடர்ந்தார்.

சுந்தர் கருத்தோவியச் சிந்தனையாளராக உருவாக, தமிழகத்தின் கருத்தோவியர் மாலி ஆரம்ப கர்த்தாவாக விளங்கினார் எனக் கூறப்படுகிறது. சுந்தர் ஆரம்பப் பாடசாலை மாணவனாக இருந்த போது கருத்தோவியர் மாலி கல்கி கிருஷ்ணமூர்த்தியுடன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையில் அவர்களுக்கான வரவேற்பு வைபவம் நடைபெற்றது. வைபவத்தின் போது மாலி ஒரு வெண்கட்டியைக் கையில் எடுத்து, மேடையில் இருந்த கரும்பலகையில், அப்போதைய அரசியல் தலைவர்களின் உருவங்களை கேலிச்சித்திரமாக வரைந்தார். இந்தக் காட்சி சுந்தரின் மனதில் ஆழமாகப் பதிந்தது. சிறுவயதிலேயே ஆனந்த விகடனில் மாலியினால் வரையப்பட்ட கருத்தோவியங்கள் தன்னைப் பெரிதும் கவர்ந்ததாக 1990ம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி வி.என்.எஸ். உதயசந்திரன் முரசொலிப் பத்திரிகைக்காக எடுத்த நேர்காணலில் அவர் குறிப்பிட்டுளார்.

சுந்தரின் தந்தையார், மேல்மாகாண தபால்மா அதிபராகப் பணியாற்றிய வி.கே. சிற்றம்பலம் அவர்கள். தனது மகன் ஒரு கட்டடக் கலைஞராக வரவேண்டும் என்ற கனவுடன், அவரை இந்தியாவுக்கு அனுப்பினார். அவர் கட்டடக் கலைஞராக மட்டுமின்றி, கருத்தோவியக் கலைஞராகவும் திரும்பி வந்தார். இந்தியாவில் படித்துக்கொண்டிருந்த காலத்திலேயே ஏராளமான வாசகர்களைக் கொண்ட 'பிளித்ஸ்'(Blitz) என்னும் ஆங்கிலச் சஞ்சிகையில், இவரது கருத்தோவியங்கள் முதன்முதலில் வெளிவந்தன. 'கொஞ்ச்' என்னும் சஞ்சிகையிலும், 'லோக்கசத்த' என்னும் மராட்டிய மொழிச் சஞ்சிகையிலும், பின்னர் வெளிவந்தன. அத்துடன் கருத்தோவியக் கலைஞர்களான போல் தாக்கரே, ஆர்.கே. லஷ்மணன் ஆகியோருடன் அறிமுகம் ஏற்பட்டு, கருத்தோவியத் துறையில் மேலும் தன்னை மேம்படுத்திக் கொண்டார். அத்துடன் பம்பாயில் சேர் ஜே.ஜே கலைக் கல்லூரியில் சித்திரக் கலையையும் கற்றார்.

இலங்கை திரும்பிய சுந்தர் அரசாங்கக் கட்டடத் திணைக்களத்தில் படவரை கலைஞராகத் தனது பணியை ஆரம்பித்தார். எனினும், அப்பதவியில் அவர் நாட்டம் கொள்ளவில்லை. அக்காலத்தில் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய க. கைலாசபதியின் அழைப்பை ஏற்று அப்பத்திரிகையில் சுந்தர் என்னும் பெயரில் 'சவாரித்தம்பர்' கருத்தோவியத் தொடரை வரைந்தார். கரவெட்டியில் அவர் தினம்தோறும் சந்திக்கும் உண்மைப் பாத்திரங்களையே 'சவாரித்தம்பர்', 'சின்னக்குட்டி', 'பாறி மாமி' எனப் படைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இத்தொடர் வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. சவாரித்தம்பருக்காகவே தினகரன் பத்திரிகையை வாங்கும் வாசகர்களும் இருந்தனர். கைலாசபதியை சுந்தரும், சுந்தரைக் கைலாசபதியும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர் எனக் கூறினும் தவறாகாது. தினகரன் வாரமஞ்சரியில் 'மைனர் மச்சான்', 'சித்திர கானம்' ஆகிய கருத்தோவியத் தொடர்களையும் சுந்தர் வரைந்தார்.

கைலாசபதி தினகரன் பிரதம ஆசிரியர் பதவியிலிருந்து விலகியதும் சுந்தர் வீரகேசரியில் சேர்ந்தார். தொடர்ந்தும் கருத்தோவியங்களை வரைந்து வந்தார். அதேவேளை சமசமாஜிஸ்ட், ரைன்ட்(Trine), People's Voice, சுதந்திரன், மித்திரன், ஈழமுரசு, முரசொலி போன்ற பிற பத்திரிகைகளிலும் இவரது கருத்தோவியங்கள் வெளிவந்தன. இவருக்கு சுதந்திரமான சிந்தனை இருந்தது போல, எவருக்கும் கட்டுப்படாத மனப்போக்கும் இருந்தது. எனவே கருத்தோவியத்துக்கும் நகைச்சுவைக்கும் ஒரு பத்திரிகையை சுயமாக ஆரம்பிக்க வேண்டும் என்னும் நீண்ட நாள் கனவை, நனவாக்கும் வகையில், கொழும்பு - கொட்டாஞ்சேனையிலுள்ள பெனடிக் மாவத்தையில், 1963ம் ஆண்டு ஜனவரி மாதம் 'சிரித்திரன்' மாத சஞ்சிகையினை வெளியிட்டார். தானே அவற்றைக் கொண்டு சென்று விநியோகித்தும் வந்தார். பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வெளிவந்த சிரித்திரன், 1971ம் ஆண்டு சேகுவராக் கிளர்ச்சியையடுத்து, யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத் தொடங்கியது. அங்கும் பல்வேறு சிரமங்களினால் யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு இடங்களுக்கு மாறிய பணிமனையும் அச்சகமும், இறுதியில் காங்கேசன்துறையில் செயற்பட்டு வந்தன. 1987ம் ஆண்டு இலங்கை வந்த இந்திய இராணுவப் படையினால், அச்சகமும் பணிமனையும் தாக்கி அழிக்கப்பட்டதோடு சிரித்திரன் தனது பயணத்தை நிறுத்திக் கொண்டது. மீண்டும் 1990ம் ஆண்டிலிருந்து தொடர்ந்த சிரித்திரன் சஞ்சிகையின் பயணம் 1995ம் ஆண்டு மாபெரும் இடப்பெயர்வுடன் முடிவுக்கு வந்தது.

1963ம் ஆண்டிலிருந்து 1995ம் ஆண்டு வரையிலான 32 வருட காலப்பகுதியில் 28 ஆண்டுகள் சிரித்திரன் சஞ்சிகை 318 இதழ்களாக வெளிவந்தது. இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் நகைச்சுவை சஞ்சிகை என்ற பெருமையும், உலகின் முதல் தமிழ்

நகைச்சுவைச் சஞ்சிகை என்னும் தனிப் பெரும் சிறப்பும் அதற்கே உரியது.

சிரித்திரன் சஞ்சிகையின் பெரும் பகுதி, சுந்தரின் ஆழ்மனதிலிருந்து தோன்றிய கருத்தூண்கள் அல்லது கருத்தோவியங்கள் சார்ந்த படைப்புகளாகும். கருத்தோவியங்கள், நகைச்சுவைப் பகுதிகள், ஆசிரியத் தலையங்கமான நிலைக்கண்ணாடி, மகுடி கேள்வி பதில்கள், கதைத்தேன் என்னும் குட்டிக்கதைகள் பகுதி, பல்லி சொன்னதும் செய்தி சொன்னதும், ஓய்யப்பக்கங்காணியார் என்பன அவரது தனிப் படைப்புகளாக சிறப்பிடம் பெற்றன. சுந்தர், மாயன், பாணன், அதிமதுரம், ஜோக்கிரட்டீஸ், சிவா, சிவாஜி, மகுடி, தேனுகா போன்ற பல புனைபெயர்களில் அவரது படைப்புகள் வெளிவந்தன. பிரதான பாத்திரங்களாக சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான், மெயில்வாகனத்தார், மிஸ்டர் அன் மிஸ்ஸிஸ் டாமோடிரன், போன்றவர்கள் இடம்பெற்றனர். கார்ட்டூன் என அழைக்கப்படும் ஓவியங்கள், நையாண்டிச் சித்திரம், கருத்துச் சித்திரம், அங்கதக்கலை, கோட்டுச் சித்திரம் கேலிச்சித்திரம் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது. கேலிச்சித்திரம் எனக் கூறப்படுவதை சுந்தர் முற்றாக வெறுத்தார். ‘சமூகத்திற்கு சத்தான சிந்தனையை சித்தரிக்கும் ஓவியத்தை எப்படி கேலிச் சித்திரம் என்பது? சிந்தனையின் ஆழத்திலிருந்து வரும் குமிழியே சிரிப்பு. கார்ட்டூன் கலையை கேலிச்சித்திரம் என்பதற்கு கார்ட்டூன் கலை வெறும் கோமாளிக் கூத்தல்ல’ என அவரது ‘சிரித்திரன் சித்திரக் கொத்து’ என்னும் நூலின் அகவுரையில் கடிந்து குறிப்பிட்டுள்ளார்.

சிரித்திரன் வெளிவருவதற்காக சுந்தருடன் அவரது மனைவி, பிள்ளைகள் அனைவரும் ஒன்றுபட்டுக் கடினமாக உழைத்தார்கள். மனைவியார் கோகிலம் சிறந்த நிர்வாகியாக செயற்பட்டு சுந்தருக்கு வலதுகரம் போல் விளங்கினார். சிரித்திரன் ஒரு நகைச்சுவை இதழாக மட்டுமின்றி, தரமான சிறுகதைகள், குறுநாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கலைஞர்களுடனான நேர்காணல்கள் என்பனவற்றை உள்ளடக்கி அழகுற வெளிவந்தது. குறிப்பாக, ஈழத்துக் கலைஞர்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் சுந்தர் ஆர்வம் கொண்டு விளங்கினார். அவரது வேண்டுகோளுக்கிணங்க, சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம், டாக்டர் சுகுமார் ஆகியோர், கலைஞர்களை செவ்வி கண்டு எழுதிய கட்டுரைகள், ‘தேன்பொழுது’ என்னும் பெயரில் சிரித்திரனில் தொடராக வெளிவந்தது. பின்னாளில் சுந்தர் அவற்றைத் தொகுத்து ‘தேன் பொழுது’ என்னும் பெயரில் நூலாக வெளியிட்டார். சுந்தரின் பிறந்த ஊரான கரவெட்டி மக்கள், அவரை கௌரவிக்கும் முகமாக, நெல்லியடி - கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அப்போதைய தலைவர் சிதம்பரப்பிள்ளை, மற்றும் டாக்டர் சுகுமார் ஆகியோரின் உதவியுடன் ‘சிரித்திரன் சித்திரக் கொத்து’ என்னும் நூலைக் கோலாகலமாக வெளியிட்டனர்.

‘இதயம் பேசுகிறது’ சஞ்சிகை ஆசிரியர் மணியன், யாழ்ப்பாணம் வந்தபோது, சுந்தரை அவரது வீட்டில் நேரடியாகச் சந்தித்து, தமிழ் கூறும் நல்லுலகில், நகைச்சுவைக்கெனத் தனியான ஒரு பத்திரிகையை, வெற்றிகரமாக நடத்துவதை வெகுவாகப் பாராட்டினார். அத்துடன் சிரித்திரன் நகைச்சுவைத் துணுக்குகளைத் தனது சஞ்சிகையில் பிரசுரித்துத் தானும் மகிழ்ச்சியடைந்து, சுந்தரையும் பெருமைப்படுத்தினார்.

சிரித்திரனின் ஆரம்பகால எழுத்தாளர்களாக திக்கவயல் தர்மு, யாழ் நங்கை, காசி ஆனந்தன் ஆகியோர் விளங்கினர். காசி ஆனந்தனின் இலட்சியத் தாகம் மிகுந்த மாத்திரைக் கதைகள் பிரபல்யம் பெற்று விளங்கின. இலங்கையில் புதுக்கவிதையை மக்கள் மயப்படுத்திய பெருமையும் சிரித்திரனையே சாரும். திக்குவல்லை கமால், ராதேயன், பூநகரி மரியதாஸ் போன்ற பலர் சிரித்திரனில் புதுக்கவிதைகள் எழுதிப் புகழ் பெற்றனர். ‘விவேகி’ சஞ்சிகையில் முதன்முதலாக வெளிவந்த செங்கையாழியானின் ‘ஆச்சி பயணம் போகிறாள்’ என்னும் நகைச்சுவைத் தொடர் சிரித்திரனில் மீள் பிரசுரமாகியது. மேலும் ‘மயானபூமி’, ‘கொத்தியின் காதல்’, ‘கங்கைக்கரையோரம்’, ‘வாழி நீ வழுக்கியாறு’ போன்ற நாவல்களும், குறுநாவல்களும் சிரித்திரனில் பிரசுரமாகின. அத்துடன் அவரது ‘அலைகடல்தான் ஓயாதோ’, ‘சித்திரை பௌர்ணமி’, ‘நடந்தாய் வாழி வழுக்கியாறு’, ‘முற்றத்து ஒற்றைப்பனை’ ஆகிய நூல்கள் சிரித்திரன் பிரசுரமாகவும் வெளிவந்தன. அ.ந. கந்தசாமியின் ‘நடுநிசிப் பிசாசு’, சி.கே. சிவாவின் ‘நடுநிசி’, கே.ஆர். டேவிட்டின் ‘பாலைவனப் பயணிகள்’ என்பனவும் சிரித்திரனில் வெளிவந்தவையாகும். என்.எஸ்.எம். ராமையா, கனக செந்திநாதன், நெல்லை க. பேரன், து. வைத்திலிங்கம், அப்பச்சி மகாலிங்கம் எம்.எஸ். பசுபதி, கா. யோகராசா, கே.எஸ். பாலச்சந்திரன், பொ. சண்முகநாதன், க. பரராஜசிங்கம், சி. தர்மகுலசிங்கம் என சிரித்திரனில் சிறுகதைகள் நாவல்கள் எழுதிய எழுத்தாளர்களின் பட்டியல் மிக நீளமானதாகும். அதுபோலவே அவர்களது படைப்புக்களின் எண்ணிக்கையும் எண்ணில் அடங்கா. சிறுவர்களின் எழுத்தாற்றலை ஊக்குவிக்கவும், கருத்தோவியத்தில் ஆர்வம் கொள்ளச் செய்யவும் சிறுகதைப் போட்டிகளை நடத்திப் பரிசில்களையும் வழங்கினார்.

சிரித்திரன் ஆண்டு மலர்களை, சுந்தர் மிக நேர்த்தியாகவும், அழகுறவும், கருத்தோவியப் பொக்கிஷம் என வியக்கும்படி சிறப்பாக வெளியிட்டார். புகழ்பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகளும் அவற்றை அழகு செய்தன. பொதுவாக சிரித்திரனின் முன்பக்க அட்டை வாசகர்களைக் கவரும் வண்ணம் கருத்தோவியங்களைத் தாங்கி வெளிவரும். சில சந்தர்ப்பங்களில் முக்கியஸ்தர்களின் படங்களும் முன் அட்டையில் இடம் பெறும். உதாரணமாக, பேராசிரியர் க. கைலாசபதியின் மறைவின் போது, அவரை நினைவு கூரும் வகையில் அவரது படம் முன் அட்டையில் இடம் பெற்றிருந்தது.

சுந்தர் அவர்கள் சமூக அக்கறை கொண்ட சமூக சேவையாளராகவும் செயற்பட்டார். மில்க்வைட் க. கனகராசா அவர்கள், சுந்தர் பற்றிக் கூறும் போது ‘எமது பணிகளில் எம்முடன் இணைந்து, வன்னிப் பிரதேசத்தில், பனம் விதைகளை விதைப்பதில், அவர் காட்டிய ஆர்வமும், கொண்ட பெருமிதமும் எனது நெஞ்சில் என்றுமே பசுமையாக நிறைந்து நிற்கும்’, எனவும், ‘பனை மரங்கள் கூட சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்களை மறக்கமாட்டா’ எனவும் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் தேசியப் பற்றில் மிக்க ஆர்வம் கொண்ட இவர், 1991ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலம், ‘சிரித்திரன் சித்திரக் கொத்து’ என்னும் நூலுக்கு, பரிசில் வழங்கிய போது, அதனை ஏற்காது பரிசுக்குரிய காசோலையைத் திருப்பியனுப்பினார். பின்னாளில் தமிழ் ஈழ பண்பாட்டுக் கழகத்தினர் ‘மாமனிதர் பட்டம்’ வழங்கி அவரைக் கௌரவித்தனர்.

சுந்தர் நோய்வாய்ப்பட்டு அவரது வலதுகை வலுவிழந்தபோது, இடது கையால் கருத்தோவியங்களை வரைந்து விடாமுயற்சியுடன் செயற்பட்டார். ஈழத்தமிழ் மண்ணிலே தனிப் பெரும் நகைச்சுவைச் சிந்தனையாளனாக விளங்கி, அதற்கெனத் தனியாக ஒரு சஞ்சிகையினை வெளியிட்டு மக்கள் மனதில் இடம்பெற்ற சுந்தர் என அழைக்கப்பட்ட சிவஞானசுந்தரம் அவர்கள் 1995ம் ஆண்டு, மார்ச் மாதம், மூன்றாம் திகதி அமரத்துவம் அடைந்தார். பிறந்த நாளையும் மறைந்த நாளையும் ஒரே தினத்தில் நினைவு கூரும் நிலையை இறைவன் ஏற்படுத்தியுள்ளான். நகைச்சுவையாளர்களை மக்கள் மறப்பதுமில்லை, அவர்களுக்கு மரணமுமில்லை.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்குப் பின்னர், கடந்த வருடம் (2021) ஜனவரி மாதத்திலிருந்து இலங்கையில், சிரித்திரன் சஞ்சிகை மீண்டும் நவீன விஞ்ஞான, தொழிநுட்ப வசதிகளைப் பயன்படுத்திப், புதுப் பொலிவுடன் வெளிவரத் தொடங்கியுள்ளமை மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாகும். சுந்தருடன் இணைந்து பயணித்தவர்களினதும், அவரது பிள்ளைகளினதும், மற்றும் நகைசுவை ஆர்வம் மிக்கவர்களினதும் ஏகோபித்த முயற்சியினால் இது சாத்தியமாயிற்று. ‘புதிய கண்டுபிடிப்புகளுக்கான வளர்ச்சியகம்’ என்னும் அமைப்பினால், செல்வராஜா நந்தகோபால் என்பவரை ஆசிரியராகக் கொண்டு சஞ்சிகை வெளிவருகின்றது. இலங்கையில் மட்டுமின்றி, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, நோர்வே, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் விற்பனையாகி வருகின்றது. மேலும் பல நாடுகளில் அதன் விற்பனை பெருகி, இலங்கையில் மட்டுமின்றி உலகெங்கும் அவரது நாமம் நூறு ஆண்டுகள் கடந்தும் வாழும் என்பது உறுதி.



vivekananthan.v@thaiveedu.com

# ஏழாலை மண்தந்த நூலகர் அமரர் சிற்றம்பலம் முருகவேள்

**- என். செல்வராஜா**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் அமரர் சிற்றம்பலம் முருகவேள் அவர்கள் 2.12.2014 அன்று காலமாகி விட்டார். 9.2.1930இல் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழாலைக் கிராமத்தில் வாழ்ந்த முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியினரின் வழித்தோன்றலான சிற்றம்பலம் (துணைவியார் பராசக்தி) அவர்களின் மூத்த புதல்வ-ராகப் பிறந்தவர் முருகவேள். உடன்பிறப்புக்கள் எழுவர்.

ஏழாலைக்கிராமத்தில் தனது ஆரம்பக் கல்வியைப்பெற்ற இவர் பின்னர் யாழ். பரமேஸ்வரா கல்லூரியில் சிலகாலமும், கொழும்பு ரோயல் கல்லூரியில் சில காலமுமாகப் பயின்று பல்கலைக்கழகம் புகுந்தார். தமிழ் ஆங்கிலம் சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற முருகவேள், ஒரு தமிழ் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி, பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியப்பணியில் இணைந்துகொண்டார். இதே பாடசாலையில் ஆசிரியராகவும், பின்னாளில் அதிபராகவும் இருந்த இவரது சிறிய தந்தையாரான ஞானப்பிரகாசம் ஆசிரியரின் வழியாக சைவ விசார, சிவஞானப் பசிக்கு இரைதேடிக்கொண்டார். நீறில்லா நெற்றிபாழ் என்பதற்கேற்ப, முருகவேள் அவர்களின் அகன்ற நெற்றி திருநீறு பூத்ததாகவே காணப்படுவதை அவருடன் பழகியவர்கள் அறிவர்.

ஆவணி 1959இல இவரது உறவினரான பேரம்பலம் பரிகாரியாரின் புதல்வியான புனிதவதியை திருமணபந்தத்தில் இணைத்துக்கொண்டார். இவர்களுக்கு கணேஷ நந்தினி என்ற புதல்வியும் செல்வவிநாயகன், மகாசேனன் ஆகிய இரு புதல்வர்களும் பிறந்தனர். முருகவேள் அவர்கள் திருமணம் செய்த காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பிரிவு நூலகராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டார். பின்னாளில் ஆர்.எஸ். தம்பையா அவர்கள் இளைப்பாற, யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் பிரதான நூலகராகப் பதவியேற்று தான் இளைப்பாறும் வரையில் அப்பணியில் தன் வாழ்வின் பெரும் பொழுதைச் செலவிட்டார். முருகவேள் அவர்களின் காலகட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் வெள்ளிதிசைக் காலம் எனலாம்.

முருகவேள் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகராகப் பணியாற்றிய வேளையில்தான் அவருடனான தொடர்பு எனக்கு முதன்முதலில் ஏற்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் நூலகராகப் பணியாற்றிய வேளையில் நூலகத்துறையை தமிழ் மாணவர்களிடையே பரிச்சயமாக்கும் பணியினை கலாநிதி அமரர் வே.இ. பாக்கியநாதனுடனும் தமிழ் நூலக அறிஞர் எஸ்.எம். கமால்தீன் அவர்களுடனும் இணைந்து மேற்கொண்டுவந்தேன். அவ்வேளையில்தான் திரு. முருகவேள் அவர்களின் தொடர்பு எனக்கு ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆலோசகராக தொடர்பிலிருந்த திரு. முருகவேள் பின்னாளில் எனது அன்றாட சமூக நூலகப் பணிகளில் ஆர்வமுற்று நெருங்கிய விமர்சகராகவும், ஆலோசகராகவும் ஏன் இயக்குசக்தியாகவும் மாறிவிட்டார். அவரது ஆதரவு பகிரங்கமானது. அன்றைய தொடர்பு இவரது இறுதிக்காலம் வரை தொடர்ந்தது. நூல்தேட்டம் தொகுதியொன்றின் வெளியீட்டு விழாவும் பராட்டு விழாவும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் நடந்த வேளையில் அவர் நேரில் வந்து வாழ்த்திச்சென்ற நிகழ்வு என் நெஞ்சைவிட்டகலாது.

ஈழத்தமிழ் நூலகத்துறையில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பயின்றுகொண்டிருந்த மாணவர்களுக்கு தமிழில் போதியளவு நூல்கள் எண்பதுகளின் நடுப்பகுதியில் எம்மவரால் எழுதப்பட்டிருக்கவில்லை. 1970ல் எழுதப்பட்ட, நூலகர் எஸ்.எம். கமால்தீன் அவர்க



ளின் பாடசாலை நூலகர் கைநூலும், தமிழ் சாகித்திய விழா மலர் (1975), அறிவின் பாதையிலே - கொழும்பு பொது நூலகக் கட்டடத்திறப்பு விழா மலர் (1980) போன்ற இன்னோரன்ன மலர்களிலும், சில பத்திரிகைகளிலும் வெளியான சில மேலோட்டமான தமிழ்க் கட்டுரைகளுமே நுலகவியல்துறை பற்றிப் பேசுவதாக அன்றைய காலகட்டத்தில் கைவசம் இருந்தன.

இந்நிலையில் அயோத்தி நூலக சேவைகள் என்ற பெயரில் ஒரு நூலக சேவைகள் சார்ந்த நிறுவனமொன்றை 1985ல் ஆனைக்கோட்டையில் எமது இல்லத்தில் உருவாக்கியிருந்தேன். நூலகங்களுக்கும் நூலக சேவைக்கும் தமிழ்ப்பிரதேசங்களில் பங்களிப்புச் செய்யும்வகையில் உருவாக்கப்பட்ட முதலாவது நிறுவனமாகவே இது அமைகின்றது. பாடசாலைகளும் பொது நூலகங்களும் தனியார் நூலகங்களும் பல்வேறு சேவைகளை இவ்வமைப்பின் வழியாகப் பெற்றுக்கொண்டன. பிராந்தியரீதியில் கருத்தரங்குகள் பல நடத்தப்பட்டன. இவ்வமைப்பின் மூலமாக அறிவியல்ரீதியாக நூலகத்துறையின் பல்வேறு பரிமாணங்களையும் பேசும் தமிழ் நூல்களையும் வெளியிடத் தொடங்கியிருந்தோம். இதன் ஒரு வளர்ச்சிக் கட்டமாக தமிழில் 'நூலகவியல்' என்ற காலாண்டுச் சஞ்சிகை-

யொன்றினை வெளிக்கொணரும் ஆவலுடன் திரு. முருகவேளை சந்திக்க 1985ன் நடுப்பகுதியில் பல்கலைக்கழக நூலகத்திற்குச் சென்றிருந்தேன். எனது நோக்கம் - பல்கலைக்கழக நூலக வெளியீடாக அதனைக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகள் பற்றிய கருத்தைக் கேட்டறிவதாகவே இருந்தது. அன்றையதினம் சுமார் மூன்று மணிநேரம் அவர் என்னுடன் ஆழமான உணர்வுபூர்வமாக உரையாடினார். பல்கலைக்கழக வெளியீடாக நூலகவியலை வெளியிடுவதில் உள்ள கட்டுப்பாடுகள், சுதந்திரம் பற்றிய அவரது கருத்துக்கள், அப்பணியை நானே மேற்கொள்வதற்கான மன உறுதியை எனக்களித்தது. செப்ரெம்பர் 1985 முதல் தொடர்ந்து ஏழாண்டுகள் நூலகவியல் காலாண்டிதழ் வெளிவந்தது. ஏழாண்டுகளும் நூலகவியலின் ஆலோசனைக் குழுவில் இருந்து நல்ல பல ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டிவந்தார் அவர். 1991ல் எனது லண்டன் நோக்கிய புலப்பெயர்வுடன் நூலகவியல் நின்றுபோயிற்று. அன்றைய அவரது அறிவுரையும் தீர்க்கதரிசனமும் எனது இன்றைய வளர்ச்சிநிலைக்கான உரமாக அமைந்ததை நான் மட்டுமே அறிவேன். ஆலோசனை, கலந்துரையாடல் என நூலகர் முருகவேளை சந்திக்க அவரது அலுவலகத்திற்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும் நீண்ட உரையாடல்களாகவே அத்தருணம் கழியும். தான் செய்ய விரும்பிய பணிகளை என்மூலமாக நிறைவேற்றும் கனவு அவரது கண்களில் தேங்கியிருந்ததை மானசீகமாக நான் அறிவேன்.

நூலகவியலின் முதலாவது இதழ் செப்ரெம்பர் 1985ல் திரு. முருகவேள் அவர்களின் சிறப்புரையைத் தாங்கி வந்தது. அதில் அவர் குறிப்பிட்ட இறுதிப் பந்தியை மீள்பதிவு செய்ய விரும்புகின்றேன்.

*‘எமது நாட்டில் சிறியனவும், அவ்வளவு சிறியன அல்லாதனவுமாக நூலகங்கள் என்ற பெயரில் சில நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஏதோ தமக்குள்ள ஆற்றலுக்கு ஏற்ற முறையில் பணிபுரியும் பலர் இருக்கின்றனர். இவர்களுக்கு நூலகவியலின் அடிப்படைக் கோட்பாடுகளையும், தொழில் நுணுக்கங்களையும், இலட்சியார்த்த நோக்கங்களையும் அறியத்தருதல் இந்நாட்டில் நல்லதொரு நூலக சேவையினை உருவாக்கும் முயற்சியில் மிகுதியும் வேண்டப்படும் முதல் நிலைத் தொண்டாகும். இவற்றையெல்லாம் ஓரளவு அறிந்த இச்சில நூலகர்கள், நூலகச் செய்தியினை மக்களிடம் கொண்டு செல்பவர்களாகவும், நூலக இயக்கத்தினை வெகுஜன இயக்கமாக்குகின்றவர்களாகவும் பரிணமிக்கின்ற வாய்ப்பு உண்டு. இச்சிறுவிதழ் அம்முதல் நிலைத் தொண்டினை ஒரு சிறிதாவது நிறைவேற்றி வைக்கும் என எதிர்பார்க்கலாம்.’*

பின்னாளில் நூலகவியல் சஞ்சிகை தமிழ் பேசும் நூலகர்களிடையே ஏற்படுத்திச்சென்ற பாதிப்பானது, மீள்பிரசுரமாக, அந்த நூலகவியல் சஞ்சிகையின் முழுத்தொகுதியையும் உள்ளடக்கிய பெருந்தொகுப்பொன்றினை 2013ல் மீள்பிரசுரமாக கொழும்பு குமரன் புத்தக இல்லத்தினர் வெளியிடும் அளவுக்கு எமது அறிவியல் சமூகத்தினரிடையே வேரோடியிருந்துள்ளது.

இலங்கையின் கல்வி அமைச்சராக பதியுதீன் முகம்மது அவர்கள் சேவையாற்றிய காலகட்டத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக 15.7.1974ல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேளைமுதல், பின்னர் சுதந்திரமான பல்கலைக்கழகமாக 1979ல் மாற்றம்பெறும் வரையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஏராளமான ஏட்டுச்சுவடிகள் (ஓலைச்சவடிகள்) பொதுமக்களால் நன்கொடையாகவும், வேறு வழிகளிலும் கையளிக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக நூலகத்தின் ஆரம்பகால நூலகரான திரு. ஆர்.எஸ். தம்பையா அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்துக்குள் உள்வாங்கப்பட்டவர். அவரது காலத்தில் இவ்வேட்டுச் சுவடிகள் நூலகத்தில் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்தனவேயன்றி அவற்றை வாசித்துப் பட்டியலிடும் பணிகள் எதுவும் சாத்தியமாக இருக்கவில்லை. இந்நிலையில் திரு. முருகவேள் அவர்கள் புதிய நூலகராகப் பணியேற்றதன் பின்னர், இவ்வேட்டுச் சுவடிகளைப் பார்வையிட்டு விஞ்ஞான பூர்வமாகப் பட்டியலிடும் பணியை முடுக்கிவிட்டார். ஒவ்வொரு ஏட்டுச் சுவடிக்குமான தலைப்பு, பிரதிப்பாடத் தொடக்கம், பிரதிப்பாட முடிவு, ஓலைகளின் எண்ணிக்கை, அளவும் பிற பௌதிக விபரங்களும், குறிப்பு என பல்வேறு தகவல்களுடன் இப்பட்டியலை இவர் தயாரித்தார். கிரந்த லிபியில் அமைந்த வடமொழிச் சுவடிகளை இனங்காண பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்தி போன்ற அறிஞர்களின் உதவிகளையும் பெற்றிருந்தார். இவரது பணிக்கு அந்நாளில் பல்கலைக்கழகப் பணியாளர்களாக இருந்த க. நிரஞ்சனாதேவி, செ. சண்முகநாதன் ஆகியோர் பெருந்துணைபுரிந்தனர். அரபு எண் ஒழுங்கில் அமைந்த பிரதான பட்டியல், தலைப்புச் சுட்டு, பொருட்சுட்டு ஆகிய மூன்று பிரிவுகளில் அப்பட்டியலை ஒழுங்கமைத்து, 1992ல் ஒரு சிறு நூலுருவிலும் பல்கலைக்கழக நூலகத்தின் வெளியீடாக கல்லச்சுப் பிரதியாக நூலகர் முருகவேள் வெளியிட்டார்.

அமரர் முருகவேள் அவர்களின் நூல்கள் இரண்டு இதுவரை வெளிவந்திருக்கின்றன. அவரது ஆழ்ந்தகன்ற சைவசித்தாந்த அறிவும் வடமொழிப் புலமையும் இந்நூல்களின் வழியாக புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. நூலகத்துறைசார்ந்து அவர் விரிவாக எழுதாமை இன்றும் ஒரு கேள்விக் குறியாகவே அமைந்துவிட்டது. அவரது பெயரில் நூலகவியல்துறைசார்ந்து ஒரு நூல் எழுதப்பட்டு அயோத்தி நூலக சேவைகள் வெளியீடாக அது வெளியிடப்படவேண்டும் என எனது சந்திப்புகளிலெல்லாம் அவரிடம் பலமுறை அழுத்தமாகக் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். இருப்பினும் எதுவும் ஈடேறவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் பணியாற்றிய காலகட்டம் மிகவும் சிறப்பானதொரு காலகட்டமாகும். அதுபற்றி பல்கலைக்கழகத்தில் அவரது நிர்வாகத்தில் பணியாற்றிய வி. வேல்தாஸ் அவர்கள் யாழ். உதயன் பத்திரிகையில் (உதயன் 3.1.2015) எழுதிய நீத்தார் நயப்பரையில் உணர்வுபூர்வமாகக் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் நூலக டிப்ளோமா பரீட்சைக்கென செப்ரெம்பர் 1965ல் நூலகர் முருகவேள் சமர்பபித்த விரிவான நூற்பட்டியல் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டும். 1960ம் ஆண்டு வரை ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டிருந்த சைவசமயம் தொடர்பான நூல்கள் பற்றிய விரிவான நூற்பட்டியல் இதுவாகும். இப்பட்டியலுக்கான விரிவான பகுப்பாக்கம் ஒன்றினை இவரே உருவாக்கியிருந்தார். சைவ சமயம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் எவருக்கும் தமது தேடலை விரிவுபடுத்த இப்பட்டியல் நிச்சயம் உதவியாக இருக்கும். இதன் ஒரு பிரதி தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்தில் பேணப்படுகின்றது. (ஆய்வேடுகளின் சேர்க்கை இலக்கம் 76336). இவ்வாய்வு விரிவான பயன்பாடு கருதி நிச்சயம் நூலுருவாக்கப்படல் வேண்டும். இக்கைங்கரியத்தை அமரர் சி. முருகவேள் அவர்களின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகச் சமூகம் அல்லது இந்து சமய, கலாச்சார அலுவல்கள் அமைச்சு முன்னெடுக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வெண்டுகோளாகும். முதலாம் பாகமாகவாவது இவ்வேடு வெளிவருமிடத்து, பின்னாளில் 1961 முதலாக இந்நாள் வரை வெளிவந்த சைவசமய ஆய்வுகள் பற்றிய பட்டியல்படுத்தும் பணியை வேறொருவர் மேற்கொள்ள வாய்ப்பையும் ஏற்படுத்தித் தரலாம். சைவமும் தமிழும் தன் வாழ்வுநெறியாக வாழ்ந்து மறைந்த ஏழாலையின் புதல்வன் முருகவேளுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக இது அமையும்.



selvarajah.n@thaiveedu.com

# அண்ணாவியார் செபஸ்ரியான் மாசிலாமணி

## ஆழத்து முத்துக்கள் 199

- ப. ஸ்ரீஸ்கந்தன்

மன்னார் பாங்கு கூத்துப் பாடல்களைத் தன் கம்பீரக் குரலால் பாடிக்காட்டியவாறு, ஐம்பது வருடங்களுக்கு மேலான தனது கலைப்பயணத்தின் தடங்களைத் திகதி வாரியாகப் பதிவிட்டபடி, தன் அனுபவங்களைச் சுவைபடப் பகிர்ந்து கொண்ட, கூத்துக் கலையின் பல்வேறு தளங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் அண்ணாவியார் செபஸ்ரியான்



மாசிலமாணி அவர்களை இம்மாத ஆழத்து முத்துக்களில் பதி-விடுவதில் தாய்வீடு மகிழ்வுறுகிறது.

இவர் மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முருங்கன் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் ஆவணம் கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்டவர். பெருமைமிக்க கூத்துப் பாரம் பரியம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் மரியான் செபஸ்ரியான் பிரபலமான நாட்டுக்கூத்து அண்ணாவி யார். தாயார் செபமாலை. கூத்துக்கலையைத் தளரவிடாது, தொடர்ச்சியாக வளர்த்துக் கொள்வதில் பங்காற்றிய கலாபூஷணம் சீமான், கலாபூஷணம் குழந்தை செபமாலை, சந்தியோகு (இரத்தினம்), யேசுதாசன் ஆகியோர் இவரது சகோதரர்கள். இவ ரின் மனைவி யேசம்மா. கலைஞரின் மூத்த மகன் தேவதாசன் இந் தியாவில் கர்நாடக இசையை வரன்முறையாகக் கற்றவர்.

கலைஞர் மாசிலாமணி முருங்கன் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் (முருங்கன் மகாவித்தியாலயம்) பயின்ற வர். பின்னர் வவுனியா விவசாயப் பயிற்சிப் பாடசாலையிலும் கண்டி திரித்துவக் கல்லூரியில் கால்நடை கற்கைநெறியிலும் பயிற்சி பெற்றவர். தொடர்ந்து கால்நடை அபிவிருத்தி போதனா சிரியராக பதவியேற்றுப் பின்னர் கால்நடை அபிவிருத்தி உத்தியோ கத்தராக உயர்வு பெற்று இளைப்பாறியவர்.

தந்தையார் அண்ணாவியம் செய்த சந்தியோகுமையோர் வாசாப்பு நாட்டுக்கூத்துக்கு தனது எட்டாவது வயதிலேயே கைத்தாளம் போடுகின்ற வாய்ப்பும் பெருமையும் பெற்றவர் கலைஞர் மாசி-லாமணி. புனித யாகப்பர் தேவாலயத்தை மையப்படுத்தி சுற்ற வுள்ள கிராமங்கள் எங்கும் நடைபெறும் தந்தையாரின் கத்தோ லிக்க நாடகங்களில் மத்தளம், ஆர்மோனியம் வாசிக்கவல்ல கலைஞராக இவர் மிளிர்ந்தார்.

பாடசாலையில் நடைபெற்ற விவசாய விழாவில் மேடையேற்றப் பட்ட 'பாட்டாளிக் கந்தன்' என்ற நாடகத்தில் பிரதான பாத்திர மேற்று நடிப்புத்துறையில் கால்பதித்தவர். 'நல்வாழ்வு' என்ற இன்னுமொரு பாடசாலை நாடகத்தில் இவரும் சகோதரர் குழந்தை செபமாலையும் இணைந்து நடித்திருந்தனர். பாடசாலை மேடையேற்றிய சேக்ஸ்பியரின் 'வெனிஸ் நகர வர்த்தகன்' நாட கத்தில் பிரதான பாத்திரமான ஷைலொக் வேடமேற்றுப் புகழ் பெற்றவர். பாடசாலை நாடகங்களில் நடிப்பதற்கு ஊக்கம் தந்த நாவாந்துறை நீக்கலாப்பிள்ளை, வங்காலை மக்சிமஸ் லம்பேட் ஆகியோரை இவர் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

புனித யாகப்பர் ஆலய பாடகர் குழுவில் இளவயதிலேயே இயங் கிவந்த இவர், தன் சகோதரர் குழந்தை செபமாலை ஆரம்பித்த யாகப்பர் இன்னிசை கலாமன்றத்தில் இணைந்து மெல்லிசைப் பாடல்கள் பலவற்றைப் பாடிவந்துள்ளார். 1961ல் தமிழ்ப் பகுதிக-

ளில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது இந்த இன்னிசைக் குழுவினர் உணர்ச்சிப் பாடல்களைப் பாடியிருந்தனர். குழந்தை செபமாலை பாடிய 'அறப்போர் அறைகூவல்', 'இன்பத் தமிழன் இதய ஓலம்' ஆகியவை இவ்வாறு பாடப்பட்ட பாடல்களாகும்.

மரபுக் கவிதை எழுதவல்ல கலைஞர் மாசிலாமணி பல கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்களை வென்றுள்ளார். பெங்களூர் போல்றிபாம் அமைப்பினர் நடத்திய கவிதைப் போட்டியில் இவர் எழுதிய 'கோழியின் மகிமை' என்ற கவிதை சிறந்த கவிதையாகத் தெரிவு செய்யப்பட்டது. கொழும்பு கலாச்சார அலுவல்கள் அமைச்சினால் தேசிய ரீதியில் நடத்தப்பட போட்டியில் 'வந்துவிடும் சமாதானம்' என்ற கவிதை இரண்டாம் இடத்தையும் நதி சஞ்சிகை தேசிய மட்டத்தில் நடத்திய போட்டியில் இவரது 'நீதியே விழித்தெழு' முதலாம் இடத்தையும், வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு நடத்திய போட்டியில் 'பிச்சை புகினும் கற்கை நன்றே', 'மாறிவரும் எம் பண்பாடு' ஆகிய இவரது இரு கவிதைகளும் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. தேவாலயத் திருவிழாக்களின் போது பாடப்படும் திரைக் கவிகள் என்ற இருபத்தியொரு கவிகளை இதுவரை இவர் எழுதியுள்ளார்.

நாட்டார் கலைகளில் ஒன்றான வில்லிசையிலும் இவர் சிறந்து விளங்கியுள்ளார். அன்பே கடவுள், செபவாழ்வு, நாமும் உயிர்த் தெழுவோம், இறைவார்த்தை, தமிழ்த்தாய், விசுவாச வாழ்வு, பெண்கள் கல்வி, முதியோரைப் பேணுவோம், சமூகமே விழித் தெழு போன்ற இருபதுக்கும் மேற்பட்ட வில்லிசைகளை எழுதி அரங்கேற்றியுள்ளார்.

மரியாம்பிள்ளை புலவரால் எழுதப்பட்ட சந்தியோகுமையோர் எனும் நாடகம் முருங்கன் புனித யாகப்பர் ஆலயத்தில் பத்து ஆண்டுகளுக்கு ஒருதடவையாக இன்றும் மேடையேற்றப்பட்டு வருகிறது. இந்நாடகத்தில் எட்டு வயதில் சம்மனசாக இவர் நடித்து அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார். பின்னர் பதினெட்டு வயதில் தனது தந்தையாரின் நெறியாள்கையில் இந்நாடகத்தின் கனதியான பாத்திரமான களுக்குமாரன் வேடமேற்றுச் சிறப்புச் செய்தார். சந்தியோகுமையோர் நாடகத்தில் நடிகராகப் பணியாற்றி வந்த இவர் குழந்தை செபமாலையுடன் இணைந்து பலமுறை இந்நாடகத்தை நெறிப்படுத்தியுமுள்ளார்.

யாகப்பர் இன்னிசைக் கலாமன்றம் முருங்கன் முத்தமிழ் கலா மன்றம் ஆக உயர்வு கண்டபின் 'வீரத்தாய்' என்ற மன்னார் பாங்கு நாட்டுக்கூத்தைத் தயாரித்து மேடையேற்றியது. பாரதிதாசன் கதையை மையப்படுத்தி குழந்தை செபமாலை எழுதிய இந்தக் கூத்தில் கலைஞர் மாசிலாமணி மந்திரி பாத்திர மேற்றிருந்தார். மேடையில் தோன்றாத நேரங்களில் இவர் ஆர்மோனிய வாத்தியத்தைக் கையாண்டார். தந்தையார் மரியான்- மத்தளம், தம்பி யேசுதாசன் - கைத்தாளம் என குடும்பமே மேடையில் இயங்கியது. இக்கூத்து பிரதேச கலைவிழாவில் இடம் பெற்ற போட்டியிலும் கொழும்பு ஹவ்லொக் மண்டபத்தில் நடைபெற்ற அரச தேசிய நாடக விழாவிலும் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டது.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் சேரன் - செங்குட்டுவன் கதையைக் கூறும் 'கல் சுமந்த காவலன்', 'யார் குழந்தை' போன்ற நாட்டுக் கூத்துக்களையும் அம்பிகாபதி - அமராவதி கதையை மையப்படுத்திய 'அன்புப் பரிசு', 'புதுமைப் பெண்' ஆகிய இசை நாடகங்களையும் மேடையேற்றியது. அன்புப் பரிசு வல்வெட்டித் துறை உதயசூரியன் கழகம் நடத்திய நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசைப் பெற்றது. இவற்றில் சிறு பாத்திரங்களை ஏற்ற கலைஞர் பின்னணி இசை ஆக்கத்திலும் பங்கு கொண்டார்.

1974ல் ஆவணம் என்னும் ஊரில் தனது கலைப்பணியை விரிவு- படுத்திக் கொண்ட இவர், அங்கு ஆவணம் புனித கார்மேல் அன்னை கலாமன்றத்தை நிறுவி அதன் தலைவராகவும் பணி யாற்றி வருகிறார். இம்மன்றத்துக்காக பல புதிய நாடகங்களையும் நாட்டுக்கூத்துக்களையும் எழுதி, அண்ணாவியம் செய்து மேடை- யேற்றியுள்ளார். கடவுள் தீர்ப்பிடுகிறார், ஞானசௌந்தரி, புனித யோசப்வாஸ், மனுநீதி கண்ட சோழன், நல்லதங்காள், மன மாற்றம், தாவீதின் வெற்றி, சிங்காபுரி ஆட்சி, பாஞ்சாலி சபதம், உயிர் நீத்த பாரிவள்ளல், நான்காவது ஞானி, உலகின் ஒளி, புனித பவுல், பிறர் அன்பு, குமணனும் அமணனும் போன்றவை இவரது முதன்மையான படைப்புகள் ஆகும். இவற்றில் 'தாவீதின் வெற்றி' வவுனியாவில் இடம் பெற்ற தேசிய நடன விழாவில் முதற் பரிசையும், 'பாஞ்சாலி சபதம்' வடமாகாண நாடக விழாவில் முதற் பரிசையும் 'நல்லதங்காள்' மன்னார் மாவட்டப் போட்டியில் முதற் பரிசையும் பெற்றக் கொண்டன. நல்லதங்காள், ஞானசௌந்தரி ஆகியவற்றை நாட்டுக் கூத்துகளாகவும் இசை நாடகங்களாகவும் இவர் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது.

1981ல் நடைபெற்ற திருப்பாடுகளின் காட்சிகள் எனும் பெரு நாடகத்தில் யேசுநாதராக நடிக்கக் கிடைத்தமை தனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக இவர் குறிப்பிட்டார். யாழ்ப்பாணத் திலிருந்து வந்த பெஞ்சமின் - ஒப்பனையையும் விக்டர் சவுன்ட் சேவிஸ் - ஒலியமைப்பையும் செய்திருந்தனர். இதனது நீட்சியாக, கவிஞர் நாவண்ணன் எழுதிய கல்வாரியில் கடவுள், வலிசுமந்த திருமகன் போன்ற தவக்கால ஆற்றுகைகளைப் பன்னிரண்டு முறை நெறிப்படுத்தி அரங்கேற்றியுள்ளார். களங்கம் சுமந்த கடவுள், உயிர்ப்பின் நம்பிக்கையில், அன்பில் மலர்ந்த கல்வாரி, கல்வாரி நாயகன், போர்க்களத்தின் புன்னகை, களங்கம் சுமந்த கல்வாரி நாயகன், வலி சுமந்த திருமகன் என்னும் தலைப்புகளில் நானாட்டான், சின்னப்பண்டிவிரிச்சான், செட்டிக்குளம், வவுனியா, முருக்கன், தாழ்வுபாடு, உயிலங்குளம், உயிர்த்தராசன் குளம், இரம்பைக்குளம் ஆகிய இடங்களில் மேடையேற்றியுள்ளார்.

தான் சார்ந்த மன்றங்களுடன் மட்டும் நின்றுவிடாது மன்னார் குரு மடம், பாடசாலைகள், மன்றங்கள் போன்ற ஏனைய அமைப்புக- ளுடனும் இணைந்து நாடகப் பயிற்சியாளராக, வளவாளராக கலைஞர் மாசிலாமணி செயற்பட்டு வருகிறார். மேலும், மன்னார் திருமறைக் கலாமன்றம் மேடையேற்றிய சாம்பிராட் அசோகன் நாடகத்தில் அசோகனாக மற்றும் சில்வேஸ்திரியார் நாட்டுக்கூத் தில் சில்வேஸ்திரியாராக என வெவ்வேறு அமைப்புக்களின் நாடகங்களில் பிரதான பாத்திரங்கள் ஏற்றுச் சிறப்புச் செய்துள்ளார்.

கலைப்பணியோடு சமய, சமூகப் பணிகளும் ஆற்றிவரும் கலைஞர் மாசிலாமணி அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி தமிழ் இசைச் சங்கத்தினரின் வாழ்நாள் சாதனையாளர் விருது (2008), இலங்கை கலாச்சார அமைச்சின் கலாபூஷணம் (2009), மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அரும்பணி மையத்தினரின் இறைக் கலை வேந்தன் (2010), வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் கௌரவ ஆளுநர் விருது (2011), மன்னார் மாவட்ட கலை இலக்கிய பெருவிழாக் குழுவினர் வழங்கிய கலைச்சுரபி (2017), கலைஞர்களுக்கான அரச விருதான கலைமாமணி (2019), அரச கத்தோலிக்கத் திணைக்களத்தின் தர்ம பிரபாஷ்பர விருது (2019) ஆகிய விருதுகள் இவருக்குக் கிடைத் துள்ளன.

புகழ்பெற்ற கூத்து மரபில் தோன்றி சிறந்த நடிகராக, எழுத்தா- ளராக, நெறியாளராக, ஆர்மோனியக் கலைஞராக, பக்கப்பாட்டுக் கலைஞராக, ஒப்பனையாளராக இயங்கி வரும் அண்ணாவியார் மாசிலாமணி அவர்கள் மென்மேலும் கலைப்பணியாற்ற தாய்வீடு வாழ்த்துகிறது.



sriskandan@thaiveedu.com

# தனித்துவம் வாய்ந்த பாரதியின் கவித்துவம்

- கிருங்கை சேதுபதி

‘வசன கவிதை’ என்று வடிவ அமைப்புக் கருதிப் பெயர் சூட்டிக்கொண்டாலும், பாரதி இப்படைப்பாக்கத்திற்கு நல்கிய பெயர், ‘காட்சி’.

கையெழுத்துப் பிரதியாக இருந்ததனை எடுத்து, 1930ம் ஆண்டில் நூலாக்கம் செய்தவர்கள் பாரதி பிரசுராலயத்தார், என்றாலும், அதற்கு முன்னதாகவே, சுதேசமித்திரன் இதழ்களில் இவற்றிலிருக்கும் சில கவிதைகள் வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக, ‘காட்சி’யில் இடம்பெறும் ‘காற்று’ என்ற தலைப்பின்கீழ் இடம் பெறும் முதல் பகுதி, தேவ தரிசனம் என்னும் கிளைத் தலைப்புடன் சுதேசமித்திரன் (7.1.1916) இதழில் பிரசுரமானது. அதேபோல், ‘ஞாயிறு’ என்ற தலைப்பின்கீழான இரண்டாம் கிளையின் சில பகுதிகள் சுதேசமித்திரன் (28.2.1916) இதழில் பிரசுரமானது. இவற்றுள் வேறுபாடுகளும் காணப்படுகின்றன என்று குறிப்பிடுகிறார், சீனி. விசுவநாதன்( காலவரிசையில் பாரதி பாடல்கள்-2013)



‘காட்சி எனும் தலைப்பில் இந்தக் கவிதைகளை முழுமையுற அச்சேற்றிய பாரதி பிரசுரலாயத்தார், அதற்கு எழுதிய முகவுரையில் குறிப்பிடுவதாவது.

‘இயற்கையில் ஸதா காலமும் நம்மைச் சூழ்ந்து நம்முடன் இருக்கும் பொருள்களைப் பற்றி நாம் கவனிப்பதுகூடக் கிடையாது. ஆனால், கவிகள் பெரும்பாலும் அவற்றைப் பற்றித்தான் வர்ணிக்கிறார்கள். ஏனெனில், கவிகளின் கண்களுக்கு அவற்றின் விசேஷ குணங்கள் தென்படுகின்றன. இதுதான் கவிகளுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

இந்நூலில் சூரியன், சந்திரன், கடல், காற்று - இவைகளைப் பற்றிப் பாரதியார் எவ்வளவு நேர்த்தியாக வருணிக்கிறார் என்பதைக் கவனித்தால் இந்த உண்மை நன்றாகப் புலப்படும்.

இவைகளைப் புகழ்ந்து பாடாத கவிகள் இருக்கமாட்டார்கள். என்றாலும் பாரதியார் இவைகளை எவ்விதம் காண்கிறார், அவர் இவற்றிற்குக் கொடுக்கக்கூடிய உட்பொருள், வெளிப்பொருள் என்ன. இவைமூலமாகத் தம்முடைய வேதாந்தத்தை எவ்விதம் வெளிப்படுத்துகிறாரென்பது இந்நூலில் நன்கு விளங்குகிறது.’

இந்த அறிமுகம் நமக்கு மூன்று செய்திகளை முன்வைக்கின்றது.

- கவிகளின் விசேஷ குணம். (அதாவது, கவிகளுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசம். நம்மைச் சூழ்ந்து நம்முடன் எப்போதும் இருக்கும் இயற்கைப் பொருள்களைக் கவனித்தல்.)
- இயற்கை வருணனையில் புலப்படும் உண்மை. (இது முதற் செய்தியின் தொடர் கருத்து. கவிகளுக்கே உரிய சிறப்பிலும் தனித்துத் தெரியும் பாரதியின் கவித்துவம்.)
- பாரதியாரின் இயற்கை வருணனையில் வெளிப்படும் உட்பொருள், வெளிப்பொருள்.

இந்த மூன்று பொதுச் செய்திகளும் முன்வைக்கும் ஒரே சிறப்புச் செய்தி, இவற்றின்மூலமாகப் பாரதியார் வெளிப்படுத்தும் தம்முடைய வேதாந்தம். இந்தத் தொடரில் கவனிக்கத்தக்க சொல், தம்முடைய. இதுதான் பாரதியிடம் நாம் கவனிக்க வேண்டிய தனித்துவம் வாய்ந்த கவித்துவம்.

•

மகாகவி பாரதியிடம் வேதாந்தச் சிந்தனை உண்டு. ஆனால், அது சமயம் சார்ந்த வேதாந்தமாக மட்டும் அமைவதில்லை. அதனால்தான், வ.ரா. ‘பாரதியை வேதாந்தச் சிமிழில் அடைக்காதீர்கள்’ என்றார். ‘வேதாந்தம் சிமிழா?’ என்று மறுகேள்வியும் எழுப்பப்பட்டது. அதற்குப் பதில் வரவில்லை.

வேதாந்தம் சிமிழ் இல்லை. ஆனால், அதற்குள் பாரதியை அடைக்கும் முயற்சி எடுக்கப்படும்போது, பாரதியின் விசுவரூபத்திற்கு முன்னால், அது சுருங்கிச் சிமிழாகிவிடுகிறது. இந்த விசுவரூபம் என்ற சொல்லையும் சமயம் சார்ந்து சிந்தித்துவிடலாகாது. (அந்த அளவிற்குச் சமயம் குறித்த பார்வை குறுகிவிட்டதேயொழிய, எந்தச் சமயநெறியும் குறுகியதாகாது என்பது பாரதியப் பார்வை. பாரதியப் பார்வையானது, அனைத்துச் சமயங்களையும் ஒருங்கிணைத்து உள்வாங்கிக் கொண்ட பொதுப்பார்வை. அது

முந்தையோர் பார்த்தவற்றிலிருந்தும் உயர்ந்த புதுப்பார்வை. தற்சார்பை இழக்காத, தற்சார்பில் மட்டுமே ஒடுங்காத, தனிப் பார்வை.)

எல்லாம் ஒன்று என்னும் ஏகத்துவத்தை முன்வைக்கும் வேதாந்த மெய்ஞ்ஞானத்தையும், அனைத்துக்குள்ளும் இருக்கும் இயற்கைப் பேராற்றலை அறிவியல் பூர்வமாகக் கண்டு தெளியும் இயற்பியல் விஞ்ஞானத்தையும் இணைக்கும் பார்வை பாரதியினுடையது. இதன் கவித்துவ வெளிப்பாடுதான், பாரதியின் 'காட்சி' கவிதைகள். அது ஒருவகையில், 'தரிசனம்'. இந்தத் தரிசனத்தை, சமயத்தத்துவப் பார்வையிலேயே புரிந்துகொள்ளலாம்.

கண்ணால் காண்பதெல்லாம் காட்சியல்ல. கருத்தில் நிறைந்த மெய்ப்பொருள் தன்மையைக் கண்முன் தெரியும் பொருளில் கண்டு உணர்ந்து தரிசிக்கக் காட்டும் மெய்யியல் தன்மைதான், 'காட்சி'. ஆலயத்துக் கருவறையில் உள்ள சிலாவடிவத் தெய்வதம் கல்லென்று தெரிந்துகொள்ள, பொது அறிவுபோதும். அதன் கலைவடிவு காண ரசனை மேம்படும். அவற்றுக்குள் தெய்விகத்தைத் தரிசிக்கிறபோதுதான், மெய்யியல் புலப்படும். தன்னுள் இருக்கும் தெய்வத்தைத் தன் கண்முன் ஒளியேற்றி உருக்காட்டும் அதனுள் காண்கிற தரிசனமானது, சமயம் சார்ந்தது எனினும் சமயம் கடந்தது. அது மனிதப் பொதுமை. இதுபோல், தத்தம் சமயநெறிநின்று ஒழுகுபவர்களுக்குள் துலக்கமாகும் தரிசனம், பேதம் வளர்க்காது. மோதல் உருவாக்காது. வாதம் வளர்த்தாலும் பிடிவாதம் கொடுக்காது. தேடல் சார்ந்த இயக்கமில்லாது தேக்கம் கொண்டுவிட்டால், முடக்கமாகி, மூடத்துவத்தைக் கொடுத்துவிடும். அதுதான் ஆபத்தானது. அதில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்ள உதவுவதுதான் கவிதை. அது திருமுறையானாலும் சரி, திவ்வியப் பிரபந்தம் ஆனாலும் சரி. எந்தச் சமயத்துக்கும் உரிய அருமறையானாலும் சரி. அதில் ஒன்றியிருந்து உணர்ந்தால்தான், எல்லாம் ஒன்று என்கிற உண்மை புரியும். அது அறிவியல் சார்ந்த உண்மையும் கூட என்று தெளிந்துகொண்டதன் வெளிப்பாடுதான், இந்தக் 'காட்சி' கவிதைகள்.

> **'புது ஆராய்ச்சி**
> **பண்ணினால்**
> **தெய்வத்துக்குக் கோபம்**
> **வருமென்று**
> **சில மூடர்**
> **நினைக்கிறார்கள்.**

•

பாரதியின் கவிதைகளைப் புரிந்துகொள்வதில் உள்ள பெரிய சிக்கல், அதன் எளிமை. இனிமை தருகிற அதன் நுட்பத்தை, எளிதாக(இலேசாக, சாதாரணமாக)க் கொண்டுவிடக்கூடாது. அதில் உள்ள அருமை, (அதாவது, அரிதான உண்மை), அதுசார்ந்த பெருமை (பெரிதான பொருண்மை), அதைக் காட்டும் பாரதியின் கவித்துவத் திறமை, அதன்வழிப்படும் கருத்து வலிமை ஆகிய வற்றையெல்லாம் காணக் காணப் பாரதியின் பேருருக் காட்சி நம் மனதுள் விரிந்துகொண்டே போகிறது. இது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை.

**'பேசுவதில் பயனில்லை - அனுபவத்தால்**
**பேரின்பம் எய்துவதே ஞானம்'**

என்ற குள்ளச்சாமி கூறிய உபதேசத்தின் நுண்பொருளை உணர்ந்துகொள்ள, பாரதியை அனுபவிக்கிற பக்குவம் வர வேண்டும். அது நம்மைப் பாரதியாகவே ஆக்கிவிடும் வல்லமை உடையது. இந்த அத்வைத நிலைதான், பாரதிய வேதாந்தம். உள்ளும் புறமும் ஒன்றாகத் தரிசிக்க உதவத் திறக்கும் கதவுதான், இந்தக் காட்சிக் கவிதை.

•

**இவ்வுலகம் ஒன்று.**

**ஆண், பெண், மனிதர், தேவர், பாம்பு, பறவை, காற்று, கடல், உயிர், இறப்பு-இவை யனைத்தும் ஒன்றே.**

**ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலை யருவி, குழல், கோமேதகம்-இவ் வனைத்தும் ஒன்றே.**

**இன்பம், துன்பம், பாட்டு, வண்ணான், குருவி, மின்னல், பருத்தி, இதெல்லாம் ஒன்று.**

**மூடன், புலவன், இரும்பு, வெட்டுக்கிளி இவை ஒரு பொருள்.**

**வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர் இவை ஒரு பொருளின் பல தோற்றம்.**

**உள்ள தெல்லாம் ஒரே பொருள், ஒன்று.**

**இந்த ஒன்றின் பெயர் தான். 'தானே' தெய்வம். 'தான்' அமுதம், இறவாதது.**

பாரதி வரிசைப்படுத்தித் தந்த ஒவ்வொன்றையும் ஒரே வரியில் உள்ளடக்கி, ஒரே அடியில், அதுகூடத் தேவையில்லை, ஒரே வார்த்தையில் ஒன்று என்று சொல்லியிருக்கலாமே.

இந்த ஒன்று, one என்ற எண்ணிக்கையை மட்டும் குறிக்கவில்லை. ஒன்றுக என்னும் ஒருமைப்பாட்டு எண்ணத்தையும் உருவாக்கித் தருகிறது என்பதே உண்மை. இது மொழியின் வலிமை. மொழிதலின் அழகு. கவியின் சிந்தனையில் இதன் களம் விரிந்ததன் புலப்பாடுதான் இந்தக் கவிதை. எது ஒன்று?

**இந்த உலகம் ஒன்று.**

ஒன்றாகத் தெரிகிற எண்ணிக்கையில் மட்டுமல்ல, இந்த ஒன்றுக்குள் ஒவ்வொன்றாய்த் தனித்துத் தெரிந்தாலும் அவை ஒன்றித் தெரியும் காட்சியின் சிற்சில காட்டுகள்தான் இந்தக் கவிதைக்குள் உருவேற்று வருபவை. அவை,

ஆண், பெண், மனிதர், தேவர், பாம்பு, பறவை, காற்று, கடல், ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலையருவி, குழல், கோமேதகம், வண்ணான், குருவி, மின்னல், பருத்தி, மூடன், புலவன், இரும்பு, வெட்டுக்கிளி, கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர் இவை யாவும் கண்ணுக்குத் தெரியும் புறப்பொருள்கள். 'இவை ஒன்று' என்கிறார் பாரதி.

இந்தப் பொருட்பட்டியலை இன்னும் வகைப்படுத்திப் பார்த்தால், இவற்றுள் உயிருள்ளனவும் இருக்கின்றன. உயிரற்றவையும் இருக்கின்றன. இதில் ஒன்றை மட்டும் எடுத்துப் பிரித்தால், மற்றொன்று தானாய்த் தெரிந்துவிடும் என்பதால், எளிதாக உயிரற்றவற்றைச் சுட்டிக் காட்டலாம். குழல், இரும்பு, வீட்டுச் சுவர், கோமேதகம்.

இவற்றுள் உயிர்களுக்கு உயிர்ப்பூட்டும் காற்றும் இடம்பெறுகிறது. அது உயிருள்ளதா? உயிரற்றதா? என்பது ஒருபுறம் இருக்கட்டும். காற்றானது, உணரத்தக்கது மட்டுமல்ல, உயிருள்ள பொருள்களை அசைவிப்பதன்வாயிலாகத் தோற்றம் கொள்வது. புயற்காற்றோ, அதன் உன்மத்த நிலையால் உலகைக் கலங்கடித்துக் காட்சிப்படுவது. சரிதான். இவையனைத்தும் ஒன்றுபடத் தெரிவது எப்படி? குழல் உயிரற்றது. அதற்கு உயிர்ப்பூட்டுவது குரல்வழி வெளிப்படும் காற்று. இதனை, 'பாம்புப்பிடாரனின் கவிதை உணர்த்துகிறது.

மேல் விளக்கம் காண, இதே 'காட்சி' கவிதையில் இடம்பெறும்,

கந்தன் வள்ளியின் சிருங்கார ரஸம் ததும்பும் உரையாடலாய் அமையும் ‘காற்று’ கவிதையின் முதல் கவிதையை அனுபவிக் கலாம். அதே தலைப்பின்கீழ் தொடர்ந்து வரும் வரிகள் இன்னும் அழுத்தமாய்ப் பொருள் உணர்த்தவல்லவை.

அடுத்தது, இரும்பு.

இரும்பு உயிரற்றது. ஆனால், அது கொண்டு இயங்கும் பல கரு விகள் உயிர்ப்பூட்டப்பெறுகின்றன. அதன் சுருக்க விளக்கம்தான், அடுத்துவரும் கவிதை.

**வண்டியை மாடு இழுத்துச் செல்கிறது.**
**அங்கு மாட்டின் உயிர் வண்டியிலும் ஏறுகிறது.**
**வண்டி செல்லும்போது உயிருடனேதான் செல்கிறது.**
**காற்றாடி? உயிருள்ளது.**
**நீராவி-வண்டி? உயிருள்ளது, பெரிய உயிர்.**
**எந்திரங்கள் எல்லாம் உயிருடையன**

என்கிறது (காற்று-13) பாரதியின் ‘காட்சி’. இப்படியே வீட்டுச் சுவரையும் கோமேதகத்தையும் விளங்கிக் கொள்ள முடியும்.

இவை மட்டுமா, பொருள்கள். இவற்றுக்கு அப்பாலும் பல பலவி தங்களில் இருக்கின்றனவே. அவையனைத்தையும் கவிதையில் காட்டிவிட முடியுமா? அதையும் செய்துவிடுகிறது, அதே கவிதை.

**பூமிப்பந்து இடைவிடாமல் மிக்க விசையுடன் சுழல்கின்றது.**
**அவள் தீராத உயிருடையவள், பூமித்தாய்.**
**எனவே, அவள் திருமேனியிலுள்ள ஒவ்வொன்றும்**
**உயிர் கொண்டதேயாம்.**
**இந்தப் பூமி தரிசனம் மெல்லமெல்ல விரிந்து**
**பிரபஞ்ச தரிசனமாகிவிடுகிறது இப்படி.**
**அகில முழுவதும் சுழலுகிறது.**
**சந்திரன் சுழல்கின்றது. ஞாயிறு சுழல்கின்றது.**
**கோடி, கோடி, கோடி, கோடி யோஜனை தூரத்துக்கப்பாலும்**
**அதற்கப்பாலும், அதற்கப்பாலும் சிதறிக் கிடக்கும் வானத்து**
**மீன்களெல்லாம் ஓயாது சுழன்று கொண்டேதானிருக்கின்றன.**
**எனவே, இவ்வையகம் உயிருடையது**

என்று இறுதியில் நிலைநிறுத்துகிறார் பாரதி.

கட்புலனாகும் இந்தப் பொருள்கள் எப்படி ஒன்றாகுமோ, அப்படி ஒன்றியுணரத்தக்கது, இன்பமும் துன்பமும். அதன் பரிமாணங் களை உள்ளடக்கிய உயிரும் இறப்பும். இவற்றை எடுத்துச் சொல்கிறது வேதம். இசைத்துக்காட்டுகிறது கீதம். அதனைப் பாட்டு என்கிறார் பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வந்த பாரதி.

இந்த ஒன்றின் பெயர் ‘தான்’ என்கிற பாரதி, இன்னும் விளங்கிக் கொள்ள, அடைப்புக்குறிக்குள், ஆத்மா என்கிறார். அந்தத் தானே உயிர் என்று காட்டி, அது அமுதம், அது இறவாத்து என் றெல்லாம் அடுத்தடுத்து எடுத்துரைக்கிறார். இங்கே வேதாந்தம் விரிகிறது. அது வேதாந்தம் மட்டுமில்லை. அதற்குள் விஞ்ஞான மும் சுடர்கிறது. முதலில் வேதாந்தமாகப் பாரதி விரிக்கும் பொருள் காண்போம்.

வெம்மையைப் புகழும் கவிதையில், (ஞாயிறு-12) உலகப் பொருள்கள் அனைத்தையும் காட்டுகிற பாரதி,

**தேவர்களெல்லாம் ஒன்றே**
**காண்பனவெல்லாம் அவருடல்**
**கருதுவன அவருயிர்**
**அவர்களுடைய தாய் அமுதம்**
**அமுதமே தெய்வம். அமுதமே மெய்யொளி.**
**அஃது ஆத்மா**

என்கிறார்.

இதுதான் ‘தான்’. இந்தத் ‘தான்’ எப்படிப் பிறந்தது? ‘தானே பிறந்தது. ’

அது தானே எப்படிப் பிறந்தது? என்று கேள்வி கேட்பது சரி தானே?

அதுதானே என்று அதற்கு ஒருப்படுவதும் இயல்புதானே.

இந்த இயல்பான கேள்விக்குப் பதில், ‘தெரியாது’ என்பதுதான். என்றாலும் தெரியாமல் இருப்பதனால், இந்தத் தெரியாமைக்குள் ஒரு இருப்பு இருக்கிறதே, அது எது என்று துருவித் துருவிக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தூண்டுவதுதான் இயற்கை. அதுதான் ‘தான்’ என்றும் உடனே முடிவுக்கு வந்துவிடவேண்டாம். அது அனந்தம்.

இதைத்தானே நமது வேதாந்தம் பிரம்மம் என்று பேசுகிறது. என்று சும்மா இருக்க வேண்டியது தானே என்று சொல்லிச் செயலற்றுப் போவதில் பாரதிக்கு உடன்பாடு இல்லை.

இந்தத் தெரியாததில் இருந்து தெரிந்துகொள்வதற்கான முயற் சியை மேற்கொள்வதே அறிவியலின் அடிப்படை. அதை விரிவாக மேற்கொள்கிறார் பாரதி. அந்த முயற்சியின் பயனாய் விளைந்தது தான், அவர்தம் ‘ஜீவ வாக்கு’. அது வங்கம் தந்த விஞ்ஞானத் தங்கமான, ஜகதீச சந்திரவஸுவின் பிரசங்க மொழிபெயர்ப்பு. தனித்துவம் வாய்ந்த பாரதியின் கவித்துவம் காண, அதனையும் பயில்வது அவசியமாகின்றது.

தத்துவச் சிமிழுக்குள் முடங்கிவிடாமல் பிரபஞ்ச ரகசியங்களைத் தேடிச்செல்லும் விஞ்ஞானியைப்போல், தன் கவிதைத் தேரைச் சாரத்தியம் பண்ணும் பாரதியின் வாக்கியத்தில், ஜகதீசரின் வாக்கு ஒலிக்கிறது.

‘புது ஆராய்ச்சி பண்ணினால் தெய்வத்துக்குக் கோபம் வருமென்று சில மூடர் நினைக்கிறார்கள். அண்டத்திலிருப்பதையெல்லாம் பிண்டத்துக்குள்ளே காட்டி அணுவுக்குள் மஹத்தை மறைத்து வைத்து, இந்த ஸ்ருஷ்டியாகிய விந்தையை நம்மைச் சூழ நிறுத் திய ஈசன் தானே நமக்கு மேன்மேலும் தொளைத்துத் தொளைத் துப் பரிசோதனை செய்யவேண்டும் என்ற புத்தியைக் கொடுத்த வனன்றோ?’

இந்த மஹத் தான், பாரதியின் காட்சியை மஹத்தான கவிதை யாக, மஹாகவிதையாகப் பரிணமித்திருக்கிறது.
அதனை விரிவாகக் காணலாம்.



sethupathi@thaiveedu.com




அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின்
முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய
அனுபவத்துடன்
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy or Sell
Your Home
call me 24-7
HOMELIFE
HIGHER STANDARDS
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
• Family Portraits
• Children Portraits
• Business Portraits
• Passport & Citizenship Photos
• Classic Weddings
• Arangetram
• Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

# ஆடற்கலையும் ஆத்ம தேடலும் சில சிந்தனைகள்

- கவிதா லட்சுமி

பெண்களுடன் மாயக்கண்ணன் செய்யும் சில்மிஷங்களையும், சிருங்கார லீலைகளையும் பெருமையோடு ஏற்றுக்கொள்ளும் சமூகம், சூர்ப்பனகைகளின் மூக்குகளை மட்டும் அறுத்து அனுப்பிக்கொண்டு இருப்பதைப்பற்றி பெரும்பான்மையினர் கவலை கொள்வதில்லை. எனக்குள் அது எப்போதும் ஒரு கோபத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது.

சூர்பனகையைப் போலவே பிற இதிகாசப் பாத்திரங்களும் என்

> **மாயக்கண்ணன் செய்யும்**
> **சில்மிஷங்களையும்**
> **சிருங்கார லீலைகளையும்**
> **பெருமையோடு**
> **ஏற்றுக்கொள்ளும் சமூகம்,**
> **சூர்ப்பனகைகளின்**
> **மூக்குகளை மட்டும்**
> **அறுத்து**
> **அனுப்பிக்கொண்டு**
> **இருப்பதைப்பற்றி**
> **பெரும்பான்மையினர்**
> **கவலை கொள்வதில்லை.**

னுள் பலவித உணர்வுகளை, கேள்விகளை எழுப்புவதுண்டு. இதில் ராமன், இரவணன், தர்மன், சீதை, திரௌபதி போன்ற பெயர்களின் பட்டியல் வெகு நீளமானது. எனக்குள் இவைகள் தொடர்பான கேள்விகளும் அதிகமானவை.

சுதந்திரமான மனத்திலிருந்து சிருஷ்டிக்கப்படும் கலையே எழுச்சியும் வளர்ச்சியும் உயர்வும் பெறமுடியும்.

ஆனால் படித்தவை மட்டும்தான் இங்கு கடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றதா?

புரியாத வடிவையும் அல்லது மொழியையும் வழக்காக்கிக் கொண்டதனால், அதன்பொருட்டு கை வைப்பதில் அச்சமா?

உண்மையிலேயே இது நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஒரு மொழியின், வழக்கின் கலைதானா?

**நாட்டியக் கலையில் புனிதம்:**

நடனம் என்பது பிற கலைகளையும் போல ஒரு கலையே.

ஒரு ஓவியத்தை விடவோ, ஒரு சிற்பத்தை விடவோ அல்லது ஒரு கைவினைக் கலையை விடவோ நாட்டியம் மிக உயர்வென்ற எண்ணம் எங்கிருந்து எழுகிறது?

புனிதம் போர்த்தி கடத்தப்படும் எதுவும் எழுச்சியற்று அதனதன் உறக்க நிலையிலேயே இருக்கின்றன. இந்தப் போக்கினை சமூக வாழ்வின் பல அடுக்குகளிலும் நாம் காண்கின்றோம்.

உயிரினங்கள் யாவும் இயற்கையானவை என்பதைக் கடந்து எப்படி மனித குலத்திற் பெண்ணிற்கு மட்டும், அவள் உடலிற்கு, தாய்மைக்கு என முடி சூட்டி புனிதத் தன்மை கொடுத்து வைத்திருக்கிறதோ, அதே போலதான் நாட்டியக்கலைக்கும் புனிதத் தன்மை போர்த்திவிடப்படுகிறது.

பார்வைக்கு இவை மிக அற்புதமான விடயம் போல தோன்றினாலும், உணர்ச்சிவயப்படாமல் சிந்தித்துப் பார்த்தோமானால் இவைகளுக்குப் பின்னால் இருக்கக் கூடிய போலித் தன்மைகளையும், அரசியலையும் எளிதாக இனங்காண முடியும்.

நாட்டியத்தினை, பக்தி மார்க்கத்தினூடாகப் பெறும் அழகியற் கலையாகவும், ஆடை, அலங்காரக் காட்சி வடிவமாகவும் எடுத்துச் செல்வதே புனிதம், போற்றுதலுக்குரியது என்பதும் மேற்கூறியது போலவே போலித்தன்மையுடையது. அதிகார வர்க்கத்தின் அரசியலும் அதன் தொடர்ச்சியும் எனலாம். அல்லது கற்பிக்கப்பட்டதையே ஒப்புவிக்கும் தன்மையை தனது சொந்த ஆத்ம தேடலாக வரித்துக்கொண்ட, எண்ணிக்கொண்ட கலைஞர்களின் போக்காகவும் இருக்கலாம்.

சரி - தவறு என்ற மனித மனதின் தேடலுக்குள், தமக்குக் கால-



காலமாகப் பழக்கப்பட்டவையே சரி போலவும், வேறு விடயங்கள் பிழைபோலவும் தோன்றும் தோற்றப்பாடுண்டு.

### இன்றைய நாட்டியத்திற்கான சமூகக் கட்டமைப்புகளும் ஆடுபொருளும்:

- கணவனுக்காக காத்திருப்பதும், அவன் வராமல்ப் போவதினால் சோர்வடைவதும், பரத்தையிடம் சென்ற கணவனை நோக்கி கேள்வி எழுப்புவதும், சண்டையிடுவதும், பிற்பாடு ஏற்றுக் கொள்வதும் என எட்டு வித நாயகிகள் - தலைவிகள் குறித்த கோட்பாடுகள் கற்பிக்கப்படுகிறது. பரத்தையிடம் சென்ற கணவனையோ, தன்னை மறந்த காதலனையோ எப்பாற்பட்டேனும் ஏற்றுக் கொண்டு போகும் பெண்நிலையே இதிற் கட்டமைக்கப் பட்டிருக்கிறது.
- கடவுளர்களைப் போற்றலும், அருளும் - மோட்சமும் வேண்டி இரத்தலும் கலையின் நோக்கமெனக் உருவகிக்கப்படுகிறது.
- பல தருணங்களில் பெண்களோடான கண்ணனின் சேட்டைகளோடு நாட்டியம் தனது அழகியலையும் உச்சத்தையும் கண்டுவிடுகிறது.
- நடன நாடகங்களும், பெரும்பான்மைப் புராண இதிகாசங்களுக்குள் மட்டுமாய்ப் பயணித்துக் கொண்டிருக்கின்றன.
- ஆடற் பெண்ணின் 'பாத்திர லக்சனம்' என்ற பெயரில், ஒரு ஆடற் பெண்ணின் உடலமைப்புகளும், தோற்றப்பாடும் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் திறமைகள் சிந்தனைகள் பின்னுக்குப் புறந்தள்ளப்பட்டு உடற்கூறுகளே முன்னிலைப் படுத்தப்படுகிறது.
- வர்ண பாகுபாட்டின் அடிப்படையில் 'மன்னர் முதல் மூன்று குலத்துதித்தவள்' (சூத்திரர் அல்லாத) மட்டுமே ஆடமுடியும் என்ற அறிமுறைகள் இன்றும் சொல்லப்பட்டு, தேர்வுகளுக்கான கேள்விகளாகவும் கேட்கப்படுகின்றன.
- பிரம்மன் ஐந்தாவது வேதமாக நாட்டிய சாஸ்திரத்தை இயம்ப, பரதர் எழுத, சிவன் ஆட என இக்கலை படைக்கப்பட்டதாகவே இன்றும் நம்பவைக்கப்படுகிறது.
- நாட்டிய சாஸ்த்திர நூலின் வழியேதான் நாட்டியம் உருவாகியது என்ற மாயத்தோற்றம் உருவாக்கப்படுகிறது.

### நாட்டிய சாஸ்திரம் - சில குறிப்புகள்:

தென்பகுதி மக்கள் மத்தியில் நாட்டியமானது இலக்கண மரபு சார்ந்த கலையாக வளர்ந்திருந்தமை பற்றிய குறிப்புகள் பரத முனிவரின் பெயரைத் தாங்கிய நாட்டிய சாஸ்திரத்தின் சூத்திரங்களில் உள்ளன. எனவே நாட்டிய சாஸ்திர இலக்கண வரையறைகளுக்கு முற்பட்ட காலத்திலேயே தென்பகுதி மக்கள் மத்தியில் நாட்டியக்கலை இலக்கண மரபு, கட்டமைப்புகளைக் கொண்ட கலையாக இருந்திருக்கின்றது எனும் முடிவிற்கு வரமுடியும்.

***தக்ஷிணாத்யாஸ் தாவத்***
***பஹு நிருத்தகீத வாத்யா கைசிகீ பிராயா***
***சதுர மதுர லலித அங்காபி நயாஸ்ச***

- நாட்டிய சாஸ்திரம்

இதில் தக்ஷிணாத்யாஸ் என்று பரதர் குறிப்பிடுவது தென்னவர்களை. தெற்குத்தேச மக்களின் கைசீகி அபிநயத்தைப் பற்றி பரத முனிவர் எடுத்துரைக்கின்றார்.

***கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்***
***ஆற்றிடை காட்சி உறழத் தோன்றி***

- தொல்காப்பியம்



பரத சாஸ்திரமும் தொல்காப்பியமும் ஏறத்தாழ ஒரே காலமாக இருக்கமுடியும் என்பது ஆய்வாளர்கள் கூற்று.

அப்படியானால் பரத சாஸ்திரத்திற்கு முன்பே தென்பகுதியில் நடனம் வளர்ச்சி பெற்ற கலையாக இருந்திருக்கின்றதல்லவா? இதனால், ஒரு குறிப்பிட்ட மொழியில் எழுதப்பட்டதே நாட்டியம் என்று நாம் ஐயமுறத் தேவையில்லை அல்லவா?

தொல்காப்பியக் காலத்திலோ, அதற்கு முன்போ பல தமிழ் நடனக்கலை நூல்கள் இருந்ததற்குரிய சான்றுகளும் பல உள்ளன. அவை இப்போது நம்மிடம் இல்லை. ஆனாலும் கிடைக்கப்பெற்ற நூல்களில் தமிழர்களின் சிந்தனை மரபுகளும் நாட்டியக் குறிப்புகளும் பல இன்றும் கையிருக்கின்றன. அதன் மூலம் தமிழ்ச் சிந்தனை மரபின் தொடர்சியை காண முடிகிறது. நாம் அதை தேட முயல்வதில்லை என்பதே உண்மை.

நூல்கள் பலவற்றைக் கடல் கொண்டுவிட்டது என்பது பொதுக் கருத்தாகும்.

ஒரு நூல்கூட கிடைக்காமற் போக, அனைத்து நூல்களும் கடலோரங்களில் மட்டுமாகவா இருந்தன? என்ற கேள்வி எழும்போதெல்லாம் சில விடயங்களைக் கேட்கத் தோன்றுகிறது.

'ஒரு சமூகம் அழிவதற்கு அவர்களின் வாசிப்புத் தன்மையை நிறுத்தச் செய்தால் போதும்' என்று ஒரு கூற்றுண்டு. ஏதோ ஒரு காலத்தில் நமது சமூகம் நம் தமிழ் நூல்களை தேடாமல் விட்டதன் விளைவு தான் நாம் இழந்துவிட்டவைக்கான காரணியாகக்கூட இருக்கமுடியும்.

'தொடர்ந்தும் தேடலற்றுப் போவோமாயின்...' என்ற கேள்வி மேலும் அச்சமூட்டுகிறது.

**மனத்தின் தேடல் - வெளிப்பாடு - பேசுபொருள்:**

நாட்டியக்கலையே உடல் அசைவுகளாலான தொன்மை வாய்ந்ததொரு மொழி வடிவம்.

நாட்டிய மொழியினூடு முன்னெடுக்கப்படும் கலை வடிவமும் அதன் பேசுபொருளும் இரண்டு வேறுபட்ட விடயங்கள்.

கலை வடிவம் என்பது கட்டுமானம்.
பேசு பொருள் என்பது மனித மனத்தின் தேடல் வெளிப்பாடு.

ஒரு கலை வடித்தினூடாக நாம் கொண்டுவரும் பேசு பொருள் எப்போதும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. காலத்துக்குக் காலம் மனத்திற்கு மனம் வெவ்வேறு வகையில் அவை வெளிப்படலாம்.

ஆடற்கலை பற்றிய ஆத்ம தேடலின் அனைத்து உணர்வுகளையுமே கட்டுமானம் சிதறாமலும், அதன் தத்துவார்த்த சிந்தனைகள் குன்றாமலும், இசைக்கும் பொருளுக்கும் ஏற்ப ஆடலாம் என்ற சுதந்திரம் ஆடற்கலைக்கும் கலைஞர்களுக்கும் எப்போதும் இருக்கின்றது.

இருந்துகொண்டேயிருக்கும்.

பரதக்கலையின் பேசு பொருளை அகலப்படுத்தி, மனித மனத்தின் ஆத்மார்த்தமான எல்லாத் தேடல்களுமே உயர்ந்த தன்மை கொண்டவையெனும் பரிமாணத்திற்கு அதன் பேசுபொருளை எடுத்துச் செல்லவும் முடியும்.

*பிரபஞ்சம் யாவுமே கூத்தென்றால்*
*உலகின் யாவையும் நடம் செய்வோம்!*

*பேரம்பலமே சிற்றம்பலம்,*
*சிற்றம்பலமே பேரம்பலம்!*



kavitha-laxmi@thaiveedu.com

# இசைத் தமிழ்ப் பாடற்பரப்பும் சமகாலப் பயன்பாட்டு நிலையும் 13

- கௌசல்யா சுப்பிரமணியன்

இசைத் தமிழ் பாடற்பரப்பினையும் அவற்றின் பயன்பாட்டு நிலைகளையும் ஆராயும் இத்தொடரில் தமிழிசை மூவரின் காலகட்டத்திற்குப் பின்னரான வரலாற்றுப் போக்கே இங்கு நோக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் ஊத்துக்காடு வேங்கடசுப்பையர் முதல் மழவராயநேந்தல் சிதம்பர பாரதியார் வரையான இசைக்கலைஞர்களின் ஆளுமை அம்சங்கள் மற்றும் அவர்களின் பாடற்பரப்புகள் ஆகியன கடந்த மூன்று கட்டுரைகளில் நோக்கப்பட்டன. அடுத்து, வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராம அய்யர், கோவிந்த சிவன் சபாபதி சிவன், ஆனை, ஐயா சகோதரர்கள், குன்றக்குடி கிருஷ்ணய்யர், கரூர் தட்சணாமூர்த்தி சாஸ்திரி - கரூர் வெங்கடசுப்பையர், தஞ்சாவூர் ஏ.எம். சின்னசாமி முதலியார், நீலகண்ட சிவன், தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், அச்சுததாசர், அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர், வித்துவான் இலட்சுமணப் பிள்ளை, தஞ்சை பொன்னையாப் பிள்ளை ஆகியோரினது இசையாளுமைகள் மற்றும் பாடற்பரப்புகள் ஆகியன இக்கட்டுரையில் நோக்கப்படவுள்ளன.

### வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராம அய்யர்:

தஞ்சை மாவட்டத்திலுள்ள வைத்தீஸ்வரன் கோயிலில் 1810ம் ஆண்டில் பிறந்த இவர் இளமையிலேயே தமிழையும் இசையையும் கற்றுத் தேர்ந்தார். இதன் மூலம் நாட்டியத்திற்குரிய சிறந்த சிருங்கார ரசம் கொண்ட 'பதங்களை' அமைக்கும் திறன் பெற்றிருந்தார். இவற்றில் 'நாயகா-நாயகி-சகி' பாவங்கள் நன்கு அமைந்திருக்கும். (இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் தோழியைச் சகியாகவும் கொண்டு பாடல் இயற்றும் நிலை) 'முத்துக்குமாரா', 'சுப்பராமா' என்பன இவரது முத்திரைகளாகும். பாட்டின் பொருளுக்கேற்ற வகையில் இராகங்களைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். சில அபூர்வ இராகங்களையும் கையாண்டுள்ளார். சாவேரி, காம்போதி, கல்யாணி, தோடி, தன்யாசி, சுருட்டி, அடாணா போன்ற ராகங்களிலும் அபூர்வராகங்களான கண்டா, சைந்தவி, கௌளிபந்து போன்றவைகளிலும் இவர் பல பதங்களை இயற்றியுள்ளார். 'முத்துக் குமாரசாமி பேரில் பதம்' என்னும் இவரது பதங்கள் அடங்கிய நூலினை பு.எ. பார்த்தசாரதி பிள்ளையவர்கள் 1910ல் வெளியிட்டுள்ளார்கள்.

### கோவிந்த சிவன் மற்றும் சபாபதி சிவன்:

இவர்கள் இருவரும் பல்லவி கோபாலய்யரின்(1782-1816) வாரிசுகளாவார்கள். இவர்கள் தந்தையிடமும் பின்னர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளிடமும் இசையினைக் கற்றுச் சிறப்புடன் திகழ்ந்தவர்கள். மூத்தவரான கோவிந்த சிவன் தமிழில் சிவபிரான் மீது பல கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இவர்களில் இளையவரான சபாபதி சிவனின் மகனான சாம்பசிவ ஐயர் அவர்கள் 1872-1948 காலகட்டங்களில் வாழ்ந்தவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைக்கல்லூரி முதல்வராகத் திகழ்ந்தவராவார். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கோவிந்தசிவன் அவர்களின் தமிழ்க் கீர்த்தனைகளைப் பதிப்பித்து நூலாக வெளியிட்டுள்ளது.

### ஆனை, ஐயா சகோதரர்கள்:

ஆனை மற்றும் ஐயா என்னும் பெயருடைய இரு சகோதரர்களும் தஞ்சையிலுள்ள வையச்சேரி என்ற கிராமத்தில் வெங்கடசுப்பையரின் மகனாகப் பிறந்தவர்களாவர். இவர்கள் தந்தையாரிடம் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளையும் அவை சார் இலக்கியங்களையும் கற்றதோடு இசையையும் இளமையிலேயே கற்றுத் தேர்ச்சி பெற்றனர். அக்காலத்தில் இசையாளர்




களின் திறமையைப் பறைசாற்றும் வெளிப்பாட்டுத் திறன்களாகக் கணிக்கப்பட்டு வந்தவையான, 'இராகம்', 'தானம்', 'பல்லவி,' 'நிரவல்', 'ஸ்வரம்' என்பவற்றில் 'பல்லவி,' 'நிரவல்' என்பவற்றைப் பாடுவதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களாகவும் பல இடங்களுக்கும் சென்று புகழீட்டி வந்தவர்கள். இருவரும் இரட்டையர்களாகவே பாடிச் சிறப்புச் சேர்த்து வந்ததால் இவர்களின் காலத்திற்குப் பின்னர் இவர்களிருவரையும் 'ஆனையா' என ஒருவராகக் கருதும் நிலையும் ஏற்பட்டது.

திருவையாற்றில் இவர்கள் பாடிய 'வராளி' இராகம் இவரது காலத்தில் வாழ்ந்த ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளினதும் அவர் மாண வர்களினதும் கவனத்தைப் பெற்றமையானது இவர்களுக்குக் கிடைத்ததொரு அங்கீகாரமாகும். மேலும் அக்காலத்தில் தஞ் சையை ஆண்ட சரபோஜி மன்னன்(1792-1832) சமஸ்தானத்தில் இவர்கள் ஆஸ்த்தானக் கலைஞர்களாகவும் சிறப்புப் பெற்றிருந் தார்கள்.

இவர்கள் தமிழிலும் தெலுங்கிலும் பெருந்தொகையான கீர்த்தனை களை இயற்றிச் சிறப்பித்துள்ளார்கள். இவற்றில் 26 தமிழ்க் கீர்த் தனைகளும் 12 தெலுங்குக் கீர்த்தனைகளும் இன்றும் பாடப்பட்டு வருகின்றன. இக்கீர்த்தனைகள் இவர்கள் பிறந்த ஊரான தஞ்சை யிலுள்ள வையச்சேரி இறைவன்-இறைவியரான அகத்தீசர்-மங்கல-நாயகி ஆகியோர் மீதும் திருவையாறு இறைவன்- இறைவியரான ஐயாறப்பன்-தர்மசம்வர்த்தினி ஆகியோர் மீதும் பாடப்பட்டவைக-ளாகும். 'உமாதாச' என்பதே இவர்களுடைய 'முத்திரை'யாகும். முன்னைய கட்டுரையில் சுட்டப்பட்ட இரட்டையர்களாக இசையுல கில் செயல்பட்ட இராமசாமி சிவனும் மகா வைத்தியநாதையரும் இவர்களுடைய மாணவர்களாவர். இவர்கள் அனைவருமே ஒரே ஊரில் பிறந்ததோடு 'பல்லவி' பாடுவதிலும் திறமையுடன் திகழ்ந்த இசையாளர்களுமாவார்கள்.

## குன்றக்குடி கிருஷ்ணய்யர்

இவர் 1816ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் குன்றக்குடிக் கிராமத்தில் பிறந்தார். இளமையிலேயே இசையில் தேர்ச்சிபெற்ற இவர் பல்லவி பாடுவதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார். இராம-நாதபுரம் சமஸ்தானத்தில் முத்துராமலிங்க சேதுபதி, பாஸ்கர சேதுபதி ஆகியோரால் கௌரவிக்கப்பட்டதோடு அவ்விடத்தில் பல ஆண்டுகள் ஆஸ்தான வித்துவானாகவும் விளங்கியவர். சமஸ்தானத்திற்கு வரும் வித்வான்களிடத்தில் தாம் இயற்றிய 'பல் லவி'யைத் திரும்பப் பாடச்சொல்லி மடக்குவது இவரது பொழுது போக்காக அமைந்திருந்தது. பல பக்கவாத்தியக்காரர்களையும் மகா வைத்தியநாதையரையும் கூட இவர் தமது மேதாவித்தனத் தால் இவ்வாறு கேள்வி கேட்டு சிரமத்துக்குள்ளாக்கினாரென அறி கிறோம்.

'இராகமாலிகை'யாகப் 'பல்லவி' பாடுவதில் தேர்ந்த இவரின் பல் லவியொன்று இன்றும் பலராலும் பாடப்படும் சிறப்புப் பெற்றதா கும். அப்பல்லவி, 'சங்கராபரணனை அழைத்தோடி வாடி கல் யாணி தர்பாருக்கு' என்பதாகும். இது ஓர் ஆவர்த்தன தாளத்தில் அமைந்ததாகும். சங்கராபரணம், தோடி, கல்யாணி, தர்பார் ஆகிய நான்கு இராகங்களில் நுட்பமான முறையில் பாடப்படும் சிறப்புப் பெற்றதாகும். இவர் 'இரட்டைப்பல்லவி' பாடுவதிலும் சிறப்புப் பெற்றிருந்தார். இவரது உருப்படிகள் பெரும்பாலும் சிறப்புடைய 'சிட்டைஸ்வரங்க'ளைக் கொண்டவையாகும். தம்மை ஆதரித்த இராமலிங்க சேதுபதியை இவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

இவர் 'ஸ்வநாம' முத்திரையுடன் அதாவது தனது பெயரையே 'முத்திரை'யாகக் கொண்டு கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். சாகித்யங்கள் - பாடலின் சொற்கள் - அமைக்கும் பொழுது பொருள் பொருத்தமுற ஸ்வரங்களையும் சேர்த்துப் பாடும் திறமை கொண்டவர். இதனை 'ஸ்வராட்சரம்' நிறைந்ததாக பாடும் திறன் என்பர். இவ்வாறான பல சிறப்புகளைக் கருத்திற் கொண்டு இவ ருக்கு பல விருதுகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டன. அவற் றில் 'தானவர்ண சிரேஷ்டர்', 'வித்யாகம்பீரர்', 'தில்லானா பாராங் கதர்', 'கனநய தேசிய சாம்ராட்' போன்றவை முக்கியமானவைக-ளாகும்.

1889ம் ஆண்டு குன்றக்குடி சமஸ்தானத்தில் நடைபெற்றதொரு பட்டாபிஷேக வைபவத்தில் இவருடன் பட்டணம் சுப்ரமண்ய ஐயர், மகா வைத்தியநாதய்யர் ஆகிய மூன்று சிறந்த வித்வான்க ளும் கலந்து கொண்டு தனித்தனியாகச் சிறப்பானதொரு இசை நிகழ்ச்சியைப் போட்டிபோட்டுக்கொண்டு நிகழ்த்தி மக்களை மகிழ் வித்தனர். இவர் 73 வயதில் 1889ம் ஆண்டில் காலமானார். இவர் காலத்திற்குப் பின் இவர் மகன் கோபால பாகவதரும் மாணவர் கள் தாசரதி ஐயர், ராதாகிருஷ்ணய்யர் போன்றவர்களும் இசையு லகில் புகழ்பெற்று விளங்கியுள்ளனர்.

## கரூர் தட்சணாமூர்த்தி சாஸ்திரி, கரூர் வெங்கடசுப்பையர் (தேவுடையா):

இவர்கள் ஏறத்தாள ஒரே காலத்தில் வாழ்ந்த ஒன்றுவிட்ட சகோ தரர்கள். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாழ்ந்த இவர்கள் இரட் டையர்களாகவே இசைப்பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர். கரூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணியாற்றி யவர் வெங்கடசுப்பையர். எனவே இவர் தமிழ்ச் சாகித்தியங்களை இயற்றுவதில் சிறப்புப் பெற்றிருந்தார். இச்சாகித்தியங்களுக்கு மற்றொரு சகோதரரான தட்சணாமூர்த்தியவர்களே இசையமைப் பவராகத் திகழ்ந்துள்ளார். இவ்வாறு இருவரும் இணைந்து செயல் பட்டதனை இவர்களது வரலாற்றிலிருந்து அறிந்துகொள்கிறோம்.

இவர்கள் தெலுங்கு மொழியிலும் கீர்த்தனைகளையும் வர்ணங்க ளையும் இயற்றியுள்ளனர். இருவரும் 'கர்ப்பபுரி' என்னும் முத்தி ரையையே தமது கீர்த்தனைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். 'இராகமாலிகை' களையும் சிறப்புடன் இயற்றியுள்ளனர். இவர்க ளது கீர்த்தனைகள் 'கர்ப்பபுரியார் கீர்த்தனை', 'கர்ப்பபுரி வாசர் கீர்த்தனை' என்ற பெயர்களில் அழைக்கப்படுவன. இவற்றில் சில கீர்த்தனைகள் பசுபதீஸ்வரர்-சௌந்தர்யநாயகியின் புகழ்பாடுவ-னவாகவும் அமைந்துள்ளன. இனிமையான வர்ண மெட்டுக்களி லமைந்த இக்கீர்த்தனைகள் யாவும் ஸ்வரதாளக் குறிப்புகளுடன் வெளியிடப்படல் வேண்டும்.

## தஞ்சாவூர் ஏ.எம். சின்னசாமி முதலியார்:

கிறிஸ்தவ மதத்தவரான இவர் கர்நாடக இசைமீது கொண்ட ஈடு பாட்டால் தமது பொருள் அனைத்தையும் இசைப்பணிக்காகச் செலவிட்டவர். 1812ல் பிறந்த சின்னசாமி முதலியார் சுப்பராம தீட் சிதரைக் குருவாக மனதிற் கொண்டு கர்நாடக இசையைக் கற்ற தோடு ஐரோப்பிய இசையையும் கற்றவர். இதன் மூலம் இரு மொழிகளுக்கிடையே இசைப்பரிவர்த்தனை செய்வதில் ஈடுபாடு கொண்டவராகவும் செயற்பட்டவர். இம்முயற்சியின் பயனாக 'ஐரோப்பிய இசைக்குறியீட்டில் கீழை நாட்டிசை' - 'Oriental Music in European Notation' என்னும் நூலை எழுதி 1893ம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூலானது இதழொன்றில் கட்டுரையாக முதற் கண் எழுதப்பட்டு பின்னர் நூலுருவில் வெளிக்கொணரப்பட்ட தாகும்.


இந்நூலில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளினதும் ஏனைய அக்கால இசை மேதைகளினுடையவையுமான 800 கீர்த்தனைகள் ஐரோப் பிய இசைக்குறியீட்டு முறைகளுடன் இடம்பெற்றுள்ளன. இதில் அவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு ஆகிய மொழிகளில் சாகித்தி யங்களைக் கொடுத்துள்ளார். இதற்காக அவர் தியாகையரின் நேரடிச் சிஷ்யரான வாலாஜாபேட்டை கிருஷ்ணசாமி பாகவதர் போன்றோரிடத்திலும் வேறு பலரிடத்திலும் உதவிகள் பல பெற் றுச் செயற்பட்டுள்ளார்.

இதன் பின்னர் 1899ம் ஆண்டு எட்டயபுரம் சென்று அரசரிடம் தமது இசைப்பணிகள் பற்றிக்கூறி அவரிடமும் உதவிகள் பெற் றார். இதன் விளைவாக முத்துஸ்வாமி தீட்சிதர் பரம்பரையினரிடம் உள்ள அனைத்து இசை உருப்படிகளையும் தாம் குருவாக மதிக்கும் சுப்பராம தீட்சிதரைக்கொண்டு ஸ்வரதாளக் குறிப்புகளு டன் வெளியிட வைத்தார். அந்நூல் பூர்த்தியடைய முன் 1900ல் 88 வயதில் முதலியார் காலமாகி விட்டார். எனினும் இவர் கொடுத் திருந்த ஊக்கத்தால் 1904ல் (நான்கு ஆண்டுகளில்) 'சங்கீத சம்பிரதாய பிரதர்சினி' என்னும் நூலை சுப்பராம தீட்சிதர் வெளி யிட்டார்.

## நீலகண்டசிவன்:

இவர் கேரள மாநிலத்திலுள்ள திருவாங்கூர் சமஸ்தானத்தின்

தலைநகரான திருவனந்தபுரத்தில் (பத்மனாபபுரம்) 1839ல் பிறந்தார். இவரது பூர்வீகமானது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாகர் கோவில் அருகிலுள்ள வடிவீச்வரம் ஆகும். இவரது இயற்பெயர் சுப்பிரமண்யம் ஆகும். பத்மநாபபுரத்தில் குடிகொண்டிருக்கும் இறைவன் நீலகண்டேஸ்வரர், இறைவி ஆனந்தவல்லி ஆகியோர் மீது கொண்டுள்ள பக்தியின் மிகுதியால் நீலகண்டசிவன்



என்னும் பெயரை பிற்காலத்தில் வைத்துக்கொண்டார். சிறு வயது முதல் இசையில் தேர்ச்சி பெற்றதோடு பல கீர்த்தனைகளை இயற்றும் திறனையும் பெற்றிருந்தார். சிவன் மீதும் ஏனைய தெய்வங்கள் மீதும் 2000க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார்.

இவர் 'சிறுதொண்டர் புராணம்', 'லலிதபுராணம்', 'திருநீலகண்டர் புராணம்', 'பிச்சாடணர் புராணம்', 'மாணிக்கவாசகர் புராணம்', 'மண்சுமந்த புராணம்', 'விறகுவிற்ற புராணம்', 'சிவராத்திரி மகாத்மியம்', 'சோமவார மகாத்மியம்', 'பிரதோச மகாத்மியம்' போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 'பஞ்சரத்தினக் கிருதி'களைப் போன்று இவர் தமிழில் 'பஞ்ச நடனக் கீர்த்தனை'களை இயற்றியுள்ளார். பல கோயில்களுக்குத் தலயாத்திரை மேற்கொண்டதோடு அக்கோயில்கள் சார்ந்து கீர்த்தனைகளையும் இயற்றியுள்ளார். இவரால் இயற்றப்பட்ட இராகமாலிகைகளும் மத்திமகால சாகித்தியங்களுடனான கீர்த்தனைகளும் பக்திரசத்துடன் திகழ்வன. இவர் 1900ம் ஆண்டு காலமானார். இவரது கீர்த்தனைகள் அடங்கிய 'நீலகண்டபோதம்' என்னும் நூலானது 1905ல் வெளியானதாகும்.

## தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர்:


தஞ்சையில் 1847ல் பிறந்த இவர் இளமையிலேயே இசைகல்வியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அக்காலத்தில் பயிற்சியிலிருந்த வடமொழி, தமிழ், தெலுங்கு, மராத்தி, இந்துஸ்தானி(ஹிந்தி) ஆகிய மொழிகளில் நன்கு புலமைபெற்றதுடன் தமது இசைக் கல்வியையும் மேலும் தொடர்ந்தார். இதன் பயனாக வயலின், சுவரபத்(Swarabath), மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளைக் கையாளும் திறனையும் பெற்றார். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனைகளைக் கற்கவிரும்பிய இவர் தில்லைஸ்தானம் ராமஐயங்காரிடம் சென்று முறையாக அவற்றைக் கற்றுத்தேர்ச்சி பெற்றார். அக்காலத்தில் தஞ்சாவூரில் சிறப்புற நடைபெற்று வந்த ஹரிகதா கலாட்சேபங்களில் நாட்டங்கொண்டு அவற்றிலும் தேர்ச்சி பெற்றார். தனது இசை நிகழ்ச்சிகளில் தெற்கத்திய இசை முறையினையும் வடக்கத்திய இசைமுறையினையும் பின்பற்றினார்.

இவர் நாட்டியத்திலும் தேர்ச்சி பெற்றிருந்தார். எனவே புராண இதிகாசக் கதைகளை கீர்த்தனைகளாலும் தேவையான இடங்களில் சலங்கை கட்டி நடனமாடியும் சுவைபடக் கூறுவார். கடினமான ஜதிகளையும் இடையிடையே சேர்த்து சிறப்புடன் நிகழ்வினை நடத்துவார். சிலசமயங்களில் இவருடன் தஞ்சாவூர் பஞ்சாபகேச பாகவதர், மருதப்பா ஆகியோரும் உடன் சேர்ந்து பாடி நிகழ்வினைச் சிறப்பாக்குவர். இவ்வாறான நிகழ்வுகளால் பல பாராட்டுதல்களையும் இவர் பெற்றுள்ளார்.

மன்னார்குடி என்ற ஊரில் 'வால்மீகி ராமாயண'ம் தொடர் சொற்பொழிவு நிகழ்த்த வந்த பருத்தியூர் சாஸ்த்திரிகள் இவரது 'சீதாகல்யாண' நிகழ்வினைப் பார்வையிட்டுப் பாராட்டினார். புதுக்கோட்டை ராமச்சந்திர மகாராஜா இவரது சிறப்பினையறிந்து பல சன்மானங்களை பாகவதருக்கு வழங்கி கௌரவித்தார். மேலும் இவர் கோபாலகிருஷ்ண பாரதியாரின் 'நந்தனார் சரித்திர'த்தை சிறப்புற நிகழ்த்தியதைக் கண்ட மாயூரம் ச. வேதநாயகம் பிள்ளையவர்கள் தமது குருவான கோபாலகிருஷ்ண பாரதியாரை அக்கதாகாலட்சேப நிகழ்வினைக் காண அழைத்து வந்து கேட்கச் செய்தார். தாம் எழுதிய நந்தனார் சரித்திரம் பாகவதரால் மேலும் சிறப்புறுவதைக் கண்ணுற்ற கோபாலகிருஷ்ண பாரதியார் அவரது பணிசிறக்க ஆசிர்வதித்தார். இவர் 56ஆவது வயதில் 1903ல் காலமானார்.

## அச்சுததாசர்:

1850ல் பிறந்த அச்சுததாசர் வடஆற்காடு மாவட்ட போளூர் (போரூர்) கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் இசைக்கல்வியையும் மொழிக் கல்வியையும்(தமிழ், தெலுங்கு, வடமொழி) சிறுவயதிலிருந்தே கற்றுத் தேர்ந்தவர். பின் தமிழாசிரியராக அவ்வூரில் பணியாற்றத் தொடங்கினார். வைணவ மதத்தில் ஈடுபாடு கொண்டிருந்த இவர் வாரந்தோறும் ஸ்ரீ ராமபஜனைகள் நிகழ்த்தி வந்தார். இதன் பயனாக 'பிரகலாதசரித்திரம்', 'துருவ சரித்திரம்', 'சக்குபாய் சரித்திரம்' எனப் பல இசை நூல்களை எழுதினார். இக்காலகட்டத்தில் இவருக்கு வேலூர் வெங்கடகிருஷ்ணதாசர் என்பவருடன்



தொடர்பு ஏற்படுகிறது. அவரைக் குருவாகக் கொண்டு அவரது வழிகாட்டலில் தமது செயற்பாடுகளை - முக்கியமாக இசைச் செயற்பாடுகளைத் தொடர்ந்தார். வேதாந்தக் கருத்துகளை உள்ளடக்கமாகக் கொண்டு பல கீர்த்தனைகள் இவரால் இயற்றப்பட்டன. 'அப்பைய நாயுடு' என்பதே இவரது இயற்பெயராகும். இவருக்கு 'அச்சுததாசர்' எனப் பெயர் சூட்டியவர் வெங்கடகிருஷ்ண தாசரேயாவார். பின்னர் இதனையே இவர் தமது முத்திரையாகவும் கொண்டு கீர்த்தனைகள் இயற்றி வரலாயினார். இவர் பல தமிழ்க் கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். அவை பலராலும் அக்காலத்தில் பாடப்பட்டு வந்தன. 1902ல் தமது 52ம் வயதில் காலமானார். 1956ல் இவரது தமிழ்க் கீர்த்தனைகள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டதாக அறிகின்றோம்.

## அரிகேசநல்லூர் முத்தையா பாகவதர்:

இவர் அரிகேசநல்லூரில் 1877ல் லிங்கம் ஐயர்-ஆனந்தம் அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இளமையிலேயே மாமனார் லட்மணசூரியிடம் ஆரம்ப இசைக்கல்வியையும் வேதக் கல்வியையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார். திருவையாற்றில் இருக்கும் பொழுது பட்டணம் சுப்பிரமணிய ஐயர், மகா வைத்தியநாத ஐயர்

ஆகியோரின் இசைநிகழ்ச்சிகளைக் கேட்டு தமது இசையறிவை வளர்த்துக்கொண்டார். சாம்பசிவ ஐயரிடம் தொடர்ந்து இசைக் கல்வியையும் வயலினையும் கற்ற இவர் 1897ல் சிறந்த பாடகராக விளங்கினார்.



திருவாங்கூர் மகாராஜாவின் சமஸ்தானத்தில் பாடிப் பல பரிசுகள் பெற்றவர். ஹரிகதை - கதாகாலட்சேபம் நிகழ்ச்சிகள் நிகழ்த்துவதிலும் சிறப்புப் பெற்றிருந்தார். இதிகாச-புராணங்கள், வேத-சாஸ்த்திர-தத்துவங்கள் அனைத்தையும் அறிந்து அவற்றைத் தனது இனிய குரல் வளத்துடன் எடுத்துக்கூறும் ஆற்றலும் இவருக்கு இருந்ததால் முதல்தர ஹரிகதை மேதையாக அக்காலத்தில் இவர் திகழ்ந்தார். தேவையேற்படுமிடங்களில் இவர், நடனமாடியும் ஹரிகதை கூறுவார். இவரது 'தியாகராஜ சரித்திரம்', 'சதி சுலோசனா', 'வள்ளி பரினயம்(திருக்கல்யாணம்)' என்பன புகழ்பெற்ற நிகழ்வுகளாகும்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதருடன் ஏற்பட்ட தொடர்பால் இசை நிகழ்ச்சிகளை நடத்தும் பொறுப்புகள் பல இவருக்கு ஏற்பட்டன. இசையிலுள்ள சாஸ்த்திரங்கள் - அறிமுறைகள் - பலவற்றை ஆராயும் தேவையும் இதனால் ஏற்பட்டன. இதன் மூலம் தம் அறிவை வளர்த்துக்கொண்ட பாகவதர் அவர்கள் புதிய பாடல்களை இயற்றுந் திறனையும் பெற்றார். 'சண்முகப்பிரியா' இராகத்தில் அமைந்த 'வள்ளிநாயகா' என்பதே இவரது முதல் கீர்த்தனையாகும். இவர் தமிழில் மட்டுமல்லாது தெலுங்கு, வடமொழி, கன்னடம் ஆகிய மொழிகளிலும் 'ஹரிகேச' என்னும் முத்திரையுடன் கீர்த்தனைகள் பலவற்றை இயற்றிச் சிறப்பித்துள்ளார். பல அபூர்வ இராகங்களான ஹம்சானந்தி, மோகனகல்யாணி, கௌதமல்லார், பசுபதிப்ரியா, பூதமனோகரி, வலஜி போன்றவற்றினைக் கையாளும் திறன் படைத்தவர், இவர்.

1927ல் மைசூர் சென்று அங்குள்ள சமஸ்தானக் கலைஞராக சில காலம் பணிபுரிந்தார். இவரது இசை நிகழ்ச்சிகளின் மூலம் இவராற்றலைக் கண்ட மைசூர் மன்னர் இவருக்கு 'காயகசிகாமணி' என்னும் பட்டமளித்துச் சிறப்புச் செய்தார். பின்னர் 1936ல் திருவாங்கூர் சென்று சுவாதித்திருநாள் கிருதிகளைப் பாடி மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தினார். மைசூரில் சாமுண்டேஸ்வரி பேரில் 108 கீர்த்தனைகளை இவர் இயற்றியுள்ளார். மேலும் அவர் காலத்தில் சிறப்புற்றிருந்த ஏனைய உருப்படிவகைகளான வர்ணங்கள், இராகமாலிகைகள், தருக்கள், தில்லானாக்கள் போன்ற வகைகளிலான உருப்படிகள் பலவற்றையும் இவர் இயற்றியுள்ளார்.

1943ல் திருவாங்கூர் பல்கலைக்கழகத்தில் 'சங்கீத கல்பதருமம்' என்னும் தலைப்பில் இசையியல் ஆய்வொன்றினைச் சமர்ப்பித்ததன் பேறாக இவருக்கு D.Litt என அழைக்கப்படும் (முதுமுனைவர்) பட்டத்தினையும் பெற்றார். திரும்பவும் மைசூர் திரும்பிய இவர் அங்கு பணிசெய்து வருகையில் 1945ல் 68 வயதில் காலமானார்.

## வித்துவான் இலட்சுமணப் பிள்ளை:

தமிழ் அறிஞராகத் திகழ்ந்த திரவியம் பிள்ளை-பலராமவல்லி தம்பதியருக்குப் புதல்வராக திருவனந்தபுரத்தில் 1864ல் இலக்குமணப் பிள்ளையவர்கள் பிறந்தார். இளமையிலேயே தமிழறிவு வாய்க்கப் பெற்றவராகவும் ஆங்கிலம், வடமொழி, மலையாளம் ஆகிய மொழியறிவுடன் கவிதை இயற்றும் திறனும் பெற்றிருந்தார். இசையறிவினை ஆரம்பத்தில் வேலுப்பிள்ளையிடமும் பின்னர் பிச்சு பாகவதரிடமும் கற்றார். அத்துடன் வீணை இசைக்கருவியினை ஐயா பாகவதரிடமும் கற்றார். இவற்றுடன் தமது கல்வியறிவினையும் பெற்ற இவர் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் இளங்கலைப் பட்டதாரியானார். மேலும் தமது இசையறிவினை மேம்படுத்தும் நோக்கில் திருவாங்கூர் அரண்மனை வித்வானாகத் திகழ்ந்த கல்யாணகிருஷ்ண பாகவதரிடம் இசையினையும் வீணையினையும் கற்றார்.

இவருக்கிருந்த இசையமைக்கும் ஆற்றலும் தமிழ்ப் பற்றும் பல பாடல்களை இயற்றுவதற்குரிய ஆற்றலை இவருக்குக் கொடுத்தது. பல வகையான பாடல்களை இவர் இசைத்துப் பாடியுள்ளார். தமது 14ம் வயதில் 'பந்துவராளி' இராகத்தில் பாடிய 'திருச்செந் தில் வேலவனே' என்னும் பாடலே இவரது முதற்பாடலாகும். தெலுங்கு மொழிப்பாடல்களே பிரசித்தமாயிருந்த அக்காலத்தில் தமிழ் மொழியும் இசைப்பாடலுக்கு ஏற்ற மொழி என்பதை பல இடங்களில் கூறியும் நிறுவியும் வந்தவர், இவர். 1891ம் ஆண்டு தொடக்கம்(27ஆம் வயது முதல்) தமது இறுதிக்காலம் வரை வாழ் நாளை இசைவளர்ச்சிக்காகவே தீவிரமாகச் செயற்பட்டு அதனை மேம்படுத்தியவராவார்.

இவர் இசைப்பாடல்களை இயற்றுவதுடன் பல இசை ஆய்வுகளையும் மேற்கொண்டவராகத் திகழ்கிறார். 'தியாகையர் இசையும் திருவாங்கூர் அரண்மனையும்', 'திருவாங்கூர் இசையும் இசைவாணர்களும்' ஆகிய கட்டுரைகள் சில உதாரணங்களாகும். இவரிடமிருந்த ஆங்கிலப்புலமை காரணமாக ஷேக்ஸ்பியரைப் பின்பற்றி 'சத்தியவதி', 'வீரநாடகம்', 'இரவிவர்மன்' ஆகிய மூன்று இசைநாடகங்களை எழுதியுள்ளார். இவரது இசைச் செயற்பாடுகளைக் கருத்திற் கொண்டு 'சங்கீத கலா சிகாமணி', 'இசைக்கவியரசு' ஆகிய பட்டங்கள் கொடுக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் இயற்றிப் பாடிய பாடல்களை 'பக்திப்பாடல்கள்', 'அறநெறிப்பாடல்கள்', 'தத்துவப்பாடல்கள்', 'புகழுரைப்பாடல்கள்' என வகைப்படுத்தலாம். இவரது பக்திப்பாடல்கள், இவர் காலத்திற்குச் சற்று முன்வாழ்ந்த வேதநாயகம் பிள்ளையவர்களின் பாடல்கள் போன்றமைந்தவையாகும். இவரது புகழுரைப்பாடல்கள், அவர் காலத்தில் சமூகத்திற்காக உழைத்த மகாத்மாகாந்தி, அன்னிபெசண்ட் அம்மையார், ராஜாராம் மோகன்ராய், சித்திரைத் திருநாள் மகாராஜா போன்றோரைப் புகழ்ந்து பாடிய பாடல்களாகும். இவர் பல சிறந்த மாணவர்களை உருவாக்கியவருமாவார். பத்மனாப பாகவதர், சுசீந்திரம் சதானு சாஸ்திரி, ஹரிகதை புகழ் திருமதி சரஸ்வதிபாய், திருவாங்கூர் ரங்கநாத ஐயர் போன்ற சிலரைக் குறிப்பிடலாம்.

இவரது 200 பாடல்கள் ஸ்வரதாளக்குறிப்புடன் 1949ல் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. இதனை அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் திரும்பவும் வெளியிட்டுள்ளது. இவர் தமது 86ம் வயதில் 1950ல் காலமானார்.

## தஞ்சை பொன்னையா பிள்ளை:

முன்னைய கட்டுரையில் சுட்டப்பட்ட தஞ்சை நால்வர் வழியில் 4ஆவது பரம்பரையினராக 1888ல் பந்தணைநல்லூரில் பிறந்தவரே தஞ்சை பொன்னையா பிள்ளையவர்கள். தஞ்சை நால்வரில் ஒருவரான பொன்னையாவின் மகள் வயிற்றுப்பேரனே பிரசித்தி பெற்ற நட்டுவனார் சு. பந்தனைநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள். இவர் தஞ்சை நால்வரில் ஒருவரான வடிவேலுவின் மகன் வயிற்றுப் பேத்தியைத் திருமணம் செய்கிறார். இவர்களின் மகனே பொன்னையாப் பிள்ளையின் தந்தையாரான கண்ணுசாமிப் பிள்ளையவர்கள்(1864-1928). பொன்னையாப் பிள்ளையவர்கள் தனது

மாமனார் நாட்டிய கலாநிதி மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடத்தே 15 ஆண்டுகள் குருகுலவாசமாக இசை, நாட்டியம், மிருதங்கம் ஆகிய கலைகளையும் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

பல பரதநாட்டியக் கச்சேரிகளுக்கு மாமனாருடன் சென்று வருவதும் அவற்றில் தாமும் பங்குபற்றிப் பாடுவதும் வழக்கமாக இருந்தது. இவரது பாடும் திறன் பலராலும் போற்றப்பட்டது. இதனைக் கண்ணுற்ற இவரது இன்னொரு மாமனாரான நெல்லையப்ப நட்டுவனார் இவரைச் சென்னைக்கு அழைத்துச் சென்று இசைக்கச்சேரிகள் பல செய்வித்ததால் இவர் புகழ் பரவியது. பின்னர் இவர் பாலக்காடு அனந்தராம பாகவதரிடம் சென்று சிலகாலம் இசையினை மேலும் வளப்படுத்தினார். பின்னர் பந்தணைநல்லூரில் அமைந்த தமது தந்தையரான கண்ணுசாமிப் பிள்ளையவர்களின் குருகுலத்தில் சேர்ந்து தானும் அவரிடம் மிருதங்கம் கற்றதோடு பிறருக்குக் கற்பிக்கும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார். அவ்வகையில் தந்தையருக்கு உதவியாகவும் திகழ்ந்தார். பின்னர் தந்தையார் பரோடா சமஸ்தானத்தில் நாட்டியக்கலை வித்வானாக தங்கியிருந்து கற்பிக்கச் சென்றபோது பொன்னையா பிள்ளையவர்களே குருகுலத்தைப் பொறுப்பேற்று நடத்தி வந்துள்ளார். இதன் மூலம் காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை, திருச்சி கோவிந்தசாமிப் பிள்ளை, வீணை தனம்மாள் ஆகிய பல சிறந்த இசைக்கலைஞர்களின் நன்மதிப்பினையும் இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருவனந்தபுரம் போன்ற சமஸ்தானங்களின் ஆதரவையும் இவர் பெற்றார்.

தஞ்சை நால்வரின் காலத்திலிருந்தே இவர்கள் பரம்பரை பரம்பரையாக தஞ்சைப் பெரியகோயிலில் இசைத்தொண்டு செய்து வந்தவர்கள். எனவே அதன் தொடர்ச்சியாகப் பொன்னையா பிள்ளையவர்கள் சித்திரைமாதத்தில் நடைபெறும் திருவிழாவில் ‘குறவஞ்சி’ நாடகத்தைச் சிறப்புற நடத்திக் காட்டினார்.

1828ல் தனது தந்தையாரின் மறைவுக்குப்பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் இசைக்கல்லூரிக்கு விரிவுரையாளராகப் பணியேற்றார். அங்கே குரலிசை, மிருதங்கம் என்பவற்றை தாமே கற்பித்து வந்தார். எண்ணற்ற ‘ஜதிஸ்வரம்’, ‘தானவர்ணம்’, ‘கீர்த்தனை’, ‘தில்லானா’ ஆகியவற்றை மாணவர்களுக்குக் கற்பித்தலின் பொருட்டு இயற்றினார். தமது முன்னோர்களின் கீர்த்தனைகளையும் தேர்ந்தெடுத்துக் கற்பித்துவந்தார். இதன் விளைவாக, அக்கல்லூரியின் பாடத் திட்டத்திற்கமைவாகச் செயல்முறைப் பாடநூலொன்றினை எழுதினார். பின்னர் ‘இசை இயல்’ என்னும் பெயரில் இசை இலக்கண நூலொன்றினையும் எழுதி அதன்படி கற்பித்து வந்தார். இதே காலகட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் 5 ஆண்டுகளாக டிப்ளோமா வகுப்பொன்றினை இசைக்காகத் தொடங்கி அதனையும் நடத்தி வந்தார். இதற்காக முன்னோர்களின் இசைப் பாடல்களைத் தொகுத்து ‘தஞ்சைப் பெருவுடையான் பேரிசை’ என்றதொரு நூலை வெளியிட்டார். 1932ல் இவர் கலாநிதிப் பட்டம் பெற்றார். 1941-1942 காலப்பகுதிகளில் முத்துஸ்வாமி தீட்சிதர் வழியில் தமிழில் ‘நவக்கிரகக் கீர்த்தனை’களை இவர் இயற்றியுள்ளார். இவர் இலங்கை சென்றமையும் விபுலானந்தரின் யாழ் நூலுருவாக உதவியமையும் சென்ற கட்டுரையில் கூறப்பட்டன. இவர் 1945ல் 57 வயதில் காலமானார்.

இவரது பிள்ளைகளான தஞ்சை க.பொ. கிருஷ்ணமூர்த்தி (கிட்டப்பா(1913), தஞ்சை க.பொ. சிவானந்தம்(1917) ஆகியோர் தந்தையின் பாடல்களைத் தொகுத்து ‘ராஜா அண்ணாமலை தமிழிசைக் கருவூலம்’ என்ற நூலாக 1949ல் வெளியிட்டனர். இவர்கள் தமது முன்னோர்கள் பாடல்களைத் தொகுத்து ‘பொன்னையா மணிமாலை’ என்னும் நூலையும் வெளியிட்டுள்ளனர். இவை முன்னைய கட்டுரையில் குறிப்பிட்ட செய்திகளாகும்.

(தொடரும்)



kawsalya.s@thaiveedu.com



# இலங்கை வரலாற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சும்

# கிவுலக்கடவலை தமிழ்க் கல்வெட்டு

**- வி. துலாஞ்சனன்**

ஓரிரு மாதங்களுக்கு முன்னர், திருக்கோணமலையின் கோமரங்கடவைப் பிரதேசத்திலுள்ள கிவுலக்கடவலை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு, இலங்கை ஆய்வுலகில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இக்கல்வெட்டைப் படித்த பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், மற்றும் பேராசிரியர் கா. இந்திரபாலா ஆகியோர் இக்கல்வெட்டு தொடர்பான புதுமையான - அருமையான தகவல்கள் அடங்கிய காத்திரமான கட்டுரைகளை பொது ஊடகங்களில் வெளியிட்டிருந்தனர். அவர்களால் இந்தக் கல்வெட்டு குறிப்பிடும் காலிங்க விஜயவாகுவை, பாளி - சிங்கள நூல்கள் கொடுங்கோலனாகவும், இலங்கைத்தமிழ் நூல்கள் சரித்திர நாயகனாகவும் சித்தரிக்கும் கலிங்க மாகோனாக அடையாளம் காண முடிந்ததே இக்கல்வெட்டின் சிறப்பாக இருந்தது.

**இந்தக் கல்வெட்டின் வாசகம் வருமாறு:**

(சிதைந்த வடமொழி சுலோகம்)

*ஸ்வஸ்திஸ்ரீ ...(த்திகள் ?) (ஸ்ரீகுலோ)த்துங்கசோழக் காலிங்கராயனேன் ஈழ (மண்டலமான மும்முடிச்) சோழமண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட(நேமி பூசை கால)ங்களில் ஆதிக்ஷேத்ரமாய் ஸ்வயம்புவுமான திருக்கோ(ணமாமலை)யுடைய நாயனாரை தெண்டன் பண்ணி இந்நாயனாற்கு ச(க்தி)ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பன்னுவித்து நமக்கு (ப்ராப்தமாய்) வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்(த) நாட்டில் லச்சிகா(ம)புரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நிலமும் .... இதில் மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் பேருடரை நீக்கி குடிமக்களுள்பட இந்நா(ச்சியார்க்கு திருப்)படிமாற்றுக்கும் மண்டபக் கொற்றுக்கும் சாந்த்ராதித்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோதகம் பண்ணிக் குடுத்தேன். இ....லுள்ளாரழிவு படாமல்... பெறுக்கிவுண்டார்கள் (ஆ)ய் நடத்தவும் இதுக்கு... ண்டாகில் காக்கையும் நாயும்மாக... டையார் பி... கெங்கைக் கரையிலாயிரங்குரால் பசுவைக் கொன்றா(ர்பாவ)ங் கொண்டார்கள் ஆயிரம் ப்ராஹ்மணரைக் கொன்றார் பாவ(ங் கொண்)டார்கள் மேலொரு..... மாற்றம் விலங்குரைப்பார்... காலிங்கராயரின் (சொல்படி) .....(ச ?)த்தியஞ் செய்வார் செய்வித்தார்'*

இக்கல்வெட்டின் சுருக்கம் இது தான். 'ஈழமாகிய மும்முடிச் சோழமண்டல நாட்டை வென்று, கங்கராஜன் காலிங்க விஜயவாகு தேவருக்கு முடி சூட்டிய குலோத்துங்கசோழக் காலிங்கராயனாகிய நான், தான்தோன்றியாக அருளும் திருக்கோணமலை இறைவனை வணங்கி வழிபட்டு, இங்குள்ள சிவாலயத்தில் சக்திக்குத் தனிக் கோவில் இல்லாததால், ஒரு தனிச்சன்னதி அமைத்தேன். எனக்கு உரித்தான காலிங்கராயப்பற்று பிரதேசத்தில் அடங்கும் மானாமத்தப் பிரிவிலுள்ள லச்சிகாமபுரம் ஊரில் அடங்கும் நான்கு கிராமங்களின் நிலத்தையும் குடிமக்களையும், மேற்கே மரத்தையும் கிழக்கே கிணற்றையும் எல்லையாகக் கொண்டு இந்த அம்மனுக்கென கையில் நீர்வார்த்து தத்தம் செய்து தானம் கொடுத்தேன். அவற்றின் மூலம் வரும் வருமானம் சூரிய, சந்திரன் உள்ளவரை இந்தப் புதிய சன்னதி அம்மன் கோவிலுக்கான குறித்த கிரியைகளையும் திருப்பணிகளையும் செய்வதற்கும் தொடர்ச்சியாகப் பயன்படவேண்டும். இந்தக்கொடை சரியாகப் பயன்படாமல் தடைசெய்பவர்கள், அடுத்த பிறவியில் காகமும் நாயுமாகப் பிறப்பார்கள்; கங்கைக்கரையில் ஆயிரம் காராம்



பசுக்களைக் கொன்ற பாவத்தை அடைவார்கள்; ஆயிரம் அந்தணர்களைக் கொன்ற பாவத்தை அடைவார்கள். இப்படிக்கு காலிங்கராயரின் சொற்படி நடப்போம் என சத்தியம் செய்தவர்களும் செய்வித்தவர்களும்.'

இந்தக் கல்வெட்டின் அருகே சிதைந்த நிலையிலான சிவாலயம் ஒன்றும் காணப்படுகிறது. கல்வெட்டில் குறிப்பிடப்படும் லச்சிகாமபுரம் இந்த இடமே ஆகக்கூடும். சோழப்பேரரசின் காலம் வரை, சிவாலயங்களில் கருவறையிலேயே சிவனும் சக்தியும் வழிபடப்பட்டு வந்தனர். அதன்பிறகே அம்மனுக்கு சிவன் கோவிலில் தனிச்சன்னதி அமைக்கும் வழக்கம் வந்தது. இவ்வாறு புதிதாக அமைக்கப்பட்ட அம்மன் சன்னதிகளை 'காமக்கோட்டம்' என்றழைக்கின்றன தமிழகக் கல்வெட்டுக்கள். இலங்கையில் இருந்த



சிவன் கோவில்களிலும் இதையொட்டி காமக்கோட்டங்கள் அமைக் கப்படலாயின என்ற தகவலை முதன்முதலில் சுட்டிக்காட்டும் கல்வெட்டு இது என்கிறார் பேராசிரியர் சி. பத்மநாதன்.

ஆனால் இக்கல்வெட்டில் ஆய்வாளர்களுக்கு சுவாரசியமூட்டிய தகவல் வேறொன்று. கிவுலக்கடவலையிலுள்ள சிவாலயத்தில் அம்மன் கோவில் அமைத்த குலோத்துங்கசோழக் காலிங்கராயன், கங்கராஜ காலிங்க விஜயவாகுவுக்கு வீராபிஷேகம் பண்ணியிருந் தான் என்ற தகவல் அது. அந்தக் காலிங்க விஜயபாகு கலிங்க மாகோன் தான் என்று கூறுகிறார்கள், பேராசிரியர் கா. இந்திர-பாலாவும், பேராசிரியர் ப. புஷ்பரட்ணமும்.

இலங்கையில் காலிங்க விஜயபாகு என்று குறிப்பாக அறியப் பட்டவர்கள் மூவர். 14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'நிகாய சங்கிரகய' என்ற நூலின்படி கலிங்கமாகோனுக்கு காலிங்க விஜயபாகு என்ற பெயர் இருந்தது. இன்னொரு பழைய நூலான 'ராஜரத்தினாகர' தம்பதெனிய அரசைத் தோற்றுவித்த மூன்றாம் விஜயபாகுவை (1220-1224) காலிங்க விஜயபாகு என்கின்றது. அதே பெயரில் அழைக்கப்பட்ட மூன்றாமவன், மாகோனுக்கு பதி-னைந்தாண்டுகள் முன்பு பொலனறுவையை ஆண்ட சாகசமல்லன் (1200-1202).

சாகசமல்லன் சிங்கள மன்னர் காலவரிசையில் வெறும் இரண்-டாண்டுகளையே பிடித்துக்கொள்ளும் அத்தனை முக்கியத்துவ மற்ற மன்னன். பொலனறுவையில் ஒரு சிங்களக் கல்வெட்டைப் பொறித்தது தவிர, சொல்லிக்கொள்ளும்படி அவன் பெரிதாக ஒன்றும் செய்யவும் இல்லை. ஆனால் சாகசமல்லனது அந்தக் கல்வெட்டு வரலாற்றுலகுக்கு அளித்த கொடை கொஞ்சநஞ்ச மல்ல. சாகசமல்லனது பொலனறுவைக் கல்வெட்டு, புத்த ஆண் டைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கை வரலாற்றில் மிகச் சரியான காலப்புள்ளியொன்றைக் கணக்கிட உதவிய மிகப்பழைய ஆதாரமாகும். அது சொல்வதன் படி, சாகசமல்லன், பொ.பி 1200ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை அன்று முடிசூடிக்கொண்டான்.

சாகசமல்லன் கலிங்க நாட்டின் சிங்கபுரத்தை ஆண்ட ஸ்ரீகோப மன்னனுக்கும் லோகமாதேவிக்கும் பிறந்தவன். அவனுக்கு முன் பொலனறுவையை ஆண்ட நிசங்கமல்ல மன்னனுக்கு ஒன்று விட்ட சகோதரன். நிசங்கமல்லன் மறைந்தபின்னர் அடுத்து பொலனறு-வையில் ஆட்சியில் அமர்வது யார் என்பதில் பல்வேறு குழப்பங் கள் நேரிட்டன. அப்போது இலங்காதிகாரன் என்ற பதவியை வகித்த லொலுபெல குலத்தைச் சேர்ந்த ஆபோநாவன், புதல்-நாவன் ஆகிய இரண்டு அலுவலர்கள், நிசங்கமல்லனின் தம்பி யான சாகசமல்லனை முடிசூட்ட முடிவெடுத்தார்கள். கலிங்க நாட்டவனான மல்லிகார்ச்சுனன் என்பவனை அவர்கள் தூதனாக அனுப்ப, மல்லிகார்ச்சுனன் சாகசமல்லனை சோழநாட்டின் கங்கைகொண்ட பட்டணத்துக்கு அழைத்து வந்தான். அங்கு அவனுக்கு ஆரவாரமான வரவேற்பும், ஆடையாபரணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

இதனால் இரு இலங்காதிகாரர்களாலும் மன்னனொருவன் இல்லா மல், தாங்களே ஆட்சிக்கு வர விரும்பிய ஏனைய பொலனறுவை அமைச்சர்களின் கொட்டத்தை அடக்க முடிந்தது. சாகசமல்லன் கடல்வழியே அழைத்து வரப்பட்டு 'ஸ்ரீசங்கபோதி காலிங்க விஜயபாகு' என்ற பெயரில் முடிசூட்டப்பட்டான். ஓராண்டு கழிந்த பின், ஆபோநாவனுக்கு இலங்காதிகாரனை விட உயர்வான 'செனவிரத்' (சேனாதிபதி) பதவியளித்த சாகசமல்லன், அவனை தன் முதலமைச்சனாகவும் நியமித்தான். இந்தத் தகவல்களை விரிவாகக் கூறும் சாகசமல்லனின் பொலனறுவைக் கல்வெட்டு, ஆபோநாவனுக்கு சாகசமல்லன் அளித்த கொடைகளையும், அவற்றை எதிர்காலத்தில் காக்க வேண்டிய கட்டாயத்தையும் கூறிச்சென்று முடிகிறது. (EZ IV 221-29)

இதில் நாம் ஊன்றிக் கவனிக்கவேண்டிய விடயம், சாகசமல்லன் சோழநாட்டு கங்கைகொண்ட பட்டணத்துக்கு அழைத்துவரப்பட்டு, அதன் பின்னரே இலங்கையை வந்தடைகிறான். இக்கல்வெட்டைப் படித்த அக்கால ஆய்வாளர்கள், 'கங்ககொண்ட பட்டண' என்று கல்வெட்டில் உள்ள சிங்களச்சொல்லை கஹகொண்ட பட்டணம் என்றும் தங்ககொண்ட பட்டணம் என்றும் வாசித்து 'சோழநாட்டில் இருந்த கஹகொண்ட என்ற துறைமுகம்' என்று விளக்கமளித் திருக்கிறார்கள். ஆனால் கஹ கொண்ட, தங்க கொண்ட என்ற பெயர்கள் தமிழில் அசாதாரணமானவை. பட்டணம் என்ற சொல்லை துறை எனப்பொருள்படும்படி வாசித்தது தவறு. தமிழில் பட்டணம் என்றால் பெருநகரம் என்று பொருள். துறைகளின் அருகிலேயே பெருநகரங்கள் அமைந்ததால், பட்டினம் என்ற சொல்லிலிருந்தே பட்டணம் என்ற சொல் வந்திருக்கவேண்டும். இன்றும் இந்த பட்டினம் - பட்டணம் இருசொற்களையும் தமிழில் பொருள்மயங்கிப் புரிந்துகொள்வது வழக்கமாக இருக்கிறது.

சிங்களத்தில் தற்போதும் 'பட்டுன' என்ற சொல்லுக்கு துறை, நகர் என்ற இரு அர்த்தங்களும் சொல்லப்படுகின்றன. சாகமல்லனின் சிங்களக் கல்வெட்டில் இருப்பது 'பட்டண' என்ற சொல் தான். எனவே அது கங்கைகொண்ட பட்டணம். அந்தப்பெயரில் சோழரின் துறைமுகங்கள் எதுவும் அழைக்கப்பட்டதாக ஆதாரங்களில்லை. ஆகவே கங்கைகொண்ட பட்டணத்துக்கு கங்கைகொண்ட மாந-கரம் என்றே பொருள் கொள்ளமுடியும். சோழநாட்டில் அந்நாளில் அந்தப்பெயரில் புகழ்பெற்றிருந்த 'பட்டணம்' ஒன்றே ஒன்று தான். சோழத்தலைநகரான கங்கைகொண்ட சோழபுரம்.

என்றால், இலங்கையில் முடிசூட்டுவதற்கென்று சாகசமல்லன் கலிங்க நாட்டிலிருந்து சோழநாட்டின் தலைநகரத்துக்கு அழைத்து வரப்பட்டிருக்கிறான். அங்கு அவன் வந்தபின்னர் இலங்காதிகாரர் களால் இலங்கையில் இருந்த ஏனைய அமைச்சர்களின் கலகங் கள் அடக்கப்படுகின்றன. பின்னர் சாகசமல்லன் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டு முடிசூட்டப்படுகிறான்.

சாகசமல்லன் நேரடியாக கலிங்க நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டியது தானே? முடிசூட்டப்படுவதற்கு முன்னர், அவன் ஏன் சோழநாட்டுக்குச் செல்லவேண்டும்? ஆக சாகசமல்லனின் இலங்கை வருகையில் சோழப்பேரரசின் பங்க ளிப்பு நிச்சயம் இருந்திருக்கிறது. இலங்கை தன் பிடியிலிருந்து நழுவி பல்லாண்டுகள் ஆனபின்னரும், அந்நாட்டின் சிம்மா-சனத்தின் மீது, சோழம் தொடர்ச்சியாக ஒரு கண் வைத்திருந்தது என்பதை இதன் மூலம் நாம் ஊகிக்கலாம்.

என்றால், கிவுலக்கடவலைக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் காலிங்-கராயனால் முடிசூட்டப்பட்ட காலிங்க விஜயபாகு, சாகசமல்லன் தானா? இல்லை. ஆபோநாவன், புதல்நாவன் ஆகியோரின் அனுசரணையில் தான் முடிசூடியதைச் சொல்ல பொலனறுவை யில் சிங்களக் கல்வெட்டுப் பொறித்திருக்கும் சாகசமல்லன், தனக்கு முடிசூட்டியதில், சோழருக்கோ சோழப்பிரதிநிதிக்கோ பங்கு இருந்ததாக, அக்கல்வெட்டில் எங்குமே குறிப்பிடவில்லை.



சோழநாட்டுக் கங்கைகொண்ட பட்டணம் பற்றிய குறிப்பின் மூலம் சாகசமல்லன் இலங்கையின் அரசனாவதற்கு சோழப்பேரரசின் மறைமுக ஆசீர்வாதம் இருந்தது என்பதை இக்கல்வெட்டு சொல்லும்போதும், அப்போது சோழப்படையெடுப்பு நிகழ்ந்தே பொலனறுவையின் அரசனாக அவன் பீடமேறினான் என்ற தகவலேதும் இக்கல்வெட்டில் இல்லை. மகாவம்சம் உட்பட இலங்கையின் ஏனைய வரலாற்றிலக்கியங்களும் சாகசமல்லனை சோழரோடு தொடர்புபடுத்தாமல் மௌனம் சாதிப்பதால், குலோத்துங்க சோழக் காலிங்கராயன், சாகசமல்லனோடு தொடர்புடையவனல்ல என்றே முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.

என்றால் தம்பதெனி அரசன் மூன்றாம் விஜயபாகுவோடு இணைத்துப் பார்க்கலாமா? இல்லை. அவன் மாகோனுக்கு அஞ்சி விலகிச் சென்று தம்பதெனி அரசை உருவாக்கியவன். இக்கல்வெட்டு கண்டறியப்பட்ட திருக்கோணமலைப் பகுதியில் இவன் ஆட்சி செலுத்தவில்லை. சோழரின் ஆதரவு இவனுக்கு இருந்தது என்பதற்கும் சான்றேதும் இல்லை. இத்தனைக்கும் 'ஸ்ரீசங்கபோதி காலிங்க விஜயபாகு' என்ற மன்னனால் பொறிக்கப்பட்ட இன்னொரு சிங்களக் கல்வெட்டு, கண்டி உடதும்பறைக்கு அருகே கிவுல்கமத்தில் கிடைத்திருக்கிறது. மூன்றாம் விஜயபாகுவின் மிகக்குறுகிய ஆட்சிப்பரப்பைக் கவனத்தில் கொண்டு இந்தக் கல்வெட்டும் இவனுடையதல்ல; சாகசமல்லனுடையது என்றே கருதுகிறார்கள், சிங்கள ஆய்வாளர்கள். எனவே, இப்போதைக்கு எல்லா வரலாற்றாய்வாளர்களும் சொல்வது போல, கிவுலக்கடவலைக் கல்வெட்டின் காலிங்க விஜயபாகுவை கலிங்க மாகோனாக இனங்காண்பதே சரி போலத் தெரிகிறது.

கிவுலக்கடவலைக் கல்வெட்டில் வருவது மாகோன் தான் என்று எப்படியெல்லாம் உறுதிப்படுத்தலாம்? இதற்கு நம் வசம் நான்கு சான்றுகள் இருக்கின்றன. முதலாவது சான்று, மாகோனுக்கு ஆதரவாக தமிழரும் கேரளரும் அடங்கிய பெரும்படை இலங்கை மீது போர் தொடுத்ததை, மகாவம்சம் மூலமும் ஏனைய சிங்கள நூல்கள் மூலமும் அறியமுடிகின்றது. இப்படி சோழர் படையின் ஆதரவு சாகசமல்லன் மற்றும் மூன்றாம் விஜயபாகு பற்றிய மகாவம்ச வரிகளில் இல்லை என்பதால் தான். இக்கல்வெட்டை அவர்கள் காலத்தையது அல்ல என்று தவிர்க்கின்றோம். மாகோனுக்கு ஆதரவாக பெரும்படை வந்ததென்றால், அது சோழப்பேரரசின் அனுமதியின்றி இலங்கை வந்தடைந்திருக்க முடியாது. பேராசிரியர்கள் ப. புஷ்பரட்ணமும், கா. இந்திரபாலாவும் தெளிவாகச் சுட்டிக்காட்டுவதன் படி, மாகோன் படையெடுப்பு மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் இடம்பெறுகின்றது. அவனுக்கு முடிசூட்டிய தளபதிக்கு 'குலோத்துங்கசோழ' என்ற பட்டமும் இருப்பது நம் கவனத்தை ஈர்க்கிறது.

இரண்டாவது சான்று,. மாகோன் இலங்கையைக் கைப்பற்றி ஓராண்டு காலத்தில் சுந்தரபாண்டியன் தலைமையில் பாண்டிய அரசு மீண்டெழுகின்றது. அக்காலத்தில் சோழ - பாண்டிய முரண்பாடு மிகுந்த தீவிரமாக இருந்ததை தமிழக வரலாற்றிலும் காண்கிறோம். பொலநறுவையை அப்போது ஆண்டுகொண்டிருந்தவன் பராக்கிரம பாண்டியன் எனும் பாண்டிய இளவரசன். இலங்கைச் சிங்கள அரசு எப்போதும் பாண்டியருக்கே ஆதரவாக இருந்ததாலும், இலங்கையை ஆள்பவன் தங்களுக்கு அச்சுறுத்தலாக வளர்ந்துகொண்டிருந்த பாண்டியர் குல இளவல் என்பதாலும், சோழர் தரப்பு மாகோனுக்கு ஆதரவளித்திருக்கலாம் என்பது வெள்ளிடைமலை.

மூன்றாவது சான்று, மகாவம்சத்தின் படி (80:73), மாகோனோடு வந்த படைத்தளபதிகள், மானாபரணனின் தலைமையில், பராக்கிரம பாண்டியனை சித்திரவதை செய்து கொன்று, காலிங்க மாகனுக்கு புலத்திநகரியில் வீராபிஷேகம் செய்வித்தனர். மானாபரணன் என்பவன் இலங்கையை முற்றுகையிட்ட படையினரின் தலைமைத் தளபதியாகக் காட்டப்படுவதால், மாகோன் வேறொரு படையின் துணையுடனேயே இலங்கை அரசை கைப்பற்றி இருக்கிறான் என்பது தெரிகிறது. தமிழ், கேரள வீரர்கள் அடங்கிய படையைக் அவனுக்கு வழங்கிய அந்த அரசு தென்னகத்தில் சோழ அரசு தவிர்ந்த வேறொரு பலம் வாய்ந்த அரசாக அக்காலத்தில் இருப்பதற்கு வாய்ப்புக்கள் குறைவு. இவ்வாறு, சோழ அரசின் கீழ் இங்கு வந்து காலிங்க விஜயவாகுவுக்கு வீராபிடேகம் செய்த குலோத்துங்கசோழக் காலிங்கராயனே மகாவம்சத்தில் மானாபரணன் என்று சொல்லப்படுகின்றான் என்று கொண்டால் அது தவறாகாது.

இறுதிச் சான்று, குலோத்துங்கசோழக் காலிங்கராயன், கிவுலக்கடவலை சிவன் கோவில் தேவிக்கு கொடையாகக் கொடுப்பது, காலிங்கராயப் பற்றிலுள்ள மானாமத்த நாட்டிலுள்ள லச்சிகாமபுரத்தை. லச்சிகாமபுரம் என்பது இன்றைய கிவுலக்கடவலையை அண்மித்தே இருந்திருக்கிறது என்று கொண்டால், இக்கோவில் அமைந்துள்ள இன்றைய கோமரங்கடவலப் பிரதேசமே மானாமத்த நாடாக இருக்கவேண்டும். இந்த மானாமத்த நாடு. மாகோன் மற்றும் ஜயபாகுவின் படைகளின் கோட்டைகள் அமைந்திருந்த இடங்களில் ஒன்றாக மகாவம்சத்திலும் வருகிறது (மகாவம்சம் 83:17). எனவே மானாமத்த நாட்டில் கிடைத்த கல்வெட்டில் குறிப்பிடப்படும் காலிங்க விஜயபாகு, மாகோன் தான் என்று உறுதிப்படுத்திகொள்ளலாம்.

காலிங்க விஜயவாகு காலிங்க மாகோன் தான் என்பது உறுதியாவதால், மாகோன் படையெடுப்பில் சோழப்பேரரசின் பாரிய பங்களிப்பு இருந்தது என்ற செய்தி தெரியவந்திருக்கிறது. இதுவரை இலங்கை ஆய்வுலகில் அது ஒரு ஊகமாக இருந்ததே தவிர, உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த விதத்தில் கிவுலக்கடவலைக் கல்வெட்டு இலங்கைத்தமிழர் வரலாற்றிலும் முக்கியமான இடமொன்றைப் பெற்று விடுகிறது.

ஆனால் நாம் தெளிவுபடுத்திக்கொள்ளவேண்டிய மேலும் சில விடயங்கள் இருக்கின்றன. காலிங்க மாகோன் ஏன் இங்கு கங்கராஜன் என்று அழைக்கப்படுகிறான்? முதலில் சாகசமல்லனுக்கும் பின்னர் மாகோனுக்கும் ஆதரவளித்து அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைக்குமளவுக்கு அப்போது அப்படி என்ன அரசியல் நெருக்குதல்கள் சோழர்களுக்கு இருந்திருக்கும்?

முதல் ஐயத்தைப் பார்ப்போம். கங்கர் என்ற பெயர்கொண்ட இரண்டு வம்சத்தினர் இந்திய வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறார்கள். முதலாமவர் இன்றைய கன்னடப் பகுதியை ஆண்ட மேலைக்கங்கர்கள். இவர்கள் தாங்கள் சூரியவம்சத்தில் உதித்தவர்கள் என்று சொல்லிக்கொண்டதுடன், வடநாட்டு இக்ஷ்வாகுவின் சத்திரிய மரபுடன் தங்களை இணைத்துக்கொண்டார்கள். ஆனால் வரலாற்றாதாரங்களின் படி, இவர்கள் தமிழக கொங்குநாடு, கர்நாடக மற்றும் ஆந்திராவின் தென் எல்லைப் பகுதிகளிலேயே தோன்றியிருக்கவேண்டும் என்பது தெரியவருகிறது. பொபி 350

அளவில் ஆரம்பித்த மேலைக்கங்க அரசு, 100ஆம் ஆண்டளவில் இராஜராஜ சோழனால் கங்கபாடி வெல்லப்பட்டு சோழநாட்டுடன் இணைக்கப்பட்டதுடன் மறைந்துபோகிறது. ஆனால் மேலைக் கங்கர்களில் எஞ்சிய அரசமரபினர், சோழப்பேரரசின் கீழ் சிற்றர சர்களாக நீடித்திருக்கிறார்கள் என்பது ஏனைய சான்றுகளிலிருந்து தெரியவருகிறது.

கங்கர் என்ற பெயர் கொண்ட இரண்டாவது குலத்தினர் இன்றைய ஒடிசா மாநிலத்தை மையமாக வைத்து ஆண்ட கீழைக்கங்கர்கள். இவர்கள் தங்களை சந்திர வம்சத்தில் தோன்றியதாகச் சொல்லிக் கொண்டார்கள். பொபி 500 அளவில் தோன்றிய கீழைக்கங்க அரசு பெரிதும் கலிங்க அரசு என்றே அறியப்பட்டதுடன், 1434இல்



கஜபதி அரசின் கீழ் வீழ்ச்சி கண்டது. கீழைக்கங்க அரசு, சோழப் பேரரசுடனும் கொண்டும் கொடுத்தும் உறவைப் பேணிவந்தது. உதாரணமாக கலிங்க மரபில் தோன்றிய மாவீரனான அனந்த-வர்மன் சோடகங்கனைச் (1078-1147) சொல்லலாம். இவன் இராஜசுந்தரி என்ற சோழ இளவரசியின் மகன் என்று சொல்லப்படு கிறான். சோழர், கங்கர் இணைப்பைச் சொல்லும் 'சோடகங்க' என்ற இவனது பெயர் கவனிக்கத்தக்கது.

மாகோன் நமது கல்வெட்டில் கங்கராஜன் என்று அழைக்கப்படு வதையும் அவன் காலிங்க குலத்தவன் என்று சொல்லப்படுவதை யும் ஒப்பிட்டு அவனை கீழைக்கங்க வம்சத்தில் தோன்றியவன் என்று கூற இயலும். ஆனால் இந்த முடிவுக்குப் போவதில் நம்மைக் குழம்பச் செய்வது என்னவென்றால் இலங்கையில் ஆட்சி யுரிமை கோரிய மாகோனுக்கு முற்பட்ட சகல கலிங்க குலத்தாரும் தங்களை சூரிய வம்சத்தில் பிறந்தவர்களாகவே அடையாளப் படுத்துகிறார்கள். ஆனால் கலிங்க நாட்டின் கீழைக்கங்கர்கள் அவர்களின் கல்வெட்டுச் சான்றாதரங்களின் படி சந்திர வம்சத் தினர். அப்படியென்றால் இலங்கையை ஆள முயன்ற கலிங்க குலத்தினர், கீழைக்கங்கர்களாக இருக்க முடியாது.

ஆனாலும், நம்மால் சமாதானம் காண்பதற்கு இரண்டு ஊகங்கள் இருக்கின்றன. முதலாவது, ஒடிசாவின் கீழைக்கங்கர் போலன்றி, கர்நாடகத்து மேலைக்கங்கர்கள் தங்களை சூரியவம்சம் என்றே சொல்லிவந்திருக்கின்றார்கள். பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் தங்கள் அரசு மறைந்த பின்னர், சோழரின் கீழ் சிற்றரசர்களாக விளங்கிய மேலைக்கங்கர்கள், தங்கள் கிழக்குப் பங்காளிகளான கலிங்கரின் பெயரையும் தரித்து தம்மை சூரியவம்சத்தினராக அடையாளப்படுத்தி இருக்கலாம்.

இரண்டாவது ஊகம், அரச குலங்கள் தங்கள் அரசுரிமையை உறுதிப்படுத்துவதற்காக பிற்காலத்தில் புனைந்துகொண்ட தொன் மக்கதைகள் தான் தாம் சூரியவம்சமா, சந்திரவம்சமா என்பதெல் லாம். கீழைக்கங்கரின் அரசக்கோவிலான பூரி ஜெகநாதர் கோவிலின் வரலாற்றைச் சொல்லும் இலக்கியமான 'மடல பஞ்சி' யின் படி, கலிங்கர்கள் சூரிய வம்சம் தான் என்பதால், கீழைக்-கங்கர் பரம்பரையில் வந்த வேறு சில குடும்பங்கள் தங்களை சூரியவம்சமாக இனங்காட்டியிருக்கலாம்.

எது எவ்வாறோ, மாகோனின் பட்டமாக கங்கராஜன் என்ற பெயர் வருவதால் அவன் இரண்டில் ஒரு கங்க வம்சத்தைச் சேர்ந்த கலிங்கன் என்பதை மட்டுமேனும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். கங்கர்கள் கங்கைக்கரையிலிருந்து வந்தோராக தம்மைச் சொல்லிக்கொண்டவர்கள். இலங்கையின் ஆறுகளையெல்லாம் கங்கை (மகாவலி கங்கை, களு கங்கை, வளவை கங்கை..) என்றும், வெள்ளத்தை கங்கைநீர் (கங்க்வதுர) என்றும் அழைக்கும் மரபு, சிங்களமொழியில் இன்றும் நீடிப்பதன் மூலம், கங்கர் குலத்தாரின் ஆட்சியின் செல்வாக்கை இலங்கையில் உய்த்துணர முடியும்.

இனி, இரண்டாவது கேள்விக்கு வருவோம். இலங்கை சோழர்க ளிடமிருந்து கைநழுவிப் போனபின்னரும் அதன் அரசைக் கைப் பற்ற முயலும்படி சோழரைத் தூண்டியது என்ன? சாகசமல்-லனுக்கும் மாகோனுக்கும் ஏன் சோழர் ஆதரவளிக்கவேண்டும்?

இந்த இடத்தில் சோழர் - கலிங்கர் உறவையும், சிங்கள - பாண்டியர் உறவையும் நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு அக்கால தென்னக வரலாறு நமக்கு தெட்டத்தெளிவாகப் புரிந்திருக்கவேண்டும். இன்றைய தமிழ் - சிங்கள இனத்தேசிய முரண்பாடுகளுக்குள் அடைத்துப் பார்த்துக்கொண்டிருந்தால் நமக்கு அடியும் விளங்காது, நுனியும் விளங்காது.

இலங்கை வரலாற்றை அறிந்தவர்களுக்கு சோழராட்சியின் பின்னர் பொலனறுவையில் உச்சமடைந்த 'ஆரிய - கலிங்க' குலச்சண்டை பற்றித் தெரியாமல் இருக்காது. பொலனறுவையின் அரியணையில் அமரத்தகுதியானவர் யார் என்பதில் ஆரியவம்சமும் கலிங்கவம் சமும் மாறிமாறிப் போட்டி போட்டு முரண்பட்டுக்கொண்டிருந்தன. இதில் ஆரியவம்சம் என்பது உரோகணத்தைச் சேர்ந்த சிங்கள அரசகுலம். கலிங்கவம்சம் என்பது பொலனறுவையில் வாழ்ந்த கலிங்கநாட்டின் நேரடிக் குருதி அரசகுலம். இலங்கைத்தீவின் முதல் அரசன் விஜயன் காலத்திலிருந்து கலிங்க குலத்துக்கே இலங்கை அரசு உரிமையானது என்று கோரியது கலிங்கவம்சம். இலங்கையின் பூர்விக மணவுறவில் வந்த ஆரியர்களான தங்களுக்கே பொலனறுவை மணிமகுடம் உரிமையானது என்று வாதாடியது ஆரியவம்சம். இலங்கையில் சோழராட்சி முடிவுற்ற 1070ஆம் ஆண்டிலிருந்து, பொலனறுவை அரசு மறைந்த 1236ஆம் ஆண்டு வரை, இந்த ஆரிய-கலிங்கப் பூசல் மிகச்சூடாக நிகழ்ந்ததற்கான சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

இன்றைய தமிழ் - சிங்கள தேசியவாத முரண்களுக்குள் நின்று கொண்டு பழைய வரலாற்றைப் புரிந்துகொள்ள முடியாது என்று கூறியிருந்தோமல்லவா? இந்த இரு குலங்களுக்குள், ஆரியவம்-சம் பாண்டியரோடு நேரடி மணவுறவு கொண்டிருந்தது. எனவே அது சந்திரவம்சம். கலிங்கர்கள் தங்களை இக்ஷ்வாகு வம்சத் தினராக சொல்லிக்கொண்டனர். எனவே அவர்கள் சூரியவம்சம். தமிழ்நிலத்தின் சோழர்களும் தங்களை சூரியவம்சத்தினராக சொல்லிக்கொண்டவர்கள். இலங்கையில் நிகழ்ந்துகொண்டிருந்த ஆரிய - கலிங்கப்பூசல், என்பது தமிழ் நிலத்தில் நீடித்துக்கொண் டிருந்த பாண்டிய - சோழப் பூசலின் இன்னொரு வடிவம் தான்.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், சிங்களவர்களுக்கு இது தாய் - தந்தை இடையேயான சண்டை. இலங்கையின் முதல் மன்னன் விஜயனின் தாய்வழி அரசமரபு. கலிங்ககுலம். அவன் மணந்துகொண்ட முதல் பட்டத்தரசி பாண்டிமாதேவியின் அரசமரபு, ஆரியகுலம்.

என்ன, வியப்பாக இருக்கிறதா? மகாவம்சத்தில் இதெல்லாம் மிக வெளிப்படையாகவே பதிவாகி இருக்கிறது. மகாவம்சத்தின் படி (59:41) முதலாம் விஜயபாகு மன்னனின் தங்கை மித்திரையின் கணவன் ஒரு பாண்டிய இளவரசன். குலம் தந்தை வழியில் கடத்தப்படுவதால் மித்திரையின் மகன்மாரும் பாண்டிய வம்சத்தினர் ஆகின்றனர். ஆனால் முதலாம் விஜயபாகு கலிங்க வம்சம். அவன் மகன் விக்கிரமபாகுவும் அதே கலிங்கவம்சம்.

மித்திரையின் மூத்த புதல்வனான மானாபரணன் விக்கிரமபாகு விடம் போரில் தோற்றபின்னர் தனக்குள் எண்ணுவதாக ஒரு வரி மகாவம்சத்தில் வருகின்றது: 'நாங்கள் எல்லா அரச வம்சங்களிலும் தலையானதாக, உலகில் போற்றப்படுகின்ற தூய்மையான சந்திர வம்சத்தில் உதித்தவர்கள். நாங்கள் எங்கள் புறத்தோற்றத்தால் பொறாமைப்பட வைப்பவர்கள், தகுதியால் எங்கள் தனித்துவத்தைக் காட்டுபவர்கள், ஆயகலைகளில் நிபுணர்கள், யானை, குதிரை முதலியவற்றை கையாள்வதில் வல்லவர்கள், ஆனாலும் நாங்கள் ஒற்றை ஆளாய் நிற்கும் விக்கிரமபாகு முன் சண்டையில் மீண்டும் மீண்டும் தோற்றுக்கொண்டே இருக்கிறோம். இந்தக் கறையை அழிக்கத்தக்க ஒரு மகன் எனக்குப் பிறக்க மாட்டானா....!' (62:5-10)

சூரியவம்சத்தில் வந்த கலிங்ககுலத்தை விட, சந்திரவம்சத்து ஆரியகுலத்தினரான தாங்கள் தகுதி, உரிமை என்பவற்றில் மேம்பட்டவர்கள் என்ற சிந்தனை மானாபரனனின் மனவோட்டத்தில் தொனிப்பதை நாம் அப்பட்டமாகக் காணமுடியும். இந்த மானாபரணன் தான் மகாவம்சத்தின் கதாநாயகர்களுள் ஒருவனான முதலாம் பராக்கிரமபாகுவின் தந்தை. ஆம், மகாவம்சத்தின் மகத்தான வீரர்களுள் ஒருவனான பராக்கிரமபாகு ஆரியகுலம் தான். சற்று விரக்திச்சிரிப்போடு சொல்லுவதென்றால், பாண்டிய வம்சம்!

பராக்கிரமபாகு பிறந்து சிலநாள்களிலேயே அவன் தந்தை மானாபரணன் இறந்துவிட, தாய் இரத்தினாவளி, பராக்கிரம பாகுவுடனும் அவனது இரு தமக்கையருடனும், தன் கணவனின் தம்பி கீர்த்திஸ்ரீமேகனிடம் தஞ்சம் புகுகின்றாள். தன் ஆரியக் குருதியை உறுதி செய்ய, பராக்கிரமபாகுவின் மூத்த அக்கையான மித்திரைக்கு தன் மகனை மணமுடித்து வைக்க முயன்றான் கீர்த்திஸ்ரீமேகன்.

உறவுமுறையில் இது சிற்றப்பன் மக்களுக்கிடையிலான திருமணம். இலங்கையின் அரசவம்சங்களிடையே வேறெந்தக் காலத்திலும் இத்தகைய திருமணங்கள் இடம்பெற்றதாக மகாவம்சத்தில் குறிப்பில்லை. ஆனால் இக்காலத்தில் ஆரிய-கலிங்கப் பூசலின் விளைவால் குருதித் தூய்மையை உறுதிப்படுத்த ஒரே குலத்தினர் - குறிப்பாக ஆரிய குலத்தினர் - தங்களுக்குள் முறைமீறி மணம் புரிந்துகொண்டார்கள் என்பது தெரிகிறது. பராக்கிரமபாகுவும் அவனது பட்டத்தரசியான லீலாவதியும் கூட சிற்றப்பன் மக்கள் தான். அதாவது, பராக்கிரமபாகுவின் தந்தை மானாபரணனும், லீலாவதியின் தந்தை ஸ்ரீவல்லபனும் உடன்பிறந்தவர்கள்.

பராக்கிரமபாகுவின் தாயான இரத்தினாவளி இதைக் கடுமையாக எதிர்த்தாள். அவள் முதலாம் விஜயபாகுவின் மகள். கலிங்க குலத்து மாதரசி. அவள் தன் சொந்த மருமகனும் கலிங்ககுலத்தவனுமான கஜபாகுவையே தன் மூத்த மகள் மணக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாள். வரலாற்றில் இரண்டாம் கஜபாகு என்றறியப்படும் இவன், இரத்தினாவளியின் சொந்த அண்ணன் விக்கிரம பாகுவின் மகன்.

கஜபாகு மித்திரையை மணந்துகொண்டால், கலிங்ககுலக் கஜபாகு, ஆரியகுல மித்திரைக்கு இடம்கொடுத்ததாக ஆகும். அது கலிங்க ஆட்சியை விரும்பாத ஆரியர்களையும் அவனுக்குச் சார்பாக சாய்த்துவிடும். இது நடந்தால் தானும் தன் ஆரியகுலமும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுவிடுவோம் என்பது தெரிந்தே கீர்த்திஸ்ரீமேகன் மித்திரையை தன் மகனுக்கு மணமுடிக்க ஆசைப் பட்டிருக்கிறான். இதுவும் மகாவம்சத்தில் பதிவாகி இருக்கிறது (மகாவம்சம் 63:7-11). தன் அமைச்சர்களுடன் மந்திராலோசனை செய்யும் கீர்த்திஸ்ரீமேகன் இப்படிச் சொல்கிறான்: 'கலிங்கவம்சத்தில் வந்த இளவரசர்கள் இலங்கைத்தீவின் ஆட்சியுரிமையை பலதடவை அனுபவித்திருக்கிறார்கள். கலிங்கமரபில் வந்த கஜபாகுவை மணப்பதற்கு இந்த அரசி தன் மகளை அனுப்பினால், அந்த உறவின் மூலம் அவன் வலுப்படுவான். (ஆரியகுலத்து) என் மகனோ அத்தனை ஆதரவையும் முற்றிலும் இழந்துவிடுவான். எனவே நம்மை வலுப்படுத்துவதற்காக இளவரசியை என் மகனுக்கே மணமுடிக்கவேண்டும்.'

கலிங்ககுலத்துக்கு அணிகலன் போன்றவளும், இந்தத்திருமணத்தை சிறிதும் விரும்பாதவளுமான சூரிய வம்சத்தில் உதித்த அரசி (இரத்தினாவளி) அரசனிடம் இப்படி விடையளித்தாள்: 'இயக்கர் அத்தனை பேரையும் அழித்து மனிதர் வாழத் தகுதியுள்ள நாடாக இலங்கைத்தீவை விஜயன் எனும் பேர்கொண்ட இளவரசன் மாற்றினான். அன்றிலிருந்து விஜயனின் பரம்பரையோடு திருமணம் மூலம் இணைந்தவர்கள், எல்லோரையும் விட அதிகமாக, கலிங்க வம்சத்தின் வாரிசுகளே. ஓரிருதடவை சந்திரவம்சத்தினரை மணந்தது தவிர, வேறுகுலத்து இளவரசர்களுடன் நாங்கள் மணம் மூலம் இணைவதும் வழக்கமில்லை. இவ்வாறிருக்க, உன் மகன் என்பதாலேயே ஒரு ஆரியகுலத்து இளவரசனை எப்படி நாங்கள் மணம் புரியச் சம்மதிக்க முடியும்?'

இரத்தினாவளியின் வாதப்படி, இலங்கையை ஆளத்தகுதியானவர்கள் கலிங்கவம்சத்தின் வாரிசுகள் தான். மித்திரையின் தந்தைவழி ஆரிய அடையாளத்தைப் புறக்கணித்து அவளையும் தனது கலிங்கவம்சமாகவே இரத்தினாவளி கருதுகிறாள் என்பது இங்கு தெரிகிறது. அல்லது, தந்தைவழிச் சமூகமான ஆரியர் போலன்றி, கலிங்கர்கள் தாய்வழிச்சமூகமா என்பதையும் ஆராய வேண்டும். நீங்கள் பாண்டியருடன் கலந்ததால் மட்டும் நீங்கள் முன்வைக்கும் ஆரியகுலம் முறையான சந்திரவம்சமாகிவிட முடியாது என்பதே இரத்தினாவளியின் வாதத்தின் சுருக்கம். எது எவ்வாறோ, இறுதியில் இரத்தினாவளியின் தரப்பு தோற்கிறது. மித்திரை பலவந்தமாக இளைய மானாபரணனுக்கு மணமுடித்து வைக்கப்படுகிறாள் (மகாவம்சம் 63:11-17).

பொலனறுவையில் விஜயபாகு, விஜயபாகுவின் தம்பி ஜயபாகு, விஜயபாகு மகன் விக்கிரமபாகு, அவன் மகன் கஜபாகு என்று முதலாம் பராக்கிரமபாகு வரை, கலிங்ககுலமே புலத்திநகரி அரியணையை அலங்கரித்துக்கொண்டிருந்தது. ஆனால் ஆரிய குலத்தில் உதித்த பராக்கிரமபாகுவுக்குப் பின்னர் நிலைமை மாறியது. அரியணையில் அமர்வது யார், எந்தக் குலத்தவர் என்ற போராட்டம் உச்சத்தை அடையத் தொடங்கியது.

கலிங்க குலத்தினர் கலிங்க நாட்டில் பிறந்த நேரடி கலிங்கக்குருதி அரசர்களை இங்கு அழைத்து முடிசூட்டுவதில் ஆர்வம் காட்டினர். நிசங்கமல்லன், சாகசமல்லன் போன்றவர்கள் இத்தகையவர்கள். இதுபோலவே ஆரியகுலத்தினர் தங்கள் நேரடிக்குருதியினரான பாண்டியரின் கீழ் ஆளப்படுவதை விரும்பினார்கள். அப்படி வந்தவனே மாகனால் கொல்லப்பட்ட பராக்கிரம பாண்டியன்.

தங்கள் குலத்தில் தகுந்த அரசன் இல்லாமையால், ஆரியகுலத்துக்குச் சார்பானவர்கள் பராக்கிரமபாகுவின் அரசி லீலாவதியின் பெயரில் அடிக்கடி அரசைக் கைப்பற்ற முயன்றுகொண்டிருந்தார்கள். எனவே லீலாவதியால் விட்டு விட்டு மூன்று தடவை அரசாள முடிந்தது. ஆரியவம்சத்து லீலாவதியைப் போலவே, கலிங்கவம்சத்தினர் நிசங்கமல்லனின் அரசி கல்யாணவதியைப் பயன்படுத்தி அரசாங்கம் நடாத்திக்கொண்டிருந்தனர்.

கலிங்க குலத்துக்குள்ளேயே பல்வேறு தரப்புக்கள் பிரிந்து அரசுரிமைக்காகப் போராடியதையும் மகாவம்சம் சொல்கிறது. உதாரணமாக அடுத்தடுத்து ஒருவரையொருவர் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய நிசங்கமல்லனின் மகன் வீரபாகு, வீரபாகுவின் மாமன் இரண்டாம் விக்கிரமபாகு, விக்கிரமபாகுவின் தங்கை மகன் சோழகங்கன் என்போரைக் குறிப்பிடலாம். மோதல் உச்சத்தை அடைந்தபோது, ஆரிய - கலிங்க வம்சங்களில் அடங்காத, குலிங்கர், சோழர் முதலியோரும் அரசாட்சியில் பங்கெடுக்குமளவு

பொலனறுவை அரசு, ஸ்திரமற்றதாக நீடித்து வந்தமை தெரிகிறது.

எனில் இதில் சோழர்களின் பங்கு என்ன? பாண்டியனின் முடியும் வாளும் உரோகண அரசன் மகிந்தனிடம் ஒப்படைக்கப்பட்டது அவர்கள் இருவருமே ஒரே ஆரியகுலத்தினர் என்பதால் தான். பொலனறுவையில் ஆரியகுலம் முடி தரிப்பது என்பது, பாண்டிய அரசு அங்கு முடிதரிப்பதாகவே கொள்ளப்படும். இது மதுரையை மீட்கப் போராடிக்கொண்டிருக்கும் பாண்டியர்களுக்கும் நல்ல வாய்ப்பாகப் போய்விடும். அப்படி ஆரிய அரசனான பராக்கிரமபாகு கோலோச்சியபோது தான் பாண்டியர்களுக்கு ஆதரவான சிங்களப் படையொன்று சோழரை எதிர்த்துத் தமிழகம் சென்றிருந்தது.

எனவே பொலனறுவை அரசை குழப்பநிலையில் வைத்திருக்கவே சோழ அரசும் விரும்பியிருக்கும். ஆரிய-கலிங்க குலப்பூசல் இதற்கொரு வாய்ப்பாகப் போயிருக்கிறது. இலங்கை விடயத்தில் கலிங்கரை தன் பக்கம் வளைத்து ஆரிய குலத்துக்கெதிராக தொடர்ச்சியாக அவர்களைப் போராடவைக்கும் முயற்சியிலேயே சோழம் ஈடுபட்டிருக்கிறது என்பது இதன் மூலம் தெரியவருகிறது. கலிங்கர்கள் சோழர்களைப் போலவே தங்களைச் சூரியவம்சம் என்று சொல்லிக்கொண்டதும், கீழைக்கங்கர்களுடன் சோழர்களுக்குப் பிற்காலத்தில் மணவுறவுகள் ஏற்பட்டதும், இந்தக் கலிங்கச் சார்புக்கான துணைக்காரணங்களாக இருக்கலாம்.

ஆரியகுலத்து லீலாவதி பொலனறுவையை ஆளும் போது, கலிங்க குல சாகசமல்லனை சோழர்கள் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வரவேற்று இலங்கைக்கு அனுப்பி வைத்தது பாண்டியர்க்கு ஆரியரின் துணை கிடைக்கக்கூடாது என்பதால் தான். அதே சோழர்கள் அதே லீலாவதி இரண்டாம் தடவை முடிசூடியபோது, தாங்களே நேரடியாகக் களத்தில் இறங்கி அணிகங்கன் எனும் சோழத்தளபதியை அனுப்பி ஆரியகுலத்தின் ஆட்சியைக் கவிழ்க்கிறார்கள். மூன்றாவது தடவை சுந்தரபாண்டியன் மதுரையை மீட்பதில் தன் உச்சவிசையைப் பயன்படுத்திக்கொண்டிருந்த போதும் இதே சூழ்ச்சி நடந்தேறியிருக்கிறது, இலங்கையில் மூன்றாண்டுகள் அமைதியாக ஆட்சிபுரிந்து கொண்டிருந்த பராக்கிரம பாண்டியன், மதுரைச் சுந்தரபாண்டியனுக்கு படையுதவி புரியலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் தான், மாகோனுக்குத் துணையாகப் பெரும்படையை அனுப்பி, ஆரியகுலம் வேரறுக்கப் படுவதற்கு சோழம் பங்காற்றியிருக்கிறது. எவ்வாறெனினும், பாண்டிய அரசு பழையபடி தலைநிமிர்வதை சோழர்களால் முற்றாகத் தவிர்க்கமுடியவில்லை.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, பொலனறுவை அரசில் ஆரியர்களை விட கலிங்கர்களே பலம் வாய்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் கலிங்க மாகோனின் வருகையுடன் கலிங்ககுலத்தின் ஆதிக்கம் சரிந்தழிகின்றது. கலிங்கத்தின் எதிரியான ஆரியம் சிங்களத்துடன் இணைந்து மேலெழுவதை பிற்காலத்தில் முதலாம் புவனேகபாகுவின் வரலாற்றில் காண்கிறோம். மகாவம்சம் ‘உண்மையான ஆரியன் அல்லன்’ என்று தொண்டையைச் செருமும் ஆரியச்சக்கரவர்த்தியின் வருகையும், யாழ்ப்பாண அரசின் மலர்ச்சியும் இதே காலத்தில் தான் நிகழ்கிறது. இலங்கைத்தீவின் வடக்கும் தெற்கும் ஆரிய வம்சங்கள் பெருமிதத்துடன் நிலைபெறுகின்றன. கலிங்க வம்சம் அதன் பிறகு இலங்கையில் தலைநிமிரவே இல்லை.

இப்படி, சோழரும் கலிங்கரும் ஒன்றிணைந்து, பாண்டியர் - சிங்களர் கூட்டை முறியடிக்க முயன்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கான புதியதோர் சான்று கிவுலக்கடவலைக் கல்வெட்டின் வழியே வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. சோழர், பாண்டியர், சிங்களர், ஆரியர், என்ற பதங்களுக்கெல்லாம் இன்றுள்ள பொருள் வேறு. குறுகிய கண்ணோட்டத்துடன் அவற்றைப் படித்து - அது தமிழரோ சிங்களவரோ - அடையும் இனப்பெருமிதமும் வேறு. இடையே எண்ணூறாண்டுகள் இடைவெளியில் அத்தனையையும் புரட்டிப் போட்டு கெக்கலி கொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கிறது காலம். வரலாற்றின் அபத்தத்தை எண்ணும் போதெல்லாம் வெறும் பெருமூச்சன்றி வேறெதுவும் எஞ்சுவதில்லை.



thulanchanan.v@thaiveedu.com


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

# எமது சூரியக் குடும்பம்

அறிவியல் தொடர் - 5





வெள்ளிக்கிழமை 25-02-2022

ரொறன்ரோ நேரம் - காலை 8.00

உரையாளர்: **சாம் தில்லையா**

Join Zoom Meeting

**Zoom ID: 84777257162 Passcode: 554268**

# தமிழ்வலை - 76


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-76 வினா

**இடமிருந்து வலம்**

1 முறம்

3 பழம்பெரும் நகைச்சுவை நடிகர்

6 காரியம்

7 ஒருவகை மீன்

8 சுகயீனம்

9 ஒருவகைத் தானியம்

10 விரித்துரை

12 உள்

13 பாப்பரசரின் ஆள்புலம்

16 பிடிவிறாந்து

**மேலிருந்து கீழ்**

1 இந்தோனேசியாவின் முதலாவது அதிபர்

2 பணிவிடை

4 உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய நூல்

5 கிழக்கிலங்கையில் ஓர் இடம்

6 இஸ்லாமியரின் கடவுள்

9 கண்டி

11 எம்.ஜி.ஆர். அமைத்த கட்சி (1-1-1-1)

13 இளம்பனை

14 ¼


15 ஒரு வாத்தியம்

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**
**மினன்னஞ்சல் முகவரி:**
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 75க்கான விடைகள்



## தமிழ்வலை-75 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

மலர் ஜெகதீசன், ஸ்கார்பரோ
ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
விநோதா வசீகரன், மார்க்கம்.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
மேரி கெலன் தேவதாஸ், நோத்யோர்க்
பவளராணி அழகரத்தினம், நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

**நவம் சண்முகநாதன்,**

**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com




உலகின் முன்னணி காணி, வீடு விற்பனை நிறுவனமான **RE/MAX** முதல் தடவையாக யாழ் மண்ணில்

# RE/MAX NORTH REALTY

Each office is independently owned and operated


கனடாவிலிருந்து தாயகத்தில் எப்பாகத்திலும் வீடு காணி வாங்க விற்க சிறந்த ஒரு நண்பர் உங்களை வழிநடத்த

**LKR 15,000,000 CAD $ 109,025**




Beach Side Land for sale in Pothuvil (Sangamam Village, Thirukovil)
Land Size: 01 Acre

**LKR 77,500,000 CAD $ 574,582**




Famous and spacious Commercial Building For sale in Prime Location Jaffna
Land Size - 34 Perch • Building Size - 5358sqft

**LKR 140,000,000 CAD $ 1,015,257**



Famous Palmera Eco Resorts for sale in Nilaveli, Trincomalee
Land Size :- 143 Perch • Total Sqft :- 38,932

**LKR 6,000,000 CAD $ 43,236**



House For Sale in Memorial Lane, Manipay
Land size - 16.05 Perch

**LKR 5,000,000 CAD $ 35,449**




House For Sale in Urumpirai West
Land size - 41.9 Perch

**LKR 28,000,000 CAD $ 204,219**



Brand New 2 Story House For Sale in Vannarpannai
Land Size - 23.1 Perch

**LKR 10,000,000 CAD $ 70,877**



Land for sale in Kanagar village, Pottuvil
Land Size - 732 Perch

**LKR 2,800,000 CAD -$ 20,476**



Land For Sale in Muthamil Road, Kottaddy
Land Size - 13.2 Perch

**LKR 6,800,000** SOLD




House For Sale in Thinaveli
Land Size - 23.12 Perch

**LKR 22,000,000 CAD $ 159,281**



Land for sale in Tanankilappu, Chavakachcheri
Total Land Size - 110 Larchams

**LKR 2,000,000 CAD $ 14,450**



Land For Sale In Valvettithurai
Land Size - 30 Perch

**LKR 2,100,000** SOLD




Land for sale in 3rd Cross St, Paasaiyoor
Land Size: - 30 Perch

**LKR 4,000,000 CAD $ 28,937**



Land For Sale In Valvettithurai
Land Size - 60 Perch

**LKR 9,000,000 CAD $ 65,480**



Land For Sale In Valvettithurai
Land Size - 83.8 Perch

**LKR 12,000,000 CAD $ 87,692**



House with Land For Sale in Allarai North
Land Size - 125perch

**LKR 600,000,000 CAD $ 4,395,926**




Luxurious Business complex For Sale In Kiramakottu Junction Point Pedro
Land Size - 61 Perch • Total Sqft - 50,771

**LKR 27,500,000** SOLD



Two Story Luxury House For Sale in Nallur
Land Size: - 10 Perch

**LKR 36,000,000 CAD $ 262,381**




Land For Sale in Palaly road, Vasavilan
Land Size - 150 Perch

**LKR 3,000,000 CAD $ 21,677**



Land for Sale In Valvettithurai
Land Size - 45 Perch

**LKR** SOLD



Land For Sale in Kaithady
Land Size - 38 Perch



Lathan Varatharajah
Broker Owner
+94 76 493 3331
lathan@remaxnorth.lk



Sarmilin Rajeevan
Real Estate Representative
+94 77 227 6498
sarmilin@remaxnorth.lk

வீடு, காணி வியாபாரம் வாங்க விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள் நட்பான விற்பனை முகவர்கள் ஒரே முகவரியில்

**+94 77 566 0000 • +94 21 468 0780**
**www.remaxnorth.lk**
**111C Kannathiddy Road, Jaffna, Sri Lanka**



Nitharsan Antonrasa
Real Estate Representative
Mobile: +94 77 222 0243
nitharsan@remaxnorth.lk



M.T. Mohamed Ismail
Real Estate Representative
+94 77 221 6916
ismail@remaxnorth.lk

# கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

பகுதி 1

தமிழிலக்கியத்தில் தலைசிறந்து விளங்குவது கம்பராமாயணம். கம்பரையும் கம்ப ராமாயணத்தையும் பற்றிச் சிறிதளவாவது அறிந்திராத தமிழர் யாரும் இருக்கமுடியாது. 'யாமறிந்த புல-வரிலே கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை. உண்மை வெறும் புகழ்ச் சியில்லை', 'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்', 'கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்றவாறெல் லாம் மகாகவி பாரதியார் கம்பரைப் பலவாறு புகழ்ந்து பாடி யுள்ளார். 'அம்புவியில் மக்கள் அமுதம் அருந்த வைத்த கம்பர் கவியே கவி' என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை குறிப்பிட் டுள்ளார். 'கல்வியிற் பெரியோன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்னும் முதுமொழிகள் வழக்கத் திலுள்ளன. 'விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்று சொக்கநாதப் புலவர் எழுதிய தனிப்பாடல் வரியுமுண்டு. இவ்வாறு பல புலவர்களும், அறிஞர்களும் கம்பனின் புலமையைச் சிறப்பித் துக் கூறியுள்ளார்கள்.

தமிழிலும் வடமொழியிலும் ஆழமான புலமையுடையவர் கம்பர், வால்மீகி இராமாயணத்தை மூல நூலாகக் கொண்டு கம்ப ராம-ாயணத்தைப் படைத்தார் எனினும் அதனை ஒரு தழுவல் நூலாக அல்லது மொழிபெயர்ப்பு நூலாக அவர் எழுதவில்லை. கதைக் கருவை வைத்துக்கொண்டு தமிழ் நிலத்தையும், தமிழர் பண் பாட்டு மரபுகளையும் பிரதிபலிக்கும் காவியமாகக் கம்பராமா யணத்தைப் படைத்தளித்தார் என்பதே கம்பருக்குரிய சிறப்பாகும். கம்பராமாயணத்தில் தமிழர் காதல், தமிழர் வீரம், தமிழர் பண் பாட்டு மரபுகள் யாவுமே மலர்ந்து பொலிந்து மணம் வீசுகின்றன.

*கழுந்தராய் உனது கால்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே*
*அழுந்த ஆளிகள் தொடுசிலை இராகவ அபிநவ கவிநாதன்*
*விழுந்த ஞாயிறது எழுவதன் முன்மறை வேதிய ருடனாய்ந்து*
*எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடியது எழுநூறே*

என்னும் தனிப் பாடலொன்று கம்பராமாயணத்தில் வரும் பத்தாயி ரத்துக்கு மேற்பட்ட பாடல்களையும் நாளுக்கு எழுநூறு பாடல் என்ற வகையில் 15 நாட்களிலே கம்பர் எழுதி முடித்தார் என்று கூறுகிறது. இச்செய்தி உண்மையாக இல்லாமல் உயர்வு நவிற் சியாக இருந்தாலும் கூடத் தொழில் நுட்ப வசதிகள் இல்லா திருந்த அக்காலத்தில் பத்தாயிரம் முத்தான பாடல்களில் ஒரு காப்பியத்தைக் கம்பர் இயற்றினார் என்பது அவரது அசாதாரணச் சிறப்பியல்பைக் காட்டுகிறது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல் களும் கம்பரால் வெறும் எண்ணிக்கைக்காக எழுதப்பட்டவை அல்ல. ஒவ்வொரு பாடலும் ஆழ்கடலில் மூழ்கியெடுத்த முத்துப் போன்றது. 'பத்தாயிரம் கவிதை முத்தாகத் தந்த சத்தான கம்ப-னுக்கு ஈடு இன்னும் வித்தாகவில்லை என்று பாடு' என்னும் கண்ணதாசனின் கவிதை வரி முற்றிலும் நிதர்சனமானது. தமிழ்த் தாயின் கருவூலத்திலிருக்கும் அந்த முத்துகளில் சில முத்தான முத்துகளை எடுத்து ஒரு கவிஞனின் பார்வையில் உங்களுடன் பங்குவைக்கும் நோக்கில் இக்கட்டுரைத் தொடரை எழுத விழை கிறேன். கம்பனின் கவித்தேனைப் பருகுவதற்கு முன்னால் கம்-பரின் வரலாற்றுக் குறிப்பைச் சுருக்கமாகவேனும் அறிந்து கொள்வது இன்றியமையாதது.

### கம்பரின் வரலாறு:

கம்பரைப் பற்றிய வரலாறு வழமைபோல மறைக்கப்பட்டும் திரிபு படுத்தப்பட்டும் பல புனைவுகளாகவும் இருக்கின்றது. அதனால் அவரது முழுமையான வரலாற்றைச் சரியாக அறிந்து கொள்ள முடிவதில்லை. எனவே அறிஞர்களால் பொதுவாக ஏற்றுக் கொள் ளப்பட்ட தகவல்களைக் கொண்டே அவரது வரலாற்றை அறிந்து கொள்ளலாம். கம்பர் சோழநாட்டில் தஞ்சை மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள திருவழுந்தூர் என்னுமிடத்தில் ஒச்சர் எனப்படும் இசைக்கலைஞர் குடியில் பிறந்தார் எனவும் அவரது தந்தையார் பெயர் ஆதித்தன் எனவும் அறியக் கிடைக்கிறது. தாயார் பெயர் தெரியவில்லை.

கம்பன் என்ற பெயருக்கான காரணங்கள் பற்றியும் பல கதைகள் கூறப்படுகின்றன. கம்பன் என்பது பெற்றோரால் இவருக்குச் சூட்டப்பெற்ற இயற் பெயர் என்பது சிலரது கருத்து. கம்பநாடு என்ற நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் கம்பன் எனப் பெயர் பெற் றார் என்பர் சிலர். குழந்தையாக ஒரு காளி கோயில் கம்பத்தின் அருகே கிடந்தமையால் இப்பெயர் பெற்றார் என்பது வேறு சில ரின் கூற்று. சோழ மன்னனின் முன்னே கம்பு ஒன்றைத் தாங் கியபடி நிற்க அம்மன்னன் இக்கம்பனா என விழித்துக் கேட்டத னால் கம்பன் எனப் பெயர் பெற்றார் எனவும் கூறப்படுகின்றது. கம்பருடைய புலமையை மெச்சி, சோழ மன்னன் ஒரு நாட்டை யும், யானையையும் பரிசளித்தான் எனவும் அந்த யானையை கம்பம் ஒன்றில் கட்டி வைத்துப் பராமரித்ததனால் கம்பன் எனப் பெயர் பெற்றார் எனவும் அந்த நாடு கம்ப நாடு என அழைக்கப் பட்டதாகவும் இன்னும் பல செய்திகளும் கூறப்படுகின்றன. எது எவ்வாறாயினும் கம்பன் என்ற பெயர் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமில்லை.

கம்பரது காலம் எது என்பதைத் துல்லியமாகக் கூற இயல வில்லை. 'எண்ணிய சகாப்தம் எண்ணூற் றேழின்மேல்' என்னும் தனிப்பாடல், கம்பராமாயணம் சாலிவாகன சகாப்தம் 807ல் அரங்கேற்றப் பட்டதாகக் குறிக்கிறது. சாலிவாகன சகாப்தம் 807, கி. பி. 885 ஆண்டினைக் குறிப்பதால் கம்பர் இராமாயணத்தை கி. பி 885ல் அரங்கேற்றினார் என்பர் சிலர். அதனால் கம்பரது காலம் ஒன்பதாம் நூற்றண்டு அல்லது பத்தாம் நூற்றாண்டாக இருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது. ஆனால் இக்கூற்றினை வையாபுரிப்பிள்ளை போன்ற ஆய்வாளர்கள் மறுத்துக் கூறியுள் ளார்கள். கம்பரின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி-யென்பதும் சில அறிஞர்களது கருத்தாக இருக்கிறது. விருத்தக் கவிதையில் முதலில் சீவக சிந்தாமணி என்னும் காவியத்தைப் படைத்தவர் திருத்தக்கதேவர். கம்பர் திருத்தக்கதேவருக்குப் பிந் தியவர். கம்பர் மூன்றாம் குலோத்துங்கன் என்னும் சோழ மன்ன

னிடம் கருத்து வேறுபாடு கொண்டு ஆந்திர நாட்டில் தங்கியிருந் ததாகச் சொல்லப்படும் கதையைக் கொண்டு கம்பரது காலம் குலோத்துங்க சோழனின் காலமாகிய பன்னிரண்டாம் நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது. முதலாம் இராசராசனுக்கு முன்பிருந்த உத்தம சோழன் காலம் எனவும் சிலர் கூறுகின்றனர். மா. இராச மாணிக்கனார் போன்றோர் கி.பி 1325க்கு முன்பே கம்பராமாயணம் இயற்றப் பட்டிருக்க வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். அவ்வாறாகக் கம்பரின் காலம் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

## கம்பரின் நன்றியுணர்வு:

புலமையும் வறுமையும் ஒன்றாகப் பிறந்தது என்பது அக்காலத் தமிழகத்தின் இயல்பாகக் காணப்பட்டது. சிறு வயதிலேயே தந்தையை இழந்துவிட்ட கம்பரை இளமையிலிருந்தே ஆதரித்து அவரின் புலமையை உலகறியச் செய்ய உதவியவர் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் அவர்கள். கம்பராமாயணப் பாயிரத்தில் 'நடையினின்றுயர்' என்னும் பாடலிலும், பாலகாண்டம் வேள்விப்படலத்தில் 'விண்ணவர் போயபின்' என்னும் பாடலிலும் அகலிகைப்படலத்தில் 'அரமடந்தையர்' என்னும் பாடலிலும் மிதிலைக் காட்சிப் படலத்தில் 'வண்ணமாலைக் கைபரப்பி' என்ற பாடலிலும் சடையப்ப வள்ளலைப் பற்றிப் பாடித் தனது நன்றியுணர்வைத் பதியவைத்துள்ளார். யுத்தகாண்டத்தில் சேதுபந்தனப் படலத்தில் 'மஞ்சினிற் றிகழ்தரு' என்ற பாடலிலும், நாகபாசப் படலத்தில் 'வாசங்கலந்த' என்னும் பாடலிலும், மருத்து மலைப் படலத்தில் 'வன்னிநாட்டியப் பொன்' என்னும் பாடலிலும், திருமுடி சூட்டுப்படலத்தில் 'அந்தணர் வணிகர்' என்னும் பாடலி லும், 'அரியணை அனுமன் தாங்க' என்னும் பாடலிலும், விடைகொடு படலத்தில் 'மறையவர் வாழி' என்னும் பாடலிலும் எனத் தன்னை

**கம்பராமாயணத்துக்குள் நுழைந்து ஆழமாகவும் கூர்மையாகவும் பார்வையைச் செலுத்தினால் அதிலுள்ள ஒவ்வொரு பாடலுமே பல பக்கங்களில் விரித்துக் கூறக்கூடிய கவிநயம் கொண்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.**

ஆதரித்த சடையப்ப வள்ளலை வாழ்த்திப் பாடியிருக் கிறார். இவ்வாறாகக் கம்பராமாயணத்தில், பாயிரத்தில் ஓரிடத்தி லும், பாலகாண்டத்தில் மூன்றிடங்களிலும், யுத்த காண்டத்தில் ஆறு இடங்களிலும் என்று கம்பராமாயணத்தில் பத்து இடங்களில் சடையப்ப வள்ளலைப் பாராட்டிப் பாடித் தனது நன்றியுணர்வை வெளிப்படுத்தியுள்ளது மிகவும் போற்றத் தக்கது.

## கம்பரின் ஏனைய நூல்கள்:

கம்பர் கம்பராமாயணத்தால் புகழ் பெற்றிருந்தாலும் சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி ஆகிய வேறு நூல்களையும் படைத்துள்ளார். இவர் காலத்துப் புலவர்களாக ஒட்டக்கூத்தர், புகழேந்திப்புலவர், ஔவையார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தொண்டை மண்டல சரிதம், தமிழ் நாவர் சரிதை, பாண்டி மண்டல சதகம் ஆகிய நூல்களிலிருந்து கம்பரது வரலாற்றுத் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

## கம்பராமாயணத்தின் கட்டமைப்பு:

கம்பரின் பெயரை இராமாயணத்துடன் இணைத்துக் கம்பராமாயணம் என நாம் இப்போது அழைக்கின்ற நூலுக்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம். இந்நூலைக் கம்பர் சிறுபான்மை திருவழுந்தூரிலும் பெரும்பான்மை திருவெண்ணெய் நல்லூரிலும் இயற்றினார் எனக் கூறப்படுகிறது. இந்நூலைத் திருவரங்கத்துப் பெரியோர் கூடிய சபையில் அரங்கேற்றினார் எனவும் அறியப் படுகிறது.

*கரைசெறி காண்டம் ஏழு கதைகள் ஆயிரத்தெண் ணூறு*
*பரவுறு சமரம் பத்துப் படலநூற் றிருபத் தெட்டே*
*உரைசெயும் விருத்தம் பன்னீ ராயிரத் தொருபத் தாறு*
*வரமிகு கம்பன் சொன்ன வண்ணமுந் தொன்னூற் றாறே.*

என்னும் தனிப்பாடல் கம்பராமாயணத்தின் கட்டமைப்பைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது. பெரும் பிரிவுகளாக எழு காண்டங்கள், சிறு பிரிவுகளாக நூற்றிருபத்தெட்டுப் படலங்கள் கொண்ட அமைப்பில் ஆயிரத்தெண்ணூறு கிளைக் கதைகள், பத்து போர்கள் உள்ளடக்கியதாகப் பன்னீராயிரத்து நூற்றிப் பதினாறு விருத்தப் பாடல்களால் தொன்னூற்றாறு வகையான வெவ்வேறு வண்ணங்களில் (சந்தங்களில்) கம்பர் கம்பராமாயணத்தை இயற்றித் தந்துள்ளார் என்று இப்பாடல் குறிக்கிறது. இப்பாடலில் இராமாயணத்தின் ஏழுகாண்டங்களையும் கம்பர் இயற்றினார் எனக் கூறப் பட்டுள்ளது. ஆனால் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணியகாண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களே கம்பரால் எழுதப்பட்டவை என்பதும், இறுதிக் காண்டமாகிய உத்தர காண்டம் வாணி தாசன் எனப் போற்றப் பெறும் புலவர் ஒட்டக் கூத்தரால் இயற்றப்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு காப்பியத்துக்குரிய அத்தனை இலக்கணங்களும் முழுமையாகப் பொருந்தியுள்ள கம்பராமாயணம் ஏன் ஐம்பெருங் காப்பியங்களோடு ஒன்றாகக் கணிக்கப்படவில்லை என்ற வினா நம் மனதில் எழலாம். ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் தோன்றிய காலமும், அவை காப்பியங்களாக வகுக்கப்பட்ட காலமும் சங்கம் மருவிய காலம் என்பதும், அக்காலத்தில் தமிழ் நாட்டில் எழுச்சி பெற்றிருந்த சமணம், பௌத்தம் ஆகிய மதங்களைச் சார்ந்த புலவர்களால் அந்நூல்கள் இயற்றப்பட்டவை என்பதையும் அறிந்து கொண்டால் அவ்வினாவிற்கு விடை கிடைத்துவிடும்.

## நுழை வாயிலில் அடிவைப்பதற்கு முன்:

கம்பராமாயணத்துக்குள் நுழைந்து ஆழமாகவும் கூர்மையாகவும் பார்வையைச் செலுத்தினால் அதிலுள்ள ஒவ்வொரு பாடலுமே பல பக்கங்களில் விரித்துக் கூறக்கூடிய கவிநயம் கொண்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இக்கட்டுரையை எழுதப் புகும் போது கம்பர் தனது நூலுக்கு எழுதிய தற்சிறப்புப் பாயிரம் என் மனக்கண்முன் விரிகிறது.

*ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு*
*பூசை முற்ற வுநக்குபு புக்கென*
*ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்*
*காசில் கொற்றதி திராமன் கதையரோ.*

என்பது அவரது அவையடக்கப் பாடல்களில் ஒன்று. ஓங்கி ஒலிக்கும் திருப்பாற்கடலை அடைந்து அதிலுள்ள பால் முழுவதையும் நக்கிப் பருகுவதற்கு ஒரு பூனை முயற்சி செய்வதைப் போன்றதே தானும் இராம காதையைப் பாடிமுடிப்பது என மிகப் பெரிய புலமை ஆளுமை கொண்ட கம்பரே தன்னடக்கமாகச் சொல்லி வைத்தபோது, அந்தக் கவிப்பேரரசரின் கவிநயப் பெருங் கடலுள் இறங்கி அதன் ஆழ அகலத்தை அளக்க முயல்கின்ற எனது சிற்றறிவை எவ்வாறு கூறமுடியும். எனவே அப்பெருங் கடலின் கரையிலேயே சிறிது முக்கி முழுகி எழுந்திருக்க முயற்சி செய்யப் பார்க்கிறேன்.

(தொடரும்)



shanmugarajah@thaiveedu.com

# தொன்மையைத் தேடி ஆதித் தமிழர் திணை வழிக் குடிகள் (14)

பகுதி - III

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும்'. தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந்'நூற்பாக்களில் பயின்று வரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

## சென்ற இதழில்...,

இந்தியத் துணைக் கண்டம், தொல்காப்பியர் காலத்திற்கு முன்னைய காலப் பகுதியில் எவ்வாறு இருந்தது என்பது பற்றிய வரலாற்று ஆய்வாளர் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. இவை,

- பழைய கற்காலம் - சுமார் பொ.ஆ.மு.(கி.மு.) 10,000 ஆண்டுகள் வரை நீடித்திருந்தது என்றும்
- இடைக் கற்காலம் - சுமார் பொ.ஆ.மு. 10,000 முதல் பொ.ஆ.மு. 2800 வரை நீடித்திருக்கலாம் என்றும்
- புதிய கற்காலம் - பொ.ஆ.மு. 2800 முதல் நிலவியது என்றும்
- பெருங்கற்படைக் காலம் - பொ.ஆ.மு. 1000 முதல் பொ.ஆ. (கி.பி.) 100 வரை நிலைத்திருக்கிறது என்றும் கருதப்படுகிறது.

சங்ககாலம் வீரயுகத்தின் பிற்காலம் என்பது அறிஞர் கருத்து. காதலையும் வீரத்தையும் போற்றி வளர்த்த காலம் அது. சங்க கால அரசியல் வரலாறு தமிழ் நாட்டு வரலாற்றில் ஓரளவுக்குக் கணிக்கக் கூடியதாக வரலாற்றுக் காலம் என்று கூறும் நிலையில் இருக்கிறது. ஆனால் சங்க கால அரசியல் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் பற்றிய அறிவு மிகக் குறைவாகவே காணப்படுகிறது. சங்க காலத்தையும் தொல்காப்பியர் காலத்தையும் ஒன்றாக்கி ஆராயும் முறையே பெருமளவுக்கு நிலவி வந்திருக்கிறது.

சங்க இலக்கியங்களை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வுகளில், அடிப்படையிலேயே பல தகவல்கள் விடுபட்டுப் போன காரணத்தால் முடிவுகளும் முற்றாக ஏற்றுக் கொள்கிற மாதிரி இல்லை என்னும் ஆய்வாளர் கருத்து ஆராயப்பட்டது.

பெருங்கற்படைச் சின்னங்கள் கீழ்க்கண்ட 4 நிலைகளில் ஆராயப் பட்டுள்ளது -

- முதல் நிலைப் பெருங்கற்படைச் சின்னங்கள் - இறந்த வீரர்களைப் 'பதுக்கை' எனப்படும் கற்குவைகளால் மூடப்பட்ட காலம் (எ.டு - தமிழ் நாடு, தாண்டிக்குடி)
- இரண்டாம் நிலைப் பெருங்கற்படைச் சின்னங்கள் - இறந்த வீரர்களை அடக்கம் செய்த கற்பதுக்கைகளைச் சுற்றி பீடும் பெயரும் எழுதிய நெடும் கற்கள் நடப்பட்ட காலம்.
- மூன்றாம் நிலைப் பெருங்கற்படைச் சின்னங்கள் - கற்பதுக்கைகளைத் தவிர்த்து இயற்கையாக நிற்கும் ஒரு கல்லில் இறந்த வீரரது வடிவம் செதுக்கிய காலம்.
- நான்காம் நிலைப் பெருங்கற்படைச் சின்னங்கள் - நெடுங்கற்கள் நடுகற்களாகிய காலம்.

இவ்வியல்...
பெருங்கற்படைச் சின்னங்களின் காலத்திற்கும் தொல்காப்பியர் காலத்திற்கும் இடையிலான கால வரலாறு பற்றிய ஆய்வு தொடங்குகிறது.

இந்த ஆய்வு முறையே, சங்ககாலம், தொல்காப்பியம், தொல்லியல், பெருங்கற்படை சின்னங்கள் என்ற அடிப்படையில் பின்னிருந்து முன்னாக நகர்ந்து பெருங்கற்படைக் காலத்திற்கும் சங்க காலத்திற்கும் இடைப்பட்ட காலத் தமிழக வரலாற்றை நிறுவ முயல்கிறது.

- சங்கத் தொகை நூல்கள் காட்டும் அரசுகள், சமூகம், பொருளாதாரம் முதலியவற்றை நிறுவுதல்.
- தொல்காப்பியம் காட்டும் அரசுகள் பற்றிய தகவல்களுடன், சமூகம், பொருளாதாரம் பற்றிய தரவுகளையும் நிறுவுதல்.
- இன்றைய நிலையில் தொல்லியல், வெளிநாட்டார் குறிப்புக்கள் முதலிய மூலங்களிலிருந்து கிடைக்கும் தரவுகளையும் ஒருங்கிணைத்து,
- பெருங்கற்படைச் சின்னங்களின் காலத்தை அடுத்து வரும் காலப்பகுதிகளின் வரலாற்று வளர்ச்சிப் படியைக் காணும் முயற்சியாகும்.

தமிழக வரலாற்றில், இதுவரை காலம் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுகள், பிற சான்றுகள், அனுமானங்கள் முதலியவற்றின் அடிப்படையில் பெருங்கற்படைக் காலம் வரை பயணித்து வந்து விட்டோம். இவை முடிந்த முடிவுகள் அல்ல. காலத்தால் மேற்கொள்ளப்படும் தொடர் ஆய்வுகள், இம் முடிவுகளை மீளாய்வு செய்யும் நிலைக்குக் கொண்டு வரலாம்.

பெருங்கற்படைக் காலத்தில், அதாவது பொ.ஆ.மு. 1000ம் ஆண்டளவில் தமிழர் வரலாற்றுக் காலத்தினுள் நுழைகிறோம். இந்தக் காலகட்டத்தில் தென்னிந்திய தீபகற்பத்தில் மனிதனது வாழ்வியலில் ஏற்பட்ட முன்னேற்றத்தைச் சிறிது பார்க்கலாம்.

## புதிய கற்காலத்தில் ஏற்பட்ட வாழ்வியல் மாற்றங்கள்:

- மனிதன் உணவு சேகரிக்கும் நிலையிலிருந்து உணவு உற் பத்தி செய்யும் நிலைக்கு மாறினான். இதனால் சமூக அமைப் பில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாயிற்று.
- குழி வீடுகளிலிருந்து வளர்ச்சியடைந்து தரைக்கு மேல் வீடு களை அமைத்து வாழ்ந்தனர்.
- சிவப்பு, சாம்பல் நிற மட்கலங்களைப் பயன்படுத்தினர். இக்கால மட்கலங்கள் பெரும்பாலும் கையாலும் சில சக்கரத் தாலும் செய்யப்பட்டவை.
- கல்துடுப்பு போன்ற கருவிகள், அம்மிக் குழவி, திரிகை முதலி யன பாவிக்கப்பட்டிருக்கின்றன.
- மாடு, ஆடு, மான், பன்றி, காட்டுப்பூனை முதலியவற்றை வளர்ப்பு விலங்குகளாகவும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.
- தொல்பழங்கால ஓவியங்கள், வீட்டில் மனிதன் நிற்பது போல வும், வீட்டின் முன்னால் குதிரை, ஒட்டகம் முதலிய விலங்குகள் இருப்பது போலவும் கோட்டுருவமாக வரையப்பட்டுள்ளன.
- கொள்ளு, வரகு போன்ற புன்செய் பயிர்கள் பயிரிடப்பட்ட தடயங்கள் கிடைத்துள்ளன.

## தொல்காப்பியம்:

தமிழ் மொழி அதன் வளர்ச்சிப்படியின் உச்சத்தில் இருந்த ஒரு காலத்தில் தான் தொல்காப்பியம் தொகுக்கப்பட்டிருக்கிறது என்ப தில் மாற்றுக் கருத்துக் கிடையாது. பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்த ஒரு சமூகத்தினால் தான் அதன் மொழியையும் உயர் நிலைக்குக் கொண்டு செல்லமுடியும் என்பதற்குத் தமிழ் நாட்டின் வரலாறே சான்றாகும்.

தொல்காப்பியம் ஒரு தொகைநூல், அதாவது தொல்காப்பியர் காலத்திற்கு முன் வாழ்ந்த பல இலக்கணக்காரர்களால் பல்வேறு காலப்பகுதிகளில் வளர்த்தெடுக்கப்பட்ட இலக்கண வழக்குகளை யும் தன் காலத்து வழக்குகளையும் ஒருங்கிணைத்து தொகுக்கப் பட்டதே தொல்காப்பியம். இந்தக் கருத்தைத் தொல்காப்பியரே தொல்காப்பியம் எங்கணும் 'என்ப', 'என்மனார் புலவர்', 'என்றிசி- னோரே' என்று 200 க்கு மேற்பட்ட இடங்களில் 'அவ் விதிகளுக் குச் சொந்தக்காரர்களை' நினைவு கூர்கிறார்.

இதன் மூலம் அறிய வருவது தொல்காப்பியர் காலத்திற்கு முன்னமே தமிழ் அறிஞர்கள் வாழ்ந்திருந்து தமிழை வளர்த்திருக் கிறார்கள் என்பதாகும். அதாவது, தொல்காப்பியம் பொ.ஆ.மு. 711ம் ஆண்டில் திடீரென அண்டத்திலிருந்து குதித்த ஒரு நூல் அல்ல.

தொல்காப்பியம் என்பது பல சான்றோர்களின் பன்னெடுங் கால உழைப்பின் பயன் என்பதை நாம் ஏற்றுக் கொண்டால் பெருங்கற் படைக் காலத்திற்கும் தொல்காப்பியர் காலத்திற்கும் இடையே உள்ள வெளி குறுகிவிடும்.

## ஆய்வியல் அட்டவணை:

பெருங்கற்படைக் காலத்திற்கும் தொல்காப்பியக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் தென்னிந்தியத் தீபகற்பத்தில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் பற்றிய ஆய்வு கீழ்க் காணும் அட்டவணை ஒழுங்கில் முன்னெடுக்கப்படுகிறது:

- பொ.ஆ.மு. 3 முதல் 1ம் நூ. வரை - சங்ககால மன்னர், வேளிர், குறுநிலமன்னர், குழுத்தலைவர்.
- பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு - அசோகரின் கின்னர் கல்வெட்டும் அதியமானும்.
- பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு - அதியமான், சமகால மன்னர், பாடிய புலவர்கள் முதலியோர்.
- பொ.ஆ.மு. 8 - 9ம் நூ. அளவில் - கபிலரின் புறநானூற்றுப் பாடல் 201 இன் வழி வேளிர் குடி
- பொ.ஆ.மு. 905 - ஆதிச்சநல்லூர்
- பொ.ஆ.மு. 490 - பொருந்தல்
- பொ.ஆ.மு. 500 - கீழடி
- பொ.ஆ.மு. 4ஆம் நூ. அளவில் - கொடுமணல்
- பொ.ஆ.மு. 711 - தொல்காப்பியம்

## சங்ககால மன்னர், வேளிர், குறுநிலமன்னர், குழுத் தலைவர்:

சங்க இலக்கியங்களால் அறியப்படும் சங்க கால அரசியல், சமூக, பொருளாதார நிலைகளை, புறச் சான்றுகளான கல்வெட் டுக்கள், அகழாய்வுச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலியவற்றின் துணை கொண்டு உறுதி செய்யும் நிலை இன்று உருவாகியுள்ளது.

சங்க கால அரசியல், சமூக, பொருளாதார உயர்நிலை என்பது தீடீரென உருவானதல்ல. பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக வரலாற் றுப் பேராசிரியரும் அகழ்வாய்வாளருமான முனைவர் கே. ராஜன் அவர்கள், கீழே கொடுக்கப்பட்ட வரைபடத்தில், சங்ககால ஊர் களை அடையாளம் காட்டுகிறார் (தொல்லியல் நோக்கில் சங்க காலம் - கே. ராஜன்). இவை யாவும் தமிழகத்தில் பெருங்கற் படை எச்சங்கள் உள்ள இடங்கள்.

### தமிழகத்தில் பெருங்கற்படை எச்சங்கள் உள்ள இடங்கள்:




மக்கள் வாழ்ந்த இடங்களை விட அவர்களை அடக்கம் செய்த இடங்கள் தான் அகழாய்வில் அதிகம் கிடைத்திருக்கின்றன.

ஆனால், இங்கே காட்டப்படும் மயானங்களை அண்மித்து மக்கள் குடியிருப்புக்கள் இருந்திருக்கவேண்டும் என்பது நியாயமான அனுமானம்.

1906ம் ஆண்டில் ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு மேற்கொண்ட அலெக்சாண்டர் ரீ என்பவர் தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள கொங்கராயக் குறிச்சி என்ற ஊரே இந்த ஆதிச்ச நல்லூர் தாழிக் காட்டு மக்களின் வாழ்விடமாக இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டார். கொங்கராயக் குறிச்சியில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட செங்கல் கட்டுமானம் ஒன்றினைத் தாம் கண்டதாக ரீ தம் அறிக்கையில் குறிப்பிட்டுள் ளார். அலெக்சாண்டர் ரீயின் இக் கூற்று எமது அனுமானத்திற்கு அரண் செய்வதாக உள்ளது.

மேலே கொடுக்கப்பட்ட வரைபடத்தைத் தொல்காப்பியப் பாயி ரத்தில் கூறப்படும் தமிழ் நாட்டு எல்லைகளுடன் ஒப்பிடலாம்.
'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' (தொல். பாயிரம்)

## சங்க கால அரசியல்:

- சங்ககால அரசியல், சமூகப் பொருளாதார நிலை இந்த ஆய் வில் மிகச் சுருக்கமாகத் தரப்படுகிறது.
- சங்கப் புலவர்கள் 473 பேரில் 143 புலவர்களே அரசர்களைப் பாடியிருக்கிறார்கள்.
- தொல்காப்பியத்தில் 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்' என்று குறிப்பிடப்பட்ட தமிழ் நாடு, சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்று முப்பெரும் பிரிவுக ளாகச் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றது.

**சேர மன்னர்கள்:** அந்துவஞ் சேரல் இரும்பொறை முதலாக, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, பாலை பாடிய பெருங்கடுங்கோ, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை உள்ளிட்ட 25 சேர மன்னர்களும்,

**சோழ மன்னர்கள்:** இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலாக கரிகாற் பெருவளத்தான் உள்ளிட்ட 21 சோழ மன்னர்களும்,

**பாண்டிய மன்னர்கள்:** அண்டர்மகன் குறுவழுதி முதலாக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், ஒல்லயூர் தந்த பூதபாண்டியன், கானப்பேர் எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் உள்ளிட்ட 25 பாண்டிய மன்னர்களும் சங்க இலக்கியங்களால் அறியப்படுகிறார்கள்.

**வள்ளல்கள்:** அஞ்சி, ஆய், ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், ஓய்மான் நல்லியங்கோடன், குமணன் ஆகிய 9 வள்ளல்களும்,

**குறுநில அரசர்கள்:** அகுதை முதலாய 51 குறுநில மன்னர்களும்,

**குடிகள்:** கொங்கர், கோசர், தொண்டையர், பூழியர், மழவர், வடுகர், வேளிர் முதலிய 7 குடிகளும் சங்க இலக்கியங்களால் அறியப்படுகின்றனர்.

இவர்களில் மொத்தம் 71 முடியுடை மூவேந்தர்களும் ஏறக்குறைய சமகாலத்தவராக இருந்திருக்கலாம். குறு நில மன்னர்களும் வள் ளல்களும் மூவேந்தரின் ஆட்சிக்கு உள்பட்ட நிலப்பரப்பில் ஆட்சி செய்திருக்கலாம்.

சங்க இலக்கியங்கள் கூறும் அரண்மனைகள், மாடங்கள், ஆழ்ந்த அகழிகளால் சூழப்பட்ட மதில்களைக் கொண்ட கோட்டைகள், கடல் வாணிபம், கடல் ஆதிக்கம் இவை போன்ற எண்ணற்ற அரிய பண்பாட்டுத் தகவல்கள், அக்காலப் போர்முறைகள், தானை, யானை, குதிரைப் படைகள் படைக்கலங்கள், இவற்றை வடிவமைப்புச் செய்கின்ற வினைவலர், அரசுகட்டு, மணிமுடி முத லியவற்றில் பெரும்பாலானவை அழியக்கூடிய மூலப் பொருட்க ளாலான காரணத்தால் புறச் சான்றுகள் அற்ற நிலையில் தமிழ் மொழியின் தொன்மை, தமிழர் பண்பாட்டு வரலாறு, அரசியல், சமூகப் பொருளாதார வரலாறு நீண்ட காலமாக இலக்கியத்தால் மட்டுமே அறியப்பட்டது.

## பொருளாதாரம்:

அரச வருமானம் - மேலே விபரிக்கப்பட்ட அரசுகளினது வருமா னம் பெருமளவில் வாணிபம், வரி, திறை, முதலியவற்றிலேயே தங்கியிருந்தது.

**வணிக வருமானம்:**
- உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் என இரு வகைப்படும்.

**உள்நாட்டு வாணிபம்:**
- ஐநிலங்களில் உற்பத்தியாகும் பொருட்களில் தங்கியிருந்தது.
- தோட்டப்பயிர்ச் செய்கை - வேளாண்மை, தென்னை, பனை, பாக்கு
- சிற்பம் - சிற்பம் வடித்தல்
- அணிகலன்கள் செய்தல்
- முத்துக் குளித்தல், உப்பு உற்பத்தி, கப்பல் கட்டுதல்
- தையல், கருப்பட்டி காச்சுதல், கயிறு திரித்தல், கூடை பின்னல்
- மீன் பிடித்தல்,
- உப்பு வாணிபம் - கடற்கரைப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் உப்பு, நாடு முழுமைக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

**உள்நாட்டுத் தொழிற்கூடங்கள்:**
- மட்பாண்டத் தொழிற்சாலை
- தச்சுத் தொழிற்சாலை
- கொல்லத் தொழிற்சாலை
- நெசவுத் தொழிற்சாலை

முதலிய தொழிற்கூடங்கள் சங்க காலத்தில் பெரிய அளவில் இயங்கியிருக்கின்றன.

**உலோகங்களின் பயன்பாடு:**
தொல்காப்பியர் காலத்திலேயே (கி.மு 711) இரும்பின் பயன்பாடு இருந்திருக்கிறது. அதன் வளர்ச்சியை, பயன்பாட்டைச் சங்ககாலத் தில் காணலாம். செம்பு, இரும்பு, பொன், வெள்ளி முதலிய உலோகங்களில் பயன்பாடு உள் நாட்டு உற்பத்திக்கும், ஏற்று மதிக்கும் அதனால் பொருள் வளத்திற்கும் பெரிதும் சாதகமா யிற்று.

- இரும்புத் தொழிற்சாலைகளில் தொழில் புரியும் கொல்லர், வாள், வில், கேடயம் முதலிய போர்க்கருவிகள் பற்றியும் அங் குசம், கோடரி முதலிய பிற கருவிகள் பற்றியும் சங்க இலக்கி யங்கள் பேசுகின்றன.
- செப்புத் தொழிற்சாலைகளில் செப்பு உருக்கிப் பாத்திரம் செய் யும் கம்மியர் பற்றியும், செம்பிட்டுச் செய்தது போன்ற உறுதி யான சுவர்கள் பற்றியும், கடைகளில் செம்பு நிறுத்து வாங்கப் பட்டது பற்றியும் மதுரைக்காஞ்சி பேசுகிறது.
- பொற்கொல்லர் - பெண்கள் காது, மூக்கு, கழுத்து, கை, இடை முதலிய பகுதிகளில் பொன்னாலான அணிகலன்களை அணிவதாகச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன.
- வெள்ளியாலான கலங்கள் அரசர், வணிகர் இல்லங்களில் பயன்பாட்டில் இருந்தன.




பெரிப்புளூஸ் என்னும் மேனாட்டவரின் இவ் வரைபடம் தென்னிந்தியத் தீபகற்பத்தின் கிழக்கு, மேற்குக்கரைத் துறைமுகங்களையும் அவற்றின் வணிகப் பாதைகளையும் காட்டுகின்றன.

- பாத்திரங்கள்: மிடா, குழிசி, பிழா, குடம், குதிர் முதலிய பாத்திரங்கள் பற்றிப் பேசப்படுகிறது.

## கடல் வாணிபம்:

பொ.ஆ.மு. 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர் மேலை, கீழைத் தேயங்களுடன் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். தென் இந்தியா, வணிகப் பாதையின் கேந்திரத் தானத்தில் அமைந்து இருந்தமை, முசிறி, தொண்டி, கொற்கை, எயிற்பட்டினம் (மாமல்லபுரம்), காவிரிப்பூம்பட்டினம் போன்ற வாய்ப்பான துறைமுகங்கள் இருந்தமை முதலிய காரணங்களால் இது சாத்தியமாயிற்று.

தமிழ் நாட்டார் மேலைத் தேயங்களுடன் கொண்டிருந்த வாணிபத்தை பெரிப்புளூஸ், பிளினி, தாலமி போன்ற மேனாட்டு யாத்திரீகர் குறிப்புக்கள் உறுதி செய்கின்றன.

### வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி:

தொண்டைநாட்டுத் துறைமுகப் பட்டினத்தில் மேலை நாட்டுக் குதிரைகளும் வடநாட்டுப் பொருட்களும் வந்து இறங்கியதை, பெரும்பாணாற்றுப்படை (அடி 319-323) முதலிய இலக்கியங்கள் உறுதி செய்கின்றன.

**நீர்பெயற்று எல்லைப் போகி பாற்கேழ்,**
**வாலுளைப் புரவியொடு வடவளம் தரூஉம்,**
**நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை**
கூறுகின்றன.

- கொற்கையிலிருந்து வெண்உப்பு, கருப்புக்கட்டி கூட்டுப் பொரித்த புளி, கருவாடு, பேரணிகலன்கள் ஏற்றுமதியாகின.
- காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி, இறக்குமதி பெருமளவில் நடைபெற்றிருக்கிறது. ஒவ்வொரு பொதி-மீதும் சோழரின் புலி முத்திரை பொறிக்கப்பட்டது. சேர நாட்டு மிளகு, வடநாட்டு மாணிக்கக் கற்கள், சாம்பூநதம் என்னும் பொன், பாண்டி நாட்டு முத்து, குடகுமலைச் சந்தனம், அகில் முதலியனவும் இறக்குமதியாகின. பல மொழி பேசும் வணிகர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறி இருந்தனர்.

### தலைநகர்களும் வர்த்தக நகரங்களும்:

மதுரை, காஞ்சி, உறையூர், போன்ற தலைநகர்கள், தொழிற்கூடங்கள் கொண்ட வர்த்தக நகரங்கள், துறைமுகங்கள், சுங்கச் சாவடிகள், சமணத் துறவிகள் வாழ்ந்த மலைக்குகைப் படுக்கைகள் எனப் பல வகையான அமைப்புகள் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன.

### மேலை நாடுகளுடனான கடல் வாணிபம்:




தென்னாட்டின் பல்வேறு உள்நாட்டுப் பகுதிகளிலும் உற்பத்தியாகும் பொருட்களை கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய கரை-யோரத் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லத்தக்க வகையில் காவல் மிக்க பெருந் தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

சங்க காலப் பொருளாதார வளர்ச்சிக்கு உலோகங்களின் பிரயோகம், கடல் வாணிபம், உள்நாட்டு வாணிபம் முதலியன பெரும் காலாக அமைந்திருந்தன.

## சங்ககாலச் சமூகம்:

### மக்கள் வாழ்விடங்கள்:

- சங்க கால மக்களின் வாழ்விடங்கள் சேரி, சிற்றூர், சிறுகுடி, ஊர், குடி, பேரூர், மூதூர், நாடு என்று சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியப்படுகிறது.
- சேரி, பெரிய ஊர்களை அண்மித்துக் காணப்படும் மக்கள் குழு வாழும் இடம். பாண்சேரி, உமண்சேரி, பரத்தையர் சேரி முதலியன சங்க இலக்கியங்களால் அறியப்படுகின்றன.
- சிற்றூர் என்பது மிகச் சிறிய குடியிருப்புப் பகுதி.
- ஊர், குடி என்பவை சிற்றூரை விடப் பெரியவை, வளமானவை.
- பேரூர் என்பது ஊர், குடியை விடப் பெரியவை, 'வெஞ்சின வேந்தன் பகைஅலைக் கலங்கி, வாழ்வோர் போகிய பேரூர்' (நற்றிணை 153).
- நாடு என்பது பெரு நிலப்பரப்பு. நாடு என்னும் பதம் சங்க இலக்கியங்களில் வெகு சாதாரணமாகப் பயன்படுத்தியிருக்கும்

முறையைப் பார்த்தால் நாடு உருவாகிப் பல காலமாகிவிட்ட தன்மையைக் குறிக்கிறது.

**மக்கள் தொழில்:**

குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந் திணைகளிலும் வாழ்ந்த மக்கள் அவ்வந் நிலங்களின் இயல்புக ளுக்கேற்ற தொழிலைச் செய்தார்கள். குறிஞ்சி நில மக்கள், மலை நெல், தினை, கிழங்கு வகைகளைப் பயிரிட்டனர், தேன் எடுத்தல் முதலிய தொழில்களிலும் ஈடுபட்டனர். முல்லை நில மக்கள் ஆயர், வேட்டுவர், இவர்கள் ஆநிரை வளர்த்துப் பொருள்வளம் பெருக்கினர். வேட்டையாடினர், சாமை, வரகு முதலிய சிறு பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். பாலை நில மக்கள் எயினர், வழிப் போக்கர்களை ஆறலைத்தலும் சூறையாடலும் அவர்கள் தொழில். ஆநிரைகளைக் கவர்வதாகவும் கூறப்பட்டிருக்கிறது. மருத நில மக்கள் உழவர். உழவுத் தொழிலில் ஓய்வு நேரம் அதிகமாக இருந்ததால் இந் நிலத்தில் நாகரிகம் வளர்ந்தது. நெய்தல் நில மக்கள் பரதவர். அவர்கள் மீன்பிடித்தல், கருவாடு போடுதல், ஓடம், மிதவை, படகு முதலியவை கட்டுதல் ஆகிய தொழில்க ளில் ஈடுபட்டனர். ஆற்றுப்படை இலக்கியங்கள் ஐவகை நிலம், அவற்றின் வளம், தொழிற்பாடு முதலியவற்றைச் சிறப்பாகக் கூறு கின்றன.

சங்கப் புலவர்களில் 47 புலவர்கள் அவரவர் தொழில் முறையால் பெயர் பெற்றிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக,

- ஆசிரியன் பெருங்கண்ணனார்,
- மதுரை அறுவை வணிகன் இளவேட்டனார் (துணி வணிகம்)
- மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்,
- கச்சிப்பேட்டு இளந் தச்சனார்,
- தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்.
- காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூத னார்,
- உறையூர் மருத்துவன் தாமோதரனார்
- மதுரைக் கணக்காயனார்
- கணியன்பூங்கொன்றனார் (சோதிடர்)
- கிழார் (வேளாண்மை செய்பவர்)

என்னும் பெயரால் 35 புலவர்கள் அறியப்படுகிறார்கள். சங்கப் புலவர்களின் மொத்த எண்ணிக்கை 473, இவர்களில் 9 புலவர்கள் தொண்டை நாட்டவர், 24 புலவர்கள் சேர நாட்டவர், 55 புலவர்கள் சோழநாட்டவர், 90 புலவர்கள் பாண்டி நாட்டவர் என்று அறியப் படுகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். 473 புலவர்களில் 46 பெண்பாற் புலவர்கள்.

தொகுத்துப் பார்க்கும் போது சங்ககாலச் சமூகம் பற்றிய கீழ்க் காணும் முடிவுகளுக்கு வரலாம்:

- சங்க காலத்தில், ஆசிரியர், துணி வியாபாரி, கொல்லர், தச்சர், பொற் கொல்லர், மருத்துவர், கணக்காயர், சோதிடர் முதலிய தொழில் வல்லுனர் வாழ்ந்திருக்கிறார்கள்.
- புலவர்கள் நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தும் பல்வேறு தொழில் துறைகளிலிருந்தும் காணப்படுவது நாட்டின் கல்வித் தரத்தையும் சமூக வளர்ச்சியையும் தெளிவாகக் காட்டுகிறது.
- தொழிலால் உயர்வு, தாழ்வு கற்பிக்கப்படாத காலமாக இருந்தி ருக்கிறது. தொழிலைத் தம் பெயருடன் இணைத்துக் கொள்வ தைப் புலவர்கள் தாழ்வாகக் கருதவில்லை போலும்.
- மொத்தப் புலவர் எண்ணிக்கையில் பெண்பாற் புலவர்கள் 10 விழுக்காடாகக் காணப்படுகிறது.
- அரசியலில் பொது மக்களின் பங்கு உணரப்படுகிறது.
- கரூர், கூடலூர், காவிரிப்பூம்பட்டினம், கிடங்கில், குடவாயில், ஆர்க்காடு, கொள்ளம், கடியலூர், மதுரை, பொதும்பில் போன்ற பல நகரங்கள் இக்காலப் பகுதியில் முக்கிய நகர்க ளாக வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்றன.

சங்க கால அரச விரிவாக்கம், அரசியல் கட்டமைப்புக்கள், வணி கக் கட்டுமானங்கள், பாரிய துறைமுகப் பட்டினங்கள், சமுதாயக் கட்டமைப்புக்கள், பொருள்வளம், இலக்கிய வளம் என்று சங்க காலம் ஒரு பொற்காலமாகக் காட்சி தருகிறது.

சங்க கால அரசியல் மிகப் பெரிய அளவில் விரிவாக்கம் பெற்றி ருந்தது என்பதை ஐயத்திற்கு இடமின்றி உறுதியாகக் கூறக் கூடியதாக உள்ளது. சங்க கால அரசியலில் பெரும் பங்கு கொண்ட சில மன்னர்களைப் பற்றிப் பார்த்துக் கொண்டோமா னால் சங்க காலம் 'பொற்காலம்' என்று அழைக்கப் படுவதன் காரணம் தெளிவாகும். அதனையும் பின்னர் பார்க்கலாம்.

## அசோகரின் கிர்னார் கல்வெட்டும் தென்னாட்டு மன்னர்களும்:

மௌரியப் பேரரசன் அசோகன், போரை வெறுத்துப் பௌத்த னாகி, உலகெங்கும் பௌத்த தர்மத்தைப் பரப்புவதில் பெரு முயற்சி எடுத்தவன். அசோகன் தனது 8ம் ஆட்சி ஆண்டு முத லாக 87ம் ஆண்டுவரை 'அசோகன் ஆணைகள்' என்று அழைக் கப்படும் அரச கட்டளைகளைக் கல்வெட்டுக்கள் மூலமாக வெளி யிட்டான். இக் கல்வெட்டுக்கள், பெரும் பாறைக் கல்வெட்டுக்கள், குகைக் கல்வெட்டுக்கள், தூண் கல்வெட்டுக்கள் என அவை அமைந்திருக்கும் இடம் கொண்டு மூன்றாகப் பிரிப்பர். இக் கல் வெட்டுக்கள் பெரும்பாலும் நன்னெறிகளை மக்களிடையே போதிப்பவையாகவே இருக்கும். இக் கல்வெட்டுக்கள், தமிழ் நாடு தவிர்ந்த இந்தியா முழுமையும் கிடைக்கின்றன.


எமது ஆய்வுக்குரிய, அசோகரது கிர்னார் (Girnar)இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு குஜராத் மாநிலம், கத்தியவாரில் கிடைக்கப்பெற்றது. இது, அசோக மன்னனால், பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில், அசோகன் பிராமியில் எழுதப்பட்டது. இக்கல் வெட்டு பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டில் தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் தொடர்பான அரிய செய்திகளைத் தாங்கி நிற்கிறது.

**கல்வெட்டுப் பகுதி வருமாறு:**

- ஸர்வத் விஜிதே(ம்)ஹி தேவாநாம்பிர்யஸ பிர்யதர்ஸினோ ராஞோ
- ஏவமபி ப்ர சந்தேஸீ யதா சோடா, பாடா ஸதியபுதோ கேதள- புதோ ஆ தம்ப
- பர்ணி அன்தியோகோ யோன ராஜா யே வாபி அன்தியகஸ் ஸாமிநோ

இக்கல்வெட்டின் முதலாம் அடி 'தேவனுக்குப் பிரியமானவன்' என்னும் முன் குறிப்புடன் தொடங்கி, இரண்டாம் மூன்றாம் அடி கள், 'தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மட்டுமன்றி அண்டை நாடுகளான சோழர் (சோடா), பாண்டியர் (பாண்டா), சத்திய புத்திரர் (ஸதியபுதோ), சேரர் (கேதளபுதோ), இலங்கை (தம்ப பர்ணி)' என்று தமிழ் நாட்டின் சுதந்திர அரசுகளாக இருந்த அரசு களின் வம்சங்களுடன் இலங்கை முதலிய நாடுகளும் குறிப்பிடப் பட்டுள்ளன.

**அசோகரின் கிர்னார் கல்வெட்டில், சேர, சோழ, பாண்டிய, ஸத்தியபுத்திரர், கேரளபுத்திரர், தமிழ் நாட்டு அரசுகளைக் குறிக்கும் பகுதி:**




இக்கல்வெட்டு, அசோகர் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டுமன்றி அண்டை நாடுகளான சேர, சோழ, பாண்டிய, ஸத்தி யபுத்திரர், கேரளபுத்திரர், தம்பபர்ணி (ஈழம்), யோன அரசரான

அன்டியோகஸ் (கிரேக்கம்) மற்றும் அவருடைய அண்டை நாடுகளுக்கும் இரு வகைச் சிகிச்சைகள் அளிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை உறுதி செய்கிறது.

இக்கல்வெட்டில் ‘ஸதியபுதோ’ என்றது, சங்க காலக் கல்வெட்டாக இனம் காணப்பட்ட திருக்கோவலூர் ஜம்பைக் கல்வெட்டின் மூலம் அதியமான் நெடுமான் அஞ்சியைக் குறிக்கிறது என்பது உறுதிசெய்யப்பட்டது.

**ஜம்பைக் கல்வெட்டு வாசகம் வருமாறு:**



பாடம் - ஸதிய புதோ அதியன் நெடுமான் அஞ்சி ஈத்த பாளி.
பொருள் - ஸத்திய புத்திரன் அதியன் நெடுமான் அஞ்சி என்பவர் தானமாகக் கொடுத்த பாளி (சமணர் படுக்கை) என்பதாகும்.

**இதன் மூலம் பெறப்படுவது:**

- இது சங்க கால மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சியின் கல்வெட்டு.
- திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட, பெரும்போர் பலகண்ட மலையமான் திருமுடிக்காரியுடன் அதியமான் போரிட்டு வென்றதாக இலக்கியம் கூறுகிறது.
- இதனை உறுதி செய்வதாக திருமுடிக்காரியின் தலைநகரான திருக்கோவலூரில் இக்கல்வெட்டு கிடைத்துள்ளது.
- அசோகன் கல்வெட்டில் மூவேந்தருக்கு இணையான தமிழ் நாட்டு அரசன் ஒருவனையே அவன் குறிப்பிட்டிருப்பான் என்று கொள்வதே பொருந்தும்.

எனவே ஜம்பைக் கல்வெட்டு குறிப்பிடும் அதியன் நெடுமான் அஞ்சியே அசோகரது கிர்னார் (Girnar) இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் ‘ஸதிய புதோ’ என்பது தெளிவாகியது.

சத்தியபுத்திரன் என்னும் வேளிர் மன்னன், ஒரு சுதந்திரமான சிற்றரசன், தனது ஆற்றலால் வடநாட்டு பேரரசன் ஒருவனின் கவனத்தை ஈர்த்து அவன் கல்வெட்டில் இடம் பெற்றதன் மூலம்,

- வேளிர் பெருமையை நிலைநாட்டியதுடன்
- சங்க கால வரலாற்றை எழுதுவதற்குரிய ஒரு புற ஆவணத்தை உருவாக்கிக் கொண்டான் என்பது அரிய சாதனையாகும்.

சங்க இலக்கியங்களின் அடிப்படையில் சங்க காலம் பொ.ஆ.மு. முதல் மூன்று நூற்றாண்டு என்பது ஆய்வாளர் கருத்து. அசோகனின் கிர்னார் கல்வெட்டு சங்க கால வேளிர் மன்னன் ஒருவனின் காலம் பொ.ஆ.மு. 3ம் நூற்றாண்டு என்பதை உறுதி செய்கிறது.

## அதியமானும் சமகால மன்னர்கள், புலவர்கள் முதலியோர்:

அதியமான் நெடுமான் அஞ்சி வரலாற்றில் தனி ஒருவனாக அறியப்படவில்லை. அதியமானோடு தொடர்புடைய பல மன்னர்கள், புலவர்களைத் தமிழக வரலாறு காண்கிறது.

அடுத்த இதழில் சங்க காலத்தில் நிலவிய அரசுகளையும் மன்னர் கள் சிலரையும் காணலாம்.

தொடரும்.



selvanayaki.s@thaiveedu.com

# தாய்வீட்டார் சந்திப்பு

**ஆண்டுதோறும் நிகழ்ந்துவரும் தாய்வீட்டார் சந்திப்புகளின் வரிசையில் 2022-ஆம் ஆண்டுக்கான சந்திப்பு ZOOM தளத்தில் நடைபெறும்.**

## பெப்பிரவரி 20, 2022

**ஞாயிற்றுக்கிழமை,**

**Meeting ID: 907 387 5405**
**Passcode: 12345**

இந்திய நேரம்: மாலை 7:30
இலங்கை நேரம்: மாலை 7:30
கனடா நேரம்: காலை 9:00
இலண்டன் நேரம்: பிற்பகல் 3:00
அவுஸ்திரேலியா - மெல்பேர்ண் நேரம்: இரவு 1:00

**இந்நிகழ்வில் நீங்களும் பங்கேற்று உங்கள் ஆலோசனைகளையும் விமர்சனங்களையும் வழங்குவது எம்மை வளப்படுத்துவதோடு நாம் வலுவான பாதையில் பயணிக்க வழிகாட்டியாகவும் அமையுமென்று நம்புகிறோம்.**

# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 23

- நா. சுப்பிரமணியன்

இத்தொடரில் கடந்த ஒன்பது கட்டுரைகளிலே முன்வரலாற்றுக் காலத் தமிழகத்தின் சமூக உருவாக்கநிலை மற்றும் பண்பாட்டு நிலைகள் ஆகியனபற்றி நிகழ்ந்துள்ள வரலாற்று நோக்கிலான ஆய்வுகளை நோக்கிவந்தோம். இக்கட்டுரை முதல் மேற்படி காலப்பகுதியிலிருந்து தொடரும் இலக்கிய இலக்கண ஆக்கங்கள் பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வுகள் கவனத்துக்கு வரவுள்ளன. குறிப்பாகச் சங்க இலக்கியம், கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம் முதலியனவாகத் தொடரும் இலக்கிய ஆக்கங்கள் பற்றியும் தொல்காப்பியத்தை முதல் நூலாகக்கொண்டு தொடரும் இலக்கண ஆக்கங்கள் பற்றியும் நிகழ்ந்து வந்துள்ள முக்கிய ஆய்வுகள் பற்றியும் இத்தொடரிலே நோக்கவுள்ளோம். அவ்வகையில் இக்கட்டுரை முதல் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியம் ஆகியன சார்ந்து நிகழ்ந்துள்ள இலக்கிய - இலக்கண நிலைப்பட்ட ஆய்வுகளில் முக்கியமான மூன்று நூல்களைப்பற்றிய பார்வைகளை இங்கு முன்வைக்க விழைகிறேன். இவற்றுள் முதலிரு ஆக்கங்கள் தொல்காப்பியம் பற்றியவையாகும். மூன்றாவது ஆக்கம் சங்க இலக்கியம் பற்றியதாகும்.

### அந்நூல்கள் வருமாறு:

- தொல்காப்பிய ஆய்வின் வரலாறு (1990) ஆய்வாளர்: டாக்டர் கோ. கிருட்டிணமூர்த்தி சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.
- தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (1998) (கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு) பதிப்பாசிரியர்கள்: முனைவர் செ. ஜீன் லாரன்ஸ் மற்றும் முனைவர் க. பகவதி. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு. சென்னை.
- சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு - சிந்தனைப் பின்புல மதிப்பீடு. (1998)(கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு) பதிப்பாசிரியர்கள்: பேராசிரியர்கள் ந. கடிகாசலம் மற்றும் ச. சிவகாமி. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு. சென்னை -1998.

இவற்றுள் முதலாவது நூலானது தொல்காப்பியத்தின் முதலிரு பகுதிகளான ‘எழுத்ததிகாரம்’ மற்றும் ‘சொல்லதிகாரம்’ ஆகியன பற்றி 1980 வரை நடைபெற்றுள்ள ஆய்வுகள் பற்றிய பார்வையாகும். இவ்வாக்கம் சென்னைப் பல்கலைக்கழகத்திலே அதனாசிரியரால் முனைவர்ப் (Ph.D) பட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டின் நூல் வடிவமாகும். இரண்டாவது மூன்றாவது ஆக்கங்கள் சென்னை ‘உலகத் தமிழாராய்ச்சி நிறுவன’த்தில் 1997-98 காலப்பகுதியில் நடைபெற்ற இரு கருத்தரங்க நிகழ்வுகளில் வாசிக்கப்பட்ட உரைகளின் தொகுப்புகளாகும். இவற்றுள் தொல்காப்பியம் பற்றிய ஆக்கமானது அந்நூலின் மூன்றாம் பகுதியான ‘பொருளதிகார’த்தை மையப்படுத்திய ஆய்வுகளின் தொகுப்பாகும். சங்க இலக்கியம் பற்றிய ஆக்கமானது அப்பெயரில் அடையாளப்படுத்தப்படும் ‘எட்டுத்தொகை’ மற்றும் ‘பத்துப்பாட்டு’ ஆகிய தொகுப்பு நூல்களின் பாடற்பரப்பைப் பற்றிய ஆய்வுப் பார்வைகளின் தொகுப்பாகும்.

சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியம் ஆகியன தொடர்பாகக் கடந்த ஒரு நூற்றாண்டுக் காலப்பகுதியில் மிகப் பெருந்தொகையான நூல்கள் வெளிவந்துள்ளன என்பதறிவோம். இவ்வாறான ஆய்வு நூற்பரப்பு பற்றிய தகவல்கள் இத்தொடரில் ஏற்கெனவே சிலமுறை விரிவாகவே எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்க இம்மூன்று நூல்கள் பற்றி மட்டும் இங்கே சிறப்பாக எடுத்துப்பேச முற்பட்டமைக்கான காரணிகளை இங்கு முதலில் பதிவு செய்ய வேண்டியது எனது கடமையாகிறது.

### மேற்படி மூன்று நூல்களின் தேர்வுக்கான காரணிகள்:

மேற்சுட்டிய முதலாவது நூலை நோக்கமுற்பட்டமைக்கான காரணி, ‘அது, தமிழ் மொழியமைப்பு மற்றும் அதன் இலக்கண-வரலாறு ஆகியன தொடர்பாக நிலவி வந்துள்ள சிந்தனைகளை உரியவாறு புரிந்துகொள்வதற்குப் பெரிதும் துணைநிற்கக்கூடியது’ என்பதாலேயாகும். தொல்காப்பியமானது தமிழில் இன்றுவரை நமக்குக் கிடைத்துள்ள இலக்கண ஆக்கங்களில் காலத்தால் முற்பட்டது என்பது பொதுவாக நாமறிந்த செய்தியேயாம். இவ்வாறான இத்தொல்நூல் பற்றிய ஆய்வுகளின் செல்நெறி எத்தகையது என்பதை அடையாளங் காண்பதன் மூலம் ‘தமிழ்மொழியின் அமைப்புநிலை’ மற்றும் ‘அதனைப் புரிந்துகொள்ளும் வகையில் நிகழ்ந்துள்ள சிந்தனைகளின் இயங்குநிலை’ ஆகியவற்றைத் தெளிந்துகொள்வதற்கு இந்நூல் துணை நிற்கக்கூடியது என்பதால் நமது கவனத்துக்குரியதாகிறது.

தொல்காப்பியத்தின் 1980 வரையான காலகட்டம் சார்ந்த ஆய்வு வரலாற்றைப்பேசும் இந்நூலுக்குப் பின்னரும் தொல்காப்பிய ஆய்வுகள் என்றவகையில் பெருந்தொகையான நூல்களும் கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன- வெளிவந்துகொண்டிருக்கின்றன. எனினும் ‘மேற்படி ஆய்வுகளின் திசைவழிகள் எத்தகையன?’ என்பதை அடையாளங் காட்டும் வகையிலான, அதாவது ‘ஆய்வுகளின் வரலாற்றைப் பேசும் ஆய்வுகள் - என்ற வகையிலான ஆய்வு முயற்சிகள்’ நிகழ்ந்துள்ளனவா? என்பதும் நிகழ்ந்து வருகின்றனவா? ’என்பதும் நோக்கப்பட வேண்டியவையாகின்றன. அந்நிலையிலேதான் முன்னரே நிகழ்ந்துள்ள ஆய்வு வரலாற்றுப் பார்வையை இன்றைய தலைமுறையினருக்கு நினைவூட்ட வேண்டியது அவசியமானதாகிறது.

இரண்டாவதும் மூன்றாவதுமான ஆக்கங்கள் இலக்கியக் கோட்பாடுகள் சார்ந்த பார்வைகளின் தொகுப்புகள் என்பதை அவற்றின் தலைப்புகளே உணர்த்தவல்லன. தமிழிலக்கிய இலக்கணக் கல்விச் சூழலில் மேலைத்தேச இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வுக் கொள்கைகளும் ஆழமாகக் காலூன்றத்தொடங்கிய காலப்பகுதி 1960கள் ஆகும். அதன் தொடர்ச்சியாக தமிழிலே இலக்கிய இலக்கண ஆக்கங்களைக் கோட்பாடுகள் சார்ந்து நுனித்து நோக்குவதும் அத்தொடர்பிலான கருத்தரங்க நிலையிலான விவாதங்களை நிகழ்த்துவதுமான நடைமுறைகள் 1970-80களில் முனைப்புறத் தொடங்கின.

அக்காலப்பகுதியின் தமிழக உயர்கல்விச் சூழலில் இவ்வாறான

கோட்பாடுசார் கருத்தரங்க நடைமுறைகள் பரவலாக நிகழத் தொடங்கிவிட்டனவெனினும் அவற்றைத் திட்டப்பாங்காகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொண்டுவந்த நிறுவனம் என்ற சிறப்பு சென்னை தரமணியில் உள்ள 'உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்' என்ற அமைப்புக்கே உரியது என்பதே எனது அவதானிப்பாகும். அந்நிறுவனம் 1970-80கள் காலப்பகுதியிலே 'தமிழ் இலக்கியக் கொள்கை' என்ற தலைப்பிலான ஆய்வுக் கருத்தரங்குகளை மாதந்தோறும் நிகழ்த்தி வந்தது. தமிழின் இலக்கிய - இலக்கணப் பரப்பு முழுவதையும் கவனத்துள் கொண்டதாக அமைந்த இக் கருத்தரங்கச் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தவர் அக் காலப்பகுதியில் அந்நிறுவன இயக்குநராகத் திகழ்ந்தவரான பேரா சிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களாவர்.

இவ்வாறான மேற்படி கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்டு விவாதிக் கப்பட்ட கட்டுரைகள் ஆண்டு தோறும் தொகுக்கப்பட்டு தமிழ் இலக்கியக் கொள்கை 1, 2, 3 என தனித்தனித் தொகுதிகளாக அந்நிறுவனத்தால் வெளியிடப்பட்டன. இவ்வகையில் 1970-80களில் பத்துத்தொகுதிகள் வெளிவந்ததாக அறிகிறேன். (அவற்றுள் 2-9 வரையான எட்டுத் தொகுதிகள் என்னிடம் உள்ளன.)

மேற்கண்டவாறு கோட்பாடுகள்சார் கருத்தரங்குகளை நிகழ்த்தி வந்த அந்நிறுவனம் அந்த அநுபவங்களின் தளத்தில் நின்று 1990 களின் பிற்பகுதியில் (1997ஆகஸ்ட் 4,5,6 மற்றும் 1998-மார்ச் 28,29,30) நிகழ்த்திய இருபெரும் ஆய்வுக் கருத்தரங்குகளின் விளைபொருள்களாகவே மேற்சுட்டிய தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு - சிந்த னைப் பின்புல மதிப்பீடு ஆகிய இரு ஆக்கங்களும் நமக்குக் கிடைத்துள்ளன. இவ்வாய்வுத் திட்டங்களை முன்னெடுத்தவர், அக் காலப்பகுதியில் அந்நிறுவன இயக்குநராகத் திகழ்ந்தவரான முனைவர் இராமர் இளங்கோ அவர்களாவர். அவருக்கு இவ்விரு ஆய்வுகளுக்குமான அடிக்கருத்துகளை வழங்கியதோடு கருத் தரங்கச் செயற்பாட்டிலே துணை நின்றவர்கள் பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, ச. அகத்தியலிங்கம் மற்றும் செ.வை. சண்முகம் ஆகி- யோராவர்.

அன்றைய தமிழறிஞர்கள் பலரும் இக்கருத்தரங்குகளில் பங்கு கொண்டு தமது புலமைத்திறனைப் பகிர்ந்து கொண்டுள்ளனர். அவ்வகையிலேயே இவ்விரு கருத்தரங்கத் தொகுப்புகளையும் இங்கு பார்வைக்கு இட்டுவருவது அவசியமெனக் கருதுகிறேன். (இக்கருத்தரங்குகளில் பார்வையாளனாகவும் கட்டுரையாளனா கவுங்கூடக் கலந்துகொண்ட அநுபவங்களும் எனது நினைவில் மீள்கின்றன.)

அடுத்து மேற்படி மூன்று ஆக்கங்கள் நமது நேரடிப்பார்வைக்கு வருகின்றன.

## தொல்காப்பிய ஆய்வின் வரலாறு:

'முன்னுரை' தவிர, 'தொல்காப்பியப் பதிப்புகள்', 'எழுத்ததிகார ஆய்வு', 'சொல்லதிகார ஆய்வு' ஆகிய மூன்று இயல்களைக் கொண்டதாகும்.

இவற்றுள் முன்னுரைப் பகுதியில் தொடக்கத்திலே இவ்வாய்வுக் கான பின்புல விளக்கம் தரப்படுகிறது. அவ்வகையில் தமிழியல் ஆய்வின் பொதுவான வரலாறு இதில் கவனத்துக்கு இட்டு வரப் பட்டுள்ளது. குறிப்பாக, 'தொல்காப்பிய ஆய்வு வளர்ந்த முறைமை' பற்றிய பொதுச் செய்திகளுடன் 'ஏனைய இலக்கண நூல்கள் பற்றிய குறிப்புகள்' மற்றும் 'புது வரவுகளான மொழியி யல் சார் சிந்தனைகள் தொல்காப்பிய ஆய்வுகளில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியமை' ஆகியன பற்றிய சிறப்புச்செய்திகளும் இத்தொடக்கப் பகுதியில் பதிவாகியுள்ளன.

மேற்குறித்தவற்றுள் 'தொல்காப்பிய ஆய்வு வளர்ந்த முறைமை' பற்றிய பார்வையிலே முதலில் அந்நூலுக்கெழுந்த உரைகளின் முக்கியத்துவம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதனை யடுத்துப் பதிவானவற்றுள் மொழியியல்சார் சிந்தனைகள் தொல் காப்பிய ஆய்வில் செலுத்திய செல்வாக்கு தொடர்பான தகவல் கள் இங்கு சுட்டப்படவேண்டிய முக்கியத்துவமுடையனவாகும். மொழியியல் சார் சிந்தனைகள்' என்பன மேலைநாட்டு வரவுகள் என்பதும் தமிழுக்கு 19ம் நூற்றாண்டிலேயே அறிமுகமாகத் தொடங்கிவிட்டன என்பதும் பொதுவாக நாமறிந்த செய்திகளே யாம். இவ்வகையில் தமிழ்ச் சூழலுக்கு முதலில் அறிமுகமானது 'ஒப்பிலக்கண வரலாற்று நோக்கு' ஆகும். 'மொழிகள் பலவற்றை யும் ஒப்பிட்டு நோக்குவதும் அதனூடாக அவற்றின் வரலாற்றியக் கத்தை அடையாளங்காண்பதுமான ஆய்வுமுறை'யே, இது. இந் நோக்கில் தமிழை ஆராயும் முயற்சியானது 19ம் நூற்றாண்டில் எல்லீஸ் (Francis Whyte Ellis-1777-1819) மற்றும் இராபர்ட் கால்டு- வெல்(Bishop Robert Caldwel -1814-1891) ஆகிய இரு ஆங்கிலேய ஆய்வாளர்களால் அறிமுகமானது. கால்டுவெல் அவர்களின் பெரு முயற்சியில் வெளிவந்த A Comperetive Grammer of Dravidian Languages (திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் - 1856) என்ற நூல் இந்நோக்கிலமைந்த முக்கிய ஆக்கமாகும். (இவை பற்றி ஏற் கெனவே நாம் இத்தொடரின் 2வது கட்டுரையிலும் நோக்கியுள் ளோம்.)

கால்டுவெல் அவர்களது மேற்சுட்டிய நூலாக்கத்தினைத் தொடர்ந்து பின்னாளில் 'ஒப்பிலக்கண வரலாற்று நோக்கு' சார்ந்து வெளிவந்த ஆக்கங்கள் என்றவகையில் பி.சா. சுப்பிமணிய சாஸ் திரி எழுதிய History of Grammetical theories in Tamil and their relation to Grammetical Literature in Sanskrit (1934), வே. வேங்- கடராஜுலு ரெட்டியார் எழுதிய தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி (1944), தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் Foreign Models in Tamil Grammer (1974) ஆகியன முக்கியமானவை என இம் முன்னுரைப்பகுதியிலே டாக்டர் கிட்டிணமூர்த்தி குறிப்பிடுகிறார்.

19ம் நூற்றாண்டில் அறிமுகமான மேற்படி ஒப்பிலக்கண நோக் கைத் தொடர்ந்து 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே 'அமைப்பு முறை மொழியியல்'(Structural Linguistics) அல்லது 'வருணனை மொழியியல்'(Discriptive Linguistics) மற்றும் 'மாற்றிலக்கண மொழி யியல்' (Transfor mational Generative Grammer) ஆகியன தமி ழுக்கு அறிமுகமாயின. மேற்படி அமைப்புமுறை மொழியியல் அல்லது 'வருணனை மொழியியல்' சார்ந்து தொல்காப்பியம் மற்றும் பிற இலக்கண ஆக்கங்களை அணுகியவர்கள் என்ற வகையில் பேராசிரியர்கள் செ.வை. சண்முகம், கோ. விஜய- வேணுகோபால், தி. முருகரத்தினம், சூ. இன்னாசி, தே. ஆண்டி யப்பன், சோ.ந. கந்தசாமி, மோ. இசுரயேல் முதலியோர் முக்கிய மானவர்கள்.

மாற்றிலக்கண மொழியியல் என்பது 1957ன் பின்னரே தமிழகச் சூழலில் அறிமுகமானதாகும். இவ்வாய்வுமுறை சார்ந்து தொல் காப்பியத்தை அணுகியவர்களாக பேராசிரியர்கள் க. பாலசுப்- பிரமணியன், ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம், இராம சுந்தரம் ஆகியோர் இங்கு குறிப்பிடப்படுகின்றனர்.

மேற்படி முன்னுரையிலே இவ்வாறான பதிவுகளையடுத்து, இந் நூலின் - 'பொருள் வரையறை', 'ஆய்வுமுறை' மற்றும் 'அமைப்பு' என்பன பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பொருள் வரை யறை என்றவகையில் இங்கு குறிப்பிட்ட முக்கிய விடயம், 'தொல் காப்பியத்தின் 'எழுத்ததிகாரம்' மற்றும் 'சொல்லதிகாரம்' ஆகியன மட்டுமே இதில் நோக்கப்படுகின்றன' என்பதாகும். 'பொருளதி காரம்' பற்றிய பார்வை தவிர்க்கப்பட்டமைக்கான காரணமாக இங்கு சுட்டப்பட்டது அதனுடைய பொருட்பரப்பின் விரிநிலையே யாகும். (அதாவது அது தனியானதொரு ஆய்வுக்குரியது என்பதா லேயே தவிர்க்கப்பட்டதாக ஊகிக்க முடிகிறது.)

அடுத்து இந்நூலின் இயல்களின் உள்ளடக்க அம்சங்கள் கவனத் துக்கு வருகின்றன.

'தொல்காப்பியப் பதிப்புகள்' என்ற முதலாவது இயலானது இவ் வாய்வு முயற்சிக்கான மூலாதாரங்களான தொல்காப்பியப் பதிப்பு முயற்சிகளின் வரலாற்றைத் தொகுத்துத் தருவதாகும். இவ்வாறான முயற்சிகளை இவ்வியல் மூலப் பதிப்புகள், உரைப் பதிப்புகள், புத்துரைப் பதிப்புகள், பாயிரப் பதிப்புகள், ஒப்பியல் பதிப்புகள், மொழிபெயர்ப்புப் பதிப்புகள் என்பனவாக அறுவகைப்படுத்தி

நோக்கி, அவை உருவாகி வளர்ந்த வரலாற்றைப் பதிவுசெய்கிறது.

மூலப்பதிப்பு என்பது தொல்காப்பிய நூற்பாக்களை மட்டுமே கொண்ட பதிப்புகளாகும். உரைப் பதிப்பு என்பது மூல நூற்பாக்களையும் பண்டைய உரைகளையும் கொண்டவையாக அமைந்தவையாகும். இளம் பூரணருரை, சேனாவரையருரை, பேராசிரியருரை, நச்சினார்க்கினியருரை, தெய்வச்சிலையாருரை, கல்லாடருரை என்பனவே இங்கு பண்டைய உரைகள் எனப்பட்டன.

தொல்காப்பிய மூலப்பாடங்களுக்குக் கடந்த நூற்றாண்டில் பி.சா. சுப்பிமணிய சாஸ்திரி, ச. சோமசுந்தர பாரதியார், வே. வேங்கடராஜுலு ரெட்டியார், புலவர். குழந்தை, அ.கு. ஆதித்தர் முதலியோர் புதியனவாக உரைகள் எழுதியுள்ளனர். அவற்றுடன் அமைந்த பதிப்புகளே புத்துரைப்பதிப்புகள் எனப்பட்டன.

தொல்காப்பியத்தின் பொதுப்பாயிரம் மற்றும் சிறப்புப்பாயிரம், இவற்றின் உரை ஆகியன அமைந்த பதிப்புகளே பாயிரப் பதிப்புகள் எனப்பட்டன. தொல்காப்பிய நூற்பாக்கள் மற்றும் உரைகள் ஆகியற்றைப் பிற்கால இலக்கணங்களின் நூற்பாக்கள் மற்றும் உரைகள் ஆகியவற்றுடன் ஒப்புநோக்கியமைந்த பதிப்புகளே ஒப்பியல் பதிப்புகள் எனப்பட்டன. தொல்காப்பியத்தின் பிறமொழியாக்கங்களாக அமைந்த பதிப்புகளே மொழிபெயர்ப்புப் பதிப்புகள் எனப்பட்டன.

மேற்படி ஆறுவகையிலுமான பதிப்புகளையும் இவ்வியல் காலவரிசைப்படுத்தி நோக்கியுள்ளது. இந்த அறுவகைகளில் முதலில் வெளிவந்தவை உரையாடு கூடிய பதிப்புகளேயாகும். இவ்வகையில் முதலில் அச்சேறியது தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்துக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையுடனான பதிப்பேயாகும். இதனைப் பதிப்பித்தவர் மழவை மகாலிங்கையர் அவர்களாவர். பதிப்பித்த ஆண்டு 1848. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் இளம்பூரணருரையுடனான முதற்பதிப்பானது 1868ல் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரால் வெளியிடப்பட்டது. அதே ஆண்டில் ‘இராவ்பகதூர்’ சி.வை. தாமோதரம்பிள்ளையவர்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் சேனாவரையருரையைப் பதிப்பித்து வெளியிட்டார். இதுவே தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் முதலாவது பதிப்பாகும். இவ்வாறான முயற்சிகளை அடுத்தே ஏனைய பலரின் உரைப்பதிப்புகள் பலவும் வெளிவரலாயின.

மேற்சுட்டியவாறான உரைப்பதிப்புகள் வெளிவந்துகொண்டிருந்த காலப்பகுதியிலேயே தொல்காப்பிய நூற்பாக்களைத் தனியே பதிப்பித்தல் வேண்டும் என்பதான ஆர்வம் தமிழறிஞர்கள் சிலரிடம் முளைவிட்டது. அதாவது தொல்காப்பியத்தின் உரைகளுடனமையாத மூலவடிவத்தை முழுநிலையில் அடையாளங் காண வேண்டும் என்பதே இவ்வார்வத்தின் அடிப்படையாகும். இவ்வார்வத்துடன் முனைந்து செயற்பட்ட முன்னோடிகள் பி.என். சிதம்பர-புன்னைவனநாத முதலியார் மற்றும் கா. நமச்சிவாய முதலியார் ஆகியோராவர். அவர்கள் தொல்காப்பிய உரைப்பதிப்புகளிலிருந்து நூற்பாக்களை மட்டும் பிரித்தெடுத்து, 1922ல் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களையும் கொண்ட மூலப்பதிப்பை வெளியிட்டனர். (மேற்சுட்டியவாறான நூற்பாக்களை மட்டும் கொண்டதான ஏட்டுப்பிரதிகள் அக்காலத்தில் கிடைக்கவில்லை என்பது இங்கு நாம் நினைவிலிருத்தவேண்டிய செய்தியாகும்).

இவர்களுக்கு இவ்வாறான மூலப்பதிப்பு முயற்சியானது இலகுவானதாக இருக்கவில்லை. காரணம் தொல்காப்பிய நூற்பாக்களின் எண்ணிக்கையை வரையறுப்பதில் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்ததேயாகும். தொல்காப்பியத்துக்கு எழுதப்பட்ட பழைய உரைகளில் நூற்பாக்களின் எண்ணிக்கைகளில் வேறுபாடுகள் இருந்தமையே அச்சிக்கலாகும். ஒரு உரையாசிரியர் ஒரு நூற்பாவாகச் சுட்டுவதை இன்னொரு உரையாசிரியர் இரண்டாகப் பிரித்து, இரு நூற்பாக்களாகச் சுட்டியிருப்பார். இதனால் உரையுடனான பதிப்புகளில் நூற்பாக்களின் தொகைகள் வேறுபட்டிருந்தன. இவ்வேறுபாட்டை நீக்கி மூலநூற்பாக்களின் தொகையை _ அதாவது ஒவ்வோரதிகாரங்களுக்குமுள்ள நூற்பாக்களின் எண்ணிக்கைகளை - வரையறை செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மேற்சுட்டிய மூலப்பதிப்பாளர்களுக்கு இருந்தது. அதனை அவர்கள் எவ்வாறு எதிர்கொண்டு செயலாற்றினர் என்பதை மேற்படி மூலப்பதிப்பின் பதிப்புரையிலே சிதம்பர புன்னை-வனநாத முதலியார் பதிவு செய்துள்ளார். அப்பதிவிலிருந்து ஒரு பகுதி இவ்வாய்வுநூலின் ‘தொல்காப்பியப் பதிப்புகள்’ என்ற முதலாவது இயலில் சான்றாக எடுத்தாளப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதி வருமாறு:
‘பிள்ளையவர்களால் (சி.வை. தாமோதரம்பிள்ளை) பதிப்பிக்கப்பட்டிருக்கும் சொல்லதிகாரம் சேனாவரையும் நச்சினார்க்கினியம் இரண்டையும் வைத்துத் தனித்தனி ஒப்புநோக்கிய காலத்து கிளவியாக்கம், வேற்றுமை மயங்கியல், உரியியல் இவைகளின் சூத்திரத் தொகை கூடியுங் குறைந்துமிருக்கக் கண்டனன். இவ்வேற்றுமை உரையாசிரியர் கருத்து மாறுபாட்டால் ஒரு சூத்திரத்தின் முதலடியையோ ஈற்றடியையோ தனிச் சூத்திரமாக்கி உரையெழுதிப் போந்தமையாலாயது என்பது விளங்கிற்று’ (இவ்வாய்வுநூல் ப.16) என இப்பதிப்புரைக் குறிப்பானது தொடங்கித் தொடர்கிறது. (இங்கே சூத்திரம் என்ற வடசொல்லாற் சுட்டப்படுவது தமிழில் நூற்பா என வழங்கப்பட்டு வருவதாகும்).

மேற்படி கூற்றின் தொடர்ச்சியிலே சொல்லதிகாரத்தின் நூற்பாக்களின் எண்ணிக்கையை 462 ஆகவும் எழுத்ததிகார நூற்பாக்களின் தொகையை 483 ஆகவும் பொருளதிகார நூற்பாக்களின் தொகையை 665 ஆகவும் வரையறுத்து, எல்லாமாக 1610 நூற்பாக்களைக் கொண்டதாக தொல்காப்பிய மூலபாடம் அடையாளங் காணப்பட்டது.

இவ்வாறான பல அரிய தகவல்களுடன் தொல்காப்பியப் பதிப்புகள் என்ற இந்த முதலாவது இயல் தொடர்கிறது. இதிலே ஒவ்வொரு வகைப் பதிப்புகளும் காலவரிசைப்படுத்தப்பட்டு அவற்றின் அமைப்பு நிலைகள் ஆராயப்பட்டுள்ளன. தொல்காப்பியப் பதிப்புகளின் வரலாறு தொடர்பான நுண்ணாய்வுகளை மேற்கொள்ள விழைவோருக்குப் பெரிதும் பயன்படவல்ல ஒரு ஆவணமாக இந்நூலின் இம்முதலாமியல் அமைந்துள்ளது.

இவ்வாறான தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய இம்முதலாமியலில் ஆய்வாளர் தொகுத்தளித்துள்ள தகவல்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியவை சார்ந்த முக்கியமான இரு விடயங்களை இங்கு சுட்ட விழைகிறேன்.

- 1980 வரையிலான காலப்பகுதியில் தொல்காப்பியத்துக்கு 94 பதிப்புகள் வெளிவந்துள்ளன. (இது மறுபதிப்புகளைச் சேர்க்காத கணக்கீடாகும்). மேற்சுட்டியவாறாகப் பதிப்புகள் பல்கிப் பெருகியமையானது பொதுவாக அவ்வாக்கம் பற்றிய கல்வியின் வளர்ச்சியை அடையாளப்படுத்துவதாகக் கொள்ள இடமுள்ளது என்பது.
- திருத்தப் பதிப்புகளை மேற்கொண்டோரிற் சிலர் மூலப்பாடங்களையும் உரைகளையும் நன்கு ஆராய்ந்த பின்னரே பதிப்பித்துள்ளனர் என்பது.

  பாடவேறுபாடு உள்ள இடங்களில் அவற்றைக் குறித்தே சென்றுள்ளனர். சி. கணேசையர், மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை, கு. சுந்தரமூர்த்தி, தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் முதலியோர் தாம் பதிப்பித்தலில் மேற்கொண்ட முறைகளையும் சுட்டிச் சென்றுள்ளனர் என்பது.

இவ்வாறு கூறினாலும் இவர்களின் பதிப்புத்திறன் பற்றிக் கூறும் டாக்டர் கிருட்டிணமூர்த்தியவர்கள் அடுத்து முன்வைத்துள்ள குறிப்பொன்றும் இங்கு கவனித்தற்குரியது.

‘பதிப்பித்தோரிற்பலர் நிறைந்த புலமையும் பதிப்புத்துறையில் அனுபவமும் உடையோர் ஆவர். இருப்பினும் வளர்ந்துள்ள மூலபாடத் திறனாய்வுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்ட திருத்தப் பதிப்பாகத் தொல்காப்பியத்துக்கு இதுகாறும் ஒரு பதிப்பும் வெளிவரவில்லை.’ (ப.56)
(இது 1980 வரையான பதிப்புகள் பற்றிய கணிப்பு மட்டுமேயாகும். பின்னைய நிலைமை இனிமேல்தான் நோக்கப்படவேண்டும்)

அடுத்து, எழுத்ததிகார ஆய்வு, சொல்லதிகார ஆய்வு ஆகிய இயல்களின் உள்ளடக்க அம்சங்களை நோக்குவோம்.

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம் மற்றும் சொல்லதிகாரம் ஆகியன முறையே தமிழ் எழுத்துகள், சொற்கள் ஆகியவற்றின் இயல்புகளையும் இயங்கு நிலைகளையும் எடுத்துரைப்பனவாகும். சொல்லதிகாரமானது தனிச்சொல்லின் இலக்கணத்தை மட்டுமன்றிச் சொற்றொடரின் இலக்கணத்தையும் எடுத்துரைப்பது. இவ்விரு அதிகாரங்களும் இயல்கள் என்ற பெயரில் ஒன்பது ஒன்பது பிரிவுகள் கொண்டவை. இவை, தமிழிலக்கணங் கற்போர் பலரும், பொதுவாக அறிந்துகொண்ட செய்திகளேயாகும். மேற்கண்டவா-றான இவ்விலக்கணப்பரப்பானது கடந்த வரலாற்றுக் கட்டங்களில் எவ்வாறெல்லாம் புரிந்து கொள்ளப்பட்டன என்பதையும் சமகால ஆய்வுச் சூழலில் எவ்வாறு புரிந்துகொள்ளப்படல் வேண்டும் என்பதையும் மையப்படுத்தியே டாக்டர் திரு.கோ. கிருட்டிணமூர்த்தியவர்கள் இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார் என்பதும் வெளிப்படை.

இந்நூலின் இவ்விரு இயல்களின் ஆய்வியல் தொடர்பான பார்வைகளில் அடிப்படையாக அமைந்த முக்கிய அம்சம், 'தொல்காப்பிய மூலத்தை உரைகாரர்களும் பின்னைய இலக்கணகாரரும் பிற்கால ஆய்வாளர்களும் எவ்வாறெல்லாம் புரிந்துகொள்ள முற்பட்டனர்' என்பதைத் தெளிவுபடுத்தும் நோக்கேயாகும். அவ்வகையில் தொல்காப்பியத்தின் எழுத்திலக்கண மற்றும் சொல்லிலக்கணக் கூறுகள் பலவற்றையும் பற்றி எழக்கூடிய ஐயங்களுக்கு விடைதரக்கூடிய ஆய்வுக் களஞ்சியங்களாக இவ்விரு இயல்களும் திகழுகின்றன எனின் மிகையாகாது.

இவ்வாறான இவ்வாய்வு நூலில் ஆய்வாளர் டாக்டர் கோ. கிருட்டிணமூர்த்தியவர்கள் நமது சிந்தனைக்குரியனவாகச் சுட்டியுணர்த்த விழைந்த முக்கிய செய்திகள் சிலவே இங்கு கவனத்துக்கு இட்டு வரப்படவுள்ளன. குறிப்பாக எழுத்ததிகார ஆய்விலே அவர் நமது பார்வைக்கு இட்டுவந்துள்ள மூன்று விடயங்களே இங்கு முதலில் கவனத்திற் கொள்ளப்படவுள்ளன. இவற்றுள் முதலாவது விடயம் 'தமிழ் நெடுங்கணக்கின் வரிசைப்படுத்தல் முறைமை' தொடர்பானதாகும். இன்னொரு விடயம் 'முதலெழுத்து சார்பெழுத்து' என்ற வகைப்பாடு தொடர்பானது. மூன்றாவதாக நமது கவனத்துக்கு வரவுள்ளது 'நூன்மரபு' என்ற முதலாவது இயலின் 'பொருட்பொருத்தம்' பற்றியதாகும்.

தமிழ் நெடுங்கணக்கு என்பது தமிழின் உயிரெழுத்து, மெய்யெழுத்து மற்றும் உயிர்மெய்யெழுத்து என்பவற்றின் வைப்புறையைச் சுட்டி நிற்பது என்பதறிவோம். 'நாம் இன்று வழக்கில் கொண்டுள்ள இந்த வைப்புமுறைக்கும் தொல்காப்பியத்துக்குமுள்ள தொடர்பு யாது?' என்பது இந்த எழுத்ததிகார ஆய்வுப் பகுதியிலே விவாதிக்கப்பட்டுள்ளது. (பக்78-82)

தொல்காப்பியமானது எழுத்துகளைக் கூறும்பொழுது 'எழுத்தெனப்படு, அகர முதல் னகர இறுவாய், முப்பஃதென்ப' என்ற எழுத்ததிகார முதல்நூற்பாவிலே 'அ' முதல் 'ன' ஈறான முப்பது எழுத்துகளைப்பற்றி அந்நூல் சுட்டியுள்ளதென்பது வெளிப்படை. இவ்வாறான கூற்றிலே உயிரெழுத்து மெய்யெழுத்து ஆகியவற்றின் வரிசைப்படுத்தல் உணர்த்தப்பட்டுள்ளதா என்பதே இங்கு எழுப்பப்படும் வினாவாகும்.

எழுத்ததிகாரத்திலே பின்னோரிடத்தில் உயிரெழுத்துகள் இவை எனக்கூறுமிடத்தில் 'ஔகார இறுவாய்' என வருவதால் உயிரெழுத்து வரிசையின் இறுதியெழுத்து 'ஔ' என்பது சுட்டப்பட்டது. பின்னர் உயிர் மயங்கியலிலே உயிரீறுகளுக்குப் புணர்ச்சி விதிகள் கூறுமிடத்திலே உயிரழுத்துகளின் வரிசைமுறை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என அமையுமென்பது உணர்த்தப்பட்டுள்ளது. ஆனால் மெய்யெழுத்துகள் 'க்' முதல் 'ற்' வரை நாம் இன்று வழங்கும் முறை தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டமைக்கோ அல்லது உணர்த்தப்பட்டமைக்கோ சான்றுகளில்லை. இதனால் நாம் இன்று பயன்படுத்தும் நெடுங்கணக்கு முறை தொல்காப்பியக் காலத்தில் இருந்ததா? என்பது தொடர்பாக நமது கால ஆய்வாளர் மத்தியில் விவாதங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை இங்கே டாக்டர். கிருட்டிணமூர்த்தியவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார். (இவ்வாய்வு நூல் 1980கள் வரையான மூலாதாரங்களை மையப் படுத்தியது என்பதை மேலே நோக்கியுள்ளோம். எனவே கடந்த நாற்பதாண்டுகளில் இத்தொடர்பிலான விவாதங்கள் இன்னொரு கட்டத்தை அடைந்திருக்கலாம். அவற்றின் முடிவுகள் இனிமேல் தான் நோக்கப்படவேண்டும்.)

## முதலெழுத்து மற்றும் சார்பெழுத்து என்ற வகைமை தொடர்பாக:

தமிழ் எழுத்துக்களை முதலெழுத்து, சார்பெழுத்து என்பனவாக வகைப்படுத்தும் முறைமை கடந்த பல நூற்றாண்டுகளாக தமிழிலக்கணக் கல்வியில் வழக்கிலிருந்து வந்துள்ளது. உயிமெழுத்து 12 மற்றும் மெய்யெழுத்து 18 ஆகிய இரண்டையும் இணைத்து முதலெழுத்துகள் 30 எனக்கொள்வதும் உயிர்மெய் குற்றியலுகரம் முதலிய பலவற்றைச் சார்பெழுத்து என வழங்குவதும் மரபாகிவிட்ட ஒரு சூழலில் நாம் உள்ளோம். இது தொல்காப்பியர்காலம் முதலே தொடர்ந்த ஒன்றா அல்லது பிற்காலச் சிந்தனைகளின் விளைபொருளா என்பது தொடர்பான விவாதம் நமது மொழிக் கல்வியில் விரிவாகவே நிகழ்ந்துள்ளது.

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திலே எழுத்துகள் என்றவகையில் உயிர் மற்றும் மெய் என முப்பது எழுத்துகளே குறிப்பிடப் பட்டுள்ளன. 'எழுத்தெனப்படுப அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப' என்ற மேலே நோக்கிய நூற்பா இதனை உறுதி செய்கிறது. ஆனால் அந்நூற்பா அத்துடன் நிறைவடையவில்லை. 'சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே' என்ற தொடருடனேயே அந்நூற்பா நிறைவடைகிறது.

'சார்ந்துவரல் மரபின்' என்பது 'சார்ந்து வருவதையே இயல்பாகக் கொண்ட' எனப் பொருள் தருவதாகும். இந்நூற்பாவிலே 'சார்ந்து வருவதையே இயல்பாகக் கொண்டவை' எனச் சுட்டப்பட்டவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்(ஃ) என்பனவாகும். இவற்றுள் முதலிரண்டும் தமக்கெனத் தனி வடிவங் கொண்டவையல்ல. குறித்த சில சூழல்களில் ஒலி மாத்திரை குறைந்தொலிப்பன. ஆய்தமானது தனித்தியங்கும் தன்மையற்றது. உயிருக்கும் மெய்க் குமிடையில் மாத்திரமே இது இயங்கவல்லது. இவ்வாறான இயல்புகளாலேயே தொல்காப்பியத்திலே இவை, 'சார்ந்து வருவதையே இயல்பாகவுடையன'வாகச் சுட்டப்பட்டன. இவ்வாறான சார்ந்து வரும் இயல்புடைய மூன்றையும் தவிர்த்தால் எழுத்து எனப்படுவன முப்பதுதான் என்பதே தொல்காப்பியத்தின் கருத்தாகும்.

தொல்காப்பியத்தின் மேற்படி நுட்பமான அம்சங்களைச் சரிவரப் புரிந்துகொள்ளாத நிலையில் பின்வந்த இலக்கணக்காரர் சார்பெழுத்து என ஒரு தனி எழுத்துவகைமையை உருவாக்கிக் கொண்டனர். இது பற்றி பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையவர்கள் தமது தமிழ் வரலாற்றிலக்கணம்(1966) நூலில் விரிவாகவே எடுத்துரைத்துள்ளார்.(பக்54-68.) இங்கே டாக்டர். கிருட்டிணமூர்த்தியவர்களும் ஏறத்தாழ இத்தகு கருத்தொன்றையே இவ்வியலில் விரிவான நிலையில் எடுத்துரைத்துள்ளார்.

'பிற்கால இலக்கண நூல்கள் எழுத்துகளை முதலெழுத்து சார்பெழுத்து எனப்பாகுபாடு செய்தன. ஆனால் தொல்காப்பியம் அத்தகைய பாகுபாட்டைக் கொள்ளவில்லை. பிற்கால இலக்கண நூலாகிய நன்னூல் கூறும் சார்பெழுத்துகளுள் உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகியவற்றைத் தொல்காப்பியர் பேசியுள்ளார். ஆனால் இவற்றை இவர் சார்பெழுத்துகளாகக் குறிப்பிடவில்லை' என்பதே கிருட்டிணமூர்த்தியவர்களின் கருத்தாகும்.(ப.102)

## 'நூன்மரபு' என்பதன் பொருட்பொருத்தம் தொடர்பாக:

எழுத்ததிகாரத்தின் முதலாவது இயல் 'நூன்மரபு' என அமைந்துள்ளது. நூன்மரபு என்றால் நூல்களின் உருவாக்கநிலை தொடர்பாக வல்லவா இலக்கணங் கூறியிருக்கவேண்டும். ஆனால் இதிலே எடுத்துரைக்கப்பட்டவை எழுத்துகளின் இலக்கணங்களேயாகும்.

அவ்வகையில் இவ்வியலுக்கு ‘எழுத்துமரபு’ என்றே பெயரமைந் திருக்க வேண்டும். இந்த முரண்பாடு பற்றிப் பண்டைய உரை யாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரிய கவனம் செலுத்தவில்லை என்பதே கிருட்டிணமூர்த்தியவர் கள் நமது கவனத்துக்கு இட்டுவந்துள்ள முக்கிய செய்தியாகும். இவ்வாறான முரணை இனங்கண்டு விளக்கம்தர முயன்றவர்களாக 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உரைகாரர்களுள் ஒருவரான சிவ ஞான முனிவரும் கடந்த நூற்றாண்டின் ஆய்வாளர்களான வே. வேங்கடராஜுலு ரெட்டியார், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மற்றும் செ.வை. சண்முகம் ஆகியோரை கிருட்டிணமூர்த்தியவர் கள் இங்கு குறிப்பிடுகிறார். மேற்படி முரண்பாட்டைச் சரியான வகையில் இனங்கண்டு விளக்கம்தர முயன்றுள்ளனர் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளதோடு அவர்களின் விளக்கங்களையும் முன் வைத்துள்ளார்.(பக்82-84)

எழுத்ததிகாரத்தின் முதலாவது இயலுக்கமைந்துள்ள மேற்படி நூன்மரபு என்ற தலைப்பானது இன்றைய ஆய்வு நோக்கிலே தவ றான படியெடுப்பு அல்லது பாடபேதம் என்றே கருதக்கூடியதா கும். தொல்காப்பியம் பல காலகட்டங்களில் ஏடுகளில் படியெடுக் கப்பட்டு வந்த போது யாரோ ஒரு படியெடுப்பாளர் செய்திருக்கக் கூடிய கவனக்குறைவு நிலையிலான தவறாகவே அது கொள்ளப் படவேண்டியது. அவ்வாறான தவறான ஏட்டுப்பிரதியை அடியொற் றிய படியெடுப்புகளே பின்னாளில் - இளம்பூரணர், நச்சினார்க்- கினியர் முதலியோர் உரையெழுதிய காலகட்டங்களில் - வழக் கிலிருந்திருக்க வேண்டும். இதுதான் வரலாற்றில் நிகழ்ந்திருக்கக் கூடியது. அவ்வுரைகார்கள் அதனை ஒரு பிழையான பாடம் எனக் கொள்ளாமல் தொல்காப்பிய மூலத்தின் திட்டப்பாங்கான சொற் பிரயோகமாகவே அதனைக் கொண்டனர். இதுவே மேற்படி நூன் மரபு என்ற தவறான தலைப்பானது தொடர்ந்து வழங்கிவந்த வர லாறாகும்.

ஆனால், பின்னைய உரைகாரர்களிலொருவரான சிவஞான முனி- வரும் கடந்த நூற்றாண்டின் ஆய்வாளர்களுள் சிலருமே மேற்படி தலைப்பின் பொருள் முரணைச் சரியாக இனங்கண்டு விளக்கந்தர முற்பட்டுள்ளனர். ஆயினும் அவ்விளக்கங்கள் விவாதநிலைப் பட்டனவாக அமைந்தனவேயன்றி நிறைவு தருவனவாக அமைய வில்லை என்பதே இந்நூலாசிரியர் டாக்டர் கிருட்டிணமூர்த்தி யவர்கள் இங்கு நம்முன்வைத்துள்ள மேற்சுட்டிய விளக்கத்தின் தெளிபொருளாகும். இவ்வாறான எடுத்துரைப்பின் தொடர்ச்சியாக அவர் முன்வைத்துள்ள தொகுப்புரைக் குறிப்பொன்று இங்கு பதிவு பெறவேண்டிய முக்கியத்துவமுடையதாகும்.

### அக்குறிப்பு வருமாறு:

‘நூன்மரபு இயலின் பெயருக்கும் அதனுள் கூறப்படும் செய்திக ளுக்கும் பொருத்தம் இன்மையால் அதற்குக் காரணங்கூற முனைந்தோர் அனைவரது விளக்கங்களும் வலிந்து கூறப்படுவன வாகவும் ஊகங்களாகவும் உள்ளன. இவை அவ்வியலிற் கூறப் படும் செய்திகளுக்கும் அவ்வியலின் பெயருக்கும் பொருத்தம் இல்லை என்பதையே உணர்த்துகின்றன.’ (ப. 161).

மேற்படி குறிப்புடன் இந்நூலின் ‘எழுத்ததிகார ஆய்வு’ என்ற இரண்டாமியல் பற்றிய பார்வை நிறைவுக்கு வருகிறது. மூன்றா வதான ‘சொல்லதிகார ஆய்வு’ என்ற இயல் பற்றிய பார்வையும் ஏனைய இருநூல்கள் பற்றிய பார்வைகளும் அடுத்துவரும் கட்டுரைகளில் தொடரவுள்ளன.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com

JM ACCOUNTING AND FINANCIAL SOLUTION INC.
“We provide reliable year around Tax and Accounting services.”
Our Services included:
* E- file
* Personal Tax Returns (T1)
* Self-Employed Tax Returns
* Business, HST and Payroll Registrations & Bookkeeping
* Corporate Tax Returns (T2)
* Canada Revenue Agency’s Audit assistance
Starting from $24.90 Plus tax
Phone: (647)- 351- 5622 / (416)- 722-5338 Fax: (647)- 351- 5620
1193A, Brimley Road, Suite 5, Scarborough, ON, M1P 3G5
jmaccfinancial@gmail.com

# கனடாவில் சிறுகதை இலக்கியம் - ஒரு பார்வை

- மைதிலி தயாநிதி

இக்கட்டுரையானது கனடாவிலே இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் ஏறத்தாழ 35 ஆண்டுகளாகத் தமிழில் படைத்த சிறுகதை இலக்கியம் பற்றிய ஒரு பருந்துப் பார்வை ஆகும். இது எனது வாசிப்பு அனுபவத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இது ஒரு முழுமையான ஆய்வுக்கட்டுரை அன்று என்பதை மனதில் இருத்திக் கொண்டு மேலே வாசிக்கவும். வன்முறை காரணமாக 1983ம் ஆண்டு தொடக்கம் இலங்கையிலிருந்து தமிழர் அகதிகளாகக் கனடாவில் தஞ்சம் தேடியமையே 'கனடாத் தமிழ் இலக்கியம்' எனும் நாடு வாரியான இலக்கிய வகையின் தோற்றப் பாட்டிற்குக் காரணமாய் அமையும். இவ்வாறு கனடாவிற்கும், ஐரோப்பாவுக்கும், அவுஸ்திரேலியாவுக்கும் புலம் பெயர்ந்தவர்கள் படைத்த இலக்கியத்தைப் புகலிட இலக்கியம் என்றும், புலம் பெயர்ந்தவர் இலக்கியம் என்றும் அழைத்தார்கள். இரண்டையும் ஒரே பொருளில் வழங்குபவர்களும் உண்டு. அதே சமயம், புகலிட இலக்கியம் என்பது புலம் பெயர் இலக்கியத்திலிருந்து வேறுபட்டது என வாதிடுவோரும் உண்டு. பேராசிரியர் பாலசுந்தரம் தாம் எழுதிய கனடாவில் இலங்கைத் தமிழரின் வாழ்வும் வரலாறும் எனும் நூலில் கனடாத் தமிழ் இலக்கியம் என்ற சொற்பிரயோகத்தையே பயன்படுத்துகின்றார்.

கண்டம் வாரியாக அல்லது நாடு ரீதியாகக் கதைகளை நோக்கும் முறைமையை 1994ம் ஆண்டில் தமிழக எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதியும், இலங்கை எழுத்தாளர் எஸ்.பொ.வும் வெளியிட்ட பனியும் பனையும் எனும் நூலில் அவதானிக்கலாம். அத்தொகுப்பில் உள்ள கதைகளை ஆஸ்திரேலியக்கதைகள், ஐரோப்பியக் கதைகள், வட அமெரிக்கக் கதைகள் என முப்பிரிவினதாகத் தொகுப்பாசிரியர்கள் வகுத்துள்ளனர். மேலும், ஐரோப்பியக் கதை ஒவ்வொன்றும் எந்தெந்த நாட்டிற்குரியது என்ற செய்தியையும் அவர்கள் தந்துள்ளனர். இப்பகுப்பு முறையின் அடிப்படை என்ன என்பது குறித்து இந்திரா பார்த்தசாரதி பின்வருமாறு கூறுகின்றார். 'இவர்கள் குடியேறிய அந்தந்த நாட்டுக்கும் ஒரு கலாசார சரித்திரம் உண்டு. அந்தச் சரித்திரத்துக்கேற்றபடிதான், அந்தந்த நாட்டின் சமகாலத்தியச் சமுதாயம் அமைந்திருக்க முடியும். புதிதாகக் குடியேறுகின்றவர்கள், அச்சமுதாயத்தில் வாழ முற்படும்போது ஏற்படுகின்ற பாதிப்புக்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன என்பதற்கான காரணத்தை இவ் வரலாற்றுப் பார்வையுடன் அணுகினால் தான் புரிந்து கொள்ள முடியும்' என்கிறார் (பக்கம் 2-3). எனவே, பல்கலாசார நாடான கனடாவில் படைக்கப்படும் இலக்கியத்தை மூன்று தசாப்தங்கள் கடந்து விட்ட நிலையில், ஈழத் தமிழிலக்கியத்தின் நீட்சியாகப் புலம்பெயர் இலக்கியம் என்று நோக்காது, கனடாவில் வாழும் தமிழர்களால் படைக்கப்படும் இலக்கியம் என்று பார்ப்பது பொருத்தமானதே.

கனடாவில் தமிழர், சீனர் போன்ற சிறுபான்மை இனத்தவர் தத்தம் தாய்மொழியில் படைக்கும் இலக்கியத்திற்கும், உத்தியோக மொழிகளான ஆங்கிலம், பிரஞ்சு மொழி என்பவற்றில் படைக்கப்படும் பிரதான இரட்டை இலக்கிய நீரோட்டங்களுக்குமிடையே எதுவித தொடர்புமில்லை. சிறுபான்மை இனத்தவர் படைக்கும் இலக்கியங்கள் கனடிய தேசிய இலக்கியமாக அங்கீகரிக்கப் படுவதில்லை என்ற குறையும் உண்டு. இது குறித்து அதபஸ்கா (Athabasca) பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜோசப் ஜெ. பிவட்டோ (Joseph J. Pivato) கூறியிருப்பதன் தமிழாக்கம் வருமாறு 'இந்த இலக்கியம் [இத்தாலிய கனடிய இலக்கியம் கனடாவில் இருக்கிறது.] பெரும்பாலும் கனடிய இலக்கியத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டாலும் கூட, இது கனடிய பிரதான இலக்கியத்திலிருந்து வேறுபட்டதே. ஏனெனில், இது பிறிதொரு நாடான இத்தாலி பற்றிய உணர்வினை அளிப்பதுடன், அதனுடனிருக்கும் தொடர்பினையும் நிரூபிக்கிறது. இத்தாலிய கனடிய இலக்கியம் இத்தாலிய மொழியிலும் உள்ளது. இது கனடிய இலக்கியம் இத்தாலிய மொழியில் இருக்க முடியுமா? எனும் கேள்வியை எழுப்புகிறது. கனடாவின் தேசிய இலக்கியமானது ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் தான் இருக்கிறது என்பது எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயம். பிற மொழிகள் இத்தேசிய இலக்கியத்தின் ஒரு பகுதியாக இருக்க முடியுமா?'

தாய்மொழியில் எழும் இலக்கியங்கள் அந்தந்த சமூகத்தினரிடையே முடங்கிப் போய்விடுகின்றன. அதே சமயம், சிறுபான்மைச் சமூகத்தவர் ஆங்கிலத்தில் படைக்கும் இலக்கியங்களைப் பல்கலைக்கழகமட்டத்தில் புலமையாளர் கற்பித்தும், ஆராய்ந்தும் வருகின்றனர். எடுத்துக்காட்டாக, இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலான நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து, கனடாவை வாழிடமாகக் கொண்டவர்களைத் தென்னாசியர்கள் என்றழைப்பார்கள். ஆங்கிலத்தில் இவர்கள் படைப்பவை 'தென்னாசிய இலக்கியம்' என்று வகைப்படுத்தப்பட்டு, பல்கலைக்கழக மட்டத்தில் கற்பிக்கப்படுகின்றன. இவ்விலக்கியம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வெளியாகின்றன. Mariam Pirbhai vojpa 'South Asian Canadian Literature: A Centennial Journey' எனும் கட்டுரை கனடாவில் வாழும் தென்னாசியர்களின் ஒரு நூற்றாண்டுக்கால ஆங்கில இலக்கிய முயற்சிகள் குறித்துத் தொகுத்துக் கூறுகின்றது. அதே சமயம், தமிழ்ப் படைப்பிலக்கியத்தைக் கனடாவின் பெரும்பான்மைச் சமூகத்திற்கு மொழிமாற்றம் மூலம் அறிமுகப்படுத்தும் முயற்சிகள் ஆங்காங்கே நிகழ்கின்றன. இத்துறையில் ஒரு முன்னோடியாக விளங்கியவர் ரொறன்ரோ பல்கலைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் அமரர் செல்வா கனகநாயகம் அவர்கள். பேராசிரியர் செல்வா கனகநாயகம் (1952-2014) இலங்கைக் கவிஞர்களின் தமிழ்க்கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து சர்வதேச சமூகத்திற்கு அறிமுகம் செய்ததுடன் (Wilting Laughter: Three Tamil Poets 2009, You cannot turn away: Poems in Tamil 2011), தமிழிலக்கிய ஆக்கங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுப்புகளையும் பதிப்பித்தார் (Lute song and Lament: Tamil Writing from Sri Lanka 2001, In our translated world 2013, Uprooting the pumpkin: selections from Tamil Literature in Sri Lanka 2016).

1980 களில் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தோரிற் பெரும்பாலானோர் ஆக்க இலக்கியத்துறையில் கவிதையிலேயே ஆர்வம் காட்டி வந்துள்ளனர் என்று தன் நூலில் பேராசிரியர் பாலசுந்தரம் குறிப்பிடுகின்றார் (பக்கம் 205). கவிதைக்கு அடுத்தபடியாக அவர்களின் கவனம் சென்றது சிறுகதை மீதாகும். புலம் பெயர்ந்தோர் சிறுகதையில் ஈர்க்கப்பட்டமைக்கு அதன் வடிவமும் ஒரு காரணமாகும். தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்

றிப் பேசும்போது, பேராசிரியர் சிவத்தம்பி, 'சமுதாய அமைப்பிலும், மனித உறவிலும் மாற்றங்கள் தோன்றி வளர்ந்து பெருகும் கால கட்டத்தில் வாழும் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் உணர்வினைத் தாக்குவது புதிய சூழ்நிலையில் தோன்றும் மனித இன்னல் அல்லது புதிய சூழ்நிலையால் ஏற்படும் நடைமுறையே. இதுவே சிறுகதையின் கருவாக அமையும். குறிப்பிட்ட ஒரு சம்பவத்தில் மனிதமனம் படும் பாட்டை அல்லது ஒரு பாத்திரம் இயங்குகின்ற முறைமையைக் குறிப்பதுவே சிறுகதை' என்கிறார் (பக்கம் 16). எனவே, முற்றிலும் புதிய, அந்நியமான அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழலை எந்தவிதமான உளரீதியிலான முன் ஆயத்தங்களும் இன்றி சடுதியாகச் சந்திக்கும் மனிதர்களின் உணர்வனுபவங்களை வெளிப்படுத்த சிறுகதை வடிவம் பொருத்தமாக அமைந்தது எனலாம். எனினும், புலம்பெயர் நாட்டனுபவங்கள் மட்டுமே சிறுகதைகளின் பொருளாக அமைந்து விடுவதில்லை. உறவுகளும், நட்புகளும் தாயகத்திலும், புலம் பெயர் மண்ணிலும் எனச் சிதறுண்டு கிடப்பதாலும், இளம் பருவத் தாயக நினைவுகள் நெஞ்சை நிறைத்திருத்தலாலும் தாயகத்தின் நேசமும், அக்கறையும் புலம்பெயர் எழுத்துகளிலே நீடிக்கின்றன. மேலும், கனடாவில் இருக்கும் தனிமனிதக் கருத்துச் சுதந்திரம் காரணமாக, தாயகத்திலே சொல்லவியலாத சேதிகளும் கதைகளின் கருப்பொருளாகின்றன. அதே சமயம், புது உலகம் பெண்களை வெளிப்படையாகப் பேசவும், இயங்கவும் வைத்திருக்கின்றது. கனடா தமிழ்ச் சமூக நடைமுறைப் பிறழ்வுகளைச் சுட்டிக்காட்டுவனவாகவும், அவற்றை விமர்சிப்பனவாகவும், சமூகப்பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்துவனவாகவும் பல கதைகள் காணப்படுகின்றன. சமூகத்தில் தாம் நம்பும் நல்ல மாற்றங்களைக் கொணர்வதற்கு இலக்கியத்தைக் கருவியாக எழுத்தாளர்கள் பயன்படுத்துவதைப் பார்க்கலாம். எனினும் எந்த அளவிற்கு அதனைக் கலாபூர்வமாக அவர்கள் பயன்படுத்துகின்றனர் என்பதில் கருத்து வேறுபாடுகள் உண்டு.

ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டு வரலாறு கொண்ட கனடாவின் தமிழ்ச் சிறுகதை இலக்கிய எழுத்தாளர் பட்டியல் நீண்டது. 'பதிவுகள்' இணையத்தளத்தில் 30.03.2015ல் பதிவிடப்பட்ட 'கனடாத் தமிழ்ச் சிறுகதைகள்' எனும் கட்டுரையில் எழுத்தாளர் குரு அரவிந்தன் 47 சிறுகதை எழுத்தாளர்களின் பெயர்களைத் தந்துள்ளார். இப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டால், கனடாவிலே ஏறத்தாழ ஐம்பதுக்கும் குறையாத எண்ணிக்கையினர் சிறுகதைத் துறைக்குப் பங்களித்தவர்கள் எனலாம். ஆங்கில மொழியிலுள்ள சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருபவர்களுள் என்.கே. மகாலிங்கம் குறிப்பிடத்தக்கவர். இரவில் நான் உன் குதிரை - சில தேசங்களின் சில சிறுகதைகள் எனும் மொழிபெயர்ப்புச் சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.

தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகளை கனடா பத்திரிகைகள், இதழ்கள், சிறப்பு மலர்கள் முதலானவை வெளியிட்டு வருகின்றன. இணையத்தளங்களிலும் சிறுகதைகள் வெளியிடப்படுகின்றன. இவற்றைவிடப் பெரும்பாலான எழுத்தாளர்கள் தங்கள் சிறுகதைகளைத் தொகுத்துத் தாமே வெளியிட்டுள்ளனர். இதற்காக அவர்கள் பெரும்பாலும் தமிழகப் பதிப்பகங்களையே நாடியுள்ளனர். அத்துடன் பல்வேறு எழுத்தாளர்களின் சிறுகதைகளை உள்ளடக்கிய பனியும் பனையும் 1994ல் வெளிவந்தது. வி. கந்தவனத்தினால் தொகுக்கப்பட்ட பன்னிரு எழுத்தாளர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய அரும்பு எனும் சிறுகதைத் தொகுதி 2000ம் ஆண்டில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தினால் வெளியிடப்பட்டது. கனடா உதயன் வார இதழில் வெளிவந்த பதினைந்து சிறுகதைகளை ஆர்.என். லோகேந்திரலிங்கம் தொகுத்து தூரமும் துயரமும் எனும் தலைப்பில் வெளியிட்டார். இச்சிறுகதைத் தொகுதி சென்னை மணிமேகலைப் பிரசுரமாக 2001ல் வெளிவந்தது.

## சிறுகதையின் பொருட்பரப்பு:

கனடா சிறுகதை இலக்கியத்தின் பொருட்பரப்பு மிக விரிவானது. புதிய அனுபவங்களை மையமாகக் கொண்டது. மாறுபட்ட வாழ்க்கை அனுபவங்களைப் பற்றி எழுதப்பட்ட இச் சிறுகதைகள் தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்க்கின்றன என்ற கூற்று மிகையானதன்று. எடுத்துக்காட்டாக, வ.ந. கிரிதரன் எழுதியுள்ள 'நீ எங்கிருந்து வருகிறாய்?', 'யன்னல்', 'சுண்டெலிகள்', 'மனிதமூலம்', 'ஆபிரிக்க அமெரிக்கக் கனடாக் குடிவரவாளன்', 'ஆசிரியரும், மாணவனும்', 'ஒரு மா(நா)ட்டுப் பிரச்சினை' எனும் ஏழு புகலிடச் சிறுகதைகளும் கனடா மண்ணில் புலம் பெயர்ந்து வாழ்தல் எனும் அனுபவ ஊற்றிலிருந்து பிறந்தவை ஆகும். அது போன்று அகிலின் கூடுகள் சிதைந்தபோது எனும் சிறுகதைத் தொகுதியிலுள்ள 'வலி', 'அம்மா எங்கே போகிறாய்?', 'ரேடியோப் பெட்டி', 'பெரிய கல்வீடு', 'இது இவர்களின் காலம்' என்பன புதிய களத்தை அறிமுகப்படுத்தும் அற்புதமான சிறுகதைகளாக இருக்கின்றன என்கிறார் இதற்கு அணிந்துரை வழங்கிய கலாநிதி க. குணராசா.

நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு, கனடா சிறுகதை இலக்கியம் பல்வேறு விடயங்களைக் கருவாகக் கொண்டது. தாய்நாடு குறித்த ஏக்கம், மரணம், இழப்புகள் குறித்த துயரம், அடையாளச்சிக்கல், இனவாதம், இளையோர் பிரச்சினைகள், முதியோர் பிரச்சினைகள், ஆண் மையக் குடும்ப அமைப்பின் செல்வாக்குத் தொடர்வதால் பெண்களுக்கு, குழந்தைகளுக்கு உண்டாகும் பிரச்சினைகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், வன்முறை உண்டாக்கும் உள வடு என்றும், இன்னும் வேறு பல விடயங்களும் கதைகளின் பொருளாக எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றுக்குச் சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன். இவை கனடிய சிறுகதை இலக்கியத்தை முற்று முழுதாகப் பிரதிநிதித்துவப்படுத்துவன அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதலில்...

## தாயக நினைவுகள்:

2009ம் ஆண்டுப் போர் குறித்தும் அதன் பின்னரான தாயக நிலை குறித்தும் கதைகள் எழுதப்பட்டுள்ளன.

அகிலின் கூடுகள் சிதைந்தபோது எனும் கதை 2009ம் ஆண்டு இறுதிப் போர் இழப்புகளின் வலியைச் சுமப்பவனின் கதை. கனடாவில் நடைப்பிணமாகத் திரியும் ஓர் இளைஞன் தெருவிலே காரில் அடியுண்ட குருவியையும், அதன் நிலை கண்டு அந்தரிக்கும் அதன் துணையையும் காண்கிறான். இறந்த அக்குருவியை அவன் மெல்ல எடுத்து அட்டைப்பெட்டிக்குள் வைக்கின்றபோது அவனுக்குத் தன் மனைவின் இறுதித் தருணங்கள் நினைவிற்கு வருகின்றன. போர் நடந்து கொண்டிருக்கும்போது, முள்ளிவாய்க்காலிலிருந்து வவுனியாவுக்கு இடம் பெயர்ந்து செல்லும் வழியில் கர்ப்பிணியான மனைவியை குண்டு வீச்சில் இழந்தவன் அவன். அதன் பின்னர் கனடாவிற்குப் புலம் பெயர்ந்த அவ் இளைஞனின் துயரத்தை இக்கதை விவரிக்கின்றது. இக்கதையை வாசித்தவுடன் 'மௌனசோகம் நம்மையும் ஆட்கொண்டு விடுகின்றது' என்று பேராசிரியர் சிவத்தம்பி கூறுகின்றார்.

33 வருடங்களின் பின்னர் தாயகத்தில் சொந்தவூரைப் பார்க்கச் செல்லும் பெண்ணின் குறுகுறுக்கும் மனவுணர்வுகளை, தமிழ்நதியின் மாயக்குதிரை சிறுகதைத் தொகுதியுள் காணப்படும் 'மலைகள் இடம் பெயர்ந்து செல்வதில்லை' என்ற சிறுகதை சித்திரிக்கும். போரினால் கிராமத்தில் ஏற்பட்ட அழிவுகளையும், உயிர் இழப்புகளையும் பேசுவது. தெரிவுகள் அற்றுத் தங்கி விடுபவர்களின் வாழ்வியல் அவலமே இக்கதையின் கரு.

## இனவாதம்:

கனடாவில் குடியேற்றத்தை வடிவமைப்பதில் இனமயமாக்கல் மைய இடம் வகித்தது என்பதைப் புலமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஐரோப்பிய குடியேற்றவாசிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமை, ஆபிரிக்கர்கள் உட்பட வேறு பல நிறக்குழுக்களின் இடப்பெயர்வைக் கட்டுப்படுத்த அல்லது தடுக்க உருவான பாகுபாடான சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் என்பன 1960களின் பிற்பகுதி வரை கனடாவில் நீடித்திருந்தன. இவை ஒரு வெள்ளையர்கட்கான கற்பனை சமூகத்தை உருவாக்கின என்பதுடன், தொடர்ந்தும் இனமயமாக்கல் செயல்முறைகளை வடிவமைத்து

வருகின்றன என்று Gillian Creese எனும் சமூகவியலாளர் கூறுகின்றார் (‘Where Are You From?’: Growing Up African-Canadian in Vancouver (Toronto: U of T press, 2020), page 4.) 1970 களிலேயே இந்நிலை மாறத் தொடங்கியது. இதற்குக் காரணம் லிபரல் அரசாங்கம் அறிமுகம் செய்த பன்முக கலாச்சாரக் கொள்கையாகும். இது வெள்ளையரல்லாதோரும் கனடாவில் குடியேற வழி வகுத்தது. எனினும் கனடாவில் இனவாதம் இன்றும்இல்லை என்று சொல்லி விட முடியாது. இத்தகைய சமூக சூழலில் வெள்ளையரல்லாத ஒருவரிடம் கேட்கப்படும் ‘Where are you from?’ என்ற கேள்வி ஒரு அப்பாவித்தனமான கேள்வி அன்று. கனடாவை வாழிடமாகக் கொண்ட வெள்ளையரல்லாதவர்களை மற்றம்மையாக (பிறத்தியாராக) உருவாக்கும் முயற்சிகளுள் ஒன்று. இக்கருத்தினை அடிநாதமாகக் கொண்டு வ.ந. கிரிதரன் ‘நீ எங்கிருந்து வருகிறாய்?’ என்ற சிறுகதையைப் புனைந்துள்ளார். ஒரு வெள்ளையினத்தவருக்கும், இருபதாண்டு காலம் கனடாவில் வசிக்கும் வெள்ளையரல்லாத ஒருவருக்குமான உரையாடல் காலநிலை பற்றிய குறிப்புடன் தொடங்குகிறது. வெள்ளையரல்லாதவர் எந்த நாட்டிலிருந்து வந்தவர் என்று அறிய வெள்ளையர் விரும்புகிறார். இதற்கு விடையளிக்க விரும்பாத வெள்ளையரல்லாதவர், வெள்ளையரின் பூர்வீகத்தை விசாரிக்கின்றார். அது வெள்ளையருக்கு ஆத்திரமூட்டுகிறது.

அவன் கூறினான்: ‘இந்தக் கேள்வி மூலம் நீ என்னை அவமதிக்கின்றாய். கனடியக் குடிமகனொருவனை நீ அவமதிக்கின்றாய். அது உனக்குத் தெரிகிறதா?’

‘எனக்கு நன்றாகவே தெரிகிறது. உனக்குத் தெரிந்தால் சரிதான்’ இவ்விதம் கூறிவிட்டு அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்த போக்குவரத்து வண்டியில் ஏறுவதற்குத் தயாரானான் என்று கதை நிறைவுறுகின்றது.

## அடையாளமிழத்தல்:

கனடாவிற்குப் புலம் பெயர்பவர்கள், தாயகத்தில் பெற்றுக் கொண்ட கல்வி அனுபவங்கள், வேலை அனுபவங்கள் என்பன பொதுவாகக் கனடாவில் தகுந்த அங்கீகாரம் பெறுவதில்லை. பொருத்தமான கல்வித்தகைமைகள் இருப்பின், ‘Upgrade your skills’ என்பார்கள். கனடாவில் வேலை செய்த அனுபவம் வேண்டும் என்பார்கள். இதைவிட, மொழிப் பிரச்சினை வேறு. எனவே, தாயகத்தில் படித்து வேலை பார்த்த பலர் கனடாவில் உயிர் தரித்திருப்பதற்கான தொழில்களில் (survival jobs) ஈடுபட வேண்டியவர்களாக இருந்தார்கள். இத்தகைய அடையாளமிழந்த மனிதர் ஒருவர் பற்றிய கதையே பனியும் பனையும் கதைத்தொகுதியிற் காணப்படும் ஆனந்த பிரசாந்தின் ‘அவர் நாண’ எனும் சிறுகதையாகும். தாயகத்தில் ஆசிரியராக இருந்து பின்னர் தொழிற்சாலையில் பணிபுரியும் நாற்பத்தெட்டு வயதினரான ஒருவர், தன்னிலும் பாதி வயதினனான மேற்பார்வையாளன், அவன் சகாக்கள் ஆகியோரின் பரிகாச, அவமதிப்புப் பேச்சுகளுக்காளாவதால் ஏற்படும் வலியைக் கூறுகிறது. இக்கதை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் இன்னொரு பிரச்சினை ஊழியர்களை வயது அடிப்படையில் பாரபட்சமாக நடாத்துதலான ageism என்று கூறப்படும் பிரச்சினை.

## முதியோர் பிரச்சினைகள்:

பிள்ளைகளினால் ஸ்பொன்சர் செய்யப்பட்டுக் கனடாவிற்கு வந்த முதியவர்களின் அவலநிலை குறித்து முத்துலிங்கம், அகில், நிருபா முதலானோர் எழுதியுள்ளனர். முத்துலிங்கத்தின் கதை ஒன்றில் தனது வீட்டு நிலவறையில் வசிக்கும் தகப்பனார் இறந்தது இரண்டு நாட்கள் கழித்தே மகனுக்குத் தெரிய வருகிறது. அதுவும் மேல் தளத்தில் உள்ள குளிர்பதனப் பெட்டியிலிருந்த உணவை இரண்டு நாட்களாக அவர் உண்ணவில்லை என்று தெரிந்த பின்னரே நிலவறைக்குச் செல்கிறான். அங்கு தந்தையின் விறைத்த சடலத்தைக் காண்கிறான். அடுத்து, அகிலின் ‘அம்மா எங்கே போகிறாய்?’ எனும் கதையில், பணத்திற்காகத் தம்முள் சச்சரவிட்டு பகைமை பாராட்டும் இரு பிள்ளைகளுடன் வாழப் பிடிக்காத அன்னை ஒருத்தி முதியோர்இல்லத்தைத் தனது வாழிடமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறாள். ‘பொருளியல் சார் நிர்ப்பந்தங்களும், நெருக்குதல்களும் பாசப்பிணைப்பை அர்த்தமற்றதாக்கி விடுகின்றன என்பதற்கான சமூக யதார்த்த அம்சமே இக்கதையின் தொனிப்பொருளாகும் என்று பேராசிரியர் சுப்பிரமணியன் விளக்கமளிக்கின்றார்.

## பேசாப் பொருள்கள்:

1970களின் பிற்பகுதில் இலங்கையில் தொடங்கிய ஈழவிடுதலைப் போராட்டமானது போராளி இயக்கங்களுக்கிடையிலான முரண்பாடுகள், இயக்கத்திற்குள் உருவான அக முரண்பாடுகள் என்பவற்றைக் கண்டது. இவை காரணமாகவும் பலர் தம் உயிருக்கு அஞ்சி, மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். இவர்கள் படைத்த இலக்கியமே புகலிட இலக்கியம் என்று வாதிடுவோரும் உண்டு. (பார்க்க காலம், இதழ் 18ல் வெளிவந்த கொ.றொ. கொன்ஸ்ரன்ரைன், ‘புலம்பெயர்தலும், புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் இலக்கிய முயற்சிகளும்’) இது தமிழ்த் தேசியம் எடுத்த நிலைப்பாடுகளையும், செயற்பாடுகளையும் விமர்சித்தது. கனடாவில் எழுதப்பட்ட சில சிறுகதைகள் இத்தகையனவே. எடுத்துக்காட்டாக, யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பாக குமார் மூர்த்தியின் ‘ஹனிபாவும் எருதுகளும்’ என்ற கதையைக் குறிப்பிடலாம். கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு சீர்குலைந்த காலத்தை மையமாகக் கொண்டு சக்கரவர்த்தி எழுதிய ‘என் அல்லாஹ்’ என்ற கதையும் முக்கியமானது. பொதுவாக, குமார் மூர்த்தியினதும், சக்கரவர்த்தியினதும் கதைகள் அக்கால போர்அரசியல் நிலைப் பின்னணியில் எழுதப்பட்டவை.

## போரும் வடுவும்:

1990களில் இலங்கையில் வன்முறைக்கஞ்சி, தமது பதின்ம வயதுகளில் கனடாவுக்குத் தனித்து வந்த இளைஞர்கள் உளர். இத்தகையவர்கள் தாயகத்தில் தாம் அனுபவித்திருந்த வன்முறைகள் காரணமாக உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். அப்படிப்பட்டோர் கனடாவில் தக்க வழிகாட்டிகள் இன்றித் தமது வாழ்வை அமைத்துக் கொள்வதில் சிரமமடைந்தனர். அத்தகைய இளைஞன் ஒருவனின் கதையைக் கூறுவது இளங்கோவின் ‘சிறகு வளர்ந்த குரல்களுடன் பறந்து போனவன்’ என்னும் சிறுகதையாகும். இது அவரின் இணையத்தளத்தில் உள்ளது. மேலும், இயக்க முரண்பாடுகளினால் உயிரச்சம் காரணமாக கனடாவுக்குப் புலம் பெயர்ந்த முன்னாள் போராளியின் உளப் பாதிப்பை பா.அ. ஜயகரனின் இருளில் மீள்பவர்கள் எனும் கதை பேசுகின்றது (ஜயகரன் கதைகள் (சென்னை: பரிசல் புத்தக நிலையம், 2019). Experience என்ற பிரெஞ்சு நாவலை வாசித்தமை அவனுக்கு பழைய எதிர்மறையான ஞாபகங்களைக் கிளப்புகின்றது. அந்நாவலின் பெண் கதாபாத்திரத்துடனான உரையாடலுடன் தொடங்கும் கதை பீதி நிறைந்த கனவுக்குள் கனவாக, முடிவிலியாகத் தொடர்கின்றது.

## பெண் எழுத்து:

பெண் எழுத்தாளர்களுள் தற்போது சிறுகதைத் துறையில் பங்களித்துக் கொண்டிருக்கும் மூன்று எழுத்தாளர்கள் பற்றிக் கூற விழைகிறேன். தாயக நினைவுகளுடனும், அரசியலுடனும் விடுபட வியலாதவாறு பெரும்பாலான ஆண் எழுத்தாளர்கள் திணறிக் கொண்டிருக்கும்போது, கனடாவை வாழ்விடமாகக் கொண்ட இம்மூன்று பெண் எழுத்தாளர்களும் கனடா சமூகத்தில் தமிழ்ப் பெண்ணின் இருப்பு, அவளின் எதிர்காலம் குறித்த சமூக அக்கறையுடன் எழுதிக்கொண்டிருக்கின்றனர். ஒருவகையில் தமிழ்க் குடும்பங்களில் நிலவும் ஆணாதிக்கத்தைச் சிதறடிக்கும் பெண்ணியக் கோட்பாட்டினைத் தழுவியவர்கள் என நாம் அவர்களை அடையாளம் காணலாம். எனினும் இவர்களின் சமூக அக்கறை பெண்களுடன் மட்டும் நின்று விடவில்லை. அதற்கும் அப்பால் தமிழ்க் குடும்பங்களில் குழந்தை - பெற்றோர் உறவுகள், முதியோர் நிலை, சாதியம், நுகர்வுக்கலாசாரத்திற்கு எதிரான நிலைப்பாடு என விரிந்து கொண்டே செல்கின்றன.

யாதுமாகி நின்றாள் (2005), உறையும் பனிப்பெண்கள் (2010),

உங்களில் யாராவது முதல் கல்லை எறியட்டும் (2018) எனும் சிறுகதைத் தொகுப்புகளின் ஆசிரியர் சுமதி. இவர் கதைகளில் சமூக அநீதியின் உச்ச வடிவமான ஒடுக்குமுறைக்கு எதிரான குரல் ஒலிக்கின்றது. கனடாவில் சட்டரீதியாக ஆண் - பெண் சமத்துவம் நிலைநாட்டப்பட்டிருப்பினும், புலம்பெயர் சமூகக் குடும்ப அமைப்பினுள் பெண் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றாள் என்பதை அவர் கதைகள் உணர்த்துகின்றன. மனைவியின் உடல் மீது கணவனின் அதிகாரம், மனைவி எப்பொழுது கர்ப்பம் தரிக்கவேண்டும், எவ்வளவு குழந்தைகள் பெறல் வேண்டும் என்பதைக் கணவனே நிர்ணயித்தல், வீட்டிற்கு வெளியே மனைவியின் சாதனைகளைக் கணவன் அலட்சியப்படுத்தல், தாம்பத்தியம் கணவனின் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்வதாய் அமைதல், மனைவியின் உணர்வுகள் புறக்கணிக்கப்படல் முதலான பிரச்சினைகளை இவை தொட்டுச் செல்கின்றன.

மேலும், இங்கு சாதி குறித்த உரையாடல்கள் வெளிப்படையாக நிகழ்வதில்லை எனினும் சாதியச் சுவடுகள் அழியவில்லை என்பதை 'சைகையிற் பொருளுணர்' எனும் சிறுகதையில் பதிவு செய்கின்றார். கனடா பூர்வீக சமூகக் குடிகளின் பிரச்சினைகளிலும் அவர் அக்கறை செலுத்துகின்றார். கனடா பூர்வீகக்குடியினர் பல வந்தமாகக் குடியிருப்புப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் பாதக விளைவுகளை அவரின் 'ஆகாயமங்கை' எனும் சிறுகதை விவரிக்கின்றது. தாய்த்தலைமைத்துவத்தைக் கொண்ட பூர்வீகக்குடிச் சமூகங்களுடனான ஊடாடல் மூலம் கனடா வாழ் தமிழ்ப் பெண்கள் அகவெழுச்சி பெற முடியும் எனும் அவர் நம்பிக்கை இச்சிறுகதையில் இழையோடுகின்றது. அவர் அண்மையில் எழுதிய 'மீண்டும் நீளும் தேவதையின் கைகள்' எனும் கதை கணவனின் வன்முறையினால் மரணிக்கும் பெண்ணைப் பற்றியது. இக்கதையை போர் தின்ற நாட்டிலிருந்து எதிர்காலத்துளிர்ப்பின் சிறு நம்பிக்கையோடு, பனிபடரும் நாட்டில் காலடி எடுத்து வைத்து தமது கணவரால் கொல்லப்பட்ட நான்கு தமிழ்ப் பெண்களுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார். இக்கதையைக் கனலி இணையத்தளத்தில் வாசிக்கலாம்.

ஸ்ரீரஞ்சனி, நான் நிழலானால் (2010), உதிர்தலில்லை இனி (2018) எனும் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். ஆணாதிக்க வன்முறையால் பாதிக்கப்பட்டு ரணப்படும் பெண்களும் குழந்தைகளும், பெற்றோர்களினது போலி விழுமியங்களால் அல்லல்படும் குழந்தைகள், சொல்லுக்கும் செயலுக்குமான இடைவெளிகள், சாதியத்தைப் புலம் பெயர்ந்த நாட்டிலும் நிலை நிறுத்த முயலும் மூத்த தலைமுறையினர் என்று புலம் பெயர் வாழ்வின் மூன்று தலைமுறையினரையும் தொடர்புபடுத்தி, நிகழ்காலப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இவரின் கதைகள் எழுதப்பட்டுள்ளன. இவருடைய கதைகளில் குறிப்பிடத்தக்க அம்சமாக அமைவது தாய்-மகள் உறவினை இவர் சித்திரிக்கும் விதம். இவரது நீயே நிழல் என்ற கதையை வாசிக்கும்பொழுது, சங்க கால உடன்போக்குப் பாடல்கள் நினைவுக்கு வாராது போகா.

ஆடம்பரமான சடங்கு சம்பிரதாயங்களைக் கண்டிக்கும் கதைகள் சிலவற்றை இவர் எழுதியுள்ளார். அவரின் 'சிக்குண்ட சினம்' எனும் கதை பூப்புனித நீராட்டு விழா குறித்த விமர்சனமாக அமைகிறது. அதே சமயம், 'எனக்கும் ஒரு வரம் கொடு' எனும் சுமதியின் கதை குழந்தை பெறாத பெண்கள் இத்தகைய சடங்குகளில் முன்னே வந்து காரியங்கள் இயற்றத் தகுதியற்றவர் என்ற சமூகக் கருத்தினைக் கண்டிக்கின்றது.

வன்முறை காரணமாகக் குடும்பங்கள் பிளவுபடுதலால் குழந்தைகளுக்கு ஏற்படும் மனப்பாதிப்பு, வலிகள் பற்றி ஸ்ரீரஞ்சனியின் கதைகள் சில பேசுகின்றன. 'உள்ளங்கால் புல் அழுகை' எனும் கதையில் தகப்பன் தாயை அடித்து விடுகிறார். அயலவரினால் பொலிஸ் அழைக்கப்படுகிறது. தந்தை கைது செய்யப்பட, தாய் மனக்கவலை என்று உள மருத்துவ சிகிச்சை பெறக் குழந்தைகள் இருவரும் தனித்தனியே அரச பாதுகாப்பில் வைக்கப்படுகின்றனர். அதில் விவரம் தெரிந்த மூத்த குழந்தையின் மனவோட்டங்களைச் சித்திரிப்பது உள்ளங்கால் புல் அழுகை. குடும்பத்தில் வன்முறை எவ்வாறு எழுகின்றது என்பதைக் குழந்தைப் பாத்திரம் மூலம் கேட்கலாம்:

'அம்மாவுக்குப் பைத்தியம் எண்டு பேசிப் பேசி அவவோடை சண்டை பிடிக்கிறது தான் அவருக்கு வேலை. அண்டைக்கும் அம்மா பேபியோடை சாய்ஞ்சாடம்மா பாடிக்கொண்டு இருக்கேக்கை 'வீடு குப்பையாக் கிடக்குது' எண்டு கத்தினார். அம்மா 'தன்னாலை எல்லாம் தனியச் செய்ய ஏலாது' எண்டு சொன்னது அவருக்கு பிடிக்கேல்லை. தான் வேலைக்குப் போறன், அம்மா வீட்டிலை சும்மா இருந்து கொண்டு சட்டம் கதைக்கிறா எண்டு அவவின்ரை தலைமயிரைப் பிடிச்சு இழுத்து, அவவின்ரை தலையை சுவரிலை மோதி அடிச்சார். அதைப் பாத்து நானும் பேபியும் பெரிசா கத்தினதாலை தான் பக்கத்து வீட்டுக்கு கேட்டிருக்குதாக்கும்.'

இவர்கள் இருவரிலும் இளையவரான நிரூபா தமிழ்க்கலாசாரம், புகலிட கலாசாரம் என இருவகைக் கலாசாரங்களின் செல்வாக்கிற்கும் உட்பட்டவர். எனவே, அவரின் சில கதைகள் பேசும் சுய அடையாளம் தொடர்பான சிக்கல்கள் அவருக்கு மூத்த தலைமுறை தமிழ் எழுத்தாளர்களினால் பேசப்படாதவை. பொருளாதார ரச்சுரண்டலும், சமூகச் சீரழிவும்தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துவனவாய் அவரின் சில கதைகள் விளங்குகின்றன. முதலாளித்துவ பொருளாதாரம் வளர்த்தெடுத்த நுகர்வுக்கலாசாரத்தினை சாடுவதுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கு மாற்றீடான இயற்கையோடியைந்த குறைந்த தேவைகளுடன் வாழும் வாழ்க்கை முறைமையையும் அவை காட்டுகின்றன. மேலும், முதுமைப் பருவத்து வேதனைகளையும், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் பாதிப்பினையும் அவர் எழுத்துகள் வெளிக்கொணர்கின்றன. அவரது சில கதைகளில் உரைநடை - கவிதை, உண்மை - கற்பனை (reality vs. fantasy) என்பவற்றுக்கான எல்லைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. இத்தகைய எல்லைமீறலை அல்லது எல்லையழிப்பினை அவரது கதைத்தொகுப்பின் தலைப்பும் உணர்த்துகின்றது. இடாவேணி (இடு- + ஆ + ஏணி) என்பது சங்க இலக்கிய நூலான பதிற்றுப்பத்தில் இடம்பெறும் சொல்லாகும். ஏணி என்பதன் பொருள் எல்லை. இடாவேணி எனில் அளவிடப்படாத எல்லை. எல்லைகள் அதிகாரவர்க்கத்தினால் இடப்படுபவை. பிரிவினைகளுக்கும் வன்முறைக்கும், மனித துயரங்களுக்கும், உளச் சிக்கல்களுக்கும், போர்களுக்கும் காரணமாய் விளங்குபவை. 'தஞ்சம் தாருங்கோ' என்ற கதை 'நாட்டெல்லைகள் உயிருக்குப் பயந்து ஓடுபவர்களுக்கு அர்த்தமுள்ளவையாகத் தோன்றுமா?' எனும் வினாவை எழுப்புகின்றது. எல்லைகளினால் எழும் மனச்சிக்கல்களை 'மலர்', 'காலஅமுது' என்பவை விவரிக்கின்றன. இடாவேணியின் கதை கூறும் பாங்கினை நோக்கும் போது 'படைப்பாளியின் கற்பனைக்கு எல்லையிடமுடியுமா? உண்மை/கற்பனை (reality vs. fantasy) இவற்றின் எல்லைகள் என்ன?' என்ற கேள்விகள் மனதில் எழுகின்றன. 'மனிதக் கற்பிதங்களான எல்லைகளைக் கடத்தல் சாத்தியமானதா?' என்ற கேள்வி அவரின் கதைகளில் தொக்குநிற்கிறது. அவற்றை உடைத்தெறியும் சாத்தியப்பாட்டினையும் இத்தொகுப்பு உணர்த்துகிறது.

## புனைவு மொழியின் பண்புகள்:

பேச்சு மொழியே பெரும்பாலான கதைகளில் ஆதிக்கம் செலுத்துகிறது. அதைத் தவிர்த்து எழுதுவோர் வெகு சிலரே. சில கதைகளின் உரையாடல்களில் ஆங்கிலச் சொற்கள், ஆங்கில வாக்கியங்கள் என்பன இடம் பெற்றிருக்கக் காணலாம்.

மேலும் எழுத்தாளர்கள் தாம் பேச விழையும் பொருளுக்கு ஏற்ற மொழியைப் பயன்படுத்துவதில் சிரத்தை எடுக்கின்றனர் என்றே எனக்குத் தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாக பா.அ. ஜயகரனின் பாப்லோ எனும் உடைவடிவமைப்பாளனாகிய கலைஞன் பற்றிய கதையை எடுத்துக்கொள்ளலாம். பலவிடங்களில் மிகச் சிறப்பாக, கவி மொழியில் இது எழுதப்பட்டுள்ளது.

பெரும்பாலான சிறுகதைகள் கதாசிரியர் கூற்றாகவே அமைந்

துள்ளன. அவற்றில் காலவரன்முறையாகச் சம்பவங்கள் சொல்லப் பட்டிருக்கும். தன்மைக் கூற்று நோக்கு நிலைக் கதைகளில் உணர்ச்சிப் பெருக்கைக் காணலாம். சிலகதைகள் flashback உத் தியைப் பயன்படுத்துகின்றன.

வெவ்வேறு கதை உத்திகளின் பரிசீலனையை முத்துலிங்கம், நிரூபா ஆகியோரின் கதைகளில் காணலாம். நிரூபாவின் 'கால அமுது' எனும் கதை கல்வெட்டுப் பாணியில் அமைந்துள்ளது. குறியீடு, மாயா யதார்த்தவாதம் (magical realism), உணர்வு நிலையோட்டம் (stream of consciousness) முதலான உத்திகளை அவர் இலாவகமாகக் கையாளுகின்றார். பா.அ. ஜயகரனின் கதை களிலும் குறியீடுகள் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக அவரின் 'அகதியின் றங்குப்பெட்டி' எனும் சிறுகதையில், றங்குப்பெட்டியானது கைவிட்டு விட முடியாதவையும், அதே சமயம் பிற்காலச்சந்ததியினர் அக்கறை காட்டாதவையுமான அகதி களின் நினைவுகளினதும், விழுமியங்களினதும் குறியீடாக விளங் குகிறது.

நான் வாசித்த அளவில் தொன்மங்களையும் இலக்கியக் குறிப்புக ளையும் தன் படைப்புகளில் சிறப்பாகப் பயன்படுத்தியிருப்பவர் முத்துலிங்கம் அவர்களே. சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், பெரியபுராணம், கந்தபுராணம், இதிகாசங்கள் தொடர்பான குறிப்பு கள் அவர் கதைகளில் இடம் பெற்றுள்ளன. அவரின் 'பூமாதேவி' எனும் கதையிலிருந்து ஓர் எடுத்துக்காட்டைத் தருகிறேன்.

'மூடர்களில் மூடன், அதி மூடன் என இரண்டு வகைகள் உண்டு அல்லவா? இவன் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவன். எங்கள் இதிகாசங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்ததில் மூடர்களுக் கெல்லாம் மூடன் கம்சன்தான் என்பது என் கணிப்பு. அல்லாவிடில் தன் தங்கையின் வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தைதான் தனக்கு யமனாவான் என்று தெரிந்திருந்தும் தேவகியையும், வசுதே வரையும் ஒரே சிறையில் பூட்டி வைத்திருப்பானா? எங்கள் கம் பனி அதிபர் இந்தக் கம்சனிலும் பார்க்க ஒரு ஸ்தாயி மேலே என்றுதான் சொல்ல வேண்டும்.'

நகைச்சுவையுடனும் உள்ளார்ந்த எள்ளலுடனும் கதை சொல்லும் ஆற்றல் கொண்ட முத்துலிங்கம் நேரடி அனுபவமின்றி இலக்கி யம் படைக்க முடியாது எனும் கருத்தினைப் பொய்யாக்கியவர். எடுத்துக்காட்டாக அவரின் 'கறுப்பு அணில்' என்ற இலங்கை அகதி பற்றிய கதையைக் குறிப்பிடலாம்.


## விமர்சனங்கள்:

இறுதியாக, புலம்பெயர் எழுத்துகள் குறித்த பொதுவான விமர் சனங்களையும் நோக்கலாம். புலம்பெயர் இலக்கியம் எனில் புலம் பல் இலக்கியம் என்றொரு விமர்சனம் உண்டு. 'புலம்பெயர்தல் என்ற சொல்லோடு புலம்புதலுக்கு எவ்விதத் தொடர்பும் கிடை யாது என்றாலும் புலம்புதல், புலம்பெயர் இலக்கியத்தின் ஒரு முக்கிய பொருளாக இன்று அமைந்திருக்கிறது' என்று சிறகு தமிழிணைய வார இதழில் நவம்பர் 22, 2014 வெளியான 'புலம் பெயர் இலக்கியம்' எனும் கட்டுரையில் ஆச்சாரி என்பவர் குறிப் பிடுகின்றார். மரணம், இழப்பு, குறித்த படைப்புகள் பரவலாகக் காணப்படுகின்றமையின் அத்தகைய எண்ணம் வாசகரிடத்து உண் டாகியிருக்கலாம். அல்லது அவ்விடயங்கள் குறித்த படைப்புகளே பொது வெளியில் செல்வாக்குற்றமையும் காரணமாகலாம். ஏலவே நான் எடுத்துக்காட்டிய சிறுகதை இலக்கியப் பொருண்மையின் பன்மைத்துவம் இக்கருத்தை மீள நோக்கவைக்கும் என்று நம்புகி-றேன்.

அடுத்து, மொழி தொடர்பாக, பனியும் பனையும் சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய முன்னுரையில் சுஜாதா குறிப்பிடும் கருத்தும் முக்கியமானது. 'பொதுவாகவே இந்த எழுத்தாளர்களிடம் தங்கள் வட்டார வழக்கைத் தொடர்ந்து பயன்படுத்தும் பிடிவாதம் இருக்கி றது. இதனால் சில சமயங்களில் கதைகள் மற்ற நாட்டுத் தமிழர் களுக்குப் புரிவதில் சிரமமிருந்து அவைகளின் சர்வதேச தன் மையை இழந்து விடுகின்றன. வட்டார வழக்கு கதைக்கு ஒரு நம் பத்தக்க நிலையை அளிக்க மட்டும் பயன்படுத்த வேண்டும் என் பது என் கருத்து. அதிகப்படியான ஆங்கில வாக்கியங்களின் பிர யோகமும் இவர்கள் தங்கள் கதைகளைச் சொல்வதில் உள்ள அவசரத்தைக் காட்டுகின்றது'. கதையின் யதார்த்தப்பாங்கிற்கு வலுவூட்டும் முகமாகவே உரையாடல்களில் வட்டார வழக்கு, ஆங்கிலம் என்பவற்றை எழுத்தாளர் புகுத்துகின்றனர் என்பது என் கருத்து. இவ்விடத்தில் வடலி பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட த. அகிலனின் மரணத்தின் வாசனை போர் தின்ற சனங்களின் கதை என்ற நூலுக்குக் கி.பி. அரவிந்தன் எழுதிய முன்னுரையிலி ருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

த. அகிலனின் மொழி வழியாகப் பரவி நிற்கும் மரணத்தின் வாச னையை நுகர்வதற்கு ஈழத்து மொழிவழக்கு, பேச்சுவழக்குத் தடை யாக இருக்கக்கூடும். ஆனால் இந்தப் படைப்புகளின் அழகே அந்த மொழிகளில் தான் தங்கியுள்ளது.

நிறைவாக, கனடாத் தமிழ் எழுத்தாளர்கள் இலக்கியத்தை தமது சமூகத்திற்காக, தம்மக்கள் பேச்சு மொழியில் படைக்கின்றார்கள். தாம் கூறும் விடயம் தம் சமூகத்திற்கு தேவையானது, இன்றியமை யாதது, சமூகத்தை மாற்றக் கூடிய சிந்தனைப்பொறி கொண்டது எனும் நம்பிக்கையில் இலக்கியம் படைக்கின்றனர். 'இலக்கியம் பொழுதுபோக்கிற்கானது' என்ற கருத்தை முற்றாக மறுதலிப்பவர் களாகவே இருக்கின்றனர். மேலும், இவர்கள் முழுநேர எழுத் தாளர்கள் அல்லர். இவர்களின் எழுத்து இவர்களின் ஊதியமற்ற உழைப்பின் விளைவு. பத்திரிகைகளோ மாத இதழ்களோ பணம் கொடுப்பதில்லை. புத்தகவெளியீட்டில் விற்பனையானால் மட்டும் ஏதாவது உண்டு. இவர்களது மன உணர்வுகளின் சத்தியத்திலும் நேர்மையிலுமேயே இவர்கள் எழுத்துகள் பிரகாசிக்கின்றன. சுய அனுபவங்களிலிருந்து முகிழ்ப்பதே இலக்கியம் என உறுதியாக நம்புவர்கள். தங்கள் கடந்த கால, நிகழ்கால வாழ்க்கை அனுப வங்களைக் கற்பனையுடன் கலந்து தருகின்றனர். அகதியாய்ப் புலம்பெயர்ந்த இவர்களின் வாழ்வியல் அனுபவங்கள் தனித்துவ மானவை. வரலாற்றின் குறிப்பிட்ட காலப்பகுதியின் அரசியல், சமூக, பண்பாட்டு நிலைமைகளை உணராது இவர்கள் இலக்கி யத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளல் கடினம். எடுத்துக் காட்டாக, குமார் மூர்த்தியின் 'இறுதி அத்தியாயம்' என்ற சிறுகதை சமூக நலனில் அக்கறை கொண்ட புத்திஜீவிப் பெண் ஒருவர் ஆயுதத்தினால் மௌனிக்கப்படுவது பற்றிப் பேசுகின்றது. ஆனால் இக்கதையை விளங்கிக் கொள்ள, அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள 1987-88 கால யாழ்ப்பாணப் பின்னணி பற்றிய அறிவு அவசியம். ஆனால். காஞ்சனா தாமோதரன் 'அழுந்தும் மானிடம்:குமார் மூர்த்தி சிறுகதைகள்' எனும் தலைப்பில் காலம் இதழ் 19ல் எழுதிய கட்டுரை குமார் மூர்த்தியின் சிறுகதைகளின் பொருண்மையின் உலகளாவிய பண்பினை (universality) வலி யுறுத்துகின்றது. கதை உருவாக்கத்திற்கு உந்துதலாக விளங்கிட வரலாற்று, சமூக, பண்பாட்டுப் புல விவரங்களை அது கவனத் தில் எடுக்கவில்லை.
மேலும், இலக்கியவாதியினர் 'அழகியல் அம்சங்கள் புலம்பெயர் கதைகளில் உண்டோ?' என்று தேடலாம். 'இல்லை' என்றும் வாதி டலாம். ஆனால் ஒன்றை மாத்திரம் என்னால் உறுதியாகக் கூற முடியும். கனடா சிறுகதை இலக்கியம் என்பது ஒடுக்கப்பட்ட மானி டத்தின் குரல். அவர்களின் எழுத்து தமிழில் இருக்கலாம். அவர் கள் வெறுமனே தமது அனுபவங்களைத்தாம் எழுதியிருக்கலாம். ஆனால் எங்கெங்கு அரசுகளாலும், ஆயுதக்குழுக்களாலும், சக மனிதராலும் ஒடுக்கப்பட்ட, வதைக்கப்பட்ட மனிதர்கள் இருக்கி றார்களோ, எங்கெல்லாம் உயிர் காத்தற்காக அவர்கள் புகலிடம் தேடி ஓடுகிறார்களோ, எங்கெல்லாம் புகலிட வாழ்வின் சவால் களை அவர்கள் சந்திக்க நேர்கிறதோ, அங்கங்கே இருக்கின்ற அவர்கள் அனைவரும் இவ்விலக்கியத்தினைத் தத்தம் மொழிக-ளில் வாசிக்கமுடியுமானதாக இருப்பின், இவ்வெழுத்துகள் தம் வாழ்க்கைக்கு மிக நெருக்கமாக இருப்பதை உணர்வார்கள்.



maithilithayanithy@thaiveedu.com



# ஆய்வறிஞர் பேராசிரியர் அ.கணபதிப்பிள்ளை

**- டிலிப்குமார்**

கடந்த மாதம் தாய்வீடு சிறந்ததோர் அரசியல் திறனாய்வாளரை இழந்திருக்கின்றது. மறைந்த யாழ். பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு பலரையும் துயரத்தில் ஆழ்த்தியது போலவே தாய்வீடு இதழுக்கும் பெரும் இழப்பையும் துயரத்தையும் ஏற்படுத் தியுள்ளது.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வாழ்விடமாகக் கொண்டிருந்த திரு. கணபதிப்பிள்ளை கல்வியில் சிறந்து விளங்கியவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் பயின்று, அதே பல்கலைக்கழகத்தில் தற்காலிக விரிவுரையாளராக கடமையாறி, யாழ். பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளராகப் பணியாற்றிவர். கற்பித்த காலங்களில் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.



இலங்கையில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக, குடும்பத்துடன் கனடாவுக்குப் புலம்பெயர்ந்திருந்தார். இங்கு அவருடைய தகுதி சார் துறைகளில் பணி செய்யும் வாய்ப்புக் கிட்டவில்லையாயினும் கிடைத்த பணிகளைச் சிறப்புறச் செய்து வந்தார்.

2008ம் ஆண்டில் அரசியல் ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதற்கு தாய்வீட்டில் ஏற்பட்ட வெற்றிடம், ஆய்வுநோக்கில், தன் சொந்த விருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி எழுதவல்ல மற்றுமொரு வரைத் தேடிப் பெறவேண்டியிருந்தது.

தாய்வீடு இதழோடு பெரிதும் இணைந்து இயங்கும் குமணன்தான் முதலில் திரு. கணபதிப்பிள்ளை அவர்களைப் பற்றி எமக்குத் தெரிவித்தார். அவரோடு தொடர்பு கொண்டு பேசியபோது தாய் வீடு இதழுடன் இணைந்து இயங்க மிக மனமகிழ்வுடன் உடன் பட்டார். அவருக்குக் கனடா இதழியல்துறை புதிதாக இருக்க வில்லை. கனடா வந்த ஆரம்ப காலங்களில் ஈழமுரசு இதழோடு இணைந்து பணியாற்றிய அனுபவம் அவருக்கு இருந்தது. கன டியத் தமிழ் இதழ்களின் போக்குகளையும் கனடியத் தமிழ் வாசகர்களின் தேவைகளையும் அவர் நன்கு தெரிந்து கொண் டிருந்தார். இது எமக்குப் பேருதவியாக இருந்தது.

தாய்வீடு இதழில் அவர் எழுதிய முதற்கட்டுரையின் தலைப்பு இன்றும் நினைவில் இருக்கின்றது. 'இத்தனைக்கும் நடுவில் இந் தியா என்ன செய்து கொண்டிருக்கின்றது?' என்ற வினாத் தலைப் போடுதான் எழுத ஆரம்பித்தார். இலங்கை அரசு பெருமுனைப் புடன் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முற்பட்ட காலம் அது. பெருவாரியான பொதுமக்கள் கொல்லப்பட்டு, தமிழர் உடை மைகள் அழிக்கப்பட்டு, எஞ்சியோர் முள்ளிவாய்க்காலை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த காலம். அன்றைய அந்த முதல் கட்டு ரையே பலராலும் பாராட்டப்பட்டது.

திரு. கணபதிப்பிள்ளை அவர்களுடன் அன்று தொடங்கிய பய ணம் அவர் மறையும்வரை தொடர்ந்தது. அவர் தனது கட்டுரை-களை ஒப்புக்கு எழுதுபவர் அல்லர். ஒரு தலைப்பைத் தேர்ந் தெடுத்து விட்டாரெனில் அதைப் பற்றிய தேடுதல்களை உட னேயே ஆரம்பித்துவிடுவார். எழுதும் கட்டுரைகள் அனைத்துக்கும் போதிய சான்றுகளை அவர் கொண்டிருப்பார். தகுதியான சான்று களின் அடிப்படையிலேயே தன்னுடைய திறனாய்வுக் கருத்து களைத் தொகுத்து, தன் கருத்துகளையும் முன்வைப்பார். திற னாய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கு அவரிடமிருந்த ஆங்கிலப் புலமையும் கணிசமாக உதவியது.

சிலவேளைகளில் குறித்த தலைப்புக்கு எழுதித் தரும்படி நாங்கள் கேட்டதுண்டு. அவ்வேளையில் எமது கருத்துகளைக் கேட்டுவிட்டு, தன் தேடுதல்கள் ஊடாகச் சிறந்த கட்டுரைகளை எழுதித் தந் திருக்கின்றார். திரு. கணபதிப்பிள்ளை காலத்தோடு ஒட்டிப் பய ணித்தவர். காலத்தின் நகர்வுகளில் ஏற்படும் மாற்றங்களை நன்கு உள்வாங்கி, அன்றைய நாட்களுக்குரிய தேவைகளை மையப் படுத்தி எழுதுவார். கடந்த 14 ஆண்டுகளாக இவர் தாய்வீட்டில் எழுதிய கட்டுரைகளைப் பாராட்டி பல அழைப்புகள் வந்தனவே யன்றி, இவர் கருத்துகளை யாரும் மறுத்துப் பேசியதாக எமக்கு நினைவில்லை. இவர் எழுதும் கருத்துகளோடு ஒத்துப்போகாதவர் கள் கூட, இவருடைய தர்க்க வழிப்பட்ட வாதங்களை மறுதலித் துப் பேச முடியாதிருக்கும்.

தான் எழுதிய கட்டுரைகளால் தன்னைச் ஒரு சிறந்த திறனாய் வாளன் என்றோ, வளர்ந்துவிட்ட எழுத்தாளன் என்றோ அவர் கரு-தியதில்லை. தன்னை ஒரு கல்வியாளனாகக்கூட மற்றவர்களுக்குக் காட்ட முனைந்ததில்லை. அந்த அளவுக்கு அடக்கமானவர்.

அவர் அரசியல் கட்டுரைகளை மட்டும் எழுதியவரல்லர். அரசியல் அல்லாத பிற துறைகளிலும் சிறந்த கட்டுரைகளை எழுதியிருக் கின்றார். தன்னுடைய பெயரில் அரசியல் கட்டுரைகள் மட்டும் வந்தால் போதும் எனக் கருதிய அவர், பிற சில கட்டுரைகளுக் குத் தனது பெயரை இட விரும்பியதில்லை.

அவர் ஓர் எழுத்தாளராக மட்டுமல்லாது, அவ்வப்போது தாய்வீடு இதழுக்கு அறிவுரை வழங்குபவராகவும் இருந்திருக்கின்றார். முடி வுகள் எடுக்கத் தடுமாறும் கடினமான பொழுதுகள் சிலவற்றின் போது பெறுமதியான அறிவுரைகளையெல்லாம் எமக்கு வழங்கி யிருக்கின்றார்.

இவர் புவியியல் துறை ஆய்வாளர் என்ற அடிப்படையில், உல கத் தோற்ற வரலாற்றை ஆய்வு செய்வதில் விருப்பம் கொண்டவ ராக இருந்தார். பூமி தட்டுகளால் இணைக்கப்பட்டிருக்கின்றது என் பதையும் இந்தத் தட்டுகளின் விலகல்களால் கண்டங்கள் நகர்ந் திருக்கின்றன என்ற கண்டநகர்வுக் கொள்கைளின் அடிப்படை யிலும் பல ஆய்வுகளைச் செய்தவர். கடந்த 13 மாதங்களாக இலெமூரியாக் கண்டத்தின் நகர்வுகள் பற்றிய கட்டுரைகளை அவர் 'இலெமூரியா அல்லது குமரிக் கண்டம்' என்னும் தலைப் பிட்டு தொடர்ச்சியாக எழுதி வந்தார். பல்வேறு ஆய்வாளர்களின் ஆய்வுக் கருத்துகளின் அடிப்படையிலும் பூகோள அமைப்பின் போக்கிலும் இக்கட்டுரைகள் அமைந்திருந்தன. மேன்மேலும் தொடர்ந்திருக்க வேண்டிய கட்டுரைத்தொடர், அவரது உடனலக் குறைவினால் 2021ம் ஆண்டு மே மாதத்துடன் நின்றுவிட்டது.

திரு. கணபதிப்பிள்ளை அவர்களின் சுபாவம் இங்கு குறிப்பிட வேண்டியதொன்று. அனைத்து மாந்தர்களுக்குள்ளும் ஓர் உணர் வோட்டம் இருக்கும். அதைப் பலரும் பேச்சு வழியாகவும் முக அசைவுகள் வழியாகவும் வெளிப்படுத்துவர். ஆனால் எப்போதும் எவ்வித மாற்றங்களையும் வெளிக்காட்டாத அமைதியும் புன்னகை யும் நிறைந்த முகமே அவருடையது. அவரைப் போற்றிப் பேசி னாலும், அவர் கருத்தை மறுத்துப் பேசினாலும் அவர் முகத்தில் எந்த மாற்றங்களையும் காண முடியாது. தாய்வீடு நடத்தும் எழுத்தாளர் சந்திப்புகளில் கலந்து கொள்ளும் இவர் அமைதியாக வந்து அமைதியாகவே சென்று விடுவார். யாராவது பேசினாற்றான் பேசுவார். சொற்களைச் செலவழிப்பதில் மிகவும் சிக்கனமானவர்.

அவர் மனிதர்களை விடவும் விலங்குகள் பறவைகளை அதிகம் நேசித்தார் எனக் கூறலாம். எப்போதுமே அஃறிணை உயிர்களு டன் உறவாடுவதில் அவர் பெருவிருப்புக் கொண்டிருந்தார் என் பதை நான் அறிகின்றேன். அவர் நோய்வாய்ப்பட்டிருந்த காலங் களில் அவர் உணர்வுகள் அதிகமாக விலங்குகள் பறவைகளுடன் உறவாடியிருந்தன. தோட்டக்கலையிலும் அவர் வல்லவராக இருந் தார். கோடைகாலங்களில் வீட்டின் பின்புறத்தில் தோட்டம் செய்வ தைப் பெரு வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவருடைய மறைவு, தாய்வீடு இதழைப் பொறுத்தளவில் பெரும் இழப்பையே ஏற்படுத்திச் சென்றிருக்கின்றது. அவர் மறைந்த போது உலகின் பல பகுதிகளில் இருந்தும் அவருடைய மாண வர்கள் அனுப்பிய அனதாபச் செய்திகள் அவருடைய ஆசிரிய ஆளுமையை எமக்கு உணர்த்தின. உலகளாவிய கல்விமான்கள் பலரும் அவருடைய மறைவு குறித்துக் கருத்து வெளியிட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

கனடா மண்ணிலே நல்ல மனிதராகவும் கல்வியாளனாகவும் தேர்ந்த எழுத்தாளராகவும் வாழ்ந்தவர். அவர் இன்னும் நீண்ட காலம் வாழ்ந்திருக்க வேண்டியவர். அன்னாரின் பிரிவால் துயரு றும் குடும்பத்தாருக்கும் சுற்றத்தாருக்கும் தாய்வீடு இதழ் தன்னு டைய ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றது.

dilipkumar@thaiveedu.com

# கணபதிப்பிள்ளையின் புவிசார் அரசியல் சிந்தனையின் தனித்துவம்

**- அமுது ஜோசப் சந்திரகாந்தன்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அதன் ஸ்தாப காலம் முதல் புவியியல் துறையில் வீரியமான, தரிசன வீச்சு மிக்க இளம் விரிவுரையாளராகத் தனது ஆசிரியப் பணியினை ஆரம்பித்தவர் எனது அன்பு நண்பரும் என் தந்தைவழி உறவினருமான அறிஞர் கணபதிப்பிள்ளை அவர்கள்.

1981ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் கிறிஸ்தவ நாகரிகத்துறையில் நான் கற்பிக்கத் துவங்கிய காலம் முதல் கணபதிப்பிள்ளையையும் எமது சமகாலத்தவராகிய பேராசிரிய நண்பர்கள் சிவநாதன், பேரின்பநாதன், பார்வதி கந்த- சாமி, நாச்சியார் செல்வநாயகம் சிவசந்திரன், சோ. கிரிஷ்ணராஜா ஆகியோரையும், பல்கலைக்கழக சிரேஷ்ட பொது அறையில் அடிக்கடி சந்திக்கின்ற, அளவளாவுகின்ற பல வாய்ப்புகள் கிடைத்தன. போர்க்காலச் சூழலில் எமது வாதப்பிரதிவாதங்களும் சல்லாபங்களும் உணர்ச்சி மேலீடுகளுக்கு உள்ளாவதுண்டு.

1980கள் 90களில் இலங்கை அரசியல் பற்றியும் இன்னும் குறிப்பாக ஈழ அரசியலினது ஓட்டங்கள், மாற்றங்கள், வளைவுகள், நெளிவுகள், விரிசல்கள், விபரீதங்கள், முரண்பாடுகள், பற்றியும் காய்தல் உவத்தல் இன்றியும், கட்சிச்சார்புகளும் பக்கச்சார்புகளுமின்றியும் கருத்துத் தெரிவிப்பதென்பது கடினமானவோர் கருவூலமாகும்.

அவ்வேளைகளில் பொறுமையுடன் போராட்ட அரசியல் விடயங்களில் நிதானமாக எம்மை சிந்திக்க வைக்கும் அக்கால நிகழ்வு சார் விடயங்களில் சர்ச்சைக்குரிய, தர்க்கத்துக்குரிய கருத்துக்களை சிக்கலில்லாமல் அவருக்கே உரிய இதமான புன்சிரிப்புடன் முன்மொழிபவர் நண்பர் கணபதிப்பிள்ளை.

கணபதிப்பிள்ளை அவர்கள் புவிசார் அரசியல் (Geo-Politics), புராண-இதிகாச உள்ளகப் புவியியல், (Geo-mythology), ஆகிய துறைகளில் கூடிய கவனம் செலுத்தி இவை பற்றிக் கற்றும், கற்பித்தும் வந்தவர். அவர் புலம் பெயர்ந்து கனடா வந்தபின் இத் துறைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முன்னெடுப்பதில் ஒரு தொய்வு நிலை ஏற்பட்டமையை மாணவர் பலர் உணர்ந்தனர். 1990களின் ஆரம்பத்தில் புவியியலை சிறப்புப் பட்டப் பாடமாக கற்ற மாணவருக்கு பிரஞ்சு மொழிக்கான அறிமுக விரிவுரைகளை வழங்கியவன் என்ற வகையில் இதை நான் அறிவேன்.

கணபதிப்பிள்ளை கனடாவிற்குப் புலம் பெயர்ந்தபின் ரெறன் ரோவில் வெளியிடப்படும் ஈழமுரசு, தாய்வீடு ஆகிய பத்திரிகைகள்ில் அவ்வப்போது இலங்கையில் இடம் பெறும் அரசியல் தடு மாற்றங்கள், திருகுதாளத்தனமான தேர்தல்கள், இராணுவ அத்துமீறல்கள், சீனா, இந்திய, பொருண்மிய சுரண்டல்கள், குழிபறிப்புகள், சனநாயகமீறலான பேரவலங்கள், காணாமல் ஆக்கப்படுதல்கள், கொடுமையான இடப்பெயர்வுகள், பேரழிவுகள் பற்றி ஆய்வுச் சவால் நிறைந்த கட்டுரைகளை நிதானமாக எழுதி வந்தவர்.

புத்தாயிரமாண்டின் தொடக்க காலம்முதல், 2009 மே மாதம் ஈழப் போர் முடிவுற்ற பின்னும் அதற்கு முன்னருமாக கணபதிப்பிள்ளை எழுதிய கட்டுரைகள் அத்தனையுமே இலங்கையின் அரசறிவியல் ஆய்வாளர்கள், மாணவர்கள் வாசித்துப் பயன் பெறவேண்டிய பல காத்திரமான விடயங்களை உள்ளடக்கியவை. இவற்றில் அதிக மானவை தாய்வீடு பத்திரிகையில் மாதந்தோறும் வெளிவந்தவை.

அவருக்கே உரித்தான அழகிய, எளிமையான தமிழ் நடையில் சில பழமொழிகளையும், உருவக, உவமானங்களையும் உள்ளடக்கிய இக் கட்டுரைகளில் புவிசார் அரசியல் ஆழமும், தரிசன வீச்சும் நிறைந்த வலிமைமிக்க எண்ணக்கருக்களையும், அறிவுரைகளையும், எதிர்வு கூறல்களையும், உணர்ச்சி வசப்பட்ட ஆர்பரிப்புகள் ஏதுமின்றி அடக்கத்துடன் அவர் ஆணித்தரமாகப் பொறித்துள்ளார்.

தாய்வீடு பத்திரிகையில் அவர் எழுதியவை காட்டமான தரவுகள் கொண்ட விளக்கமும், நிகழ்கால நோக்கிலான விரிவாக்கமும் கொண்டவை. பல கட்டுரைகள் இந்தியா, சீனா, தென்னாசியா, அமெரிக்கா, ஐரோப்பா ஆகியவையின் அரசியல் பகைப் புலத்தில் இலங்கையின் அரசியல் எதிர்காலம் பற்றியவை. இலங்கைக்குள், இன, மத, மொழி, மோதல்கள் எவ்வாறு உருவாக்கி வளர்க்கப்படுகின்றன என்பதை விளக்கும் சில கட்டுரைகள். இவ்வாறு பல்பரிமாண அரசியல் வார்ப்பில் வரையப்பட்ட அவரது கட்டுரைகளில் ஒரு சில இங்கு வியந்து சுட்டிக்காட்டப்படத்தக்கவை. இலங்கைத் தமிழருக்கெதிரான இருண்ட போரின் ஒரு அத்தியாயத்தின் முடிவு (ஜுன் 2009), வன்னி மக்களின் வாழ்க்கையில் அடுத்த கட்டம் எதில் தொடங்குகிறது? (ஜூலை 2009), தமிழீழத்தின் காப்பரண் தமிழகம்தான் (பெப் 2009), தென்னாசியத் தடுப்பு வலய நாடுகளின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக் குறியுடன் (நவ. 2009), ஈழத் தமிழர்களுக்காகப் பேச வல்லவர் யார்? (ஜன. 2011), சிங்களக் கலாசார ஊடுருவல் (ஒக்ரோ. 2016), இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் (ஆகஸ்ட் 2017), இலங்கையின் ஆட்சிமாற்றத்தில் இந்திய நிலைப்பாடென்ன? (நவம். 2018) இன அழிப்பிலிருந்து மத அழிப்புக்கு (பெப். 2019).

இவை தவிர சர்வதேச புவிசார் அரசியல் நிகழ்வுகள் பற்றி அவ்வப்போது அவர் எழுதிய கட்டுரைகளில் எமது தாயகமக்களின் ஒருமித்த எதிர்கால செயற்பாடுகள் பற்றி ஒப்பியல் நோக்கில் அவர் எதிர்வு கூறி எழுதியவை துணிந்து நோக்கத்தக்கவை. அரேபிய தேசங்களில் ஆயுதம் ஏந்தாத அரசியல் மாற்றம் (மார்ச் 2011) எனும் கட்டுரையில் கனடிய தமிழர்கள் எகிப்து, துனீசியா மக்களுடன் அவர்களது போராட்டங்களில் இணைந்து சென்றது பற்றி அவர் பதிவு செய்திருப்பவையை இங்கு மனம்கொள்ளலாம்.

*‘பெரும் அழிவுக்கு ஆட்பட்ட இனமாய் புலம்பெயர் தேசங்களில் வாழும் நாம் ஒடுக்கப்படுகிற மக்கள் போராட்டங்களில்*



*இணைந்து கொள்கிறபோது இத்தகைய எழுச்சி ஆதரவு பேர ணிகளில் 'தமிழர்களாகிய நாம் எகிப்திய மக்களின் ஒருங்கிணை வுக்கு ஆதரவளிக்கின்றோம்' ('We Tamils are in Solidarity with Egyptian People)என்றோ, 'ருனீசியர்களுக்கு ஆதரவாக தமிழர் கள்' ('Tamils United to Support Tunisians') என்றோ கோசங்களை ஏந்தி செல்கிற போது செழுமையுற்ற இனமாக, நியாயமற்ற மனித அழிவுக்கு ஒருபோதும் துணைபோகாத இனமாக, இதுவ ரையில் விலைமதிப்பற்ற உயிர்களை இழந்தபோதும் சகோதரத் துவத்தையும் மனிதப் பண்புகளையும் ஒருபோதும் இழக்காதவர் களாக அறியப்படுவோம் என்று எண்ணத் தோன்றியது. உண்மை யில் உலக நாடுகளில் இடம்பெறுகின்ற எழுச்சிகளதும் அதன் அரசியல் முக்கியத்துவத்தையும் விளங்கிக் கொள்வதூடாகத்தான் நாம் எமது பிரச்சினைகளையும் புரிந்துகொள்ள முடியும்.'*

இருபதாவது திருத்தமே கடைசித் தீர்வில் பயன்படுத்த வேண்டி வரும் எனும் தலைப்பில் (தாய்வீடு, மே 2020) அவர் வரைந்த கட்டுரையில் சென்ற ஆண்டில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இடையில் முக்கோண ரீதியில் நிகழும் இழுபறி நிலைகளையும், பொருண்மிய, நிலவள அபகரிப்புகள் பற்றியும் கணபதிப்பிள்ளை எதிர்வு கூறியவை, இப்புத்தாண்டில் நடைமுறை யில் இடம்பெறக் காண்கிறோம். அவரது எச்சரிக்கை வார்த்தைகள் தரிசன வீச்சு மிக்கவை என்பதனை பின்வரும் அவரது முன்னொட் டச் சிந்தனை தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றது.


*'இலங்கை தொடர்ந்தும் சீனக் கடனுக்காக இலங்கையை பிரித் துப்பிரித்து விற்கும் நிலை ஏற்படுமாயின் இலங்கை கடன் பொறி யுள் மட்டுமல்ல கலாச்சாரப் பொறியுள் சிக்கவேண்டிய நிலையு மிருக்கும் என்பதனைத் துணிந்து கூறமுடியும். இலங்கையில் பௌத்த சீனர்களின் நாடு ஒன்று உருவாகுவதுடன் நாலாவது இனமான சீன இனத்துக்கும் சேர்த்துச் சிங்கள சீனப் பௌத்த நாட்டுக்கான புதிய அரசியலமைப்பினை உருவாக்க வேண்டிய நிலைகூட ஏற்படலாம். இதேநிலை தொடருமாயின் இந்தியாவும் சிலபகுதிகளை வாங்கலாம். அமெரிக்காவும்கூட வாங்கலாம். இதன்மூலமாக சர்வதேசத் தெருச்சந்தை நாடாக இலங்கை மாறி விடுமோ என்ற ஐயப்பாடு எழுந்த வண்ணமுள்ளது.'*

தாராள சனநாயக கோட்பாடுகளை நடைமுறையில் கொண்ட கன டிய நாட்டிலிருந்து எமது தயாகத்தில் சனநாயகம் என்ற பெயரில் தடம்புரண்டு சீரழியும் அரசியல் யாதார்தங்களை ஆய்வு செய்து கணபதிப்பிள்ளை எழுதியவை உண்மையை உள்ளபடி உரைப்- பவை. இத்தகைய ஆய்வுகளை இலங்கையில் வாழுபவர்கள் வெளியிடுவது இலகுவானதல்ல.

ஈழ மண்ணில் இன்று இராணுவக் கெடுபிடிகள், கட்டுப்பாடுகள் மத்தியில், தமிழ்ப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் முதல் பத்தி ரிகை ஆசிரியர் வரை உள்ளதை உள்ளபடி உரைத்தல் உயிரா பத்தை வருவிக்கும் விடயம் என்பதை உணர்ந்து, பயந்து செயற் படும் நிலையில் உள்ளனர்.

இரண்டு விடயங்களை இங்கு அழுத்திக் கூறுதல் தகும். தமது பல கட்டுரைகளில், பல கோணங்களில் ஈழத்தமிழர் தயாகத்தின் கடந்தகாலத்தின், நிகழ்காலத்தின் இருண்ட வரலாற்றுத் தூலங் களை பரந்த புவிசார் அரசியல் நோக்கில் இவர் பக்கச்சார்பின்றி பதிவை செய்துள்ளார்.

இத்தகைய ஆய்வுக் கருக்களைக் கொண்ட ஆவணம் நூலுருவில் பாதுகாக்கப்படவேண்டும். 2009ல் ஈழப்போர் முடிவுற்ற காலம் முதல் 2021ன் நடுப் பகுதிவரை அவர் எழுதிய புவிசார் அரசியல் கட்டுரைகள் பல தரவுகளை ஒன்றிணைத்தும், விடயம் அறிந்தவர் களை அவர் நேர்காணல் செய்தும், தீவகம், வன்னி, ஆகிய இடங் களில் அவர் முன்கூட்டியே தேடிப் பெற்றவையுமாகும். தீவகமும், வன்னி மண்ணும் அவர் சிறுவயதிலும் இளமையிலும் நடந்த, வாழ்ந்த, வளர்ந்த பிரதேசங்கள். எனவே போரின் பின்பு இலங் கைக்கு சென்றபோது அவர் நேரடியாகக் கண்டவை, கேட்டவை, கிரகித்த பட்டறிவு வட்டத்தினுள் திரட்டியவையும் அடங்கும். அவ ரது கட்டுரைகளில் ஆங்காங்கே காணப்படும் நேரடி உணர்



வலைகள் போன்ற கருத்தாடல்கள் இவ்வண்ணம் பெற்றவையே. எனவே இவை மீளப்பெறமுடியாதவை. பெறுமதி மிக்கவை.

ஆன்றவிந்த ஆய்வுத் தேக்கமும், நேரிய அறிவுத் தேடலும் ஒருங் கமைந்த இவரது ஆய்வுப் பதிவுகளும் இக்கால, இனிவருங்கால ஆசிரிய, மாணவ சமூகத்துக்கு அவசியமானவை. ஆதர்ஷமா னவை. எனவே இவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதுடன் உலகத்தமிழ் மாணவ செல்வங்களை சென்றடையும் நன்நோக்கு டன் ஒரு சில கட்டுரைகளேனும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியம் ஆகிய மொழிகளில் பெயர்கப் படுவதற்க்கான முயற் சிகளையும் மேற்கொள்வது பயன்தரவல்லது.



chandrakanthan@thaiveedu.com

# பேராசான் கணபதிப்பிள்ளை வாழ்வும் வளமும்

- கா. குகபாலன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் காரணமாக புலம் பெயர்ந்து வாழ்ந்துவந்த பேராசான் அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்கள் காலமானார் என்ற செய்தியறிந்து துயருற்றவர்களில் நானும் ஒருவன். பேராதனை பல்கலைக்கழகத்தில் அவருடனான எனக்கு கிடைத்த உறவு, அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருவரும் இணைந்து பணியாற்றிய நிலை, அதன் பின்னர் தொடர்ந்த நட்பு என்று... ஐந்து தசாப்தகாலஇணைப்பை இருவரும் தொடர்ச்சியாகப் பேணியவர்கள்.

நெடுந்தீவைப் பூர்வீகமாகவும் உருத்திரபுரத்தினை வாழ்விடமாகவும் கொண்ட அமரர் பேராசான் கணபதிப்பிள்ளை அவர்கள் 26.03.1949 ம் ஆண்டு பிறந்தவர். இவர் ஆரம்ப, இடைத்தரக்கல்வியை உருத்திரபுரத்தில் பயின்றார்.

1966ம் ஆண்டு க.பொ.த (சா.த)ப் பரீட்சையில் சிறப்புச்சித்தியைப் பெற்றிருந்த நிலையில், அக்காலத்தில் கிளிநொச்சியில் உயர் கல்விக்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் அமரர் கணபதிப்பிள்ளையின் உறவினரும் கிளிநொச்சிப் பாடசாலை-யொன்றில் அதிபராகவும் அதனைத் தொடர்ந்து பிரதிக்கல்விப் பணிப்பாளருமாக கடமையாற்றியவருமான அமரர் சின்னத்தம்பி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த (உ.த) கல்வியை தொடர்ந்த இவர், 1968ம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து 1969ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு தெரிவானார். 1973ம் ஆண்டு புவியியலில் சிறப்புப் பட்டத்தைப்பெற்ற இவர் 1974ம் ஆண்டு அதே பல்கலைக்கழகத்தில் தற்காலிக உதவி விரிவுரையாளராக கடமையாற்றும் சந்தர்ப்பத்தைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து 1974ம் ஆண்டு நிறுவப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை நிரந்தர விரி-வுரையாளராக 1975ம் ஆண்டு நியமனம் பெற்றார். இந்நிலையில் கற்பித்தலிலும் ஆய்வினை மேற்கொள்வதிலும் அக்கறையுடன் செயற்பட்டு 1981ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விவசாயப் புவியியல் தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் மூலம் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்று விரிவுரையாளராக உயர்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக இங்கிலாந்தில் உள்ள ஹல் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். பின்னர், விடுமுறையில் அவர் நாட்டுக்கு வந்திருந்த நிலையில், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையின் காரணமாக அதனைத் தொடரும் சந்தர்ப்பத்தை இழக்க வேண்டியேற்பட்டது. இருப்பினும் ஆய்வுப் பணியினைத் தொடர்ந்த நிலையில் 1989ம் ஆண்டு சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவியுயர்வினைப் பெற்றுக்கொண்டார். மேலும் அவர் குறிப்பாக விவசாயப் புவியியலில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தாலும், புவியியற் பரப்பில் ஏனைய கற்கை நெறிகளிலும் ஆழ்ந்த புலமை கொண்டிருந்தார் என்றால் மிகையாகாது. குறிப்பாக பல ஆய்வுக் கட்டுரைகளை உள்நாட்டு மற்றும் சர்வதேச சஞ்சிகைகளிலும் வெளியிட்டு புவியியற் கல்விப்புலத்திற்கு உரம் சேர்த்தவர். அத்துடன் குழந்தையாகவிருந்த யாழ். பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி பல்கலைக்கழக வளர்ச்சிக்கு தன்னாலான பணிகளைச் செய்தவர்.

இந்நிலையில் நாட்டில் நிலவிய சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டு புலம் பெயர்வதற்கான முடிவினை எடுத்து கனடா தேசத்திற்கு சென்று நிரந்தரமாக வாழும் சூழ்நிலை ஏற்பட்டது. அவரது இந்த முடிவானது யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைக்கு மிகப் பெரிய பேரிழப்பாகும்.

அமரர் கணபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த கல்விமான், ஆளுமைமிக்க ஆசிரியர், மனித நேயம் மிக்கவர், தனது ஆய்வுப் புலத்தினூடாக மாணவர்களின் அறிவினை வளப்படுத்தியவர், சிறந்த எழுத்தாளன், கோபம் கொள்ளாதவர், அன்பாக பழகும் ஆற்றலை இயல்பாகக் கொண்டவர். இத்தகைய நற்குணங்களைப் பெற்றிருந்த பேராசான் கணபதிப்பிள்ளை அவர்களின் குடும்ப வாழ்வில் தனது மாணவியான திருமதி ஜெயசிறீ அவர்களை இல்லற வாழ்வில் இணைத்து இரு பிள்ளைகளுக்கும் பெற்றோராகினர். இவரது தொடர் கல்விப்புல உயர்வு, மனித நேயப் பண்புகளின் வெளிப்பாட்டுக்கு திருமதி ஜெயசிறீ அவர்களுடனான இணை வாழ்வும் பெரும் துணை கொண்டிருந்தது என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பணியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டிருந்தாலும் தனது அறிவு, ஆற்றலை தமிழ் கூறும் உள்ளங்களுக்கு தொடர்ந்து வழங்கி வந்தவர். கனடாவில் வெளிவரும் வாரப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், மாதச் சஞ்சிகைகளுக்கு தொடர்ச்சியாக ஈழத்து நிகழ்வுகள் சமூக, பொருளாதார, தமிழர் தம் பண்பாடுகள் மற்றும் புவிசார்பரசியல் தொடர்பான கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளார். குறிப்பாக 'தாய்வீடு' பத்திரிகையில் பன்மைத்துவம் கொண்ட ஆய்வுகளை வெளியிட்டு வந்துள்ளதை நான் அறிவேன்.

இத்தகைய சூழலில் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்த நிலையிலும் எனது கனடாவுக்கான பயணத்தின் போதும் பேராசான் கணபதிப்பிள்ளை அவர்கள் உட்பட நண்பர் குழாத்துடனான சந்திப்புக்கள் பசுமை நிறைந்த நினைவுகளை பகிரும் சந்தர்ப்பமாக எம் எல்லோருக்கும் கிடைத்திருந்தது.

இன்றைய மனித வாழ்வில், ஆயுள் எதிர்பார்ப்பானது படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையில், அவரது இழப்புக்கான வயது மிகக் குறைவானதேயாகும். இருப்பினும், இவ்வுலகில் பிறப்பவர்கள் எவரும் நிலைப்பதில்லை என்பதற்கிணங்க பேராசான் கணபதிப்பிள்ளை அவர்களின் இழப்பினையும் விரும்பாவிடினும் ஏற்றுக் கொள்ள வைக்கின்றது. அமரரின் இழப்பினால் துயருற்றிக்கும் அவரது குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



info@thaiveedu.com

# கிராமத்து மண்வாசனைமிக்க அப்புஜி வழியில்

**- பார்வதி கந்தசாமி**

தொல்லியல் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட அழகு மிளிர்ந்து கொண்டிருக்கும் நெடுந்தீவு இன்றைய அரசியலில் மிகுந்த இடத்தைப் பிடித் துள்ளது. ஐரோப்பியர்களால் ஆளப்பட்ட காலத்தில் அதன் பெரு- மை வெளிக்கொணரப்பட்டது. புன்செய் நிலத்தின் செழுமையை குரக்கன், சாமை, தினை, கொள்ளு, கோதுமை, நெல், சணல் வளப்படுத்தின. பனையும், சிரஞ்சீவி மூலிகைகளும் மனிதருக்கு வாழ்வளிக்கும் கடல் வளங்களும் மக்களின் உடல் உழைப்புக்கு சாட்சியங்களான பனைமரக் கூடல்களும் கால் நடைகளும் குறிப் பாக ஐரோப்பியர் விட்டுச் சென்ற குதிரைகளும் தீவின் சொத்துக்க ளாக வளம் சேர்த்த தனித்துவமான தீவு இது. உலகத்திற்கே உரிய பொதுச்சொத்து இது என வளம்மிக்க தனித்த தீவாக 1800 களில் ஹீத் டீ போலோவால் விளம்பப்பட்டது. இராமேஸ்வரத்தில்



பூசைக்குத் தினமும் பால் கொடுத்த வரலாற்றுப் பண்பு கொண் டது இத்தீவு. இத்தகைய செழுமைமிக்க பூமியில் பிறந்த கணபதிப்பிள்ளை, அன்னை வயிற்றிலிருந்த போதே உழைப்பின் பலத்தைப் பெற்றதாயிடமிருந்து பெற்றுவிட்டது போன்று எண்ணத் தோன்றும் விதமாக அவருடைய உழைப்பின் மூலதனம் இருந் ததை யாவரும் அறிவர்.

கணபதிப்பிள்ளையை 1981இலிருந்து சக பல்கலைக்கழக ஆசிரி யராகப் பணி புரிந்த காலம் முதல் வெடியரசன் கோட்டைக் காட் டுத் தீவில் தனித்துவமான சுதந்திர உணர்வுகளுடன் வளர்ந்த வராகச் சந்தித்தேன். எளிமை, அப்பாவித்தனமான உருவம், தன் னலம் அற்ற போக்கு, இயல்பாகவும் அன்பாகவும் பாரபட்சமின்றி யும் மாணவருடன் பழகும் விதம், கிராமத்து மக்களுக்கு உரிய சுறுசுறுப்பும் பணிவும் கடின உழைப்பும் மிகுந்த உருவமாகவே பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த போர்க்காலச் சந்திப்புக்களின் போது நான் சந்தித்த கணபதிப்பிள்ளை காணப்பட்டார்.

கிராமியத்தின் பண்புகள் குழைத்த உருவமாக விளங்கிய கண- பதிப்பிள்ளை கனடா மண்வாசனையை முகர்ந்த நிலையில் தாய் வீடு பத்திரிகைக்கு ஊடாக அரசியல் - சமூக ஆளுமைமிக்க ஒரு வராகத் தன்னை வளர்த்துக் கொண்டார். இரு கிராமங்கள் வளர்த் துவிட்ட விவசாயிகளின் தன்னலமற்ற கடின உழைப்புமிக்க, தங்க ளைச் சுற்றியுள்ள ஆடு, மாடு, நாய், கோழி போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகளில் அன்புப் பிணைப்புக் கொண்டவர்களாக வாழ்ந்த வாழ்வும், கணபதிப்பிள்ளையின் கிராமிய மனிதநேய ஆளுமைக்கான காரணங்களாக அமைந்தன.

தத்துவ அறிஞர் கலாயோகி ஆனந்தகுமாரசாமி புத்தர் பகவான் பற்றிய விளக்கம் தரும் பொழுது அவரை உருவச்சிலையாக வடித்த கலைஞர்களின் பண்பாடு குழைக்கப்படுவதாகக் கூறினார். இதனை நாங்கள் வெவ்வேறு நாடுகளில் உள்ள புத்தர் சிலைக- ளில் காண்கின்றோம். இந்தோனேசியாவில் வடிக்கப்படும் புத்த சிலைகள், யப்பானில் குழைத்து உருவாக்கப்படும் புத்த சிலை கள், சீனாவில் உருவாக்கப்பட்ட புத்த சிலைகள் அந்தந்த நாட்டு மக்களின் உருவச் சாயல் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். தாய்லாந்துப் புத்தர் பொட்டுடன் மிளிர்வதையும் அவதானிக்கி றோம். கணபதிப்பிள்ளையும் பழம்பெரும் தீவுக் கிராமத்துப் பண் பாட்டையும் 'வெள்ளோட்டம்' ஆகத் தொடங்கிய காடு வெட்டிக் களனிகளாக்கிய உழைப்பின் வெளிப்பாடாக வந்தகுடியேற்றக் கிராமங்களின் பண்பாட்டையும் குழைத்த இருவித கிராமியப் பண் பாட்டுக்குரிய கோலங்களை உள்வாங்கிய ஒருவராக இருந்தமை யும் அவரின் கனதியான சமூகப்பார்வைக்கான துணைகளாக நின்ற நெம்புகோல்களாகும். கனடாவின் வீட்டுத் தோட்டமும் அவ ரின் அலாதியான கிராமியம் கலந்த சேதனக்காய்கறிகளை அள் ளிச் சொரிந்தன.

வலி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல் கணபதிப் பிள் ளையின் வாழ்வியல் அம்சங்களை ஆராயும் போது வெளிப்படு கின்ற புதை பொருட்களின் ஊற்றுக்கள். 'மக்களைக் கேட்போம், மாற்றங்களைக் கொண்டுவருவோம்' என்பது அவரின் உள் ளுணர்வுகளில் இருந்ததை எழுத்துக்கள் இயம்புகின்றன. நிலமற்ற மலையக மக்கள் பற்றிய எழுத்துக்களில் அம்மக்கள் ஏனைய தமிழரிடமும் குறுகிய பிரதேசவாதச் சிந்தனையை முன்வைக்கும் அரசியல்வாதிகளிடமும் நியாயம் கேட்கும் எழுத்துக்கள் அச்சமூ கத்தின் உரிமை, விடுதலைக்கான எழுத்துக்களாகவும் சமூக பொருளாதார விடியலுக்கான கல்விசார் எழுச்சியின் தேவை முன் வைக்கப்படுகின்றது. நிலமற்றவராக உருவாக்கியவர்கள் பற்றிய நீதிகேட்கும் நெடும் பயணம், தமிழ் அரசியல் அமைப்புக்களின் அரசியல் முரண்பட்ட தளங்கள் போன்றவற்றை பல்வேறு உலக நாடுகளின் அரசியல் வியூகங்களை உள்வாங்கி இராணுவ ஊகங் களால் பாதிப்புற்ற சாதாரண மக்களின் வாழ்வியல் துன்பங்கள் கணபதிப்பிள்ளை பயணித்த நெடுந்தூரங்களின் வெளிப்பாட்டின் வழிவந்தவையாகக் கொள்ளலாம்.

அவரது இளமைக் காலம் நெடுந்தீவு மக்களின் நெடும் பயணங்க ளாக அமைந்தவையே. நெடுந்தீவில் பிறந்த இவர் 3 வயதிலேயே பெற்றோருடன் உருத்திரபுரப் பகுதிக்குச் சென்று காட்டை வெட் டிக் களனியாக்க, கொட்டில் போட்டு வாழ்ந்த நிலையில், பருத்த



குடும்பத்தில் வாழ்வாதாரத்துக்குக் கஸ்டப்பட்டு வாழ்ந்து, இயற்கையுடன் ஒன்றிணைந்து ஊடாடிய நிலையில் மிருகங்களையும் பறவைகளையும் பாசத்துடனும் விளையாட்டுப் பருவ காலத்தின் துணைகளாகவும், விளையாட்டு ஊடகங்களாகவும் பயன்படுத்தியமை பற்றிப் பலரும் கண்டும் கேட்டும் அறிந்த அவதானிப்புக்கள், பல பெண் சகோதரங்களுடன் பிறந்ததால் பொருளாதாரரீதியில் ஏற்பட்ட நெருக்கடிகள் - நெருக்கிடைகள், பின் தங்கிய பிரதேசப் பிடியில் தகுந்த கல்வி கற்க வாய்ப்பு அளிக்கப்படாத அரச இயந்திரங்களின் புறக்கணிப்பு, வாழ்வாதாரம் தேடலுக்கான ஆதரவின்மை போன்ற துன்பங்கள் மத்தியில் போராடியவராகவும் தோற்றமளிக்கின்றார்.

கிராமியம் பற்றிப் பார்க்கும் போது மூன்று வயதுவரை மனதில் ஊன்றிப் பதிந்த நெடுந்தீவுக் கடல் அன்னையின் அசுத்தமற்ற தூய்மையான காற்றும், தினை, சாமை, வரகு, கோதுமை போன்ற சிறுதானியங்களினதும் பனை வளத்தால் பெறப்பட்ட பொருளாதாரத் தோட்டங்களும் வயல் வெளியும், மாடாடுகளின் செழுமையும் இளம் வயதின் பதிவுகளாகி மீண்டும் உருத்திரபுரத்தில் காட்டுச் சூழலின் அமைதியும் அந்த விலங்கினங்களுடன் பிணைத்துக் கொண்ட காட்டாறு போல அவர் இதயத்திலும் பதிந்த காருண்யமும் கனதியும் எளிமையும் இணைந்த வாழ்வும் மீண்டும் மாமன் மணியத்தின் உதவியுடன் பெற்றாருடன் நெடுந்தீவைத் தரிசித்து வாழ்வாதாரத்தைத் தேடிய நிலையில் கல்வியின் முக்கியத்துவத்தும் குடும்பங்கள் கொடுத்த ஆதரவு கணபதிப்பிள்ளை என்ற ஆளுமை வளர வழிவகுத்தது.

நவரட்ணசிங்கம், தனிநாயகம் அடிகள், கதிரவேலு அப்பு (அப்புஜி) போன்றவர்கள் வகுத்த கல்விக்கான தாராள, ஊக்குவிப்புச் சிந்தனைகள் தீவக மக்கள் வாழ்வில் குறிப்பாகத் தூர நெடும் பயணம் செய்து அடையக் கூடிய நெடுந்தீவு மக்களுக்கும் பல வழிகளில் உதவின. அதிபர் நவரட்ணசிங்கத்தின் காலம் நெடுந்தீவகத்தவரினதும் அயலகத் தீவினரதும் கல்வியில் உயரப் பறக்க மாணவரை இலக்கு வைத்த காலம். இந்த மகான்கள் அந்த மக்களின் கடவுள்கள். இவர்கள் போல பலர் நெடுந்தீவு மக்களுக்கு உரமூட்டினர்.

கணபதிப்பிள்ளையின் உறவினரான 'அப்புஜி' எனும் அன்பும் கண்ணியமும் மிக்க, கல்வி நலமும் ஏழை நலமும் விரும்பியவர் பற்றிப் பேசாத நெடுந்தீவு மக்கள் இல்லை எனலாம். அவர் நெடுந்தீவகத்தவரக்கு மாத்திரமின்றி உருத்திரபுரத்தில் குடியேறிய அனைத்துப் பிள்ளைகளுக்கும் பாசத்தைக் குழைத்து ஊட்டிய மகா மனிதராக அனைவருக்கும் 'அப்புவாகவே' வாழ்ந்து ஏழைக்கு உதவும் தயாளனாகப் பரிணமித்தவர். அவருடைய பயணம் கணபதிப்பிள்ளையை நெடுந்தூரம் பயணிக்க வைத்தது. உருத்திரபுரம் அபிவிருத்திச் சங்கத்தை சகல நலன்விரும்பிகளின் உதவியுடன் நிறுவுவதற்கான முன்னெடுப்புகளைச் செய்தார். கனடாவிலிருந்து கொண்டு போர்க்காலங்களில் பரிதவித்த உருத்திரபுரத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பால் வார்த்தார். பணம் நேரடியாக அனுப்பமுடியாத வேளைகளில் நண்பர் பேராசிரியர் சிவநாதன் உதவியுடன் அப்புஜியின் கனவைச் சுமந்தவர்.

8ஆம் வாய்க்காலில் வாழ்ந்தவர் 10ஆம் வாய்க்காலுக்கும் மாறி, மீண்டும் தொடங்கும் மிடுக்கு என 10ஆம் வாய்க்காலில் வாழ்ந்து நெடுந்தீவு சென்று, பின்னர் பேராதனைப் பல்கலைகழக விடுதியில் வாழ்ந்து, யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி, இங்கிலாந்து சென்று மீண்டு, பின்னர் கனடாவின் குடிமகனாக வாழ்க்கையைப் பல்வேறு சிரமங்களுடன் நடத்தி இன்றைய ஆளுமையாக வளர்ந்து வரும் போது அவருடைய ஆவி பிரிந்தது. அவரது இழப்பு, தமிழ் கூறும் உலகிற்கு, குறிப்பாக ஈழத்துத் தமிழினத்திற்குப் பேரிழப்பாக இருப்பது வருத்தம் தருவதாக உள்ளது. தாய்வீட்டின் பெருமை கணபதிப்பிள்ளையாலும் உயர்ந்தது என்பதையும் கணபதிப்பிள்ளையின் ஆளுமையை வெளிக் கொண்டு வந்ததில் தாய்வீட்டின் பங்கு மிக முக்கியமானது என்பதையும் கூறியே ஆகவேண்டும். குமரிக் கண்டத்தைத் தொட்டவர் தமிழியல் ஆய்வுக்குள் தன்னை மூழ்க வைக்க எண்ணினார். அவரது எண்ணத்தை மாணவ வழித் தோன்றல்கள் ஈடுசெய்ய முனைப்பான முன்னெடுப்புக்களைச் செய்ய வேண்டும். அது அவர்களுடைய கடமையும் கூட.



parvathy.k@thaiveedu.com



# நினைவுகளைப் பகிர்கிறேன்...

**- குகன் ஆறுமுகம்**

***யாரோடு நோவோம்... யார்க்கெடுத்துரைப்போம்...***<br>***பிரிவும் மரணமும் துயரமும் பிறருக்கு இல்லாததல்ல...***<br>***இருந்துமென்ன... மனம் ஏற்க மறுக்கிறது.***<br>***நினைவில் நின்று - என்***<br>***நெஞ்சை கணமாக்குகிறது பழகிய நாட்கள்...***

நெடுந்தீவு பல்துறை அறிஞர்களை, கல்விமான்களை, கலைஞர்களை, பேராசிரியர்களை எமக்கு தந்திருக்கிறது. அந்த வகையில் எங்கள் நெடுந்தீவு தந்த நல்லதொரு பேராசிரியர், 'கணபதி அண்ணா' என்று எங்களால் அன்பாக அழைக்கப்பட்டவர் எங்கள் மதிப்புக்குரிய அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்கள்.

எனது சிறு வயசிலிருந்தே 'கணபதி அண்ணா' என்ற ஆளுமை பொருந்திய மனிதரோடு அருகிலிருந்து, அவரின் வழிகாட்டலில் வளர்ந்தவன்.

***தாமின்புறுவது உலகின் புறக்கண்டு***<br>***காமுறுவர் கற்றறிந்தார்***

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு எல்லோரும் கல்வியில் மேலும் உயரவேண்டும் என்று எங்களை வழிகாட்டி, தானும் பல்வேறு துறைகளிலும் மேற்படிப்புகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டிருந்தார்.

***வெள்ளத்தாற் போகாது, வெந்தழலால் வேகாது, வேந்தரால்***<br>***கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது***<br>***கள்ளர்க்கோ மிகவரிது, காவலோ மிகவெளிது, கல்வியென்னும்***<br>***உள்ளத்தே பொருளிருக்க, உலகெல்லாம் பொருள்தேடி உழல்வதேனோ!***

கல்வியின் சிறப்புக்கு ஓர் உதாரணமாக வாழ்ந்து காட்டியவர். உயர்கல்வி கற்று பல்கலைக்கழகம் போகவேண்டும் என்ற கனவை சிறுவயதிலே எனக்குள் விதைத்தவர்.

நான் நெடுந்தீவில் வாழ்ந்த நாட்களில் ஒவ்வொரு பள்ளி விடுமுறைக்கும் எங்கள் பெரியப்பா வீட்டுக்கு உருத்திரபுரம் போய் விடுவேன். அந்த நாட்களில் கணபதி அண்ணா எனக்கு அன்போடும், உரிமையோடும் கற்பித்த நாட்கள் நினைவில் நிற்கிறது. கற்பித்தலோடு தனியே நிற்காமல், அவர் தரும் வீட்டுபாடங்களை செய்தால் படத்துக்கும் கூட்டிகொண்டு போவார். படம் பார்க்கும் விருப்பத்தில் வீட்டுப்பாடங்களை ஒழுங்காக, தவறாமல் செய்து விடுவேன்.

1989களில் நான் நெடுந்தீவு மகாவித்யாலத்தில் உயர்தரத்தில் படித்துக்கொண்டிருந்த போது, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், சக பேராசிரியர்களுடன் கணபதி அண்ணா நெடுந்தீவுக்கு வந்திருந்தார். அப்போது எங்களுக்கு இந்து நாகரிகம், பொருளியல், அரசியல் சிறப்பு வகுப்புகளை அவரது மாணவர்கள், சக பேராசிரியர்கள் மூலம் நடத்தி எங்கள் கல்விக்கு உதவியாக இருந்தார்.

அந்த நாட்கள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு பொன்னாள். நாங்கள் 'ஓசை' என்று ஒரு கையொழுத்து பத்திரிகை நடத்தி வந்தோம். அதற்கான ஓராண்டு விழாவை கொண்டாட இருந்தோம். அந்த விழாவில் கவியரங்கம் அமரர் மதிப்புக்குரிய சின்னத்தம்பி அதிபர் அவர்கள் தலைமையில் நடப்பதாக இருந்தது. அவரது உடல்நிலை சரியில்லாததால் அவர் கணபதி அண்ணாவை தலைமை தாங்கி நடத்தும்படி கேட்டுக்கொண்டார். ஆனால் அவரோ, என்னையே தலமை தாங்கி நடத்து என்று சொல்லிவிட்டார்.



அவர் தந்த ஊக்கத்தால் அந்த கவியரங்கத்தை தலமை தாங்கி நடத்தி, அவரிடம் பாராட்டு வாங்கியதை பெருமையோடு எண்ணிப்பார்க்கிறேன். 'வசிட்டர் கையால் பிரம்மரிஷி' பட்டம் பெற்றதை போல என்று சொல்வார்களே அது போல உணர்ந்தேன்.

எங்களை ஊக்குவித்து, பாராட்டி, சரி எது, தவறு எது என்று சொல்லி வழிகாட்டி, எங்கள் வளர்ச்சியில் பங்கெடுத்த நீங்கள் எங்களை விட்டு பிரிந்தது எங்களுக்கெல்லாம் ஈடுசெய்ய முடியாத இழப்பு.

***'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்***<br>***தெய்வத்துள் வைக்கப்படும்.'***

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான். அந்த வகையில் எங்கள் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்.



kugan.a@thaiveedu.com

# நண்பர் கணபதிப்பிள்ளையின் நட்பு

- சந்திரசேகரம் பரமலிங்கம்

ஏறத்தாள மூன்று மாதங்களுக்கு முன் வன்னியியல் ஆய்வுக் கருத்தரங்கில் உரைநிகழ்த்திய நண்பர் கணபதிப்பிள்ளை இன்று எம் மத்தியில் இல்லை. வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது என்பதற்கு வேறு உவமை தேவையில்லை.

இற்றைக்கு 50 வருடங்களின் முன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஓராண்டு சிரேஸ்ட மாணவனாக அறிமுகமானோம். அவரது புன்புறுவல் அவரின் அடையாள முத்திரை. ஏனையவருடனும், அந்நியோன்னியமாகவும் நட்பாகவும், சுமுகமான முறையில் அவரது கருத்துக்களைத் தெரிவிப்பதும்- அவரது நண்பர் குழாதில் இயங்கினார். கல்வியில் கருசனை கொண்டிருந்து, விடா முயற்சியுடனான உழைப்பு என்பனவற்றினால் முன்னேறி தேர்வில் முதனிலை வகித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதவி வகித்துப் பின்னர் யாழ்ப்பாணப்பம் பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

அவர் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து வந்திருந்த வேளையில் லண்டனில் நாமிருவரும் சந்தித்து சம்மாசிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

வல்லவனாகவும் நல்லவனாகவும் வாழ்ந்த நண்பர் கணபதிப்பிள்ளை இவ்வளவு விரைவில் எம்மனைவர் மத்தியிலிருந்தும் விடைபெறுவார் என்று எவரும் கற்பனை செய்யவில்லை. இந்த நிலையில் அன்னாரைப் பிரிந்து துயருற்றிருக்கும் அவரது மனைவி மக்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஆறுதலர் வேண்டி நடராஜப் பத்திலிருந்து சில வரிகளைக் குறிப்பிட்ட நண்பரின் ஆத்மாசாந்திக்காய் வேண்டுகின்றேன்.

*தாயாரிருந் தென்ன தந்தையுமிருந் தென்ன*
*தன் பிறவியுறவு கோடி*
*தனமலை குவித்தென்ன கனபெயரெடுத் தென்ன*
*தாரணியை யாண்டு மென்ன*
*சேயர்களிருந் தென்ன குருவா இருந்தென்ன*
*சீடர்களிருந்து மென்ன,*
*சித்து பல கற் றென்ன நித்தமும் விரதங்கள்*
*செய்தென்ன நதிகளெல்லாம்*
*ஒயாது மூழ்கினும என்ன பலன் எமனோலை*
*ஒன்றைக் கண்டு தடுக்க*
*உதவுமோ இதுவெல்லாம் சந்தையுற வென்றுதான்*
*உன்னிருபாதம் பிடித்தேன்.*
*யார் மீது உன் மனமிருந்தாலு முன் கடைக்கண்*
*பார்வை அது போதும்*

பிறப்புண்டேன் இறப்புண்டு என்னும் உண்மையை நாம் ஒருபோதும் மறுக்கவும் முடியாது மாற்றவும் முடியாது. நண்பனின் இப் புவி வாழ்வு இவ்வளவுதான் என்பது எப்பவோ தீர்மானிக்கப்பட்ட விடயம். அவரை நினைந்து நினைந்து அழுது புலம்புவதைவிட அவர் எதனை தனது வாழ்நாளில் விரும்பினாரோ அவற்றை நாமும் பின்பற்றி நற்பயன் பெறுவதே நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

வையத்துள் சிறப்புற்று நட்பொழுக அனைவரோடும் இணைந்து மகிழ்ச்சிக் கடலில் திளைத்த நண்பரின் ஆன்மா சாந்திக்காய் பிரார்த்திப்போம்.



info@thaiveedu.com

# கணபதிப்பிள்ளை என்னும் ஒரு சான்றோன்

- பால. சிவகடாட்சம்

எனக்கு மிக நெருக்கமான அன்புக்குரிய சிலரை மிகக் குறுகிய காலத்துக்குள் நான் இழந்துவிட்டேன். என்னை வெகுவாகப் பாதித்த மரணங்களுள் ஒன்று எனது நண்பர் கணபதிப்பிள்ளையின் பிரிவு.

அலட்டிக்கொள்ளாத நண்பர். ஆர்ப்பாட்டமில்லாத நண்பர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத நண்பர். ஆன்று அறிந்து அடங்கிய சான்றோர் என்று சங்கப்புலவர் ஒருவர் தமது ஊர்ப் பெருமக்கள் பற்றிக் குறிப்பிடும் பாடல் ஒன்று புறநானூற்றில் உண்டு. அமரர் கணபதிப்பிள்ளையும் அத்தகைய சான்றோருள் ஒருவராக வைத்து எண்ணப்பட வேண்டியவர். 'காட்சியில் தெளிந்தவர் ஆகலின், கணபதிப்பிள்ளை 'மாட்சியின் பெரியோரை வியந்ததுமில்லை. சிறியோரை இகழ்ந்ததுமில்லை'. இத்தகைய சான்றோனாக வாழ்ந்து காட்டியதோடு தான் வாழும் காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் முறைப்படி செய்து முடித்த சான்றோனாகவே அவர் மறைந்தார்.

நண்பர் கணபதிப்பிள்ளை எவரையும் புறந்தள்ளிப் பேசி நான் கேட்டதில்லை. அவரை விமர்சித்தால் அமைதியாகக் கேட்டுக் கொள்வார். ஒரு புன்சிரிப்புதான் அவரது பதிலாக இருக்கும். இதற்கெல்லாம் பதில் கூறி என் சக்தியை ஏன் வீணடிக்க வேண்டும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

கணபதிப்பிள்ளை அவர்களின் அரசியல் கட்டுரைகளைத் தாய் வீடு பத்திரிகையில் நான் விரும்பி வாசிப்பதுண்டு. கொரோனா காலத்தில் அவ்வப்போது அரசியல் மற்றும் இலக்கியம் தொடர்பான விடயங்கள் குறித்து இருவரும் தொலைபேசியில் உரையாடிக்கொள்வோம். தாய்வீடு இதழில் பழந்தமிழர் வரலாறுபற்றி எழுதிக்கொண்டிருந்த வேளையில் கடல்கொண்ட குமரிக்கண்டம் பற்றிய ஆதாரமற்ற படம் ஒன்று உங்கள் கட்டுரையுடன் தாய் வீட்டில் வருகின்றதே. அப்படியானால் அந்தப் படம் கூறும் செய்தியினை நீங்கள் ஏற்றுகொண்டதாகிவிடுமே என்று கூறினேன். உண்மைதான் இனிமேல் அந்தப்படம் எனது கட்டுரையுடன் இடம் பெறாதபடி பார்த்துக் கொள்ளுகின்றேன் என்றார். சமீபகாலமாக உங்கள் கட்டுரைகளைத் தாய்வீட்டில் காணமுடியவில்லையே என்று கேட்டதற்குத் தற்போது எனது உடம்நலம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. நலமடைந்ததும் தொடர்ந்து எழுதுவேன் என்றார். ஆனால் காலனின் காணக்கு வேறாக இருந்தது.

புகழை விரும்பாத ஒரு மனிதர் என்று நான் அவரை அடையாளப்படுத்த முடியும். அவசியமில்லாது மேடைகளில் ஏறுவதையும் ஒலிபெருக்கியில் பேசுவதையும் தவிர்த்து வந்தவர். ஆனாலும் தன் அறிவுப்புலமையை அடக்கத்துடன் தன் மாணவர்களுடனும் புத்திஜீவிகளுடனும் பகிர்ந்து கொண்டவர். என்னைப் பொறுத்த மட்டில் அவரின் இடத்தை வேறு எவராலும் நிரப்பிவிடமுடியாது.



Sivakadadcham@thaiveedu.com

# அறிவார்ந்த ஆளுமை அ. கணபதிப்பிள்ளை

- எஸ். பத்மநாதன்

இலங்கை யாழ். பல்கலைக்கழக முன்னாள் புவியியல் துறைப் பேராசிரியராகக் கடமையாற்றிய அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்கள் 26-12-2021 ஞாயிற்றுக் கிழமை கனடா - மார்க்கம் நகரில் காலமானார். அவரது இழப்புச் செய்தி என் மனதை உறையவைத்தது.

1970 ஜனவரியில் எனக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராக நியமனம் கிடைத்தது. அங்கு கடமை யாற்றச் சென்ற பொழுது, புவியியல் கற்கும் முதலாம் வருட மாணவர்களுக்கு, நான் விரிவுரையாற்ற நேர்ந்தது. அப்பொழுது தான் கணபதிப்பிள்ளையை முதலில் சந்தித்தேன். அமைதியும் மாறாத புன்னகையும் கொண்ட அவருடன் பல புவியியல் துறை மாணவர்கள் விரிவுரை மண்டபத்தில் இருந்தனர். காலநிலையியல்



பற்றிய விரிவுரைகளையே நான் நிகழ்த்தினேன். படிப்படியாக அவருடன் நெருங்கிப் பழகிய பின்னர் தான் அவர் பற்றிய பின் புலம் தெரிய வந்தது.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் பல சகோதரர்க ளுடன் கூடி வாழ்ந்து, தந்தையாரின் வேண்டுகோளுக்கிணங்க, கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் விவசாயம் செய்வதற்காக சென் றுள்ளார் எனவும், அங்கிருந்து கற்று, இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றார் எனவும் அறிந்து கொண்டேன். விரிவுரைகளின் போது குறிப்புகளை அதிகம் எடுக்காது மிகவும் உன்னிப்பாக அவதானிப்பவர் என நண்பர்கள் கூறக் கேள்விப் பட்டுள்ளேன். அதனால் தான் அவர் புவியியல் சிறப்புத்துறையில் அதிக புள்ளிகளைப் பெற்று, முதன் மாணவராகவும் வந்தார். உடனடியாகவே அவருக்கு உதவி விரிவுரையாளர் பதவியும் கிடைத்தது.

நான் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி நுவரெலியாவில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிய போது, அவர் பற்றிய பல்வேறு தகவல்களை அறிந்து கொண்டேன். அவரும் கால நிலையியல் துறையிலேயே விரிவுரையாளராகக் கடமை புரிந் ததை அறிந்து மகிழ்ந்திருக்கிறேன். படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று ஒரு பேராசிரியரானார். எனினும் தவிர்க்க முடியாத கார ணங்களினால் 1990ல் கனடாவுக்கு வந்தார்.

1985 மார்ச் மாதம் நான் கனடா வந்த பின்னர் அவர் பற்றிய எந் தத் தகவல்களும் எனக்குக் கிடைக்கவில்லை. எனினும் 1990களில் கனடாவுக்கு வருகை தந்ததை அறிந்து அவரை சந்திக்க முயற்சி செய்தேன். அப்போது அவர் ஒரு வங்கியில் சேர்ந்திருப்பதாகவும், மனைவி, பிள்ளைகளுடன் இங்கு வந்ததாகவும் கூறினார். நான் வேலை செய்த நிறுவனத்துக்கு அருகிலேயே அவர் பணிபுரிந்த வங்கியும் இருந்ததால் அவரை அதிகம் சந்திக்க முடிந்தது. ஒரு காலத்தில் அவர் மாணவராக இருந்தாலும் கனடாவில் ஒரு தோழ மையுள்ள நண்பனாய் பழக ஆரம்பித்தார். சுமார் 52 ஆண்டுகள் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

இலங்கையில் மிகச் சிறந்த புவியியலாளனாக விளங்கிய அவர் இங்கு வந்ததும் அரசியல், சமூகம் பற்றிய கலந்துரையாடல்களி லும் ஈடுபடலானார். ஈழத்தில் அறிவார்ந்த தமிழ் ஆளுமைகளுள் ஒருவராக நான் அவரை எண்ணியதுண்டு. தமிழ்மொழி பற்றியும், தமிழ் சமூகம் பற்றியும் பல்வேறு சிந்தனைகளை கொண்டிருந்தார். இங்கு அவர் வாழ்ந்தாலும் நெடுந்தீவு ஊரும் உறவும் திட்டத்தில் இணைந்து கொண்டார். பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வந்துள்ளார். எழுத்தின் மீது உள்ள பற்றினால் ஈழமுரசு பத்திரி கையிலும் ஆரம்பத்தில் பணிபுரிந்துள்ளார். பல ஊடகங்களில் அரசியல் களங்களில் பங்குபற்றி அரிய கருத்துக்களையும் வழங் கியுள்ளார். முதியோர் சங்கங்களில் பங்குகொண்டு முதியோர் நலன் பற்றிய கருத்துக்களையும் வழங்கியுள்ளார். இந்த வேளை- யில் தாய்வீடு பத்திரிகை ஆசிரியரின் தொடர்பும் கிடைக்கப் பெற் றார். அவரின் வேண்டுகோளுக்கு இணங்க அரசியல் கட்டுரை- களை எழுதத் தொடங்கினார். பல வருடங்களாக எவரும் சிந்திக் காத வகையில் அரசியல் கட்டுரைகளை எழுதி வந்தார். அவரது அரசியல் கட்டுரைகள் பத்திரிகையில் முதலாவது கட்டுரையாக வெளிவரும். இதனை வாசிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தமையால் மாதம் தோறும் அவரது கட்டுரை தவறாது இடம்பெறும். தாய்வீடு பத்திரிகையின் சிறப்புக்கும், வளர்ச்சிக்கும் அவரது கட்டுரைகள் வெகுவாக உதவியுள்ளன.

நூற்றுக்கணக்கான கட்டுரைகளை அவர் எழுதியிருந்தாலும் சில வற்றை இங்கு குறிப்பிடலாம். 'மனித உரிமை பேரவை முடிவு - இலங்கை மீதான தற்காலிக அழுத்தம்', '20 தாவது திருத்தமே கடைசித் தீர்வாக பயன்படுத்த வேண்டிவரும்', 'தமிழர்களின் நீதி கேட்கும் நெடும்பயணம்', 'இலங்கையை மாற்றப்போகும் நீதிக் கான ஆண்டு 2021', 'வல்லரசுகளின் பிடிக்குள் சிக்கிக்கொண்ட இலங்கை', 'இலங்கையில் மீண்டும் ஒரு அரசியல் யாப்பு' எனப் பல தீர்க்கதரிசனமான கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். எல்லா வற்றுக்கும் மேலாக அவரது புவியியல் அறிவை பயன்படுத்து வதற்காக 'இலெமூரியா அல்லது குமரிகண்டம்' என்னும் தலைப்பு களில் ஆய்வுகளைச் செய்ய ஆரம்பித்தார். இது பற்றி என்னுட னும் பல தடவைகள் உரையாடி பல வரலாற்று ஆசிரியர்களின் முடிவுகளை வெளியிட்டார். குறிப்பாக Alen Collier என்பவரது ஆய்வுகளை துணையாகவும் பயன்படுத்தினார். இதன் பின்னரே அவரது வியாபகம் மிகவும் பெரிதாகியது. ஒரு விவசாய குடும் பத்திலே பிறந்தஅவர் புவியியல் விஞ்ஞானியாக மாறியது கனடாவில்.

அவருடன் ஒன்றாகக் கல்விகற்ற கனகலிங்கம், இராஜலிங்கம்,



பேரின்பநாதன், அருட்செல்வம், செந்தில்வடிவேல், மகேஸ்வரன், விமலாதேவி அனைவரும் சமகால மாணவர்கள் இங்குள்ளனர். இவர்கள் அனைவரும் கணபதிப்பிள்ளை வீட்டில் சந்திப்பது வழக்கம். அரசியலிலும் புவியியல் துறையிலும் ஆளுமை பெற்ற அவரது உரைகளைக் கேட்கப் பலரும் கூடுவார்கள். இவ்வளவு திறமை படைத்த ஒரு புவியியல் பேராசிரியர் எம்மை விட்டுப் பிரிந்துள்ளார்.

இவருடைய இரங்கல் பற்றிய ஒரு குறிப்பு தற்போது என்னை வியப்பில் ஆழ்த்துகிறது.

*நம்பமுடியாதிருக்க நம்பியதும் பேரதிர்ச்சி தோழா!*
*உன்முகமே பல்கலைக்கழகம்*
*அன்பு, பண்பு, அமைதி, மலர்வுத் தன்மைகளுக்கு*
*நீ ஓர் உதாரணம்.*

உலகம் முழுவதும் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் இருக்கிறார்கள். மெய்நிகர் வழியாக நடைபெற்ற நினைவு நிகழ்வில் இலங்கை முதல் கனடா, அவுஸ்திரேலியா வரை பலர் பங்கு பற்றிக் கண்கலங்கினர்.

அண்மையில் வன்னி மண்ணைப் பற்றிய அவரது உரைகள் பலரைக் கவர்ந்திருந்தமையை அறிந்தேன். தமிழ் சமூகம் பற்றிய அவரது தீவிரமான அக்கறையும், மண்சார்ந்த சிந்தனைகளும் தொடர்ந்தும் வாழக்கூடியவை. யாருடனும் ஒப்பிடமுடியாத அளவுக்கு அவரது வாழ்வும், பெயரும் விளங்குகின்றது. தனது இரு பிள்ளைகளையும் ஒருவர் சட்டத்தரணியாகவும் மற்றவர் பொறியியலாளராகவும் வளர்த்துள்ளார். தனது துணைவியாருடன் பல நாடுகளுக்கும் சென்று வந்துள்ளார். இவர் ஜீவராசிகள் மீது வைத்துள்ள பற்றுதலுக்கு அவர் வளர்த்துவந்த இரு நாய்களை உதாரணமாகக் கூறலாம். தன்னுடைய முகப்புத்தகத்தில் கூட தனது நாய் ஒன்றினை அட்டைப்படமாக பதிந்திருந்தார். 2016 ஒக்டோபர் 25ம் திகதி அவர் தனது முகநூல் பக்கத்தில் கவிஞர் எழுதிய கவிதையின் ஒரு பகுதியை எழுதி 'இவை அருமையான வரிகள்' எனக் குறிப்பிடிருந்தார். அவ்வரிகள்

***பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்***
***யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்***
***நித்திரை போவது நியதி என்றாலும்***
***யாத்திரை என்பது தொடர் கதையாகும்.***

கனடிய மண்ணின் பல்கலாச்சார பண்புகளை மதித்து, இந் நாட்டின் மீது தீராத பற்றுக் கொண்டவர். கல்வியறிவு, திறமை, ஆற்றல், பண்பாடு, தமிழ் தேசிய உணர்வு மிக்கவரான இவர், அன்பு, பக்தி, ஆன்மிகம், கொடை, விருந்தோம்பல் போன்ற பண்புகளைக் கொண்டு மனிதநேயத்தின் மொத்த உருவம் மிக்க தமிழனாக வாழ்ந்தார். ஈழத்திலே இணையற்ற ஒரு கல்விமானாகத் திகழ்ந்து இணையில்லாத கட்டுரைகளை எழுதி ஆழமாக வேர் ஊன்றிய அவர், இன்று எம்மத்தியில் இல்லை. எனினும் அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் மூலம் அவரது சிந்தனைகள் தொடர்ந்து எடுத்துச் செல்லப்படும் என நம்பலாம்.

*pathmanathan.s@thaiveedu.com*



# மனவேதனையைத் தரும் நண்பனின் பிரிவு

**- இரா. சிவச்சந்திரன்**

நண்பன் கணபதிப்பிள்ளையின் இறப்பு காற்றோடு கலந்த செய்தியாக வந்தடைந்தது. கனடாவில் இருந்தாலும் கோவிட் தொற்றின் தடை இறுக்கங்களால் நாம் சந்தித்துக்கொள்ளவில்லை என்பது சோகமே.

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறையில் ஒன்றாக விரிவுரையாளர்களாக கடமையாற்றிய அனுபவம். யாழ்ப்பாணத்தில் அருகருகே அமைந்த வீடுகள். அடிக்கடி குடும்பமாகச் சந்தித்துக், கலகலப்பாகக் கழித்த தருணங்கள். காலம் எங்கெங்கோ பிரித்து விட்டது. அருமை நண்பனின் பிரிவு மனவேதனையைத் தருகின்றது.

கணபதிப்பிள்ளை நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் கிளிநொச்சி - உருத்திரபுரத்திலேயே க.பொ.த. வரை கல்வி கற்று சிறந்த பெறுபேறு பெற்றபின்னர் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தைக் கற்று, க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எழுதி மிகத் திறமைச் சித்தியைப் பெற்றுக்கொண்டு பல்கலைக்கழகம் நுழைந்தார். பின்னர், யாழ். பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக பணியாற்றியவர் தன் கல்விப் புலமையினால் மிகத் திறமையாக மாணவர்களை வழிகாட்டியானார். ஆயினும், 1983ல் மேற்படிப்பிற்காக லண்டன் சென்று, அங்கிருந்து இலங்கை வந்து, பின் கனடாவிற்கு வந்து சேர்ந்தார்.

பல்கலைக்கழகத்தில் ஜெயஸ்ரீயை காதலித்து மணம் முடித்தார். இருவர் இணைப்பிற்கும் நான் துணையாகச் செயற்பட்ட காலம் இனிமையானவை. மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர் கணபதிப்பிள்ளை.

கனடாவிற்கு 1991ல் வந்தடைந்தார். அதன்பின்னர் ஈழமுரசு பத்திரிகையில் பணியாற்றியவர். பின் தொடர்ச்சியாக தாய்வீடு பத்திரிகையில் அரசியல், புவியியல் சார் கட்டுரைகளை தொடர்ந்து எழுதிவந்தார். 2021 முதல் சடுதியாக எழுதுவதை நிறத்திக்கொண்டார். ஆயினும், தனது முழு அற்றலையும் எழுத்துத் துறைக்கா



கவே செலவிட்டார். உருத்திரபுரம் அபிவித்திச் சங்கத்தில் முக்கிய பதவி வகித்தவர். அப்புக்குட்டி கணபதிப்பிள்ளையின் இறப்பும் தன் குடும்பத்தவர் சூழ அமைதியாகவே திகழ்ந்தது.

அவர் ஆன்மா சாந்தியடையும்!

info@thaiveedu.com



# ஆளுமைக்கு என் ஆத்மார்த்த அஞ்சலி!

**- மா. சித்திவினாயகம்**

இனிய உறவுகளே!

தாய்வீட்டிற்காக இந்த அஞ்சலியை எழுதுகிற இந்தப் பொழுது என் நெஞ்சம் துவண்டு போகின்றது. தாய்வீட்டின் ஒவ்வொரு மாத வெளியீட்டிலும் அவரது தேடல் மிக்க ஆய்வுகள் தான் முதன் மைச் செய்தியாக விரியும். அதை விரும்பி அக்கறையோடு படிக் கும் வாசகன் நான். இன்று அவருக்கு இதில் ஓர் அஞ்சலி எழுது வேன் என்று கொஞ்சமும் நினைத்தவனல்ல.

***நீலக்கடல் தாலாட்டும் நெடுந்தீவன்னையின்***
***கல்விப் பேரொளியாய் எம்முன்னே***
***நின்றொழிர்ந்த கலங்கரை விளக்கு***
***இனியில்லை என்பது மிகுந்த துயர் தருகின்றது.***

இளவயதில் இரண்டு அதிபர்களால் ஆகர்ஷிக்கப்பட்ட பாக்கிய வான் அவர்.

கிளிநொச்சி நகர பிதாவாகவும், உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபராகவும் இருந்தவர் இவரது தாய் மாமனார் நாகலிங்கம் அவர்கள். அவரிடம்தான் இவரது ஆரம்பக் கல்வியை உருத்திர புரத்தில் கற்றுக் கொண்டார்.

பின், உயர்தரக் கல்விக்காக தான் பிறந்த மண்ணான நெடுந் தீவுக்கு வந்த போது நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபராக இருந்தவர் இவரது மைத்துனரான இரா. சின்னத்தம்பி அவர்கள். தாயகப் பற்றோடும், அதீத அக்கறையோடும் நெடுந்தீவு மகா வித்தியாயத்தில் இவர் தன் உயர்தரக் கல்வியைக் கற்றார். விவே கம்மிக்க ஆளுமையான அவர்தான் இங்குமாணவர் தலைவராக வும் இருந்தார். அங்கிருந்து சிறந்த பெறுபேற்றோடு பேராதனை பல்கலைக்கழகம் சென்றார்.

இவரது வழிகாட்டல்தான் இவருக்குப் பின் வந்த பலரையும் பல் கலைக்கழகம் செல்வதற்கு உறுதுணையாகவிருந்தது என்று அவுஸ்திரேலியாவில் வாழும் கொழும்பு பல்கலைக்கழக நல் ஆசான் சிவசம்பு அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மூத்த புவியியல் விரிவுரையாள ராக பல கல்விமான்களை உருவாக்கியபெருந்தகை.

யாழ்ப்பாண வரண்ட வலயங்களின் நிலப்பண்பாடு பற்றி மிக நேர்த்தியான ஆய்வுகளைச் செய்த ஆய்வாளர். அவரின் அந்த ஆய்வு நிச்சயம் புத்தகமாக வெளிவர வேண்டுமென பேராசிரியர் மு. நித்தியானந்தன் அவர்கள் இணையவலையில் குறிப்பிட்டது நிஜமாக வேண்டும்.

மண்ணையும், தமிழையும் மகிமைப்படுத்திய எழுத்துக்களால் எல் லார் மனங்களையும் கொள்ளை கொண்ட மகத்தான ஆளுமை.

தாய்வீடு பத்திரிகையில், தொடர்ந்து தன் அறிவாற்றலை எம் மோடு பகிர்ந்த பேராளர்.

மிகுந்த தேடலோடு அவர் எழுதிய குமரிக்கண்டம் பற்றிய தமி ழரின் மெய்யியல் ஆய்வு தமிழ்கூறுநல்லுலகெங்கும் மிகுந்த வர வேற்பைப் பெற்றது. அது இடையிலே நின்று போனது எம் துர திஸ்டம்.

இயல்பிலே எவரையும் நிந்திக்காத எவரையும் துன்புறுத்திக் பார்க் காத இனிய மனிதர்.

வந்த துனபங்கள் யாவையும் தனக்காக்கிக் கொண்டு, இன்பங்கள் அனைத்தையும் எமக்காகவும் எம் மண்ணிற்காவும் விட்டுச் சென்றி ருக்கின்ற பெருமகனார்.

பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் இதயக் கோவிலில் குடியி ருந்த பெருமகனார். சக விரிவுரையாளர்கள், பேராசான்களின் பெருமதிப்பைப் பெற்றவர். இவரது வெள்ளையுள்ளமும், பிள் ளைக் குணமும், உன்னத ஆற்றலும் காண்போரை இவர் பால்



கவர்ந்து இழுக்கும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மிகுந்த எளிமையான, பழக இனிய பண்பாளராக இருந்த நல்ல மனிதர்.

கனடாவிற்கு வந்த பிறகும் என்னோடும் என் குழந்தைகள் மீதும் தீராத பற்றோடு நலம் விசாரித்து உறவு பாராட்டிய அன்புறவு. எனது மகளின் 'நிருத்த நிறைஞர்' நாட்டிய தராதரப் பட்டத்தை அவர் வழங்கிக் கௌரவித்திருந்தமை எனது மகள் பெற்ற பேறா கும்.

சிறந்த கல்விமானை, இலட்சியப்பற்றுமிக்க உன்னதரை, எமக் கெல்லாம் பண்பாடு காட்டிய பகுத்தறிவுப் பேராசானை, புவியி யல்ப் பேராளுமையை இந்தப் பாழும் பனிநிலத்துள் பறி- கொடுத்து நிற்கின்றோம்



செல்லுமிடமெங்கும் தன் கருணையாலும், ஈகையாலும், அன்பாலும் அறிவாற்றலாலும் எம் மனங்களை வென்ற அந்த மாமனிதரை உலகின் பல பாகங்களிலிருக்கும் அவரது மாணவர்கள், சக பேராசிரியர்கள், உறவுகள் என்று பலரும் கதறியழுத வண்ணம் அஞ்சலித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

*தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று'*

என்பார் வள்ளுவர். அவ்வாறு புகழ் பூத்த, சமூகம் போற்றுகின்ற இனிய தம்பதிகளாய் 42 வருடங்கள் வாழ்ந்த அற்புத வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் ஜெயசிறி அக்காவும் கணபதிப்பிள்ளை அண்ணா அவர்களும்.

அவரைப்போலவே பிள்ளைகள் இருவரும் கனடிய மண் வியக்கின்ற அளவிற்கு கல்வியில் சிறந்து விளங்குகின்றார்கள்.

உருத்திரபுர மக்கள் ஒன்றியம், நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், கிளிநொச்சி மக்கள் ஒன்றியம் என்றெல்லாம் தான் பிறந்து வளர்ந்த தமிழ் நிலப் பகுதிகளுக்கெல்லாம் தம்மை வருத்தி உதவிய உத்தமர்.

அந்த ஆற்றலும் கருணையும் நிறை கண்களை இனி காணமுடியாதே என்கின்ற ஏக்கத்தில் நாங்கள் புலம்பித் தவிக்கின்றோம்.

*நெடுந்தீவு பெற்றெடுத்த - மனித*
*நேயத்தின் பெருமகனே*
*ஊர் சிறக்க வென்று*
*ஒளிர் விட்ட விடிவெள்ளி!*
*அன்பின் அரணாகி*
*அறிவின் ஊற்றாகி*
*உற்றாரை, இன சனத்தை வாஞ்சையுடன்*
*அள்ளி அரவணைத்த*
*அற்புதனே*
*தமிழாய் எரிந்த*
*அறிவுப் பெருவிளக்கே!*
*இன்முகத்தால் என்நாளும்*
*இதயங்களை வென்றவரே!*
*எண்ணமெல்லாம் இனிக்கின்ற*
*இனிய அரும் உறவே!*
*எங்கினிமேல் காண்போம்?*
*எவர் இனிமேல்*
*உன்போல புன்னகைப்பார்?*

எம் மக்களின், ஊரின் உயர்வை தன் உயிர்மூச்சாய் மதித்த இந்த உன்னதரை எம் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறுகின்ற அவரது அருமைத் துணைவியார், இனிய சகோதர சகோதரிகள், அருமைப் பிள்ளைகள், மருமகள், பேரர், தாய்மாமனார் நாகலிங்கம் மாஸ்ரர் மற்றும் உறவுகள், நண்பர்கள் அனைவர்க்கும் என் ஆழ்ந்த இரங்கல்!

ஆளுமைக்கு என் ஆத்மார்த்த அஞ்சலி!



sithivinayagam@thaiveedu.com



# ஆத்ம நண்பன்
# அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை

**வி.பி. சிவநாதன்**

நெடுந்தீவில் நாகலிங்கம் கார்த்திகேசு - நாகம்மா இணையருக்கு ஆறாவது குழந்தையாக அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை நெடுந்தீவு கிழக்கில் பிறந்தார். நெடுந்தீவு கிராமத்தின் சூழலுக்கு இசைவாக அப்பிரதேச மக்களின் மரபுசார்ந்த சமூகவிழுமியங்களுடன் சைவசமய வழ்வியலுடன் தன்னை இணைத்துக்கெண்டு அறநெறி ஒழுக்கத்துடன் கலைகலாச்சார தமிழ்ப் பாரம்பரியத்தில் தனது வாழ்வை ஆரம்பித்தார். தொடக்கக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் கிளிநொச்சியில் கற்றார்.

அவரது தாய்மாமன் நாகலிங்கம் ஆசிரியர் மற்றும் நெருங்கிய உறவினரான சின்னத்தம்பி ஆசிரியர் போன்றவர்களின் வழிகாட்ட



லில் இடைநிலைக் கல்வியைக் கற்ற அவர், அவ்வேளையில் சிறிது காலம் மாமனாரான நாகமணி என்பவருடன் தங்கியிருந்து யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் கல்விகற்று, திரும்பவும் கிளிநொச்சியில் க.பொ.த. சாதாரண தரம் வரை கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்தில் கல்விகற்பதற்கு நெடுந்தீவுக்குச் சென்றார். யழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளுக்கு நிகராக நெடுந்தீவு மகாவித்தியாலத்திலும் மாணவர்கள் கல்வி கற்று பல்கலைக்கழகம் போகமுடியும் என்பதை கணபதிப்பிள்ளை பேன்ற சில மாணவர்களைக் கொண்டு நிறுவிக்காட்டினர். இதற்கு அடித்தளமிட்டவர் உறவினரும் கல்விமானுமாகிய சின்னத்தம்பி ஆசிரியராகும். நெடுந்தீவில் க.பொ.த. உயர்தரத்தில் கல்விகற்ற கணபதிப்பிள்ளை உயர்ந்த பெறுபேறு பெற்று 1969ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தற்கு தெரிவானார் இந்நிகழ்வானது பிறந்த ஊரிலிருந்து பல்கலைக்கழகம் சென்றது அவருக்கும் அவரது ஊருக்கும் பெருமைசேர்பதாக அக்கால ஊடகங்கள் முக்கிய செய்தியாக வெளியிட்டதை நெடுந்தீவு மக்கள் பெருமையாக பேசிக் கொண்டனர்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியலைச் சிறப்புப்பாடமாகக் கற்று இளங்கலைமாணியில் Bachelor of Arts Degree படிப்பில் உயர் பெறுபேறு பெற்றார் (BA Honors degree- Second class (upper division ) தமிழ் மாணவர்களில் முதல்நிலை மாணவனாக இருந்ததால் தற்காலிக உதவி விரிவுரையாளராக பணியாற்றும் வாய்ப்பைப் பேராதனைப் பல்கலைக்கழக புவியியற்றுறை அவருக்கு வழங்கியது. 1974ம் ஆண்டு யாழ்பாணப் பல்கலைக்கழம் ஆரம்பித்தவேளை நிரந்தர விரிவுரையாளராக பதவியில் அமர்த்தப்பட்டதோடு யாழ்பாணப் பல்கலைக்கழக வாழ்வு ஆரம்பித்ததிலிருந்து அவர்பணி 1993வரை நீடித்தது.

யாழப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியலில் முதுகலை பட்டப்படிப்பிற்காக, இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத்திட்டங்களின் நிலவுடைமைகளின் அளவும் உற்பத்தித்திறனும் என்ற தலைப்பில் ஆய்வு செய்து பல்கலைக்கழகத்திற்கு சமார்ப்பித்து முதுகலைமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

கலாநிதி பட்டப்படிப்பை இங்கிலாந்தின் Hull பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொண்டார் இதற்காக 1983 செப்ரெம்பரில் பிரித்தானியாவுக்கு சென்று The cropping patterns and crop diversification in the Miocene limestone region of the dry zone of Sri Lanka என்ற தலைப்பில் ஆய்வினை செய்யத் தொடங்கினார். இதற்காக 1985ல் இலங்கைக்கு திரும்பி வந்து ஒன்றரை வருடங்களில் ஆய்விற்குத்தேவையான தகவல்களை கள ஆய்வினூடாகப் பெற்றுக்கொண்டார். அத்தகவல்களை தனது ஆய்வு மேற்பார்வையாளருக்கு சமர்பிப்பதற்காக திரும்ப பிரித்தானியாவிற்கு செல்ல முற்பட்ட வேளையில் விசா பிரச்சினை காரணமாக அவரது பயணம் தடைப்பட்டது. இதனால், மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையைப் பெறுப்பேற்றுக் கொண்டார். தொடங்கிய ஆய்வை முடித்துவிடவேண்டும் என்ற தீர்மானித்ததால் மீண்டும் 1986ல் இந்தியா சென்று கோயாம்புத்துார் விவசாயப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஒருவரின் கீழ் தனது கலாநிதிப் பட்டப்படிப்பை முடிப்பதற்காக அயராது பாடு பட்டார். அப்போது அவருக்கு வழங்கப்பட்ட கற்கை விடுமுறைக் காலம் முடிந்ததால் மறுபடியும் 1990ல் இலங்கைக்கு வந்து புவியியற்றுறையல் இணைந்து பணயாற்றினார். யாழ்ப்பாணத்தின் அரசியல் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தோடு தனது சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் 1 பதவியை 1993ல் இராஜினாமாச்செய்து குடும்பத்துடன் கனடாவிற்கு புலம் பெயர்ந்தார்.

கனடாவில் தாய்வீடு என்ற பத்திரிகையில் சமகால அரசியல், பொருளாதார, புவியியல் மற்றும் கலை-கலாச்சார விடயங்கள் பற்றிய ஆவுக்கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். அவரது ஆய்வுகளில் வன்னியின் பொருளாதார அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி, மக்கள் பரம்பல், கிராமிய வறுமை, உலகளாவிய கால நிலை மாற்றம், கண்டநகர்வு கொள்கை விளக்கம் போன்றவை முதலிடம் பெற்றவையாக இருந்தன.

புலம்பெயர் நாட்டில் வாழ்ந்தபோதும் தான் பிறந்து வளர்ந்த சூழலையும் மக்களையும் மேம்படுத்துவதற்காக நிறுவனங்களை உருவாக்கி கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக நிதி உதவி செய்ததை நான் அறிவேன். குறிப்பாக உருத்திரபுரம் மாணவர்களின் பல்கலைக்கழக படிப்பிற்காக நிதி உதவி வழங்கியதை யாவரும் அறிவர். தன்னலம் கருதாது பொது நலன் கருதி செய்தசேவையால் அவர் பெயரும் புகழும் தமிழ் மக்கள் மத்திஷியில் என்றும் நிலைத்திருக்கும்.



info@thaiveedu.com

# மனிதம் போற்றும் மாண்பினன் அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை

- த. சிவபாலு

தொன்மையும் மேன்மையும் மிக்க பழம்பெரும் ஊரான நெடுந்தீவு தந்த அருந்தவப் புதல்வர்களில் ஒருவராகக் கணிக்கத்தக்கவர் அண்மையில் எமைத்துறந்த நண்பர் அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை அவர்கள்.

புகழ் படைத்த வெடியரசன் எனும் தமிழரசனின் ஆட்சிப்புலமாகச் சீரோடும் சிறப்போடும் திகழ்ந்து மாவிலி எனும் துறைமுகத்தோடு அழகொளிர நிமிர்ந்தது நெடுந்தீவு. யாழ் மாவட்டத்தின் ஒருபகுதியாக - அதன் வடபுலத்தில் அமைந்துள்ள சப்ததீவுகள் என அழைக்கப்படுபவை வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு என்பனவாகும். இத்தீவுக் கூட்டங்களில் பெரிய தீவாகக் காட்சி தருவது நெடுந்தீவாகும். இத்தீவின் நிலப் பரப்பை அடிப்படையாக கொண்டமைந்தது இதன்பெயர். நெடுந்தீவில் வாழ்ந்துவந்த அப்புக்குட்டி தம்பதியினருக்கு ஆறாவது மகவாகப் பிறந்தார் கணபதிப்பிள்ளை. இளம் வயது தொடக்கம் கல்வியில் மிகுந்த ஈடுபாடும் இயல்பாகவே அவரிடம் குடிகொண்டிருந்த அறிவுத்திறனும் அவரைக் கல்வியில் மிளிர வைத்தது என்பதில் ஐயமில்லை.

தீவுப்பகுதியில் தொடர்ந்து ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின் காரணமாக மழை பொய்த்து விவசாய நடவடிக்கைகளும் கைகொடுக்காத நிலை ஏற்பட்டமையால் தீவுப்பகுதி மக்கள் வெளியிடங்களில் குடியேறத் தலைப்பட்டனர். இதன் பயனாக நாடு சுதந்திரமடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் தீவகத்தைச் சேர்ந்தவர்கள் குடியேறினர். எனினும் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே மற்றைய தீவுகளையும் விட அதிகளவானவர்கள் வெளியேறினர். வடமாகாணத்தில் உள்ள பாரிய அணைக்கட்டுக்களில் முக்கியமானதாகக் காணப்படுவது கிளிநொச்சிப் பிரதேசத்தை வளப்படுத்தும் இரணைமடுக் குளம் ஆகும். இப்பிரதேசத்தில் குடியேறியவர்கள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தைச் சார்ந்தவர்களே. சிற்சில பகுதிகளைத் தேர்ந்து ஒரே கிராமத்தவர்களை அந்தந்தப் பகுதிளில் அவர்களின் தனித்துவம், பாதுகாப்புக்கருதிக் குடியேற்றினர். இதன்வழி பல்வேறு பகுதிகளில் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் ஒரே சமூகத்தவர்களாக குடியேறித் தங்கள் பாதுகாப்பையும் ஒற்றுமையையும் பலப்படுத்திக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட்டு பாரிய முன்னேற்றத்தை கண்டனர். இரணைமடுக் குளம் இவற்றிற்கு முன்னோடியாக 1885ல் திட்டமிடப்பட்டு 1920ல் நிறைவேற்றப்பட்ட இரண்டு கிலோ மீற்றர் நீளமுடைய அணையைக்கட்டிப் பெரிய நீர்த்தேக்கமாக அமைந்தது. இவ்விதமான பல்வேறு குடியேற்றத் திட்டங்கள் கிளிநொச்சிப் பிரதேசங்களடங்கலாக இடம்பெறலாயின. இதன் பயனாக 1951ல் ஒரு பகுதியிலும் 1953ல் ஒருபகுதியிலும் குடியேற்றம் இடம்பெற்றது. ஆரம்பத்தில் 5 ஏக்கர் வீதமும் பின்னர் 4 ஏக்கர் வீதமும் குடியேற்றப்பட்டவர்களுக்கு வளங்கப்பட்டன. கிளிநொச்சிப் பிரதேசங்களிலான குடியேற்றத் திட்டங்களில் கனேசபுரத்தில் 50 விழுக்காடானவர்களும் உருத்திரபுரத்தில் 25 விழுக்காடனவர்களும் நெடுந்தீவைத் தாயகமாகக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். இவ்விதம் உருத்திரபுரத்தில் குடியேறிய குடும்பங்களில் கணபதிப்பிள்ளையின் பெற்றோரும் அடங்குவர். 1947ல் பிறந்த கணபதிப்பிள்ளை குடும்பதில் ஆறாவது பிள்ளையாவார். இவருக்கு மூத்தவர்களாக முருகேசு, பார்வதி, மயில்வாகனம், சின்னம்மா, தனலட்சுமி என்பவர்களும் இளையவர்களாக சதாசிவம் மற்றும் மகேஸ்வரி ஆகியோரும் உடன் பிறப்புக்களாகும். இவர்களில் இருவர் கனடாவில் வாழ்கின்றனர். இவ்வித சூழ்நிலையில் வளர்ந்தவர் அண்மையில் எமைவிட்டுப் பிரிந்த கணபதிப்பிள்ளை அவர்கள்.

இளமையில் தான் கண்டு, பார்த்து பெற்ற அனுபவங்கள் அவரின் மனித நேயத்தை வளர்த்தெடுத்தன எனலாம். அன்றைய யாழ் மாவாட்டத்தின் பிற்படுத்தப்பட்ட பிரதேசங்களாக தீவுப்பகுதிகளும், கிளிநொச்சி மற்றும் நாகர்கோயில் பிரதேசங்களும் இனங் காணப்பட்டிருந்தன. அத்தகைய பின்னணிகளில் இருந்து வந்த அவரிடம் இயல்பாகவே மனிதத்தை உற்றுநோக்கும் அதனை நேசிக்கும் உளப்போக்கு குடிகொண்டிருந்தமை இயல்பே.

## ஆரம்ப காலமும் பின்புலமும்:

தனது ஆரம்பக் கல்வியை உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் கற்கும் காலம் அவருக்கு மிகவும் சிரமமான காலமாகவே காணப்பட்டது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வன்னிப் பிரதேசக் குடியேற்றத் திட்டத்தின் ஆரம்பகால வாழ்க்கை என்பது பல்வேறு இடர்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையில் இருந்துள்ளமை யாவரும் அறிந்ததே. இது வரலாறு எடுத்துக்காட்டும் நிதர்சனமான உண்மை. புதிய இடம், இங்கொன்றும் அங்கொன்றுமான குடிப் பரம்பல், வயல்களின் நடுவே அமைந்த குடியிருப்புக்கள், போக்குவரத்திற்காக பல மைல்கள் நடந்துவரவேண்டிய சிரமங்கள், பாடசாலைகளுக்குச் செல்வதற்கு வாய்ப்பான வீதிகள் அற்ற நிலை, போதிய ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகள் என்பனவற்றோடு தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிவருவதற்கு மாதமொருமுறையோ அன்றி இருமுறையோ கிளிநொச்சி நகருக்குச் செல்லவேண்டிய நிலை என்பன பல்வேறு வழிகளிலும் குடியிருப்பாளர்களையும் அவர்களது வாரிசுகளையும் பாதித்தது என்பது உண்மை. அக்காலப்பகுதியில் வயல் உளவிற்கு மாடுகளை நம்பி இருக்கவேண்டிய நிலையும் அவற்றிற்கான ஆளணியினருக்கு குடும்ப உறுப்பினர்களே இணைந்து செயற்படவேண்டிய நிலையும் காணப்பட்டது. இந்த நிலைமைக்கு கணபதிப்பிள்ளையின் குடும்பமும் விதிவிலக்கல்ல. தோட்ட வேலை, வயல் வேலை என்பனவற்றில் பாடசாலை செல்லும் நேரம் தவிர்ந்த நேரங்களில் உதவ வேண்டிய தவிர்க்க முடியாத கடப்பாடு உடையவர்களாக அப்பிரதேச மாணவர்கள் காணப்பட்டனர். ஒரு வீட்டில் ஒரு எண்ணைக்குப்பி விளக்கில் கற்கவேண்டிய நிலைமைகளில் ஒருவர் கற்றுத்தேறுவது என்பது, ஆசிரியர்களின் கல்விப்புலமையும் அவர்களின் அர்ப்பணிப்புமே காரணமாகும். நூல்நிலையமோ, புத்தகங்களோ கிடைக்காத அக்காலகட்டத்தில் ஆசிரியர்களே முக்கிய கல்வியின் மூலவளங்களாகக் காணப்பட்டனர்.

தொடர்ந்து உயர்கல்வியினை உருத்திரபுரத்தில் மேற்கொள்ள முடியாத நிலை. கிளிநொச்சியில் மகாவித்தியாலயம் அமைந்துள்ளது எனினும் அப்பாடசாலை அக்காலத்தில் போதியளவு மாணவர்களைக் கொண்டதாகவோ க.பொ.த. சாதாரண தரத்திற்கு மேற்பட்ட இடைநிலைக் கல்வியையோ தரத்தக்கதாக அமைந்திருக்கவில்லை.

இடைநிலைக் கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கற்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றவர்களில் இவரும் ஒருவர். 1969 தொடக்கம் 1973

வரை கல்வியைத் தொடர்ந்து புவியியற் கற்கைநெறியைத் தேர்ந் தெடுத்து அதில் சிறப்புப்பிரிவில் சித்தியெய்தினார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் ஏனையமாணவர்களைப் போன்று விரிவுரைகளில் குறிப்புக்களை வேகமாகப் பதிவு செய்யாமல் கூர்ந்து அவதானித்துத் தனக்கு தேவையான முக்கிய குறிப்புக்களை மட்டும் எடுத்துக்கொண்டு நூலகம் சென்று அதற் கான தேடலை மேற்கொண்டு தனது ஐயங்களைத் திரிபறத் தேர்ந்து வந்த ஒரு நல்மாணாக்கனாக தன்னை வரையறைப் படுத் திக் கொண்டார். இவரது போக்கை யாரும் கருத்திற் கொள்ள முடியாத மிகுந்த ஒரு அமைதியான போக்கைப் பின்பற்றி அனை வரதும் நட்பைப் பெற்றுக்கொண்டு, எல்லாரோடும் மிக நெருக்க மான பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டார். 1974 தொடக்கம் உதவி விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்தார். யாழ். பல்கலைக்கழகத்தில் 1976 தொடக்கம் 1991 வரை சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணயாற்றினார். இக்கால கட்டத்திலேயே அவர் தனது துணையாளாக ஸ்ரீஸ்கந்தராசா புவ- னேஸ்வரி இணையரின் மகளான ஜெயஸ்ரீயை வரித்துக்கொண்டார். இதன் பயனாக சஞ்சீவ், சரணியன் ஆகிய இரு பிள்ளைகளின் தந்தையானார்.

கனடாவில் குடியேறிய கணபதிப்பிள்ளையின் எழுத்துப்பணிகள்



தொடர பத்திரிகைகள் திறந்து மனதோடு வரவேற்றன. கனடா - ஈழமுரசு பத்திரிகையில் எழுத ஆரம்பித்த அவர், மிக அண்மைக் காலம்வரை தாய்வீடு பத்திரிகையை அலங்கரித்து வந்துள்ளார்.

## ஆய்வுப்பரப்பும் ஆளுமையும்:

புவியியல் துறையில் கற்றுத் துறைபோன கணபதிப்பிள்ளைக்கு நாட்டில் இடம்பெற்ற அசாதாரண நிலைமைகள் அங்கு வாழ்ந்த அனைவரையும் போல பல்வேறு தொல்லைகளுக்கும் நெருக்கடி நிலைகளுக்கும் முகம்கொடுக்க வைத்திருந்தது. ஒரு இறுக்கமான சூழ்நிலையில் வாழ்ந்து அந்தச் சூழ்நிலையில் இருந்து விடுபட்டு சற்றுச் சுயமாக மூச்சுவாங்கக்கூடிய ஒருநிலை வெளிநாட்டில் புலம் பெயர்ந்தவர்களிடம் ஏற்படத் தொடங்கியது என்பதை மறுப் பதற்கில்லை. எனினும், நாட்டில் நேரடியாகப் பார்த்து அனுப வித்து இடர்ப்பட்ட மனநிலைகளிலிருந்து விடுபடமுடியாத மன இறுக்கத்தைத் தந்துகொண்டிருந்தது.

யாழ் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்த ஆய்வுத் தேட்டம் அவ ரைப் பன்முகப் பார்வையாளனாக மாற்றியிருந்தது என்பதற்கு அவரது பின்னாட் செயற்பாடுகள் - குறிப்பாக கனடாவிற்கு வந்த பின்னர் அவரது தேடல் புவியியற்றுறையோடு நின்றுவிடாது அரசி யல், சமூக, பொருளாதார விடயங்கள் குறித்தனவாக வியாபிதம் கொண்டிருந்தமைக்கு அவரது கட்டுரைகள் கட்டியம் கூறி நிற்கின் றன. புலம் பெயர்ந்தவர்களிடையே சுடர்விட்டெரியத் தொடங்கிய விடுதலை உணர்வும் கலாச்சாரப் பண்பாட்டு, மொழி சார்ந்த உணர்வுகளும் பீறிட்டு வெளிவரத் தொடங்கிய காலகட்டத்தில் தமிழ் மரபு பற்றிய விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியிருந்தது.

இலங்கையில் தொடர்ந்து நிறைவேற்றப்படும் உரிமை மீறல்க ளால் கொதித்தெழுந்தவர் அமைதியின் வடிவமான கணபதிப்- பிள்ளை. அவர் நாட்டில் நடக்கும் வெள்ளைவான் கலாச்சாரத்தை யும் அப்பாவிகளைப் பயங்கர வாதிகளாக முத்திரை குத்துவதை யும் குத்திக்காட்டித் தனது மனக்கிடைக்கைகளை வெளியே காட் டுவதற்கும் தமிழ்த் தலைமைகளின் கடப்பாடுகள் பொறுப்புக்கூற வேண்டிய தன்மைகளையும் மிகத் துணிவோடு தனது ஆயுதமாம் பேனாவைக் கையாண்டு வந்துள்ளார். மைத்திரியின் ஆட்சியிலும் நல்லிணக்கம் பேசிக்கொண்டே அழித் தொழிக்கும் கலாசாரத்தை உலகுக்கு காட்ட அவர் பின்நிற்கவில்லை. போரை முடிவுகட்ட வேண்டும் என்பதில் சிங்களத் தலைமைகள் ஒரே குரலில் பேசி யது போன்று போர்க்குற்றத் தவிர்ப்பிலும் ஒன்றுபட்டு விடக்கூடும் என்ற ஐயத்தை அவர் அன்றே எழுப்பி தமிழ் அரசியல்வாதிகளை எச்சரித்தமை கருத்திற்கொள்ளத்தக்கது.

இயற்கைக்கு எதிராக உலக நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக் கைகள் பற்றி ஒரு புவியியலாளனான அவரின் ஆய்வுகள் சாதா ரண மக்களையும் அடையத்தக்கதாக காலநிலை மாற்றங்களும் பச்சைவீட்டுத் தோட்டங்களும் பற்றி அறியத்தக்க கட்டுரைகள், காலநிலைக்கும் கொண்டாட்டங்களுக்குமான தொடர்புகள், 2015 ஜனவரி தாய்வீட்டு இதழில் எழுதிய 'புத்தாண்டும் புதிய உலகும்' என்னும் கட்டுரையில் இயற்கையை வெல்ல முடியாது என்பதனை மிக அர்த்தபூர்வமாக எழுதியிருந்தார்.

அவதானிப்புத்திறன் மிக்க இவர் தன்னைச் சுற்றி நடப்பவற்றை மிகக் கூர்ந்து அவதானித்து வருவதோடு நின்றுவிடாது தான் சார்ந்த சமூகத்திற்கு அறிவுரைகளையும் தனது எழுத்துக்கள் மூலம் தந்துவந்துள்ளார். அவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்று 'சும்மா வாற காசு'. இக்கட்டுரை கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் மக்களிடையே காணப்படும் அரச பணத்தைத் தவறாகப் பயன்படுத்தும் ஆதங்கத்தை வெளிப்படுத்தியது. வாழ்க்கைப் படி யாக அரசாங்கத்தால் வேலை அற்றவர்களுக்காகக் கொடுக்கப் படும் நிதிகள், அரசாங்கத்திற்கு வருமானத்தைக் காட்டாது பதி வின்றி வேலை செய்து பெற்றுக்கொள்ளும் நிதிகள் எவ்விதம் ஒரு நாட்டைக் குட்டிச்சுவராக்குகின்றது என்பதனை மிக நிதானமாகப் பல்வேறு எடுத்துக்காட்டுக்களோடு விளக்கிக் கூறியிருக்கின்றார். இது தவறு செய்யக்கூடாது, அதனால் ஏற்படும் விளைவுகள் எவ் விதம் அரசாங்கத்தையும் அதன் வாயிலாக மீண்டும் மக்களையும் பாதிக்கின்றது என்பதனை எடுத்துக்கூறி, பணவீக்கத்திற்கும் விலையதிகரிப்புக்குமான காரணிகள் பற்றி மிக எளிமையாக, ஒரு பொருளியலாளனாக பாமரரும் வாசித்து விளங்கக்கூடிய வகை யிலே எழுதியிருக்கின்றார். அடிப்படை வேதன உயர்வு கூட நாட் டிற்கும் சமூகத்திற்கும் எவ்வளவிற்கு மாற்றத்தை ஏற்படுத்துகின் றது என்பது அவரது வாதமாக அக்கட்டுரையில் உள்ளடக் கியுள்ளமை, அவரது அறிவாற்றலையும் உள்ளக் கிடக்கையினை யும் வெளிப்படுத்துகின்றது.

கனடாவில் வாழ்ந்த காலத்தில் தனது பணி - வேளைகள் தவிர பத்திரிகைகளில் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வந்த அவர் கனடா - ஈழமுரசு பத்திரிகையில் சிலகாலம் அலங்கரித் திருந்தார் என்பதும், தாய்வீடு இதழில் தொடர்ந்து எழுதிவந்தார் என்பதும் அவரது எழுத்துலக ஈடுபாட்டைக் காட்டி நிற்கின்றன. அரசியல், சமூகவியல், பொருளியல், புவியியல் தொடர்பான ஆக் கங்கள் அவரது எழுத்துக்களாக மிளிர்ந்தன. பல்வேறு காலாண்டு இதழ்களில், வருடாந்த இதழ்களில் அவரது எழுத்துக்களும் இடம்பெற்றன.

வன்னி மாவட்டம் அவரது சிறப்புக் கவனத்தை ஈர்ந்தமைக்கு அவர் கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் வாழ்ந்தமையும் பெற்றோ ரும் சகோதரர்களும் அங்கு குடிகொண்டுள்ளமையும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டுள்ள புவியியல் பார்வையும் காரண மாக அமைந்துள்ளமையை காணமுடிந்தது. கொம்பறை மலரில் வன்னியின் புவியில் சார்ந்த கட்டுரைகளை அவர் எழுதியிருப்ப தைக் காணமுடிகின்றது.

வன்னியியல் ஆய்வு மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவர் ஆற்றிய உரைபற்றிக் குறிப்பிடாமல் விடமுடியாது. அதுதான் ஒரு

பகிரங்கக் கூட்டத்தில் அவர் ஆற்றிய இறுதி உரையாகும். நோர்வே சுந்தரலிங்கத்தினால் தொகுக்கப்பட்ட பல்வேறு கட்டுரைகள் அடங்கிய 625 பக்கங்களைக் கொண்ட கட்டுரைகளின் நூலே 'வன்னி' என்பது. இந்த நூலில் வந்துள்ள புவியியல் சார்ந்த கட்டுரைகள் பற்றி அ. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய உரை வன்னி வரலாற்றில் காலத்தால் அழிக்கமுடியாத பதிவாகியுள்ளது. வன்னிப் பிரதேசத்தின்மீது மிகுந்த பற்றுக்கொண்ட அவர் வன்னிப்பிரதேசத்தின் முன்னேற்றம் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்திற்குமானது என்னும் உயரிய உணர்வினைத் தன்னகத்தே தேக்கிக்கொண்டவர். இதனால், வன்னி வளம் பாதுகாக்கப்படுவதோடு, ஆக்கிரமிப்புக்கு உள்ளாகாமல் தடுக்கப்பட வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையும் கொண்டிருந்தார் என்பது வெளிப்படை. வன்னித் தமிழ்ச் சமூக அமைப்பினர் அவருக்கு மலர்வளையம், மற்றும் கண்ணீர் அஞ்சலிகளை வைத்து அவரது இறுதிச் சடங்கில் தங்களது நன்றிக்கடனைத் தெரியத்தந்ததோடு அவருக்காக நண்பர்களால் மேற்கொள்ளப்பட்ட மெய்நிகர் வழியான அஞ்சலிக் கூட்டத்திலும் கலந்துகொண்டு தமது பங்களிப்பைச் செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாள் ஆர்வலர்*
*புன்கணீர் புசல் தரும்*

என்பதாக நண்பர்களின் நிலை மாறியுள்ளது என்பதனை அவரது இழப்பு எடுத்தக்காட்டுகின்றது. அவர், நண்பர்களோடு கூடிக்குலாவுவதை வழக்கமாகக் கொண்டிருந்தவர். நாள்தோறும் கனடாவில் உள்ள நண்பர்களும், பல்கலைக்கழகச் சகபாடிகளுமான பேரின்பநாதன், மகேஸ்வரன், கனகலிங்கம், இராஜலிங்கம் உட்பட அவுஸ்திரேலியாவில் உள்ள கலாதரனோடும் ஈழத்தில் உள்ள வசாவிளான் சத்தியசீலனோடும் என்னோடும் அவர் உரையாடலைத் தொடர்ந்து வைத்துக்கொண்டே இருந்தார். இறுதியாக நான் கதைத்தபோது அவர் உடல் உபாதை காரணமாக தூக்க மருந்தை எடுத்திருந்தபோதும் எனது அழைப்பைப் பார்த்து தொலைபேசியில் நாத்தழுதழுக்க உரையாடியமை மறக்க முடியாதவாறு இருந்தது. என்ன தூக்கமா? என நான் கேட்டதற்கு அவர் 'நான் தூக்கத்திற்காக மருந்தை எடுத்துவிட்டேன், பறவாயில்லை நீ கதை' என உரையாடலை தொடர்ந்தமையை எப்படி மறக்கமுடியும். என்னைவிட நாளாந்தம் உறவாடிய மற்றைய நண்பர்களின் மனநிலை பிரிவாற்றாது ஓலமிடுவதனை என்னால் உணரமுடிகின்றது.

நண்பர்களான கலாதரன் மற்றும் சத்தியசீலன் இருவரும் வெவ்வேறு காலகட்டங்களில் கனடாவிற்கு வருகை தந்திருந்த வேளையில் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்னும் நிலையிலே அவரது வீட்டில் சந்திப்புக்களை ஏற்பாடு செய்திருந்தார். அங்கு கூடிக்குலாவி மகிழ்வதிலே மட்டில்லா மகிழ்ச்சியை அவர் வெளிப்படுத்தி, அனைவரையும் அன்பினால் கட்டுப்படுத்தியிருந்தார் என்பதை நேரில் கண்டு அனுபவிக்க முடிந்தது. அவரது நினைவேந்தல் கூட்டத்தில் கலந்துகொண்ட நண்பர்கள் மனமுருக ஆற்றிய உரைகள் அவரது புகழைப் பாடி நிற்கின்றன. யாழ் பல்கலைக்கழகப் புவியியற்றுறைப் பேராசிரியரான கா. குகபாலன், பொருளியற் துறைப் பேராசிரியரான வி.பி. சிவநாதன் மற்றும் தமிழ் பேராசிரியர் நா. சுப்பிரமணியன், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சத்தியசீலன், முனைவர் பார்வதி கந்தசாமி, திரு. ச. பத்மநாதன் உட்பட நெடுந்தீவு ஒன்றிய உறுப்பினர்களும் உரையாற்றும் போது அவரைப்பற்றிய பல்வேறு தகவல்களை அறிய முடிந்தது.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த ஒருவரது புகழ் நின்று நிலைக்கும் வண்ணம் அவர் தன்னை ஆக்கிக்கொண்டார் என்பது இவ்வுரைகளில் வாயிலாக அறியமுடிந்தது. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்த கணபதிப்பிள்ளை அவர்கள் இன்று எம்மோடு இல்லை.

*நெருநல் லுளனொருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்திவ் உலகு.*



sivapalu@thaiveedu.com



# நெடுந்தீவின் மக்கள் இடப்பெயர்வு

- அ. கணபதிப்பிள்ளை

இலங்கையின் வடமேற்கே அமைவிடம் பெற்ற மயோசீன் காலத்துக்குரிய சுண்ணக்கற் பாறைத் தீவுக் கூட்டங்களில் தென்னிந்தியாவின் இராமேஸ்வரத்துக்கு மிக அண்மையிலிருக்கின்ற பெரியதீவு நெடுந்தீவாகும். யாழ்ப்பாணத்தில் (கொழும்புத்துறை) இருந்து சமார் 45 கி.மீ. தொலைவிலும் இராமேஸ்வரத்திலிருந்து 38 கி.மீ தூரத்திலும் பாக்கு நீரிணையில் அமைந்திருப்பதனால் பாய்க்கப்பற் பிரயாண காலத்தில் இரு பகுதிக்கும் செல்லக்கூடிய தான நீரோட்டம் மற்றும் வடகிழக்கு, தென்மேற்கு பருவக் காற்றுகளின் வாய்ப்பினைப் பெற்றிருந்தமையினைக் காணமுடிகிறது.

இத்தகைய வாய்ப்பு இருப்பதனால்தான் இரமேஸ்வரத்திலுள்ள கோவிலுக்குத் தினமும் அபிசேகத்துக்காகப் பால் கொண்டு செல்



லப்பட்டதாகப் பரம்பரை பரம்பரையாக அங்குள்ள மக்கள் சொல்லிவருகிறார்கள். இதிலிருந்துதான் இத்தீவினைப் பசுத்தீவென்றும், பாற்தீவென்றும், தயிர்த்தீவென்றும் அழைக்கும் வழக்கமிருந்தது. நெடுந்தீவில் மருத்துவ மூலிகைகள் இயற்கையிலேயே வளர்ந்து வருவதனால் மூலிகைத்தீவு என்றும் அழைக்கப்பட்டது.

நெடுந்தீவில் கடற்படையினர் தளம் அமைக்கப்படுவதற்கும் 1983ல் தொடங்கிய ஈழப் போருக்கும் முன்பாக, பண்டிகைகளின் பொழுதிலும் கச்சைதீவுத் திருவிழாவின் பொழுதிலும் புதிய சினிமாப்படம் வெளியிடப்படும் பொழுதிலும் இளைஞர்கள் இந்தியாவுக்குச் (இராமநாதபுரம்) சென்று திரும்பிவருவதனைக் நேரில் காணக் கூடியதாகவிருந்தது.

## வரலாற்றுக்கு முந்தியகால இடப்பெயர்வுகள்:

வைகைக்கரை நாகரிகத்தினை வெளிக்கொணர்ந்த கீழடி ஆய்வுக்குப் பின்பாக நெடுந்தீவில் மக்கள் எப்பொழுது குடியேறினார்கள் என்ற வினா அவசியமற்றதாகிறது. மேற்குக்காற்றாடி மலைத்தொடரில் பழனி மலைப்பிரதேசத்தில் ஊற்றெடுத்துப் பாம்பன் பகுதியில் உள்ள உச்சிப்புளியில் கடலில் சங்கமமாகும் வைகைநதி தமிழ் நாகரிகத்தின் தொட்டில் ஆகும். வைகைநதி இலங்கையூடாகப் பாய்ந்ததாக இலங்கையின் புவிச்சரிதவியலில் டபுள்யு.-எம். டேவிசின் கலைக்கூடச் சிந்தனை சார்ந்தவர்களின் ஆய்வுமுடிவும் நம்பிக்கையுமாகும். அவ்விதமாயின் நெடுந்தீவும் வைகைக் கரை நாடேயாகும்.

கடைசிப் பனியுகத்தின் பின்பாக சுமார் 11,000 வருடத்தில் கடற் பிரளயத்தில் நிலவழித் தொடர்பை இழந்து தனித்து நிற்கும் நெடுந்தீவின் மக்கள் எவ்வெக் காலங்களில் மீளக் குடியேறினார்கள் என்பதனைத்தான் சரித்திர காலக் குடிப் பெயர்வும் நவீன காலக் குடிப் பெயர்வுகளும் விளக்கிக் கொண்டிருப்பதகைக் காணமுடிகிறது.

சரித்திரகாலத்துக்கு முன்னைய காலத்தில் இலக்கிய வரலாற்றாதாரங்கள் முக்கிய இடத்தினை வகித்தன. முச்சங்கங்கள் வழங்கிய இலக்கியங்களில் ஐம்பெருங்காப்பியங்கள் உட்பட்ட சங்க மருவியகால இலக்கியங்களில் பல்லவர்கால இலக்கியங்களில் காணப்படும் செவிவழிக்கதைகள் பல ஆதாரங்களை எமக்குத் தந்தாலும் அவற்றை நம்பவைக்க தமிழருக்கான ஆள்புலமில்லை என்பது குறைபாடேயாகும். சங்க இலக்கியத்துக்குப் பின்னரான புராண இதிகாசங்கள் சொல்லும் செய்திகள் பல சூழவம்ச மகாவம்சக் கதைகள் போல மிகைப்படுத்தப்பட்டிருப்பினும் அவைகளும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளத்தக்கனவேதான்.

ஐரோப்பா முழுவதிலும் நியாண்டர்தல் மனிதர் ஆக்கிரமித்திருந்த பொழுதுக்கு முன்பாகவே ஹோமோ எரக்டஸ் என்ற குனிந்து நடக்கும் மனிதர் தென்னிந்தியப் பெருங்கண்டத்தை ஆக்கிரமித்திருந்தனர். குரங்குகள், கூன்பாண்டியன் என்ற நவீன மனித பரிணாமத்தின் வரலாறிருப்பினும், ஆதிசிவன் என்ற வைத்தியன் அல்லது ஆதியோகி வைகைக் கரையில் அணை கட்டுகையில் நடத்திய திருவிளையாடலில் எல்லோரதும் முதுகிலும் அடிவிழுந்ததென்ற செய்தியூடாகத் தென்னிந்தியாவில் ஹோமோ சாப்பியன்களது உருவாக்கத்தைத் கல்லாயுததாரிகளென்றும் மனிதரென்றும் திருவாசகம் தெளிவாகக் காட்டியிருந்தது.

இலங்கையில் நாகர்கள் என்ற இனம்தான் நீண்டகாலமாக வாழ்ந்திருக்கிறார்கள். இதில் நுண்ணறிவுடன் எதனையும் இயக்குபவர்கள் இயக்கர்கள் என அழைக்கப்பட்டனர். இலங்கையில் இயக்கரும் நாகரும் வாழ்ந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. நெடுந்தீவு மக்களின் நாகமணி, நாகமுத்து, நாகலிங்கம், நாகநாதி, நாகாத்தை, நாகரத்தினம், நாகேந்திரர், நாகம்மா, நாகலச்சுமி, நாகு, நகுலேஸ் போன்ற பெயர்களில் வரும் நாக என்ற பகுதி இதனை உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

## வரலாற்றுக்கால இடப்பெயர்வுகள்:

வைகைக்கரை நாகரிகம் பலபடிகளைக் கொண்டிருந்தது. கடைசிப்படிகளில் கிரேக்க உரோம சாம்ராஜ்யங்களுடனான கடல்வழி வர்த்தகத் தொடர்பிருந்ததனைத் தென்னிந்தியாவில் கிடைத்த கிரேக்க உரோம நாணயங்கள் சான்றாகக் காட்டியிருக்கின்றன. அடுத்ததாக கடல் வர்த்தகத்தை தம்வசப்படுத்தியிருந்த அராபியர்கள் பெருக்கு மரங்கொண்ட நெடுந்தீவையும் புங்குடுதீவையும் 12ம் நூற்றாண்டின் நயினை நாகபூசணி அம்மன்கோவில் கல்வெட்டுப்படி நயினாதீவையும் தமது வியாபாரப் பிரதேசமாகக் கொண்டிந்தனர் என்று சொல்லப்படுகிறது.

சீனர்கள் வேலணை மண்கும்பான் கடற்கரைப் பகுதி ஆனைக் கோட்டைப் பகுதியையும் வியாபாரத்தின் பொருட்டு வைத்திருந்ததாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்று மற்றும் தொல்பொருளியல் பேராசிரியர்கள் சி. சிற்றம்பலம், அ. ரகுபதி, ச. சத்தியசீலன் எஸ். புஸ்பரத்தினம், செ. கிருஸ்ணராஜா ஆகியோர் வெளிக்கொணர்ந்த புதைபொருட்கள் சான்றுபகர்கின்றன.

தென்னிந்தியாவில் அவதானித்தது போன்ற வெளிநாட்டவருக்கான தனித்தனியான பிரதேச அங்காடிகள் இருந்தனவென்பதால் ஒரு காலத்தில் பொருள் வாங்கி விற்கக்கூடிய செல்வம்மிக்க மக்கள் தீவுப் பகுதிகளிலும் யாழ். குடாநாட்டின் கரையோரங்களிலும் வாழ்ந்திருக்கவேண்டும் என்பது உறுதியாகிறது.

கடைச்சங்க காலத்தின் பாண்டிய மன்னர் நவரத்தினங்களையும் முத்தினையும் பெறுவதற்காக மீகாமன் என்ற கடலோடியை அனுப்பியதாகவும் அவன் நெடுந்தீவை ஆட்சி செய்த முத்துக் குளிப்பினை தொழிலாகக் கொண்டோர் அரசனும் நெடுந்தீவில் கோட்டைகட்டி ஆண்டவனுமான வெடியரசனின் உதவியுடன் அவற்றைப் பெற்றுச் சென்றதாகவும் நாட்டார் இலக்கியப் பாடல்களை ஆதாரமாகக் காட்டுவர்.

சோழமண்டலத்திலிருந்து வந்து நெடுந்தீவை ஆட்சிசெய்த வெடியரசனது ஆட்சிக்காலம் பொ.ஆ. (கி.பி.) 1ஆம் அல்லது 2ம் நூற்றாண்டென்பது ஆய்வாளர்களது ஊகமாகும். வெடியரசன் கோட்டையின் இடிபாடுகள் கோட்டைக் காட்டுப் பகுதியில் இன்னமும் காணப்படுகிறது.

வெடியரசனின் தம்பிமார் ஏனைய தீவுப்பகுதிகளையும் குடாநாட்டின் மயிலிட்டி வரையான கரையோரப் பிரதேசத்தில் சிற்றரசர்களாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. சோழ மன்னரது தளபதியுடனான போரில் வெடியரசன் கொல்லப்படவும் வேடியரசனின் வாரிசுகள் பின்னர் கடல்வழியாக மட்டக்களப்புக்குச் சென்று குடியேறியதாகவும் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

சிங்கை ஆரியன் காலத்தில் பொ.ஆ 950 அளவில் குடித்தொகை குறைவாக இருந்த காரணத்தால் பிரபுக்களும் சுற்றத்தாரும் வடக்கில் குடியேற அழைக்கப்பட்டார்கள். இவ்விதமாக வந்த பிரபுக்கள் வடபகுதியெங்கும் குடியேற்றப்பட்டிருந்தனர். சோழமன்னர் ஆட்சியில் மீண்டும் சேயூர் வேளாண்மரபினரான தனிநாயக முதலியார் பரிவாரங்களுடனும் பொன்பரிப்பு பகுதிகளிலிருந்து வயல் வேலை செய்யத்தக்க விவசாயிகளுடனும் குடியேறியதாக இப்பிரதேச மக்களது வரலாற்றுக் குறிப்புகளூடாக அறியமுடிகிறது.

சனத்தொகைப் பெருக்கம் பிறப்பு விகிதத்துக்கும் இறப்பு விகிதத்துக்குமிடையிலான வேறுபாடாகும். இதனை இயற்கை அதிகரிப்பு என்று கூறலாம். ஒரு பிரதேசத்தினுள் வருகின்ற மக்களின் தொகையும் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறும் மக்களின் தொகையும் இயற்கை அதிகரிப்புடன் இணையும் பொழுது அது மொத்த சனத்தொகை அதிகரிப்பாக மாறுகிறது.

நெடுந்தீவில் வாழுகின்ற மக்களின் வாழும் வயதெல்லை அதிகமாக இருப்பதனால் இயற்கை அதிகரிப்புக்கான வாய்ப்பு அதிகமுள்ளது. பேராசிரியர் கா. குகபாலன் தனது ‘தீவகம் தொன்மையும் மேன்மையும்’ என்ற ஆய்வில் ஏனைய தீவுப்பகுதிகளுடன் ஒப்பிடுகையில் 80 வயதுக்கும் அதிகமானோரின் எண்ணிக்கை நெடுந்தீவில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

## ஐரோப்பியர் ஆட்சிக்கால இடப்பெயர்வுகள்:

ஐரோப்பியராட்சிக்காலத்தில் தன்னிச்சையான நாடுகடந்த இடப்பெயர்வுகளுக்கு வாய்ப்புக் குறைவாகவேயிருந்தது. இலங்கையில் நாடு தழுவிய குடிசனக் கணக்கெடுப்பு பிரித்தானியராட்சிக் காலத்தில் நடந்தது. 1824ல் முதலாவது சனத்தொகை மதிப்பீடு செய்யப்பட்டது. 1871 முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருதடவை இடம்பெறுகிறது. 1871ல் 3025 ஆகவிருந்த சனத்தொகை 1881ல் 2637 ஆகக் குறைவடைந்து. பின்னர் படிப்படியாக அதிகரித்தது. இதனைத் தவிர பல குடிசன மதிப்பீடுகளும் தேவை கருதி இடம் பெற்றுள்ளன. 1824ல் நெடுந்தீவின் சனத்தொகை 3432 பேராகவிருந்தது குறிப்பிடத்தக்கது.

போத்துக்கீசர் ஆண்டகாலத்தில் 300 குடும்பம் (குவைறோஸ் என்ற பாதிரியார்) அல்லது 3000 பேரளவில் வாழ்ந்ததாக மதிப்பிடலாம். போத்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க சமயத்துக்குப் பலர் மதமாற்றப்பட்டனர். அதன் விளைவாக பெரும்பாலான கத்தோலிக்கர்கள் கரையூர், பாசையூர், கொழும்புத்துறை, பூனகரி, மன்னார் வரையில் இடம்பெயர்ந்தனர். மதவழி இடப்பெயர்வுகள் அப்பொழுதிலிருந்து ஆரம்பமாகின. பின்னர் ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் மானிப்பாய், கோப்பாய், வட்டுக்கோட்டை பகுதிகளுக்கும் நெடுந்தீவிலிருந்து இடம் பெயரலாயினர். நெடுந்திவில் இந்துக்களும் கிறீஸ்துவர்களும் மத இணக்கப்பாட்டுடன் வாழ்ந்ததனால் கிறீஸ்தவ மக்களதும் இந்து மக்களதும் இடப்பெயர்வுகளும் ஒன்றாகவே இடம்பெற்றன.

ஐரேப்பியரால் கால்வாய்கள் வெட்டப்படவும் கடல்நீர் உட்புகுந்ததால் நெடுந்தீவின் மத்தியில் வாழ்ந்தவர்களின் நிலங்கள் பயிரிடப் பொருத்தமற்றதாக மாற்றப்பட்டன விவசாய நிலமற்ற விவசாய சமூகம் உருவானது. அவர்களில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர்களாகவும் ஏனைய கிறீஸ்தவ பிரிவுகளுக்கும் மாறியதுடன் இலங்கையின் பலபாகங்களுக்கும் இடம்பெயர்ந்து போயினர். எஞ்சியவர்கள் விவசாயம் சாராத தொழில்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர்.

நெடுந்தீவின் சனத்தொகையானது அங்குள்ள பொருளாதார வாய்ப்புகளுக்கு ஏற்பத் தாங்கக் கூடிய அளவுக்குக் கூடவாகவும் குறைவாகவும் இருக்கும் பொழுது உள்நோக்கியதும் வெளிநோக்கியதுமான இடப் பெயர்வுகள் அவதானிக்கப்பட்டன. (அ. கணபதிப்பிள்ளை. மாவிலி மலர் 6 - 2002)

நெடுந்தீவின் பொருளாதாரம் பிழைப்பூதிய மட்டத்திலானதாக இருந்துவந்தது. வெளியிடங்களிலிருந்து உணவுப்பண்டங்களை இறக்குமதி செய்வதற்குப் பொருளாதாரச் சாத்தியமில்லாத நிலையில், உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்திச் சுயதேவையை நிறைவு செய்யும் முறையினை அங்குள்ள மக்கள் பின்பற்றிவரலாயினர். இலங்கையில் வரண்டபிரதேச அரச உதவிக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்பாகச் சில குடும்பத் தலைவர்கள் வன்னியில் விவசாயம் செய்து நெல்லுடன் திரும்பியிருந்தனர். இதேபோல யாழ்ப்பாணம் பூனகரிப் பகுதிகளிலுள்ள பனை மரங்களைக் குத்தகைக்கு எடுத்து பனாட்டு ஒடியல் போன்றவற்றுடன் திரும்பும் வழக்கமும் காணப்பட்டது.

இவ்விதம் நெல்லுக்கும் பனைபடு திரவியங்களுக்குமாகப் பருவகால இடப்பெயர்வினை மேற்கொண்டவர்கள் காலப்போக்கில் குடாநாட்டிலும் வன்னிக் கரையோரங்களிலும் தங்கத் தொடங்கினர். இது அன்றைய விவசாய சமூகத்தின் இழுவிசைக் குடிப்பெயர்வாக அவதானிக்கப்பட்டது.

நெடுந்தீவில் பெறப்படும் மழைவீழச்சியின் செறிவுத்தன்மையானது குறைவடைந்து வந்தாலும் மழைவீழ்ச்சி ஒழுங்கில் மாற்றம் அவதானிக்கப்படவில்லை. சிறுதானியப் பயிர்ச் செய்கைக்கே பெறப்படும் மழைவிழ்ச்சி போதுமானதாகவிருந்தது. நெல்லைத்தவிரச் சிறுதானியங்களது உற்பத்தியானது கூட்டுறவு முறையில் செய்யப்பட்டது. உணவுப் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் வழக்கம் மக்களிடையே இருந்தது. உணவுக்காக காடுபடு பொருட்களை பெறுவதும் கடல்தரும் வளங்களைப் பயன்படுத்துவதும் பனைவளத்தினை உச்சமாகப் பயன்படுத்துவதும் வழக்கிலிருந்தது.

## 20ம் நூற்றாண்டின் ஆரம்பகால இடப் பெயர்வுகள்:

வன்னிநோக்கியும் யாழ்பாணக் குடாநாட்டை நோக்கியும் இடம் பெற்ற பருவகால விவசாய இடப்பெயர்வானது இலங்கையில் 1935ம் ஆண்டு நில அபிவிருத்திச்சட்டம் கொண்டுவரப்பட்டதுடன் புதிய பரிணாமத்தினைப் பெற்றது. இச்சட்டம் குடியானவருக்கும் மத்தியதர வர்க்கத்தினருக்கும் நிலம் சொந்தமாக வழங்குவதனை உறுதிப்படுத்தியது. இதுவே வரண்ட பிரதேசத்தில் குடியான வர்களது நிரந்தரக் குடியேற்றத்துக்கான சாதக நிலையினைத் தோற்றுவித்தது. விவசாயநிலங்கள் குடியானவருக்கு வழங்கும் எற்பாடு அதன் முக்கிய விடயமாகவிருந்தது. அத்துடன் அரச உத விக் குடியேற்றத்தின் தோற்றமும் அப்பொழுது தொடங்கிவைக்கப் பட்டது.

1946ல் அதிஉச்சமாக 6338 பேர்கொண்ட சனத்தொகை காணப் பட்டது உலகப் போர்ச் சூழலால் எல்லாவிடங்களிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டபொழுதும் நெடுந்தீவில் பனை மக்களைக் காப்பாற்றியதாகச் சொல்லுவர். இக்காரணத்தினால்தான் சாதாரண மக்கள் நெடுந்தீவிலிருந்து இடம்பெயர்ந்து போவதனை விரும் பாதவர்களாகவிருந்தனர்.

இவ்வதிகரித்த தொகைக்கு உள்ளூரில் வாழ வசதி செய்து கொடுக்க வெட்டகாடு தொட்டாரம் ஆகிய இடங்களில் காணி வழங்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர். அத்துடன் குடாநாடு நோக்கிய இடப் பெயர்வுக்கும் வழிசெய்யவேண்டிய தேவை யேற்பட்டது. 1983ன் பின்பாக உள்ளூர் மீனவர் தொகை கூடி யதால் வெல்லை, குடவிலி, மணற்கிணத்தடி போன்ற கரையோரத் தில் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கவேண்டியேற்பட்டது.

இரணைமடுக் குளத்தின் நீர்பாசனத்தின் கீழ் மத்தியதர வர்க் கத்தினருக்கும் சுயமுயற்சியில் விவசாயம் செய்யும் ஓரளவு வசதி படைத்தவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த காணிகளில் நெடுந் தீவின் பருவகாலத் தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். அவர்களில் சிலர் மத்தியதர வர்க்கத்தினருக்கான பெரிய காணி-களைப் பெற்றிருந்தனர். அங்கு குடியானவர் குடியேற்றம் தொடங் கப்படுவதனைச் சாதகமாகக் கொண்டு சில உறவினர்கள் நேரடி யாக காணிக்காக விண்ணப்பித்தனர்.

நெடுந்தீவுக் காரியாதிகாரி பிரிவினூடாகத் தெரிந்தெடுக்கப் பட்ட வர்களில் பிள்ளைகள் அதிகமுள்ள குடும்பத் தலைவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டதால், 1940களின் இறுதியிலும் 1950க ளின் ஆரம்பத்திலும் நெடுந்தீவிலிருந்து மிப்பெரிய இடப்பெயர்வு இடம்பெற்றது. குடியானவர் குடியேற்றத் திட்டங்களில் வழங்கப் பட்ட காணிகளில் 25 சதவீதமான காணிகளை நெடுந்தீவுக் குடி யானவர் பெற்றிருந்ததனை 1977ல் நிகழ்த்திய ஆய்வு வெளிக் கொணர்ந்தது. (அ. கணபதிப்பிள்ளை 1979). வவுனியாவின் பல எல்லைக்கிராமங்களில் சுமார் 75 சதவிதத்தினர் வரையில் நெடுந் தீவு மக்களாகவிருந்ததனைக் காணமுடிந்தது.

நிலமற்ற ஈரவலயச் சிங்கள மக்களது நிலப்பசிக்குத் தீனிபோட்ட வடண்டபிரதேசக் குடியேற்றத்திட்டங்கள் இன்றுவரை சிங்களவர் களது அரச உதவிக் குடியேற்றங்களாகத் தொடரும் நிலையி னைக் காணமுடிகிறது. மாறாக அரச ஆதரவும் உதவியும் இல்லாததனால் நெடுந்தீவுக் குடியானவர் வளமான புதிய காணி-களைப் பெறமுடியாமல் முதலாந் தலைமுறையினருக்குத் தமது காணிகளைக் கொடுத்துவிட்டுப் பிறந்த இடத்துக்குத் திரும்பும் நிலையினை அவதானிக்க முடிந்தது. இப்போக்கினை 1960க்குப் பின்னைய நெடுந்தீவின் உள்நோக்கிய இடப்பெயர்வாக அவ தானிக்கமுடிந்தது.

1965க்குப் பின்னர் இளைஞர்களுக்கான படித்த வாலிபர் குடி யேற்றத்திட்டங்கள் வன்னிப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டன. உப உணவுப் பயிற்செய்கை கொடுத்த வருமானக் கவர்ச்சியானது தொடர்ந்து இளைஞர்களை ஈர்த்தது. இளைஞர்களுடன் தாய், தந்தை உட்பட முழுக் குடும்பமும் வெளியேறியிருந்தனர்.

நெடுந்தீவில் மீன்பிடிக் குடும்பங்கள் ஆரம்பததில் இருக்க வில்லை என்றும் மயிலிட்டியிலிருந்து வந்த தந்தைக்கும் மகளுக் கும் அடைக்கலம் கொடுத்து கிழக்குத்துறையில் குடிவைத்ததாக ஆய்வுக்கான செவ்விகளூடாக அறியமுடிந்தது. அத்துடன் தொடர்ந்து குடிவந்த அவர்களது உறவினர்களுடன் இயற்கை அதிகரிப்பும் சேரவும் மீன்பிடிக் குடும்பங்களது தொகை அதி-கரித்தது.

## 1983க்குப் பின்னரான இடப் பெயர்வுகள்:

ஈழப் போர்க்காலங்களில் யாழ்பாணக் குடாநாட்டிலிருந்தும் தீவகத் திலிருந்தும் மக்கள் வெளியேறுகையில், நெடுந்தீவுக்கு மக்களின் உள்வரவே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. யாழ்பாணக் குடா நாட்டிலும் வன்னியிலுமிருந்த பலர் பாதுகாப்புக்கருதி நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவுப் பகுதிகளுக்குச் சென்றிருந்தனர். 1994ல் நெடுந்தீவில் 4688 பேர் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

போருக்குப் பயந்த குடும்பங்கள் தமது உயிரைப் பாதுகாப் பதற்காக இந்தியாவுக்கு இடம் பெயர்ந்தனர். அவர்கள் முகாம் களிலும் தனியார் வீடுகளிலும் தங்கியிருந்தனர். பெரும்பாலான நெடுந்தீவு மக்கள் பலவேறு காரணங்களுக்காக இந்தியாவிலி ருந்து இன்னமும் திரும்பி வரமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டி ருக்கிறார்கள்.

நெடுந்தீவில் 1966க்கு முன்னர் பொலிஸ் நிலையம் இருக்க வில்லை. ஈழப்போர் உக்கிமடைந்த 1990களில் இலங்கையின் பாதுகாப்புக் காரணத்துக்காகக் கடற்படைத்தளம் அமைக்கப் பட்டது. அது அங்குள்ள மக்களது இயற்கையுடன் ஒன்றிய வாழ்க்கை முறையில் மாற்றத்தினை ஏற்படுத்தியது. இராணுவத் துக்கும் அரசுக்கும் குறித்த சில அரசியல் கட்சிகளுக்கும் இணக் கமான மக்கள் தான் தப்பிப் பிழைக்கக்கூடிய நிலை தோற்று விக்கப்பட்டது.


போர் முடிந்த 2009 ஆண்டுக்குப் பின்னர் நெடுந்தீவிலிருந்து குடா நாட்டுக்கும் வன்னிக்கும் கல்வி மற்றும் தொழிலுக்கான இடம் பெயர்வு ஏற்பட்டது. இத்தகைய இடப்பெயர்வுகள் இருவழி இடப் பெயர்வாக மாறிக்கொண்டிருக்கிறது.

## வெளிநாடு நோக்கிய புலம் பெயர்வு:

1983க்கு முன்பாக நெடுந்தீவிலிருந்து கல்விக்கும் தொழிலுக்கு மான வெளிநாடுகளுக்கான இடப்பெயர்வுகள் தொடர்ந்து இடம் பெற்றிருந்தமை அவதானிக்கத்தக்கது. அவர்களில் பெருப்பாலான வர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்திருக்க ஒருசிலரே வெளி நாடுகளில் நிரந்தரமாகத் தங்கியிருந்தனர்.

வன்னிப்பகுதியில் வாழ்ந்த நெடுந்தீவுக் குடும்பங்களில் இருந்து மிகப் பெரிய அளவிலான புலம்பெயர்வுகள் இடம்பெற்றன. 1983ல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினைத் தொடர்ந்து இளம் வயதினர் இயக்கங்களில் இணைந்ததனைப்போல் இராணுவத்துக் குப் பயந்து வெளிநாடுகளுக்கும் பெற்றோரால் அனுப்பி வைக் கப்பட்டனர். அவ்விதமான இளைஞர்கள் திரும்பிவரமுடியாத நிலையிருந்ததால் பெற்றோரும் காலப் போக்கில் அவர்களுடன் இணைந்து கொண்டனர். முதலாந்தலைமுறையினரின் திருமணத் துக்கான இடப்பெயர்வுகளும் இவற்றைத் தொடர்ந்து இடம் பெற்றன.

நெடுந்தீவில் அவதானிக்கப்படும் சனத்கொகை தொடர்பான அம்சங்கள் எல்லாமே தனித்துவம் மிக்கனவாக இருப்பதனால் தொடர் தேர்ச்சியான ஆய்வினை இத்துறை வேண்டிநிற்கிறது.



kanapathipillai.a@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# ஓர் அத்தியாயத்தின் முடிவு




ரூபவாஹினியின் முதல் தயாரிப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்ட மிகச்சிலரில் ஒருவராக எனது ஆரம்ப காலம் முழுவதும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலேயே கழிந்தது. தமிழ் நிகழ்ச்சிகளின் நிர்வாகத்தைத் திருமதி. ஞானம் இரத்தினம் அவர்கள் கவனித்துக்கொண்டதால் எனக்கு வேறு எந்தவித அழுத்தங்களும் இருந்ததில்லை. புதிய ஊடகத்தில் என்னை நிலைநிறுத்திக் கொள்ளக்கூடிய வகையில் எனது தயாரிப்புப்பணிகளை மேற்கொண்டு பணியாற்றுமிடத்தில் சகலரது நன்மதிப்பையும்பெற்று எனது உழைப்புக்குக் கிடைத்த மக்களின் வரவேற்பை (recognition) அனுபவித்தேனென்று சொல்லலாம்.

ஆனால் 1984ம் ஆண்டு நான் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டதும் அந்த நிலை முற்றிலும் மாறியது. புதிதாக ஆரம்பித்து என்னிடம் ஒப்படைக்கப்பட்ட தமிழ்ப்பிரிவைப் பலம்வாய்ந்த ஒரு பிரிவாக நிறுவுவதை எனது முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கருதினேன். நாடு அப்போதிருந்த அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டச் சூழலில் அது சுலபமான காரியமல்ல என்பது மட்டுமல்ல, ஆபத்தானதும்கூட என்பதை நான் நன்கு உணர்ந்திருந்தேன். ஆனால் எந்தக் காரணத்தையும் சாட்டாக வைத்து எனது நிர்வாகக்கடமைகளை சரியாகச் செய்யாதுவிட்டால் எதிர்காலத்தில் நான் மிகுந்த கண்டனத்துக்குள்ளாவேனென்பதை எனது ஒலிபரப்புக்கூட்டுத்தாபன அனுபவம் மூலம் அறிந்திருந்தேன். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ்ப் பிரிவின் தலைமைப் பொறுப்பை வகித்த கே.எஸ். நடராஜா அவர்கள் என்னைப் பொறுத்தளவில் ஒரு சிறந்த நிர்வாகி. நான் பெரிதும் மதிப்பவர். இருந்தபோதிலும் அவருக்கெதிரானவர்கள், அவர் சிங்கள நிர்வாகத்திற்குப் பயந்தவர், துணிந்து காரியமாற்றமாட்டார், தமிழ்ச்சேவைக்கென்று வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதியைக் கூட செலவு செய்யாது கூட்டுத்தாபனத்துக்குச் சேமித்துக்கொடுப்பவரென்று குற்றம் சுமத்துவதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். எனவே, நான் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் மாத்திரமே கவனம் செலுத்தாது, எமக்குரிய இடத்தைப் பெறுவதிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென்ற அடிப்படையிலேயே எனது செயற்பாடுகள் அமைந்தன. எனது செயற்பாடுகளால் ரூபவாஹினியின் தலைவர், இயக்குனர் நாயகம் ஆகியோரின் கவனத்தையும் மதிப்பையும் பெற்றேனென்பதை என்னால் உணரமுடிந்தது. அதற்கான சான்றுகளைத்தான் முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

ஒரு தேசிய ஊடகத்தில் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாக இருப்பவர் எத்தகைய கட்டுப்பாடுகளை அல்லது விதிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டுமென்பதில் எனக்குத் திட்டவட்டமான கொள்கைகள் இருந்தன. அதில் பிரதானமானது எனது பதவியை எந்தவிதத்திலும் துஷ்பிரயோகம் செய்யக்கூடாதென்பது. எனது ஒவ்வொரு நடவடிக்கையையும் மிக அவதானமாக மேற்கொண்டேன். தயாரிப்பாளர் பற்றாக்குறை இருந்தமையால் நான் நிர்வாகப் பதவியிலிருந்துகொண்டே நிகழ்ச்சித் தயாரிப்புப் பணிகளையும் மேற்கொண்டதை அனைவரும் அறிவார்கள். செய்தி வாசிக்கும் பணியை எனது விருப்பத்திற்காகச் செய்தேன். செய்தி வாசிப்பதால் எனக்கு மேலதிகமாகப் பணமும் கிடைத்தது. செய்திப்பிரிவு எனது நிர்வாகத்திற்குட்பட்டதல்ல. நான் நேர்முக வர்ணனைகள் செய்தேன். அந்த நிகழ்ச்சியும் தமிழ்ப்பிரிவால் செய்யப்படுவதல்ல. ரூபவாஹினியின் ஆரம்ப நாட்களிலிருந்தே எனக்குத் தரப்படும் பணி நேர்முகவர்ணனை செய்வது. ஆனால் எனது நிர்வாகத்திற்குட்பட்ட தமிழ் நிகழ்ச்சிகளில் நான் அறிவிப்பாளராகவோ தொகுப்பாளராகவோ பங்குபற்றாது, மற்றையவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதில் பாரபட்சம் காட்டக்கூடாதென்பதில் மிகவும் உறுதியாக இருந்தேன். தொலைக்காட்சியில் எனது முகம் அடிக்கடி தெரியவேண்டுமென்பதற்காக சகல நிகழ்ச்சிகளிலும் எனது முகத்தைக்காட்ட முற்படவில்லை. அவ்வாறு முகத்தைக் காட்டியிருந்தால் மற்றையவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்காது ரூபவாஹினியை ஆக்கிரமித்துவிட்டேனென்று என்மீது குற்றம் சாட்டுவார்கள். அதுமட்டுமல்ல, சகல நிகழ்ச்சிகளிலும் எனது முகம் தெரிந்தால் மக்களுக்கும் என்மீது வெறுப்பு ஏற்பட்டுவிடும். நிகழ்ச்சிகளும் மதிப்பிழந்துவிடும். நான் இயற்கையாகவே எதற்கும் முண்டியடித்து, என்னை வலிந்து முன்னிறுத்தும் இயல்பைக் கொண்டிருக்காததால் ரூபவாஹினியிலும் என்னை மட்டுமே முன்னிறுத்தாது மற்றையவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குவது எனக்கு இயல்பான செயலாகவே இருந்தது. தமிழ்ப் பிரிவால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல் மற்றும் செவ்வி காணுதல் போன்றவற்றில் எஸ். விஸ்வநாதன், வீ.என். மதியழகன், அருணா செல்லத்துரை ஆகியோரை ஈடுபடுத்தினேன். சில விசேட செவ்வி நிகழ்ச்சிகளுக்கு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத் தமிழ்ச்சேவையின் முன்னாள் பணிப்பாளர் கே.எஸ். நடராஜா, சில்லையூர் செல்வராஜன், கமலினி செல்வராஜன் ஆகியோரைப் பயன்படுத்தியதோடு, சில நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதில் யோகா பாலச்சந்திரன், கே.எஸ். சிவகுமாரன் ஆகியோரையும் ஈடுபடுத்தினேன். தமிழ்ப்பிரிவின் நிகழ்ச்சிகளல்லாது ரூபவாஹினியின் வேறு பிரிவினர் நிகழ்ச்சிகள் தயாரித்து அவற்றில் தமிழ் அறிவிப்பாளர்களும் இடம்பெறவேண்டுமென்ற நிலை ஏற்படும்போது நிர்வாகக்கட்டமைப்புக்கேற்பத் தகுந்தவர்களைப் பரிந்துரைசெய்யுமாறு என்னை அணுகுவார்கள். அப்போதெல்லாம் என்னை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கத்தோடு என்னையே அறிவிப்பாளராகப் பங்குபற்றுமாறும் கேட்பார்கள். நான் அப்படியான முகஸ்துதிகளைக் கவனத்திலெடுக்காது, தகுந்த பிற அறிவிப்பாளர்களையே பரிந்துரைப்பேன்.

பியதாஸ ரட்ணசிங்ஹ என்பவர் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் தயாரிப்பு உதவியாளராக என்னுடன் பணியாற்றியவர். பின்னர் கல்விச்சேவையில் தயாரிப்பாளராக இணைந்துகொண்டவர். ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் கல்விச்சேவைக்கு மாற்றலாகி வந்தவர். 1989ம் ஆண்டளவில் நிகழ்ச்சிப்பிரிவில் திருமதி. இரத்தினம் அவர்கள் வகித்த பதவியாகிய இயக்குனர் பதவியில் நியமிக்கப்பட்டார். அவர் வாரஇறுதியில் சனிக்கிழமை காலையில் நேரடியாக ஒளிபரப்பாகும் 'ஆயுபோவன்' என்ற நிகழ்ச்சியை 1990ம் ஆண்டு ஆரம்பித்தபோது என்னை அதில் ஒரு தொகுப்பா-

ளராக இணைந்துகொள்ளும்படி கேட்டார். நான் அதற்கு மறுப்புத் தெரிவித்து மதியழகன், விஸ்வநாதன், கமலினி செல்வராஜன் ஆகியோரை அமர்த்துமாறு சிபார்சு செய்தேன். அந்த நிகழ்ச் சியை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்கக் கூட்டம் 1990ம் ஆண்டு ஜுலைமாதம் 10ம் திகதி கூட்டப்பட்டபோது இதுபற்றிக் கலந்துரை யாடப்பட்டது. நான் இப்படிப் பாரபட்சம் பாராது நேர்மையுடன் பணியாற்றியபோதும் எனக்கு எதிராக ஒரு சிறு கூட்டம் மிகத்தீவி ரமாக இயங்கிக்கொண்டிருந்தது.

1987ம் ஆண்டு நவம்பர் மாதம்வரை நான் வெளிப்படையான எதி ரிகள் எவரும் இல்லாமல் மிகுந்த உறுதியுடன் ரூபவாஹினியில் பணியாற்றினேன். என்று என்னுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்த சிங் கள உத்தியோகத்தர்கள் கொலைசெய்யப்பட்டார்களோ அன்றிலி ருந்து அதுவரை தம்மை வெளிக்காட்டாது பொறாமையால் புழுங் கிக்கொண்டிருந்த எதிரிகள் வெளிப்படத் தொடங்கினார்கள். படிப் படியாக எனக்கெதிரான செயற்பாடுகள் இடம்பெற்றன. அவற்றில் முதலில் நிகழ்ந்ததுதான் நான் ஏற்கனவே குறிப்பிட்ட கல்விச் சேவையிலும் பொதுநிகழ்ச்சிகளைத் தயாரிக்கமுற்பட்ட நட வடிக்கை. அது எனது தீவிரமான எதிர்நடவடிக்கைகளால் வெற்றி யளிக்காது போய்விடவே பல்வேறு திசைகளிலிருந்தும் அம்புகள் பாயத்தொடங்கின. எனது போதாதகாலம் என்னைக் குறிவைத்துத் தாக்குதல்கள் எம்மவரால் ஆரம்பிக்கப்பட்டபோது, என்னை நன்கு அறிந்துவைத்திருந்த ரூபவாஹினியின் ஆரம்பகாலத் தலைவர் எம்.ஜே. பெரேரா, இயக்குனர் நாயகம் அனுர குணசேகர ஆகி-யோர் பதவிகளிலிருந்து விலகிச் சென்றுவிட்டனர். இவர்களைத் தொடர்ந்து ரூபவாஹினியின் தலைவராகப் பதவிக்குவந்த குமார் அபயசிங்ஹ அவர்களும் 89ம் ஆண்டு நடுப்பகுதியில் மாற்றலாகி வேறிடம் சென்றுவிட்டார். 1987ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தொடக் கம் 89ம் ஆண்டு நவம்பர் வரை இடம்பெற்ற ஜே.வி.பி.யின் இரண் டாவது கிளர்ச்சியின்போது நடைபெற்ற கொலைகள், ஊடகவி யலாளர்களுக்கான கொலைப் பயமுறுத்தல்கள் காரணமாக ரூபவாஹினியில் உயர்பதவியிலிருந்த ஷேர்ளி பெரேரா, பியசிறி குணரட்ண ஆகியோரும் பதவிகளைக் கைவிட்டுச் சென்றுவிடவே ரூபவாஹினி சரியான தலைமையில்லாது ஆட்டம் கண்டது. இந்த நேரத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியாக (competent authority) சம ரக்கோன் என்ற வான்படை அதிகாரி ரூபவாஹினிக்குப் பொறுப் பாக நியமிக்கப்பட்டார். 1989ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜனாதிபதி யாகப் பதவியேற்ற பிரேமதாஸ அவர்களின் ஆட்சியின் கீழ் ஏ.ஜே. ரணசிங்ஹ என்பவர் தகவல்த்துறை அமைச்சராக நியமிக் கப்பட்டார். எல்லோருமே புதியவர்கள். ரூபவாஹினியின் தலை மைப் பொறுப்பையேற்ற வான்படை அதிகாரி ஊடகத்துறைக்கு முற்றிலும் புதியவர். இத்தகைய சூழல் குறுக்குவழிகளில் காரியம் சாதிக்கும் குணமுடையவர்களுக்கு வாய்ப்பாக அமைந்தது. இந் தக் காலகட்டத்தில் என்மீது பல வழிகளிலும் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

நான் அப்போது நாரஹன்பிட்டிய அன்டர்ஸன் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தேன். அந்த வீடு ரூபவாஹினியின் கல்விச்சேவையில் பணியாற்றிக் கொண்டி ருந்த ஒருவரது நண்பரின் வீடு. வீட்டுச் சொந்தக்காரர் அவரது மனைவியுடன் வெளிநாடொன்றில் பணியாற்றிக்கொண்டிருந்தார். ரூபவாஹினியில் பணியாற்றிக்கொண்டிருந்த நண்பர்தான் எனக்கு அந்த வீட்டை 1984ம் ஆண்டில் வாடகைக்குப்பெற உதவினார். 1988 அல்லது 89ம் ஆண்டென்று நினைக்கிறேன், அந்த வீட்டுச் சொந்தக்காரரின் மனைவி திடீரென வெளிநாட்டிலிருந்து வந்து என்னிடம் வீட்டைக் காலிபண்ணச் சொன்னார். ஏனென்று கேட்ட பொழுது, எனக்கும் வீட்டுச் சொந்தக்காரருக்கும் நண்பரான ரூப வாஹினியில் பணிபுரிபவர் அந்த வீட்டிலிருந்து என்னை எழுப் பினால் தான் அதிக வாடகைக்கு ஒரு குடியிருப்பாளரை ஒழுங்கு செய்து தருவேனென்று சொல்லியிருப்பதாக அந்தப் பெண்மணி கூறினார். ரூபவாஹினியில் நான் எதிர்கொள்ளும் வேலைப்பழு மற்றும் பல்வேறு பிரச்சினைகளால் ஏற்படும் அழுத்தத்தின் மத்தி யில் வேறு வீடு தேடி மாறுவது இயலாத காரியமென்று உணர்ந்த நான், எவ்வளவு வாடகை எதிர்பார்க்கிறீர்களென்று அவரைக் கேட்டபோது ஒரு குறிப்பிட்ட வாடகையைச் சொல்லி, சில வருடங் களுக்கான வாடகையை முன்பணமாகத் தரவேண்டுமென்றும் சொன்னார். உடனடியாக அப்போது என்னால் கொடுக்கவியலா தளவு பெருந்தொகைப்பணம். ஆனால் எப்படியோ நண்பர்களிடம் பெற்று, அந்தப்பணத்தைக் கொடுத்து அந்த வீட்டில் தொடர்ந்து வசிக்கத் தீர்மானித்தேன்.

நான் இதற்கு முந்திய கட்டுரையில் குறிப்பிட்டதுபோல், 87ம் ஆண்டு யாழ்ப்பாணச் சம்பவத்தைத் தொடர்ந்து கல்விச்சேவை யைச் சேர்ந்த சிலர் தமிழ்ப்பிரிவைப் பலவீனப்படுத்த முயற்சித்த போது நான் எனது முயற்சியால் அதைத் தடுத்துவிட்டபின்னரே இந்த வீட்டுப் பிரச்சினை ஏற்பட்டது. பணியிடத்துப் பிரச்சினையின் பின்னர் கல்விச்சேவையில் பணியாற்றும், எனக்கு அந்த வீட்டை ஒழுங்குசெய்துதந்த நண்பர் என்னிடம் பேசுவதில்லையென்பதால் நானும் வீட்டுப்பிரச்சினை பற்றி ஒருவார்த்தைகூட அவரிடம் பேச வில்லை. வீட்டுச் சொந்தக்காரப்பெண்மணி சொன்னது உண் மையா அல்லது என்னிடமிருந்து அதிகவாடகை வாங்குவதற்காக எனக்கு வீடெடுக்க உதவிய நண்பரின் பெயரைப் பயன்படுத்தி னாரா என்பது எனக்கு உறுதியாகத் தெரியாது. அந்தச் சம்ப வத்தை எனது மனதிற்குள்ளேயே அடக்கினேன். ஆனால் அந்தச் சம்பவம் அந்தக் காலகட்டத்தில் என்னை மிகவும் பாதித்தது.

1987 ஒக்ரோபரிலிருந்து 1990ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நான் புலமைப்பரிசில்பெற்று நாட்டைவிட்டுப் புறப்படும்வரையான காலம் என் வாழ்நாளிலே மிகவும் மோசமானதொரு காலகட்டம் என்று சொல்வேன். 1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையின் வருகையோடு ஆரம்பித்த ஜே.வி.பீ.யின் கிளர்ச்சி, 1989ம் ஆண்டு நவம்பர் மாதம் அதன் தலைவர் ரோஹண விஜயவீர கொல்லப் பட்டதோடு கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதுவரை மக்கள், குறிப் பாக ஊடகப்பணிபுரிவோர் மிகுந்த உயிர்ப்பயத்துடன் வாழ வேண்டியிருந்தது. 1988ம் ஆண்டு இடம்பெற்ற, நடிகரும் அரசி யல்வாதியுமான விஜய குமாரதுங்க அவர்களின் கொலை, பிரபல ஒலிபரப்பாளரும் நிர்வாகியுமாகிய தேவிஸ் குருகே அவர்களும், பிரபல கவிஞரும் ஒலி, ஒளிபரப்பாளருமான பிரேமகீர்த்தி டி. அல்விஸ் ஆகியோர் 1989ஆண்டில் கொல்லப்பட்டமை, 1990ம் ஆண்டு ஆங்கில மேடைநாடக நடிகர், ஒலி-ஒளிபரப்பாளர், கவி ஞர் றிச்சாட் டி. சொய்சா கொல்லப்பட்டமை போன்ற அனைத் துமே நான் இங்கே குறிப்பிடும் அந்த மூன்று வருடகாலத்தில் இடம்பெற்றன. இந்தக் காலப்பகுதியில், 1989ம் ஆண்டின் நடுப் பகுதியென்று நினைக்கிறேன், ரூபவாஹினி, சுயாதீன தொலைக் காட்சி (I.T.N), இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் ஒலி-ஒளிபரப்பாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் என்று குறிப்பிட்டு ஓர் அச்சிடப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. எனக்கும் சிங்களத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அது அச்சுப்பிரதி (cyclostyle) செய்யப்பட்ட இரண்டு பக்கக் கடிதம். தேசாபிமான மக் கள் ஆயுதப்படைகளின் ஒன்றிணைக்கப்பட்ட கட்டளையிடும் தலைமையகம் என்ற அமைப்பினரால் அனுப்பப்பட்ட எச்சரிக் கைக்கடிதம் அது. அதில் நான் மேலே குறிப்பிட்ட ஊடக நிறு வனங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களும் நிர்வாகிகளும் உடனடியாகத் தமது பணிகளை நிறுத்திக்கொள்ளவேண்டும். மீறு பவர்கள் கொலை செய்யப்படுவார்கள். அவர்களது குடும்பத்தின ரும் தண்டிக்கப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. துண் டுப்பிரசுரம் போன்ற அந்தக் கடிதத்தில் யாருக்கு அனுப்பப்படு கிறதென்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் துண்டுப்பிர-சுரம் அனுப்பப்பட்ட கடிதஉறையில் எனது பெயர், பதவி முதலி யன சிங்களக் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்தது. ரூபவாஹினி யில் யார் யாருக்கெல்லாம் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதென்று தெரியவில்லை. ஏனெனில் யாருமே அதுபற்றிப் பேசவில்லை. அப்போது எனக்கிருந்த எதிர்ப்பாளர்கள் விஷமத்தனமாக எனக்கு மாத்திரம்தான் அதை அனுப்பி வைத்தார்களோ என்று எண்ணத் தோன்றியது. காரணம், காலை வேலைக்குச் சென்றிருந்தபோது எனது மேசையில் வைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதம் சற்று வித்தி யாசமாகப்பட்டது. ஏனெனில், நாம் சாதாரணமாகப் பாவிக்கும்

11x81/2 அங்குலத் தாளின் இருபக்கங்களிலும் அச்சடிக்கப்பட்ட கடிதத்தை சிறிய அளவில் பல தடவைகள் மடித்து ஒரு சிறிய உறையில் வைத்து அழகற்ற கையெழுத்தில் சிங்களத்தில் விலாசமிடப்பட்டு எனக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதே காலப்பகுதியில் தொலைபேசியிலும் சிங்களத்தில் மிரட்டல்கள் வந்தன. குறிப்பாக, இந்தியத் திரைப்படங்கள் ஒளிபரப்பப்படக்கூடாது என்ற மிரட்டல்களாகவே அவை இருந்தன. நான் எவரிடமும் அவைபற்றிப் பேசவில்லை. காரணம், ரூபவாஹினியில் நான் இருக்கக்கூடாதென்று கருதும் யாரேனும் நாடு அப்போதிருந்த நிலையைப் பயன்படுத்தி இப்படியான மிரட்டல்களைச் செய்து, நான் அவற்றுக்குப் பயந்துவிட்டதாக வெளிக்காட்டினால் அந்த விஷமிகள் மேலும் மேலும் அத்தகைய செயல்களைச் செய்துகொண்டிருப்பார்கள். எனவே, எதுவுமே நடக்காததுபோல் மௌனமாக இருப்பதே சிறந்ததென்று கருதி நான் இவைபற்றி எவரிடமும் பேசவில்லை. ஆனால் உயர்பதவிகளிலிருந்த சிலர் பணிக்கு வராமல்விடவே அவர்களும் அத்தகைய கடிதத்தையும் எச்சரிக்கைகளையும் பெற்றிருக்கலாமென்று நினைத்தேன். அவை எனக்கும் அச்சத்தை ஏற்படுத்தியிருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் எனது பணிகளைத் தொடர்ந்தேன். ஒரு கட்டத்தில் ரூபவாஹினியின் மேல்நிலை உத்தியோகத்தர்கள் முற்றாக வேலைக்கு வராமல் நின்றுவிட்டார்கள். பொதுநிகழ்ச்சிகள் பிரிவில் இயக்குனராக இருந்த பியசிறி குணரட்ண பணியைக் கைவிட்டுச் சென்றுவிடவே கல்விச்சேவையில் உதவி இயக்குனராகப் பணியாற்றிக் கொண்டிருந்த பியதாச ரட்ணசிங்ஹ பொது நிகழ்ச்சிகளுக்கான இயக்குனராக மாற்றப்பட்டார். பியதாஸ ரட்ணசிங்ஹ இரவுபகல் பாராது ரூபவாஹினியி-லேயே தங்கியிருந்து சிலநாட்கள் பணியாற்றிக் கொண்டிருந்தபோது மார்புவலி ஏற்பட்டு நாரஹன்பிட்டிய ஆசிரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அத்தகைய இக்கட்டான, அச்சம் சூழ்ந்த காலத்தில் நான் மிகவும் அவதானமாக நடந்துகொண்டேன்.

அத்தகைய பிரச்சினைகளை அப்போது பொதுவாக ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கினார்கள். ஆனால் அத்தகைய உக்கிரமான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நம்மவர்கள் எனக்கெதிரான தமது நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். திடீரென ரூபவாஹினித் தமிழ்நிகழ்ச்சிகள் தரக்குறைவானவையாக இருக்கின்றன. குறிப்பாக, கர்நாடகசங்கீத நிகழ்ச்சிகளில் கீர்த்தனைகள், இராகங்களின் பெயர்கள் பிழையாகக் காட்டப்படுகின்றன என்ற புகார்கள் தந்திகள் மூலம் தகவல்த்துறை அமைச்சர், ரூபவாஹினியின் தகுதிவாய்ந்த அதிகாரி ஆகியோருக்கு அனுப்பப்பட்டன. மேலிடத்திலிருந்து விளக்கம்கேட்டு அந்தத் தந்திகள் எனக்கு அனுப்பப்பட்டுக்கொண்டேயிருந்தன.

நான் சிறுவயதிலிருந்தே கர்நாடகஇசைக்கு நன்கு பரிச்சயமானவன். இதுபற்றி இந்தக் கட்டுரைத்தொடரின் ஆரம்பத்தில் எனது இளமைப்பருவம் பற்றி எழுதுகையில் குறிப்பிட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் பத்து வருடங்களுக்கு மேலாகத் தேசியசேவை அறிவிப்பாளராகப் பணியாற்றி பலநூற்றுக்கணக்கான கர்நாடக இசை நிகழ்ச்சிகளில் கீர்த்தனைகளின் பெயர், இராகம், தாளம் போன்றவற்றை அறிவித்திருப்பதோடு ஒலிப்பதிவாளராகவும் நூற்றுக்கணக்கான கர்நாடக இசை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்திருக்கிறேன். அறிவிப்பாளர்களுக்கான பயிற்சியின்போது கர்நாடக இசை நிகழ்ச்சிகளில் எவ்வாறு அறிவிப்புச் செய்யவேண்டுமென்பது பற்றிப் பயிற்றுவிக்கப்பட்டது. 72 மேளகர்த்தா இராகங்கள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு, அவற்றை எவ்வாறு உச்சரிக்கவேண்டுமென்று அப்போது இசைப்பிரிவுக்குப் பொறுப்பாகவிருந்த பாலசுப்ரமணிய ஐயர், திருமதி. சரஸ்வதி குமாரசிங்கம் போன்றோர் எமக்குச் சொல்லித்தந்து பயிற்றுவித்தார்கள். சரஸ்வதி குமாரசிங்கம் அவர்கள் பல இராகங்களின் ஆரோகண, அவரோகணங்களைப் பாடிக்காட்டியே விளக்குவார். எனவே கர்நாடகசங்கீதம் எனக்கு அன்னியமானதல்ல. இவையெல்லாம் அந்தத் தந்திகளை அனுப்புவதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து செயற்பட்டவர்களுக்குத் தெரியாமல் இல்லை. பல்வேறு பெயர்களிலோ அல்லது பலரைக்கொண்டோ தந்திகளை அனுப்பிக்கொண்டிருந்தவர் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை இசைப்பிரிவில் பணியாற்றும் ஒரு பெண்மணியென்பதை என்னால் ஊகிக்கமுடிந்தது.

நான் ஏற்கனவே எனது கட்டுரைத்தொடரில் குறிப்பிட்டதை இங்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மூன்று வகையானவர்கள் பணிபுரிந்தார்கள். முதலாவதுவகையென்று நான் குறிப்பிடக்கூடியவர்கள், மிகத்திறமைசாலிகள். கடுமையாக உழைக்கக்கூடியவர்கள். இவர்களால்தான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்மக்களிடையே புகழடைந்தது. இவர்களே தமிழ் ஒலிபரப்பின் அடையாளமாக மக்களால் கொண்டாடப்பட்டார்கள். அந்தப் புகழ்வெளிச்சத்தினால்தான் அங்கு பணியாற்றிய ஏனையவர்களும் கௌரவம் பெற்றார்கள். இரண்டாவது வகையினர், தாமுண்டு தமது வேலையுண்டென்று மற்றையவர்களுக்கு இடையூறெதுவும் செய்யாது பணியாற்றியவர்கள். மூன்றாவது வகையினர்கள் மிகுந்த ஆபத்தானவர்கள். குறைந்த திறமையும் பெருமளவு ஆசையும் கொண்டவர்கள். பதவிகளைப் பெறுவதற்காக எதையும் செய்யத் துணிபவர்கள். தமது வாழ்நாளைக் கோள் சொல்வதிலும் அனாமதேயக் கடிதங்கள்மூலம் புகார்செய்வதிலும் குறுக்குவழிகளில் பதவிகளைப் பெறுவதிலும் செலவிடுபவர்கள். இந்த மூன்று வகையினரும் எந்தத் துறைகளிலும் அல்லது எந்த நிறுவனங்களிலும் இருப்பார்கள். என்றாலும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இத்தகையவர்களது நடவடிக்கைகளின் பெறுபேறுகள் மிக வெளிப்படையாகவே தெரிந்தன.

இலங்கையில் தொலைக்காட்சி ஆரம்பிக்கப்பட்டபோது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பலரும் ஒளிபரப்புத்துறை பற்றி எதுவுமே அறியாதவர்களாக இருந்தார்கள். சிலர் தமது திறமையைக்கொண்டு, துணிந்துசென்று, வெளிநாட்டு விற்பன்னர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சிபெற்றுத் தமது கடுமையான உழைப்பின்மூலம் ஒளிபரப்புத்துறையைக் கட்டியெழுப்பிக் கொண்டுவரும் வேளையில், இதுவரை நிலைமைகளை அவதானித்துக்கொண்டு சந்தர்ப்பம் பார்த்துக் காத்திருந்தவர்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கினார்கள். ரூபவாஹினியில் இப்போது தொழில்தெரிந்த தொழில்நுட்பவியலாளர்கள் இருக்கிறார்கள், தாம் அங்கு சென்றால் நிர்வாகப் பதவிகளிலிருந்துகொண்டு மேற்பார்வைசெய்தே காலத்தைக்கழிக்கலாம், பதவியைத் துஷ்பிரயோகம்செய்து தம்மை வளர்த்துக்கொள்ளலாமென்று கணக்குப் போட்டு செயற்படத் தொடங்கிவிட்டார்கள். அத்தகையதொரு செயலே எனக்கெதிராக அனுப்பப்பட்ட தந்திகள். ஆனால் ரூபவாஹினியில் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைப்போல வெறும் நிர்வாகம் மட்டுமே செய்துகொண்டு பதவிகளிலிருக்கும் நிலை இருக்கவில்லை. அத்தகைய நிர்வாகக் கட்டமைப்போடும் ஆட்பலத்தோடும் ரூபவாஹினி ஆரம்பிக்கப்படவில்லை. அங்கு ஒவ்வொரு நிகழ்ச்சிப்பிரிவின் (unit) தலைவர்களும் நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்கள். திருமதி. ஞானம் இரத்தினம் அவர்களுக்குப் பின்னர் நிகழ்ச்சிப்பிரிவின் இயக்குனராகப் பதவியேற்ற பியசிறி குணரட்ண, அவரைதொடர்ந்து பதவியேற்ற பியதாஸ ரட்ணசிங்ஹ ஆகியோரும் நிகழ்ச்சிகளைத் தயாரித்தார்கள். ரூபவாஹினிக்குக் கடுமையாக உழைக்கக்கூடியவர்களே அப்போது தேவைப்பட்டார்கள்.

ஆனால் 80களின் பிற்பகுதியில் உக்கிரமடைந்த போர்ச்சூழல், ஜே.வீ.பி. கிளர்ச்சி, ஜனாதிபதி மாற்றம் என்பன நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தியமையால் ரூபவாஹினியிலும் அதன் தாக்கம் பிரதிபலித்தது. பிரேமதாஸ அவர்களின் விசுவாசியான ஏ.ஜே. ரணசிங்ஹ அவர்கள் தகவல்த்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டமை, ஊடகத்துறைக்கு முன்பின் அறிமுகமற்ற வான்படை அதிகாரி பொறுப்புவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டமை போன்ற வலுவற்ற சூழல் பதவிகளை மட்டுமே குறியாகக்கொண்ட எம்மவர்களுக்கும் வாய்ப்பாகப் போய்விட்டது.

ரூபவாஹினித் தமிழ்நிகழ்ச்சிகள் பற்றிய புகார்க்கடிதங்களும் தந்திகளும் பல திசைகளிலிருந்தும் அனுப்பப்பட்டதும் தகவல்த்துறை அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்ஹ அவர்கள் 1990ம் ஆண்டு,

பெப்ரவரி மாதம் 19ம் திகதி தமிழ்நிகழ்ச்சிகள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்திற்கு இந்துக் கலாச்சார அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்கள், முஸ்லிம்



The above meeting was held on 19.02.1990 in Sri Lanka Rupavahini Corporation Board Room.

| | | |
|---|---|---|
| Those Present : | Hon A J Ranasinghe | - Minister of State for Information |
| | Hon P P Devaraj | - Minister of State for Hindu Cul Affairs |
| | Hon Jabeer A Cader | - Minister of State for Muslim Cul Affairs |
| | Mr Sumanasekera Banda | - Sec. Ministry of State for Information |
| | Mr Jameel | - Sec. Ministry of Muslim Cul Affairs |
| | Mr Nahiya | - Director Tamil Affairs,Hindu Cul Affairs Ministry |
| | Mr B Thirunavakarasu | - Private Sec.,Ministry of Textile & Rural Development |
| | Dr A Kandiah | - Snr Lecturer Open University |
| | Dr M A M Shukri | - Director/NaleemiyaInstitute of Islamic Stud |
| | Mr S T Sivanayagam | - Chief Editor Dinapathy/Chinthamani |
| | Mr A P Samarakoon | - Competent Authority, SLBC |
| | Mr Gamini Pedris | - Consultant, SLBC |
| | Mr A M Ubaidulla | - Dy Director General(Admin) SLBC |
| | Mr P Samaranayake | - Dy Director General(Commercial) SLBC |
| | Mr P Ratnasinghe | - Director/General Programmes SLBC |
| | Mr S Balasubramanian | - Dy Director/News, SLBC |
| | Mr P Vikneswaran | - Asst Director/Tamil Programmes SLBC |

Tamil Producers and Tamil Production Assistants, SLBC, and Controller Music, SLBC

**1990ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற தமிழ்நிகழ்ச்சிகள் பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பட்டியல்**

கலாச்சார அமைச்சர் ஜபீர் ஏ. காதர் அவர்கள், தகவல்த்துறை, இந்துக்கலாச்சார, முஸ்லிம் கலாச்சார அமைச்சுகளின் செயலாளர்கள், அமைச்சர் தொண்டமான் அவர்களின் பிரத்தியேகச் செயலாளர் வீ. திருநாவுக்கரசு அவர்கள், கலாநிதி. கந்தையா அவர்கள், தினபதி - சிந்தாமணி ஆசிரியர் எஸ்.ரீ. சிவநாயகம் அவர்கள், மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட அதிகாரிகள், தமிழ்ப்பிரிவின் சகல உத்தியோகத்தர்கள் அனைவருடனும் தமிழ் நிகழ்ச்சிகள் தரமற்றவையென்று புகார் செய்திருந்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் பெண் மணியும் அழைக்கப்பட்டிருந்தார். இந்தக் கூட்டம் ஒரு திங்கட் கிழமை காலை இடம்பெற்றது. அதற்கு முந்திய வெள்ளிக்கிழமை மாலையே ரூபவாஹினியின் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பாகத் திங்கட்கிழமை தொடக்கம் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் இசைப்பகுதியைச் சேர்ந்த பெண்மணி பதவியேற்கிறாரென்று பலரும் பேசத் தொடங்கிவிட்டார்கள். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் திலிருந்து சிலர் தொலைபேசியில் தொடர்புகொண்டு என்னைக் கேட்டார்கள். ரூபவாஹினியில் எனக்கெதிராகச் செயற்பட்டவர்கள் மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டார்கள். என்னைத் தொலைபேசியில் விசாரித்தவர்களிடம் எனக்கு எதுவுமே தெரியாதென்று சொன்னேன். நான் வெள்ளிக்கிழமை வேலை முடிந்து வீடு செல்வதற்காக ரூபவாஹினியை விட்டு வெளியே வந்தபோது எதிரே ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து வந்த தமிழ்ப் பெண் உத்தியோகத்தர் என்னிடம் பரபரப்பாக ஓடிவந்து, தான் கேள்விப்படுபவையெல்லாம் உண்மையா? என்று கவலையாக விசாரித்தார். அவரிடமும் எனக்கு எதுவுமே தெரியாதென்று கூறி வீடு சென்றேன்.

குறிப்பிட்ட தினத்தில் கூட்டம் ஆரம்பமாகியது. கூட்டத்தை ஆரம்பித்த அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்க அவர்கள், ரூபவாஹினித் தமிழ் நிகழ்ச்சிகள் தரமற்றவையென்று தனக்குக்கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தமாக இந்தக் கூட்டம் கூட்டப்படுகிறதென்று கூறி, வந்திருந்தவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்கத் தொடங்கினார். முதலில் பேசத்தொடங்கிய இந்துக் கலாச்சார அமைச்சர் பி.பி. தேவராஜ் தொடக்கம் அனைவரும் தரத்தைப்பற்றிப் பேசாது, தமிழ்நிகழ்ச்சிகள் போதாதென்றும் தமிழ்நிகழ்ச்சிகள் தயாரிப்பதிலுள்ள கஷ்டங்கள் பற்றியும் பேசினார்கள். குறிப்பாக, அமைச்சர் தொண்டமான் அவர்களின் பிரத்தியேகச் செயலாளர் திருநாவுக்கரசு அவர்கள், நாடு இருக்கும் நிலையில் தமிழ்ப்பிரிவில் பணியாற்றுபவர்கள் மிகக்கடினமான பணியை மேற்கொள்கிறார்கள், அவர்கள் பாராட்டப்படவேண்டியவர்கள் என்று பேசினார். இவற்றைக் கேட்ட ஏ.ஜே. ரணசிங்ஹ அவர்களுக்குத் தனக்குக் கிடைத்த புகார்க்கடிதங்கள் வலுவற்றவையென்று தெரிந்துவிட்டது. உடனே தனக்கு அவசர வேலை இருப்பதாகவும் முஸ்லிம் விவகார அமைச்சர் ஜபீர் ஏ. காதர் அவர்களைக் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறும் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அந்தக் கூட்டத்தில் தினபதி - சிந்தாமணி ஆசிரியர் எஸ்.ரீ. சிவநாயகம் அவர்கள் பேசிய பேச்சு, எவரையும் தமிழ்நிகழ்ச்சிகளின் தரம் பற்றிப் பேசமுடியாதவாறு செய்துவிட்டது. அதைச் சுருக்கமாக இங்கே தருகிறேன். அந்தக் கூட்டத்தின் ஆங்கில அறிக்கை முழுவதுமாக எனது நூலில் பிரசுரிக்கப்படும்.

எஸ்.ரீ. சிவநாயகம் அவர்கள் பேசியதன் சுருக்கம்:

'தினபதி, சிந்தாமணிப் பத்திரிகைகள் நாட்டில் மிக அதிகமானவர்களால் வாசிக்கப்படும் தமிழ்ப் பத்திரிகைகள். சிந்தாமணிப் பத்திரிகையில் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனங்களுக்கு முழுப்பக்கம் ஒதுக்கப்படுகிறது. அவற்றைப் படித்து நாட்டின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து அதிக எண்ணிக்கையான வாசகர்கள் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறார்கள். அவற்றின் அடிப்படையிலும் எனது சொந்த அபிப்பிராயத்தின்படியும் தமிழ் நிகழ்ச்சிகளின் தரம் பொதுவாக நன்றாக இருக்கிறது. இசை, சிறுவர் நிகழ்ச்சிகள், மற்றும் உரை நிகழ்ச்சிகள் உயர்ந்த தரத்தில் இருக்கின்றன. ஆனால் தமிழ் நாடகங்களின் தரம் சிங்கள நாடகங்களின் தரத்திற்கு ஈடாக இல்லை. மிகவும் தரம்வாய்ந்த சிங்கள மேடைநாடகத்துறை இருப்பதால் வேண்டிய திறமைகளை அங்கிருந்து பெறக்கூடியதாக இருக்கிறது. ஆனால் தமிழில் அப்படியில்லை. சில தமிழ்த் தொலைக் காட்சி நாடகங்கள் நல்ல தரமானவையாக இருக்கின்றன. நான் இந்தியாவுக்குச் சென்றபோது ஒரு பத்திரிகை ஆசிரியருடன் சேர்ந்து தமிழ்நாடகமொன்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் மிகவும் உயர்ந்த தரத்திலான நாடகம் என்று அதைப் பாராட்டினார்.'

இப்படிக் கூறிய எஸ்.ரீ. சிவநாயகம் அவர்கள் மேலும் பல ஆலோசனைகளை வழங்கினார். அவரது பேச்சைக் கேட்டதன் பின்னர் மேற்கொண்டு எவராலும் எதுவும் பேச முடியவில்லை. புகாரளித்த பெண்மணி ஏமாற்றமடைந்தவராக ரூபவாஹினித் தமிழ்ப்பிரிவின் உத்தியோகத்தர்கள் தெரிவு முறைப்படி நடைபெறவில்லையென்று குற்றம் சாட்டினார். அந்தக் குற்றச்சாட்டு அங்கிருந்த ரூபவாஹினி நிர்வாகிகளைக் குறிப்பாக, நிர்வாகப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப்பணிப்பாளர் நாயகம் ஒபயதுல்லா அவர்களை மிகுந்த சினம்கொள்ளச் செய்தது. அதன் பின்னர் அந்தக் கூட்டத்தில் பொதுவாகத் தமிழ்நிகழ்ச்சிகள் பற்றியும் தமிழ்நிகழ்ச்சிகளுக்கு அதிக ஒளிபரப்பு நேரம் வேண்டும் என்பது பற்றியும் பேசினார்கள். அந்தக் கூட்டத்தின் தொடர்ச்சியாக ஒரு கூட்டம் நடத்தப்படவேண்டுமென்ற பி.பி. தேவராஜ் அவர்களின் வேண்டுகோளுக்கமைய அடுத்த கூட்டத்தைத் தகவல்த்துறை அமைச்சருக்கு வசதிப்பட்டால் மார்ச் மாதம் 20ம் திகதி நடத்துவதென்ற தீர்மானத்துடன் அன்றைய கூட்டம் முடிவடைந்தது. தீர்மானித்தவாறு 1990ம் ஆண்டு, மார்ச்மாதம் 20ம் திகதி அந்தக் கூட்டம் இடம்பெற்றது. அதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பெண்மணி அழைக்கப்படவில்லை.

உண்மையில் அந்தப் பெண்மணி எனக்குப் பெரிய உதவி செய்தாரென்றே நான் கருதுகிறேன். ரூபவாஹினியின் ஆரம்பத்திலிருந்து என்னை நன்கு அறிந்துவைத்திருந்த அதிகாரிகள் பதவிகளிலிருந்து விலகிச்சென்றுவிட அங்கு ஏற்பட்ட புதிய சூழலில் பதவியேற்ற தகுதிவாய்ந்த அதிகாரி சமரக்கோன் அவர்களுக்கு நான் தமிழ் நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பானவன் என்பதைத் தவிர வேறு எதுவுமே என்னைப்பற்றித் தெரிந்திருக்காத நிலையில், நான் கடுமையாக உழைப்பவன், சகல தமிழ் அமைச்சர்களும் பத்திரிகையாளர்களும் என்மீது நல்ல அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையை அவருக்கு மாத்திரமல்ல, தகவல்த் துறை அமைச்சர் ஏ.ஜே. ரணசிங்ஹ அவர்களுக்கும் தெரியவைப்பதற்காகவே அந்தக் கூட்டம் இடம்பெற்றதுபோல் அமைந்துவிட்டது. அதுமட்டுமல்ல, அது மேலும் ஒரு தாக்குதலிலிருந்து என்னைக் காப்பாற்றியது.

1990களின் முற்பகுதியில் இலங்கைமன்றக் கல்லூரியில் நடைபெற்ற பத்திரிகையாளர் பயிற்சி ஒன்றில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ரூபன் என்னும் பத்திரிகையாளர் கலந்துகொண்டார். அவ

ருக்கு ரூபவாஹினித் தமிழ்நிகழ்ச்சிகள் பற்றி நான் வழங்கிய நேர் காணல் 1990ம் ஆண்டு ஜுன் மாதம் 1ம் திகதி அப்போது யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்த ஈழநாதம் பத்திரிகை யின் எட்டாம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஏழாம் பக்கத் தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் அப்போது முக்கிய பொறுப்புவகித்த மாத்தையா அவர்களின் நேர்காணல் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அவர் விடுதலைப்புலிகளின் இராணுவ உடையில் காட்சியளித்தார். இதைப்பார்த்த நம்மவர்களில் யாரோ, புலிகளின் பத்திரிகையில் எனது நேர்காணல் வெளியாகியிருக்கிறது. இவர் புலிகளின் ஆதரவாளர் என்று தகவல் அமைச்சுக்கு கடிதமெழுதி யதோடு, எனதும் மாத்தையா அவர்களினதும் செவ்விகள் பிரசுரிக் கப்பட்ட பத்திரிகையின் பக்கங்களையும் சேர்த்து அனுப்பிவிட்டார் கள். பத்திரிகையின் பெயர் ஈழநாதம். மாத்தையா அவர்களின் நேர்காணல் இடம்பெற்ற அதே தாளின் மறுபக்கத்தில் எனது நேர்காணல். இது நானும் ஒரு புலி என்பதை நிரூபிக்கப் போது மானதென்று முறைப்பாடு செய்தவர்கள் நினைத்திருக்கலாம். மேலும் 87ம் ஆண்டு என்னுடன் யாழ்ப்பாணம் வந்த சிங்கள உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டபோது நான்தான் அவர்களைப் புலிகளிடம் ஒப்படைத்தேனென்று வதந்தி பரப்பி என்னை எப்படி யாவது ஒழித்துவிடவேண்டுமென்று கங்கணம்கட்டி உழைத்தவர் கள், நான் உண்மையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவன்தான் என்பதை இதன்மூலம் சுலபமாக நிரூபித்துவிடலா மென்று நினைத்தார்கள்.

நான் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட நினைத்தால் நேரடியாகச் சென்று அந்த அமைப்பில் இணைந்து செயற்படுவேனேயன்றி இப்படி ஒரு இடத்தில் பணியாற்றிக்கொண்டு இரட்டைவேடமிட்டு, வஞ்சகத்தனமாக நடந்துகொள்ளமாட்டேனென்பது, என்னைப்பற் றிப் புகார்செய்த ஒலி, ஒளிபரப்பு வட்டாரத்தைச் சேர்ந்தவர் களுக்கு நன்கு தெரியும். ஆனால் அவர்கள் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த எத்தனித்தார்கள். இதைச் செய் தவர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஒருவரென்று என்னிடம் சிலர் சொன்னார்கள். அவர் அவ்வாறான காரியங்க ளைச் செய்யக்கூடியவரென்று தெரிந்திருந்தாலும் அது ஆதார மற்ற ஊகமென்பதால் நான் அதைப் பெரிதுபடுத்தவில்லை.

இந்தப் புகார்க்கடிதத்தை அனுப்பியவர்கள் எதிர்பார்த்த எந்த விளைவும் எனக்கு ஏற்படவில்லை. அதற்கு சில மாதங்களுக்கு முன்னர்தான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பெண்மணி என்னைப் பற்றிப் புகார்கூறி, அது பொய்யானதென்று நிரூபிக்கப்பட்டதால் இதுவும் அதுபோன்றதொரு முயற்சிதானென்று ரூபவாஹினி மேலி டத்திற்குத் தெரிந்திருந்தது. அவர்கள் அந்தப்புகாரை அலட்சியம் செய்துவிட்டார்கள். மேலும், ரூபவாஹினி அப்போதிருந்த நிலை யில் இதுபோன்ற அற்பவிடயங்களைக் கவனத்தில் எடுத்திருக்க மாட்டார்களென்றே எனக்குத் தோன்றுகிறது. இதனால்த்தான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பெண்மணி வருட ஆரம் பத்தில் செய்த புகார் என்னைப் பலப்படுத்தியதோடு மேலும் ஒரு சதிமுயற்சியை முறியடிக்க உதவியதென்று சொன்னேன்.

1987ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 1990ம் ஆண்டு செப்ரெம்பர் வரை பலவித இடையூறுகள், மனச்சஞ்சலங்கள் ஏற்பட்டபோதும் என் பணிகளைச் செய்வதில் நான் பின்னிற்கவில்லை. இந்தக் காலகட்டத்தில் நான் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்ததோடு, தமிழ்ப் பிரிவில் சேர்த்துக்கொள்ளபட்ட தயாரிப்பு உதவியாளர்களைக் கொண்டும் பல புதிய நிகழ்ச்சிகளைத் தயாரித்தேன். நான் நேரடி யாகத் தயாரித்தவற்றில் 'ஒரு நீண்ட கனவு' என்ற அரைமணித்தி யாலத் தொலைக்காட்சி நாடகமும் மலையோரம் வீசும் காற்று தொடர்நாடகமும் மிக முக்கியமானவை. ஒரு நீண்ட கனவு நாட கம் பரீட்சார்த்த முயற்சியாக அமைந்தது. அது சிந்தாமணிப் பத்திரிகையில் மோசமாக விமர்சிக்கப்பட்டிருந்தாலும் பார்வை யாளர்களிடையே மிகவும் வரவேற்பைப்பெற்றது. சிந்தாமணியில் வெளிவந்த இந்த நாடக விமர்சனத்தைத் தொடர்ந்து அந்தப் பத்திரிகைக்கு நான் எழுதிய அந்த நாடகம் பற்றிய விளக்கத்தால் ஒரு நீண்ட கனவு நாடகத்தை விரும்பிய இரசிகர்கள் அதிக மானார்கள். ரூபவாஹினியில் நான் பணியாற்றிய காலத்தில் தமிழ் நிகழ்ச்சிகள் பற்றி வந்த விமர்சனங்களை ஒரு கோப்பாக (file) இப்போதும் வைத்திருக்கிறேன்.

மிகவும் அதிகமான வேலைப்பழுவும் பிரச்சினைகள் அதைவிடக் கூடியதுமான இந்தக் காலகட்டத்தில் அவற்றுக்கு மத்தியிலும் நான் ஆற்றிய பணிகளை இப்போது நினைத்துப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது. புதிய மாகாணசபைகளுக்கான தேர்தல் இடம்பெற்றபோது ரூபவாஹினியில் தமிழ் வேட்பாளர்களால் மேற் கொள்ளப்பட்ட பிரச்சார உரைகளில் தேர்தல் திணைக்களத்தின் விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கவனிக்கும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டது. கண்டிப் பெரஹர, மஹியங்கனவில் நடைபெற்ற கம்உதாவ, ஜே.வீ.பி.யின் அச்சுறுத் தல்கள் மிகுந்திருந்த காலத்தில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்- தன அவர்கள் பங்குபற்றிய நிகழ்வொன்றின் நேர்முகவர்ணனை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சி மகாவலித்திட்ட நீர்த்தேக்கமொன்றின் திறப்புவிழாவா அல்லது இலவசப் பாடநூல் வழங்கும் நிகழ்ச் சியா என்பது நினைவில் இல்லை. அந்த நிகழ்ச்சிக்கு விசேட அதிரடிப்படையினரின்(S.T.F) பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டோம். ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் 1989ம் ஆண்டு, ஜனவரி 2ம் திகதி தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தில் வைத்து ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்து கொண்ட நிகழ்ச்சியை நேர்முகவர்ணனை செய்தது ஒரு முக்கிய மான நிகழ்ச்சி. அத்தோடு இலங்கைத் தொலைக்காட்சிப் பயிற்சி நிலையம் (S.L.T.T.I) மற்றும் இலங்கைமன்றக் கல்லூரி ஆகிய வற்றில் அவ்வப்போது நடைபெறும் தொலைக்காட்சி பற்றிய கருத்தரங்குகளிலும் பயிற்சி வகுப்புகளிலும் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றுவதையும் மிகவிரும்பிச் செய்து கொண்டிருந்தேன். இவ்வாறு பல நிகழ்ச்சிகளைச் செய்துகொண்டு, எம்மவர்களால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளுக்கும் முகம்கொடுத் துக்கொண்டு பணியாற்றிய அந்தக் காலகட்டத்தில் எனக்கு சில நல்ல நிகழ்வுகளும் நடந்தன.

மலேஷியாவைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் AIBD நிறுவனமும் அவுஸ்திரேலியா டார்வின் நகரிலிருந்து இயங்கும் வடபிராந்தியப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய 1990ம் ஆண்டின் ஒலிபரப்புப் பயிற்சிக்கான சான்றிதழ் (Certificate in Broadcast Training)என்ற கற்கைநெறியில் சேர்ந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த ஒருவருடக் கற்கைநெறியை நிறைவு செய்தால் தொடர்ந்து ஊடகத்துறையில் B.A அல்லது B.Ed பட்டம்பெறும் வாய்ப்பைப் பெறலாம். இதில் சேர்வதற்கான விண்ணப்பம் 1989ம் ஆண்டு ஜுலையில் கோரப்பட்டது. அதில் தெரிவுசெய்யப்படும் ஒருவருக்கான படிப்புச் செலவை ரூபவா ஹினி ஏற்றுக்கொள்ளுமென்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதில் நான் தெரிவாகியபோதும் நிர்வாக மாற்றங்களில் ஏற்பட்ட குழப் பம் காரணமாக அந்த விடயத்தில் சரியானபடி கவனம் செலுத்தப் படாமையால் அந்த வாய்ப்பு எனக்குக் கைகூடவில்லை.

இங்கிலாந்தின் கொமன்வெல்த் றிலேஷன்ஸ் ட்ரஸ்ட் (The Commonwealth Relations Trust) என்னும் அமைப்பு வழங்கும், ஊடகவி யலாளர்கள் மிகப்பெருமையாகக் கருதும் புலமைப்பரிசில் 1988ம் ஆண்டு எனக்குக் கிடைத்தபோதும் 1987ம் ஆண்டு இடம்பெற்ற யாழ்ப்பாணச் சம்பவத்தால் அந்த வாய்ப்பு என்னிடமிருந்து மீளப் பெறப்பட்டது. ஆனால் 1990ம் ஆண்டு அவ்வளவு பிரச்சினை களுக்கு மத்தியிலும் ஜேர்மனிய சமஷ்டிக்குடியரசு வழங்கும் அதி- உயர் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் தொலைக்காட்சி நாடகப் பிரதி எழுதும் பயிற்சிக்கு நான் தெரிவானேன். நாடகம் எனது


*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

*E-mail: info@thaiveedu.com* *Fax: 1-416-849-0594* *Tel: 1-416-857-6406*

துறை. சினிமாவில் நான் மிகவும் ஆர்வம்கொண்டிருந்த போதிலும் இலங்கையில் அது சாத்தியமில்லையென்ற யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு அதன்மீது அதிக அக்கறை காட்டாது இருந்த எனக்குத் தொலைக்காட்சியில் நாடகங்கள் தயாரிக்கக்கூடிய தொழில் கிடைத்தமை ஓர் அரிய வாய்ப்பு. அந்த வாய்ப்பைச் சரியானபடி பயன்படுத்துவதற்கு எனது ஆற்றலை விருத்திசெய்து கொள்ள அந்தப் புலமைப்பரிசில் எனக்குப் பேருதவியாக இருக்குமென்ற பெருமகிழ்ச்சியில் எனக்குத் தொழில்ரீதியாக ஏற்படும் இடையூறுகளையும் மன அழுத்தங்களையும் மறந்திருந்தவேளை-யில் நான் எனது தொழில்வாழ்க்கையில் அதுவரை சிந்தித்திருக்காத முடிவை எடுக்கத்தூண்டிய சம்பவம் நிகழ்ந்தது.

1990ம் ஆண்டு, ஜுன்மாதம் நான் விடுமுறையில் எனது பெற்றோரிடம் காங்கேசன்துறைக்குக் குடும்பத்துடன் சென்றிருந்தேன். அங்கு நான் தங்கியிருந்தபோது ஜுன் 3ம் திகதி காலை எனது தாய் மாமன்மார்களில் ஒருவர் ரூபவாஹினியின் தமிழ்ப்பிரிவைப் பற்றிய செய்தி தலைப்புச் செய்தியாக ஒரு பத்திரிகையில் வெளிவந்திருப்பதாகப் பதட்டத்துடன் வந்து சொன்னார். எனது தகப்பனார்



சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம்

உடனடியாகச் சென்று பத்திரிகையை வாங்கிவந்தபோது, அந்தத் தலைப்புச்செய்தி என்னை மிகுந்த குழப்பத்துக்குள்ளாக்கியது. அதில் ரூபவாஹினிச் செய்திப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் தமிழ்நிகழ்ச்சிப் பிரிவுக்குப் பொறுப்பான இயக்குனராக மாற்றப்பட்டிருப்பதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது. நான் இரண்டு நாட்களுக்கு முன்னர் கொழும்பைவிட்டுப் புறப்படும்வரை நான்தான் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பான இயக்குனராக இருந்தேன். நான் அங்கு இல்லாதவேளை-யில் திடீரென எப்படி இது நடந்ததென்று என்னால் சிந்திக்கமுடியவில்லை.

சுயாதீன தொலைக்காட்சி(I.T.N) அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இயங்கத் தொடங்கியபோது அதன் செய்திமஞ்சரி நிகழ்ச்சி தயாரிக்க ஆரம்பிக்கப்பட்ட சிறிதுகாலத்திலேயே தமிழில் அதைத் தயாரிப்பதற்கு உதவிபுரியத் தொடங்கிப் பின்னர் ரூபவாஹினி ஆரம்பிக்கப்பட்டதும் அதன் செய்திப்பிரிவில் பணியாற்றியவர் சில்வெஸ்டர் பால-சுப்ரமணியம். அவர் எவ்வாறு தமிழ்நிகழ்ச்சிப் பிரிவுக்குப் பொறுப்பானவராக மாற்றப்பட்டார் என்ற குழப்பத்துடன் நான் குடும்பத்தினரை ஊரில் விட்டுவிட்டு அன்று மாலை தபால்தொடரூந்து வண்டியில் கொழும்புக்குப் பயணமானேன்.

பயணம் முழுவதும் என்ன நடந்திருக்கும்? யார் இதைச் செய்திருப்பார்கள்? என்பது போன்ற பல கேள்விகள் என்னுள் எழுந்தன. ரூபவாஹினியின் செய்தித் தயாரிப்பாளராக செய்திப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் சில மாதங்களுக்கு முன்னர்தான் செய்திப்பிரிவின் பிரதிஇயக்குனராக (Deputy Director) பதவிஉயர்வு பெற்றிருந்தார். செய்திப்பிரிவு மொழிவாரியாக இயங்கும் பிரிவல்ல. ஓர் இயக்குனரின்கீழ் இயங்கும் பிரிவு. செய்திகள் பற்றிய முடிவை அந்த இயக்குனர் எடுப்பார். அவர் எடுத்த முடிவை மூன்று மொழிகளிலும் நிறைவேற்றுவார்கள். அந்தப்பிரிவில் பிரதிஇயக்குனர் பதவி என்பது இயக்குனருக்குப் பதிலாக இயங்கவேண்டிய பொறுப்புள்ள பதவி. பொதுவாக அரச ஊடகங்களில் செய்திப்பிரிவில், ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் தலையீடு அதிகமாக இருக்கும். அதுவும் யுத்த சூழலில் செய்திகள் பற்றிய முடிவுகளை எடுப்பது சிலவேளைக-ளில் பதவிக்கே பங்கம் விழைவிக்கும் அபாயத்தை ஏற்படுத்தலாம். அத்தகைய பிரதிஇயக்குனர் பதவியை சில்வெஸ்டர் ஏற்றதுமே செய்திப்பிரிவில் அந்தப் பணியை ஆற்றுவது கடினம். எந்தநேரத்திலும் உங்களை விலக்கிவிட்டு ஒரு சிங்களவரை அந்தப் பதவியில் அமர்த்தலாம். உங்கள் பதவி உயர்வைத் தமிழுக்கான ஒரு பதவியாகப்பெற முயற்சி செய்யுங்கள் என்று அவருக்கு ஆலோசனை வழங்கியிருந்தேன். தமிழுக்கான செய்தித்தயாரிப்பென்பது மொழிபெயர்ப்புச் செய்விப்பதும் அனைத்தையும் ஒன்றிணைத்து வழங்குவதும் மட்டுமே. செய்திபற்றிய முடிவுகளை மேற்கொள்ளவேண்டியதில்லை.

சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் அவர்களை நான் ஒலிபரப்பில் இணைந்த 1970ம் ஆண்டிலிருந்து அறிவேன். நான் ஒலிபரப்பில் இணைவதற்குப் பலவருடங்களுக்கு முன்னரே வானொலியில் கல்விச்சேவை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுபவராக இணைந்து, பின்னர் பகுதிநேர அறிவிப்பாளராகத் தேசியசேவைக்குத் தெரிவாகி, நான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சேரும்போது நிகழ்ச்சி வழங்கல் உத்தியோகத்தராக (Presentation Officer) பணியாற்றிக் கொண்டிருந்தார். பின்னர் வர்த்தகசேவை அறிவிப்பாளராக நியமனம்பெற்று பொதுமக்களுக்கு அறிமுகமானார். அவர் எந்தவிதமான சூழ்நிலைகளிலும் தரித்திருக்கக்கூடிய (survive) இயல்புடையவரென்று அறியப்பட்டவர். ஆயினும் செய்திப்பிரிவில் அது கடினமென்று எனக்குத் தெரியும்.

நான் சில்வெஸ்டருக்கு எச்சரித்தவாறே விரைவில் நடந்தது. ஆனால் எந்தவித காரணமும் தெரிவிக்கப்படாமலேயே அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு நான் நினைத்திருக்காத விதத்தில் தமிழ்ப்பிரிவுக்குள் தள்ளப்பட்டார். அல்லது அவர் செய்திப் பிரிவிலிருந்து விலக்கப்பட்டதற்கு ஏதாவது காரணமிருந்து எமக்குத் தெரியாமலுமிருக்கலாம். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இவ்வாறு பதவியிலிருந்து தூக்கியெறியப்படுபவர்களை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பயிற்சி நிலையத்திற்கு ஏதாவது பதவிகொடுத்து அனுப்புவது வழக்கம். தேவிஸ் குருகே போன்ற ஒலிபரப்பின் ஆளுமைகளும் அரசியல் காரணங்களுக்காகப் பயிற்சிப்பிரிவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ரூபவாஹினியில் அத்தகைய ஒரு பிரிவில்லாத காரணத்தாலும் சில்வெஸ்டர் ஒரு தமிழர் என்பதாலும் அவரைத் தமிழ்ப்பிரிவுக்குள் தள்ளியிருக்கிறார்கள். அவர் செய்திப்பிரிவில் எந்தவிதமான தவறுகளையும் செய்யவில்லையென்றே நான் நினைத்தேன். அப்படித் தவறுசெய்திருந்தால் அவரைப் பதவியிலிருந்து விலக்கியிருப்பார்கள். இப்படி அவர் தமிழ்ப் பிரிவுக்குள் தள்ளப்பட்டதற்கான சரியான காரணம் எதுவும் இருக்கவில்லை. தமிழ்ப்பிரிவில் அவருக்கு என்ன பொறுப்பு என்பதும் எழுத்துமூலம் கொடுக்கப்படவில்லை. ஆனால் எனக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் நான் பாரிய தவறுகளைச் செய்துவிட்டதாகவும் அதற்காகத்தான் சில்வெஸ்டர் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பாக மாற்றப்பட்டிருக்கிறாரென்றும் கதைகட்டிப் பத்திரிகைகளுக்கும் செய்தி கொடுத்துவிட்டார்கள். ரூபவாஹினியின் நிர்வாகமுறைப்படி நான் வகித்த உதவி இயக்குனர் பதவியின் ஆரம்பம் தரம் ஐந்தைச் சேர்ந்தது. சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் வகித்த துணை இயக்குனர் பதவி தரம் நான்கு. அப்போது நான் சேவை மூப்பின் அடிப்படையில் தரம் நான்கிற்கு உயர்த்தப்பட்டுவிட்டேன். எனவே, இருவரும் சமமான தரத்தில் இருந்தோம்.

மனம் குழம்பிய நிலையில் பயணத்தை மேற்கொண்ட நான், காங்கேசன்துறையிலிருந்து கொழும்புதிரும்பியதும் தகுதிவாய்ந்த அதிகாரியாகத் தலைமைப் பொறுப்பிலிருந்த சமரக்கோன் அவர்களிடம் சென்று இதுபற்றிக் கேட்டேன். அவர் பெரிதாக அலட்டிக்

கொள்ளாமல் 'உனது பதவியிலோ பொறுப்பிலோ எந்தவித மாற்றமுமில்லை, நீ போய் உனது கடமைகளைச் செய்' என்றார். நான் பத்திரிகையில் வெளியான செய்தியைச் சொல்லி, இது எனது கௌரவப் பிரச்சினை, ஒரு பிரிவில் இரண்டு தலைவர்கள் இயங்குவது சாத்தியமில்லையென்று கூறியபோது, முறைப்பாட்டுக் கடிதத்தைச் சமர்ப்பிக்குமாறு கூறிவிட்டு, சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் உனக்கு எந்தவிதமான இடையூறும் செய்யமாட்டார், உனது பணிகளைத் தொடரலாம் என்று கூறிவிட்டார். நான் மிகுந்த குழப்பத்துடன் சென்று எனது இருக்கையில் அமர்ந்து, தமிழ்ப்பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த அனைவருக்கும் ரூபவாஹினியின் தலைவர் கூறியவற்றைத் தெரிவித்து, நிர்வாகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை, நீங்கள் இவ்வளவுகாலமும் இயங்கியதுபோலவே இயங்கலாமென்று அறிவித்துவிட்டு எனது பணிகளைத் தொடர்ந்தேன்.

மீண்டும் எனது கதை முடிந்தது என்று நினைத்துப் பத்திரிகைகளுக்கு செய்தியும் கொடுத்துக் குதூகலித்திருந்த ரூபவாஹினியைச் சேர்ந்த சிலர் என்ன நடக்கிறதென்று தெரியாமல் கன்ரீனிலும் ரூபவாஹினி வரவேற்புக்கூடத்தின் மூலைகளிலும் அமர்ந்து ஆலோசனைகள் நடத்திக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களை அலட்சியம்செய்து எனது பணிகளைத் தொடர்ந்தேன். செய்திப் பிரிவில் சில்வெஸ்டரின் பதவிக்கு ஷிராணி திஸ்ஸநாயக்க என்ற ஊடகவியலாளரை நியமித்தார்கள். சில்வெஸ்டரின் நிலைபற்றி முடிவெடுக்காது அவரது வெற்றிடம் நிரப்பப்படக்கூடாதென்று நான் மேலிடத்திற்கு முறைப்பாடு செய்தேன். ஏனெனில், செய்திப் பிரிவில் அவரது இடம் நிரப்பப்பட்டுவிட்டால் அவர் தமிழ்ப்பிரிவிலேயே தொடர்ந்து இருக்க நேரிடும். அது ஆரோக்கியமானதாக இருக்காது. ஆனால் எனது முறைப்பாட்டுக்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

சில்வெஸ்டர் பாலசுப்ரமணியத்தின் நிலை எனக்கு சங்கடமாக இருந்தது. ஒவ்வொருநாளும் வழமைபோல் பதினொன்று பன்னிரண்டு மணியளவில் செய்திப்பிரிவுக்குப் பணிக்கு வருவது போன்று வரும் அவர், பத்திரிகை படிக்கும் இடத்தில் (paper stand) நின்று பத்திரிகைகளைப் படிப்பதும் கன்ரீனிலிருந்து எனக்கெதிரானவர்களுடன் நீண்டநேரம் உரையாடிவிட்டுச் செல்வதுமே அவரது வழக்கமாக இருந்தது. நான் எனது வேலைகளைச் செய்துகொண்டிருந்தாலும் மிகுந்த மனஉழைச்சலுக்குள்ளானேன். நான் மிக விரும்பி, உற்சாகமாக வேலைசெய்யும் இடம் எனக்கு மிகுந்த மனஉழைச்சலைத் தரும் இடமாக மாறிவிட்டது.

சில்வெஸ்டரின் இந்தப்பரிதாப நிலைக்கு முற்றுமுழுதாக அவரே காரணமென்பேன். செய்திப்பிரிவிலிருந்து அவரை விலக்குவதற்கு முடிவெடுக்கும்போதே அதற்கான காரணத்தை அவர் கேட்டிருக்க வேண்டும். அதற்கான சரியான காரணம் தெரிவிக்கப்பட்டிராவிட்டால் அந்த மாற்றத்திற்கு உறுதியாக மறுத்திருக்கவேண்டும். ஒரு சிங்களவரைப் பிரதிஇயக்குனர் பதவிக்குக் கொண்டுவருவதற்காகவே அவர் விலக்கப்பட்டிருந்தால் தனது பதவியைத் தமிழ்ச் செய்திகளுக்குப் பொறுப்பான பதவியாக மாற்றும்படி கேட்டிருக்கலாம். அப்படியொரு பதவிக்கு செய்திப்பிரிவில் பொறுப்புகள் பெரிதாக இல்லாவிட்டாலும் அவரது கௌரவம் பாதிக்கப்படாமல் அங்கு ஏதாவது செய்திருக்கலாம். இப்படி இருப்பதற்கே இடமில்லாமல் அலையும்நிலை ஏற்பட்டிருக்காது. இப்பொழுது எந்தவித பொறுப்புமில்லாமலே அவருக்குரிய சம்பளம் வழங்கப்படுகிறது. அவர் செய்திப்பிரிவில் இருந்துகொண்டு எந்தப்பணியையும் ஆற்றாமலே தனது சம்பளத்தைப் பெற்றிருக்கலாம். ரூபவாஹிக்கு பண இழப்பு எதுவும் ஏற்படாது. அவர் செய்திப்பிரிவில் தனது பதவியைக்கோரி அது மறுக்கப்பட்டிருந்தால் சட்டரீதியாக ரூபவாஹினிக்கெதிராக நடவடிக்கையெடுத்து வெற்றிபெற்றிருக்கலாமென்றே நான் நினைக்கிறேன். ஆனால் சில்வெஸ்டர் விட்ட தவறு என்னவெனில், அவரை செய்திப்பிரிவிலிருந்து அகற்றுவதற்கு முடிவெடுத்து, உன்னைத் தமிழ்ப்பிரிவுக்கு மாற்றுகிறோமென்று சொன்னதும், அதிலுள்ள சிக்கல்களை எந்தளவும் கருத்தில் கொள்ளாது, எனக்கெதிராக செயற்பட்டவர்கள் மத்தியில் தான் ஒரு கதாநாயகனாகத் தோன்றுவதற்கு நல்லதொரு வாய்ப்பென்று நினைத்து, எந்தவிதமான கேள்வியையும் நிர்வாகத்திடம் கேட்காமல் தமிழ்ப்பிரிவுக்கு மாற்றலாவதற்கு உடன்பட்டுவிட்டார். அது மட்டுமன்றி, ஒருபடி மேலேயே சென்று, எனக்கெதிராக செயற்பட்டவர்களுடன் சேர்ந்து, நான் தமிழ்ப்பிரிவின் தலைவராக ஏதோ தவறிழைத்திருப்பதனால்தான் தன்னைத் தமிழ்ப்பிரிவுக்குப் பொறுப்பாக மாற்றியிருக்கிறார்கள் என்று தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றும் வெளியாருக்கும் வதந்தியைப் பரப்பிக் கொண்டிருந்தார். வெளியே மாத்திரமல்ல, தமிழ்ப்பிரிவில் பணியாற்றிக் கொண்டிருந்த ஒருசில தயாரிப்பு உதவியாளர்களும் அதனை முதலில் நம்பிவிட்டார்கள். அந்தநிலையில் நான் கட்டாயமாக அந்த மாற்றத்துக்கு எதிராக உறுதியாகச் செயலாற்று வதைத் தவிர எனக்கு வேறுவழி இருக்கவில்லை.

தமிழ்ப்பிரிவின் தலைவராக நான் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்தவேளையில் எந்தவிதமான நிரூபிக்கத்தக்க குற்றச்சாட்டுகளும் இல்லாத நிலையில் அதுவும், நான் விடுமுறையில் சென்றிருந்த வேளையில் என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசாது அவ்வாறானதொரு மாற்றத்தைச் செய்தமை எனக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றே நான் தகுதிவாய்ந்த அதிகாரிக்குத் தெரிவித்திருந்தேன். சில மாதங்களுக்கு முன்னர்தான் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பெண்மணி எனக்கெதிராகச் செய்த புகார் சம்பந்தமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியும் அமைச்சரும் எனக்கு சமூகத்திலுள்ள நற்பெயரை அறிந்துகொண்டார்கள் என்பதால் மிகத்துணிவாக நான் எனது ஆட்சேபணையைத் தெரிவிக்கக் கூடியதாக இருந்தது. எந்தவித அடிப்படையுமில்லாமல் தமிழர்கள் தானே என்ற அலட்சியத்தோடு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே அதை நான் பார்த்தேன். எனது சுயகௌரவத்திற்கு ஏற்படுத்திய இழுக்கிற்கும் அதனால் ஏற்பட்ட மனஉழைச்சலுக்கும் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் இந்த சம்பவத்தின்பின்னர் நான் எனது எதிர்காலம்பற்றி மிகத்தீவிரமாகச் சிந்திக்கவேண்டி ஏற்பட்டதால் அமைதியாக எனது பணிகளைத் தொடர்ந்தேன். நான் இன்னும் மூன்று மாதங்களில் புலமைப் பரிசிலுக்காக ஜேர்மனி செல்வதற்குமுன்னர் எனக்கான முடிவை எடுக்கவேண்டுமென்ற மனஉறுதியுடன் எனது பணிகள் தொடர்ந்தன. நான் செப்ரெம்பர் மாதம் 22ம் திகதி புலமைப்பரிசிலுக்காக ஜேர்மனிக்குச் செல்லும்வரை சில்வெஸ்டர் பாலசுப்ரமணியம் தமிழ்ப்பிரிவின் பக்கமே வராமல் சுற்றித் திரிந்தார். என்னைப் பற்றிய அவதூறான வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் எனக்கெதிரானவர்கள் அமைதியடைந்துவிடவில்லை. நான் ஜேர்மனிக்குப்போக முடியாதென்று பேசிக்கொண்டு திரிந்தார்கள். நான் அவர்களைக் கணக்கிலெடுக்கவில்லை.

நாட்டின் நிலைமைமீதும் ரூபவாஹினியின் புதிய தலைமைமீதும் நான் நம்பிக்கை இழக்கத் தொடங்கினேன். இலங்கைக்குப் புதிதான நவீன ஊடகத்தின்மூலம் இலங்கைத் தமிழர்களின் கலைத்துறையில் மிகப்பெரும் முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென்ற நம்பிக்கையோடு தொலைக்காட்சித்துறைக்குள் காலடியெடுத்துவைத்த எனது கனவை யதார்த்த உலகு கலைக்கத் தொடங்கியது. நான் மிகச்சிறுவயதிலேயே ஒலிபரப்புத் துறைக்குள் புகுந்து, ஒலிபரப்பில் பல்வேறு பணிகளைச்செய்து என்னை நிறுவி, இலங்கையில் ஒளிபரப்பை ஆரம்பித்த முதற்தொகுதி நபர்களில் ஒருவனாகும் வாய்ப்பைப்பெற்று இதுவரை என்னால் முடிந்தவற்றைச் செய்துவிட்டேன். இன்னும் செய்வதற்காகப் பல முக்கிய திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் நாட்டின் யுத்த சூழ்நிலை அதற்கு இடையூறாக இருக்கிறது. அது விரைவில் முடிந்துவிடுமென்ற நம்பிக்கை அப்போது இருக்கவில்லை. ரூபவாஹினியில் உள்ளே இருக்கும் சிலரும் வெளியே இருப்பவர்களில் சிலரும் தொடர்ந்து பிரச்சினைக்குமேல் பிரச்சினை தந்துகொண்டே இருக்கிறார்கள். அவற்றை எதிர்கொள்வதற்கு மிகுந்த நேரத்தையும் சக்தியையும் செலவழிக்கவேண்டியிருக்கிறது. இதுவரை காலமும் வேலையை மட்டுமே பிரதானமாகக் கருதி அதில் முழு நேரத்தையும் செலவழித்துவிட்டேன். என்னிடம் ஒரு நூறு ரூபாய்கூட சேமிப்பில் இல்லை. மாதச்சம்பளத்தை எடுத்து, அந்த மாதம் செலவழிப்பதே வழக்கமாகிவிட்டது. எனது பொருளாதாரத்தை விருத்திசெய்ய எந்த முயற்சியும் நான் எடுக்கவில்லை. வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். எனக்கு இப்போது இரண்டு பிள்ளைகள். இவர்களை ஒரு பொறுப்புமிக்க தந்தையாக இருந்து வளர்க்கவேண்டும். அதற்கு முதலில் நான் உயிர்தரித்திருக்க

வேண்டும். கொழும்பில் யார் செய்தார்களென்று கண்டறிய இயலாதவாறு கொலைகள் நடைபெறுகின்றன. ஆயுதங்கள் கட்டுப்பாடின்றிப் பாவிக்கப்படுகின்றன. கொலைகள் மூலம் தமது சொந்தப் பகையைத் தீர்த்துக்கொள்வது சுலபமாகிவிட்டது. இப்படிப் பகைவர்கள் நாலாபக்கமும் இருந்து தாக்கும்போது எனக்கு எந்தநேரத்திலும் எதுவும் நடக்கலாம். இந்த மூன்று வருடங்களில் நடந்த சம்பவங்கள் அதை உறுதி செய்கின்றன என்று பலவாறு எனது மனம் அலைக்கழிந்தது. எனது குடும்பத்தை அனாதரவாக விட்டுவிடாமல் காப்பாற்றுவதற்கு எனது விருப்பங்கள், இலட்சியங்கள் சகலவற்றையும் துறந்து எங்காவது வெளிநாடு செல்லவேண்டும் என்ற எண்ணம் தீவிரமடையத் தொடங்கியது. பிரச்சினைகளை முழுமூச்சாக எதிர்கொள்ளும் திடம் எனக்கிருந்தாலும் யதார்த்தத்தையும் சிந்திக்கக்கூடிய ஆற்றல் என்னிடமிருந்தது. ரூபவாஹினியில் ஒரு பாதகமான சூழ்நிலைக்குள் இருந்து காலத்தை வீணாக்குவதைவிட அப்போது பெருமளவில் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்த தமிழ்மக்கள் கூட்டத்தோடு சேர்ந்துகொள்வது தான் புத்திசாலித்தனமென்று தோன்றியது.

ஜேர்மனிக்குப் புலமைப்பரிசிலில் செல்வதற்கு இன்னும் மூன்று மாதங்கள் இருந்தன. துரிதமாகச் செயற்படத் தொடங்கினேன். இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கான



**ஒளிப்பதிவாளர் வாமதேவன் அவர்களை 2018ஆம் ஆண்டு இலங்கையில் சந்தித்தபோது**

விசாக்களைப் பெற்றுக்கொண்டேன். ஆனால் அந்த முடிவை எடுப்பது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை. கணத்துக்குக் கணம் மனம் மாறிக்கொண்டேயிருந்தது. இப்படி எனது மனம் ஊசலாடிக்கொண்டிருக்கையில் எனது தாயார் இசைபயின்ற, அவருக்கு மிக நெருங்கிய குடும்பமான, எமது ஊரைச்சேர்ந்த உருத்திராபதி மாஸ்ரரின் குடும்பத்தவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவருமான குகமூர்த்தி 1990ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6ம் திகதி காணாமற்போன செய்தி எனது மனஊசலாட்டத்தை நிறுத்தியது. சரி, முதலில் எனது புலமைப்பரிசிலை முடித்துக்கொண்டு மேலும் இரண்டு மாத விடுமுறையில் அமெரிக்கா, இங்கிலாந்து சென்று அங்கிருந்து நிலைமைகளைக் கவனிப்போம். நம்பிக்கை தரக்கூடியவாறு நிலைமைகள் மாறினால் திரும்பிவரலாம் என்பது எனது இறுதி முடிவாக இருந்தது.

எனது வேலைகளை முழுமூச்சாகக் கவனித்தேன். மலையோரம் வீசும் காற்று தொடர் நாடகத் தயாரிப்பின் இறுதி வேலைகளை நிறைவுசெய்து, ஓகஸ்ட் மாதத்திலிருந்து ஒளிபரப்பும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. எனது பரிசுபெற்ற கிராமத்தின் இதயம் திரைக்கதைப் பிரதியை தம்பிஜயா தேவதாஸ் புத்தகமாக வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டு, அதன் வெளியீடும் செப்ரெம்பர் 9ம் திகதி ரன்முத்து ஹொட்டேலில் இடம்பெற்றது. நான் திரும்பி வருவதில்லை என்று முற்றுமுழுதாகத் தீர்மானிக்காவிட்டாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அலுவலகத்திலிருந்த எனது பிரத்தியேக கோப்புகளையும் கடிதங்களையும் சிறிது சிறிதாக வீட்டுக்குக் கொண்டுசேர்த்தேன்.


இந்தநேரத்தில், நான் புறப்படுவதற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் ஒருநாள் இலங்கை, சிங்கள சினிமாத்துறையில் புகழ்பெற்ற ஒளிப்பதிவாளராக விளங்கிய வாமதேவன் அவர்கள் ஒரு சிங்கள நண்பருடன் எனது வீட்டுக்கு வந்து, இலங்கையின் அதிஉயர் நடிகர் காமினி பொன்சேகா அவர்கள் 'நொமியன மினிசுன்' என்ற சிங்களப்படத்தை இயக்க இருப்பதாகவும் அதில் தமிழர்கள் சம்பந்தப்பட்ட காட்சிகள் இடம்பெறுவதால் என்னைத் துணை இயக்குனராகப் பணியாற்ற முடியுமா என்று கேட்டார். எனது மனம் மீண்டும் ஊசலாடியது. எனது இளவயதுக் கனவு நனவாகும் ஒரு சந்தர்ப்பம். நான் ஜேர்மனிக்குச் சென்றுவிட்டுத் திரும்பிவந்து பேசுவதாகக் கூறினேன். வாமதேவன் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுச் சென்றார்.

1990 செப்ரெம்பர் மாதம் 22ம் திகதி, சனிக்கிழமை நான் ஜேர்மனிக்குப் புறப்படும் நாள். செப்ரெம்பர் 15ம் திகதி சனிக்கிழமை காலை ஆயுபோவன் நிகழ்ச்சியில் வழக்கமான தமிழ் அறிவிப்பாளர்கள் எவரும் பங்குபற்ற முடியாது போனதால் என்னை அதில் பங்குபற்றுமாறு அதன் தயாரிப்பாளர் பியதாஸ ரட்ணசிங்ஹ கேட்டுக்கொண்டார். அந்த நிகழ்ச்சியில் சிங்களத் திரையுலகின் பிரசித்திபெற்ற ஒளிப்பதிவாளரும், இயக்குனரும், திரைப்படக்கூட்டுத்தாபனத்தின் தலைவராகப் பதவிவகித்தவரும், அப்போது தொலைக்காட்சி விளம்பரப்படங்கள் தயாரிப்பதில் முன்னணியிலிருந்த 'டெலிசினி' நிறுவனத்தின் அதிபருமான நிஹால் சிங்ஹ அவர்கள் விருந்தினராகக் கலந்துகொண்டார். அந்த நிகழ்ச்சியில் ஆங்கில அறிவிப்பாளராக ரவி ஜோண் கலந்து கொண்டாரென்று நினைக்கிறேன். சரியாக ஞாபகத்திலில்லை. அதுபோல் சிங்கள அறிவிப்பாளர் யாரென்பதும் இப்போது நினைவில்லை. அந்த நிகழ்ச்சி நடைபெறும்போது என்னைப் பல்வேறு சிந்தனைகள் ஆக்கிரமித்திருந்தன. அந்த ஒளிபரப்பு நடந்து கொண்டிருந்தவேளை எனக்கு நேரே உயரத்தில் பூட்டப்பட்டிருந்த பிரதான ஒளிவிளக்கு (keylight) திடீரென வெடித்து சூடான கண்ணாடித் துண்டுகள் பறந்து என்மீது விழுந்ததால் எனது ஷேர்ட்டில் பொத்தல்கள் உண்டாகின. அப்போது நான் இருந்த நிலையில் அது ஒரு குறியீடாகவே எனக்குத் தென்பட்டது.


செப்ரெம்பர் 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நான் பணிமுடிந்து வீடு சென்றபோது, கடந்த மூன்று மாதங்களாக அலைக்கழிந்துகொண்டிருந்த மனம் சலனமற்றிருந்தது. ஒரு துறவிபோல் வீடுநோக்கிச் சென்றேன். அடுத்தநாள் 1990ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 22ம் திகதி காலை நானும் எனது மனைவியும் மலையோரம் வீசும் காற்று பிரதியை எழுதிய கோவிந்தராஜனது வத்தளையிலிருக்கும் அவரது வீட்டுக்குச்சென்று சுகவீனமுற்றிருந்த அவரது தந்தையாரைப் பார்த்து நலம் விசாரித்துவிட்டு வீடு திரும்பி, மதியம் விமானநிலையம் புறப்பட்டோம். எனது குடும்பத்தாருடன் சென்ற வாகனம் ரூபவாஹினியைத் தாண்டிச் சென்றபோது அதன் ஆரம்பத்திலிருந்தே, கடந்த பத்துவருடங்களாக எத்தனையோ நிகழ்ச்சிகளைச்செய்து, எத்தனையோ சம்பவங்களை எதிர்கொண்ட உணர்வு எதுவுமின்றி, வீதியோரம் இருக்கும் கட்டிடங்களிலொன்றைப் பார்ப்பதுபோன்று ரூபவாஹினிக் கட்டிடத்தையும் ஒரு வெறுமையான மனநிலையுடன் கடந்து விமானநிலையம் நோக்கிச் சென்றேன். எனது மனநிலை எனக்கே வியப்பாக இருந்தது. தற்கொலை செய்பவர்களின் மனநிலையும் இப்படித்தானிருக்குமோ என்று நினைத்துக்கொண்டேன்.

பாடசாலை வாழ்க்கையிலிருந்து நேரடியாக ஒலிபரப்புத்துறைக்கு வந்த நான், இலங்கையில் ஒலிபரப்பிலும் ஒளிபரப்பிலும் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக வெற்றிகரமான ஒரு தொழில் வாழ்க்கையை மேற்கொண்டுவிட்டு மீண்டும் எதிர்காலம் எவ்வாறிருக்கப்போகிறது என்ற ஒரு பெரிய கேள்வியுடன், எனது பெற்றோர், சகோதரி, மனைவி, பிள்ளைகளை இலங்கையில் விட்டு விட்டு. கே.எல்.எம். விமானசேவை விமானத்தில் ஜேர்மனியை நோக்கிப் பயணமானேன்.

தொடரும்.



*wikneswaran.p@thaiveedu.com*



உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்
Allstate.
You're in good hands.
தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்
Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(289) 275-8795
rlinghan@allstate.ca
பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி
செல்லப் பிராணிக் காப்புறுதி
ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்




பிராணஜீவ
சர்வ ரோக நிவாரணி
Pranajeewa is a traditional herbal medicine that has passed down from generation to generation. It is over 200 years old and is a proven cure for many kinds of diseases including Heart disease, Diabetes, Hypertension, Cholesterol and Cancer.
எலும்பு, மூட்டு
ஆரோக்கியத்திற்கு!!
NanoCal is a supplement that has been approved by the US FDA as a CURE for osteoporosis and osteoarthritis.
NanoCal can actually reverse and cure these conditions!
NANOCAL
Ervamatin
Hair Lotion
The ERVAMATIN™
Amazon Organic Shampoo is for all hair types is rich yet mild, cleans well and leaves hair full bodied lustrous and manageable.
மூலிகைகள் கொண்டு
தயாரிக்கப்பட்ட
தலைமுடி மை.
Dreamron Semi-Permanent Eco Hair Color is the newest innovation that is specially formulated for the people who are allergic to normal oxidative hair colorants which contain PPD & Ammonia. This is a gentle blend of unique herbal powders with HC colorants.
Turmeric & Sandalwood Day Cream
Kasturi
SABONA
2466, Eglinton Ave East Unit 12A (@ Midland) Scarborough, ON. www.sabona.ca 416•264•8787




# இருபது பவுன்

- மஞ்சி ஜப்பார்

நாலு மணிக்கே எழுந்து சட்னி சாம்பார் வெச்சு, அவருக்குப் பிடிச்ச மல்லி சட்னியும் வைக்கணும். இன்னும் ரெண்டு வருஷம் கழிச்சுத்தான் இதே சாம்பார், சட்னியைப் பார்க்கப் போறார் மனுஷன். பலவாறான எண்ணங்கள் பவித்ராவின் மனதில். காலை எட்டு மணிக்கு ஏர்போர்ட்டுக்கு கிளம்பணும். அதுவும் கணவனின் பிறந்த நாளான பெப்பிரவரி அதே தேதியில், குவைத்துக்குப் போறார்.

நாள் கணக்கு கொஞ்சம் தப்பியதால் தவறுதலாகத் தரித்த அக்ஷு என்ற அக்ஷயா. வயசு எட்டாவது. அப்பா செல்லம் கொஞ்சம் அதிகமே தான். வீட்டுக்கு ஒரே பொண்ணு ஆச்சே. கேக்கவா வேணும். மூத்தவன் மூணாம் வருஷம் இன்ஜினியரிங். ரெண்டாவது பையன், ரொம்ப பணம் செலவழிக்க வழியில்லாமல் டிப்ளமோ படிச்சிட்டு மலேசியாவில் வேலைக்கு சேர்ந்து ஆறு மாசம் தான் ஆச்சு. அவ்வளவு பிரமாதம் இல்லைன்னாலும் மாசம் நாப்பதாயிரம் அனுப்புறான்.

ஒரு மூணு வருஷம் மட்டும் இவரு வெளிநாடு போயிட்டு வந்துட்டாருன்னா, புள்ளை கல்யாணத்துக்கு கொஞ்சம் நகை நட்டு சேர்த்து வெச்சுக்கலாம். அதுக்கப்புறம், மூத்தவனும் வேலைக்குப் போயிருவான். சிரமம் இல்லாமல் இவரை வீட்டில் உக்காரச் சொல்லிட்டு குடும்பத்தை பார்த்துக்கலாம். பவித்ராவின் எண்ணக் கனவுகள் சிறகுகள் இல்லாமல் பறந்தன.

இருந்தாலும் கணவனை வீட்டை விட்டு வெளிநாட்டுக்கு அனுப்ப மனமே வரலை தான் பவித்ராவுக்கு. முடிவு எடுத்தாச்சு. விசா வந்தாச்சு. டிக்கெட்டும் எடுத்தாச்சு. எல்லாம் கடவுள் சித்தம். கடவுளிடம் ஒப்படைச்சுட்டா எல்லாத்தையும்.

கோபால் அடுப்படிக்குச் சென்று பவித்ராவை வினவினான். 'ரொம்ப சந்தோசமா இருக்கியே என்னை வெளி நாடு அனுப்ப அவ்வளவு சந்தோசமா உனக்கு?. இல்லை, காணாத கனவேதும் கண்டு, கனவில் மிதக்கிறியா?'.

'உங்களை அனுப்ப எனக்கு இஷ்டம் இல்லை தான். இருந்தாலும், பவுன் இருபது போட்டு ஒருத்தன் கையில இவளை புடிச்சுக்

குடுத்திரலாம்னு நெனெச்சேன். அம்பது பவுனுக்கு மேல போட்டு, கழுத்தும் கையும் தங்கத்தால் ஜொலிக்கிற மாதிரி கனவு கொண்டேன். கனவு ஏண்டா கலைஞ்சுதுன்னு இருக்கு இப்ப!' பவித்ராவின் பதில்.

பாத்ரூமில் இருந்த கோபால், பவித்ராவின் சப்தத்தில் வெளியே வர, பவித்ராவின் கையில் டீ.

'இன்னும் தூங்காம என்னடி பண்ற', பவித்ரா கத்தினாள்.

'அப்பா பெர்த் டேய் கார்டு ரெடி', அம்மாவின் அரட்டலை சற்றும் சட்டை செய்யாமல் அக்ஷு.

Multi colour வாழ்த்து ரெடி. எட்டு வயசு வால், இந்த அளவுக்கு தயார் பண்ணியத நெனச்சு அப்பா அம்மா ரெண்டு பேருக்கும் அதீத மகிழ்ச்சி.

வாழ்த்து மடலின் அடியில் ஒட்டியிருந்த ஒரிஜினல் போட்டோ, அழகாக கோட், டையுடன் இருந்தது. அது கண்ட கோபாலின் அடி வயிற்றில் நெருப்பு பற்றிக் கொண்டது.

'இந்த போட்டோ உனக்கு எங்கிருந்து கிடைத்தது', கோபால் வினவ,

'உங்க பாஸ்போர்ட்ல இருந்து கட் பண்ணி எடுத்தேன்', அக்ஷு ரொம்ப கூலா பதில் உரைத்தாள்.

'பாஸ்போர்ட்ல இருந்தா கட் பண்ணினே?', அப்பா கோபால். ஒரு கணம் அவன் இதயம், இயங்க மறுத்து மீண்டும் இயங்கியத் தொடங்கியதை நன்றாக உணர முடிந்தது அவனால். பதில் உரைக்க அவனுக்கு வார்த்தை வரவில்லை. 'ஒரு வேளை பாராலிஸிஸ் அட்டாக் வந்து விட்டதோ?', என்று அவன் யோசித்துக் கொண்டிருக்க...

அம்மா பவித்ரா நிலை குலைந்து விட்டாள். போட்டோவை எடுத்து விட்டு பாஸ்போட்டை கொண்டு இனி எப்படி வெளி நாடு போவது?. போட்டோ இல்லாமல் பாஸ்போட்-ஐ எங்கே காட்ட முடியும்?.

'உனக்காகத் தானடி அவரை வெளி நாட்டுக்கு அனுப்புறேன். இப்பிடி எல்லாத்தையும் மண் அள்ளிப் போட்டுட்டியே! பாஸ் போட்டில் இருந்து போடவைக் கிழிச்சு எடுத்து பெர்த்டே கார்டு பண்ணிட்டியே?', ஓரிரு வார்த்தைகளுடன் நிறுத்திக் கொண்டாள் பவித்ரா.

'நீ தான் அடிக்கடிச் சொல்லுவியே, எல்லாம் கடவுள் சித்தம்!. அதே மாதிரி நெனச்சுக்கோ.' கோபால்.


அக்ஷுவோ ஒன்றுமே அறியாது திகைத்து நின்றாளே ஒழிய, ஒரு வார்த்தை பேசவில்லை.

பவித்ரா பாத்ரூமுக்குள் நுழைந்தாள். அங்கே போய் அழத்தான் நுழைகிறாள் என்று புரிந்து கொண்டான் கோபால். அக்ஷு சலனமில்லாமல் பெட் ரூமுக்குள் நுழைந்தாள். பாஸ்போர்ட்டில் இருந்து போட்டோவை கிழிச்சு எடுத்த பிரச்சினையை பெரிசாக்க வேண்டாம் என்று ஒளிந்து கொண்டாள் போலும் அக்ஷு. வீடு முழுவதும் மயான அமைதி.

அப்பா, ஹால் சோபாவில் தளர்ந்து போய் சாய்ந்திருக்க, சுமார் பத்து நிமிடம் அழுதுத் தீர்த்து விட்டு அம்மா பவித்ரா வெளியே வர, அவளையே எதிர் பார்த்து நின்றது போல் அக்ஷு.

'அப்பா இந்தாங்க உங்க பாஸ்போர்ட்', அக்ஷு, கோபாலின் காலாவதியான ஒரு பாஸ்போட்-ஐ நீட்ட, பார்க்கக் கண்ராவியான அந்தப் பாஸ்போட்-ஐக் கண்டதும், 'ஓ; அது பழைய பாஸ்போட்-இல் இருந்த போட்டோவா?', என்று கண்களாலேயே கேட்காமல் கேட்டதும், பவித்ரா, கோபால் இருவரின் கண்களில் வடிந்த அந்த ஆனந்தக் கண்ணீருக்கு அர்த்தம் கண்டு கொண்டாள் அக்ஷு.

'அக்ஷு என்றைக்கும் சமத்து தான்!'.



manji.jabbar@thaiveedu.com





# அந்நிய அனாதைகள்

- சோ. ராமேஸ்வரன்

காலை வேளை அர்த்தத்துடன் புலர்கின்றது.

அன்றைய கால வேளைக்குரிய காலநிலை கடும் குளிருடன் கூடிய காற்று. ஐந்து நாட்களுக்கு முன்னரே 'சி.பி 24' தொலைக்காட்சி அலைவரிசை எதிர்வுகூறிவிட்டது. அது அச்சொட்டாக இருந்தது. காலநிலை 12 பாகை சென்ரிகிரேட்டில் இருந்தது. கடும் குளிர் வீசியதனால் அது 6 பாகை சென்ரிகிரேட்டை உணர்த்தியது.

நேரம் பதினொன்றைத் தாண்டுகிறது. எழும்ப வேண்டுமே என்ற எண்ணமின்றி ராதை படுக்கையில் கிடக்கிறாள். தலை 'விண், விண்' என்று வலித்தது. முதல் நாளிரவு நடந்த 'பேர்த்டே பார்ட்டி'யின் தாக்கம் அவள் வயிற்றை எரித்தது. மண்டையைக் கொதிக்க வைத்தது. உடல் முழுவதும் கடுமையான அசதியைத் தோற்றுவித்தது. 'போதும், போதும்' என்று கத்திய போதும் அவள் 'கிளாஸினுள்' நிறைய 'விஸ்கி'யை அம்ருதா ஊற்றி 'குடி, குடி' எனத் தூண்டிக் கொண்டே இருந்தாள். நண்பியின் அதட்டல் நிறைந்த அன்புக் கோரிக்கையை ராதை தட்டிக் கழிக்க முயன்ற போதெல்லாம், மற்றைய நண்பர்களும் வற்புறுத்தவே, எதையும் துலாம்பரமாக யோசிக்காமல் 'விஸ்கி'யைப் பருகிவிட்டாள். வழக்கமாகக் குடிப்பதை விட இரண்டு மடங்கு குடித்துவிட்டாள்.

அது அவளுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படிக்கும் நண்பன் நரேனின் பிறந்த தினம். காலையில் எழுந்தவுடன் நரேனை அலைபேசியில் தொடர்பு கொண்ட ராதை அவனை வாழ்த்தினாள்.

நரேன் பத்து ஆண்டுகளுக்கு முன் இலங்கையிலிருந்து தந்தையின் 'ஸ்பொன்ஸரில்' கனடாவுக்கு வந்தவன். இங்கு வரும் போது அவனுக்கு பதினொரு வயது. ஆரம்பப் படிப்பை இங்கு தொடர்ந்தவன், ராதையின் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்கு இணைந்து கொண்டான். வசீகரத் தோற்றத்திற்கு இலக்கணமாய் தோன்றினான். கவர்ச்சியாகப் புன்னகைப்பான். மிகவும் மரியாதையாக, பண்பாக உரையாடுவான். அவன் அறிமுகம் ராதைக்கு கிட்டியது. அவனுடனான நட்பை ராதை விரும்பினாள். இருவருமே ஆங்கிலத்திலேயே உரையாடினார்கள். ராதை தமிழைப் பேசக் கற்றுக்கொள்ளவில்லை. ஆரம்பத்தில் தமிழில் தாய் பேசினாலும் அவளால் தமிழில் பேச முடியவில்லை. தமிழ் வகுப்புகளுக்கும் மகளைத் தாய் அனுப்பினாள். ஆனால், தாயின் முயற்சி வீண்போனது. தாய் தமிழில் பேசினால் கூட அவள் ஆங்கிலத்திலேயே பதில் அளிக்கலானாள். காலக்கிரமத்தில் மகளுடன் தமிழில் உரையாடுவதை தாய் கைவிட்டாள்.

நரேனைப் பொறுத்தளவில் அவன் தமிழைச் சரளமாகப் பேசு வான். ராதையுடன் சில தடவைகள் தமிழில் உரையாட முயற்சித் துள்ளான். ஆனால், அவள் ஆங்கிலத்திலேயே உரையாடலைத் தொடர, அவன் தமிழைக் கைவிட்டு, ஆங்கிலத்தில் உரையாடி-னான்.

'நரேன், மாலையில் ஏதாவது கொண்டாட்டம் இருக்கிறதா?' என ராதை கேட்டிருந்தாள்.

'வழமை போல நண்பர்கள் செல்லும் 'ரெஸ்டரண்டில்' சந்திக்க லாம் என்று நினைக்கிறேன். ஒரு சின்ன 'பார்ட்டி'. எல்லாமாக எட் டுப் பேர். நான் ஒன்பது மணிக்குப் போய்விடுவேன்.'

'நல்லது.'

மாலையில் விரிவுரைகள் முடிவடைந்து நரேன், ராதை, அம்ருதா என எட்டுப் பேர் 'ரெஸ்டரண்டுக்குச்' சென்றனர். அதில் நரேனுக் கும், இன்னொருவனுக்கும் கார்கள் இருந்தன.

நரேன் செலுத்திய காரில் முன் ஆசனத்தில் ராதை அமர்ந்தாள். பின் ஆசனத்தில் இருவர் அமர்ந்தனர். ராதை பல தடவைகள் நரேனுக்கு அருகில் பிரயாணம் செய்திருக்கிறாள். அவர்கள் இரு வரும் ஒன்றாக 'ஷொப்பிங்' போயிருக்கிறார்கள். சினிமாப் படங் கள் பார்க்கப் போயிருக்கிறார்கள். சாப்பிடுவதற்கு விதம் விதமான 'ரெஸ்டரண்ட்'களுக்கு போயிருக்கிறார்கள். அவளுடன் நரேன் மிக வும் மரியாதையாக, ஒழுக்கத்தை மீறாமல் பழகினான். அவனது கரத்தை அவள் பற்ற முனையும் போதெல்லாம் அவன் அதைத் தடுத்தான்.

ஒரு நாள் அவள் நேரிடையாகவே கேட்டாள்: 'ஏன் நான் உனது கையைப் பிடிப்பது உனக்குப் பிடிக்கவில்லையா?'

அவன் பதில் கூறவில்லை.

'சொல்லு.'

'ஏன் பிடிக்க வேண்டும்?'

'உனக்கு என் மீது அன்பு இல்லையா?'

'இருக்கிறது. அதற்காக உனது கையைப் பிடித்துத்தான் எனது அன்பை வெளிப்படுத்த வேண்டுமா?'

அவள் தன் பேச்சைக் கத்தரித்துவிட்டாள்.

இடையிடையே இருவரும் வாக்குவாதம் செய்தார்கள். 'உனது ஆடைகளை ஒழுங்காக அணி' எனப் புத்திமதி கூறுவான். 'நீ ஏன் நிறைய விஸ்கி குடிக்கிறாய்' எனக் கேட்டுக் கண்டிப்பான். 'நண் பர்களுடன் உராய்ந்தபடி நடக்காதே' என எச்சரிக்கை செய்வான். 'இரவு பன்னிரண்டு மணிக்கு என்னை அலைபேசியில் தொடர்பு கொள்ளாதே' என அன்புடன் கடிவான். அவளுக்கு ஆத்திரம் வரும். சிரிப்பினிடையே சில 'பிளாடி'களைப் பயன்படுத்தி அவனை வாய்க்கு வந்தபடி ஏசுவாள். பிறகு தனது தவறை உணர்ந்தவளாக அலைபேசியில் தொடர்பு கொண்டு, நிறைய மன் னிப்பு வார்த்தைகளைப் பயன்படுத்தி, சில 'செக்ஸ் ஜோக்'கு களை இடையே புகுத்தி, தன் சொல் அம்புகளைக் களைந்துவி டுவாள். இவ்வாறாக அவன் புண்பட்ட இதயத்திற்கு ஒத்தடம் கொடுப்பாள்.

இது அடிக்கடி சம்பவிக்கின்ற நிகழ்வு. ஆனாலும், இருவருக்கும் இடையில் நிறைந்த புரிந்துணர்வு வாழ்ந்தது. நேரடியாக, அலை பேசி ஊடாக இருவரும் பேசி தமது அன்பை வளர்த்தார்கள்.

'உனது எதிர்கால இலட்சியம் எனன?' என 'திடுதிப்பென' அவள் கேட்டிருந்தாள்.

'பட்டப் படிப்பை முடித்துவிட்டு, மருத்துவப் படிப்பை தொடர் வேன். அதை முடித்துவிட்டு, தனிப்பட்ட முறையில் ஒரு சிகிச்சை நிலையத்தை ஆரம்பிப்பேன். நோயாளருக்கு சகாய கட்டணத்தில் சிகிச்சை அளிப்பேன். ஒரு வீட்டை வாங்குவேன். அதை நன்கு அழகாக அலங்கரிப்பேன்' என அவன் கூறிக் கொண்டே போக, 'இதில் எந்தக் கட்டத்தில் நான் இருக்கின்றேன்' என ஆவல் பொங்க அவள் கேட்டாள்.

அவன் அழகாகப் புன்னகைத்தான். 'நீ என் வாழ்க்கையில் இருக் கின்றாய். ஆனால், எப்பொழுது எமது நட்புக்கு ஒரு நிரந்தரமான முற்றுப்புள்ளியிட்டு, ஒரு புதிய உறவை ஆரம்பிப்பேன் என்று என்னால் சொல்லத் தெரியவில்லை.' பட்டும் படாமலும் அவன் தன் உள்ளக்கிடக்கையை ஆழமான வார்த்தைக் கோர்வைகளி னால் திறந்த போது, அதன் உள்ளாந்த அர்த்தத்தை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. முயற்சித்தும் தெளிவான பதில் கிட்டவில்லை. அதைத் தெளிவாக, உண்மையை உண்மையாகக் கூறும்படி அவனை அவள் நச்சரிக்கவில்லை.

பல்கலைக்கழகத்தில் ராதை சேர்ந்த புதிதில் அவளின் அழகு, உடலில் தெரிந்த நளினம், அழகைச் சற்று அப்பால் தள்ளிவிட்டு முந்திக் கொண்டுள்ள கவர்ச்சி என சகல சக அம்சங்களும் சில வாலிபர்களை அவள்பாற் தள்ள முயற்சித்தன. அவர்கள் கனடா வில் பிறந்து, தாய் மொழியை மறந்து, கலாசாரத்தைத் தூக்கி-யெறிந்து தான்தோன்றித்தனமாக வாழ்பவர்கள். மிலேச்சத்தனமான செயல்களைப் புரிந்து அவமானத்திற்கு உள்ளானவர்கள். அவர் களை அவள் ஏறெடுத்தும் நோக்கவில்லை.

ஒருவன் அடிக்கடி அவளிடம் தனது விருப்பத்தை நேரிடை யாகவும், வேறு நண்பிகள் ஊடாகவும் வெளிப்படுத்தினான். அவன் விருப்பத்தை அவள் நிராகரித்தாள். அவளைப் பழிக்குப் பழி வாங்குவேன் என்று அவன் சொல்லித் திரிந்தான். இதையிட்டு அவள் வெளிப்படையாக துணிச்சலைக் காட்டிய போதும், உள் மனதினுள் கலவரப்பட்டாள்.

நரேனில் இந்த சய அம்சங்கள் இல்லை என்பதை அறிந்தவள் அவனுடன் பேசினாள், பழகினாள், அவனைக் காதலிக்கவும் தொடங்கினாள். ஆரம்பத்தில் ஒரு தலைக் காதல் போலத் தான் காரியங்கள் நிறைவேறின. ஆனால், நாளடைவில் அது மாற்ற மடைந்தது. அவளை அவனும் விரும்பினான். இருவரும் பரஸ் பரம் தமது காதலை வெளிப்படுத்தாவிட்டாலும் இருவருமே ஒரு-வரையொருவர் காதலித்தனர்.

நரேனின் அறிமுகம் கிட்டிய பின் ஒரு பாதுகாப்பான வலயத்திற் குள் வந்துவிட்டோம் என்ற ஓர் உணர்வும் அவளுள் பிரவேசித்து விட்டது. அந்த பாதுகாப்பு அவளின் சில செயல்களை அத்து மீறச் செய்தது. அவளில் இருந்த அவனுக்குப் பிடிக்காத ஒரு செயல் அளவுக்கு மீறி மதுவைப் பருகுவது. பல தடவைகள் அவளை அவன் கண்டித்தான்.

'குடிக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், கட்டுப் படுத்த முயற்சி செய். நீ இப்போது ஒரு பட்டப் படிப்பு மாணவி. பட்டத்தை முடித்த பின் மருத்துவப் படிப்பை மேற்கொள்ளப் போகிறாய். வைத்தியத் தொழில் ஒரு புனிதமான தொழில் என்று உனக்குத் தெரியும் தானே? அந்த புனிதத்தன்மையை காப்பாற்ற வேண்டும்.'

'கட்டுப்படுத்த முயற்சி செய்கிறேன்' என்றாள்

ஆனால், முதல் நாள் நடந்த 'பேர்த்டே பார்ட்டி'யில் அவள் அள வுக்கு மீறி மது அருந்தினாள். மது வெறி ஏறிய நிலையில் பாடி-னாள். 'ரெஸ்டரன்ட்' சர்வர்கள் வந்து எச்சரிக்கை செய்த பின்னரே வாயை மூடினாள்.

நரேன் ஒரு போத்தல் 'பியரைத்'தான் ஒரு மணித்தியாலமாகப் பரு

கினான்.

ஒன்பது மணியளவில் இரவு சாப்பாடு பரிமாறப்பட்ட பின்னர், அவன் அங்கிருந்து அகன்றான்.

'நீ தான் பிறந்த நாள் பையன். நீ 'பார்ட்டி' முடியும் முன் செல்வது தவறு' என்று ஒருத்தன் கூறினான். ஆனால், அதைக் கேட்கும் நிலையில் அவன் விளங்கவில்லை.

'உன்னை வீட்டில் இறக்கிவிடட்டா' என ராதையிடம் கேட்டிருந்தான் நரேன்.

'இல்லை நீ போ' என்றாள் அவள்.

அதன் பின் அவள் தன் நிலையை பல தடவைகள் மறந்தாள்.

வீடு வந்து சேர்ந்த போது நள்ளிரவாகிவிட்டது. எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்று அவளுக்கு தெரிந்திருக்கவில்லை. கார் ஒரு 'காஸ் ஸ்ரேஷனுக்கு' முன்னால் நின்றது அவள் நினைவில் இருந்தது. நண்பர்களுடன் உள்ளே சென்றதும், அவர்கள் 'சிகரெட்' வாங்கியதும் தெரியும். தன் வீட்டை நோக்கி கார் எந்த வழியால் சென்றது, யார் தன் வீட்டுக் கதவைத் திறந்தார் என்பன போன்ற சில்லறை விடயங்கள் அவள் நினைவில் இருக்கவில்லை.

பல மறுதலையான எண்ணங்கள் அவள் மனதில் அலை மோதின. சற்று நிதானமாக யோசனைக்குத் தீனி போட்ட போது நரேனை உதாசீனம் செய்தது, மதுவை அதிகம் குடித்தது, பாட்டு பாடியது என பல உண்மைகள் அவளுள் ஊடுருவின. எவ்வளவு அசிங்கமாக நடந்துவிட்டேன் என மனம் வருந்தினாள். ஏன் நான் அப்படி நடந்தேன்? நான் இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன? என்னை சரியான வழியில் நடத்துவதற்கு யாரும் இல்லையா? தந்தையின் நிலையில் தாய் இருந்து அவளுக்குப் புத்திமதி சொல்கிறாள். நரேனும் புத்திமதி கூறுகிறான். அப்படியெனில் என் நடத்தைக்குக் காரணம் என்ன? தாயின் வாழ்க்கை முறை என்னுள் புகுந்து விட்டதா? அதனால் தான் தான்தோன்றித்தனமாக நடக்கிறேனா? இருக்கலாம். அல்லது எனக்குக் கிட்டியுள்ள சுதந்திரத்தை நான் துஷ்பிரயோகம் செய்கிறேனா? இருக்கலாம். தந்தை என்ற ஸ்தானத்தில் உள்ள ஒருவரிடம் இருந்து அன்பு கிடைக்காததினால் எதையும், எப்படியும் அனுபவிக்கலாம் என எண்ணுகிறேனா? அதன் விளைவு தான் இந்த மாதிரி இழிநிலையைத் தெரிவு செய்துவிட்டேனா? பல உண்மைகள் அவளைக் குத்திக்குதறின.

முன்னெப்பொழுதெல்லாம் இவ்வாறு சிந்திக்காதவள் இன்று ஏன் இப்படிச் சிந்திக்கிறாள்? இவ்வாறான சிந்தனை அவள் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக விளங்குமா?

அவள் ஒரு முடிவுக்கு வருகிறாள். அலைபேசி ஊடாக நரேனைத் தொடர்பு கொள்கிறாள்.

எடுத்த எடுப்பில், 'நரேன், என்னை மன்னித்து விடு' என்கிறாள்.

'உன்னுடன் நிறைய பேச வேண்டியுள்ளது. எப்போது, எங்கே சந்திப்போம்?' என நரேன் கேட்கிறான்.

அவள் நேரத்தையும், சந்திக்கவுள்ள இடத்தையும் குறிப்பிடுகிறாள். மிகச் சுருக்கமான உரையாடல்.

அலைபேசித் தொடர்பினை அவன் துண்டிக்கிறான். அந்நியோன்னியமான உரையாடலுக்கு இடமிருக்கவில்லை.

மூன்று நாட்களாக இடையிடையே மழை பெய்தது. குளிர் காற்றும் வழமைக்கு மாறாக வீசியது. இலையுதிர் காலத்தில் இப்படியொரு காலநிலை மாற்றமா என எண்ணுமளவுக்கு மழையின் பொழிவு இருந்தது.

மூன்றாம் நாள் காற்று அகோரமாக வீசும் என்று எச்சரிக்கையை விடுத்திருந்தது 'சி.பி 24' தொலைக்காட்சி அலைவரிசை.

அன்றைய தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமை. உமா காலையில் எழும் போதே எட்டு மணியாகிவிட்டது. எழுந்து தான் என்ன செய்வது என்று அவளுக்கு ஒரு யோசனையும் இருக்கவில்லை. முதல் நாள் வீட்டை விட்டு தனது நண்பியின் வீட்டுக்குச் சென்ற ராதை அன்றைய தினம் வீடு திரும்பவில்லை. இரவு ஒன்பது மணி போல் தாயுடன் அலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டவள், மறு நாள் மாலை வருவதாக கூறிவிட்டு, தாயின் பதிலுக்குக் காத்திருக்காமல் தொடர்பைத் துண்டித்துவிட்டாள். அவளின் குரல் வழமைக்கு மாறாக, தழுதழுத்த நிலையில் விளங்குவதை உமா புரிந்து கொண்டாள். அச் சமயத்தில் மகளின் நிலை எப்படி இருக்கும் என்பதை அவளால் அனுமானிக்க முடிந்தது.

இரு நாட்களுக்கு முன் - வெள்ளிக்கிழமை நள்ளிரவு காரொன்று முன் வாசலில் நிற்கும் சத்தம் கேட்டு உமா கண் விழிக்கிறாள். அவள் தனது அறை ஜன்னலினூடாகப் பார்வையை கீழே ஓடவிடுகின்றாள். காரில் இருந்து ராதை இறங்குவதை உமா அவதானிக்கிறாள். காரில் இருந்து உரத்த ஒலியில் ஆங்கிலப் பாடலொன்று வெளிவருகின்றது. ராதையின் நண்பி அம்ருதா கைத்தாங்கலாக ராதையைப் பிடித்துக் கொண்டு உள்ளே வருகிறாள். அவளே ராதையின் 'ஹான்ட் பாக்'கை எடுத்து, அதைத் திறந்து அதில் இருந்த திறப்பை வெளியே எடுக்கிறாள். அவளே முன் கதவைத் திறக்கிறாள். ராதை நிற்க முடியாத நிலையில் நிற்கிறாள்.

'ஆர் யு ஓல்ரைட்'?' என காரில் இருந்து ஓர் ஆணின் குரல் துல்லியமாகக் கேட்கிறது.

ஆங்கிலத் தூஷன வார்த்தையொன்றை உதிர்த்த ராதை, 'எனது அறைக்கு வரப் போகிறாயா?' எனக் கேட்கிறாள்.

காரில் இருந்து 'கெக்கே பிக்கே' என்று சிரிப்பொலி கேட்கிறது.

'அவளுக்கு வெறி இல்லை.' இன்னொரு ஆணின் குரல் கேட்கிறது.

முன் கதவு சத்தத்துடன் மூடப்படுகிறது. 'கார்' அங்கிருந்து புறப்படுகிறது. ராதை மாடிப்படியேறி வருகிறாள். உமா அறை வாசலுக்கு வருகிறாள். ராதை மேல் மாடியை அடைகின்றாள். அவளால் நேராக நிற்க முடியவில்லை. சுவரைப் பிடித்தபடி, தள்ளாடிய நிலையில் நடக்கிறாள். யதேச்சையாக தாய் அறைக் கதவு அருகில் நிற்பது அவளுக்குத் தெரிகிறது. தாயைச் சுட்டெரிப்பது போலப் பார்க்கிறாள். உமாவின் உள்ளத்தில் வேதனை கிளர்ந்தெழுந்தது. அதை ஆத்திரம் மீறியது. ஆனால், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியபடி மகளையே பார்த்தபடி நின்றாள்.

ராதை தன் அறைக்குச் சென்றுவிட்டாள். கதவைச் சத்தத்துடன் மூடினாள்.

நீண்ட நேரமாக உமாவை நித்திரை ஆட்கொள்ளவில்லை. மகளின் நடத்தை தான் எந்நேரமும் கண்முன் நர்த்தனமாடியது. அவளது ஒவ்வொரு நடவடிக்கையும் அவள் வாழ்க்கையின் அதாள-பதாளத்திற்குச் செல்வதாகவே உமாவுக்குத் தோன்றியது. இப்படியே அவளை விட்டால் அவள் கடைசியாக மிகவும் கீழ்த்தரமான வாழ்க்கையைத் தான் வாழப்போகிறாள் என்பது நிச்சயம். இதிலிருந்து அவள் மீட்சியடைவதென்றால் அவளைக் கெட்டியாக பீடித்துள்ள கெட்ட பழக்கவழக்கங்களை அவள் கைவிட வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்? தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சீலை என்ற மாதிரி அவளும் தாயின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறாளா? இருக்கலாம். ஆனால் ஒழுக்கத்தை அளவுக்கு மீறும் விதத்தில் அவள் இயங்குவதற்கு காரணம் என்ன? யோசனையை உமா விரிவுபடுத்தினாள். தந்தையின் பிரசன்னம் அங்கு இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாமா? இருக்கலாம். அப்படியொருவர் இருந்திருந்தால் ஆரம்பத்திலேயே அவளை

அவர் ஒழுங்காக வளர்த்திருப்பார். ஆனால், தந்தைமார் உள்ள குடும்பத்துப் பெண்களும் இவ்வாறான ஒழுக்கங் கெட்ட செயல்க ளில் ஈடுபடுகிறார்கள். அப்படியெனில் அவள் இவ்வாறு நடப்ப தற்கு காரணம் என்ன? உமாவின் யோசனை நீண்டதே தவிர ஓர் ஆக்கபூர்வமான தீர்மானத்திற்கும் அவளால் வர முடியவில்லை.

ராதையின் தந்தை எங்கே?

உமாவின் யோசனைக்குள் அவள் விவாகரத்துச் செய்த கணவர் - குணாளன் ஊடுருவுகின்றார். அவருடன் அவளது திருமண வாழ்க்கை பதினெட்டு வருடங்கள் நீடித்தது. இருவரும் திருமண பந்தத்தில் நீடிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்த போது, அவளை விவாகரத்து செய்வது என அவர் தீர்மானிக்கிறார். இறுதி யாக தனது முடிவை அவளிடம் அவர் கூறிய போது ராதைக்கு இரண்டு வயது. அவர்களது பதினெட்டு வருட திருமணப் பந்தத் தில் பதினாறு வருடங்கள் கழித்துப் பிறந்த குழந்தை அது.

நீண்ட நாட்களாக வீட்டில் தந்தையைக் காணாத ராதை அவரைப் பற்றி விசாரித்தாள். அந்த பிஞ்சுக் குழந்தைக்கு உண்மையைக் கூறினால் அதுக்கு புரியுமா? ஆரம்பத்தில் உமா வேளைக்கேற்ற வாறு பொய் கூறிச் சமாளித்தாள். ஆனால், அவளுக்கு பத்து வயது வர, அதைக் கொண்டாடுவதற்கு தாய் ஒரு பிறந்த நாள் விழாவை வீட்டில் வைத்தாள். அதில் ராதையின் வகுப்பு நண்பி கள் சிலர் கலந்துகொண்டனர். விழாவில் கலந்துகொண்ட பலரும் 'உன் அப்பா எங்கே' என்று கேட்க ராதைக்கு தர்மசங்கடமாகிவிட் டது.

'அப்பாவை அம்மா விவாகரத்து செய்துவிட்டாளா?' என துடுக் கான சிறுமி ஒருத்தி கேட்க, எல்லோரும் சிரித்துவிடுகின்றனர்.

ராதை கூனிக்குறுகிவிடுகிறாள்.

அன்றைய தினம் அவளால் தனது பிறந்த தினத்தில் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. தனது நண்பியின் வார்த்தைகள் தான் அவள் மனதை சதா சுற்றிச் சுழன்று குத்திக் குதறின. அவள் கூறுவது உண்மையாக இருக்குமா?

எல்லோரும் சென்று வீடு அமைதியில் மூழ்கிய போது, தாயிட மிருந்து அந்த உண்மையை வரவழைக்க ராதை முயன்றாள்.

தாய் உண்மையைக் கூறிவிடுகிறாள். அந்த நண்பி கூறியது உண்மை. 'ஏன் அப்பாவை விவாகரத்து செய்தீர்கள்?' எனக் கேட் டாள் ராதை.

'அதைப் பற்றி சொல்வதென்றால் நிறைய சொல்ல வேண்டும். உனது அப்பாவுக்கு என் மேல் சந்தேகம் இருந்ததே எமது விவா-கரத்துக்கு அடிப்படைக் காரணம்.'

'அப்பா இப்போது எங்கு இருக்கிறார்?'

'எனக்குத் தெரியாது. ஆனால், இங்கு தான் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்.'

'நான் அவரைச் சந்திக்கலாமா?'

'அவருக்கும், எனக்கும் உள்ள உறவு முறிந்த பின் நீ ஏன் அவ ரைப் பார்க்க வேண்டும்?'

'அவர் எனக்கு அப்பா. அவரைப் பார்ப்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.'

'உன்னைப் பார்ப்பதற்கு அவர் இது வரை முயற்சி எடுக்க வில்லை என்று உனக்குத் தெரியுமா?'

'எப்பொழுது அவரை விவாகரத்து செய்தீர்கள்?'

'பத்தொன்பது வருடங்களுக்கு முன். அப்பொழுது உனக்கு இரண்டு வயது.'

'அப்பாவின் புகைப்படங்கள் உள்ளனவா?'

'எல்லாவற்றையும் அழித்துவிட்டேன். அப்பாவின் எந்த ஓர் அடை யாளமும் இங்கு இல்லை.'

ராதையின் பிஞ்சு மனதில் வைராக்கியமொன்று முளைவிடுகின்றது. தந்தையை எப்படியாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று மனதில் கங்கணம் கட்டுகின்றாள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தந்தையைப் பற்றி தாயிடம் விசாரிப்பாள். தாயின் பதில் அவ ளின் மனதில் வளர்ந்திருக்கும் ஆர்வத்தைத் தணிப்பதாக விளங்க மாட்டாது. தாய் இல்லாத வேளைகளில் வீட்டைச் சல்லடை போட்டு தந்தை குறித்து ஏதாவது தடயம் கிட்டுகின்றதா என ஆராய்ந்தாள். ஆனால், ஒன்றுமே உருப்படியாகச் சிக்கவில்லை.

நாளடைவில் அவளுக்கு தாய் மீது ஆத்திரம், கோபம் ஏற்படு கின்றது. நண்பிகள் சிலரும் இடையிடையே அவளின் தந்தை பற்றி விசாரிக்கையில் அந்த மறுதலையான உணர்ச்சிகள் விகார மடைந்தன. அதன் தாற்பரியம் அவள் தாயிடம் உரையாடாத நாட்களும் கடந்துள்ளன. தாயைக் கண்டால் அவளை விட்டுச் செல்லும் மனோநிலையும் அவளுள் வளர்ந்தது. தாயிடமிருந்து அன்பான, பாசமிக்க வார்த்தைகள் வெளிவந்தாலும் அவற்றை அவள் வெறுத்தாள். அவற்றை உதாசீனமும் செய்தாள். காரண மின்றி தாய் மீது எரிந்துவிழுந்தாள். தாயை ஏசினாள். கண்களால் சுட்டெரித்தாள். மற்றவர்கள் முன் தாயை அவமானப்படுத்தினாள்.

உமாவின் நிலை துயரத்தில் தோய்ந்தது. மகளை தன் அன்பு வார்த்தைகளால் கட்டிப் போடலாம் என்று எண்ணியவளுக்கு அவ ளின் உதாசீனப் போக்கு வயிற்றில் நெருப்பை அள்ளிக்கொட்டி யது போலிருந்து.

காலக்கிரமத்தில் தாய்க்கும், மகளுக்கும் இடையான பாசப் பிணைப்பு அறுந்தது. அன்பு என்ற வார்த்தைக்கு அர்த்தம் இருக்க வில்லை. தாயை உற்று நோக்குவதைக் கூட ராதை மறந்தாள்.

இனி என்ன செய்வது என்ற கேள்வியே உமாவைச் சுற்றி சுற்றி வந்தது. அறுந்துள்ள பாசப் பிணைப்பினை எவ்வாறு மீளக் கட்டுவது?

பல நாட்களாக யோசித்தாள். ஒரு தீர்க்கமான முடிவுக்கும் வர வில்லை.

காலமும் அதன் போக்கில் முன்னேற்றம் அடைந்தது. ராதை பல் கலைக்கழகத்தில் பிரவேசிக்கும் நிலை ஏற்பட்டது. தன்பாட்டி லேயே தன் காரியங்களைச் செய்யும் பக்குவத்தையும் அடைந் தாள். இப்போதெல்லாம் தந்தையைப் பற்றிக் கேட்பதில்லை. ஆனால், அவள் நடத்தையில் மாற்றம் வெளிப்படையாகத் தெரிந் தது. மதுவை இடைக்கிடை நாட ஆரம்பித்துவிட்டாள். தாயினால் மகளின் இந்த துர்நிலையை மாற்ற முடியவில்லை. மகளின் நிலையை நினைத்து வேதனைப்படத் தான் முடிந்தது. அவளுக் குப் புத்திமதி சொல்லும் நிலையில் அவள் விளங்கவில்லை.

ஆனாலும், மகளை நேர்த்தியான வாழ்க்கைப் பாதையில் பய ணிக்கச் செய்வதற்கு என்ன முயற்சிகளை எடுக்கலாம் என்று உமா அடிக்கடி நினைப்பதுண்டு.

காலையில் எழுந்த பின் இந்த நினைவு வரவே அவளுள் புதிய தொரு யோசனை பிரசவமாகியது. அவள் இந்த இழிநிலையை அடைந்ததிற்கான அடிப்படைக் காரணம் என்ன? தந்தையின் பாசத்தை உணர்வதிலிருந்து அவள் தூரவைக்கப்பட்டுள்ளதால், அதன் தற்பரியமா இது?

இந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். சடுதியாக ராதையின் நண்பி அம்ருதாவின் நினைவு உமாவின் மனதுக்கு

வந்தது. அம்ருதா இவர்கள் வீட்டுக்கு வருவாள். அவள் கேரளா வைச் சேர்ந்தவள். குடும்பப் பெயர் பிஜு நாயர். அவளும், இன் னும் நான்கு மாணவிகளும் டவுன் ரவுனில் உள்ள 'பேஸ்மண்டில்' வாழ்கிறார்கள். ராதையை விட தமிழில் பேசுவதில் ஆர்வம் காட்டு வாள். உமாவுடன் சகஜமாக ஆங்கிலத்திலும், கேரளா மணத்துட னான தமிழிலும் உரையாடுவாள். அவளை நாடினால் என்ன?

அம்ருதாவின் அலைபேசி இலக்கங்கள் உமாவின் அலைபேசியில் சேமிக்கப்பட்டிருந்தன.

உமா நேரத்தை வீணடிக்கவில்லை. அம்ருதாவின் அலைபேசி யுடன் தொடர்பை ஏற்படுத்துகிறாள். எடுத்த எடுப்பிலேயே. 'அன்ரி', எப்படி சுகமா இருக்கிறீங்களா?' என அம்ருதா தமிழில் உற்சாகமாக குசலம் விசாரித்தாள்.

சம்பிரதாயபூர்வமான வார்த்தைக் கோர்வைகளின் பின் அவர்கள் உரையாடல் உமாவைச் சுற்றி வந்த பெரும் பிரச்சனைக்குத் தாவி யது.

'அன்ரி', அவளுக்கு தனது அப்பாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அடிக்கடி வருகின்றது. அதற்கு நீங்கள் ஒரு தடையாக இருக்கிறீர்கள் என அவள் நினைக்கிறாள். அதனால் ஏற்பட்ட ஒரு வன்மம் தான் அவள் மது அருந்துகிறாளோ என நினைக்கிறேன்.' அம்ருதா ஆங்கிலத்தில் உரையாடுகின்றாள்.

'உனக்கு பெற்றோர் இருக்கிறார்களா?'

'ஆம். எல்லோரும் ஆலாப்புழாவில் இருக்கிறார்கள்.'

'நீயும் மது அருந்துவாய் தானே?'

'ஆம் 'அன்ரி'.'

'ஏமாற்றம், வெறுப்பு, கோபம் போன்ற உணர்ச்சிகளைத் தணிப் பதற்காகவா நீ மது அருந்துகிறாய்?'

அம்ருதாவிடம் இருந்து பதில் வரத் தயங்குகிறது.

'நல்லது. நீ பதில் கூறத் தேவையில்லை. அவளை ஒரு நல்ல வழிக்கு கொண்டு வர விரும்புகிறேன். அதற்கு நான் என்ன செய் யலாம்?'

'அவளது அப்பாவைக் காட்டுங்கள். அவருடன் பழகவிடுங்கள்.'

இப்போது உமாவின் வாயடைத்துப்போனது. 'அது முடியாது' என அவள் மனம் கூறுகிறது. சில வினாடிகள் மௌனத்திற்கு அடி பணிகிறாள்.

'அன்ரி', ராதை ஒரு நல்ல பெண். ஒழுக்கமானவள். எங்கள் பல் கலைக்கழகத்தில் நிறைய ஆண்கள் அவள் பின்னால் சென்றார் கள். ஆனால், அவள் ஒருவரையும் ஏறெடுத்தும் நோக்கவில்லை. ஒரு முறை மாணவன் ஒருவன் அவள் பின்புறத்தில் கிள்ளிய போது அவனை அறைந்துவிட்டாள்.' அம்ருதா கூடுதலான தகவ லைப் பரிந்துரை போல வெளியிட்டாள்.

'அப்படியென்றால் அவளுக்கு ஆண் நண்பர்கள் இல்லையா?'

'ஒருத்தன் இருக்கிறான். அவனும் உங்கள் நாட்டைச் சேர்ந்தவன். நரேன்... இருவரும் வரம்பு மீறாமல் பழகிவருகிறார்கள். அவனைத் தான் அவள் திருமணம் செய்ய விரும்புகிறாள்.'

உமாவின் உள்ளத்தில் சின்னதொரு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அந்த மகிழ்ச்சி நீண்ட நேரமாக அவள் மனதினுள் முகாமிட்டிருந் தது.

உரையாடல் முற்றுப்புள்ளி அடையும் போது, நரேனின் அலை பேசி இலக்கங்களை தருமாறு உமா கேட்கிறாள். அவன் மூல மாக மகளை நல்வழிப்படுத்தலாம் என்ற நம்பிக்கை உமாவின் உள்ளத்தில் இறுகியிருக்கின்றது.

அன்றைய பொழுது இனிமையாகக் கழிந்தது. மாலையில் ராதை வீடு வந்த போது உமாவின் பார்வையில் கடந்த சில வருடங்க ளாக மறைந்திருந்த அன்பும், பாசமும் புதிய தோற்றம் பெற்றிருந்தன. ஆனால், ராதை ஒன்றையுமே கண்டுகொள்ளவில்லை.



rameswaran@thaiveedu.com





# அப்புக்குட்டி பார்த்த படம்

அப்புக்குட்டிக்குப் பொண்டாட்டி பிள்ளைகள் என்று எவரும் கிடையாது. ஒரு காலத்தில் அவருக்குக் கல்யாணம் செய்துவைத்தார்கள் என்றும், ஆறுமாதத்தில் அவருடைய அடியும் உதையும் தாங்கமுடியாமல் அவரது மனைவி அவரை விட்டுப் போய்விட்டதாகவும் யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருந்தேன். அப்புக்குட்டியைப் பார்ப்பவர்கள் அவரை ஒரு முரடனாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எந்த வேலையைக் கொடுத்தாலும் அதைக் கச்சிதமாக முடித்துக் கொடுக்கும்வரை அங்கு இங்கு அசையமாட்டார். அதிலும் பனையோலை கொண்டு வேலி அடைப்பதில் அப்புக்குட்டியை மிஞ்ச ஊரில் எவரும் இல்லை. அவரது நுணுக்கமான வேலைப்பாடும் எதிர்பார்ப்புகளும்தான் அவரது மனைவி அவரைவிட்டு விலகியதற்கான காரணமாக இருக்குமோ என்று நான் யோசித்ததுண்டு.

கோயில் திருவிழாக்கள் என்றால் அப்புக்குட்டிக்கு ஆனந்தம். கோயில் பிரசாதங்கள் தாராளமாகக் கிடைக்கும் என்பதால் மட்டுமல்ல, அவருக்குச் சின்னமேளம் பார்ப்பதில் அப்படி ஒரு ஆர்வம். கந்தசுவாமி கோயில் ஆறாம் திருவிழாவின் போதும், சூரியரின் ஒன்பதாம் திருவிழாவின் போதும் இரவில் சின்னமேளம் எனப்படும் சதிர்க்கச்சேரி நிச்சயம் உண்டு என்பது ஊரில் எல்லோருக்கும் தெரிந்த விடயம். முதலில் பெரியமேளம் எனப்படும் தவில் கச்சேரி. அதற்குப் பின்னர் தான் சின்னமேளம்.

கோயில் மேற்கு வீதியின் ஓரமாகக் கட்டப்பெற்றிருந்த ஒரு தென்னோலைக் குடிலுக்குள் இருந்து இரண்டு இளம்பெண்கள் சலங்கை ஒலி கேட்கும்படி மெல்ல அசைந்து பக்தர்களையும் பார்வையாளர்களையும் கடந்து சதிராட்டம் நடைபெறவிருக்கும் மேடைக்கு வரும்போது நள்ளிரவு கடந்துவிடும். அதுவரை கோயில் வீதியில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் உட்பட அனைவருக்கும் சதிர்க்கச்சேரி ஆரம்பமாகவிருக்கும் செய்தியை, புளியங்கூடல் சண்முகத்திடம் திருவிழாவுக்கென வாடகைக்குப் பெற்றிருந்த ஒலிபெருக்கி அறிவித்துவிடும். திருவிழாவுக்குக் கூட்டம் கூடிவிடும்.

**- பால. சிவகடாட்சம்**

**ஆறுமோ ஆவல்**
**ஆறுமுகனை நேரில் காணாது**
**ஆறுமோ ஆவல்**

என்று அந்த நடனப்பெண்கள் முதலாவது பாடலைத் தொடங்கும் போது அங்கு கூடியிருந்தோரிடம் அமைதி நிலவும்.

மூலஸ்தானத்துக்கு நேர் எதிரே வெறுந்தரையில் அமையப்பெற்றிருக்கும் சதிர்மேடைக்கு வலப்புறம் ஆண்களுக்கும் இடதுபுறம் பெண்களுக்குமாக ஒதுக்கப்பட்டிருக்கும். பக்கவாத்தியக்காரர்களின் பின்னே இருந்த மகளிர் கூட்டத்துக்கு எதிரே நின்றுகொண்டிருக்கும் ஆண்பார்வையாளர் மத்தியில் முதல் வரிசையில் தவறாமல் இடம்பிடித்துவிடுவார் அப்புக்குட்டி.

வீட்டைவிட்டு வெளியே வர அனுமதிக்கப்படாத இளங்குமரிகளுக்கு வருடத்தில் அன்றுதான் வெளியாட்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்கு குவிந்திருக்கும் இளைஞர்கள், எதிர்ப்பக்கமாக அம்மாக்களின் பின்னே மறைந்து நின்று சின்னமேளம் பார்க்கும் இளம்பெண்களை நோட்டம் விடுவார்கள்.

ஆட்டத்தை ரசிப்பவர்கள், ஆடுபவர்களை ரசிப்பவர்கள், பார்வையாளர்களை ரசிப்பவர்கள் என்று பலவிதமான ரசிகத்தன்மை கொண்ட மாந்தர் அங்கு கூடியிருப்பார்கள். அப்புக்குட்டி ஆட்டத்தை மட்டுமே ரசிப்பவர் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். மறுநாள் எங்கள் வீட்டுக்கு வரும் அப்புக்குட்டி முதல்நாள் தாம் பார்த்து ரசித்த ஆட்டத்தை அற்புதமாக எமக்கு நடித்துக் காட்டும் போது, ஆட்டத்தை எவ்வளவு தூரத்துக்கு அனுபவித்து ரசித்திருக்கின்றார் என்பது எமக்குப் புரிந்துவிடும். அதேசமயம் ஆடிக்கொண்டிருக்கும் அந்த அப்பாவிப் பெண்களின் அங்கங்கள் பற்றிக் கோயில் என்றும் பாராமல் நேர்முக வர்ணனை செய்து கொண்டிருந்த பரமலிங்கத்தின் நினைவு எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. பேசிவரும் மணப்பெண்களுக்கெல்லாம்

ஒவ்வொரு குறையைக் கண்டுபிடித்துத் தட்டிக் கழித்துக் கொண் டிருந்த பரமலிங்கம் கடைசிவரை கலியாணமே செய்துகொள்ள வில்லை என்பது வேறு கதை.

சின்னமேளம் நடைபெறும் நேரங்களில் அப்புக்குட்டி எப்போதும் சூரியப்பாவின் பக்கத்தில் அமர்ந்திருப்பார். இருவரும் சுருட்டு சுற்றுவதற்காக ஒன்றாகப் போய் வருபவர்கள். அப்புக்குட்டிக்கு சூரியர்மேல் ஒரு மரியாதை கலந்த நட்பு உண்டு. சின்னமேளத் தின் ஆட்டம் உச்சகட்டத்தில் இருக்கும்போது சூரியர் பின்குடு மியை உதறி முடித்துக்கொண்டு எழும்பி ஒரு முறை ஆட்ட மேடையைச் சுற்றிவருவார். அவர் வரும் பாதையில் எதிர்ப்படும் பார்வையாளர்களைச் சற்றுப் பின்னுக்குப் போகுமாறு அதட்டு வார். சின்னமேளம் ஆடுபவர்களுக்குப் போதிய இடம் கொடுப் பதுதான் அவரது நோக்கம்போலத் தெரிந்தாலும் நான்தான் இந்தத் திருவிழா உபயகாரன் என்பதை அங்கிருந்தோருக்குக் காட்டிக்கொள்வதுதான் அவரது உள்நோக்கமாக இருக்கும்.

சின்னமேளம் ஆடிக்கொண்டிருக்கும் வேளையில் இரண்டாம் முறை சூரியர் எழும்பும்போது அப்புக்குட்டி அவரின் கையைப் பிடித்து இழுத்து இருத்திவிடுவார். இம்முறை சூரியர் எழும்புவது ஆட்டத்தை நிறுத்தி சாமிதூக்க ஆயத்தப் படுத்துவதற்குத்தான் என்பதை அப்புக்குட்டி அனுபவபூர்வமாக அறிந்து வைத்திருந் தார். அவருக்காக இன்னும் கொஞ்ச நேரம் ஆட்டம் நீடிக்க அனுமதி வழங்குவார் சூரியர். அப்புக்குட்டியின் இந்த உதவியை சின்னமேளம் பார்த்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள் எதிர்பார்த் திருப்பார்கள். வேறு எவர் கேட்டாலும் சூரியர் தன் பிடிவாதத்தை விடமாட்டார் என்பது அவர்களுக்குத் தெரியும்.

பல்கலைக்கழகப் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டுப் பரீட்சையை எழுதிமுடித்துவிட்டு வீட்டில் நான் ஓய்வெடுத்துக்கொண்டிருந்த நேரம் அது. எங்கள் வீட்டு வேலியைப் பனையோலையால் அடைத்து முடித்துவிட்டு ஒரு வாளியில் சாணியைக் கரைத்துக் கொண்டிருந்தார் அப்புக்குட்டி. எதற்காக இப்போது சாணி கரைத் துக் கொண்டிருக்கின்றார் என்று அவரிடம் கேட்க நினைத்தேன். அதற்குள் பத்திரிகையில் வெளிவந்த துணைவன் சினிமாப்பட விமர்சனத்தைப் படித்துக் கொண்டிருந்த எனக்குச் சடுதியாக ஒரு எண்ணம் தோன்றியது. அப்புக்குட்டி வாழ்நாளில் ஒருபோதும் சினிமா பார்த்திருக்கமுடியாது. சினிமா என்றால் என்னவென்று அவர் ஊகித்திருக்கவும் முடியாது. அவரை ஏன் நான் படம் பார்க் கக் கூட்டிப்போகக்கூடாது?

சாணி கரைத்துக் கொண்டிருந்தவரை அழைத்தேன்.

'நாளைக்கு படம் பார்க்க யாழ்ப்பாணம் போகவிருக்கின்றேன். நீரும் என்னோடு வரவேண்டும்' என்று அவரைக் கேட்டுக்கொண் டேன். நான் சொல்வதற்கு அவர் ஒருபோதும் மறுப்பு தெரிவித்தது கிடையாது.

சொல்லிவைத்தபடி மறுநாள் காலை பதினொரு மணிக்கு வெள் ளைவேட்டி வெள்ளைச்சேட்டுடன் செருப்பும் அணிந்துகொண்டு என்முன்னே வந்து நின்றார் அப்புக்குட்டி. பிற்பகல் 2மணிக் காட்சிக்குப் போவது என் திட்டம். நாங்கள் இருவரும் வீட்டுப் படலையைத் திறந்து தெருவில் இறங்கியபோதுதான் அப்புக்குட்டி அக்காட்சியைக்கண்டார். முதல்நாள் அவர் பனையோலையால் அடைத்து முடித்திருந்த எங்கள் வீட்டு வேலியைப் பசுமாடுகள் இரண்டு மேய்ந்து கொண்டிருந்தன. அப்புக்குட்டி கோபக்காரர் என்று ஊரார் சொல்வதைக் கேட்டிருந்தேன். அப்போதுதான் அவ ரது கோபத்தை நேரில் பார்க்க முடிந்தது. அருகில் நின்ற பூவரசு மரத்தில் இருந்து ஒரு கிளையை முறித்தெடுத்துக்கொண்டு அந்த மாடுகளை நோக்கிப் பாய்ந்தார். தனது ஆத்திரம் தீருமட்டும் அவற்றைக் கலைத்துக் கலைத்து அடித்து விரட்டினார்.

நேற்றுக் கரைத்து வைத்திருந்த சாணி நிரம்பிய வாளியை வெறித்துப் பார்த்தபடி நின்றார். எதற்காக அந்தச் சாணிக்கரைசல் என்பதை அப்போது அறிந்துகொண்டேன். பட்டினம் சென்று திரும்பி வந்ததும் வேலிக்குச் சாணி அடித்துவிடலாம், அதற்குள் மாடுகள் வேலியைத் தின்றுமுடித்துவிடாது என்று கூறி அவரைச் சமாதானப்படுத்தினேன். வேலிக்குச் சாணி அடித்து விட்டுத்தான் வருவேன் என்று அப்புக்குட்டி வராமல் நின்றுவிடுவாரோ என்பது எனது பயம்.

நானும் அப்புக்குட்டி அண்ணையும் வடக்கு ரோட்டில் எட்டாம் கட்டை பஸ் தரிப்புமிடத்தை நோக்கி நடந்துகொண்டிருந்த அந்த மத்தியான வேளையில் ஒருவர்கூட வழியில் எதிர்ப்படவில்லை. அதனால் எதற்காக நாங்கள் இருவரும் பட்டினம் போகின்றோம் என்பதை எவருக்கும் விளக்கவேண்டிய அவசியமும் ஏற்பட வில்லை. பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் தரிப்பு நிலையத்துக்கு வந்து சேர்ந்துவிட்டோம். படம் தொடங்க இன் னமும் நேரம் இருக்கின்றது. எதிரே ராணி தியேட்டர் கண்ணில் பட்டது. துணைவன் படம் ஓடுவது வெலிங்டன் தியேட்டரில்.

முதலில் அப்புக்குட்டிக்குத் தியேட்டர்களைக் காட்டத் தீர்மானித் துக் கொண்டேன். ராணி தியேட்டரின் நுழைவாசலுக்குப் பக்கத் தில் ஆங்காங்கே பலகைகளில் ஒட்டப்பட்டிருந்த சினிமாப்பட ஸ்டில்களைப் பார்வையிட வைத்தேன். பின்னர் வெலிங்டன் தியேட்டரை நோக்கி நடந்தோம். படம் தொடங்க இன்னமும் நேரம் இருந்தது. தியேட்டரின் வெளியே கூட்டம் எதுவும் இல்லை. அப்படியே பக்கத்தில் இருந்த வின்ஸர் தியேட்டரை நோக்கி நடந்தோம். வின்ஸர் தியேட்டரிலும் அங்கு ஒட்டப்பட்டிருந்த படங் களை மிகுந்த அக்கறையோடு பார்த்துக்கொண்டார் அப்புக்குட்டி. படம் பார்த்தாகிவிட்டது இனி வீட்டுக்குத் திரும்பலாமா என்னும் கேள்விக்குறியுடன் என்னை நோக்கினார்.

சினிமாப்படம் என்றால் என்ன என்பதை அவரே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும் என்று எண்ணிக்கொண்டே அவரைத் துணைவன் படம் ஓடும் வெலிங்டன் தியேட்டருக்கு மீண்டும் கூட்டிச் சென்றேன்.

இரண்டாம் வகுப்பு ரிக்கட் இரண்டு எடுத்துக்கொண்டு தியேட்ட ருக்குள் நுழைந்தோம். அப்புக்குட்டி என்னைப் பின்தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தார். தியேட்டரில் அன்று கூட்டம் இல்லை. நாற்காலிகள் பெரும்பாலும் காலியாகக் கிடந்தன. தலையைத் திருப்பிச் சுற்றுமுற்றும் பார்த்த அப்புக்குட்டியின் முகத்தில் ஒரு வித ஏக்கம் தெரிந்தது. ஓலைக்கொட்டகையில் நாடகம் பார்த்த அனுபவம் அவருக்கு இருந்திருக்க வேண்டும். கதிரைகள் முழுவ தும் நிரம்பினால்தான் படம் தொடங்கும் என்பதில்லை. இரண்டு மணிக்குச் சரியாகப் படம் ஆரம்பிக்கும் என்பதை அவருக்கு உணர்த்தினேன்.


லைற்றுகள் அணைக்கப்பட்டுத் திரையில் படம் தெரிந்தபோது அப்புக்குட்டியின் முகத்தைப் பார்த்தேன். அவரோ வாயை ஒருகையால் மூடியபடி ஆச்சரியத்துடன் திரையையும் என்னையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டேயிருந்தார். படம் ஓடிக்கொண்டிருந் தது. ஒரு கட்டத்தில் முருகபக்தரைக் கொத்த வந்த பாம்பை எங்கிருந்தோ வந்த மயில் காலில் பற்றித் தூக்கிச் செல்லும்போது அப்புக்குட்டிக்கு ஏற்பட்ட வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை.

நான் அப்புக்குட்டியைப் படம் பார்க்கக் கூட்டிச் சென்ற விடயம் என் அக்கா ஒருவருக்கு மட்டுமே தெரியும். அடுத்த நாள் மலர்ந்த முகத்துடன் எங்கள் வீட்டுக்கு வந்த அப்புக்குட்டி முதனாளைய தனது தியேட்டர் அனுபவத்தையும் பார்த்த படத்தின் காட்சிகள் சிலவற்றையும் அக்காவுக்கு நடித்துக் காண்பித்துக் கொண்டிருந் தார். தியேட்டருக்குள் பக்கவாட்டில் நகர்ந்து போய் இருக்கையில் அமர்ந்தது தொடக்கம் எதனையும் அவர் விட்டுவைக்கவில்லை.

அந்தக் கிழமையில் ஒருநாள் அப்புக்குட்டி எங்கள் வீட்டில் மேசையில் வைக்கப்பட்டிருந்த வீரகேசரி பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். எழுதப்படிக்கத் தெரியாத அப்புக் குட்டி எதனைப் பார்க்கிறார் என்று சற்று எட்டிப்பார்த்தேன். வீரகே சரியில் வந்திருந்த சினிமா விளம்பரப் படங்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அப்புக்குட்டி என்னை நிமிர்ந்து பார்த் தார். 'எனக்கு மட்டும் பேசமுடிந்திருந்தால் நான் எங்கேயோ போயிருப்பேன்' என்று சைகையால் எனக்குத் தெரிவித்தார் பிறவி யில் இருந்தே காது கேளாதவராயும் வாய் பேசாதவராயும் அறி யப்பட்ட அப்புக்குட்டி அண்ணை.



Sivakadadcham@thaiveedu.com



# கந்தசாமியின் கனவு

- மு. சிவலிங்கம்

நடந்து முடிந்த உள்ளூரட்சி தேர்தலில் வெற்றி பெற்ற கட்சிகள் அனைத்தும் மூலை முடுக்குகளிலெல்லாம் வெற்றி விழா நடத்திக்கொண்டிருக்கின்றன.

கந்தசாமி மெம்பராக இருக்கும் கட்சி நாளை காலையில் தோட்டத்து கிரிக்கெட் மைதானத்தில் வெற்றி விழா நடத்தவிருக்கிறது. கணேசும், ரவியும் மைதானத்துக்கு அருகில் இருக்கும் அம்மன் கோவில் தேர் கூடாரத்தில் நான்கு பெரிய காட்போட் பெட்டிகளை ஆட்டோவிலிருந்து இறக்கினார்கள். பெட்டிகளை இறக்கிவிட்டு ஆட்டோ வண்டிகள் திரும்பி ஓடின. ‘காட்போட் பெட்டிக்குள்ள என்னப்பா கொண்டு வந்திருக்கீங்க...?’ என்று கந்தசாமி விசாரித்தான். ரவியும், கணேசும் ஒருவர் மாற்றி ஒருவர் சந்தோசம் தாங்க முடியாமல் பதில் சொன்னார்கள்

‘மாமு...! அவ்வளவும் சர வெடி...! தோட்டத்து முச்சந்தியிலிருந்து கிரிக்கெட் கிரவுன்டு வரைக்கும் போகும் ஊர்வலத்துல சர வெடி கொளுத்தச் சொல்லி நம்ம தலவரு ஓடர் போட்டிருக்காராம்!’ என்றார்கள். ‘ஒரு கிலோ மீட்டருக்கு சர வெடி கொளுத்தனுமா...?’ கந்தசாமி ஆச்சரியமாக வாயைப் பிளந்தான். ‘என்னா மாமு... நம்ம தலவர் மினிஸ்டராகிட்டாரே! ஒரு கிலோ மீட்டர் என்னா... ஏழு கிலோ மீட்டருக்கும் சர வெடி கொளுத்துவோம்!’ என்றான் ரவி. ‘இந்த கூட்டத்துக்கு எவ்வளவு செலவாகும்?’ கந்தசாமி கேட்டான். ‘கொறைஞ்சது ஒன்னர லச்சம் போகும் மாமு.’ ‘ஒரு நாள் கூத்துக்கு ஒன்னர லச்சமா...?’ கந்தசாமி மீண்டும் வாயைப் பிளந்தான்.

‘சர வெடி செலவு... சவுன்டு செலவு... ஸ்டேஜி செலவு... வர்றவங்களுக்கு சாப்பாட்டுச் செலவு... அப்புறம் தண்ணி, வெண்ணி... இவ்வளவு சங்கதிகளுக்கும் ஒன்னர லச்சம் போகாதா மாமு?’ என்று திருப்பிக் கேட்டான் கணேஷ். ‘செலவு பணத்த தலவரு தருவாரா? சங்கத்தில தருவாங்களா?’ என்று கந்தசாமி இழுத்

தான். 'எல்லாம் தோட்டத்து கலெக்ஷன்தான். ஆளுக ஆயிரம் ரூவா சம்பளத்துல புடிக்க ஒத்துக்கிட்டாங்க. என்னா மாமு முழிக் கிறீங்க'. 'ஒரு நாளு சம்பளம்...!' ஆளுக ஒத்துக்கிட்டா ஒன்னர லச்சம் ரூவா ஜுஜுபி மாமு' என்று, ரவியும் கணேசும் தேர் கூடாரத்தைப் பூட்டிவிட்டு, வேகமாக ஓடினார்கள்.

சீட்டியும், பாட்டுமாக சின்னப் பயல்கள் ஓடுவதை கந்தசாமி வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஜுஜுபி...!' கந்தசாமிக்கு இந்த ஜுஜுபியைப் பற்றி ஒரே குழப்ப மாகவிருந்தது.

ஒன்னர லச்சம் ரூவா ஜுஜுபி... ஒரு நாளு சம்பளம் ஜுஜுபி... மாசா மாசம் சம்பளத்துல புடிக்கும் சந்தாப் பணமும் ஜுஜுபி... இருங்கடீ... இருங்க...! ஒங்க கச்சியும் சங்கமும் சுருக்கா... ஜுஜு பியா போகத்தான் போவுது...!' கந்தசாமி மனதுக்குள் கறுவிக் கொண்டு பையன்கள் ஓடிய பாதையிலேயே நடந்தான்.

நாளைய கூட்டத்துக்கு பத்து கொழுந்து மாலைகளும், பத்து பூ மாலைகளும், பெரிய தலைவருக்கு ஆளுயர செவ்வந்திப்பூ மாலையும் ஒரு பூச்செண்டும் கட்டும்படி தோட்டக் கமிட்டித் தலை வர் கந்தசாமிக்கு பொறுப்பு கொடுத்திருந்தார்.

மாலை கட்டுவதில் கந்தசாமி அந்த தோட்டத்திலேயே பெரிய விற் பன்னன். அங்கே பத்துக்கு மேற்பட்ட கந்தசாமிகள் இருப்பதால் அவனை 'மாலைக்கட்டி கந்தசாமி' என்றே கூப்பிடுவார்கள். சாவு, சடங்கு, கலியாணம், திருவிழா, கட்சி கூட்டம், தேர்தல் கூட்டம் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் கந்தசாமி கட்டாத மாலைகளே கிடை யாது. அவன் அழகான மலர் வளையம் கட்டி... செத்த வீட்டுக்கு தூக்கிக்கொண்டு போனால் பெட்டியில் கிடக்கும் பிணங்கூட எழும்பி ரசித்து விட்டு மீண்டும் படுத்துக்கொள்ளும்.

இந்த வருசமோ வரட்சிக் காலம்... பூக்கள் தேடுவதே கஷ்டமான காரியமாகும். இந்த வாரம்தான் மழை பெய்திருக்கிறது... காடுகள், மேடுகள் பக்கம் மினக்கிட்டு அலைந்து திரிந்தால், கொஞ்சம் பூக்கள் சேகரிக்கலாம்... மாலைகளின் நினைவுகளோடே கந்தசாமி வீட்டுக்குள் நுழைந்தான்.

கந்தசாமியின் சம்சாரம் சரசு, தான் கொய்து வந்த ஒரு கூடை கொழுந்தை காட்டிச் சிரித்தாள்... 'மாமா...! இந்த ஒரு கூட கொழுந்து, ஒரு நாள் பேர் சம்பளத்தோட ஓவர் கிலோ காசையும் சேத்தா... தொள்ளாயிரம் ரூவா பெறுமதி. தேயிலத் தூளு தயா ரிச்சா கம்பெனிக்கு டாலர் கணக்குப்படி பத்தாயிரம் கெடைக்கும். அநியாயமா மால கட்டி வீணா போகப்போகுதே.' என்று கவலை- யோடு அவனைப் பார்த்தாள்.

'ஒனக்கு கொழுந்து கவல... எனக்கு பூ தேடுற கவல... என்னா செய்ய...? எல்லாம் இந்த களவானிப் பயலுக கழுத்துல போடத் தான்.' அவனும் கவலையோடு அவளைப் பார்த்தான். சரசு அவ- னிடம் ஓர் நல்ல செய்தியைச் சொன்னாள் 'ஒரு கெழமையா பெஞ்ச மழைக்கு சுடு காட்டுப் பூவெல்லாம் பூத்து பூஞ்சோ லையா இருக்குது மாமா... ரெண்டு கூட பறிக்கலாம். யாருக்கும் தெரியாம ஆறு மணி போல போயி இருட்டுக்கு முன்ன பறிச் சிக்கிட்டு வாங்க...' என்றாள். 'சுடு காட்டுப் பூவுல மால கட்டினா ஆவிகளும் கூட வருமாமே புள்ள...?' 'ஆவி வந்து ஒங்களையும், என்னையுமா புடிக்கப் போவுது? அநியாயம் செய்யற அரசியல் வாதிங்க ஒடம்புலதானே நொழையப் போவுது.' என்று சரசு கிண்ட லோடு தைரியப்படுத்தினாள்.

அந்தி சாயும் நேரம்... மயானம்.

கந்தசாமி ஒரு பெரிய சாக்குப் பையை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, அக்கம் பக்கம் பார்த்து... தன்னை எவரும் கவனிக் கிறார்களா... என்றபடி சுடுகாட்டை நோக்கி கள்ளநடை நடந்தான்.

சுடுகாட்டில் ஒரு சில கல்லறைகள் மட்டும் இருந்தன. மற்றவை- யெல்லாம் குழி மேடுகள்தான்...

சுடுகாட்டில் படுத்துக்கிடக்கும் சந்தன மேரி அக்கா... மறு பக்கம் மரியசூசை மாமன்... இன்னும் கொஞ்சம் தள்ளி கள்ளு குடித்தே காட்டுக்கு வந்து விட்ட நண்பன் ராஜரத்தினம்... அவனுக்கடுத்து பாக்கியலெச்சுமி... அடுத்து... பீடி கந்தையா அண்ணன்... அடுத்து... கோழித்திருடி பெரியசாமி... எல்லோரும் கந்தசாமியை ஆசையோடு வரவேற்றார்கள். அவர்களுக்கிடையில் மாலைகளுக் கேற்ற பூக்கள் மலர்ந்து சிரித்துக்கொண்டிருந்தன.

'கந்து தம்பி சொகமா இருக்கியா? சரசு புள்ள குட்டிகளெல்லாம் நல்லா இருக்காங்களா...?' சந்தன மேரி அக்கா அன்போடு விசாரித்தார். 'ஓய் கந்தா... என்னா திடீர்னு இந்தப் பக்கம்...?' மரிய சூசை மாமன் விசாரித்தார். 'நாளைக்கி கட்சி தலைவரு வர்றாரு... தோட்டத்தில கூட்டம் போடுறோம்... பத்து மால கட்டச் சொன்னாங்க... அதுக்குத்தான் பூ பறிக்க வந்தேன்' என்று பணி- வோடு கந்தசாமி பதில் சொன்னான். சூசை மாமனுக்கு கோபம் வந்து விட்டது... 'நீங்கெல்லாம் மாறவே மாட்டீங்களாடா... கட்சி காரனுக்கு மால கட்டி போடுறதும்... வோட்டு பொறுக்கி குடுக்குற தும், சங்கத்துக்கு சந்தா சேத்து குடுக்குறதும்... சாராயம்... சோத் துப்பார்சல் பின்னால ஓடுறதும்... *சீச்சீ...! சீச்சீ...! சீச்சீ...!*' என்றார்.

கந்தசாமி அசடு வழிய மறு பக்கம் நடந்தான். 'டே கந்து... என் னடா திரும்பி பாக்காம போற...?' என்றான் ராஜரத்தினம். 'மன்னிச் சிக்க மச்சி... ஒன்ன மறந்திட்டேன்.' என்றான் கந்தசாமி. 'என்னா விசேசம்... எதுக்கு பூ பறிக்க வந்தே...' என்றான் ராஜரத்தினம். 'நாளைக்கி தேர்தல் வெற்றி விழா கொண்டாடுறோம்... கட்சி தலைவர்மாருங்க வாறாங்க... மால கட்டி போடணும்... அதுக்கு தான் பூ பறிக்க வந்தேன்... சூசை மாமன் என்ன நல்லா ஏசிப்புட் டாரு.' என்றான் கந்தசாமி. 'நீங்கெல்லாம் திருந்தவே மாட்டிங் கடா...?' ராஜரத்தினமும் கோபமாகப் பேசினான். 'நீ பூ பறிச்சிக் கிட்டுப் போயி எல்லாருக்கும் மாலக் கட்டிப்போடு... நாங்க எல்லாரும் பூவுக்குள்ள ஆவியா நொழைஞ்சி... கச்சிக்காரனுங்கள என்னாப் பாடு படுத்தப்போறமுன்னு பாரு...' என்றான்.

'கந்தசாமிண்ணே...! எங்கவூட்டுக்கார நாயி எப்பிடியிருக்கான்...? நா பெத்த செல்லங்கெல்லாம் எப்பிடியிருக்காங்க...?' சுடுகாட் டுக்கு வந்தும் அழுகையும் கண்ணீருமாக பாக்கியலெச்சுமி கேட் டாள். 'அய்யோ தங்கச்சி! ஒம்புருசன் ஆறுமோ... நீ செத்து கரு மாதி முடிச்சி எட்டாம் நாளே... அந்தக் கருவாச்சி... புஸ்பராணி குட்டிய கூட்டிக்கிட்டு வந்திட்டான்...!'

'அட கபோதி நாயே...! எம்புள்ளைக ரெண்டும் என்னாச்சி அண்ணே...?' பாக்கியலெச்சுமி கதறியழுதாள். 'புள்ளைக ரெண் டையும் புரோக்கர் பொன்னையா மூலம் கொழும்பு பக்கம் அனுப் பிட்டான். அட்வான்ஸ் பணம் பத்தாயிரம் கெடைச்சிச்சாம்... தியேட்டர்ல படம் பாத்து ரொம்ப நாளாச்சின்னு புஸ்பராணியக் கூட்டிக்கிட்டு நேத்து டவுனுக்குப் போய்க்கிட்டிருந்தான்.' பாக்கிய- லெச்சுமி கதையைக்கேட்டுப் பதறி போனாள். 'கந்தசாமிண்ணே... ஒங்கமேல சத்தியம்... இன்னையோட எண்ணி எட்டு நாளைக் குள்ள அந்த நாயிப்பயல சுடுகாட்டுக்கு கொண்டு வந்து சேக் காட்டி எம்பேரு பாக்கியலெச்சுமி இல்ல...' என்று சபதம் போட்டு சுடுகாடே அதிரும்படி சத்தம் போட்டாள்... கந்தசாமி அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, எல்லோரையும் கைகூப்பி வணங்கிவிட்டு, பூ பறிக்கச் சென்றான்.

இரவு எட்டு மணி.

வாசலில் ஆட்டோ வந்து நின்றது. இரண்டு பெரிய கூடை நிறைய செவ்வந்திப் பூக்கள். பண்டாரவளையிலிருந்து கொண்டு வந்திருந் தார்கள்.

'கந்தசாமிண்ணே! காலையில எட்டு மணிக்கெல்லாம் எல்லா மாலையும் ரெடியா இருக்கணுமாம்... நம்மக் கூட்டத்துக்கு ஜனா திபதி... இல்லாட்டி பிரதம மந்திரி... யாராவது ஒருத்தர் வருவாங் கலாம். இப்பவே வேலையத் தொவங்கு...' ஆட்டோவில் வந்தப் பையன்கள் பறந்தார்கள்.

கந்தசாமியும், சரசும் பூக்களை இஸ்தோப்பு முழுவதும் கொட்டிப் பரப்பி வைத்தார்கள். கந்தசாமி மலைத்துப் போனான். 'ஆளுயர

மால...!. குஞ்சம் தரையைத் தொடணுமாம்...! ஒரு நாளு கூத்துக்கு இந்தப் பயலுக செய்ற அட்டுழியத்தப் பாரு...!' கந்தசாமியின் வாய்க்குள் இன்னும் என்னவெல்லாமோ வார்த்தைகள் வந்து விழுந்தன.

சாமக்கோழி கூவியது. எல்லா மாலைகளும் கட்டி முடிந்தன... சின்ன மாலைகளைப் பக்குவமாக நீட்டி வாழை மட்டையில் பொட்டலம் கட்டியிருந்தார்கள். கழுத்தில் அணியும்போது அன்று மலர்ந்த பூக்களாகவே அவை மிளிரும்! தலைவருக்கு ஆளுயர மாலை...! அதை கந்தசாமி வீட்டு வாசலில் நிற்கும் கொய்யா மரத்தில் மாட்டியிருந்தான். ராஜாதி ராஜ ராஜ கம்பீர... மாலை. இரவு பனியில் குளித்துக்கொண்டிருந்தது...! சரசு குபுக்கென சிரித்தாள். 'குஞ்சத்துல எல்லா ஆவிகளும் கூடியிருக்குமோ மாமா...' என்றாள். 'நடுச்சாமத்தில் ஆவி கதை பேசாதடி...' கந்தசாமி கொஞ்சம் பயந்தான். 'நிச்சயம் தலவரு மாலையிலதான் ராஜரத்தினம் இருப்பான்...' வாழ மட்டைகளுக்குள் இருக்கும் மாலைகள் சின்னத் தலைவர்களுக்கு... அங்கேயும் முணுமுணுக்கும் சத்தம் கேட்பதாக சரசுவின் காதுக்குள் குசுகுசுத்தான். 'பாருடி... செத்து மக்கிப் போனாலும் தொழிலாளிக ஆவி... ஏமாத்துக்காரனுங்க மேல இன்னமும் கோவமாத்தானே இருக்கு.' அவனுக்கு அப்படியும் ஒரு ஆசையான நம்பிக்கை துளிர் விட்டது.

அந்த ஏழைக்குடும்பத்தின் கலைத்துவப் புலமைகள்... மாலைகளாகி... புனிதமற்றவர்களின் மேல் சூடப்படுவது எவ்வளவு பொருத்தமற்றது என்று முணங்கியப்படி பொழுதும் புலர்ந்தது.

**... சொடக்கு மேல சொடக்கு போடுது...**
**என் வெரலு வந்து...**
**நடுத் தெருவில் நின்னு...**
**சொடக்கு மேல சொடக்கு போடுது...**

காலை ஆறு மணிக்கே கிரிக்கட் மைதானத்தில் ஒலிப் பெருக்கி பாடத் தொடங்கியது...

திடீரென பாட்டு நின்றது... உஸ்...உஸ் என்று யாரோ மைக்கை ஊதினார்கள்.

'வன் டு த்ரீ... வன் டு... த்ரீ... அம்பாந்த பொது மக்களே...! அம்பாந்த பொது மக்களே...! நம்ம தலைவராகிய அமைச்சர் கொழும்ப விட்டு புறப்பட்டுட்டாராம்... பொது மக்கள் எல்லாரும் மூனு ரோட்டு சந்தயில் வந்து கூடி நிக்குமாறு அம்பாகக் கேட்டுக் கொள்கிறோம். கரகாட்டம்... காவடியாட்டம்... குரங்காட்டம்... புலியாட்டம்... எல்லா ஆட்டக்காரவங்களும் ரெடியாக இருக்கும்படி அம்பாகக் கேட்டுக் கொள்கிறோம்...'

**சொடக்கு மேல சொடக்கு போடுது...**

'அம்பாந்த பொது மக்களே... இதோ நம்ம சிங்கம் வந்து விட்டது...! சிங்கம் நம்பர் பைவ்...! சிங்கம் நம்பர் சிக்ஸ்...! ...! பெண்மணிகள் எல்லாம் ஆரத்திக் குடங்களைத் தூக்கிக்கொண்டு முச்சந்திக்கு போகுமாறு அம்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.!'

பெண்களெல்லாம் மாவிளக்கு குடங்களை... ஆரத்தி குடங்களை சுமந்துக்கொண்டு முச்சந்திக்கு விரைந்தார்கள். தலைவர் பரிவாரங்களோடு வாகனத்திலிருந்து இறங்கினார். எல்லாமே காண்டா மிருகங்களைப் போன்ற வாகனங்கள். திடுதிப்பென்று குண்டோதரர்களைப் போன்று பலர் வாகனங்களிலிருந்து குதித்து... தலைவர் அருகில் உரசிக் கொண்டிருந்தவர்களையெல்லாம் இழுத்துத் தள்ளி... இடம் ஒதுக்கி... பாதை நெடுக பாதுகாப்பு வளையம் போட்டுக்கொண்டு நடந்தார்கள். சரவெடி கொளுத்தப்பட்டது... பாம்பு போல் வளைந்து வளைந்து வெடித்துக் கொண்டு ஓடுவது... கண்கொள்ளா காட்சியாகவிருந்தது. பெண்மணிகள் 'கொலா' போட்டார்கள். குடங்களில் ஒட்டியிருந்த மா விளக்குகளைப் பொருத்தி தலைவருக்கு ஆரத்தி எடுத்தார்கள்.

ஒலிப்பெருக்கி முழங்க... சரவெடிகள் வெடித்துச் சிதற... மேள தாளத்தோடு ஊர்வலம் மைதானத்தை வந்தடைந்தது. கோஷங்கள் இன்னும் அடங்கவில்லை... 'வருங்கால பிரதம மந்திரி... வாழ்க! எதிர்கால உப ஜனாதிபதி வாழ்க!'

யூனியன் தலைவர் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்... ஆயிரம் பஸ் வண்டிகள் அடக்கமாக தோட்டத்துப் பாதைகளில் ஒதுங்கி நின்றன.

கூட்டம் ஆரம்பமாகியது. வரவேற்புரை முடிந்தது... வாழ்த்துரைகள் முடிந்தன... முதலாவது பேச்சாளராக மாலைக்கட்டி கந்தசாமியை உரையாற்ற அழைத்தார்கள்... கந்தசாமிக்கு அந்த தோட்டத்தில் ஐந்நூறு ஓட்டுகள் சுளையாட்டம் உண்டு.! எல்லோருமே சொந்தக்காரர்கள்... அவன் விரல் அசைத்தால் ஓட்டுக்கள் எந்தப் பக்கமும் திரும்பும்...!

'மதிப்புக்குரிய அமைச்சர் தலைவர் அவர்களே...! மேடையில் அமர்ந்திருக்கும் எல்லா 'முக்கிய' தலைவர்களே...! நான் 'முக்கியத்' தலைவர்கள் என்றது மரியாதைக்கல்ல...! இருநூறு வருசமாக தொழிலாளியின் உழைப்புக்கேற்ற சம்பளத்தைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாமல் 'முக்கிக்' கொண்டிருப்பவர்களைச் சொன்னேன்...! இருநூறு வருஷமாக பிரிட்டிஷ்காரன் கட்டிப் போட்ட லைன் முகாம்களை உடைக்க முடியாமல் முக்கிக் கொண்டிருப்பவர்களைச் சொன்னேன்...! ... இருநூறு வருஷமாக விவசாயம் செய்து வாழ ஒரு துண்டு நிலங்கூட வாங்கிக் கொடுக்க முடியாமல் முக்கிக் கொண்டிருப்பவர்களைச் சொன்னேன்...! நல்ல... ருசியான... நூறு கிறேம் தேயிலைத் தூள் கூட வாங்கிக் கொடுக்க முடியாமல் முக்கிக் கொண்டிருப்பவர்களைச் சொன்னேன்...!'.

'ஏய்...! கந்தசாமி பேச்ச நிறுத்து...!'

'ஓய்! கந்தசாமி பேச்ச நிறுத்தாதே...!'

கூட்டத்தில் ஒரே கூச்சல்... மேடையில் வீற்றிருக்கும் முக்கியத் தலைவர்களில் ஒருவர் எழும்பி, நிகழ்ச்சித் தொகுப்பாளரிடம் கந்தசாமியின் பேச்சை நிறுத்தும்படி சொன்னார். தொகுப்பாளர் திடுக்கிட்டார். 'அய்யோ சாமி...! அவனுக்கு இந்த ஏரியாவுல ஐயாயிரம் ஓட்டு இருக்குது...! பேச்ச நிப்பாட்டினா... அந்திக்கே ஐயாயிரம் ஓட்டும் அடுத்தக்கட்சிக்காரனுக்குப் போய் சேந்திரும்...' என்றார். தலைவர்கள் மௌனமாகினார்கள்.

கூட்டத்திலிருந்து ஒரு இளைஞன் மேடையில் ஏறி... கந்தசாமிக்கு தண்ணீர் போத்தலைக் கொடுத்தான். கந்தசாமி தொடர்ந்து பேசினான். 'என் பேச்சை முடிக்கும் முன்பு பொது மக்கள் சார்பாக ஒரு வேண்டு கோளை முன் வைக்க விரும்புகிறேன்...!' என்றான். 'இங்கே மேடையில் இருக்கும் தலைவர்மார்கள்... மந்திரிமார்கள் எல்லோரும் தயவு செய்து தங்கள் கூலிங் கிளாசை கழட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்...! தொழிலாளி மத்தியில் கூலிங் கிளாஸ் மாட்டிக்கொண்டு வரக்கூடாது என்கிறேன்...! காரணம் மலைநாடு குளிரான ஊரு...! இருந்தாலும் தொழிலாளி மட்டும் சூடாகவே இருப்பான்...!' என்றான்.

கூட்டத்தில் எதிர்ப்புக் குரல்களும் ஆதரவு குரல்களும் பலமாக ஒலித்தன... அவன் பேச்சு தொடர்ந்தது. 'நம்ம தலவருமாருங்க கறுப்புக் கண்ணாடிகள மழ நேரத்திலும் மாட்டிக்கிறாங்க... ராத்திரி நேரத்திலும் மாட்டிக்கிறாங்க... அடிக்கல் நாட்டுற நேரமும் மாட்டிக்கிறாங்க... கோயில் பூசையிலும் மாட்டிக்கிறாங்க... கண்ணாடி மாட்டிக்கிறதுக்கு வெவஸ்தையே தெரியாம இருக்காங்க... வேதனையோட வாழ்ற தொழிலாளி மத்தியில் ஸ்டைல் கண்ணாடிய காட்ட வர்றது அவங்கள நக்கல் அடிக்கிறமாதிரி இருக்குது...' என்றான்.

கூட்டத்தில் ஒரே விசில் சத்தம்... மலைகளில் மோதி எதிரொலித்தது!

தலைவர்மார்கள் எல்லோரும் கறுப்புக் கண்ணாடிகளைக் கழற்றி சட்டை பைக்குள் ஒளித்துக்கொண்டார்கள்... அவர்களுக்கு சூடு சொரணை... மானம்... ரோசம் எல்லாவற்றையும் விட கந்தசாமியின் ஐயாயிரத்து ஐநூறு ஓட்டு அடுத்து வரும் மாகாணசபை தேர்தலுக்கு தேவையாகவிருந்தது...!

கந்தசாமியின் பேச்சுக்கு கரகோசம் கிடைத்துக்கொண்டேயிருந்ததால்... அவன் இன்னும் ஊக்கமாகப் பேசினான்.

‘உள்ளூராட்சி சபைகள் எல்லாம் எங்களுக்கு கிடைத்து விட்டன...! எல்லா தோட்டவாசிகளும் மெம்பராகி விட்டார்கள்...! இனிமே உள் ளூரட்சிக்குள் தோட்டப்புறங்கள் உள்வாங்கப்படுமா?... தோட்டங் கள் இனிமே கிராமங்களாகுமா? தோட்ட மக்கள் நாட்டு மக்களா வார்களா? பிரதேச சபை சட்டத்தை திருத்திவிட்டார்களா?... பொது நிர்வாகப் பணம் தோட்டப் புறங்களுக்கும் கிடைக்குமா?’ என்று வீரா வேசமாக கந்தசாமி சத்தம் போட்டான். கரகோசங்க ளும் விசில் சத்தங்களும் வானத்தைக் கிழித்தன...!

‘இனிமே குப்பை லொறிகள் தோட்டங்களுக்குள்ளே வருமா? குப்பை கொண்டு போகுமா? டெங்கு மருந்து அடிப்பாங்களா? வீடுகளுக்கு விலாசம் கிடைக்குமா? தபால் தந்திகள் வாசலுக்கு வருமா?’ கந்தசாமியின் பேச்சைக் கேட்டு முழு கூட்டமுமே ஆவேசப்பட்டு ஆரவாரம் செய்தது... சமூக விசயங்கள் எதிலுமே கலந்துக்கொள்ளாமல் ஒண்டி நின்றே வேடிக்கை பார்க்கும் ‘புத்திஜீவிகள்’ கூட அவன் பேச்சில் நூத்துக்கு நூறு உண்மை இருக்கிறது! என்று மெதுவாக முணகிக் கொண்டார்கள்...!

மந்திரியாகிய பெரியதலைவருக்கு வியர்த்துக்கொட்டியது. ‘பிரதேச சபைக்குள்ள இவ்வளவு சங்கதிகள் இருக்குதா? இவன் பேசுற தெல்லாம் உண்மையா?’ என்று பக்கத்திலிருக்கும் சின்னத்தலை வரிடம் கேட்டார். ‘எனக்கும் இன்னக்கித்தான் தெரியும் சேர்... பிர தேச சபையில இவ்வளவு சங்கதிக இருக்குதுன்னு...!’ என்றார் சின்னத்தலைவரும்.

மேடையில் திடீரென ஒரு சம்பவம் நடந்தது. கந்தசாமியைக் குறி வைத்து வேகமாக வீசப்பட்டக் கல் ஒன்று நிகழ்ச்சித் தொகுப் பாளரின் மூக்கை உடைக்க... இரத்தம் கொடகொடவென்று கொட்ட... அவர் மயங்கிக் கீழே விழுந்தார். கண்மூடி கண் திறக் குமுன் சரமாரியாக மேடையை நோக்கி கற்கள் வீசப்பட்டன... செருப்புகள் வீசப்பட்டன...! தலைவர்மார்கள் தலைதெறிக்க ஓடினார்கள்...!

கோஷ்டி மோதல்கள் கொடி கட்டிப் பறந்தன... கட்டித் தங்கம் வெட்டி எடுத்தது போல கெட்டவார்த்தைகள் கொட்டிப் பரிமாறப் பட்டன...! தமிழ் மொழியில் இவ்வளவு வலிமை பொருந்திய சொற்களா? இவைதான் செம்மொழியா...? சண்டைக்களத்தில் மீண் டும் கற்கள் சரமாரியாகப் பொழிந்தன... செருப்புகள் பறந்தன... பாவம்... அவைகள் கவலையோடு மக்களை அடித்தன.! பதி னாலு வருசம் சிம்மாசனம் ஏறி நல்லாட்சி நடத்திய தங்கள் இனத்தை நினைத்து வெட்கப்பட்டன...!

கொஞ்ச நேரத்துக்குள் கூட்டம் நடந்த மைதானம் ஒரு காக்கா குருவி இல்லாது வெறிச்சோடி கிடந்தது.

கூட்டத்தில் மிதிப்பட்டு... துணியாகத் துவைபட்டு நடு ரோட்டில் மயங்கிக் கிடந்த கந்தசாமி மயக்கம் கலைந்து... மெதுவாக எழும்பினான். பின்னால் வந்த ஒருவன் இரும்புக் கம்பியால் ஓங்கி அடித்து கந்தசாமியின் மண்டையைப் பிளந்தான்.

‘ஐய்யோ... அம்மா...!’ என்று கந்தசாமி அலறினான். பக்கத்தில் படுத்திருந்த சரசு பாம்பை மிதித்தவளாகத் துள்ளிக் குதித்து எழும்பினாள். என்னா மாமா... என்னா மாமா... கனவு கண்டீங் களா...? என்று அவனைக் குலுக்கினாள்.

‘விடியக்கால கனவு பலிக்குமா புள்ள...?’ அவன் கண்களைக் கசக்கிக்கொண்டு கேட்டான். ‘சுடுகாட்டுப் பூ...? ஆவிக... வந்து...?’ சரசு நடுங்கினாள். ‘அட அது இல்ல புள்ள...! இது சூப்பர் கனவு...! அருமையான கனவு...! தேத்தண்ணி ஊத்து சொல்றேன்.’ என்று சுறுசுறுப்பாக எழும்பி... சாரத்தை இழுத்துக் கட்டிக் கொண்டு டொய்லெட்டுக்கு ஓடினான் கந்தசாமி.



sivalingam.m@thaiveedu.com



# அடைக்கலம்



**- களம்பூர் பாபுராஜ்**

செல்போன் டவர் உச்சியைத் தொட்டு நிற்கும் இரண்டு வெண்மேகத் துண்டுகளுக்கு இடையே ஒரு புறாவை துரத்தி வரும் பெரியதோர் பருந்தையே கவனித்து நிற்கும் பொழுது வினோதின் போன் கால் வந்தது.

‘அப்பா... நீங்க எங்கே இருக்கீங்க.? நான் லாண்ட் போன்ல எத்தன தடவை கூப்பிடறது.?

செல்போன் இருக்கும்போது எதுக்காக லாண்ட் போன்ல கூப்பிடுறே...? என்று கேட்கத் தோன்றியது.

‘என்ன விஷயம்?’

பருந்திடம் சிக்காமல் தப்பி விட்ட புறா, கறிக்கடை இராவுத்தரின் கட்டடத்தின் கூரை ஓட்டுக்குள் அடைக்கலம் புகுந்ததை கண்டு, சற்று ஆறுதலுடன் நான் கேட்டேன்.

‘அப்பா... நம்ம ஊரில வேலைக்கு ஆள் யாரும் கெடைக்கலையா... முன்னப் பின்ன தெரியாத இவனையெல்லாம் எப்படிப்பா நம்புறது.?’

‘ஊரில ஆள் யாரும் கெடைக்கல’.

‘அப்படீன்னா... கவிதா அப்பாக்கிட்ட சொல்லட்டுமா...? அவங்க ஊருல தெரிஞ்சவங்க யாராவது...?’

‘வேணா... நானே பாத்துக்குறே...’

‘உங்க கோபம் எனக்கு தெரியுது... நான் என்னப்பா பண்ணுவே... சிட்டிசன்ஷிப்பை கேன்சல் செய்து என்னால வரமுடியாததனால தானே...?’

‘போதும். இதை இப்படி அடிக்கடி சொல்ல வேண்டா... நீ போன வெச்சிடு.’ புறாவை இழந்த கோபத்துடன் திரும்பும் பருந்தை பார்த்தபடியே நான் பேச்சை நிறுத்தினேன்.

வீட்டு மனைகளுக்காக கங்கா ரியல் எஸ்டேட் நிறுவனத்தார் வேலிகளிட்டு பங்கு போட்ட வயல்களுக்கு வெளியே மேய்ந்து கொண்டிருந்த பசுமாடுகள் யாரோ அழைத்தது போல் திடீரென திரும்பி சாலையோரத்தில் நடக்கத் தொடங்கின. நீர் நிலைகள் அனைத்தும் வற்றி வரண்டு கிடப்பதால் ஆட்டோ ஸ்டாண்டுக்கு அருகா

மையில் குடிநீர் குழாய் உடைந்து வெளியேறிய தண்ணீரை நக்கிக் குடித்து அவை கிழக்குப் பக்கமாகச் சென்று போஸ்டர் காகிதங்களை தின்னத் தொடங்கின.

போன் உள்ளே வைப்பதற்கு முன் மீண்டும் ஒருமுறை பேஸ்புக் மெசஞ்சரைப் பார்த்தேன்.

அகிலேஷ் Active 30 minutes.

அதாவது... அவன் என் மெசேஜ் கண்டிப்பாகப் பார்த்திருப்பான்.

'திருப்புலியூர் சின்னமலை அடிவாரத்தில் கங்கா ரியல் எஸ்டேட் டுக்கு அருகாமையிலுள்ள தெருமுனையில் காத்திருப்பேன்.' இந்தி மொழி ஆங்கிலத்தில் டைப் செய்ததால் வந்த எழுத்துப் பிழையை அப்பொழுதுதான் கவனித்தேன். இருப்பினும் அவ னுக்கு விஷயம் புரிந்திருக்கும்.

அவனது செல் நம்பர் தெரியாது. பேஸ்புக் மெசஞ்சர் வழியாகத்தான் எல்லாமே பேசி முடித்தோம். வாழ்கையில் ஒரு முறை கூட கண்டிடாத ஒருவரை நம்பி காத்திருப்பதில் எனக்கு சற்றும் மனக்குழப்பங்கள் ஏற்படவில்லை.

'Wait there. Come in 20 minutes'

அகிலேஷின் மெசேஜ் கிடைத்தது... இன்னும் இருபது நிமிடங்கள்.

ரொம்ப தாகமாக இருக்கிறது. சாலையின் மறுபுறம் உள்ள கடைக்குச் சென்றேன்.

ஜூஸ் ஆர்டர் செய்து காத்திருக்கும் பொழுது தான் மாரிமுத்து நாடாரை பார்த்தேன். பக்கத்து கடையில், வாடி வதங்கிய காய் கறிகளுக்கு இடையே நீர் வற்றிய நதியைப் போல் அவர். பார்வைகள் ஒன்றோடொன்று தொட்ட போது நாடார் மெதுவாகச் சிரித்தார். ஒளி மங்கிய ஒரு புன்னகை. பிறகு மீண்டும் அவர் மலைச்சரிவிலுள்ள கிணறை நோக்கி மௌனமாக இருந்தார். அது தான் அவரது உயிரின் பாதி உறங்குமிடம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், கோடைமழை தாண்டவமாடிய ஒரு பங்குனி இரவில் அந்த கிணற்று நீரில் தஞ்சம் புகுந்த அவர் அன்பு மனைவி ஜானகி. நான்காவது நாள் போஸ்ட் மார்ட்டம் செய்த போது, நீர் குடித்து பெருத்த அவள் வயிற்றில் உயிரற்று கிடந்தது, மூன்று மாத வளர்ச்சியுள்ள ஒரு சிசு. குழந்தை பாக்கிய மில்லாத கணவருக்காக அவள் யாரிடமோ தானமாகப் பெற்ற கரு.

போனில் மழைத்துளி விழும் ஓசை கேட்டு எடுத்துப் பார்த்தேன். வினோதின் வாட்சாப் மெசேஜ்.

'அப்பா... நல்லா யோசிச்சு பாரு... இவங்கல்லாம் யாரு... என்ன... எதுமே தெரியாம வீட்டுக்குள்ள விட்டா பிரச்சனை தானே.? இவங் களில் பாதி பெயரும் தீவிரவாதிகளும் கிரிமினல்களுமா இருப் பாங்க.'

'கிரிமினல்கள்...! எல்லோரும் ஒவ்வொரு வகையில் கிரிமினல்கள் தானே...'

மனதில் நிறைந்த கோபத்தை வெளிப்படுத்தத் தேர்ந்தெடுத்த இமோஜியை டெலிட் செய்து, ஜூசை குடித்து முடித்து கிளாஸ் டம்ப்ளர் மேசை மேல் வைத்தேன். யாரிடமோ போனில் பேசிக் கொண்டிருந்த கடைக்காரர் அந்த சத்தத்தைக் கேட்டு திரும்பிப் பார்த்தார். அவருக்கு பணம் கொடுத்து திரும்புவதற்குள் போனில் யாரோ அழைத்தார்.

கிஷோர். பக்கத்து வீட்டுப் பையன்.

'அங்கிள்... நீங்க எப்ப வறீங்க... எனக்கு ஆன்லைன் க்ளாஸ் இருக்கு.'

'தம்பி... அரை மணி நேரம் ப்பா... அதுவரைக்கும் கொஞ்சம் அட் ஜஸ்ட் பண்ணு... ப்ளீஸ்.'

உதவிக்கு அவன் மட்டும்தான். வெளியே செல்லும் பொழுது வீட் டில் யாராவது வேண்டும். நாற்பத்தைந்து ஆண்டு காலம் வீட் டைப் பார்த்த ஒருத்தியை பார்ப்பதற்கு.

ஹோம் நர்சுகள் வந்தால் ஒரு வாரத்திற்கு மேல் தங்கமாட்டார் கள். இப்படியோர் நோயாளியை கவனிப்பது கடினம் என்றார்கள். சென்ற வாரமும் ஒருத்தி வந்தாள். மூன்றாவது நாள் ஓடிவிட்டாள்.

அவர்களையும் குறை கூற முடியாது. மிஞ்சியுள்ள ஆயுளின் சிறு துளிகளை ஒன்று திரட்டி, வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே உள்ள மௌனக் கடற்கரையில் நேரம் காத்து கிடக்கும் ஒரு பெண்ணுடல். அவள் விட்டுச் சென்ற நினைவுகளின் பசுமை உலகத்தில் ஆனந்தம் தேடும் உயிருள்ள ஒரு பெரியவர். இவர் கள் மட்டுமுள்ள ஒரு வீட்டில் அவர்களால் எப்படி வேலை செய்ய முடியும்.

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கரம் பிடித்தவள். நீலகிரி எஸ்டேட் உத்யோகத்தை ராஜிநாமா செய்து அவளுடன் ஊரை விட்டுச் சென்ற நாள் இப்பொழுதும் நினைவில் நிற்கிறது.

'இருந்தாலும் நீங்க ரொம்ப தைரியசாலி...' ஓடும் ரெயிலில் என் உடலோடு ஓட்டியிருந்து அன்று அவள் தந்த பாராட்டு.

இந்தியா முழுவதும் அவசர நிலைச் சட்டம் பிரகடனம் செய்த காலம். அதிகாரம் அனைத்தும் காவல் துறையிடம் கொடுக்கப் பட்ட அக்காலத்தில் ஒரு போலீஸ்காரனின் மகளை காதலித்து அவளுடன் ஊரை விட்டு ஓடும் தைரியம் எப்படி வந்தது என்று தெரியவில்லை.

விடிவதற்குள் எல்லையை தாண்டினோம். மைசூரிலும் ஆந்திராவி லும் சில காலம் வசித்தோம். பிறகு மும்பையில் முப்பத்தைந்து ஆண்டுகள்.

தமிழகம் திரும்ப வேண்டுமென்று அவள் அடிக்கடி சொல்லுவாள். ஒரே ஒரு மகன் திருமணமாகி கனடா நாட்டில் குடிபுகுந்த பிறகு மும்பையிலிருந்து தமிழகம் வந்து இந்த சிறு பட்டணத்தில் ஒரு வீட்டை வாங்கினோம்.

'என்ன சார் இந்த நேரத்தில இங்க நிக்கிறீங்க.?'

ஆட்டோ டிரைவர் அழகேசன். கேள்வி மட்டும் கேட்டு பதிலை எதிர்பார்க்காமல் அவர் சாலையை கடந்து மறுபுறம் சென்றார்.

முகத்தில் எப்பொழுதும் அழகான புன்னகையுடன் காணப்படும் அழகேசன். ஆனால், சில நேரங்களில் மட்டும் அவர் மனம் விட்டு அழுவதுண்டு. கருமாரிஅம்மன் கோவில் வாசலில் சூடத்தை ஏற்றும் பொழுதும் மலை அடிவாரத்திலுள்ள புனித மாதா ஆலயத்திற்கு முன்னால் மெழுகுவர்த்திகளை ஏற்றி பிரார்த் தனை செய்யும்பொழுதும்.

'எல்லாமே தெரிஞ்சிருந்தும் இப்படி செஞ்சிட்டியேம்மா...' என்று இரண்டு தேவியர்களிடமும் கொஞ்ச நேரம் மனம்விட்டு அழுவார். தேக்கி வைத்த வேதனைகளை வெளியேற்றியபின் முகம் துடைத்து, புன்னகை பூசி திரும்புவார்.

அவருக்கு மூன்று குழந்தைகள். மூன்றாவது பிரசவத்தில் மனைவி இறந்து விட்டாள். குழந்தைகள் எனும் பூலோகத்தைச் சுற்றி அழகேசன் தனது ஆட்டோ ரிக்ஷாவை ஓட்டிக் கொண்டேயிருக் கிறார். அவர்கள் வளர்ந்து விட்டார்கள். அவரைவிட உயரத்தில். மூத்த மகன் கட்சிச் சண்டையில் நண்பனின் கையை வெட்டியதற் காக சிறையில் கிடக்கிறான். அவன் தங்கை காதலின் மாய வெளிச்சத்தில் ஒருவருடன் சென்று பிணமாகத் திரும்பி வந்தாள். நோயாளியான இளைய மகள் தான் இப்பொழுது அழகேசனின் பூலோகம். அதைச் சுற்றி அவர் வாழ்கையின் சக்கரங்கள் ஓயாமல் ஓடிக்கொண்டேயிருக்கின்றன.

அந்த பருந்து டவரைச் சுற்றி இப்பொழுதும் பறந்து கொண்பிருப் பதை நான் கவனித்தேன். அழகேசனை துரத்தும் துரதிஷ்டம் போல. சிறகை விரித்து... அழகிய நீல விண்ணில் ஒளிரும் தவிட்டு நிறம். மரணத்தின் வண்ணம்... பீதியின் வண்ணம்.

ஊறுகாய் கம்பெனியில் வேலை செய்யும் பெண்கள் ஷட்டரை மூடிவிட்டு மதிய உணவுக்காகப் போவதைக் கண்டேன். மணி ஒன்றரை... இன்னும் அகிலேஷ் வரவில்லையே என்று நினைப் பதற்குள் அவன் மெசேஜ் வந்தது.

'பஸ் பிரேக் டவுன். ஸம் டைம் லேட்'

படிக்காதவனின் இலக்கணப்பிழையுள்ள ஆங்கிலம். விஷயம் புரிய இலக்கணம் எதற்கு? வாழ்வின் இலக்கணம் பிழைத்தவர்க ளுக்கு மற்றவை அனைத்தும் சரியாக இருந்தும் பயனேதுமில் லையே.?

போன் எடுத்து கிஷோரை அழைத்தேன்.

'நான் வர லேட் ஆகும். கதவைப் பூட்டி சாவி கார்பெட் கீழே போட்டு நீ போயிடு...'

அவளுக்கு துணையோ காவலோ தேவையில்லை தான். அசை யக்கூட முடியாமல் படுத்துக் கிடப்பவள். இதயத் துடிப்பால் மட்டும் உயிரை அடையாளப்படுத்துபவள்.

ஆனந்தத்தின் விளக்குகளை காலம் அணைத்து விடுவது நினைத் திருக்காத நேரத்தில் தான்.

தலை சுற்றலாகத்தான் ஆரம்பம்... பிறகு கைகள் தடுமாறி, நினைத்த இடத்துக்கு செல்லாமல் போய் விட்டன. ஆஸ்பத்தி ரிக்கு புறப்படும் போது நடந்து சென்று காரில் ஏறியவள் இருப தாம் நாள் ஒரு அசையாப் பொருளாக வீடு திரும்பினாள். சில நாட்கள் நினைவின் சிறு அலைகள் அந்த முகத்தில் தெரிந்தன. அரைத்த கஞ்சி டியூப் வழியாக ஊட்டும்பொழுதும் உடம்பை துடைத்து சுத்தப்படுத்தும் பொழுதும் பரிதாபப் பார்வையின் மிரு- துவான அசைவுகள் கண்ணில் தெரியும். போகப் போக அதுவும் மறைந்தது.

மூளையை பாதிக்கும் ஒரு அபூர்வ வியாதி. இலட்சத்தில் ஒருவ ருக்கு வருவது. புதுப் பெயர்... புரியாத விளக்கங்கள். இதற்கு மருந்தே கிடையாது. டாக்டர்கள் தீர்ப்பளித்தார்கள். இனிமேல் எத் தனை காலம் என்றும் சொல்ல முடியாதாம். ஆறு மாதமோ... ஆறு வருஷமோ...!

மூன்று வருஷமாச்சு. அதற்கிடையே உலகத்தையே நடுங்க வைத்த கொரோணாவின் தாக்குதல். மனிதர் மரண பயத்துடன் வாழ்ந்த காலம். உதவ யாருமே இல்லாமல்... யாரிடமும் பேசவும் முடியாமல் தனிமையின் கடல்த் தீவுக்குள் மாட்டிக் கொண்ட காலம். எப்பொழுதும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். பதிலேதும் கிடைக்கப்போவதில்லை என்று தெரிந்தும் அவளிடம் பேசினேன். அசைவுகளில்லாத அந்த விழிகளையே பார்த்து பழைய கதைகள் சொல்லுவேன். தூக்கமில்லாமல் தவிக்கும் ராத் திரிகளில் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பேன். ஆயி ரம் முத்தங்களின் நினைவுகள் வாடிக் கிடக்கும் வரண்ட கன்னங் களை விரல்களால் தழுவி அந்த வெறும் உடலுடன் ஒட்டிக் கிடப் பேன்.

'எதாவது ஹோமில் சேர்க்கலாமே... எதுக்கிப்படி தனியா கஷ்டப் படுறது?' அயல் வீட்டார்களில் சிலர் கேட்டார்கள்.

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அவள் கரம் பிடித்து ஊரை விட்டுச் செல்லும் பொழுது அவளிடம் கொடுத்த வாக்கு... ஒரு நாளும் உன்னை கைவிட மாட்டேன்... இறுதி மூச்சு உள்ளவரை உன் கூடவே இருப்பேன்... தட்டுத் தடுமாறித் துடிக்கும் அவள் இதயத்தில் இப்பொழுதும் அந்த நம்பிக்கை இருக்கும். அது மறையக்கூடாது... ஒரு போதும்.

ஆனால்..., பயம் ஒரு பெரும் கழுகைப் போல் பறந்து வந்தது சற்றும் ஏதிர்பாராமல் தானே...!

ஐந்தாவது ஹோம் நர்சும் ஏதோ ஒரு காரணம் சொல்லி திரும்பிப் போன நாள்... மின்னலென வந்த நெஞ்சுவலி உடல் முழுவது பரவி என்னைச் சாய்த்து விட்ட அந்த நடுராத்திரி. துணையேது மில்லாமல் இரண்டு நோயாளிகள்... எல்லாம் இத்துடன் முடியப் போகிறது என்று நினைத்த நாழிகைகள்... பிறகு எப்படியோ தைரி யத்தை வரவழைத்து மெதுவாகத் தவழ்ந்து சென்று கிஷோருக்கு போன் செய்தேன்.

கண் விழித்தது ஐசியுவின் பனிக் குளிரில்.

அவள் எங்கே...?

அவளை யாரு கவனிப்பாங்க?

மனம் பதற்றத்துடன் அக்கேள்விகளை திரும்பத் திரும்பக் கேட் டது.

எழுபது வயதை கடந்த இதய நோயாளியான எனக்கு திடிரென இப்படி எதாவது நேர்ந்துவிட்டால்...? அவளை கவனிக்க யாரிருப் பார்கள்?

வினோத் அவளை எதாவது ஹோமில் சேர்த்துவிட்டு போயிடு வான். அங்கு... யாரும் சரியாக கவனிக்காமல்... ஒரு அநாதை யாக...!

வேண்டாம்...! அப்படியேதும் நடப்பதுக்கு முன் எதாவது செய்தே ஆக வேண்டும்.

ஆப்பரேஷன் முடிந்து நான் வீடு திரும்பினேன். இரண்டு நோயா- ளிகள் மட்டுமுள்ள வீடு.

மிகவும் சிரமப்பட்டு தேடிக் கண்டு பிடித்த ஒரு ஹோம் நர்ஸ் மூன்று மாதம் எங்களுடன் இருந்தாள். முகத்தில் கோபமும் வெறுப்பும் மட்டும் ஒட்டி வைத்த ஒரு பெண். இரண்டு அரைக ளுக்குள் அவள் எங்களை அடைத்து வைத்தாள்.

'அவங்கக்கிட்ட போகக் கூடாது... இன்பெக்ஷன் ஆகும்.' அவள் கட்டளையிட்டாள். நாற்பத்தைந்து ஆண்டு காலம் மனதில் நில வாக ஒளிர்ந்த அந்த முகம் ஒரு முறை கூட பார்க்காமல் நான் ஏங்கித் தவித்த நாட்கள்.

ஒன்றரை மாதம் கழித்து மீண்டும் அவளைப் பார்த்தேன். கை கால்கள் வளைந்து சுருங்கி... அறுபது வயதிலும் பார்த்து மகிழ்ந்த அந்த அழகு முகம் களிமண் துண்டு போல் கருகிக் குறுகி...

மாரியம்மன் கோவில் வாசலில் நின்று அழுது புலம்பும் அழகே சனை நினைத்தேன். விதியெனும் பெரும் பருந்து இப்பொழுது என் வாழ்வை வட்டமிட்டு பறக்கிறதே... !

மூன்றாம் மாதம் சம்பளம் வாங்கி, ஒன்றுமே சொல்லாமல் நர்ஸ் போய் விட்டாள். மீண்டும் இரண்டு நாதியற்ற ஜென்மங்கள்... பாலைவனப் பயணிகளாக.

அப்பொழுது தான் மனதில் குற்ற உணர்வின் கடல் கொந்தளித் தது.

ஒரு வேளை இது, காலம் எனக்குத் தந்த தண்டனையாக இருக்கலாம். காதலின் போதையில் ஊரை விட்டுச் செல்லும் பொழுது நான் என் தாய் தந்தையினரைப் பற்றி நினைக்கவில் லையே...!

ஐம்பது பைசா தபால் ஸ்டாம்பு ஒட்டி அனுப்பிய கடிதங்களில் பாழ் வார்த்தைகள் எழுதி நிரப்பிய அன்பு. மாதம் நூறு - இரு நூறு ரூபாய் மணிஆர்டர் என்ற அன்பளிப்பு.

இறுதி மணிஆர்டரும் கை நாட்டிட்டு வாங்கி தம்பியிடம் கொடுத்து அப்பா இறந்து விட்டார். இருபது ஆண்டுகளுக்கு முன்பு... அப்பொழுது நான் மும்பையில் ஒரு இஞ்சினியரிங் காலேஜில் என் மகனை சேர்ப்பதற்க்காக வரிசையில் நின்று கொண்டிருந்தேன்.

'பஸ் ஸ்டார்ட்... ஐ ஆம் கமிங்...' அகிலேஷின் மெசேஜ் வந்தது.

தனிமையைப் போக்க கிஷோர் உருவாக்கித்தந்தது தான் இந்த பேஸ்புக் அக்கவுண்ட். தெரியாதவர்கள் கூட நண்பர்களாகும் அந்த அதிசய உலகத்தில், அம்ரீஷ் புரியின் புகைப்படத்தால் முகம் மறைத்து இடம் கேட்டு வந்து சேர்ந்தவன் அகிலேஷ்.

ஒரு நாள் மெசஞ்ஜரில் வந்து தன்னை அறிமுகம் செய்தான். ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சார்ந்தவன். நடுத்தர குடும்பம். தனியார் நிறுவனத்தில் வேலை. மனைவி... இரண்டு குழந்தைகள்.

அடுத்த நாள் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான். எஃப். பி.யில் இப்படி ஏமாற்று வேலைகள் வழக்கமாகி விட்டது. அதனால் பதிலளிக்கவில்லை.

ஒரு வாரம் கழித்து மீண்டும் மெசன்ஜரில் வந்தான்.

'முன்னப் பின்ன தெரியாத உங்களிடம்... பணம் கேட்டது தவறு... மன்னிக்கணும். மனைவிக்கு ஹார்ட்டுக்கு கொஞ்சம் பிரச்சினை... கொரோனாவால என் வேலயும் போச்சு. அதனாலத் தா...' இந்தியும் ஆங்கிலமும் கலந்த மொழியில் அகிலேஷ் தன் வாழ்வை வரைந்திட்டான்.

அவனை முழுமையாக நம்பவில்லை. இருந்தாலும் அனுதாபத்தின் சிறு அலைகள். போகப் போக அவன் உள்ளத்தால் நெருங்கி விட்டான். அவன் பேசுவது உண்மையென்று நம்பத் தொடங்கினேன். மனைவியின் இதய நோயின் பரிசோதனைச் சான்றுகள் அனுப்பி அவன் சந்தேகங்கள் கேட்டான். பெரிய ஆப்பரேஷன் வேண்டும். உதவ யாருமில்லை. அவள் உயிர் பிழைக்க எந்த வேலை செய்வதற்கும் தயாராக இருந்தான். அவர்களதும் காதல் திருமணமாம்.

அப்பொழுதுதான் அந்த யோசனை பிறந்தது... அது சரியா தவறா என்று இப்பொழுதும் தெரியவில்லை. சரியும் தவறும் மனிதரின் நிலமைக்கும் தேவைகளுக்கும் ஏற்றபடி மாறுவதுண்டு என்பதால் நான் அதைப் பற்றி சற்றும் கவலைப்பட்டதுமில்லை.

மெசஞ்ஜெர் திறந்து எங்கள் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஒரு முறை பார்த்தேன்.

'அகிலேஷ், உன் மனைவியை காப்பாற்ற தேவையான பணம் நான் தருகிறேன். ஆனால்... எனக்காக நீ ஒரு வேலை செய்ய வேண்டும்.'

'சொல்லுங்க சார்.'

'ஒருவரை கொல்ல வேண்டும்.'

'சார்... ?!'

'சரின்னா புறப்பட்டு வா...'

'வேண்டாம் சார். ஒரு உயிரை எடுத்து இன்னொரு உயிரை காப்பாத்த வேண்டாம்.'

'பயப்படாதே... உனக்கொன்றும் ஆகாது... இது ஒரு கொலையே அல்ல... சட்டப்படி ஒரு பிரச்சனையும் வராது.'

அதற்கு அவன் பதிலளிக்கவில்லை.

அச்சமும் ஆதங்கமும் நிறைந்த மூன்று நாட்கள்.

தப்பு பண்ணிவிட்டேனா... முன்னப் பின்ன தெரியாத ஒருவனிடம்...?

அவன் யாரிடமாவது சொன்னால்...?

இதன் 'ஸ்கிரீன் ஷாட்' போலீஸிடம் கிடைத்தால்...?

நான்காவது நாள்.

'வணக்கம் சார்.'

'சொல்லுங்க.'

'வருகிறேன்.'

'ஓ.கெ. ஹோம் நர்ஸ் ஆக வேலைக்கு வாங்க.'

பிறகு விலாசமும் அடையாளங்களும் கொடுத்தேன். விலையையும் பேசி முடித்தேன். என் உயிரில் பாதியை அறுத்தெடுப்பதற்கான விலை.

தட்டித் தடுமாறும் அவள் உயிர் மூச்சை நிறுத்த எனக்கு ஒரு நொடி நேரம் போதும். ஆனால், என்னால் அதைச் செய்ய முடியாது.!

குற்ற உணர்ச்சியே இல்லை. ஓடியோடிச் சோர்ந்து விட்ட என் இதயத்தின் துடிப்புகள் நிரந்தரமாக ஓய்வெடுப்பதற்கு முன் அவள் வாழ்வு முடிய வேண்டும். அவள் ஆசைப்பட்டது போல் இறுதிச் சடங்குகள் முடித்துவிட்டு அஸ்தியை இராமேசுவரத்தில் கரைக்க வேண்டும்.

அதற்கு பின்... அதற்கு பின்...!

பஸ் வந்து நின்றது...

விண் நீல வண்ணமுடைய பஸ்.

பத்து பதினைந்து பேர் பஸ்ஸை விட்டு இறங்கினார்கள்.

இவர்களில் யார் அகிலேஷ்?

மாஸ்க் அணிந்த ஒவ்வொரு முகத்தையும் அலசிப் பார்தேன்.

போனில் ஒரு சிறு அதிர்வு. மெசஞ்ஜரில் அகிலேஷ்.

'வேர் யூ சார்.? யுவர் ஷர்ட் கலர்?'

பதில் எழுதாமல் மீண்டும் சாலைக்கு அப்புறம் தேடினேன். போனில் டைப் செய்து முகமுயர்த்தும் அவனை கண்டேன்.

பருந்தின் நிறமுள்ள சட்டை... பறவைக் கொக்கு போல் சற்றே முன் பக்கம் நீண்ட முக கவசம்.

ஆம்... அவனே தான்.

செல் போன் டவர் உச்சியைத் தொட்டு நிற்கும் இரண்டு வெண் மேகத் துண்டுகளுக்கு இடையே அந்த பருந்து அப்பொழுதும் பறந்து கொண்டிருந்தது. கறிக்கடைக்காரரின் கூரை ஓட்டுக்குள் அடைக்கலம் புகுந்த புறாவின் சிறகடியோசையும் கேட்டேன். அணையத் தொடங்கும் அவளது இதயத் துடிப்பின் தாளம் போல்.

நான் கையை உயர்த்தினேன். அவனும்.



kalampoorbaburaj@thaiveedu.com

# முடிவுக்கு வந்த நிலத்தின் கதை



**அகரன்**

வீரசிங்கம் வண்டியை நிறுத்துமாறு கனகனுக்கு கட்டளையிட்டார். ஆனால் ஏன்? எதற்கு? என்று ஒரு கேள்வியையும் கனகனால் கேட்க முடியாது. அவன் கேள்விகள் கேட்கமுடியாத ஊழியன்.

வீரசிங்கத்தின் எரிமலை வாசலில் நின்ற முகமும், உடல் இறுக்கமும், அணிந்திருந்த சட்டையின் தோரணையும் அவர் வழமையாக கோபம் கொள்ளும் போது தோன்றும் தோற்றம்தான். ஆனால், வண்டில் கரையோரம் இருந்த இடியன் துவக்குத்தான் கனகனை அச்சுறுத்தியது. ஏதோ நடக்கப்போவதை கனகன் பதட்டத்தோடு சகித்துக்கொண்டான்.

பெரு வீதியை கண்டதும் 'நிறுத்து!' என்றார். கனகன் இரண்டு கயிறுகளையும் இழுத்து வடக்கன் வண்டில் மாடுகளை பிரேக் அடிக்கச் செய்தான். வீரசிங்கம் வண்டிலின் பின்பகுதியால் தன் கால்களை நீட்டி தரையில் நிமிர்ந்து நின்றார். அவர் குதித்து இறங்கத்தேவையில்லை. கால்கள் அவ்வளவு நீளமானவை.

வீரசிங்கம் வலது தோளில் இடியனை எடுத்து கலப்பை போல வைத்தார். அதன் குழல்களை இடது கையால் பிடித்துக் கொண் டார். 'இங்க நில்லு! இப்ப வாரன்' - என்றவர் கனகன் முகத்தைப் பாராமல் A9 வீதியைக் கடந்தார்.

வீதியின் மறுபக்கம் இருந்த சங்கக்கடையைத் திறந்துவிட்டு, தனது மனேச்சர் ஆசனத்தில் இருந்த மார்க்கண்டு அண்ணரை கனகனால் பார்க்கமுடிந்தது. அவர் கொழுத்திய சாம்பிராணி புகை மார்க்கண்டரை சூழ்ந்து கொண்டடிருந்தது. சங்கக்கடை பாலை மரத்தில் ஒரு காக்கை கரைந்துகொண்டிருந்தது. சங்கக் கடை முகட்டில் இரண்டு புறாக்கள் ஏதோ பேசிக்கொண்டிருந்தன. அந்த காலை நேரத்தில் வேறு ஒரு சீவனும் அங்கு இல்லை.

'இந்த மனுசன் சங்க கடைக்கு ஏன் இடியனுடன் போகுது? இதனை மார்க்கண்டருக்கு விக்கப் போகிறாரோ?' என்று நினைத் தவாறு கனகன் கோவணத்தின் கரையில் சுருட்டி வைத்திருந்த வெற்றிலை சரையை எடுத்து விரித்தான்.

'டுமீல் ஊ... டுமீல் ஊ...' அந்த சத்தம் அந்த நொச்சிமோட்டை கிராமத்தை அதிரச் செய்தது.

**என்னால் இந்த நயவஞ்சகத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. படித்தவர்கள் ஏமாற்ற ஆரம்பித்தால் எல்லாம் மோசமாகிவிடும். அவனுக்கு பல நல்லவைகளை நான் செய்தேன். என்னை ஏமாற்றிய செயல் என்னை கொன்றதற்கு சமன்.**

வீரசிங்கம் சரியாக பத்தடி தூரத்தில் நின்று மார்க்கண்டின் நெஞ்சில் குறிவைத்துச் சுட்டார். மார்க்கண்டு கணக்கு மேசையில் இருந்தபடியே விழுந்தார். ரத்தம் இதயத்தில் இருந்து நேரடியாக சீமெந்துத் தரையில் விழுந்து ஓடிவந்து சங்க கடையின் வாசலில் பரவி நின்றது.

வீரசிங்கம் திரும்பி வண்டிலை நோக்கி நடந்தார். கனகன், கிறங் கிப்போய் வண்டிலில் இருந்தான். வெற்றிலைச்சரை நிலத்தில் சிதறி கிடந்தது. கனகன், வந்த வீரசிங்கத்தை நடுங்கும் வாயால் 'ஐயா..' என்றான். மேற்கொண்டு இருவர் வாயிலிருந்தும் ஒலி வர வில்லை.

வண்டிலினுள் ஏறியவர் இடியனை மடியில் வைத்துக்கொண்டு 'வண்டிலை வவுனியா பொலிஸ் ஸ்டேசனுக்கு விடு!' என்றார். கனகன், தோய்க்கப்போட்ட உடுப்பு காற்றில் பதறுவது போன்ற இதயத்துடன் வண்டியைச் செலுத்தினான்.

வீரசிங்கம், போலீஸ் ஸ்டேஷனுக்குள் இடியனுடன் நுழைந்து, 'சங்கக் கடை மனேச்சர் மார்க்கண்டை நான் சுட்டு விட்டேன்' என்றார். மொத்த பொலீஸ் ஸ்ரேசனும் எழுந்து நின்றது.

மரியாதையோடு அவரிடமிருந்த இடியன் துவக்கை முதலில் பெற் றுக்கொண்டார்கள். அங்கிருந்த தமிழ் - சிங்கள பொலீசார் சூழ்ந்து நிற்க, கனக சூரியர் என்ற கான்ஸ்ரபிள் இரண்டுகைக-ளாலும் தூக்கிவந்த குற்றப்பதிவேட்டில் வீரசிங்கத்தின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

*கதிரவேற்பிள்ளை வீரசிங்கம் ஆகிய நான், 2 பங்குனி 1972 இன்று காலை ஒன்பது மணிக்கு சங்கக்கடை மனேச்சரான மார்க் கண்டை எனது இடியன் துப்பாக்கியால் இரண்டு தடவை சுட் டேன்.*

*மார்க்கண்டு விசுவாசமாக நடப்பதாக காட்டிக் கொண்டான். எமக்கு A9 வீதியில் இரு மருங்கிலும் 20 ஏக்கர் காணி இருக்கி றது. பல தலைமுறையாக இந்த நிலத்தில் எனது மூதாதையர் காட்டை அழித்து உருவாக்கிய காணிகள் அவை.*

*இந்த ஆண்டு இலங்கையை முழுவதுமாக வெள்ளையனிடம் இருந்து பூரண விடுதலைபெறும் சட்டங்கள் ஏற்படுவதாகவும் அவசியம் காணிகளை கந்தோரில் பதிந்து காணி உறுதி பெற வேண்டும் என்ற ஊர் நடப்பை எனக்குச் சொன்னது மார்க்கண்டு தான்.*

*அதனால் என் காணிகளை சட்டப்படி பதிந்து உறுதிகளை பெற்றுத்தர மார்க்கண்டுவிடம் ஒப்படைத்தேன். அதற்கு ஒரு தொ கையை அவனுக்கு வழங்கினேன். மார்க்கண்டு மானிப்பாயில் இருந்து இங்கு வந்து தொழில் செய்கிறான். அவன் படித்தவன். மலையகப் பகுதியில் இருந்து என் தோட்டத்தில் வேலை செய்ய பலரை பணத்துக்கு வரவேற்றுத் தந்தது மார்க்கண்டுதான்.*

*ஆனால், அவன் எனது 20 ஏக்கர் காணியில் 10 ஏக்கரை தனது பெயரில் பதிந்து விட்டான். இதை நேற்று வந்த கச்சேரி கடதாசி உறுதிப்படுத்தியது. என்னால் இந்த நயவஞ்சகத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. படித்தவர்கள் ஏமாற்ற ஆரம்பித்தால் எல்லாம் மோசமாகிவிடும். அவனுக்கு பல நல்லவைகளை நான் செய்தேன். என்னை ஏமாற்றிய செயல் என்னை கொன்றதற்கு சமன். இப்படியானவன் இருக்கக்கூடாது என்று முடிவுசெய்தேன். காலையில் என் தோட்டத்து தொழிலாளி கனகனுடன் வண்டியில் சென்று அவனை சுட்டேன்.*

வீரசிங்கம் ஆறு அடிக்கும் அதிகமான நீளமானவர். அவர் எப் போதும் சரவம் செய்யப்பட்ட முகத்துடன் காட்சி தருபவர். அந்தப் பகுதியில் அறியப்பட்ட ஆளுமை. குரங்கு, யானை, கரடி, சருகு புலி எல்லாவற்றையும் சுட்டும், கலைத்தும் தன் கரத்தால் மரங் களை வெட்டி காணியை பெருக்கியவர். அவர் எந்த மனிதருக்கும் கைவைத்து பழக்கம் இல்லாதவர். எதிர் நிற்பவர் யாரும் அவரை அண்ணாந்து பார்க்க சங்கடப்படுவர். ஊர்க்காரர் இவரை கண் டால் துண்டை எடுத்து கையில் வைத்திருப்பர். சிலர் வீரசிங்கம் வீதியில் வந்தால் ஒதுங்கி நின்று அவர் தம்மை கடந்த பின்னர் தான் நகர்வார்கள். யாருக்கும் கொடுத்த வாக்கை ஒருபோதும் தட்டிக்கழிக்காதவர். அவர் தோட்டத்தில் 15 பேர் வேலை செய் தார்கள் அத்தனைபேரும் இருக்க வீடு, வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி வீரசிங்கம் என்ற பெயருக்கு எந்தக்கெடுதலும் வராமல் காத்தவர். ஒரு படித்த சக மனிதன் தன்னை ஏமாற்றி காணிகளை திருடியதால் விலங்குகளை சுட வைத்திருந்த துப்பாக்கியால் விதி களை மாற்றி மார்க்கண்டை சுட்டுவிட்டார்.

•

*வீரசிங்கம் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன், மனதில் ஏற் பட்ட மாற்றமும் அவரை கொலை செய்யத் தூண்டியது. கொ-லைக்கான காரண நிமித்தமும், கொலையாளியின் நிலைகருத-்யும் வழமையாக கொலைத் தண்டணைக்கான மரணதண்டனை தீர்ப்பிலிருந்து விடுவித்து அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப் படுகிறது.*
என்று நீதிமன்றம் கூறியது.

அவரின் வழக்கை வாதாடிய சிவசிதம்பரம் 'நீங்கள் சிறைக்குள் இருக்கும் நிலையைப் பொறுத்து சில ஆண்டுகளில் விடுதலை அடைய வாய்ப்புண்டு.' என்று தான் பெற்ற பணத்துக்கு ஏற்ற வார்த்தைகளைக் கூறிச்சென்றார்.

(வீரசிங்கம் சிறைக்கு சென்றதால் இனி அவரின் பெயரை சிங்கம் என்றே அழைப்போம்)

•

சிங்கத்தின் முதல் தாரம் முதல் குழந்தை பிறந்தபோது பிள்ளையும் தாயும் 1949ல் இறந்துவிட்டார்கள். வெள்ளையர் வெளியேறிய சகுனம் சரியில்லை என்று ஊர் கிளவிகள் பேசிக் கொண்டார்கள். சிங்கம் சிலகாலம் தனியே வாழ்ந்தார்.

அவரின் உறவுப் பெண் நாகசுந்தரி வயசுக்கு வருமட்டும் உறவுக் காரர் காத்திருந்து சிங்கத்துக்கு கட்டி வைத்தனர். நாகசுந்தரிக்கும் சிங்கத்தாருக்கும் 18 வயது இடைவெளி இருந்தது. அதை அவர் கள் பெற்றெடுத்த ஆறு குழந்தைகளும் நிறைத்தார்கள். ஆறாவ-தாக ஆண் பிள்ளை பிறந்தது. அந்த மகிழ்ச்சியில் இருந்த போது தான் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டிய நிலை வந்தது. சிறைச் சாலையில் சிங்கத்தார் கண்ணியத்தோடு இருந்தார். பத்திரிகை செய்திகளை படிப்பதில் காலத்தை போக்கினார். அப்போது இலங்கையில் நடைபெற்ற நிகழ்வுகள் அவருக்கு ஏமாற்றத்தை தந்து கொண்டிருந்தன.

S.W.R.D. பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டதால் அரசிய லுக்கு வந்த அவர் துணைவியார் வெள்ளையர்கள் உருவாக்கி தந்த சட்டங்களிலிருந்து பூரண விடுதலை ஏற்படுத்தலாம் என அரசியல் அமைப்பை ஏற்படுத்த மும்முரமாக ஈடுபட்டார். தமிழர்க ளின் பிரச்சினைகளையும் தீர்க்கும் முகமாக இருக்கும் என்று எல்லோரும் நம்பினர். அதற்கு முக்கிய காரணம் இரண்டு மொழி என்றால் ஒரு நாடு! ஒரு மொழி என்றால் இரண்டு நாடு! என்ற சிவப்புகொள்கை தலைவரும் பொதுவுடமைச் சிந்தனை கொண்ட கொல்வின் ஆர்.டி. சில்வா அந்த அரசியல் அமைப்பு குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டது.

ஆனால் அது மோசமான சட்டங்களோடு வந்தது. தண்ணீர் குவளைக்குள் 'பரக்குவாட்டர்' விட்டுக் கொடுத்ததுபோல தமிழ ருக்கு அது ஆகிப்போனது. சிறுபான்மை மக்களுக்கு சிறிய அரவ ணைப்பை கொடுத்த வெள்ளையர் சட்டங்களை நீக்கி முழுச் சிங்கள நாட்டுக்கான சட்டங்களோடு 'குறிப்பிட்ட ஒரு மதத்தை அரசு பேணிப்பாதுகாக்கவேண்டும்!' என்று அருமையான தீவில் விசம்தூவி நிலத்தை பிளக்கச்செய்தது. சிறுபான்மை மக்கள் வீதி யில் விடப்பட்டு, அவர்கள் கருத்துக்கள் ஏதும் கேட்கப்படாது அவர்களை ஆளும் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தது. சனநா யகம் தன் புற்றுநோயை வெளிப்படையாய் காட்டிக்கொண்டது.

சிறைக்குள் வரும் செய்திகளால் சிங்கத்தின் இதயமும் மூளையும் வெப்பமாகி கொண்டே வந்தது. யார் யாரோ நமக்காக சட்டம் இயற்றி நம் நிலத்தைப் பறிப்பது போல் இருந்தது. சிறையிலி ருந்து 1981ல் சிங்கத்தார் வெளியே வந்தபோது இலங்கை இரண் டாக பிரிந்து கொண்டு வந்தது. ஊர் மாறி இருந்தது. அவரின் மூத்த மகன் ஒரு முக்கிய இயக்கத்தின் பொறுப்பாளர் ஆக மாறி விட்டிருந்தான்.

(சிறையில் இருந்து வந்து விட்டதால் அவரை வீரசிங்கம் என்றே அழைப்போம்.)

தன் பிள்ளைகளில் கடைசி பிள்ளையை வைத்துக் கொண்டு மீதி பிள்ளைகளை யாழ்ப்பாணம் அனுப்பினார். அங்கே முதன்மை யான பள்ளிகளில் சேர்த்துவிட்டார்.

அவர் மனம், விடுதலையானபின் அதிக பாரமாகிக்கொண்டு வந் தது. மலையில் இருந்து பள்ளத்தாக்கில் விழுபவனின் நிலையில் இதயம் இயங்கியது. பேசுவதை குறைத்துக்கொண்டார். மறக்க நினைத்தாலும் மார்க்கண்டின் நினைவுகள் குளத்தில் எறிந்த கல் லுப்போல் அலைகளை உருவாக்கியது. சிறைத்தண்டனையைவிட மனத்தண்டனை அவரை கட்டிப்போட்டது.

அன்று அதிகாலை எழுந்து காணியை சுற்றி நடந்து வந்தார். பயிர்களை பார்வையிட்டார். சூரியன், கம்மாலையில் சூடாக்கப் பட்ட இரும்புபோல் வந்துகொண்டிருந்தது.

வெள்ளை வேட்டியும், வெள்ளைச்சட்டையும் போட்டுக்கொண்டார். அவர் நீண்ட கைகளில் பச்சைப்பாம்புகள்போல நரம்புகள் தெரிந்தன. அவர் தோற்றத்தை பார்த்தால் 'ஏதோ முக்கிய வேலை யாய் வீரசிங்கம் கிளம்பிவிட்டார்' என்று ஊருக்கே தெரியும்.

மாட்டுக்கொட்டிலைத் தாண்டி படலை நோக்கி நடந்தார். வலப் பக்கம் இருந்த அகில் மரமருகில் இருந்த குடிசைத் திண்ணை யில் கனகன் வட்டில் நிறைய சிகப்பு அடிசில் குவித்து உண வருந்திக்கொண்டிருந்தான். காலையில் உணவருந்தும் கனகனை வீரசிங்கம் பார்த்தார். கனகன் எழுந்து 'ஐயா வண்டில் பூட்டணுங் களா? என்றான். அவன்பின்னால் அவன் துணைவி வள்ளி செம் பில் தண்ணீரோடு ஓடி வந்தாள். கனகனை ஆழமாக பார்த்து விட்டு, உணவருந்துமாறு கையால் காட்டிக்கொண்டார். அவர் கைகாட்டிய விதத்தில் 'ஐயா அசீர்வாதம் செய்வதுபோல் கை காட்டினார்' என்று வள்ளி கனகனுக்கு கூறிக்கொண்டாள். 'ஐயா நல்ல மனசோடு எங்கோ போகிறார்' என்று வள்ளிக்கு பதில் சொன்னான்.

வீரசிங்கம், தன்னால் சுட்டுக்கொல்லப்பட்ட மார்க்கண்டு வேலை செய்த சங்கக் கடை நோக்கி நடந்தார். இடையிலுள்ள வாசக சாலையில் பரபரப்பாக பல இளைஞர்கள் நின்றனர். என்ன பிரச் சனை? என்று எட்டிப் பார்க்கலாம் என்று உள்ளே நுழைந்தார். அங்கிருந்தவர்கள் இடைவெளி விட்டு எழுந்து நின்றனர். ஒருவன், 'ஐயா! யாழ்ப்பாண நூலகத்தை எரித்து விட்டார்கள்' என்றான். அங்கிருந்த பத்திரிகையொன்றில் 'காமினி திசாநாயக்கா, சிறில் மத்தியூ போன்ற அமைச்சர்கள் தலைமையில் யாழ் நூலக எரிப்பு' என்ற செய்தி கொட்டை எழுத்துக்களில் கிடந்தது.

வீரசிங்கம் அங்கிருந்து வெளியேறி நடந்தார். A9 வீதி முள்ளந் தண்டுபோல் படுத்திருந்தது. அதன் மறுபுறம் சங்க கடை தெரிந் தது. அதற்குள் மார்க்கண்டு இடத்தில் வேறு யாரோ இருந்தார் கள். அந்த இடத்தைப் பார்த்துக்கொண்டே நின்றார். கால்கள் நடுங்குவதுபோல் இருந்தது. நெஞ்சுக்குள் ஈயத்தை காச்சி ஊற்றி யதுபோல் வலி எடுத்தது. அருகே இருந்த ஆலமரத்தின் கீழ் சென்று சாய்ந்து உட்கார்ந்துகொண்டார். மார்க்கண்டு சுடப்பட்ட இடத்தை பார்த்துக்கொண்டே இருந்தார். இரண்டு காக்கைகள் கரைந்தன. சங்கக்கடையில் முகட்டில் இருந்த புறாக்கள் எங்கோ பறந்து சென்றன. வீரசிங்கத்திற்கு தலை சுற்றுவது போல இருந் தது. வெளியே மலைப்பாம்புபோல் கிடந்த ஆலம்வேரில் தலை வைத்து படுத்தார். இதயம் அப்போது இறுதியாக துடித்துவிட்டு ஓய்வெடுத்துக்கொண்டது.

வீரசிங்கம் செத்துப்போனார்.

அடுத்த வருடம் அவர் மனைவி அதே ஆலமரத்தில் தூக்கிட்டு இறந்துபோனார். மீதி ஐந்து பிள்ளைகளும் 1985 ஊரைவிட்டு, நாட்டைவிட்டு, கனடாவிற்கு சென்றுவிட்டனர். 1987ல் மூத்த மகன் ஒரு சண்டையில் குண்டடிபட்டு இறந்தான்.

வீரசிங்கத்தின் காணி மீண்டும் பறவைகளின் உதவியால் காடு நிறைந்ததாக மாறியது. விலங்குகள் மீண்டும் வந்தன. 2010இல் வீரசிங்கத்தின் பூர்வீக கதைகளை வைத்திருந்த காட்டை இலங்கை அரசு அழித்தது. அவை இராணுவ குடியிருப்பாக மாற்றப்பட்டது.

சண்டைகளில் தன்பிள்ளைகளை பறிகொடுத்துவிட்டு கனகனும், வள்ளியும் வீரசிங்கத்தின் நிலத்தில் வாழச்சென்றார்கள். அவர் களை இராணுவம் துரத்திவிட்டது. அவர்கள் பின்பு எங்குபோனார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை. அவர்கள் பதிவில்லாத மனிதர்கள்.

இவையொன்றும் வீரசிங்கம் சந்ததிக்கு தெரிய வாய்ப்பில்லை. அவர்கள் வெகு தூரம் போய்விட்டார்கள். இப்படித்தான் அவர்கள் கதை அந்த நிலத்தில் முடிவுக்கு வந்தது.



akaran@thaiveedu.com

# 'நிலவு தொலைந்த மணல் வீடு'



**- த. சாள்ஸ் குணநாயகம்**

நாம் நடக்கத் தொடங்கியதிலிருந்து இதுவரை நாம் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை.

இதயம் தொடர்ந்து வேகமாய் அடித்துக் கொண்டிருந்தது. நாக்கு வரண்டு... முகத்தில் அடித்து கரைந்து வடிகின்ற பனிநீரை உள்ளே இழுத்து விழுங்குவதுமாய் நான்.

தொடர்ந்து நடந்தோம்.

புறப்படும்போதிருந்த மனநிலை இப்போது பயமாய்க் கரைந்தது. அதனால் பலதை நான் மறந்தே போய்விட்டேன்.

குளிரில் விறைத்துச் சாவதைவிட என்னைப்பிடித்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பு என்று கூவவேண்டும் போலிருந்தது.

ஐரோப்பாவின் ஜேர்மனிக்குள் வந்திறங்கி ஒரு அகதியாய் பதிந்ததிலிருந்து நான் பட்ட அவலங்கள் போதும் போதும் என்றாகிவிட்டது. விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு நச்சரிக்கப்பட்டதும், பின்னர் அகதிமுகாம் என்ற ஒரு பயங்கரமான சூழலும்.

நாமோர் சிறைக்கைதிகள்போல... அதுவும், நாமே பல கற்பனைகளை வளர்த்துக் கொண்டு சிறைகளுக்குள் புகுந்து வசமாக மாட்டிக் கொண்ட கைதிகளாக...

வேற்றுமொழி, ஒட்டாத சூழல், பல அதிகாரிகளினதும் பொலிஸினதும் கெடுபிடிகள். எப்போதும் எல்லாவற்றிலும் ஓர் அந்நியனாய்.

நான்மட்டுமா?

இல்லை அகதிவாழ்வே ஒரு அன்னியமாதல் தான்.

தூரத்தே உயர்ந்து நின்ற கம்ப விளக்குகளின் கதிர் பனிப் புழுதியில் மங்கலாய்த் தெரிகிறது. தண்டவாளக் கரைகளில் தெரிந்த ஓரிரண்டு வீடுகளில் இன்னமும் விளக்குகள் அணைக்கப்படவில்லை. முகடுகளில் புகை வருவதும்கூடத் தெரிந்தது. ஹொலண்ட் எல்லையை அண்டி ஜேர்மனிக்குள் ஒரு குடியிருப்புப் பகுதிக்குள் இறக்கப்பட்டபின்... இன்று இந்த அவலம் நிறைந்த இரவும் இந்தத் தண்டவாள அனுபவமும் எனக்கு.

களவாக ஹொலண்டுக்குள் வருவதற்காகத் தொடர்கின்ற தொல்லை நிறைந்த இரவு.

ஹொலண்டில் அகதிகளுக்கு நல்ல சலுகைகளாம் என்ற நம்பிக்கைகளைச் சுமந்து கொண்டு, நாடுகளின் எல்லைக் கரைகளில்

நாய்களுடன் அலையும் பொலிஸ்காரர்களின் கண்ணில் படாமல், கடவுகளிலுள்ள ஆபத்துக்களைக் கடந்து... அந்த மூன்றுமணி நேர பாதயாத்திரை ஒரு அகதியால்கூட சகித்துக் கொள்ள முடியாததுதான்.

இரும்புப்பாதை முடிந்த அந்தப் புகையிரத நிலையம் இன்னும் திறக்கப் படவில்லை. நேரம் அதிகாலை நாலு இருபதிலிருந்து அசைந்து கொண்டிருந்தது.

முன்னாலிருந்த பஸ்நிலையத்துள் நாம் ஒதுங்க முடியாதபடி மூட்டை முடிச்சுகளுடன் துங்கிக் கொண்டிருந்தனர் சில வெள் ளைப் பிச்சைக்காரர்கள்.

அமைதியான அந்தத் தெருக்களில் ஓரிரண்டு டாக்ஸிகள் மட்டும் போய் வந்தன.

சந்திரன் அடிக்கடி நேரத்தைப் பார்த்துக் கொண்டான்.

"ஐஞ்சுமணிக்குத்தான் புகையிரதநிலையம் திறக்கும். ஐஞ்சரைக்கு முதல் றெயின்' மெதுவாய்ச் சொன்னான்.

'இவ்விடத்தில் பிடிபடாட்டில் ஈசியாய் பதிஞ்சிடலாம்' என்று பயத்தை உணர்ந்தவனாய் நம்பிக்கை தந்தான். 'ரோந்துக்குப் பொலிஸ் வந்தால் கரைச்சல்'. மறையக்கூடிய இடமொன்றை நாடி அவன் பின்னால் நான்.

வெள்ளைப் பொலிஸ் கார் ஒன்று பஸ் நிலையத்தின் முன் நிறுத் தப்பட்டது. நாம் நெருக்கமாய் இருந்த தூண் ஒன்றின் மறைவில் ஒளிய முற்பட்டோம். அந்தக்குளிரிலும் எனக்கு வேர்க்கத் தொடங்கிவிட்டது. படுத்திருந்த பிச்சைக்காரர்களை தட்டியெழுப்பி நடக்க விட்டார்கள் பொலிஸ்காரர்கள்.

அவர்கள் நித்திரை வெறியில் திட்டிக் கொண்டும் ஏசிக்கொண்டும் நடந்தார்கள் போலிருந்தது எனக்கு. இனி அவர்கள் எம்மை நோக்கி வரக்கூடும். நாம் மீண்டும் நெருக்கமாய் மறைவைத் தேடி ஒதுங்கிக்கொண்டோம். பிடிபட்டால் ஒரு கள்ளனாய்... கை விலங் கிட்டு போடர் பொலிசிடம் கொடுத்து... நம்பர் கொழுவி நாலுபக்க மும் படமெடுத்து... விரல் விரலாய் கைரேகையைப் பதிந்து... நிர்வாணமாக்கி மலவாசலுக்குள் வைத்து போதைப் பொருள் கடத்துகிறோமா என்று சோதனையிட்டு... தண்டப்பணம் கட்டி... மீண்டும், ஜேர்மனியப் பொலிஸிடம் ஒப்படைக்கப்படுவோம்.

அங்கேயும் ஆயிரம் கேள்விகள். சிலவேளை நீதிமன்றத்தில் பாரப் படுத்தல். குறைந்தது ஏழுநாட்கள் சிறை என முரட்டுத்தனமான நடவடிக்கைகள். பலருக்குக் கிடைத்த அனுபவங்களின் முகமாய் வீங்கி விறைத்தது. மீண்டும் அந்தக் காடு தொடங்கும் இடத்தில்... தனித்து விடப்பட்ட அந்தப் பாழடைந்த அகதி முகாமிற்கா?

சவம்பிடித்த வாழ்க்கை.

ஒன்றித்துப்போக முடியாத மனிதர்கள்.

விருப்பமற்ற சாப்பாட்டுக்கு கியூ. கூழும் கஞ்சியும் போல சாப்பாடு,

மனம் குலைந்துபோய்க் கிடக்கும் விசர் ஆசுப்பத்திரிதான் அது.

சாமம் சாமமாய் குடிக்காய்ச் சண்டையும் சண்டைக்காய் குடியும்.

அடிக்கடி பொலிஸ் வரும்.

நிச்சயமாய் அது சிறைதான்.

அந்தச் சனிப்பிடித்த வாழ்க்கையை விட்டுத் தானே இங்கு ஓடி வந்தேன். இதுவும் பயங்கரமானது.

நாம் தப்பி விட்டோம்.

றெயின் ஏறி கட்டடக்காடாய் வளர்ந்து கிடக்கிற பிரசித்திபெற்ற துறைமுக நகரான 'றொட்டடம்' வந்தபோது நன்றாக விடிந்து விட்டது.

நகர வெளிநாட்டுப் பொலிஸைக் காட்டி விட்டு சந்திரன் மாறிவிட் டான்.

பொலிஸில் பதிந்து அவர்களின் ஆயிரம் கேள்விகளுக்கு அப்பா வியாய் முகம் காட்டி, கைரேகையும் படமும் பிடித்து, தூரத்துக் கிராமமொன்றுக்கு அவர்கள் றெயின் டிக்கட் தந்து, நான் போய் அகதிகள் முகாமைத் தேடிப்பிடிக்க மாலை நான்கு மணிக்கு மேலாகி விட்டது.

எனக்குத்தரப்பட்ட அறையில் இன்னும் இரண்டுபேர் தமிழர்களாம். எனக்கு அறை காட்டியவன் சொன்னான்.

களைப்பும் வெறுப்பும் ஆழ்ந்த நித்திரையில் விடிந்தது.

முகாமில் பல நாட்டவர்கள். இப்போதுதான் எமக்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', இளைஞர்கள்... குடும்பங்கள்... ஏழு பேர்வரை தமிழர்கள்.

முகாமில் கட்டுப்பாடுகள் பாதுகாப்பு என்பன கடுமையாய்த்தான் இருக்கிறது. பொலிஸ், வைத்திய உதவி, சமுகசேவை, அகதிகள் நலன்புரிச்சங்கம் எல்லாமே உள்ளே இருந்தன. கொஞ்சம் வசதி இருப்பதாக ஒப்பீடுகளுடன் திருப்திப்பட்டுக் கொண்டேன்.

இதுவும் நடுக்காட்டுக்குள் உள்ள பழைய அங்கவீனர் இல்லம் தான்.

கிழமைக்கு ஒருக்கால் விசா புதுப்பிக்க வேண்டும். பொலிசுக்குப் போகும் நாட்களெல்லாம் பயந்துகொண்டே போனேன். மூன்று மாதங்கள்தான் முகாம் வாழ்க்கை. பின்னர் வீடு கிடைத்தால் நிம் மதியாய் ஏதாவது செய்யலாம் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

அரசியல் தஞ்ச விசாரணை இன்னமும் நடை பெறவில்லை. எதை யும் துணிவாய்க் கேட்கவும் வாதாடவும் தக்க மனநிலை தற்போது என்னிடமிருந்து விலகி நிற்கிறது.

அகதியாய் அலைந்த அனுபவம் என்னையும் களைத்துப் போகப் பண்ணிவிட்டது.

ஏற்கனவே அரசியல் தஞ்சம் கேட்டு பின் இங்கு வந்து பதிந்தவர் கள் பலர் விசாரணைகளின்போது மாட்டுப்படுவதை கதை கதை யாகச் சொல்கிறார்கள்.

'ஏமாத்துக் கேசுக்கு ஆறுமாதம் தெரியுமா?' என்கிறான் அறை நண்பன் சிவா.

'அது உனக்கும் பொருந்தும் நீயும் போடர் கடந்தவன்தான்' என்கி றேன் நான்.

கேலிகளுக்கும் பகிடிகளுக்கும் கூட பயமே உயிரோட்டமாய் தெரிகிறது.

நாம் பயந்து சாகிறோம்.

ஏன், எதுவரினும் வரட்டும் என்ற மனவுறுதியை இழந்தோம்?

போதும் இந்த வாழ்வைத் தொலைத்த
அகதிவாழ்க்கை.



charles.g@thaiveedu.com



# என் பெண்ணின் பழங்கள்

## - ஹான் காங்

### தமிழில்: என்.கே. மகாலிங்கம்

அது ஒரு மே மாதக் கடைசி. அப்போது தான் நான் என் மனைவியின் உடம்பிலுள்ள தழும்புளைக் கண்டேன். அதே நாளில் தான், துப்புரவுத் தொழிலாளிகளின் அலுவலகத்திற்குப் பக்கத்திலுள்ள பூப்பாத்தியிலுள்ள அந்த இளம் மலர்களையும் கண்டேன். அம்மலர்களின் இதழ்கள், துண்டிக் கப்பட்ட நாக்குகள் போல எங்கும் தெளிக்கப்பட்டுக் கிடந்தன. முதியவர்களின் மையத்தின் வாசலிலுள்ள நடைபாதைக் கற்களின் மேல் நடப்பவர்களின் சப்பாத்துக்களின் கீழ் அகப்பட்டு அழுகும் அந்த வெண்ணிறப் பூக்கள் உறைந்து கிடந்தன.

சூரியன் ஏறக்குறைய உச்சத்தில் நின்றான்.

மஞ்சள் நிறம் கலந்த இளஞ் சிகப்பு நிற சூரிய ஒளி, கனிந்த பழத்தின் சதை நிறத்தில் முன் கூடத்தரையில் தரையில் கசிந்து கொண்டிருந்தது. எண்ணற்ற தூசியையும் பூந்தாதுத் துகள்களையும் உதிர்த்துக் கொண்டும் இருந்தது, அது.

நானும் என் மனைவியும் ஞாயிறு காலை செய்திப் பத்திரிகைகளை தட்டிக் கொண்டிருந்தோம். அப்போது மிகவும் இனிமையான, வெதுவெதுப்பான சூரிய வெளிச்சம் என்னுடைய வெள்ளை நிற உள்சட்டையில் விழுந்து கொண்டிருந்தது.

கடந்த பல மாதங்களாக நான் அனுபவித்து வரும் சோர்வை கடந்த கிழமையிலும் உணர்ந்தேன். வார இறுதிகளில் சோர்ந்து போய் படுத்திருப்பேன். ஒரு சில நிமிசங்களுக்கு முன்பு தான் விழித்தேன். ஒரு பக்கமாகப் படுத்து என் தளர்ந்த கை கால்களை

சற்று வசதியாக வைத்துக் கொண்டு மிக மெதுவாக பத்திரிகைளைத் தட்டிக் கொண்டிருந்தேன்.

'இந்தத் தழும்புகளைக் கொஞ்சம் பார்க்கிறாயா? ஏன் இந்தத் தழும்புகள் இன்னும் மறைந்து போகவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.'

என்னுடைய மனைவியின் அந்த வார்த்தைகள் என் அமைதியைக் குழப்புவதாகவே என் மனதில் பதிந்ததே அல்லாமல் அதன் பொருளை நான் பகுத்துணரவில்லை. அவளை அரைகுறை மனதுடன் பார்த்தேன்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்து இதுவரை வாசித்த இடத்தை ஒரு விரலால் அடையாளத்துக்கு வைத்துக் கொண்டு கண்களை உள்ளங்கையால் துடைத்தேன். என் மனைவி தன் உள்ளாடையை மார்புக் கச்சைவரை தூக்கிப் பிடித்தாள். ஆழமான தழும்புகள் அவளுடைய முதுகிலும் வயிற்றிலும் பல நிறங்களில் புள்ளி புள்ளியாகத் தெரிந்தன.

'உனக்கு இவை எப்படி வந்தன?'

மடிப்புகள் உள்ள பாவாடையின் லிப்பிலிலிருந்து மேலெழும்பிச் செல்லும் சட்டையை, முதுகெலும்பை நான் பார்க்கக் கூடியதாக முதுகை வளைத்தாள். இப்போது பிறந்த குழந்தையின் கை முட்டி அளவில், பழுப்பு நீல நிறத் தழும்புகள் மையில் அச் சடித்தது போலத் துல்லியமாகத் தெரிந்தன.

'சரி, இவை எப்படி வந்தன?' என் கூர்மையான வலியுறுத்தும் தொனி, பதினெட்டு பியொங் அடி அகலமான எங்கள் குடியிருப்பின் அமைதியைக் கிழித்தது போல கேட்டது.

'எனக்குத் தெரியாது... நான் உணராமல் எதிலோ முட்டியிருக்கிறேன். தழும்புகள் மறைந்து போய் விடும் என்று நினைத்தேன்.. ஆனால் அவை பெரிதாகிக் கொண்டு வருகின்றன.'

மனைவி என் பார்வையை தவிர்த்தாள். குழந்தை ஒன்று பிழை விட்டுப் பிடிபட்டது போல. அவளை நான் ஏசி விட்டதற்காக வருந்துவது போல என் தொனியைத் தணிப்பதற்கு முயன்றேன்.

'அது உனக்கு நோகிறதில்லையா?'

'இல்லை, இல்லவே இல்லை. உண்மையில் அந்தத் தழும்புகள் உள்ள இடங்களில் உணர்வே இல்லை. அதுதான் இன்னும் கவலையை அளிக்கிறது.'

சற்று நேரத்திற்கு முன் நான் கண்ட அந்த குற்றவுணர்வின் வெளிப்பாடு இப்போது எந்தச் சுவடும் இல்லாமல் மறைந்து விட்டது. அதற்குப் பதிலாக மென்மையான பொருத்தமற்ற புன்னகை ஒன்று வெளிப்பட்டது. அந்தப் புன்னகை என் மனைவியின் உதடுகளைச் சுற்றி அவள் மருத்துவமனைக்குப் போக வேண்டுமா என்று கேட்டபோது வெளிப்பட்டது.

ஒருவித விந்தையான உணர்வுடன் அந்த முழு நிலைமையிலிருந்து முழுவதாகப் பின்வாங்கினேன். பின், மிதமாக, உணர்ச்சி வசப்படாமல் என் மனைவியின் முகத்தைச் பரிசோதித்தேன். நான் எதிர்கொண்ட அந்த முகம் எனக்கு அறிமுகமில்லாதது போல இருந்தது. அத்துடன் அது ஏறக்குறைய உண்மையற்றது போலவும் இருந்தது. நாலு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்து வருவர்களிடம் ஒருவர் எதிர்பார்க்கும் எதுவுமே அதில் இருக்கவில்லை.

என் மனைவி என்னிலும் பார்க்க மூன்று வயது குறைந்தவள். அந்த ஆண்டு அவளுக்கு இருபத்தொரு வயதாகி விட்டது. நாங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து போனபோது, நாங்கள் மணம் முடிக்காத அந்த நாட்களில் அவளுடைய முகம் சங்கடத்தைத் தரக் கூடியளவு இளமையாக இருக்கும். அவளை ஒரு பள்ளி மாணவி என்றே அடிக்கடி பலரும் எடுத்துக் கொள்வார்கள். இப்பொழுது அந்த முகத்தில் களைப்பின் அடையாளம் தெளிவாகவே தெரிகிறது. எதையும் நம்பும் அவளுடைய அப்பாவித்தனத்திற்கு எதிரான ஓர் அதிர்ச்சியையே அது அளிக்கிறது. இனிமேலும் அவளை ஒரு பள்ளி மாணவியாகவோ ஒரு பல்கலை மாணவியாகவோ கூட எவரும் எடுக்கப் போவதில்லை. இப்பொழுது உண்மையாகவே அவள் தன் வயதிலும் பார்க்க அதிக வயதுள்ளவளாகவே தெரிகிறாள். அவளுடைய கன்னங்கள் பழுக்காத அப்பிள் பழத்தில் இப்போதான் சிறிதாக சிகப்புத் தோன்றுவது போல, பிசைந்த களிமண் போல குழிவிழுந்தும் காணப்பட்டன. சர்க்கரை வள்ளிக் கிழங்கு முளை போல மென்மையாக வளைந்து விடுவது போல இருந்த இடுப்பும், கவரும் வளைவுகளைக் கொண்ட வயிறும் இப்போது இரக்கத்துக்குரிய அளவில் மெலிந்து காணப்பட்டன.

என் மனைவியை நிர்வாணமாக கடைசியாக நான் கண்டது எப்போது என்பதை நான் கற்பனை செய்ய மிகவும் சிரமப்பட்டேன். அவளை நன்றாகப் பார்க்க அப்போது போதிய அளவு வெளிச்சமும் இருந்தது. அது அந்த ஆண்டு அல்ல. அது அதற்கு முந்திய ஆண்டாக இருக்கலாமா என்பதுவும் எனக்கு நிச்சயமில்லை.

ஒன்றாக வாழும் ஒரேயொரு பெண்ணுடைய உடம்பில் உள்ள ஆழமான தழும்புகளை எப்படிக் கவனிக்காமல் விட்டேன்? என் மனைவியின் கண்களின் ஓரங்களில் உள்ள சிறிய சுருக்கங்களை எண்ண முயன்றேன். பின் அவளுடைய எல்லா ஆடைகளையும் களையச் சொன்னேன். அவளுடைய எடை குறைந்து போனதால் கன்னத்து எலும்புகள் கூர்மையாகி அதன் நீளம் கன்னம் சிவந்தது போலத் தோன்றியது. ஆடைகளைக் களையச் சொல்லிக் கேட்டதை அவள் ஆட்சேபித்தாள்.

'யாராவது பார்த்தால் என்ன செய்வது?'

அதிகமான குடியிருப்புகள் தோட்டத்தையோ கார் நிறுத்தும் இடத்தையோ எதிர் நோக்கி இருந்தன. எங்கள் மாடியின் பல்கனி கிழக்குப் பார்த்து பிரதான தெருவை நோக்கி இருந்தது. அருகே உள்ள அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து எங்கள் அடுக்குமாடிக் குடியிருப்பு மூன்று வீதிகள் தள்ளி பிரதான தெருவுக்கும் சுங்நாங் ஓடைக்கும் அப்பால் தனியாக இருந்தது. அதனால் எவரும் எங்களைப் பார்க்க முடியா, சக்தி வாய்ந்த தொலைநோக்கி இல்லாமல். தெருவில் வேகமாக ஓடும் காரிலிருந்து எவராவது பார்ப்பார்கள் என்ற ஆபத்தும் இல்லை. அதனால் என் மனைவியின் ஆட்சேபத்தை அவளுடைய சங்கடத்தின் அடையாளமாகவே எடுத்துக் கொண்டேன். அந்தக் காலத்தில், ஓகஸ்ற் மாதக் கடும் வெப்பத்தைத் தணிப்பதற்காக விறாந்தைக்குப் போகும் கண்ணாடி போட்ட இரண்டு கதவுகளையும் திறந்து வைத்திருப்போம். யன்னல்களையும் அகலத் திறந்து வைத்திருப்போம். அந்தக் காலத்தில் அதே முன்கூடத்தில் புதிதாக மணம் முடித்திருந்த நாம் வார இறுதிகளில் பல முறை நடுப்பகலில் புணர்ந்திருக்கிறோம். எங்களுக்குத் தெரியாதவற்றை அறிந்து கொள்ள நயமற்ற முறையில் சோர்ந்து போகும்வரை அப்படி நடந்திருக்கிறோம்.

எங்கள் காதலுக்குப் பழக்கப்பட ஒன்றிரண்டு ஆண்டுகள் சென்றன. உணர்ச்சி வேகம் உள்ள ஆரம்ப நாட்கள் படிப்படியாகக் குறைந்தன. என் மனைவி படுக்கைக்கு மிக நேரத்துடன் போய் விடுவாள். அவள் வழக்கத்திற்கு மாறாக ஆழமாகக் துயிலக் கூடியவள். நான் வீட்டுக்குப் பிந்தி வந்தால் அவள் ஏற்கெனவே துயின்றிருப்பாள் என்பது எனக்குத் தெரியும். முகப்புக் கதவின் பூட்டில் நான் திறப்பைப் போட்டுத் திருப்பி வீட்டுக்குள் நுழையும்போது கதைப்பதற்கோ என்னை வரவேற்பதற்கோ எவரும் இருக்க மாட்டார்கள். நான் குளித்த பின் இருண்ட படுக்கை அறைக்குள் நுழைவேன். அவளுடைய மூச்சின் லயம் கூட விளக்க முடியாத தனிமையையே எனக்களிக்கும். அந்தத் தனிமையைப் போக்கும் என்ற நம்பிக்கையில் அவளை நான் தழுவுவேன். அவள் கண்கள் அரைவாசி திறந்திருக்கும். என்னுடைய தழுவலை அவள் நிராகரிக்கிறாளா அல்லது மனமுவந்து வரவேற்கிறாளா என்ற தடம் அவற்றில் தெரியாது. என் தழுவலை நிறுத்தும் வரை அமைதியாக அவள் விரல்கள் என் தலைமயிரை குடைந்து கொண்டிருக்கும்.

'எல்லாவற்றையுமா? எல்லாவற்றையும் களைய வேண்டும் என்கிறாயா?'

அவளுடைய சுருக்கம் விழுந்த முகம் பீறிடப் போகும் அழு

கையை நிறுத்தச் சிரமப் பட்டுக் கொண்டிருந்தது. கழற்றி எடுத்த உள்ளாடையை பந்தாகச் சுருட்டி வைத்த பின் அல்குல் பகுதியை கைகளால் மறைத்தாள்.

அவளுடைய நிர்வாணமான உடம்பு இளவேனில் வெளிச்சத்தில் முற்றும் வெளித் தெரிந்தது. அது நடந்து உண்மையாகவே பல காலம் தான்.

இருந்தும் ஒரு துளி இச்சை கூட எனக்கு ஏற்படவில்லை. மஞ்சள்-பச்சை நிற தழும்புகள் அவளுடைய பிருட்டத்தில் மாத்திரமல்ல அவளுடைய விலாவில், முழந்தாளில், வெள்ளை நிற உள் தொடைத் தசைகளில் கூடத் தெரிந்தன. எனக்கு கடும் கோபம் வந்தது. சடுதியாக என் பிடியைக் கைவிட்டேன். தேவையற்ற துயரம் என்னை ஆட்கொண்டது. எளிதாக அலையும் மனம் கொண்ட இந்த பெண்ணுக்காகவா, ஒரு நாள் மாலை நித்திரை துறந்து தன் நினைவிழந்து வீதியில் நடந்தேன். உறக்கம் இழந்து உணர்வுகள் மழுங்க நடந்தேன். மெதுவாக ஓடி வந்த காரில் மோத இருந்தேன். நடை தவறி எங்கள் கட்டடத்தின் வெளிச்சமற்ற அவசரகால படிக்கட்டில் விழுந்தேன்.

என் மனைவியின் உருவம் அல்குல் பகுதியை மறைத்துக் கொண்டு நின்றது. அவளுடைய முதுகுப்புறத்தில் பின்இளவேனில் கால வெளிச்சம் விழுந்து கொண்டிருந்தது. தான் மருத்துவ மனைக்குக் கட்டாயம் போக வேணுமா என்று கவனக்குறைவாக கேட்டுக் கொண்டிருந்தாள். அத்துணை துயரார்ந்தவளாக, இரக்கத்துக்குரியவளாக, வார்த்தைகள் இல்லாத அளவு சோகத்துக்குரியவளாக இருந்தாள். நீண்ட காலமாக அப்படி உணராத நான் அவளுக்காக இரங்கினேன். அவளுடைய எலும்பும் தோலுமான உடலை என்னுடன் அணைத்தேன். அதை மட்டுந்தான் என்னால் செய்ய முடிந்தது.

எல்லாம் நன்றாகவே நடக்கும் என்று கருதினேன். அதனால் தான் நான் என் மனைவியின் எலும்பும் தோலுமான அந்த உருவத்தை அந்த இளவேனில் நாளில் என் கைகளில் ஏந்தி இருந்தேன். அப்போது, 'அந்தத் தழும்புகள் நோகா விட்டால் கெதியில் அவை மறைந்து விடும். இப்படியான மோசமான நிலைமையில் நீ எந்தக் காலத்திலுமே இருந்ததில்லை, இல்லையா?' என்றேன். அப்படி இடித்துரைத்த என் செய்கையைத் தணிப்பதற்காக பெரும் சத்தத்துடன் சிரித்தேன்.

வசந்த காலத்தின் ஆரம்பத்தில் ஒருநாள் இரவு வெப்பக் காற்றுத் தன் ஒட்டும் கன்னங்களை உயரமான அத்தி மர இலைகளில் தேய்த்துக் கொண்டிருந்தது. வீதிகள் இரத்தம் நிறைந்த கண்களுடன் வெளிச்சத்திலிருந்து இருட்டுக்கு ஊசலாடிக் கொண்டிருந்தது. என் மனைவி மேசையின் முன் அமர்ந்திருந்தாள். நாங்கள் பின்னிரவு உணவை உண்டு கொண்டிருந்தோம். அப்போது அவள் தன் கரண்டியை சத்தம் எழப் போட்டாள். அவளுடைய தழும்புகளைப் பற்றி நான் முற்றாக மறந்து போயிருந்தேன்.

'சரி. இது விசித்திரமாக இருக்கிறது..இன்னும் ஒரு தரம் பார்க்க விடு.'

கட்டைச் சட்டை அணிந்திருந்தாள். ஒட்டி உலர்ந்து போயிருந்த அவளுடைய தோள்களை பார்த்தேன். அப்போது அவள் தன் ரீ சேர்ட்டையும் மார்புக் கச்சையையும் வேகமாகக் கழற்றிப் போட்டாள். என் வாயிலிருந்து மெல்லிய ஏக்கக் குரல் வெளியேறியது. அதைத் திரும்பவும் விழுங்குவதற்கு முன்னம்.

கடந்த இளவேனில் காலத்தில் குழந்தையின் முட்டியின் அளவில் இருந்த அந்தத் தழும்புகள் இப்போது அகலமான சேப்பன் கிழங்கு இலைகள் போல இருந்தன. அதன் மேற்புறம் இருளடைந்து போயிருந்தது.

பெரிய வில்லோ மரக் கிளைகள் போன்ற நிறத்தில் அவை இருந்தன. அத்துடன் அவை கருமையாகவும் இருந்தன. அவற்றின் பழுப்புப் பச்சை நிறம், வசந்த காலம் ஆரம்பித்தவுடன் தெரியும் சிறிதளவு நீல நிறம் படர்ந்திருந்தது போலவும் இருந்தது.

நான் என் நடுங்கும் கரத்தை நீட்டி என் மனைவியின் தழும்புள்ள தோளைத் தடவினேன். அந்நிய ஒருத்தியின் உடம்பைத் தொடுவது போல உணர்ந்தேன். அந்தத் தழும்புகள் எப்படிப்பட்ட நோவை அவளுக்குக் கொடுத்திருக்க வேண்டும்?

இப்பொழுது அதை நினைத்தேன். அப்போது அவளுடைய முகத்தைக் கவனித்தபோது அது காரீயம் கலந்த நீர் சேர்ந்தது போல நீல நிறமாகி இருந்தது. முன்பிருந்த அவளுடைய பளபளப்பான தலைமுடி சுலபமாக முறியக் கூடிய காய்ந்த முள்ளங்கி இலைகளைப் போல இருந்தது. கண்களின் வெண்ணிறம் மாறி பழுப்புக் கருநீல நிறமாகி விட்டது. அவளுடைய வழக்கமான கறுத்த கண்மணிகளின் மை அதற்குள் வடிந்து விட்டது போல, கண்கள் ஈரத்தால் மினுங்கின.

'இது ஏன் எனக்கு நடக்கிறது? நான் வெளியே போக வேணும் என்று விரும்புகிறேன். என்னால் இயன்றவுடன்... சூரியவெளிச்சத்தைக் கண்டவுடனே... உடைகளைக் களைய வேண்டும் என்ற உந்துதல் வருகிறது. என்னுடைய உடம்பு உடைகளைக் கழற்றி விட வேண்டும் என்று சொல்கிறது.' என்னுடைய மனைவி எழுந்து நின்று அவளுடைய வாடிப்போன நிர்வாணமான உடலைத் தெளிவாகவே எனக்குக் காட்டினாள். நான் அந்த உடலை ஆண்டு முழுவதும் கண்டிருக்கிறேன். 'முந்தா நாள் பல்கனிக்குச் சென்று உடுப்பு எதுவுமே இல்லாது சலவை உலர்த்தி யந்திரங்களுக்கு அருகே போய் நின்றேன். எவரும் பார்ப்பார்கள் என்பது தெரியாமல்.. என்னுடலை மறைக்கவும் செய்யாமல்.. ஏதோவொரு பைத்தியக்காரப் பெண்ணைப் போல.' அவள் எழுந்து நின்றாள். நான் எதுவும் செய்யவில்லை. அவள் அங்கிருந்து என்னருகில் வந்தாள். நான் அவளுடைய மெலிந்து ஒட்டிய மேல் உடம்பைப் பார்த்துக் கொண்டு, கையில் வைத்திருந்த உணவுக்குச்சிகளின் நீளம் பதற்றத்துடன் விரல்களை ஓட்டிக் கொண்டிருந்தேன். 'என் பசி அவாவும் இல்லாமலாகி விட்டது. அதிகம் தண்ணீர் குடிக்கிறேன், முன்பு குடித்ததிலும் பார்க்க... ஆனால் இப்போது என்னால் ஒரு நாள் முழுவதும் அரைக் கோப்பைச் சோற்றைக் கூட உண்ண முடிவதில்லை. நான் சாப்பிடாமல் விட்டதால் என் வயிற்றில் அமிலம் நன்றாகச் சுரக்காமல் விட்டது போலத் தெரிகிறது. என்னைச் சாப்பிடக் கட்டாயப்படுத்தினாலும் அது சரியாகச் சீரணிக்காமல் தொண்டையில் மேலே மேலே வந்து கொண்டிருக்கிறது.' நூலறுந்த பொம்மை போல முழங்காலில் இருந்து தன் முகத்தை என் தொடைகளுக்குள் புதைத்துக் கொண்டாள். அவள் அழவில்லையா? ஆனால் நான் போட்டிருந்த காற்சட்டையின் பின்பகுதியில் இளஞ்சூடாக, ஈரமாக ஒரு பொட்டு நீர் விழுந்திருந்தது.

'ஒரு நாளைக்கு பலமுறை ஒருத்தன் வாந்தி எடுத்தால் எப்படி இருக்கும் என்று உன்னால் சொல்ல முடியுமா? ஒருத்தன் பூமியில் நின்று கொண்டிருக்கும்போது கூட வேகமாகப் பயணம் செய்யும் போது உணரும் தலைச்சுற்று நோய் போன்றது அது. குனிந்து கொண்டு தான் நடக்க வேண்டியிருக்கிறது. நிமிர்ந்து நிற்பதற்கு முடியாது. தலை நோகிறது.. வலது கண் துளைத்துக் கொண்டு உள்ளே நுழைவது போல. தோள்கள் விறைத்துப் போகின்றன. பலகையைப் போல. எச்சில் வடிந்து கொண்டே இருக்கிறது. தெருவிலுள்ள மரங்களின் வேர்ப்பகுதியில் மஞ்சள் நிற வயிற்று அமிலத்தை நடைபாதை கல்லில் துப்புவேன்...'

ஒரு பூச்சியின் சிணுங்கல் ஒலி மங்கிக் கொண்டிருக்கும் பாதரச விளக்கிலிருந்து வருவது கேட்கிறது. அந்த தடித்த விளக்கு ஒளியில் அவளைப் பார்த்தபோது அவளுடைய முதுகில் கற்றல்பா இலையின் மொத்தத்தில் ஒரு தழும்பு தெரிந்தது. அந்தச் பூச்சியின் சிணுங்கல் ஒலி அவளிடமிருந்து வெளிவரும் சிணுங்கல் ஒலியை அழித்தது.

அவளுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டு, 'மருத்துவமனைக்குப் போ,' என்று சொன்னேன். 'நாளைக்கு நேராக உள் மருத்துவத் துறைக்குப் போ.'

அவளுடைய ஈரமான முகத்தைப் பார்க்கச் சகிக்க முடியாமல் இருந்தது. என்னுடைய சாய்வான விரல்கள் அவளுடைய நொய்மையான தலைமயிரை அளைந்தது. அவளைப் பார்த்து பற்கள் தெரியப் புன்னகைத்தேன். 'நீ எப்படி அங்கே போகிறாய் என்

பதில் கவனமாய் இரு. திரும்பவும் விழுந்தெழும்பி முட்டி மோதி உன்னைக் காயப்படுத்திக் கொள்ளாதே. ஒரு குழந்தையைப் போல.'

அவளுடைய ஈர முகம் நடுங்கிக் கொண்டு புன்னகையாக மாறியது. ஒரு சிறிய கண்ணீர்த் துளி இதழில் விழுந்து தூங்கிப் பின் விழுந்தது.

அவள் அப்படி கண்ணீர் விடக் கூடிய இயல்புள்ளவளா? இல்லை. அப்படியானவள் அல்ல. அவள் முதல் முறையாக கண்ணீர் விட்டபோது அவளுக்கு வயது இருபத்தாறு.

இளம் வயதாக இருக்கையில் மிக எளிதாகச் சிரித்து விடுவாள். அவளுடைய சத்தம் எப்பொழுதுமே பிரகாசமாக, ஆனால் அடங்கியதாகவே மேலெழுந்து வரும். சிரிப்பும் ஒளி கசிவது போல இருக்கும். அமைதியான முதிர்ச்சியுடன், அவளுடைய இளமைத் தோற்றத்திற்கு மாறானதாக. நடுங்கும் குரலில் முதல் முதலாகச் சொன்னாள்: 'சங்கியடொங்கின் உயர்மாடிக் கட்டடத்தில் வாழ்வதை நான் வெறுக்கிறேன்.'

'எழுநாறு ஆயிரம் மக்கள் ஒன்றாக நெருக்கியடித்து இருக்கும் இந்த இடத்தில் நான் வாடிப்போய் இறந்து விடுவேன் என்பது போல உணர்கிறேன். நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான ஒரே மாதிரியான கட்டடங்களை வெறுக்கிறேன். ஒரே மாதிரியான குசினிகள், ஒரே மாதிரியான சீலிங்குகள், ஒரே மாதிரியான கழிப்பறைகள், குளியல் தொட்டிகள், பல்கனிகள், மின்தூக்கிகள், பூங்காக்கள், இளைப்பாறும் இடங்கள், கடைகள், பாதசாரி கடப்புகள். எல்லாவற்றையும் நான் வெறுக்கிறேன்.' அப்போது தான் அவளுடைய குரலைக் கேட்டேன்.

'உன்னை எது இப்படிச் சிந்திக்க வைத்தது, மம்.' முரண்டு பிடிக்கும் ஒரு குழந்தையை தேற்றுவதற்காக பேசுவது போலப் பேசினேன். என் மனைவி சொல்லுவதைக் கேட்பதிலும் பார்க்க அவளின் மென்மையான குரலில் அதிக கவனத்தைச் செலுத்தினேன். 'எத்தனையோ பேர் அருகிருகே வாழ்வதில் வெறுப்பதற்கு அதில் என்ன இருக்கிறது?' என்றேன்.

என் மனைவியின் கண்களைப் பார்த்து ஒருவித முறைப்பாக என் பார்வையை வைத்துக் கொண்டேன். அவளுடைய கண்கள் தெளிவானவையாக, மின்வெட்டி ஒளிர்பவையாகத் தெரிந்தன.

'நான் வாடகைக்கு எடுக்கும் அறைகள் பொழுதுபோக்கு மாவட்டதிற்கு அருகாமையில் உள்ளதாகவே எடுப்பேன். மக்கள் திரண்டிருக்கும் இடங்களுக்கு மட்டுமே நான் போவேன். அங்கே உரத்தொலிக்கும் இசை வீதிகளில் வழிந்து கொண்டிருக்கும். கார்கள் தெருக்களை அடைத்துக் கொண்டிருக்கும். அதன் ஊது கொம்புகள் குழறிக் கொண்டிருக்கும். அப்படியில்லாமல் மற்ற இடங்களில் என்னால் சமாளித்துப் போயிருக்க முடியாது. என்னால் தனியாக இருந்து சமாளித்திருக்க முடியாது,' என்றேன்.

என் மனைவி புறங்கையால் கன்னத்திலிருந்த கண்ணீரை விரைவாகத் துடைத்தாள். இருந்தும் அது தொடர்ந்து வழிந்து கொண்டிருந்தது. 'நீண்ட கால நோயில் விழுந்து இறக்கப் போவது போல. பதின்மூன்றாவது மாடியிலிருந்து இறங்க முடியாதது போல. என்னால் வெளியேற முடியாதது போல,' என்றாள்.

'ஏன் அதைப்பற்றி இப்படி அதிகம் அலட்டிக் கொள்கிறாய்? உண்மையாக இது சற்று அதிகப்படியானது.'

இந்த உயர்ந்த மாடிக் குடியிருப்பில் நாங்கள் குடியேறிய முதல் ஆண்டில் என் மனைவி அடிக்கடி நோயில் விழுந்தாள். அவள் சோல் மாநகரத்தில் உள்ள மலைப்பகுதி மாவட்டம் ஒன்றில் இயற்கைச் சூழலில் ஒரு வாடகை அறையில் குடியிருந்தாள். அதற்கு அவள் பழகியும் இருந்தாள். அவளுடைய உடம்பு இறுக்கமாக அடைக்கப்பட்ட அடுக்ககத்திற்கும் மையச் சூடேற்றிக்குப் பழக இயலாமல் இருந்தது. அவளுடைய ஆற்றல் மட்டமும் குறைந்தது. ஒருநாளைக்கு ஒரு தரம் செங்குத்தான சரிவில் சுறுசுறுப்பாக ஒரு முறை மட்டுமே நடக்க முடிந்தது. அங்கே உள்ள பதிப்பகம் ஒன்றில் ஓர் அற்ப தொகைக்குத்தான் அவள் வேலை செய்தாள்.



ஹான் காங் - 1970. தென்கொரிய எழுத்தாளர். கொரிய மொழியில் எழுதுபவர். இவருடைய தாய் ஹான் சூங்வொன்னும் ஒரு நாவலாசிரியர். அவருடைய சகோதரர் டொன் டொங் றிங்கும் ஓர் எழுத்தாளரும் இசை அமைப்பாளரும். இவருடைய எழுத்துப் பிரசுரம் ஆரம்பத்தில் கவிதைகள் எழுதிப் பிரசுரமாவதுடன் தான் தொடங்கிற்று. பின் சிறுகதைகள் எழுதிப் பிரசுரித்தார். யி சாங் என்ற கொரிய நவீனத்துவ கவிஞரின் வரிகள் இவரைப் பாதித்தது: 'மனிதர்கள் செடிகளாக மாற வேண்டும்.' அது கொரியா, யப்பானின் காலனித்துவ ஒடுக்குமுறை ஆட்சியின் கீழ் இருந்ததைக் குறிக்கிறது என்றும் கொரியா தன் தற்காப்புக்காக செடிகளாக மாற வேண்டும் என்று நினைத்திருக்கலாம். இதுவே ஹான் கான் Vegetarian என்ற நாவல் எழுத தூண்டுதலாக இருந்திருக்கிறது என்கிறார்கள். அந்த நாவலுக்கு புனைவுக்கான 2016இல் Man Booker International Prize கிடைத்தது. அதோடு அது திரைப் படமாகவும் எடுக்கப்பட்டுள்ளது. அவரின் இன்னொரு நாவலான பேபி புத்தாவும் திரைப்படமாக எடுக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் மிருகங்களை கொடுமை செய்து கொல்வதைப் பற்றி பயங்கரமான கனவுகள் கண்ட ஒரு பெண், மாமிச உணவு உண்பதை நிறுத்தி விடுகிறார். அதனால் அவள் தன் குடும்பத்திடமிருந்தும் சமூகத்திடமிருந்தும் விலகி விடுகிறாள். இந்த நாவல் ஆங்கிலம் உட்பட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நாவல் மேல்வரும் சிறுகதையைக் கருவாகக் கொண்டதே. இப்பொழுது அவர் தன் ஆறாவது நாவலை எழுதிக் கொண்டிருக்கிறார். அவருடைய மூன்றாவது நாவலான த வைற் புக் என்பதற்கும் 2018இல் புக்கர் பரிசு இறுதித் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. இவர் ஓர் இசைஞர். பாடல்கள் எழுதி இசைத் தட்டுகள் வெளியிட்டுள்ளார். காட்சிக்கலைகளிலும் நாட்டம் உள்ளவர்.

மணம் முடித்ததால் அவள் அந்த வேலையை விடவில்லை. அவள் அந்த வேலையை விட்டு நீண்ட காலத்திற்கு பின் தான் உண்மையில் நான் திருமணத்தைப் பற்றி உறுதியாக அவளுடன் பேசினேன். அவள் தன்னிடமிருந்த பணம் முழுவதையும், தனக்குக் கிடைத்த மாதச் சம்பளம், ஓய்வூதியக் கொடுப்பனவுடன் வார இறுதிகளில் அவள் வேலை செய்தபோது கிடைத்த பணம் ஆகியன வற்றை எடுத்துக் கொண்டு நாட்டை விட்டுப் போக திட்டமிட்டிருந்தாள்.

'நான் வெளிநாடு போய் என்னுடைய நரம்புகளுக்குப் புதிய இரத்தத்தைப் பாய்ச்ச இருந்தேன். அன்றைய தினம் மாலையில் அவளுடைய உடனடி மேலாளருக்கு தன் பதவி விலகல் கடிதத்தை இறுதியாகக் கொடுத்தாள். தன்னுடைய நரம்புகளில் கட்டிகளைப் போல அடைத்திருக்கும் கெட்ட இரத்தத்தை வெளியேற்ற வேண்டும். சோர்ந்து போன பழைய நுரையீரலில் புத்தம் புதிய காற்றை ஏற்ற வேண்டும் என்று அவள் எனக்குச் சொன்னாள். அவள் குழந்தையாக இருந்த காலம் தொட்டே சுதந்திரமாக வாழவும் வேண்டும் சாகவும் வேண்டும் என்று நினைத்தாள் என்று எனக்குச் சொன்னாள். காலம் கனிந்து வரவில்லை என்பதால் அதைப் பின்போட்டுக் கொண்டே வந்தாள். ஆனால் இப்பொழுது அவள் தேவையான அளவு பணத்தைச் சேமித்து விட்டாள். அதனால் தன்னுடைய கனவை நனவாக்கலாம் என்பதை உணர்ந்தாள். அவள் போக வேண்டும் என்று எண்ணிய நாட்டைப் பற்றித் திட்டமிட்டாள். அங்கே ஆறு மாதங்கள் இருக்க வேண்டும். பின் இன்னொரு இடத்திற்குப் போக வேண்டும். பின் இன்னொரு இடத்திற்கு. அப்படி. 'நான் சாவதற்கு முன் அப்படிச் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்தேன்,' என்று சொல்லி விட்டு, உள்ளூரச் சிரித்தாள். 'உலகத்தின் ஓரத்தைப் பார்க்க வேண்டும். என்னால் போகக் கூடிய தூரம்வரை போக வேண்டும், கொஞ்சம் கொஞ்சமாக.'

ஆனால் கடைசியில் உலகத்தின் ஓரத்திற்குப் போவதற்குப் பதிலாக, அவள் தன்னிடமிருந்த கொஞ்சப் பணத்தையும் இந்த அடுக்கு அறைக்கு வைப்புத்தொகைக்கும் எங்கள் திருமணச் செலவுக்கும் செலுத்தினாள். அவற்றை ஒரேயொரு சிறிய வசனத்தில் எனக்குச் சொன்னாள். 'என்னால் உன்னை விட்டுப் போக முடியாது' என்பதனால் செய்தேன் என்றாள். அவளுடைய கனவு, சுதந்திரக் கனவு எப்படிப்பட்டதானது? அதை எளிதாகக் கைவிட முடிந்தது என்றால் அது அத்தனை உண்மையானதல்ல என்று எடுத்துக் கொண்டேன். அவை அத்தனையுமே ஒருவகைக் கற்பனாவாதம் மட்டுமே வேறொன்றுமில்லை. கற்பனாவாத மாயை. அவள் போட்ட திட்டங்கள் ஒரு குழந்தை சந்திர மண்டலத்துக்குப் பயணம் போகப் போவதாகக் கட்டிச் சொன்ன நடக்க முடியாத கற்பனைக் கதையே. கடைசியில் இவை எல்லாம் நடக்க முடியாதது என்று அவளே உணர்ந்திருக்கலாம். நானும் அதையிட்டு ஓரளவு உணர்ச்சிவசப்பட்டேன். அவள் அதை காலஞ் சென்றாவது உணர்ந்து கொள்வதற்கு நான் தூண்டுதலாக இருந்தேன் என்பதற்காக பெருமையும் அடைந்தேன்.

அவளுக்கு அடிக்கடி வரும் நோவும் வலியும் இவற்றால் வந்திருக்கலாம். ஆனால் நான் பார்த்தபோது அவள் தன் கன்னத்தை பல்கனிக்குப் போகும் கண்ணாடிக் கதவில் வைத்து அழுத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒடுங்கிய தோள்கள் வாடிய முட்டைக்கோஸ் இலைகள் போல இருந்தன. கீழே வேகமாகச் செல்லும் கார்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். என் இதயம் பதை பதைத்தது. அவள் மிகவும் நோயுற்றிருந்தாள். ஆனால் அவள் இதயத்திலிருந்து எழும் நம்பமுடியாத அளவு மெல்லிய ஒலி மட்டும் அவள் இன்னும் உயிருடனிருக்கிறாள் என்பதை உறுதிப்படுத்தியது. கண்ணுக்குத் தெரியாத கைகள் அவற்றைத் தோள்களுடன் இணைத்து வைத்திருப்பதைப் போல. பிரமாண்டமான இரும்புப் பந்தொன்று கண்ணுக்குத் தெரியாத சங்கிலியுடன் தொடுக்கப்பட்டிருப்பதைப் போல. அது அவள் தன் ஒற்றைத் தசையைக் கூட ஆட்டுவதைத் தடுப்பதைப் போல.

பொதுவாகக் கைவிடப்பட்டிருக்கும் வீதியில் இடைக்கிடை செல்லும் ரக்சி அல்லது மோட்டர் சைக்கிள் இரைந்து கொண்டிருந்தது. அவை போடும் சத்தத்தைக் கேட்டு இரவின் ஆழத்திலும் நள்ளிரவின் பின்புள்ள அதிகாலை நேரத்திலும் என் மனைவி திடீரென விழித்து எழும்புவாள். 'கார் வேகமெடுத்து ஓடாமல் தெரு ஓடுவது போல, தெரு இந்த அடுக்ககத்தையும் அடித்துக் கொண்டு போவதைப் போல இருக்கிறது,' என்று ஒருமுறை சொன்னாள். இயந்திரங்களின் சத்தம் தொலைவில் மறைந்து போய், துயிலும் அவளை அணைத்த பின்னும் என் மனைவியின் அழகான முகம் சவம் போல வெளிறிப் போய் இருந்தது.

அப்படிப்பட்ட ஓர் இரவில் என் மனைவி கனவில் முணுமுணுப்பது போல, கரகரத்த மெல்லிய குரலில், 'அந்தப் பொருட்கள் எல்லாம் எங்கிருந்து வந்தன.. அவை எங்கே ஓடிக் கொண்டிருக்கின்றன?' என்றாள்.

அடுத்த நாள் மாலை, நான் முன் கதவைத் திறந்து அடுக்கத்துள்ளே கால் வைத்தபோது என் மனைவி என்னை வரவேற்பதற்குக் கதவடிக்கு வந்தாள், நடைக்கூடத்தில் என்னுடைய காலடிச் சத்தத்தைக் கேட்டிருக்கலாம். வெறும் காலுடன் நடந்து வந்தாள். அவளுடைய வளைந்த பெருவிரல்களின் நகங்கள் தெரிந்தன. அந்த நகங்களை அடிக்கடி ஒழுங்காகச் சீராக்காமல் விட்டிருந்தாள். அவை வெண்ணிறமாகப் பளபளத்தன.

'மருத்துவமனையில் என்ன சொன்னார்கள்?'

பதில் ஒன்றும் வரவில்லை. நான் என்னுடைய காலணிகளைக் கழற்றிக் கொண்டிருந்தபோது அமைதியாக என்னை கவனித்துக் கொண்டிருந்தாள். பின் அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். கன்னத்தில் விழுந்திருந்த ஒரு கற்றை முடியை காதுகளுக்குப் பின்னால் சொருகி இருந்தாள்.

அவளின் உருவ அமைப்புப் பற்றி எனக்குள் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். எப்படி, எப்போது நாங்கள் முதன் முதல் அறிமுகப்படுத்தப்பட்டோம் என்பது என் நினைவுக்கு வந்தது. எங்கள் இருவருக்கும் இடையில் பழக்கத்தை ஏற்படுத்தியவர் வேலையிடத்தில் என்னைவிட மூத்த ஒருவர். ஒருமுறை அவர் எங்கள் இருவரையும் தனியாக விட்டு வெளியே போனார். அப்போது அங்கே மென்மையான அமைதி நிலவியது. என் எதிர்கால மனைவியின் முகத்தில் தெரிந்த இரகசியமான வெளிப்பாட்டைப் பார்த்து என்னில் எப்படியான குழப்பம் ஏற்பட்டது என்பதைச் சொல்ல இயலாது. அவள் மிகவும் தூரத்தில் எங்கோ தெரியாத ஓர் இடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் என்பதை அவள் முகம் காட்டியது. அந்த முகம் முதல் பார்வையிலேயே பிரகாசமானது போலவும் அழகானது போலவும் தெரிந்தது. அவளுடைய எதிர்பார்த்திராத தனிமையை என்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. முற்று முழுதான வித்தியாசமான ஒரு ஆளைப் பார்ப்பது போலவும் இருந்தது. அதுவே அவள் என்னைப் புரிந்து கொண்டவள் என்ற கணநேர நம்பிக்கையையும் எனக்கு தந்தது. அதன் பிறகு அந்த நம்பிக்கையும் நான் குடித்திருந்த மதுவும் என்னை ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை உளறச் செய்தது. அதாவது வாழ்நாள் முழுவதுமே தனிமையை உணர்ந்திருக்கிறேன் என்று சொன்னேன். என் மனைவியாகப் போகிற இருபத்தாறு வயது பெண்ணான அவள் தன் முகத்தை தொலைவிலுள்ள அடிவானத்தைப் பார்ப்பதற்காக வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். இப்பொழுது நான் முகம் கொடுக்கும் விறைப்பான பழைய தனிமையான உருவம் அது.

'நீ மருத்துவமனைக்குப் போனாய், இல்லையா?' என்றேன். அவள் சாடையாகத் தலையை சரித்தாள், ஆட்டுவது போல. அவள் தன் ஆரோக்கியமற்ற உடல் நிறத்தை மறைப்பதற்காகத் தலையைத் திருப்பிக் கொண்டாளா? அல்லது நான் ஏதாவது அவளுக்குச் செய்து விட்டேனா? 'தயவுசெய்து, என்னுடன் கதை. மருத்துவர் என்ன சொன்னார்?'

'எல்லாம் நன்றாகவே இருக்கிறது,' என்று மூச்சை வெளியேற்றுவது போலச் சொன்னாள். அது ஒரு கூற்றாக வெளிவரவில்லை. குரல் பயங்கரமான தட்டையாக இருந்தது.

அவளை நான் முதன் முதல் சந்தித்தபோது அவளில் என்னை மிகவும் ஈர்த்த விஷயம் அவளுடைய குரல் தான். அது ஒருவித அறிவற்ற ஒப்பீடு. ஆனால் அவளுடைய குரல் நுட்பமாக அரக்குப் பூசி மெருகூட்டப்பட்ட ஒரு தேநீர் மேசை போல எனக்குத் தெரிந்தது. அந்த மேசையை யாராவது முக்கியமான விருந்தாளிகள் வந்தால் அரைமனதுடன் எடுப்பார்களே அது போன்றது. அதன் மேல் மிகவும் அருமையான தேநீர் தட்டையும் மிகவும் சிறந்த கோப்பைகளையும் வைப்பார்களே அது போன்றது. நான் கேட்ட கேள்விக்கு எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் அன்றிரவு என்னுடைய மனைவி சாதாரணமாக ஓர் உண்மையைச் சொல்வது போல அவளுடைய வழக்கமான அமைதியான குரலில் அதற்கான பதிலைச் சொன்னாள். என் முழு வாழ்க்கையையும் ஒரேயொரு இடத்தில் நிரந்தரமாக வாழாமல் வாழ வேண்டும் என்று நினைத்திருந்தேன் என்று சொன்னாள்.

அதன் பிறகு நான் செடிகளைப் பற்றிப் பேசினேன். பெரிய பூந்தொட்டிகளில் பல்கனி நிறைய செடிகள் நிறைந்திருப்பதாகக் கனவு கண்டேன் என்று சொன்னேன். அவை ஒவ்வொன்றிலும் நிரம்ப பச்சை நிற லெற்றியூசும் பெரில்லா செடிகளும் இருந்தன. கோடை காலத்தில், பெரில்லா செடிகளில் மிகச் சிறிய பூக்கள் பனித்துளிகள் போல மொட்டவிழும். குசினியில் அவரை முளைகள் வளரும் என்றும் சொன்னேன். அவற்றைக் கேட்டு இறுதியில் அவளிடமிருந்து சிறிய புன்னகை மட்டும் வெளிப்பட்டது. என்னுடைய செடிகளைப் பற்றிய இந்தக் கதைகள் எல்லாம் என்னைப் பற்றி அவளுக்கிருந்த எண்ணத்துக்கு எதிரானது என்பதனால் அவள் ஒருவகையான சந்தேகத்துடன் என்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இறுதியில் அவளிடமிருந்து சிறிய புன்னகை மட்டும் வெளிவந்தது. அந்த அப்பாவித்தனமான நொய்மையான புன்னகையைப் பிடித்துக் கொண்டு நான் அந்த வார்த்தைகளைச் சொன்னேன்: 'நானும் வாழ்க்கை முழுவதும் தனிமையைத் தான் உணர்ந்திருக்கிறேன்.'

நாங்கள் கலந்தாலோசித்தது போலவே நாம் மணம் முடித்த பின் பல்கனியில் பூந்தொட்டிகளை வைத்தேன். ஆனால் நாங்கள்

இருவருமே தோட்டம் செய்வதில் வல்லுநர்கள் அல்ல. ஏதோ காரணத்தால் எல்லாச் செடிகளுக்கும் தினமும் தண்ணீர் ஊற்ற வேண்டும் என்று நினைத்து தண்ணீர் ஊற்றினேன். ஆனால் எங்களுக்கு எதுவித பயனும் தராமல் செடிகள் எல்லாம் வாடிப் போயின.

அதற்கான காரணமாக, எங்கள் அடுக்கக மேல் தளம், நிலத்தின் ஆற்றலிலிருந்து மிகவும் தூரத்தில் இருக்கிறது என்று ஒருவர் சொன்னார். தண்ணீரும் காற்றும் சரியில்லை அதனால் தான் எங்கள் செடிகள் சாகின்றன என்று இன்னொருவர் சொன்னார். உயிருள்ளவற்றைப் பாதுகாக்கக் கூடிய நல்லெண்ணம் எங்களி டம் இல்லை என்று கூட ஒருவர் சொன்னார். அது சற்றும் உண் மையல்ல. அந்தச் செடிகளைப் பாதுகாக்க என் மனைவி எதிர் பார்த்ததிலும் பார்க்க அவற்றைக் கவனிக்க தன் நேரத்தைச் செல வழித்தாள். லெற்றியூசோ பெரில்லாச் செடியோ வாடினால் அரை நாள் முழுவதும் அவள் மனவழுத்தத்துக்குள்ளாக அது போதும். ஒரு செடி தன்னுயிரைப் பிடிவாதமாக இன்னும் பிடித்துக் கொண் டிருந்தால் அவள் ஒரு பிரகாசமான இசையை முணுமுணுத்துக் கொண்டு அதைச் சுற்றிச் சுற்றியே வருவாள்.

எந்தக் காரணத்துக்காகவோ, இப்போது பல்கனியில் உள்ள நீள் சதுர பூந்தொட்டிகளில் உலர்ந்த மண் மட்டும் தான் இருந்தது. வேறொன்றும் இருக்கவில்லை. அவை எல்லாம் எங்கே போய் விட்டன என்று நான் வியந்தேன், இறந்த அந்த செடிகள்? மழை நாட்களில் யன்னலின் கீழ் நான் வைத்த பூந்தொட்டிகள் எங்கே போய் விட்டன? குளிர்ந்த மழைத் தூற்றலில் தம் கைகளை நனைக்கும் என்று நினைத்து வைத்தவை அவை. அந்த நாட்கள் எங்கே போய் விட்டன?

என் மனைவி என் பக்கம் திரும்பி 'நாங்கள் இருவரும் எங்காவது தூரப் போய் விடுவோம்,' என்றாள். புத்துணர்ச்சி ஊட்டும் மழை சற்றுக் கிடைத்தாலே செடிகளின் இலைகள் துளிர்க்க ஆரம்பித்து விடும். அவை போல இல்லாமல் என் மனைவி மிகவும் ஆழமான மனவழுத்தத்திற்கு ஆளாகி வாடிப் போய் விட்டது போலத் தோன் றினாள். 'மூச்சு திணறடிக்கும் இந்த இடத்தில் இருக்க முடியாது,' என்றாள், சோர்ந்து போன கைகளால் லெற்றூஸ் இலைகளின் நீட்டி விழுந்து கொண்டிருக்கும் மழையை இடைமறித்து பிடித் தாள். பின் கைகளை பல்கனியில் உதறினாள். 'இந்த மழை அரு வருப்பானது. சளியும் எச்சிலும் சேர்ந்தது,' என்றாள். அவளுடைய கண்கள் என்னைப் பார்த்தன, தான் சொல்வது சரியா என்று நானும் ஏற்றுக் கொள்வேனா என்பது போல. 'இது வாழ்க்கை அல்ல. அப்படி இருப்பது போன்ற தோற்றமே,' என்று காறித் துப் பினாள். அவளுடைய குரலில் பகைமையின் கூர்மை தெரிந்தது. குடிகாரன் உழறும் பிரகடனம் போல. இந்த நாடு அழுகிப்போய் விட்டது! 'இங்கே எதுவும் வளராது. உனக்குத் தெரிகிறதல்லவா? மூச்சுத் திணறும் காதடைக்கும் இந்த இடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம்..'

என்னால் மேலும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'எது உன்னை மூச்சுத் திணற வைக்கிறது? இந்தக் கூர்மையான குத்திக்காட்டலை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனக்கு அருமையாகக் கிடைத்த புதிய மகிழ்ச்சி கண்மூடித்தன மாக நொருக்கி விட்டது. அவள் சொன்ன அந்த வார்த்தைகள் பல காலமாக அவள் அடக்கி வைத்த துயரத்தைக் கிளறி அவளு டைய வீணடிக்கப்பட்ட உடம்பிலிருந்து இரத்தத்தைப் பீறிட வைத்து விட்டது. 'சொல்லு, எது உன்னை மூச்சு திணறடிக்க வைக்கிறது? எது உன்னை காதடைக்க வைக்கிறது?' என்று கேட்டு எனது கையில் பிடித்திருந்த மழைத் தண்ணீரை அவள் தோள்களின் மேல் விசிறியடித்தேன்.

என் மனைவியிடமிருந்து மெதுவான முனகல் சத்தம் தான் வெளி-யேறியது. அவளின் திடுக்கிட்ட கைகள் முகத்தில் அறைந்து கொண்டன. குளிர்ந்த மழை நீர் பல்கனியின் யன்னல் கண்ணா-டியில் விசிறியடித்து என் முகத்தில் விழுந்தது. யன்னலடியில் இருந்த பூந்தொட்டி நிலத்தில் உடைந்து விழுவதற்கு முன்னர் அதன் கூர்மையான ஓரம் என் மனைவியின் காலைத் துளைத்தது. கரடுமுரடான தொட்டி ஓடுகளும் மண்கட்டிகளும் என் மனைவி யின் உடுப்பிலும் வெறும் பாதங்ளிலும் ஒட்டிக் கொண்டன. அவள் குனிந்து காயம் பட்ட பாதத்தை இரண்டு கைகளாலும் பற்றிப் பிடித்துக் கொண்டு கீழ் உதட்டைக் கடித்தாள்.

உதட்டைக் கடிப்பது அவள் நெடுங்காலமாகச் செய்யும் பழக்கம் தான். நாங்கள் மணம் முடிப்பதற்கு முன்பிருந்தே அதைச் செய் தாள். நான் கோபித்தாலோ என் குரலை உயர்த்தினாலோ அவள் அதைச் செய்வாள்.

அவள் உதடுகளைக் கடித்துக் கொண்டிருக்கும்போது தன் சிந்தனைகளை வடிவமைத்துக் கொள்வாள். அதன் பிறகு நான் சொன்ன ஒன்றுக்கோ செய்த ஒன்றுக்கோ பதில் அளிக்கத் துவங் குவாள், தன் கருத்துக்களை அமைதியாகவும் தர்க்கரீதியாகவும் ஒவ்வொன்றாகப் பட்டியலிடுவாள். ஆனால் பல்கனியில் நடந்த அந்தச் சம்பவத்திற்குப் பின் அவள் உதட்டைக் கடிப்பது மட்டுமே அவளுடைய பதிலாக ஆகியது. அது மட்டுமே அவளி டமிருந்து எனக்குப் பதிலாகக் கிடைத்தது. அந்த நாளைக்குப் பிறகு நாங்கள் விவாதிப்பதை விட்டு விட்டோம்.

'ஒரு பிரச்சினையும் இல்லை என்று மருத்துவர் சொன்னாரா?' நான் பெரும் சோர்வையும் தனிமையையும் உணர்ந்தேன். என்னுடைய ஜக்கற்றை கழற்றியபோது என் மனைவி என்னிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ளவில்லை.

'எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அவர் சொன்னார்,' என்று அவள் உறுதி செய்தாள். அவளுடைய முகம் இன்னும் மறுபக்கம் திரும்பிக் கொண்டிருந்தது.

என்னுடைய மனைவி அவளிடமிருந்த கொஞ்ச நஞ்சப் பேச்சை யும் படிப்படியாகத் தொலைத்து விட்டாள். அவளுடன் கதைத் தால் மட்டுமே அவள் கதைத்தாள். அப்படியிருந்தும் அவள் பேச்சு ஒரு தலையாட்டலாகலோ தலையசைத்தலாகலோ தான் இருந்தது. நான் என் குரலை உயர்த்தி எனக்குப் பதில் சொல் என்று கோரினால் அவள் தூரத்தில் வெறித்துப் பார்ப்பாள். நேர டியான பதில் சொல்லாமல் தவிர்க்கும் தன்மை அவள் கண்களில் தெரியும். படிப்படியாக மோசமாகச் செல்லும் அவளுடைய நிறம் ப்ளொறசன்ற் விளக்கின் மங்கிய ஒளியில் கூட இப்போது தெளி வாகத் தெரிந்தது.

ஒரு பிரச்சினையையும் அவரால் கண்டுபிடிக்க இயலவில்லை என்று மருத்துவர் சொன்ன போதிலும் சிலவேளை என் மனைவி யின் வயிற்றிலோ குடல்களிலோ உடல்ரீதியான பிரச்சினையாக இல்லாவிட்டாலும், அப்படி ஏதாவது இருக்க வேண்டும் என்று அவள் மனம் சும்மா ஏங்குவதாக இருக்கலாம். அவள் எதற்காக ஏங்குகிறாள்?

என் வாழ்க்கையில் கடந்த மூன்று ஆண்டுகள் தான் மிகவும் உற் சாகமானதாகவும் அமைதியானதாகவும் இருந்தன. என்னுடைய வேலை அத்தனை கடினமானதல்ல. என் நல்லதிர்ஷடம் எனக்கு நல்லதொரு வீட்டுரிமையாளர் இருந்தார். அவர் என் வீட்டு அடுக் கத்திற்குரிய வைப்புத்தொகையைக் கூட்ட முயலவில்லை. புதிய அடுக்கத்தின் கடன் அடமானத்தை ஏறக்குறைய கட்டி முடித்து விட்டேன். எனக்கொரு மனைவியிருந்தாள். அவள் அத்தனை பிரமிக்கத்தக்களவு கவர்ச்சியானவளாக இல்லாவிட்டாலும் என் துணைவிக்கு இருக்க வேண்டிய எல்லாமே அவளிடம் இருந்தது. இளஞ்சூடான நீர் ஆழமாக நிரப்பப்பட்ட குளியல் தொட்டியில் உள்பகுதியில் மெல்ல அலையடிப்பது போல என் களைத்த மேனியைத் தடவுவது போல என் மனநிறைவு இருந்தது.

ஆகவே என் மனைவியின் பிரச்சினை தான் என்ன? அவள் உண் மையாகவே ஏதோ ஒன்றுக்கு அவாவுகிறாள் என்றால் அது தீவி ரமான உளம்சார்ந்த நோயாக இருக்க முடியும் என்பதை என் னால் கற்பனை செய்ய முடியவில்லை. இந்தளவுக்கு என்னை தனிமைக்கு ஆளாக்க அவளுக்கு உரிமை இருக்கிறதா என்று அவளை நான் ஒவ்வொரு முறையும் கேட்கும்போதும் என் உடல் முழுவதும் எல்லையற்ற வெறுப்பு மடைதிறந்து பாய்வது போன்ற நிலைக்கு ஆளாவேன். அது என்னைப் பழைய குப்பையைப்

போல ஒதுக்கி வைத்தது.

அடுத்து வந்த ஞாயிறு காலை. ஒரு கிழமை வியாபார விஷய மாகப் போகும் பயணத்துக்கு முதல் நாள். என் மனைவி பல்கனி யில் தோய்த்த உடுப்புக்களை காயப்போட்டுக் கொண்டிருந்தாள். தழும்புகள் அவளுடைய மேல் கைகள் முழுவதும் பரவி விட்டி ருந்தன. அதைப் பார்க்கும்போது தோலின் வெள்ளை நிறப் பகுதி தான் மறு பக்கமாக தழும்புகள் போலத் தெரிந்தது. முழுவதும் நீல நிறமாக இருந்த தழும்புகள் நடுவே சிறிய வெண்ணிறக் கொப்புளங்கள். நான் திணறி விட்டேன். வெறும் கூடையை கூடத்திற்குத் திரும்பவும் கொண்டு வந்தாள். அப்போது அவளை மறித்து உடுப்புக்களைக் கழையச் சொல்லிக் கோரினேன். அவள் மறுத்தாள். அவளுடைய ரீ சேர்ட்டை கழற்றினேன். அவளுடைய தோளில் கருமையான மந்தமான நீல நிறச் சாயம் பூசப்பட்டது போலத் தழும்புகள் தெரிந்தன.

நான் தடுமாறிப் பின்னால் சென்று அவளுடைய உடம்பை வெறித் துப் பார்த்தேன். அவளுடைய அக்குளிலிருந்த தடித்த மயிரில் அரைவாசி விழுந்து விட்டது. அவளுடைய பழுப்பு நிற முலைக் காம்பிலிருந்த பழுப்பு நிறம் மாறி விட்டது. முன்பு அவை மென்மையாகவும் மிருதுவாகவும் இருந்தன.

'இப்படி இந்த நிலை போய்க் கொண்டிருக்க முடியாது. நான் உன்னுடைய அம்மாவுடன் பேசப்போகிறேன்.'

'வேண்டாம், பேசாதே,' என்றாள் சத்தமாகவும், அவசரமாகவும். அவளுடைய நாக்கில் எதையோ போட்டு சப்புவது போல உச் சரிப்பு குழறுபடியாக இருந்தது.

'மருத்துவமனைக்குப் போ, புரிகிறதா? ஒரு தோல்மருத்துவரிடம் போ. இல்லை, பொது மருத்துவமனைக்குப் போ.' ஊமையைப் போலத் தலையை ஆட்டினாள். 'உன்னுடன் வருவதற்கு எனக்கு நேரமில்லை. அது உனக்குத் தெரியும். உன்னுடைய உடலைப் பற்றி உனக்குத் தெரியும். ஆகவே அதனை நீ தான் ஒழுங்காக வைத்திருக்க வேணும், இல்லையா?' அவள் திரும்பவும் தலையை ஆட்டினாள். 'நான் சொல்லுவதைக் கேள். உன்னு டைய அம்மாவை அழை.' அவள் தலையை ஆட்டிக் கொண் டேயிருந்தாள். அவளுடைய உதடுகள் ஒன்றாக ஒட்டியிருந்தன. தலையை ஆட்டுவது நான் சொல்லுவதைக் கவனிக்கிறாள் என்று அர்த்தமா? இருக்கலாம். என் வார்த்தைகள் ஒரு காதால் உள்ளே சென்று மற்றக் காதால் வெளியேறிருக்கலாம். அவை முன்மண் டபத் தரையில் விழுவது எனக்குக் கேட்டது, மலிவான பிஸ்கத்துக்கள் உடைந்து நொருங்குவன போல.

மின்தூக்கியின் கதவுகள் குலுக்கிக் கொண்டு திறந்தன. பார மான கைப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு இருண்ட நடைக் கூடத்தால் நடந்து போய் மணியை அடித்தேன். பதில் வர வில்லை.

விறைத்துக் குளிர்ந்து போயிருந்த எஃகுக் கதவில் காதை வைத்துக் கேட்டேன். தொடர்ந்து மணியை அடித்தேன். இரண்டு தரம், மூன்று தரம், நாலு தரம். அது இன்னும் வேலை செய்கிறதா என்று சோதனை செய்தேன். அது வேலை செய்தது. அது அடுக்ககத்தின் உள்ளே ஒலிப்பது கேட்டது. கதவினால் விளைந்த உள்ொடுங்கிய ஓசை ஏதோ தூரத்திலிருந்து வருவது போலக் கேட்டது. நான் கைப்பெட்டியை கதவின் சார்த்தி வைத்து விட்டு கையில் கட்டியிருந்த கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தேன். மாலை எட்டு மணி. என் மனைவி கடுந் தூக்கக்காரி. ஆனால் இது கொஞ்சம் அதிகம்தான்.

நான் களைத்துப் போனேன். சாப்பிடவும் இல்லை. இந்த ஒரு முறையாவது என்னுடைய பைக்குள்ளிருந்து திறப்பைத் தேடி எடுக்கும் தொந்தரவைத் தவிர்க்க விரும்பினேன்.

நான் சொன்னது போல என் மனைவி தன் தாயை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குப் போய் விட்டாளோ? அல்லது கிராமப்புறத்திற்கு தன் உறவினர் வீட்டுக்குத் தங்கச் சென்று விட் டாளோ? இருக்காது. கதவைத் திறந்து உள்ளே காலடி வைத் தவுடன் அவளுடைய பலவிதமான காலணிகளும் தாறுமாறாகக் கிடப்பதைக் கண்டேன்.

நான் போட்டிருந்த சப்பாத்துக்களிலிருந்து என் பாதங்களை மெது வாகக் கழற்றி விட்டு சிலிப்பருக்குள் பாதங்களைத் திணித்தேன். அடுக்ககத்தின் வழக்கமான குளிர்ச்சி தன்னுணர்வில்லாமலே உட லில் பதிந்தது. இன்னும் சில அடிகள் எடுத்து வைப்பதற்கு முன்பு அருவருப்பான மணம் வருவதை உணர்ந்தேன். குளிர் சாதனப்பெட்டியைத் திறந்தேன். அதற்குள் கோவைக்காய், வெள் ளரிக்காய் கறிகள் சுருங்கியும் உருவழிந்தும் கலந்து கசிந்து போய் மணத்தன.

அரைக் கிண்ணம் அளவு சோறு குக்கரில் விடப்பட்டிருந்தது. அது சில நாட்கள் அங்கே இருப்பது தெரிந்தது. காய்ந்து போய் அடியில் ஒட்டிக் கொண்டிருந்தது. மூடியைத் திறந்தபோது சில நாட்கள் விடப்பட்டிருந்த சோற்றின் தனி நாற்றம் சூடான நீராவி யுடன் சேர்ந்து என் நாசித் துவாரங்களைத் துளைத்தது. கழுவும் தொட்டிக்குள் அழுக்கடைந்த சட்டிகள் குவியலாகக் கிடந்தன. துணி துவைக்கும் இயந்திரத்திற்கு மேல் தட்டில் பிளாஸ்ரிக்கில் செய்த கழுவும் கிண்ணத்திலிருந்து அழுகல் வாசனை வந்தது. அதில் கழுவப்போட்ட துணிமணிகள் சாம்பல் நிற சவர்க்கார நீரில் ஊறிக் கிடந்தன.

என் மனைவி படுக்கை அறையிலோ குளியல் அறையிலோ உபரியாகக் கிடந்த அறையிலோ இல்லை. அவளுடைய பெய ரைச் சொல்லி அழைத்தேன். பதில் இல்லை. முன் மண்டபத்தில் கடந்த கிழமை நான் விட்டுச் சென்ற காலைச் செய்தித்தாள் விரித்தபடி அப்படியே கிடந்தது. 500 மில்லி லீற்றர் வெறும் பால் பெட்டி இருந்தது. கிளாஸ் கப்பில் உறைந்த பால் துளிகள் புள் ளிப் புள்ளியாக காணப்பட்டன. என் மனைவியின் வெள்ளை நிற காலுறை உட்பக்கம் வெளிப்பக்கமாகத் திருப்பப்பட்டுக் கிடந்தது. சிகப்பு நிற போலித் தோல் கைப்பை கிடந்தது. எல்லாம் அங் கேயும் இங்கேயுமாக சிதறிக் கிடந்தன.

பிரதான வீதியால் ஓடும் வண்டிகளின் யந்திரங்களின் இரைச்சல் சத்தம், திடமான கட்டட அடுக்ககத்தின் உள்ளடங்கிய வெறுமை யைக் கூர்மையாகத் துளைத்துச் சென்றது.

களைத்துப் போய் பசியோடு இருந்ததால், பாத்திரங்கள் எல்லாம் தொட்டியிலுள்ள அழுக்காகக் கிடந்தபடியால், சோற்றை அள்ள சுத்தமான ஒரு கரண்டியைத் தேடினேன். அப்போது எவரும் இல் லாததால் நான் தனிமையில் விடப்பட்டதாக உணர்ந்தேன். பெரும் தொலைவிலிருந்து பயணம் செய்து வந்தபோது வீடு வெறுமனே கிடந்தபடியால், நீண்ட தூர விமானப்பயணத்தில் நிகழ்ந்த அற்ப விஷயங்களை, வெளிநாட்டு ரயில் பயணங்களின்போது யன்னல் கள் ஊடாகக் கடந்து சென்ற இயற்கைக் காட்சிகளைப் பற்றி யெல்லாம் கதைக்க விரும்பினேன். 'நீ களைத்துப் போனாயா?' என்று கேட்கவோ அதற்கு நான் 'பரவாயில்லை' என்று சொல் லவோ ஒருவரும் இருக்கவில்லை. என்னுடைய உறுதிப்பாட்டை 'பரவாயில்லை' என்று சொல்லக் கிடைக்கவிருந்த சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்ததால் நான் தனிமையை உணர்ந்தேன். நான் தனிமையாக விடப்பட்டதால் கோபப்பட்டேன். என் உடம்பின் முக்கியத்துவம் உணரப்படாமையால், அடிப்படையில் இந்த உல கத்தில் பிணைத்துக் கொள்ள முடியாமல் எவரும் இல்லாதபடி யால், என் மெலிந்த ஆடைகளால் சடுதியாக உள்ளே புகுந்த குளிரால், இத்தனை காலம் நான் செய்த காரியங்களுக்காக பிறர் என்னைப் பாராட்டுகிறார்கள் என்று இதுவரை என்னையே நான் வெற்றிகரமாக ஏமாற்றி வந்ததற்காக, நான் கோபப்பட்டேன். தனி யாக, என்னை நேசிக்க ஒருவரும் இல்லாமல், என் இருப்பு ஏற்கெனவே அணைந்து போயிருக்கலாம்.

அந்த நேரத்தில் பலவீனமான ஒரு குரல் கேட்டது.

சத்தம் வந்த திசையின் பக்கம் திரும்பினேன். அது என் மனைவி யின் குரல். மெல்லிய புரிந்து கொள்ள இயலாத முணுமுணுப்பு ஒன்று பல்கனியிலிருந்து வந்தது.

உடனடியாகவே அந்த தீவிரமான தனிமை, துயர் நீங்கிய உணர் வாக உருமாறியது. பல்கனிக்கு விரைந்து சென்றபோது என்னு

டைய நாவின் நுனியில் எரிச்சல் பீறிட்டு மேலெழுந்து வந்தது. 'இதுவரை நீ இருந்திருந்திருக்கிறாய், நீ ஏன் எனக்குப் பதில் சொல்லவில்லை.' நான் விறாந்தைக் கதவை வேகமாகத் திறந்தேன். 'இப்படித்தானா குடும்பம் நடத்துவது? நீ எந்த உலகத்தில் இருக்கிறாய்?'

அதன் பிறகுதான் அவளுடைய நிர்வாணமான உடலைப் பார்த்தேன்.

அவள் முழங்கால்களில் குந்தி இருந்தாள். பல்கனியின் யன்னலிலுள்ள கம்பித் தட்டியை நோக்கி முகம் இருந்தது. இரண்டு கைகளையும் உயரத் தூக்கியிருந்தாள். ஆரவாரம் செய்வது போல. முழு உடம்பும் கரும் பச்சையாக மாறி இருந்தது. முந்திய நிழல் விழுந்த முகம், என்றும் பசுமையான இலை போல பளபளத்தது. வாடிய முள்ளங்கி இலை போன்ற தலைமயிர் காட்டு மூலிகைகளின் தண்டுகள் போல பளபளத்தன.

இரு கண்களும் அவளின் பச்சை நிற முகத்தில் வெளிர் நிறத்தில் மின்னின. நான் பின்வாங்கி நின்றபோது அவள் என்னைப் பார்க்கத் திரும்பினாள். அது அவள் எழும்புவதற்காக அசைவது போல இருந்தது. அதற்குப் பதிலாக அவளுடைய கால்களைத் தசைப் பிடிப்புகள் மேலும் கீழும் இழுத்தன. அவளால் நிற்கவோ நடக்கவோ இயலவில்லை.

அவளுடைய வளைந்து கொடுக்கும் இடுப்பு வலியுடன் முறுக்கியது. சிதைந்து போன நாக்கு நீல நிற உதடுகளின் இடையில் நீர்ச் செடியைப் போல அசைந்தது. அவளுக்கு பற்கள் இருப்பது போலத் தெரியவில்லை.

முனகலிலும் பார்க்க சற்றுக் கூடுதலான ஒற்றை அழுகைச் சத்தம் அவளுடைய மங்கலான வெளிறிய உதடுகளின் இடையே இருந்து வெளியேறியது.

'... தண்ணீர்.'

நான் நீர்த்தொட்டிக்கு ஓடிச் சென்று குழாயை முழுவதாகத் திறந்து கழுவும் கிண்ணம் நிறைய வழிய வழிய நீரை நிரப்பினேன். ஒவ்வொரு காலடியாக எடுத்து வைக்கும் போதெல்லாம் நீர் தழும்பி முன்மண்டபத் தரையில் தெறித்தது. பல்கனிக்கு வேகமாகத் திரும்பி வந்தேன். அவளின் நெஞ்சில் தண்ணீரை விசிறி அடித்தவுடன் அவளுடைய முழு உடம்பும் நடுங்கியபடி மீண்டது. பெரிய செடி ஒன்றின் இலை போல. நான் திரும்பவும் போய் கழுவும் கிண்ணத்தில் நீரை நிரப்பினேன். என் மனைவியின் தலையில் அதை ஊற்றுவதற்காக. அவளுடைய தலைமுடி துள்ளி எழுந்தது. கண்ணுக்குத் தெரியாத பாரம் ஒன்று அமத்தி வைத்திருந்தது போல. அவளுடைய மின்னும் பச்சை நிற உடல் எனது ஞானஸ்நானத்தின் பின் புதிதாக மலர்ந்தது. மயக்கம் வருவது போல உணர்ந்தேன்.

என் மனைவி இப்படி அழகாக இருந்ததே இல்லை.

அம்மா,

இதற்கு மேல் என்னால் கடிதங்கள் எழுத முடியாது. நீ இங்கே விட்டுச் சென்ற ஸ்வெற்றரை அணியவும் முடியாது. செம்மஞ்சள் நிற கம்பளி ஸ்வெற்றர் அது. தற்செயலாக இங்கே நீ விட்டுச் சென்றது. கடந்த மாரி காலத்தில் நீ எங்களைப் பார்க்க வந்த போது விட்டுச் சென்றது.

அவன் வியாபாரம் தொடர்பாக பயணம் சென்றபோது நான் அதை அணிந்தேன். இங்கேயுள்ள குளிரை நான் எப்படி உணர்வேன் என்பது உனக்குத் தெரியும்.

அது பல காலம் தோய்க்காமல் கிடந்தது. அதனால் அதில் இன்னும் உன்னுடைய தோலின் மணமும் பழம் கறிகளின் மணமும் சேர்ந்து மணத்தது. வேறொரு நாள் என்றால் நான் அதைத் தோய்த்திருப்பேன். ஆனால் குளிராக இருந்தபடியால் தோய்க்கவில்லை. அத்துடன், அந்த மணத்தை மணக்க விரும்பினேன். ஆகவே அதை வைத்திருந்தேன். நான் அதை அணிந்து கொண்டு நித்திரை கூட கொண்டேன். அடுத்த நாள் காலை பனித்துளிகள் இன்னும் தம் பிடியை விடாமல் இருந்தது. எனக்குத் தாகமாகவும் குளிராகவும் இருந்தது. காலைச் சூரியன் படுக்கையறை யன்னலால் கடைசியில் ஒளி பாய்ச்சியபோது, அடக்கி வைக்கப்பட்ட அந்த ஓலம் என்னிலிருந்து வெளிவந்தது: அம்மா. அந்த இளம் சூடான ஒளியில் என்னைப் போர்த்த நினைத்து பல்கனிக்குச் சென்று என் உடைகளைக் களைந்தேன். சூரியக் கதிர்கள் என் உடையற்ற தசைகளை உன்னுடைய மணம் போல துளைத்தது. நான் முழங்காலில் இருந்து அம்மா, அம்மா என்று அழைத்தேன். வேறெந்த வார்த்தைகளும் வரவில்லை.

அப்படி எவ்வளவு காலம் சென்றது என்று எனக்குத் தெரியவில்லை. நாட்கள், கிழமைகள், மாதங்கள்? காற்று இன்னும் சூடாகவில்லை என்பதை அறிந்தேன். என் மனதில் பதிந்ததெல்லாம் சற்று அதிகரித்த சூட்டைத்தான். பின் அதிலிருந்து குறைந்ததை.

இப்போதிருந்து எந்தக் கணமும், சுங்நாங் ஓடைக்கு மேல் தொலைவிலுள்ள அடுக்ககங்களின் யன்னல்கள் இளஞ்சிவப்பாகப் பிரகாசிக்கும்.

அங்கு வசிக்கும் மக்களால் என்னைக் காண முடியுமா? பிரதான வீதியில் ஓடும் கார்களின் முகப்பு வெளிச்சத்தில் என்னைக் காண்பார்களா? இப்போது நான் எப்படி பார்வைக்கு இருக்கிறேன்?

அவன் மிகவும் அன்பானவன். அவன் எனக்கொரு பெரிய தொரு பூந்தொட்டியை வாங்கி வந்து என்னை அதற்குள் நட்டான். ஞாயிறு காலை முழுவதும் பல்கனி வாசலில் செடிகளை உறிஞ்சும் அசுவிணிப் பூச்சிகளைப் பிடித்துக் கொண்டிருப்பான்.

முன்பு எந்த நேரமும் அவன் களைப்புற்றே இருப்பான். இப்போது ஒவ்வொரு நாள் காலையிலும் எங்கள் கட்டடத்தின் பின்னாலுள்ள குன்றில் ஏறி ஒரு வாளியில் என் கால்களில் ஊற்றுவதற்காக கனிம நீரைப் பிடித்து வருவான். (எனக்குக் குழாய் நீர் பிடிக்காது என்பதை அவன் நினைவில் வைத்திருந்தான்.) ஒரு கொஞ்ச காலத்திற்கு முன்னால் என் பூந்தொட்டியிலுள்ள மண்ணைக் கொட்டி விட்டு அதை கைநிறையப் புதிய பசளை மண்ணால் நிரப்பினான். நகரத்தின் காற்றிலிருந்த சில அழுக்கை முதல் நாள் இரவு பெய்த மழை அழுத்தித் தேய்த்தெடுத்தது. அதன் பின் புதிய காற்று உள்ளே வந்து சுழல முன் கதவையும் யன்னல்களையும் அகலத் திறந்து வைத்தான்.

அது விசித்திரமானது, அம்மா. எவரும் பார்க்காமல் கேட்காமல் மணக்காமல் ருசிக்காமல் யாவும் புதிதாக உணர்வதும் மேலும் உயிருள்ளதாக வாழ்வதும் விசித்திரமானது தான். வேகமாகச் செல்லும் காரின் ரயர்கள் கரடுமுரடான தளத்தில் உராய்ந்து செல்லும் சத்தத்தை நான் உணர்கிறேன். அவன் முன் பக்கக் கதவைத் திறந்து என்னிடம் வரும்போது அவனுடைய காலடிகளின் நுட்பமான எதிரொலியை உணர்கிறேன், கர்ப்பப்பைக் கனவுகளுடன் கூடிய நீராவி நிறைந்த மழைக் காற்றை, அதிகாலையின் சாம்பல் நிற அரை வெளிச்சத்தை உணர்கிறேன்.

அண்மையிலும் சேய்மையிலும் மொட்டுக்கள் துளிர்ப்பதையும் மலரிதழ்கள் அவிழ்வதையும் கூட்டுப்புழுக்கள் புழுக்கூட்டிலிருந்த வெளிவருவதையும், நாய்களும் பூனைகளும் குட்டிகளை ஈனுவதையும், அடுத்த கட்டடத்திலிருந்த முதியவரின் நடுங்கும் இதயத் துடிப்பு நிறுத்துதலையும் - தொடங்குதலும், மேல் வீட்டிலுள்ள குசினியில் சட்டியில் கீரை கொதிப்பதையும், கீழ் தட்டிலுள்ள அடுக்ககத்தில் குவளையில் இசைத்தட்டுப் பெட்டிக்குப் பக்கத்தில் செவ்வந்திப்பூ மரத்திலிருந்து கொய்த ஒரு கொத்தை நடுவதையும் உணர்கிறேன். இரவோ பகலோ நட்சத்திரங்கள் பரவளையத்தை வரையும். சூரியன் உதிக்கும்போதும் நெடுஞ்சாலைகளின் பக்கங்களிலுள்ள அத்திமரங்களின் உடல்கள் ஏக்கத்துடன் கிழக்கு நோக்கிச் சாய்ந்திருக்கும். என்னுடைய உடம்பும் அதே போல சாயும்.

உனக்குப் புரிகிறதா? இன்னும் சற்று நேரத்தில் நான்

சிந்திப்பதையும் இழந்து விடுவேன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் நலமாகவே இருக்கிறேன். காற்றாலும் சூரிய வெளிச்சத்தாலும் நீராலும் நீண்ட நாட்கள் வாழலாம் என்று நான் கனவு கண்டேன்.

நான் இளம் வயதினளாக இருந்ததைப் பற்றிய நினைவுகள் எனக்கு வந்தன: குசினிக்குள் ஓடிப் போய் உன்னுடைய பாவாடைக்குள் என் முகத்தைப் புதைப்பேன். அந்தச் சுவையான மணம். நல்லெண்ணெய் மணம். எள் விதை வறையின் மணம். என்னுடைய கைகள் எப்பொழுதும் மண்ணில் தான் இருந்தது என்பது உனக்குத் தெரியும். மண்பட்ட கைகளை உன்னுடைய பாவாடையின் விளிம்பில் துடைப்பேன்.

அப்போது எனக்கு எத்தனை வயதிருக்கும்? அந்த வசந்த கால நாள் தூறல் மழையால் மூட்டமாக இருந்தது. அப்பா என்னை எந்திரக் கலப்பையில் தூக்கி இருக்கச் செய்து கடற்கரைக்கு ஓட்டிச் சென்றார். மழை அங்கியில் நடக்கும் ஆட்களின் கவலையற்ற சிரிப்பும், குழந்தைகளின் நனைந்த தலைமுடி நெற்றியில் ஒட்டியிருக்க துள்ளிக் கொண்டும் கைகளை அசைத்துக் கொண்டும் இருந்தார்கள். அவர்களின் முகங்கள் சுழன்று கொண்டும் மங்கிக் கொண்டும் இருந்தன.

அந்த வறிய கிராமம் தான் உன் முழு உலகமும். நீ அங்கே தான் பிறந்தாய், அங்கே தான் வளர்ந்தாய். நீ அங்கேதான் என்னைப் பெற்றாய். வேலை செய்தாய். முதியவள் ஆகினாய்.

ஒரு நேரம் உன்னை உன்னுடைய குடும்ப புதைகுழியில் அப்பாவுக்குப் பக்கத்தில் அங்கே தான் புதைப்பார்கள்.

அம்மா, உன்னைப் போல நானும் ஆகி விடுவேன் என்ற பயம் தான் என்னை வீட்டுக்கும் தொலைவில் இருக்கச் செய்தது. பதினேழு வயதில் வீட்டை விட்டு வெளியேறினேன். ஒரு மாதத்திற்கு மேல் ப்பூசான், டேகு, காங்நெங் போன்ற நகர மாவட்டங்களில் இலக்கின்றி அலைந்தேன். அது என் நினைவில் உள்ளது. என் வயதை மறைத்து ஒரு யப்பானிய உணவகத்தில் தனியாக குற்றேவல்கள் செய்தேன். இரவில் படிப்பறையில் குறண்டிக் கொண்டு படுப்பேன். அது எனக்குப் பிடித்த இடம். நகர மாவட்டங்களின் கண்களைக் கூச வைக்கும் விளக்குகளும் அங்கு வாழ்ந்த மக்களின் பளபளக்கும் கவர்ச்சிகளும் எனக்குப் பிடித்தவை.

அந்நியர்கள் கூட்டம் கூட்டமாக வாழும் அந்த வீதிகளில் அலைந்து கிழமாகி பாழாகிப் போவேன் என்ற விழிப்புணர்ச்சி எப்போது முதலில் எனக்கு வந்தது என்று எனக்குத் தெரியாது. நான் எங்கள் வீட்டிலும் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அதே போல மற்ற இடங்களிலும் மகிழ்ச்சியாக இருக்கவில்லை. அப்போ நான் எங்கே போயிருப்பேன், எனக்கு சொல்லு.

நான் என்றுமே மகிழ்ச்சியாக இருந்ததில்லை. என்னுடைய முதுகில் ஏறி சித்திரவதை செய்யப்பட்ட ஆன்மா ஒன்று என்றும் என் தொண்டையை இறுக்கிப் பிடித்து கொண்டும், என் கை கால்களை பிடித்துக் கொண்டும் இருக்கிறதா? நான் எந்நேரமும் ஓடி விடவே விரும்பினேன். அது எனது மிகவும் அடிப்படையான இயல்பூக்கமாக இருந்தது. அழுகையை தூண்டிய வலி. அலறலை ஏற்படுத்திய நுள்ளு. பேருந்தின் பின்னிருக்கையில் என் முழுங்கால்களை தூக்கி வைத்துக் கொண்டு முழங்கையால் யன்னலை நொருக்குவதற்கு ஏங்கினேன். ஒரு ஈயைக் கூட துன்புறுத்தாதவள், நான். என் உள்ளங்கையில் இரத்தம் வழிந்தோடுவதை பார்க்க விரும்பினேன். ஒரு பூனை பாலைக் குடிப்பதைப் போல அதை நக்கி இருப்பேன். எதிலிருந்து நான் ஓட விரும்பினேன். எது என்னை இவ்வளவு சித்திரவதை செய்கிறது, எதிலிருந்து ஓடி உலகத்தின் மறுபக்கம் போக எது என்னைத் தடுத்தது, தள்ளாடச் செய்தது, முடமாக்கியது? எந்தச் சங்கிலிகள் என்னைத் தடுத்தன? நோயற்ற இரத்தத்தைப் பாய்ச்ச எது தடுத்தது?

முதிய மருத்துவர் தன் விரலால் இதயத்துடிப்பளவியை திரும்பத் திரும்பத் தட்டினார், என் உள்ளுறுப்புக்கள் கல்லறையைப் போல அமைதியாக இருக்கின்றன என்று முணுமுணுத்தார். அப்போது தொலைதூரத்தில் எதிரொலிக்கும் சூறைக் காற்றின் சத்தம் மட்டுந்தான் கேட்டது. இதயத்துடிப்பளவியை மேசை மேல் வைத்தார். ஊடொலிக் கருவியின் திரையை அசைத்தார். என் வயிற்றில் ஈர ஜெல்லைப் பூசினார்கள். பின் குளிர்ந்த தடிபோன்ற கருவியால் என் தசை முழுவதும் தடவினார்கள். மேல்வயிற்றிலிருந்து துவங்கி அடிவயிறு வரை, சீராக. நான் அசையாமல் படுத்திருந்தேன். அந்தக் கருவி ஊடாக என் உள்பகுதியிலிருந்தவை கறுப்பு வெள்ளைப் படிமங்களாக திரையில் விழும் போலும்.

'எல்லாம் இயல்பாகவே உள்ளன,' என்றார் நாக்கை சொடுக்கிக் கொண்டே. 'நாங்கள் இப்போ பார்ப்பது உன்னுடைய குடல்களை... அங்கே எந்தவித பிரச்சினையும் இல்லை.'

எல்லாம் 'இயல்பாகவே' உள்ளன என்று சொன்னார்.

'வயிறு, கல்லீரல், கருப்பை, சிறுநீரகங்கள், எல்லாம் சரியாக இருக்கின்றன.'

அந்த உறுப்புகள் மெதுவாகத் தேய்ந்து விரைவில் மறைந்து விடும் என்பதை அவரால் ஏன் பார்க்க முடியாது? கைநிறைந்த மெல்லிழைத்தாள்களால் ஏறக்குறைய எல்லா ஜெல்லையும் துடைத்தேன். நான் எழும்ப முயன்றபோது திரும்பவும் படுக்கச் சொன்னார். என்னுடைய வயிற்றில் வேறு சில பகுதிகளை அமத்தினார். அவை அத்தனை நோவைத் தரவில்லை. 'இது நோகின்றதா?' என்று சாதாரணமாகக் கேட்டார், நான் தலையை ஆட்டிக் கொண்டிருந்தேன். நான் அவருடைய கண்ணாடி போட்ட முகத்தைக் கண்ணைக் கூசிக் கொண்டு பார்த்தேன்.

'இங்கே நோகுதா?'

'நோகவில்லை.'

'நோகவில்லை?'

எனக்கொரு ஊசி போட்டார்கள். வீட்டுக்கு வரும் வழியில் நான் திரும்பவும் வாந்தி எடுத்தேன்.

முதுகை ஓட்டுச் சுவரில் சாய்த்துக் கொண்டு சுரங்கப் பாதை ரயில் நிலையத்தில் குனிந்து இருந்து கொண்டேன். நோ தணிவதற்காக ஒன்று இரண்டு என்று எண்ணத் துவங்கினேன். மருத்துவர் என்னை ஓய்வெடுக்கச் சொன்னார். சௌகரியமான, அமைதியானவற்றைச் சிந்திக்கச் சொன்னார். எல்லாம் மனதில் இருக்கிறது என்றார். புத்தமத குரு ஓதியது போல. அமைதியான சிந்தனைகள். சௌகரியமான சிந்தனைகள். ஒன்று, இரண்டு, மூன்று, நாலு, முடிவில்லாத அமைதி. வாந்தி எடுக்காமல் இருப்பதற்காக எண்ணுவதற்கு முயன்றேன்... நோ கண்ணீரை வரவழைத்தது. வலிப்புகள் வந்து என்னை இறுக்கிப் பிடித்தது. குமட்டல் வயிற்றிலிருந்த அமிலத்தை திரும்பத் திரும்ப மேலெழுப்பியது. வயிற்றில் ஒன்றுமில்லாதவரை. தரையில் தாழ்ந்து இருந்து கொண்டேன். ஆடிக் கொண்டிருக்கும் நிலம் நிற்கும்வரை பொறுத்திருந்தேன்.

அது எப்போது நடந்தது?

அம்மா, நான் ஒரே கனவைத் திரும்பத் திரும்பக் கண்டு கொண்டிருக்கிறேன். பொப்லர் மரத்தைப் போல ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிறேன். பல்கனியின் மேலுள்ள கூரையைத் துளைத்து அதன் மேல் உள்ளவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பதினைந்தாம், பதினாறாம் மாடிகளாலும். கொங்கிறீற்றுக்களாலும் வலுவூட்டும் கம்பிகளாலும் நுழைந்து போய்க் கொண்டிருக்கிறேன். மேல் மாடிக்கு மேலுள்ள கூரை ஊடாகத் துளைத்துப் போகும் வரை. மலர்கள் போன்ற வெண்ணிற கூட்டுப்புழுக்கள் நெளிந்து வந்து உயர்ந்த எனது உடம்பில் மலர்ந்தன. என்னுடைய மூச்சுக் குழாய் தெளிவான நீரை உறிஞ்சுகிறது. மூச்சுக் குழாய் இறுக்கமாகி வெடித்து விடுவதைப் போலுள்ள உறுஞ்சுகிறது. என் நெஞ்சு ஆகாயம்வரை தள்ளிக் கொண்டு நிற்கிறது. என்னிலிருந்து முளைத்து கிளை பிரிந்த கை கால்கள் நீட்ட சிரமப்பட்டு முனைகிறேன். அப்படித்தான் நான் அந்த குடியிருப்பிலிருந்து

தப்பினேன். அம்மா, நான் ஒவ்வொரு இரவும் அதே கனவைத்தான் காண்கிறேன்.

நாட்கள் குளிர்ந்து கொண்டே போகின்றன. இன்றும் இந்த உலகம் பல இலைகள் நிலத்தில் விழுவதைக் கண்டிருக்கும். பல பாம்புகள் தங்கள் செட்டையை கழற்றியிருக்கும். பல பூச்சிகள் தங்கள் சிறிய உயிர்களை விட்டிருக்கும். பல தவளைகள் சற்று முன்பே குளிர்கால உறக்கநிலைக்குப் போயிருக்கும்.

நான் உன்னுடைய ஸ்வெற்றரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன். உன் மனத்தின் நினைவு இப்போது தெளிவாக இல்லை. சுவெற்றரால் என்னை மூடச் சொல்லி அவனைக் கேட்க இருக்கிறேன். ஆனால் நான் பேசும் ஆற்றலை இழந்து விட்டேன். என்னால் என்ன செய்ய முடியும்? நான் நோயால் மெலிந்து வருவதைப் பார்த்து அவன் அழுகிறான். கோபமும் படுகிறான். உனக்குத் தெரியும், அவனுக்குள்ள குடும்பம் நான் மட்டுந்தான். அவனுடைய சூடான கண்ணீர் அவன் என்மேல் ஊற்றும் கனிம நீருடன் கலந்திருப்பதை என்னால் கண்டு பிடிக்க முடியும். காற்றிலுள்ள மூலக்கூறுகள் நிலைகுலைந்திருப்பதை என்னால் உணர முடியும். அவனுடைய இறுக்கிப் பிடித்த முஷ்டி இலக்கில்லாமல் அலைவது எனக்குத் தெரியும்.

எனக்குப் பயமாக இருக்கிறது, அம்மா. என் கை கால்கள் விழுந்து விட வேண்டும். இந்தப் பூந்தொட்டியில் இட நெருக்கடி இருக்கிறது. அதன் சுவர்கள் மிகவும் கடினமானவை. என் வேரின் முனையிலிருந்து எழும்பி உடம்பெல்லாம் பயங்கரமாக நோகிறது. அம்மா, குளிர்காலம் வருவதற்கு முன் நான் இறந்து விடுவேன்.

இந்த உலகத்தில் திரும்பவும் நான் மலர்வேனா என்பது எனக்குச் சந்தேகமே.

அன்று இரவு நான் வியாபாரப் பயணத்திலிருந்து வந்த பின், என் மனைவியின் மீது கழுவும் கிண்ணங்கள் மூன்று நிறைய நீரை ஊற்றினேன். அதன் பின் அவள் மஞ்சள் நிற வயிற்று அமிலத்தை வாந்தி எடுத்தாள். அவளுடைய உதடுகள் சுருக்கங்கள் விழுந்ததையும் அவை உடனடியாக திரும்பவும் தசை தசையாக ஒன்று கூடுவதையும் என் கண்முன்னாலேயே கவனித்தேன். என்னுடைய நடுங்கும் விரல்கள் அந்த வெளிறிய புள்ளிகள் நிறைந்த உதடுகளில் தடுமாறுவதையும் கண்டேன். கடைசியில் மெல்லிய குரல் ஒன்றைக் கேட்டேன். மிக மெலிந்த குரல். அது என்ன சொல்கிறதென்று என்று எனக்குப் புரியவில்லை. அதுதான் நான் என் மனைவியின் குரலைக் கேட்ட கடைசி முறை. அதன் பின் முனகலைக் கூடக் கேட்கவில்லை.

தடித்த வெள்ளை நிற வேர் முடிகள் அவளுடைய உள் தொடையிலிருந்து முளைத்திருந்தன. கரும் சிவப்பு பூக்கள் அவளுடைய நெஞ்சில் மலர்ந்திருந்தன. முனைகளில் வெள்ளை நிறம் கொண்ட இரண்டு மகரந்தங்கள். மஞ்சள் நிற தடித்த வேர். அவை அவளுடைய முலைக்காம்புகளைத் துளைத்து வெளிவந்திருந்தன. அவளுடைய தூக்கிய கை இன்னும் சற்று அசைந்து அழுத்த முடிந்தபோது அவள் என்னுடைய கழுத்தைக் கட்டிப்பிடிக்க விரும்பினாள். அவளுடைய கண்களைப் பார்த்துக் கொண்டு - அவற்றில் இன்னும் சற்று வெளிச்சம் இருந்தது- கமெல்லியா இதழ்க் கைகளின் தழுவலுக்காக முன்னே குனிந்தேன். 'நீ இப்போ நன்றாக இருக்கிறாயா?' என்று கேட்டேன். நன்றாகக் கனிந்த திராட்சைப்பழம் போல இருந்த அவளுடைய கண்கள் அரக்குப் பூசிய மேற்பரப்புக்கள் போல மின்னின. மெல்லிய புன்னகை வெளித் தோன்றியது.

பின் இலையுதிர் காலத்தில் என்னுடைய மனைவியின் உடல் படிப்படியாக துல்லியமான செம்மஞ்சள் நிற வெளிச்சம் போல மாறிக் கொண்டிருந்ததைக் கண்டேன். நான் யன்னலைத் திறந்த போது உயரத் தூக்கிய அவளுடைய கைகள் காற்றோட்டத்துடன் மெதுவாக அசைந்தன.

இலையுதிர் காலம் முடியுந்தறுவாயில் அவளுடைய இலைகள் இரண்டும் மூன்றுமாக விழத் துவங்கின. அவளுடைய உடம்பு முன்பிருந்த செம்மஞ்சள் நிறத்திலிருந்து ஒளிபுகா பழுப்பு நிறமாக மெதுவாக மாறியது.

கடைசியாக என் மனைவியுடன் நான் எப்போது படுத்தேன் என்பதைப் பற்றி எண்ணிக் கொண்டேன்.

உடல் திரவங்களிலிருந்து கடும் மணம் வராமல் என் மனைவியின் கீழ்ப்பகுதியிலிருந்து சற்றே இனிமையான மணம் வந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அவள் இப்போது வேறொரு வகையான சவர்க்காரத்தை உபயோகிக்கிறாள் என்று நினைத்துக் கொண்டேன். அல்லது அவளுக்கு கொஞ்ச நேரம் மிச்சமாக இருந்ததால் சில துளி வாசனைத் திரவியத்தை தெளித்திருக்கிறாள் என்று நினைத்தேன். எவ்வளவு காலத்திற்கு முன்பு அவை அனைத்தும் நடந்தன?


இப்போது அவளுடைய உருவம் முன்பிருந்த இரு கால் உயிருக்கு இருந்த இயல்பிலும் பார்க்க மிகக் குறைவாகவே சில வற்றை வைத்திருந்தது. அவளுடைய கண்மணிகள் வட்ட வடிவான ஒளிரும் திராட்சைப் பழங்களாக மாறி விட்டன போலத் தோன்றின. அவை படிப்படியாக பழுப்பு நிற தண்டுகளுக்குள் புதைந்து கொண்டன. என் மனைவியால் இனிமேல் எதையும் பார்க்க முடியாது. தண்டுகளின் முனைகளை அவளால் வளைக்கக் கூட முடியாது. ஆனால் நான் பல்கனிக்குச் சென்றால் மங்கலானதொரு உணர்ச்சியை உணருகிறேன். அந்த உணர்வு அனைத்து மொழிகளையும் தோற்கடித்து விடக் கூடியது, நுண்ணிய மின்சார ஓட்டம் அவளுடைய உடம்பிலிருந்து துடித்து வெளியேறி என்னுடைய உடம்பிற்குள் நுழைவது போல இருக்கும். முன்னர் என் மனைவியின் கைகளாகவும் தலைமுடியாகவும் இருந்த இலைகள் இப்போது விழுந்து விட்டன. அவளுடைய உதடுகள் ஒன்றாக இருந்த இடம் இப்போது பிளந்து கைநிறைய பழங்களைக் கொட்டி இருந்தன. அந்த உணர்ச்சி ஒரு மெல்லிய நூல் ஒடிவது போல முடிந்து விட்டது.

மிகச் சிறிய பழங்கள். மாதுளைப் பழங்கள் போல ஒட்டுமொத்தமாக வெடித்து வெளியேறி இருந்தன. நான் அவற்றை என் கைகளில் ஒன்று கூட்டி அள்ளிக் கொண்டு, பல்கனியையும் முன் மண்டபத்தையும் தொடுக்கும் வாசலில் குந்தினேன். நான் முதல் முதலாகப் பார்க்கிற இந்த பழங்கள் மஞ்சள் பச்சை நிறம் உடையவை. அவை கடினமாக இருந்தன, பியர் குடிக்கும்போது கொறிக்கும் சோளப்பொரி போல, சூரியகாந்தி விதைகளையும் சேர்த்து கடிப்பது போல.

நான் ஒன்றை எடுத்து என் வாய்க்குள் போட்டேன். மென்மையான தோலில் எந்தவிதமான ருசியோ மணமோ இருக்கவில்லை. அதை நொறுக்கித் தின்றேன். இந்த உலகத்தில் என்னிடமிருந்த ஒரேயொரு பெண்ணின் பழம் அது. என்னுடைய நா உணர்ந்த முதல் சுவை அதன் அமிலமே. ஓரளவு எரியும் சுவை. என் நாவின் வேரில் தொங்கிக் கொண்டிருந்த சாறு, முற்றிலும் கசப்பாக இருந்தது.


அடுத்த நாள் சிறிய வட்டமான ஒரு டசின் பூந்தொட்டிகளை வாங்கி வந்தேன். அதற்குள் நல்ல வளமான மண்ணைப் போட்டு நிரப்பி, பழங்களை நட்டேன். வாடிய என் மனைவிக்குப் பக்கத்தில் அந்தச் சிறிய பூந்தோட்டிகளை வரிசையான வைத்தேன். பின் யன்னலைத் திறந்து வைத்தேன். கம்பிச் சுவர்களில் சாய்ந்து ஒரு சிகறெற்றைப் புகைக்கத் துவங்கினேன். என் மனைவியின் கீழ்ப்பகுதிகளிலிருந்து சடுதியாக பூத்த புதிய புல்லின் மணத்தை சுவைத்துக் கொண்டிருந்தேன். இலையுதிர்காலத்தின் பிற்பகுதியில் வீசும் குளிர் காற்று என்னுடைய சிகறெற் புகையையும் என் நீண்ட தலைமுடியையும் கலைத்தது.

வசந்த காலம் வந்தால் என் மனைவி திரும்பவும் முளைப்பாளா?
அவளுடைய மலர்கள் சிகப்பாக மலருமா?
எனக்கு அது தெரி யாது.



mahalingam.k@thaiveedu.com

# பனிவிழும் பனை வனம்



- செல்வம் அருளானந்தம்

லோகன், தனக்குத் தெரிந்த விசயங்கள் எல்லாத்தையும் கதைப்பானோ எண்டு நான் நினைச்சுக் கொண்டிருக்க, அவன் எல்லாத் துயரங்களையும் சொல்லி மனமுட்டுத் தீர்க்கும் மனநிலையில் பேசிக்கொண்டிருந்தான்.

'நீ கல்யாணம் முடிச்ச ஊரிலை இருக்கின்ற சீவரத்தினத்தை உனக்குத் தெரியுந்தானே' எண்டான்.

'அவரைத் தெரியும்தான்... பெரிய பழக்கம் இல்லை. ஆனால் அவற்றை தம்பியாரைத் தெரியும்' எண்ட எனக்கு தம்பியாரோட பிரான்சிலை வேலை செய்த ஞாபகம் வந்திட்டுது. அப்ப நினைவுக்கு வந்த ஒரு சம்பவத்தையும் சொன்னன்.

'நானும் சீவரத்தினத்தின்ரை தம்பியாரும் ஒரே இடத்திலை கொஞ்ச நாள் ஒண்டாய் வேலை செய்தனாங்கள். அப்ப நாங்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகள் காடுகளுக்குப் போகேக்க தங்கிறத்துக்குக் காம் போட்டுக் கொடுக்கிற ஒரு கெம்பனியில் வேலை செய்தம். அப்ப அவனை நாங்கள் 'செப்பாவிறே' என்றுதான் கூப்பிடுவோம்.

ஒருநாள் காலையிலை எங்களுக்கு முதலே வேலைக்குப் போன அவன், முதலாளியோட நிண்டு வேலை செய்திருக்கின்றான். நிலத்துக்குப் போடுற ஒரு பலகை ஒழுங்கில்லாமல் பொருந்தாமல் நிண்டிருக்குது. இவன் அதை முதலாளிக்குக் காட்டி, பலகை பொருந்தாமல் இருக்கெண்டு சொல்லியிருக்கிறான். முதலாளி 'சரி பரவாயில்லை' எண்ட அர்த்தத்திலை பிரஞ்சிலை 'செப்பாவிறே' எண்டு சொல்லியிருக்கிறார்.

பிந்திப்போன நாங்கள் 'இதென்ன... பலகையொண்டு மிதந்து

கிடக்குது' என்று கேட்க 'செப்பாவிறே பலகை அப்படித்தான் கிடக்கும்' எண்டு சொன்னான். எங்களுக்கு அவனை விடக் கொஞ்சம் கூடுதலாய் பிரஞ்சு தெரிஞ்சிருந்ததாலை சிரிச்சம். அவன் கடுப்பாயிட்டான்.

'முதலாளி சொல்லுறான் செப்பாவிறே பலகையெண்டு... நீங்கள் பு..யில் சிரிப்புச் சிரிக்கிறியள்' எண்டான். அண்டைக்குத் தொடக்கம் அவனுக்கு 'செப்பாவிறே' எண்டு பெயர் வைச்சம்.

ஆள் ஒரு அலுப்பன். என்ன கதை கதைச்சாலும் விதண்டாவாதம் செய்வான். உதாரணத்துக்கு நடிகர் சிவாஜியை அவனுக்குப் பிடிச்சிருந்தாலும் வேறு யாராவது சிவாஜியைப் புகழ்ந்து பேசினால் ஒத்துப் போகமாட்டான். ஏ.வி.எம். ராஜன் போல் வருமே... முத்துராமன் போல் சிவாஜி நடிப்பாரோ எண்டு... கதைக்கிறவங்களுக்கு வெறுப்பேத்துவான். பிரெஞ்சு மொழியைக் கேட்க இனிமையாய் இருக்கும் எண்டு நாங்கள் யாரும் சொன்னால், போத்துகீச மொழிக்குக் கிட்ட வராது பிரெஞ்சு எண்டு சண்டைக்கு வருவான். அவனுக்குத் தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் தெரியாது எண்டுறது எல்லாருக்கும் தெரியும்.

அவன் ஒருதடவை அவன் சொன்னான்... 'தங்கடை சொந்தக்காரப் பெண்பிள்ளையொண்டு இயக்கத்துக்குப் போட்டுது என்றும் நான் இங்கையிருந்து நேரே போய், மாத்தையாவைக் கண்டு, 'உங்களுக்கு ஆண்பிள்ளையள் கிடைக்கல்லையோ? பெண்களை சண்டைக்குக் கொண்டு போனால் சிங்களவன் சிரிக்க மாட்டானோ? எண்டு கிழிகிழியெண்டு, கிழிச்சுப்போட்டுதான் வந்தனான்' எண்டு சொன்னான். எங்களுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

பிரன்சுக்கு வந்த அவன் கொஞ்ச நாள் தான் எங்களோடை வேலை செய்தவன்... பிறகு 'பிரான்ஸ் சரியில்லாத நாடு' எண்டு சொல்லிக்கொண்டு ஜேர்மனிக்குப் போட்டான் எண்டு கேள்விப் பட்டன்'.

லோகன் கொஞ்சமாய்ச் செருமினான். நானும் என்ர ஞாபகங்கள் கிளறுப்பட, அவனிட்டடைக் கதை கேக்குறதை விட்டிட்டு என்ரை நினைவுகளை அலம்பத்தொடங்கியது லோகனுக்கு சிலவேளை அயர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும்.

திருப்பியும் 'சீவரத்தனத்தை உனக்கு தெரியும்தானே... அவர் அவற்ரை தம்பியார் போல் இல்லை' எண்டான்.

'ஓம் ஓம், கள்ளுக் குடிச்சால் மட்டும் அளந்து கதைக்கிற ஆள் சீவரத்தினம். எங்கை போனாலும் ஏதோ அவசரமாக போகிற நடை நடப்பார். உலகிலை இருந்ததுக்கு எந்த அடையாளமும் இல்லாமல் போகவேணும் என்ற குணம் கொள்கைகளிலை வாழுறவர் மாதிரி அவற்ரை போக்குகள் இருக்கும். என்னை விடக் கொஞ்சம் மூத்தவர்... எண்டாலும் சாடையான பழக்கம் இருக்கு' எண்டன்.

'அவற்ரை மகள் இயக்கத்தில் இருந்தவ...' எண்டான். 'அவவின்ர பெயர் பாவனி' என்று சொல்லி போட்டு லோகன் ஒன்றும் பறையாமல் இருக்க..

என்ன அவ இறந்து விட்டாவா, இல்லை காணாமல் போயிற்றாவா? எண்டு நான் கேட்க, அப்ப உனக்கு ஒன்றும் தெரியாதுபோல... எண்டு சொல்லிக் கொண்டு கதையைச் சொல்லத் தொடங்கினான்.

நல்ல உற்சாகமான பிள்ளை. சின்ன வயதிலையே அநியாயங்களைத் தடுக்கிறதுக்கு பெண்களும் போராளியாக வேணும் எண்டு, வீட்டை விட்டு இயக்கத்திலை சேர்ந்த முதல் வரிசை பெண்களிலை அவளும் ஒருத்தி.

உண்மையில நான் அவளை இயக்கத்திலை சேர்க்கேல்லை... ஆனா, அவளுக்கு என்னை நல்லாய்த் தெரியும். அந்தக் கடைசி நாள்களில நாங்கள் எல்லாம் சரண் அடையிறத்துக்கு நாலைஞ்சு நாளுக்கு முதல்ல என்னைத் தற்செயலாகச் சந்தித்தாள்... மிச்சத்தைச் சொல்லாமல் திருப்பியும் மௌனமாயிட்டான் லோகன்.

'என்ன நிப்பாட்டி போட்டியள்' எண்டு நான் கேட்க,

'அந்தக் கொடுமையான நாள்களைத் திருப்பி நினைச்சுப் பார்க்கவே மனம் வெந்து போகுது' எண்டான்.

'எல்லாம் முடிஞ்சுது... இனி ஒண்டுமே இல்லை. உயிரோடை தப்புவோமோ? இலலை யாராவது மீட்பர் வந்து எங்களைக் காப்பாரோ எண்ட யோசனையிலை நான் ஒரு மரத்தடிக்குக் கீழை நிற்கேக்கை, பவானியும் இன்னும் ஒரு போராளி பெண்ணும் என்னைக் கண்டிட்டு நெருங்கி வந்திச்சினம். நானும் அடையாளம் கண்டிட்டன்.

வந்தவள்... திடீரென்று என்ர கையைப் பிடிச்சு அழத்தொடங்கினாள்.

இப்ப என்ன அண்ணை செய்வது? வெற்றியில்லை எண்டாலும் சண்டை பிடிச்சு சாகத் தயார். ஆனால் இப்ப எங்களைச் சரண் அடையட்டாம். கொஞ்சத்துக்கு முதல் இங்க வந்த ஒருத்தன் சொல்லிப்போட்டு போறான். எங்களுக்குப் பிறகு இயக்கத்திலை சேந்தவன்... இப்ப ஆலோசனை சொல்லிப்போட்டுப் போறான். சுத்தி நிக்கிற சிங்கள ஆமியளை இல்ல.., முதல்ல, இப்பிடிச் சொன்னவனைச் சுட்டுக் கொல்ல வேணும் போல இருக்கு... எண்டாள்.

எனக்குக் கண்கள் கசியத் தொடங்கிட்டுது... பவானி தொடர்ந்து கதைச்சாள்.

இதுக்கோ அண்ணன்... நாங்கள் உயிரைப் பணயம் வைச்சுப் போராடினாங்கள்? இயக்கத்திலை சேர்ந்த நாள் தொடக்கம் நாங்கள் சாகத் தயாராயத்தானே இருக்கிறம். ஒவ்வொரு போராளியின்ர சாவும் கௌரவமான சாவாய் இருக்க வேணும். மற்றவங்களுக்காக இல்லை... சாகும்போது ஒரு இலட்சியத்துக்காகச் சாகிறம் எண்ட எண்ணம் மனசிலை இருக்க வேணும்.

மெல்லமெல்ல அவளின்ர அழுகை கோபமாக மாறியது. நான் அவ்விடத்தைவிட்டு விலகி அப்பாலை போயிற்றன்.

பிறகு அவள் மறியலில் இருக்கிறதாய் கேள்விப்பட்டன். கேள்விப்பட்டு என்னதான் செய்யிறது? போரின் கோரப் பசிக்கு இரையாகமல் தப்பினவர்களிலை அவளும் ஒருத்தி எண்ட எண்ணத்தோட நான் அவளை மறந்திட்டன்.'

கதையின் ஆர்வத்தில், 'அவ இப்ப என்ன செய்யுறா?' எண்டு நான் கேட்டன்.

'அந்த கதையைதானே சொல்லப் போறேன்... பவானி இப்ப குருநாகலிலை இருக்கிறா. ஒரு சிங்களப் பெடியனைக் கல்யாணம் முடிச்சு அங்கேயே தங்கிட்டா.'

நான் ஆச்சரியத்தோட அவரைப் பார்த்தன்.

லோகன் தொடர்ந்து பேசினான். 'மறியலிலையிருந்து வந்தபிறகு அந்தப்பிள்ளை யார் முகத்திலும் முழிக்க விரும்பாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருந்தாள்.

தகப்பன் 'நடந்ததையெல்லாம் கனவாய் மறந்து விடு. நீயும் மற்ற சாதாரண பெண்களைப் போல் வாழ வேணும். அதுதான் என் ஆசை. உனக்கு நான் கல்யாணம் பேசப் போறேன், பரம்பரையாய் வந்த சின்னத் தென்னந்தோட்டம் இருக்கு. இப்போ நான் தேங்காய் வியாபராம் செய்து கொஞ்சக் காசும் வைச்சிருக்கிறன். நீ கலியாணத்துக்கு இல்லை எண்டு சொல்லக் கூடாது. அண்

டைக்கு நீ இயக்கத்திற்குப் போனத்துக்காக நாங்கள் கவலைப் பட்டாலும் ஏன் இயக்கத்துக்குப் போன நீ? எண்டு உன்னட்டடைக் கேட்டது கிடையாது. எண்டு கேட்டிருக்கிறார்.'

அதிகமாய்ப் பேசத் தெரியாத சீவரத்தினம் மகளிலை உள்ள பாசத்தாலை அந்தியும் சந்தியுமாய் அவளிட்டைப் பேசி அவ ளைச் சம்மதிக்க வைச்சார்.

ஆனா இயகத்துக்குப் போனது மாத்திரமல்ல... மறியலுக்கு போன பெண்ணுக்கு என்ன நடந்திருக்குமோ எண்டு சனங்கள் நினைச் சுதே தெரியேல்லை... சீதனம் வேண்டிக்கூட பவானியைக் கல் யாண முடிக்க யாரும் முன்வரல்லை. புரோக்கர்மார் கையை விரிச்சிட்டாங்கள்.

தகப்பனும் எத்தனையோ இடங்களிலை அலைஞ்சு பார்த்தார். சரி... பெண்ணையாவது பார்ப்பம் எண்டுகூட ஆரும் முன் வரேல்லை.

இந்த நேரத்திலை, வெளிநாட்டிலை வாழுற ஒரு பெடியன் ஊரிலை, புறோக்கர் மூலம் பெண் பார்க்க வாறார் எண்டு ஒரு நல்ல செய்தி கிடைச்சுது.

அந்தப் பெடியன்ரை இலட்சியம் ஒரு போராளிப் பெண்ணுக்கு வாழ்வு கொடுக்க வேணும் எண்டுறதுதானாம்.

சீவரத்தினத்தார் மகளிட்டை இந்தக் கதையைச் சொல்லியிருக் கிறார். அவள் சிரிச்சிருக்கிறாள்.

என்னைக் கலியாணம் முடிக்க உள்ளூருக்குள்ளேயே ஆரும் இல்லை. இதிலை, வெளிநாட்டுக்காரருக்கும் என்னைப் பிடிச்சிருமோ? எண்டு சொல்ல, இவர், இல்ல... அந்தப் பெடியன் ஒரு போராளியாய் இருந்த பெண்ணுக்குதான் வாழ்க்கை குடுக்க வேணும் எண்ட கொள்கையோடை வாறாராம் எண்டு சொல்ல.., என்ன என்ர வாழ்க்கையை வெளிநாட்டிலை இருந்து பொட்டலம் கட்டிக் கொண்டு வாறாரோ எண்டு சொல்லி நக்கலாகச் சிரிச்சாள்.

பெண் பார்க்கும் படலம் நடந்தது. அந்தப் பெடியனிலையும் குறை சொல்லி என்ன வரப்போகுது?

அவன் கம்பீரமான சீருடைகளிலை ஆயுதங்களோட அணிவகுத்து நிண்ட பொம்பிளைப் பின்ளையளைப் படங்களிலை பார்த்திருப் பான். போருக்குப் பிறகு, சிறைகளிலை அடிச்சுக்களைச்சு வாடி வதங்கி, இளமையும் மங்கிப் போன பெண்ணாக பவானி இருந் தாள்.

அவளை மணப்பெண்ணாக ஏற்க அவனால் முடியால் போனது.

பவானியைப் பார்த்துவிட்டுப் போகேக்க, அவன் பவானியைத் தனியக் கூட்பிட்டு, 'என்னை மன்னியுங்கோ... நீங்கள் எங்கட தாயகத்திற்காகப் போராடியதை எங்களாலை மறக்க முடியாது. நீங்கள் நன்றிக்குரியவர்கள். என்னைத் தவறாக நினைக்க வேண் டாம். இதை வைச்சிருங்கோ... உங்கட கல்யாணச் செலவுக்கு உதவும். இது யாருக்கும் தெரிய வராது' எண்டு சொல்லி ஐம்பதி னாயிரம் ரூபாயை அவளின்ர கையிலை வைச்சிருக்கிறார்.

பவானி சிரித்துக் கொண்டு... 'இப்ப என்னெட்டை துவக்கொண்டும் இல்லை. நீங்கள் போகிற வழியில் கைதடி அநாதை ஆச்சிரமம் இருக்கு, அங்க கொண்டுபோய் இந்தக் காசைக் குடுத்திட்டுப் போங்கோ' எண்டாளாம்.

பவானி தகப்பனைப் பார்த்து 'அப்பா இனி எனக்குப் கல்யாணம் பேச வேண்டாம். நீங்க கவலைப்படுறதைப் பார்த்துத்தான் நான் கல்யாணத்துக்குச் சம்மதிச்சனான். இனி என்னைக் கல்யாணம் முடி எண்டு கேட்கக் கூடாது எண்டு உறுதியாய்ச் சொல்லிட்டாள்.

'நீ சொன்னாய்.. அவள் குருநாகலிலை இருக்கிறாள் எண்டு..' நான் இடைமறிக்க,

'நான் கதையை முடிக்க முதலிலை ஏன் அவசரப்படுகிறாய்' எண்ட லோகன் மிச்சத்தையும் சொன்னான்.

'சீவரெத்தினத்துக்கும் மறுபேச்சுப் பேச முடியாமல் போயிற்றுது. காலம் ஓடிக்கொண்டிருந்தது. சீவரெத்தினத்திட்டை தேங்காய் வாங்குறத்துக்காக நாலுமாதத்துக்கு ஒருதடவை சிங்களப் பெடி யன் ஒருவன் வந்து போவான். அவனுக்கும் பவானிக்கும் பழக்கம் ஏற்பட்டது.

அவனுக்கு முதலிலை இவளிலை பயம்... கொட்டியா கொட்டியா எண்டு, விலகித்தான் நிண்டான். அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போறதாலை அவனுக்கு கொஞ்சம் தமிழும் தெரிஞ்சிருந்தது. தேங்காய் வியாபாரத்திலை தகப்பனுக்கு பவானி உறுதுணையாக இருந்ததாலை இரண்டு பேருக்கும் நெருங்கிப் பழகிற வாய்ப்பு கள் அதிகம். அப்பிடியே காதல் உருவாகி கல்யாணம் வரைக் கும் போச்சுது.

சிங்களவனை ஊருக்குள்ள சேர்க்கிறதோ எண்ட எதிர்ப்பு இருந்தா லும் ஆரும் பாவனியிட்ட முண்டுறத்துக்கு வரேல்லை.

குருநாகலிலை குடியேறின பவானி, அடிக்கடி ஊருக்கு வருவா. அப்ப, ஒரு இயக்கப் பெண்ணைக் கல்யாணம் முடிச்சது தன்ரை புருசனுக்கு சரியான பெருமை எண்டும், தான் கல்யாணம் முடிச்சு முதல் முதலாய் அந்தச் சிங்களக் கிராமத்திற்குப் போனபோது முழுக்கிராமமும் திரண்டுவந்து தன்னைப் பார்த்தது எண்டும். 'கொட்டியா பெண் கொட்டியா பெண் என்று சொல்லுகிறாய்? எங்கடை பெண்போலத்தானே இருக்கிறா' எண்டு புருசனிட்டைக் கேட்டார்கள் எண்டும் சொன்னாள்.

அந்தக் கிராம மக்கள் தன்னை அன்போடு மரியாதையோடு நேசிப்பதாகவும் தான் சிங்கள் பேசக் கற்றுக் கொண்டு விட்டதாக வும் அயலவர்களுடன் சிங்களத்தில் உரையாடுவதாகவும் சொன் னாள்.

தன்ர புருசன் மாத்திரம் இல்ல, அவருடைய உறவுகளில் சிலர் கூட, 'தமிழர் எங்கட ஊரையே கேட்டவங்கள்?. அவங்கள், தாங்கள் பாரம்பரியமாய் வாழ்கின்ற ஊர்களைத்தானே தங்கடை நாடு எண்டு கேட்டவை. அதிலை என்ன பிழை? எண்டு தங்க ளுக்குள்ள கதைக்கினம் என்றும் சொல்லுவாள்.

உண்மையிலேயே அந்தச் சிங்களப் பெடியன் கடின உழைப் பாளி. பவானியின்ரை கெட்டித்தனத்தாலும் அவன் கொஞ்சப் பணம் சேர்த்து போட்டான். சீவரத்தினமும் தன்னிடம் இருந்த பணத்தையும் குடுக்க, தங்கட ஊரிலையே இன்னுமொரு தென் னம் தோட்டத்தையும் வேண்டிப் போட்டினம்.

பாவானிட்டை இப்ப ஈழக்கனவு இல்லாவிட்டாலும் பவானியின் புருசனுக்கு தமிழ்ஈழம் வந்தால் நல்லது எண்ட நினைப்பு இருக்கி-றதாகவும் அவள் சொல்லியிருக்கிறாள்.'

இப்பிடிக் கதையை முடிச்ச லோகன், வேதாளம் விக்கிரமாதித் தனிட்டைக் கேட்ட மாதிரி, 'உன்னட்டை ஒண்டு கேக்கட்டோ' எண்டான்.

நான் தலையாட்டினன்.

'நான் இயக்கத்துக்குப் போனது பிழையோ? அதுக்கு ஆட்களைச் சேர்த்தது பிழையோ? இயக்கம் போருக்குப் போனது பிழையோ?'

எண்டு கேட்டுவிட்டு, பதிலுக்காக என்ர முகத்தைப் பார்த்தான்.

நான் எதுவுமே பேசாமல் வானத்தைப் பார்த்தேன். மேகமூட்டமாக இருக்க வேணும், ஒரு நட்சத்திரத்தையும் காணவில்லை.

என்னால் பதில் சொல்ல முடியாது எண்டு நினைச்சிருப்பான் போல. அவனே பேசினான்.

‘ஊரிலை எனக்கு முன்னாலை நசிஞ்சு பேசறதும் எனக்குப் பின்னாலை நக்கல் அடிக்கிறதுமாய் கனபேர் இருக்கினம். சிலர் நேராகவே என்னைப் பார்த்து ‘சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது’ எண்டு அப்ப சொல்லேக்கை நீ கேக்கல்லை, இப்ப தெரியதோ? எண்டு வதைக்கிறாங்கள். நாங்கள் போரிலை வெற்றி பெற்றிருந்தால் இப்பிடி கதைப்பினமோ?’ எண்டவன் கண் கலங்கினான்.

அவன்ரை கவலையைக் குறைக்க வேண்டிய தருணம் இது. நான் பேசத் தொடங்கினன். ‘ஊர்க்காரரின்ரை ஆவலாதிக்கதையளை விடு. நான் இப்ப உனக்கு ஒரு கதை சொல்லுறன் கேள்.

ஒரு மனுசன் தன்ரை நாயோடு ஆத்திலை குளிக்க போயிருக்கிறான். அந்த நாய் திடீரெண்டு தண்ணிக்கு மேல நடக்க வெளிகிட்டுது. அந்தாள் ஊருக்குள்ள ஓடிப்போய் அயலட்டை ஆட்களைக் கூட்டிக்கொண்டு வந்து ‘பாருங்கோ இந்த அதிசயத்தை... என்ரை நாய் தண்ணீரிலை நடக்குது’ எண்டு காட்டியிருக்கிறான். அதைப் பார்த்த ஊர்ச்சனம் ‘அட... உன்ரை நாய்க்கு நீந்தத் தெரியாதோ? பாவம் உன்ர நாய்’ என்றார்களாம்.

இதைப்போலத்தான் ஊர்க்காரற்ரை கதை இருக்கும். இதுக்கெல்லாம் காது குடுத்தால் துயரம் எங்களுக்குத்தான். இது எல்லாத்தையும் விடு’ எண்டன்.

அவன் பேசாமல் இருக்க, என்ர மனதிலை பழைய எண்ணகள் ஓடத் தொடங்கிச்சுது.

அந்தக் காலத்தில எங்களை மாதிரிப் பெடியளுக்குச் சிங்களப் பொலிஸ் ஆமியெண்டால் சரியான பயம். சைக்களிலை லையிற் இல்லாமல் வந்ததுக்கே ‘தமிழ்ப் பண்டி’ எண்டு சொல்லி அடிச்சிருக்கிறாங்கள். கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த நேரம், ‘கள்ளக் கடத்தலுக்கோ வந்தனீங்கள்’ எண்டு ஆமிகாரரிட்டை திருக்கை வாலாலை அடிவாங்கிய நண்பர்களையும் தெரியும்.

ஒரு தடவை என்ரை மாமா முறையான வயதான ஆசிரியரோடை ஊர் பொலிஸ் நிலையத்துக்கு ஒரு அலுவலாய்ச் சென்றபோது ஆசிரியர் அந்த இளம் சிங்கள பொலிஸ் அதிகாரிக்கு முன்னால இருந்த கதிரையிலை இருக்க, அடிக்காத குறையாய் ‘எழும்படா’ எண்டு கொச்சை தமிழிலை சத்தம் போட்டதை இப்பவும் என்னாலை மறக்க முடியேல்லை. அவன் ஒரு சிங்கள ஊரில் ஒரு சிங்கள வயதான ஆசிரியரை இப்படி அவமதிப்பானோ?

கேள்விப்பட்ட 58 கலவரம், அனுபவித்த 77 கலரவரம், தமிழற்ரை கல்விக்கு ஆப்படிச்ச தரப்படுத்தல் எண்டு இனத்துக்குத் தொடர்ச்சியாய் எத்தனை அவமானங்கள்? இப்படியான சின்ன சின்ன அவமானங்கள்தான் அடிபட்டெண்டாலும் முடிவைக் காண வேணும் எண்ட மனநிலையை லோகனுக்கும் எங்கட தலைக்கும் இருந்தது எண்டிறதை லோகனுக்குச் சத்தமாயச் சொல்ல வேணும் எண்டு நினைக்க,

அவன் நேரத்தை பார்த்து விட்டு திடீரெண்டு ‘ஐயோ நேரமாச்சு... கோயிலை மூடப் போறாங்கள், நான் கோயிலுக்குப் போயிற்றுத்தான் படுக்கைக்குப் போறனான், வரட்டோ எண்டபடி எழும்பி நடக்கத் தொடங்கிட்டான்.

நானும் உன்னோட கோவிலுக்கு வாறன் எண்டபடி பின்னாலை போனன்.

கோயிலுக்குப் போன லோகன், ஒரு ஓரத்தில் நின்று இரண்டு கையையும் விரித்து, எனக்குத் தெரிஞ்ச புனித பிரான்சிஸ் அசிசியாரின் இந்த செபத்தை மனம் உருகச் சொல்லிக் சொல்லத் தொடங்கினார்.

*இறைவா,*

*என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும்*
*எங்கு பகைமை நிறைந்துள்ளதோ அங்கு அன்பையும்*
*எங்கு கயமை நிறைந்துள்ளதோ அங்கு மன்னிப்பையும்*
*எங்கு ஐயம் நிறைந்துள்ளதோ அங்கு விசுவாசத்தையும்*
*எங்கு அவநம்பிக்கை நிறைந்துள்ளதோ அங்கு நம்பிக்கையும்*
*எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு ஒளியையும்*
*எங்கு மனக்கவலை உள்ளதோ அங்கு அகமகிழ்வையும்*
*விதைத்திட அருள்புரியும்.*

*என் இறைவா,*
*ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும்*
*புரிந்து கொள்ளப் படுவதைவிட பிறரைப் புரிந்து கொள்ளவும்*
*அன்பு செய்யப்படுவதைவிட பிறரை அன்பு செய்யவும்*
*வரமருள்வாய்*

*ஏனெனில்,*
*கொடுப்பதில் யாம் பெறுவோம்*
*மன்னிப்பதில் மன்னிக்கப் பெறுவோம்*
*இறப்பதில் நித்திய வாழ்வடைவோம்.*
*ஆமென்.*

தோல்வியின் தழும்புகளையும் குற்றங்களை ஏற்றக்கொள்ளும் பக்குவத்தையும் கடமையைச் செய்தேன் என்ற நிறைவையும் கொண்ட அவன் என்றும் என் நெஞ்சில் இருப்பான்.

வானில் திரண்டிருந்த மேகம்
தூறத் தொடங்கியிருந்தது.



selvam.a@thaiveedu.com



# அழகு எனும் ஆயுதம்




அடக்கப்படுபவர்கள் என்றாவது ஒருநாள் தங்களின் உரிமைகளுக்காக புரட்சி செய்தே தீருவார்கள் என்ற உண்மையை ஆணித்தரமாக சொல்லிப் போன ரோம அடிமைகளின் எழுச்சி தான், பிற்கால அரசியல் அறிஞர்களுக்கு மக்கள் உரிமை பற்றிய மகத்தான அறிவைக் கொடுத்தது. அதனால்தான் அந்தப் புரட்சிக்கு தலைமை தாங்கிய ஸ்பார்டகஸின் புகழ் இன்றளவும் நின்று நிலைத்திருக்கிறது.

சீசரின் படையுடன் நடந்த போரில் ஸ்பார்டகஸ் இறந்து போகவே, அடிமைகளின் புரட்சி முடிவுக்கு வந்து ரோம் தப்பிப் பிழைத்தது.

போரில் தோற்று சரணடைந்த ஆறாயிரம் அடிமைக் கைதிகளை, ரோமிற்கு போகும் வழிநெடுக குரூரமாக கழுவிலேற்றி தனது வெஞ்சினத்தை ரோமத் தளபதி கிராஸஸ் தீர்த்துக் கொண்டான்.

அடிமைப் புரட்சியை ஒடுக்கி விட்டதால் தளபதி கிராஸஸிற்கு ரோமில் மதிப்பு கூடியது. கூடவே சீசருக்கும் தான்.

அந்த நேரத்தில் ரோமின் செனட் சபையில் இரு நபர்கள் தான் நிறைய பிரபலமாக இருந்தார்கள். ஒருவன் கிராஸஸ், மற்றவன் இன்னொரு தளபதியான பொம்பே.

கிராஸஸிடம் ஏகப்பட்ட பணம் இருந்தது, பொம்பேவிடம் ஏகப்பட்ட வீரமும், நிறைய போர்வீரர்களும் இருந்தார்கள்.

இவர்கள் இருவருக்கும் எப்போதும் ஆகவே ஆகாது. கிராஸஸ் ஏதாவது பிரேரணையை செனட் சபையின் முன்னால் வைத்தால், பொம்பே எதிர்ப்பான், பொம்பே முன்வைத்தால் கிராஸஸ் எதிர்ப்பான். இந்த ஏட்டிக்கு போட்டியால் செனட்டில் ஒரு பிரேரணையும் நிறைவேற்றப்படாமல் அத்தனையும் கிடப்பில் போடப்பட்டன.

போர்க்களத்தில் மட்டுமல்ல, அரசியலிலும் சரியான காய்களை சரியான நேரத்தில் நகர்த்த வல்லவனான சீசர் இந்த நேரத்தில் அபாயகரமான ஒரு முடிவை எடுத்தான். இதில் கொஞ்சம் பிழைத்தாலும் தன் தலை உருளும் என்பதும் அவனுக்குத் தெரியும்.

இருவரையும் தனித்தனியே சந்தித்த சீசர் ஒரு இரகசிய ஒப்பந்தத்தை சொன்னான்.

'நாங்கள் மூவரும் கூட்டுச் சேருவோம். என்னை செனட் சபையின் தலைவராக்குங்கள், நான் தலைவரானதுடன் உங்கள் அத்தனை பிரேரணைகளையும் செனட் சபையால் அங்கீகரிக்க வைப்பது என் பொறுப்பு'.

சீசரை நம்பாமல் பொம்பே கொஞ்சம் அடம்பிடிக்கவே, தன்னுடைய ஒரே மகளான யூலியாவை பொம்பேக்கு திருமணம் செய்து வைத்து தன்னுடைய கோரிக்கையை சீசர் நிறைவேற்றிக் கொண்டான்.

இந்த மூவர் கூட்டணி தாங்கள் நினைத்ததை எல்லாம் செனட் சபையில் சாதித்துக் கொண்டது. கொஞ்சம் முரண்டு பிடித்த சில செனட்டர்களுக்கு வீடு புகுந்து நல்ல 'கவனிப்பும்' நடக்கவே மொத்த செனட்டர்களும் தலையாட்டி பொம்மைகளாக மாறி தங்கள் தலைகளை காப்பாற்றிக் கொண்டனர்.

தனது தலைவர் பதவிக்காலம் முடிந்ததும் சீசர், ரோமின் வடக்குப் பக்க எல்லைப் பிரதேசங்களை பொறுப்பு எடுத்தான். Gaul என ரோமர்களால் பெயரிடப்பட்ட இந்தப் பிரதேசம் தற்போதைய பிரான்ஸ், சுவிஸ்சலாந்து, பெல்ஜியம், ஜேர்மனி நாடுகளின் பெரும்பாகங்களை உள்ளடக்கியிருந்தது.

இங்கே உள்ளூர் பூர்வகுடிகள் ரோமர்களுக்கு எதிராக அடிக்கடி போர் புரிந்து கொண்டிருந்தார்கள்.

Gaul இல் தங்கியிருந்த எட்டு வருடங்களில், சீசர் போர் முனைகளில் பெரும் சாதனைகளை செய்து ரோம மக்களின் மனங்களில் இடம் பிடிக்கத் தொடங்கினான். செனட் சபையின் அங்கீகாரம் பெறாமலே பெரும் பிரதேசங்களை சீசர் கைப்பற்றவே, சீசரின் போர்ப்படையில் நிறைய இளைஞர்கள் சேர்ந்தார்கள். கைப்பற்றிய செல்வங்கள் அதிகமாக, அதிகமாக சீசரின் சொந்த கஜானாவும் நிறைந்து வழிந்தது.

மிகவும் தலையிடியாக இருந்த பூர்வ குடிகளின் போரை முடிவுக்கு கொண்டு வந்த சீசரின் புகழ் ரோமில் பரவுவது பொம்பேவுக்கும், கிராஸஸிற்கும் உள்ளூர வெறுப்பைத் தந்தது. சீசரைப் போலவே தனக்கும் ஒரு இராணுவ வெற்றி தேவை என நினைத்த கிராஸஸ், தற்போதைய ஈரானியப் பிரதேசத்தில் கோலோச்சிய 'பார்த்தியா' சாம்ராஜ்ஜியத்தின் மீது படையெடுத்தான். அங்கு படுமோசமாக தோற்றுப் போனது ரோமப் படை. கொல்லப்பட்ட கிராஸஸின் வாய்க்குள் உருக்கிய தங்கத்தை


ஊற்றி, அவனது பணத்திமிரை கேலி செய்தார்களாம் பார்த்தீனிய படை வீரர்கள்.

கிராஸஸின் மரணத்துடன் மூவர் கூட்டணி உடைந்து போனது. கூடவே பொம்பேயிற்கு திருமணம் செய்து வைக்கப்பட்ட சீசரின் மகள் யூலியா பிரசவத்தின் போது இறந்து போகவே, சீசருக்கும், பொம்பேவுக்கும் இடையிலான உறவு மெது, மெதுவாக சிக்கலாகிப் போனது.

ஒரு கட்டத்தில், செனட்டின் அனுமதி இல்லாமல் Gaul பிரதேசங்களில் போர் புரிந்த சீசரின் அதிகாரங்களை பறிக்க வேண்டும் என பொம்பேயின் ஆதரவுடன் செனட் முடிவு செய்தது. சீசர் பதவியிருந்து விலகி, சாதாரண மனிதனாக ரோமிற்கு திரும்பி குற்ற விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டும் என உத்தரவு சீசருக்கு பறந்தது.

சீசருக்கு கோபம் தலைக்கேறியது. தன் படைகளுடன் ரோமை நோக்கி விரைந்து வந்தான்.

ரோம எல்லையில் 'ரூபிக்கோன்' எனும் சிறிய ஆறு ஒன்று ஓடுகிறது, அந்த ஆற்றை யாராவது சட்டவிரோதமாக, ஆயுதங்களுடன்




கடந்தால் அவர்கள் ரோமின் எதிரிகளாக பிரகடனப்படுத்தப் படுவார்கள் என்பது அப்போதைய ரோமின் சட்டம்.

ரோமின் பார்வையில் சீசர் இப்போது பதவி இழந்த சாதாரண ஒரு மனிதன். ஆயுதங்களுடனோ, படையுடனோ ஆற்றைக் கடந்தால் ரோமின் மீது போர் தொடுப்பதாகவே அது அர்த்தப்படும்.

ஆற்றைக் கடந்தால் அதற்கு பிறகு முடிவை மாற்றிக் கொள்ளவே முடியாது. பின்வாங்கும் தெரிவில்லாத இறுதி முடிவு அது.

சற்று நேரம் நின்று நிதானித்த சீசர், தன் குதிரையில் ஆற்றைக் கடக்கிறான்.

திரும்ப பெற முடியாத முடிவுகளை குறிக்கும் 'Crossing the Rubicon' என வரலாற்றில் புகழ் பெற்ற ஆங்கில வாக்கியம் இதிலிருந்து தான் ஆரம்பமானது.

'ஆற்றை சீசர் படையுடன் கடந்து விட்டான்' என செய்தி வந்ததும், பொம்பேக்கும், செனட்டர்களுக்கும் நடுக்கம் பிடித்தது. அப்போது பொம்பேயினுடைய படைகள் ரோமிற்கு கிழக்குப் பக்கத்தில் தங்கியிருந்ததால், பொம்பே அங்கே ஓட்டம் பிடித்தான், கூடவே செனட்டர்களும் ஓடித் தப்பினார்கள். ரோமில் ஆட்சி புரிய ஒருவரும் இல்லாமல் ரோம் நகரில் நிறைய குழப்பங்கள் வெடித்தன.

பொம்பேயின் படைகளை விரட்டிக் கொண்டு சீசரின் படையும் பின் தொடர்ந்தது.

தன்னுடைய பெரும் படையுடன் சேர்ந்து கொண்ட பொம்பே, சீசரை போர்க்களத்தில் சந்தித்த போது, தன் வெற்றியையிட்டு அவனுக்கு கடுகளவும் சந்தேகமில்லை.

ஆனாலும், நெடுங்காலமாக போர்க்களங்களில் சண்டையிட்டு உரமேறிப் போன சீசரின் படை, பொம்பேயின் பெரும் படையை சின்னாபின்னமாக சிதறடித்து பின்வாங்கி ஓடப் பண்ணியது.

தப்பித்து ஓடிய பொம்பே கடல் கடந்து போய்ச் சேர்ந்த இடம், புகழ் பெற்ற எகிப்திய சாம்ராஜ்ஜியம்.

அப்போது எகிப்திய சாம்ராஜ்ஜியமும் உள்நாட்டு போரில் சிக்கிக் கொண்டிருந்தது. சண்டை பிடித்தவர்கள் இரண்டு சகோதரங்கள்.

பதின்மூன்றாம் தொலமி என அழைக்கப்பட்ட பதினாலு வயதான சிறுவன் தான் அப்போதைய எகிப்திய ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருந்தான். தந்தையாரின் விருப்பத்தின்படி, தனது மூத்த சகோதரியை திருமணம் செய்து கொண்டு, கணவன்-மனைவியாக ஆரம்பத்தில் எகிப்தை ஆண்டார்கள்.

காலப் போக்கில் சகோதரியின் செல்வாக்கு நாட்டில் பெருகுவது கண்டு அவளை கலைத்து விட்டு தனியாக தொலமி ஆட்சி செலுத்தத் தொடங்கினான். சகோதரியும் இலகுவில் ஆட்சியை விட்டுப் போவதாக இல்லை. உள்நாட்டில் இருவருக்கும் போர் நடந்து கொண்டிருந்த நேரத்தில் தான் பொம்பே அங்கே உதவி கேட்டுப் போய்ச் சேர்ந்தான்.

பொம்பே உதவி கேட்டதில் நியாயம் இருந்தது. தொலமியின் தந்தை ஆட்சியில் இருந்த போது அவனுக்கு பொம்பே நிறைய உதவிகள் செய்திருந்தான்.

ஆனாலும் தொலமி நினைத்தது வேறு மாதிரி. சீசரின் வீரத்தையும், போர் வெற்றிகளையையும் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்த அவன், சீசரின் உதவியை பெற்று தன் நாட்டு பிரச்சனையை தீர்க்க திட்டம் போட்டான்.

பொம்பேயை தேடிக் கொண்டு சீசர் எகிப்துக்கு வந்த போது, அவனுக்கு தொலமி அளித்த பரிசு, பொம்பேயின் வெட்டப்பட்ட தலை.

சீசர் விக்கித்துப் போனான். தற்போதைய எதிரி என்றாலும், பொம்பே ரோமின் மிகவும் புகழ்பூத்த தளபதி. ரோமிற்காக பல போர்க்களங்களில் வெற்றிவாகை சூடியவன். சீசரின் மகளை மணந்தவன். பொம்பேயின் முடிவைப் பார்த்து சீசர் மனமுடைந்து அழுததாக வரலாறு எழுதி வைத்திருக்கிறது.

தொலமி தன் மாளிகையில் சீசரின் உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்க, சீசர் தங்கியிருந்த அறைக்கு ஒரு மர்ம நபர் இரகசியமாக வந்து சேர்ந்தார். அவருக்கும் சீசரின் வீரமும், படைகளும் தேவைப்பட்டது.

தன் தம்பியை ஆட்சியிலிருந்து அகற்ற தகுந்த நபர் கிடைத்தார் என சீசரிடம் உதவி நாடி வந்த அந்த மர்ம நபர் தொலமியினால் துரத்தப்பட்ட அவனது சகோதரி.

பதினாலு வயது தொலமியிடம் ஆட்சி இருந்தது உண்மை தான். ஆனாலும் அவனிடம் இல்லாத மிகப்பெரிய ஆயுதம் ஒன்று அந்த இருபத்தொரு வயது நிரம்பிய சகோதரியிடம் இருந்தது.

தான் சந்தித்த எந்த போர்க்களத்திலும் வெற்றியை தவிர வேறொன்றையும் சுவைக்காத பெரு வீரனான யூலியஸ் சீசர், அவளின் பேரழகு எனும் ஆயுதத்தின் முன்னால் சாஷ்டாங்கமாக காலடியில் வீழ்ந்தான்.

அழகின் வரைவிலக்கணம் என இன்றுவரை வர்ணிக்கப்படும் அந்த சகோதரியின் பெயர் கிளியோபாட்ரா.

புகழ் பூத்த உலகின் காதல் கதைகளில் ஒன்றான சீசர்-கிளியோபாட்ரா காதல் கதை அன்றிரவு அரங்கேறத் தொடங்கியது.



nimal.nagaraj@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474


BUYING OR SELLING
Residential, Commercial, Land & Investment Properties
For Sellers:
Free Market Evaluation Available
Competitive Commission Packages Available
Will pay for Staging & Condition
Will pay the Professional Photographer
Virtual Tour
Color Brochure
Will do open house until house get sold
Will market your home with social medias
SATHY & NITHY
REAL ESTATE TEAM
For Buyers:
Will find the home in any area within your budget
Get you the lowest mortgage. rate
NITHY
SATHYAKUMAR
Sales Representative
Dir: 416.728.2454
Email: realtornithy@gmail.com
SATHY
SIVASUBRAMANIAM
Broker
Dir: 416.624.5044
Email: realtorsathy@gmail.com
16th Avenue / 9th Line $1,550
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Morningside / Finch $1,200
FOR LEASE BEDROOMS:1+1 WASHROOMS:1
Pharmacy Ave/Lawrence Ave $1,600
FOR LEASE BEDROOMS:3 WASHROOMS:1
Victoria Park / Ellesmere $2,000
FOR LEASE BEDROOMS:2 WASHROOMS:1
Rossland/Wilson $599,900
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
Crowder Blvd / Leslie St $549,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:2
Simcoe/Britannia $509,000
FOR SALE BEDROOMS:4 WASHROOMS:3
Yonge/Front $659,000
FOR SALE BEDROOMS:1+1 WASHROOMS:1
King/Blue Jays $699,000
FOR SALE BEDROOMS:1 WASHROOMS:1
Lawrence Ave E/Orton Park $699,000
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Finch / Victoria Park $759,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:2
Hoover Park/Tenth Line $769,900
FOR SALE BEDROOMS:3+1 WASHROOMS:3
Brock/Hwy 2 $799,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Dufferin/Summeridge $889,000
FOR SALE BEDROOMS:3 WASHROOMS:4
Markham/Sheppard $799,000
FOR SALE BEDROOMS:4+2 WASHROOMS:3
Pharmacy/N.Eglinton $838,000
FOR SALE BEDROOMS:3+2 WASHROOMS:2
RE/MAX
Remax Realtron Realty Inc., Brokerage
Bus: 905 470 9800
Web: realtorsathy.com




HAPPY PONGAL
2022
உலகம் வாழ் தமிழ் மக்கள்
நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய புதுவருட
மற்றும்
பொங்கல் வாழ்த்துகள்!
Chairman's Club Award Winner 2015
Supreme Club Award Winner 2020
Chairman's Club Award Winner 2018
Homelife Future
Award Night 2021
நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!
Vela Subramaniam B.A(Hons)
Sales Representative
416-786-0760
vela4homes@gmail.com
Find me on: facebook vela4homes
HomeLife/Future Realty Inc. Brokerage
905-201-9977
Independently Owned Operated
HOMELIFE HIGHER STANDARDS
HOMELIFE HIGHER STANDARDS HomeLife/Future Realty Inc. Brokerage
GRAND MASTER CLUB 2021


1ST MORTGAGE SPECIALS
5 Year Variable 2.35%
5 Year Fixed 3.24%
*Some Conditions Applied, Please Call For More Details
2ND MORTGAGE SPECIALS
Up To 80% in GTA. 75% on other major cities.
No Income Verification.
No Minimum Credit Score.
Quick Closing
Rates from 7.99% to 12.99%
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Brokerage Lic# 10216
TD Canada Trust
Scotiabank
STREET CAPITAL
FIRST NATIONAL FINANCIAL LP
MCAP
ICICI Bank
MERIX
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca,
7 Eastvale Drive,Unit 203, Markham, ON, L3S 4N8
-digi Media Creations-



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor


CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL 4 ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN

**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |


## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct 416.918.9771
Business 416.321.2500
MDRT
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
La Capitale
iA Financial Group
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Call Me First and Say "YES"
to Get Your Dream Home at a
Dream Rate!
For all your Mortgage needs
Peter Sober
Dir: 416-275-3571
Your Smile Is My Best Return!
Purchase, Pre-Approvals, Refinances, Renewals and Switch, Builder Purchase, Home Line Of Credit, Self Employed, New Immigrants, Multi-Rental Properties.
TD
Five Branch Locations to serve you better
Scarborough, Markham, Ajax, Brampton & Mississauga


ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
21
CENTURY 21.
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
647-290-3416
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராறியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajan BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

அனைத்து மோட்கேஜ் தேவைகளுக்கும்
BonaFide Mortgage Solutions Inc.
Brokerage Lic# 10216
Suren Nathan AMP
Mortgage Broker
License# M08004479
Dir. 416-436-1111
Office. 416-548-7475 Fax: 416-548-7496
suren@bonafidemortgage.ca, 7 Eastvale Drive, Unit 203, Markham, ON, L3S 4N8

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.,BROKERAGE*

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP

LIFEPLAN INVESTMENTS
Ahilan Balachandran, CFP, CLU, CHS, EPC
Founder and CEO
WE CAN HELP BUILD YOUR FUTURE
Insurance • Investments • Tax and Estate Planning
905-294-PLAN (7526)
www.lifeplaninvestments.ca
416-894-2009
Download Free MyLIFEPLAN App
App Store
Google Play

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492

Rathiga Thillaivannan BCom
Sales Representative
Buying / Selling/ Leasing/ Investing
Dir: 647.839.0079
HomeLife/Future Realty Inc.,Brokerage*
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
205-7 Eastvale Dr, Markham ON. L3S 4N8

GAJAN
MAHAKANAPATHY
416.999.2777
RE/MAX COMMUNITY
Realtorgajan.com

Sri Vallipuranathar
Credit Solution Centre
Tel 416.439.0224
Cell 416.450.5011

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
HOMELIFE

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell 416 505 8532

DR. YALINI ARAVINTHAN BDS, DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6
WWW.YASMILES.CA

RE/MAX NORTH REALTY
077 566 0000
LATHAN VARATHARAJAH
Broker Owner